
வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
சௌந்தர கோகிலம்
1
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

# சௌந்தர கோகிலம்

(முதல் பாகம்)

வடுவூர் K. துரைசாமி ஐயங்கார், B.A.,

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு - 2004

© பதிப்பகத்தார்

விலை: ரூ.115/-

மொத்த பக்கங்கள் 16+280=296

Laser Typeset by - **Print Point Graphics,** Chennai - 20.
Printed at - Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

# பதிப்புரை

பரபரப்பு குறையாமல், அந்த பரபரப்புக்கு என்று நிகழ்ச்சிகளைத் தொடுக்காமல், ஆபாசமில்லாமல், ஏராளமான கதாபாத்திரங்களை உருவாக்கி, அபத்தங் களைக் கொட்டாமல், முதல் வரியிலிருந்து கடைசி வரி வரை விறுவிறுப்பைக் குறைக்காமல், நிகழ்ச்சி மேல் நிகழ்ச்சியாக உருவாக்கி, புத்திசாலித்தனமாக, சாதுர்யமாக கதாபாத்திரங்களைப் பேச விட்டு, சமு தாயத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் எப்படி எல்லாம் நடந்து கொள்ளக் கூடாது... போன்ற அற்புத மான தகவல்களைச் சொல்லும் நாவல்கள்தான் வடு வூர் துரைசாமி ஐயங்காரின் நாவல்கள். இவருடைய கதைகளில் காதல் காட்சியும் வரும், கோர்ட் சீனும் வரும், போலீஸ் நடவடிக்கைகளும் வரும், மருத்துவரின் சேவையும் வரும் — இப்படி அநேகமாக எல்லாத் தரப்பு மனிதர்களின் மேன்மையைப் பற்றியும் சொல் வார்.

அதே சமயத்தில், இதே சமுதாயத்தில் நல்லவர் கள் மத்தியில் வாழும் வக்ர புத்தி உள்ளவர்களைப் பற்றியும் சொல்லி, அப்படிப்பட்டவர்களை எப்படி எல்லாம் அடக்கி ஆளலாம் என்பதைப் பற்றியும் சொல்லியிருப்பார். இவருடைய எழுத்துக்களில் சிரிப் புக்குப் பஞ்சமிருக்காது. கதைகளில் நிலவும் கடின மான சூழ்நிலையையும், படு சாதாரணமாகக் கையாண் டிருப்பார். சிக்கலையும் உருவாக்கி, அந்த சிக்கலி லிருந்து விடுபடும் வழியையும் சொல்வார். வடுவூர் துரைசாமி ஐயங்கார் எழுதிய நாவல்களைப் படித் தால், பொழுது போவது மட்டுமன்றி, பல விஷயங் களைத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழில் நெடுங்கதை அல்லது நாவல் தோன்றிய ஆரம்ப கால கட்டத்தில் வடுவூர் துரைசாமி ஐயங்கார் இந்த நாவல்களை எழுதியுள்ளார். அந்த காலகட்டத்தில் இவருடைய நாவல்களைப் படிக்காதவர் எவரும் இருந்திருக்க முடியாது. மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட 'திகம்பர சாமியார்' இவருடைய பாத்திரப் படைப்பு. திகம்பர சாமியாரின் அறிவு அளவிட முடியாதது. மிகவும் புத்திசாலியானவர். தன்னுடைய ஒவ்வொரு பேச்சு வார்த்தையிலும், செயலிலும் பல்லாயிரக்கணக்கான அர்த்தங்களை யூகிக்க வைப்பார். இவருடைய ஒவ்வொரு நாவலும், ஒன்றை ஒன்று மிஞ்சி நிற்கிறது.

'இவ்வளவு வருடங்கள் ஆகி விட்டதே! போர் அடிக்காதா?' என்று வாசகர்கள் துளிகூட எண்ண வேண்டாம். இதை நாங்கள் வியாபார நோக்கில் சொல்லவில்லை. உண்மையில் இந்த நாவல்களை எல்லாம் நாங்கள் படித்துப் பார்த்த பிறகுதான் வெளியிடுகிறோம். நேரம் போவதே தெரியாமல் சரளமான தமிழ் நடையில், கதை போகும் போக்கே மிக மிக நன்றாக உள்ளது.

வடுவூர் துரைசாமி ஐயங்கார் இப்படிப்பட்ட நாவல்களை எழுதியதால் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களையும், தங்க மெடல்களையும் பெற்று உள்ளார். இதெல்லாம் சாதாரண விஷயமல்ல. இந்த நாவல்களைத் தமிழ் மக்கள் படிக்க வேண்டும், போற்ற வேண்டும், நாங்களும் நிறைய புத்தகங்களை விற்க வேண்டும். இதெல்லாம் வாசகர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? இந்தப் புத்தகங்களை வாங்கும் அனைவருமே புத்திசாலிகள்தான்.

இந்த நாவல்களை வெளியிடும் முயற்சியில் எங்களுக்கு மிகவும் உதவியாக எங்களது நீண்ட நாள்

*நண்பரான, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தலைவரான திரு. இரா. முத்துக்குமாரசாமிக்கும், நூலின் பழைய பிரதிகளைக் கொடுத்து உதவிய (காஞ்சி புரம்) அன்பர்களுக்கும், மேலும் இந்த நூல்களை, அந்தக் காலத்திலேயே ஏராளமாக விற்பனை செய்து, பெரும் பணியாற்றி தற்போது எங்களுக்கு உரிமையை வழங்கிய இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ் உரிமை யாளர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் வாசகர் கள் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறோம்.*

*'வடுவூர் துரைசாமி ஐயங்கார் நூல்கள் மீண்டும் வருமா? மீண்டும் வருமா?' என்று ஏங்கிக் கொண் டிருக்கும் வாசகர்கள் இப்போது மகிழ்ச்சி அடை வார்கள். இந்த நூல்களை 'புரூப்' பார்த்துக் கொண் டிருக்கும்போதே, பல வாசகர்கள், 'புரூப்' படிக்க வில்லை என்றால்கூடப் பரவாயில்லை, தாமதப்படுத் தாமல் உடனே வெளியிடுங்கள் என்று கூறினார்கள்.*

அன்று 007
இன்று ஜேம்ஸ்பாண்டு - ஆனால்
அன்றும் இன்றும் என்றும்
“திகம்பர சாமியார்”

அல்லயன்ஸ் ஸ்ரீநிவாஸன்

# வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார்

**வடுவூர் துரைசாமி ஐயங்கார்:** *1880-1942. தஞ்சை மாவட்ட மன்னார்குடி வட்டம். தந்தை கிருஷ்ண ஐயங்கார். பி.ஏ. பட்டம் பெற்று தாசில்தாராக விளங்கி, எழுத்துச் செல்வாக்கால் வேலையை விட்ட வர். தம் நாவல்களைத் தாமே அச்சிட ஓர் அச்சகமும் 'மனோரஞ்சனி' என்ற மாத இதழும் தொடங்கி மாதம் ஒரு கதை நூல் என எழுதிக் குவித்தவர். கலைமகள் கம்பெனி, விற்பனை நிலையமாகும்.*

நடுத்தர உயரம், ஒல்லியான உடல், கருத்த மேனி, கழுத்து வரை பொத்தான் போட்ட கோட்டு, அங்க வஸ்திரம், பஞ்சகச்சம், தலையில், குல்லா, காலில் கட் ஷூ, கையில் தடி, நெற்றியில் எப்போதும் திரு மண், வாய் நிறைய வெற்றிலை *(பெரிய வாய்)*, புகை யிலை, தினமும் தங்க பஸ்பம் சாப்பிடுவார் இளமை யோடிருக்க. மொத்தத்தில் கை நிறைய சம்பாதித்த கவலை இல்லாத உல்லாச மனிதர். இவர் மாடிக்கு ஜே.ஆர். ரங்கராஜு, ஆரணியார், பம்மல் சம்பந்த முதலியார், வை.மு.கோ., எஸ்.எஸ். வாசன் வந்து போவர்.

மனைவி நாமகிரி அம்மாள். மக்கள் விஜயராக வன், ரங்கநாயகி, கிருஷ்ணசாமி. மூத்த மகன் மனைவி புஷ்பவல்லி; புதுப்பேட்டை கார்ப்பரேஷன் பள்ளி ஆசிரியையாக இருந்து ஓய்வு; ஒரு பெண்ணும் பிள்ளையும் ரங்கநாயகிக்கு நான்கு மகள்களும், ஒரு பிள்ளை ரகுவும் நேவியில் காப்டன், வடுவூராரின் நவீனம் 'மைனர் ராஜாமணி' சினிமாவாக வந்து திரை யிட்டதும் ஒரு சமூகத்தை இழிவு செய்வதாக வழக்கு

தொடர்ந்து நிறுத்தப்பட்டது. இந்த அதிர்ச்சி, அவமானம் தாங்காது குருதிக் கொதிப்பால் மாண்டார்!

இந்த நூற்றாண்டின் தொடக்க 30 ஆண்டுகளில் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்களைத் தம் துப்பறியும் கதைகளால் பிணித்தவர். புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி, பரந்த ஓர் வாசக உலகினைப் படைத்துக் கொண்ட பெருமையர் Reynolds போன்ற நாவலாசிரியர்களைத் தழுவி எழுதியதோடு, சொந்தமாகவும் படைத்துள்ளார். இவர் படைப்பில் சிறந்ததாக மேனகா, கும்பகோணம் வக்கீல் குறிப்பிடத்தக்கன; படமாகவும் வந்தவை. வாசகர்களின் நாடித் துடிப்பறிந்து ஈர்க்கும் இனிய வசனமும் அழகு வருணனைகளும் அனைவரையும் அள்ளின.

திகைப்பூட்டும் திருப்பங்கள், சுவைமிகு நிகழ்ச்சிகள், ஆவலைத் தூண்டும் விறுவிறுப்பும், படிக்கப் படிக்க மகிழ்வூட்டும் நடையும், நகைச்சுவை நெளிய நல்ல நல்ல நவீனங்களைப் படைத்துள்ளார்.

வெறும் மர்ம நாவல் என ஒதுக்க முடியாத அளவுக்கு வைணவத் தலங்களையும், வேற்று மதத்தினரும் கூடி வாழும் வகையும், சமூகக் குறை நீக்கமும் கொண்டும் விளங்குகின்றன. திகம்பர சாமியார் துப்பறியும் பாத்திரம் நினைவில் நிற்கும். நாவல் வரலாற்றில் சுவடு பதித்தவர் வடுவூரார் என்பதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

— நன்றி - தமிழ் இலக்கிய வரலாறு

(மது.ச. விமலானந்தம்)

# இலக்கிய சாதனையாளர்

முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் கல்கி என்கிற எழுத்தாளர் தமிழ் வாசகர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவன செய்ததுபோல இருபதுகளில் தமிழ் வாசகர்கள் பரம்பரையை உருவாக்க முயன்றவர்கள் என்று ஜே.ஆர். ரங்கராஜு என்பவரையும் வடுவூர் துரைசாமி ஐயங்கார் என்பவரையும் சொல்ல வேண்டும்.

இந்த விஷயத்தைக் கல்கி தெரிந்து செய்தார் என்றும், முன்னிருவரும் தாங்களும் அறியாமலே வாசகர் பெருக்கத்துக்குக் காரணமாக இருந்தார்கள் என்றும் சொல்ல வேண்டும்.

ஜே.ஆ.ர். ரங்கராஜுவின் ஐந்தாறு நாவல்களும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒன்றாக 1916 முதல் 1923 வரையில் வெளிவந்தன. பிரஸ் சொந்தக்காரரான ரங்கராஜு பத்தாயிரம் பிரதிகளை அச்சிட்டு ஒவ்வொரு ஐநூறு பிரதிகளையும் ஒரு பதிப்பாகக் குறிப்பிட்டு 10 பதிப்புகள் வரை தன் நாவல்களை வெளியிட்டார். ராஜாம்பாள், ராஜேந்திரன், சந்திரகாந்தா, ஆனந்தகிருஷ்ணன் என்று ஒவ்வொரு நாவலும் வெளியாகும்போது மிகவும் பரபரப்பாக வாசகர்கள் வாங்கிப் படித்தனர். வரதராஜன் என்று இரண்டு பாகங்கள் வெளிவரும் வரையில் ஒன்றும் தடங்கல் இல்லை. 'வரதராஜனின் பல பகுதிகள் இலக்கியத் திருட்டு' என்று கேஸ் போட்டு, மேலே எதுவும் எழுதிப் பிரசுரிக்கக் கூடாது என்றும், ஆறு மாதம் ஜெயில் வாசம் அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் என்றும் கோர்ட் அவருக்குத் தண்டனை விதித்தது என்று எண்ணுகிறேன். ஜெயிலில் இருந்து விட்டு எழுதுவதை நிறுத்தி விட்டார் ரங்கராஜு. இவரை எழுத்தாளர் சங்கம் ஒன்று 40களின் ஆரம்பத்தில் கல்கி தலைமையில் ஏற்பட்டபோது முதல் கூட்டத்துக்கு வரவழைத்து நான் சந்தித்

திருக்கிறேன். தாடி வளர்த்துக் கொண்டு நாமம் போட்டுக் கொண்டு *(வைஷ்ணவ நாயுடு அவர் என்று எண்ணுகிறேன்)* பார்ப்பதற்குக் கம்பீரமாக இருந்தார்.

ரங்கராஜுவுக்கு அடுத்து வாசகர்களின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தவர் என்று வடுவூர் துரைசாமி ஐயங்கார் என்பவரைச் சொல்ல வேண்டும். 1923, 24 முதல் 27 வரையில் தஞ்சையில் கல்யாண சுந்தரம் ஹைஸ்கூலில் நான் படித்துக் கொண்டிருக்கும்போது பச்சை, மஞ்சள், சிவப்பு அட்டையில் டெமி சைஸில் அவர்கள் நாவல்கள் ஒவ்வொன்றாக அப்பாவுக்குத் தெரியாமல் ரெயில்வே ஸ்டேஷன் ஹிக்கின்பாதம்ஸில் வாங்கிப் படித்த நினைவிருக்கிறது. படித்துவிட்டு வீட்டுக்கு எடுத்துப் போனால் அப்பா சண்டை பிடிப்பாரென்று அப்போது மேல வீதியில் தெற்குக் கோடியில் இருந்த ஒரு லைப்ரரிக்கு இனாமாகப் புஸ்தகத்தைக் கொடுத்து விடுவேன். இப்படிப் படித்த நாவல்கள் என்று கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலைமகளும், வஸந்த கோகிலம், பூரண சந்திரோதயம், விலாஸவதி, திகம்பர சாமியார், மேனகா இவை நினைவுக்கு வருகின்றன. ஒரு நாவல் கலைப் பிரக்ஞையுடன், சுலபமாகப் படிக்கக் கூடிய நடையுடன், விரஸமான விஷயங்களையும்கூட அதிக விரஸம் தட்டாமல் எழுதுவதில் சிரத்தையுடன் எழுதிய வடுவூரார் உண்மையிலேயே இலக்கியப் பிரக்ஞை உடையவர் என்பதில் சந்தேகத்துக்கிடமேயில்லை.

ரெயினால்ட்ஸின் மட்டமான நாவல்களைத் தழுவி எழுதினார் பெரும்பாலும் என்றாலும் அவர் விக்டர் ஹ்யூகோவின் Les Miserables என்கிற நாவலை அற்புதமாகத் தமிழில் தழுவி எழுதியிருக்கிறார். முதநூலைப் போலவே கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலைமகளும் என்கிற நாவல் அமைந்திருப்பதாகச் சொன்னால் அதில் தவறவில்லை.

அதே போல கிரேக்க புராணக் கதையான Eros and Psyche கதையை வஸந்த கோகிலம் என்கிற நாவலாகச் செய்திருக்கிறார்.

இன்று தமிழில் சரித்திர நாவல்கள் ஏராளமாக எழுதப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் முன்னோடி யாகக் கல்கியைக் கருதுவது வழக்கமாக இருக்கிறது. ஆனால், இதே அளவில் இன்று எழுதப்படுகிற சரித்திர நாவலாசிரியர்களுக்கு முன்னோடியாக 1924-ல் வெளி வந்த வடுவூராரின் விலாஸவதி என்பதைத்தான் சொல்ல முடியும். அது வெளிவந்த சமயத்தில் மிகவும் பரவ லாகப் பேசப்பட்டதுடன் படிக்கவும் பட்டது. மூன்று ஆண்டுகளில் ஐந்து பதிப்புகள் வந்ததாக ஒரு தகவல் படித்திருக்கிறேன்.

வடுவூராரின் ஆரம்பக் காலத்திய நாவல்கள் எல் லாம் மாதாந்திரப் பத்திரிகையாக வெளிவந்த மனோரஞ் சிதம் *(அல்லது மனோரஞ்சனியா?)* என்கிற பத்திரிகை யில் வெளிவந்ததாகச் சொல்வார்கள். இந்தப் பத்திரி கையைப் பார்த்திருப்பதாக எனக்கு நினைவில்லை. அந்தப் பத்திரிகையை முன்மாதிரியாகக் கொண்டுதான் வை.மு. கோதைநாயகி அம்மாள் தனது ஜகன்மோகினி நாவல் பத்திரிகையைத் தொடங்கியதாகவும் சொல்வார்கள்.

இன்னொரு விஷயமும் அப்போது பரவலாகப் பேசபட்ட விஷயம் நினைவுக்கு வருகிறது. வை.மு. கோதைநாயகியின் முதல் நாவலான வைதேகியின் முதல் பாதியை வடுவூரார் எழுதி, முன்மாதிரியாகத் தந்த தாகவும் அதைப் பின்பற்றி முடித்து விட்டு வெற்றிகர மாக வை.மு.கோ. துப்பறியும் நாவல்களிலிருந்து அவர் தனி பிராண்டான சமூக நாவல்களுக்கு நகர்ந்தார் என்றும் சொல்லுவார்கள்.

1930-ல் என்று எண்ணுகிறேன். பைகிராப்ட்ஸ் ரோடு கோடியில் மரினா பஸ் ஸ்டாண்டிற்கு எதிரே

வேங்கடரங்கம் பிள்ளை தெரு பைகிராப்ட்ஸ் ரோடைச் சந்திக்கிற இடத்தில் இருந்த வீட்டை வாங்கி வடுவூரார் புதுப்பித்து வடுவூர் ஹவுஸ் என்று பெயரிட்டு கிரஹப் பிரவேசம் நடத்தியபோது, மாலையில் பாண்ட் வாசித்துக் கொண்டிருக்கும்போது நான் சென்னையில் இருந்தேன். வீட்டைப் பார்த்து வைத்துக் கொண்டு ஒரு வாரம் கழித்து, அவரைப் பார்க்கப் போனேன். அந்த ஒரு தடவை மட்டுமே அவரை நான் சந்தித்திருக்கிறேன்.

என்ன பேசினோம் என்று நினைவில்லை. ஆனால், பேச்சு பூராவும் தன் பக்கத்தில் அவர் நாவல்களைப் பற்றி யும், அவருடைய தழுவல் முறைகளைப் பற்றியும் அவர் நடையைப் பற்றிய வரையிலும்தான் என்று நான் நினைவு கூர்கிறேன். தன் நாவல்களில் பெரும் பகுதி தழுவல்கள்தான் என்று அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால், மேனகாவும் திலோத்தமை என்று ஒரு ஐந்து அங்க நாடகமும் தன் சொந்த எழுத்து என்று சொல்லி எனக்கு திலோத்தமா ஒரு பிரதி அன்பளிப்பாக அளித் தார். அதை வெகுநாள் நான் பத்திரப்படுத்தி வைத்திருந் தேன்.

அதைத் தவிர அவர் பேசிய விஷயங்களிலே முக்கியமானதாக ஒன்று நினைவுக்கு வருகிறது. எகிப் தில் தலைமுறை தலைமுறையாக ஃபாரோக்கள் என்கிற பெயருடன் அரசாண்ட மன்னர்கள் தென்னாட்டிலிருந்து எகிப்து என்கிற மிசிர தேசத்துக்குச் சென்ற வடகலை அய்யங்கார்கள்தான் என்று அசைக்க முடியாத ருசு இருப்பதாகவும், அதையெல்லாம் சொல்லித் தான் ஒரு நூல் எழுதிக் கொண்டிருப்பதாகவும் சொன்னார். இந்தச் சரித்திர உண்மையில் இருந்த அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாக ஆங்கிலத்தில் Long Missing Links என்று ஒரு 900 பக்க நூல் எழுதி அதைத் தன் சொந்தச் செலவிலேயே அச்சிட்டு விற்க முயன்றார். புஸ்தகம் விற்கவில்லை. அச்சுக்கும், பேப்பருக்கும் ஆன

கடனை புதுசாக வாங்கிய வீட்டை விற்று அடைத்து விட்டு, பேசாமல் கிராமத்துக்குப் போய்விட்டார் என்று எண்ணுகிறேன். இந்தப் புஸ்தகமும் என்னிடம் வெகு நாள் இருந்தது.

'காங்கிரஸ் கமலம்' அல்லது 'ஆணென்று அணைய அகப்பட்ட பெண் புதையல்' என்கிற நாவலை சுதேச மித்திரனில் தொடராக எழுதி வெளியிட்டார். இதுதான் பழைய வடுவூர் பாணியில் அவர் கடைசி முயற்சி என்று எண்ணுகிறேன். அதற்குப் பிறகு அவர் முப்பதுகளில் பழைய வேகத்தையோ சாதனையையோ எட்டவில்லை. மாசத்துக்கு ஒரு நாவல் என்று எழுதி, நாவலுக்கு நூறு ரூபாய் என்று கூலி வாங்கிக் கொண்டு ஏழெட்டு ஆண்டுகள் இருந்து பிறகு இறந்து விட்டார் என்று எண்ணுகிறேன்.

சேலம் பட்டுக் கரை வேஷ்டியும், காதில் டால் வீசும் வைரக் கடுக்கனும், நெற்றியில் ஒரு சிவப்பு ஸ்ரீ சூர்ணக் கோடுமாகவும் நான் பார்த்த வடுவூர் துரைசாமி ஐயங்காரை என்னால் இன்றுகூட நினைவுகூர முடிகிறது. தமிழுக்கு அவர் சேவை சரியானபடி கணிக்கப்பட வில்லை; புரிந்து கொள்ளப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

— நன்றி - இலக்கியச் சாதனையாளர்கள் - க.நா.சு.

# தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆரணி குப்புசாமி முதலியாரைத் தொடர்ந்து அவர் பாணியில் தழுவல்களாக எழுதியவர் வடுவூர் துரைசாமி ஐயங்கார். தழுவல் நாவல்களாயிருந்தபோதிலும் தமிழ்நாட்டு இடப் பெயர், மக்கள் பெயர்களை வைத்தே ஜனரஞ்சகமாக எழுதப்பட்டதால், இவரது நாவல்கள்தான் தமிழ்நாட்டில் ஒரு பரந்த வாசகர் உலகத்தைச் சிருஷ்டித்து வைத்தன. புத்தகம் படிக்கும் பழக்கம் இந்த நாவல்களால் ஏற்பட்டது ஒரு புற மிருக்க, கண்டமேனிக்கு கதை எழுதும் எழுத்தாளர்களை உற் பத்தி செய்யக் காரணமாய் இருந்ததும் வடுவூரார் நாவல்கள் தான். ஆக, அக்காலச் சூழ்நிலையை ஒரு விமர்சகர் பின்வரு மாறு எடுத்துக் காட்டுகிறார்:

'அச்சுப் பொறி மலிந்து காகித வர்த்தகம் பெருகி வரும் இக்காலத்தில் நாவல்களும் புற்றீசல்போல் தோன்றித் தொடங்கி விட்டன. மக்களின் ஆசாரங்கள் சீர் பெறவும், பாஷை வளர்ச்சி யுறவும் நாவல்கள் பெரிதும் உதவி புரியும் என்பது உண் மையே. ஆனால், தடியெடுத்தோரெல்லாம் வேட்டைக்காரர் என்றபடி தமிழ் உலகத்திலே இறகோட்டிகளெல்லாம் நாவ லாசிரியர்களாய் முன்வந்திருப்பதால் தற்கால நாவல்கள் பெரும்பாலானவற்றால் விளையும் தீமைகள் அற்ப சொற்ப மன்று. 'ர'கர 'ற'கரங்களைச் சரியாய் வழங்க அறியாதவர் களும் தமிழ் எழுத்தாளராகத் துணிவு கொள்வதும் தமிழ் மொழியின் சனி திசையென்றே கூற வேண்டும். ஒன்றோ இரண்டோ விட புருஷர்கள், இரண்டோ மூன்றோ நாண மற்ற கன்னியர்கள், ஒரு துப்பறியும் கோவிந்தன் அல்லது கோபாலன், ஒரு ஆகாவழி ஜமீந்தார் — தமிழ் நாவல் பூர்த்தி யாகி விடுகிறது. தற்காலத்தில் துப்பறியும் நாவல்களெல் லாம் பிற நாட்டுப் பழக்க வழக்கங்களையும் மனோபாவங் களையும் தமிழகத்தில் பரப்பித் தமிழ் மக்களை அனாசாரப் படுகுழியில் தலைகீழாக வீழ்த்துகின்றன. நாவல்களின் தன்மை இன்னதென்றறியாத தமிழ் மக்களும் இந்த நாவல் புற்றீசல்களைக் கோழி விழுங்குவதுபோல் விழுங்கித் திருப்தி அடைகின்றனர் *(லக்ஷ்மி, செப். 1924, முத்து மீனாட்சி நாவ லுக்கு மதிப்புரையில்).*

வடுவூர் துரைசாமி ஐயங்கார் ரெயினால்ட்ஸ் போன்ற ஆங்கில நாவலாசிரியர்களின் கதைகளைத் தழுவி எழுதிய தோடு நின்று விடாமல் தமிழ்நாட்டின் சமகால சமு தாயத்தைச் சித்திரிக்கும் சொந்த நாவல்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார். இவருடைய சொந்த முயற்சிகளில் சிறந் தவை மேனகா, கும்பகோணம் வக்கீல் என்பவையாகும். கையில் எடுத்தால் புத்தகத்தைக் கீழே வைக்காமல் தொடர்ந்து படிக்கும் ரசனை மிகுந்த கதைகளை எழுதிய வடுவூர் துரை சாமி ஐயங்கார் பின்னர் கல்கி போன்றவர்களின் கதைகளைப் படிக்கத் தயாரான ஆயிக்கரணக்கான வாசகர்களைத் தோற்று வித்த முன்னோடியாகவே விளங்கினார். இந்தப் பெருமையை ஆரணி குப்புசாமி முதலியாரும், ரங்கராஜுவும் பகிர்ந்து கொண்டனர்.

துரைசாமி ஐயங்காரின் மிகப் பிரசித்தமான மேனகா என்ற நாவலின் முதல் பக்கத்திலேயே ஓர் அடிக் குறிப்பு காணப்படுகிறது:

> 'சம்பசிவையங்கார், மேனகா என்பவை உண்மைப் பெயர்களை மறைக்கும் பொருட்டு வைக்கப்பட்ட கற்பனைப் பெயர்கள்'

என்று அந்தக் குறிப்பு விளக்குகிறது. இன்றைய நாவல்களில் வரும் 'பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. உண்மை மனிதர்களையும் சம்பவங்களையும் குறிப்பிடுபவை அல்ல' என்ற சட்ட அடிப்படையில் முன்கூட்டியே விளக்கம் சொல்லிக் கொள்வது நடப்பியல் சித்திரங்களில் இன்றியமையாத நிபந்தனையாக அமைவதற்கு மாறாக, வடுவூராரின் குறிப்பு, மேனகா கதை உண்மை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த கற்பனை என்பதை உணர்த்துகிறது. மர்மங்களும் துப்பறிதலும் நுறைந்த இந்த நாவலில் வாசகர் மனதை ஈர்க்கும் சம்பவங்கள் பல கையாளப்பட்டிருக்கின்றன. உணர்ச்சி களின் உச்ச நிலையைத் தொடும் சம்பவங்களுக்கும் குறை வில்லை. பல அல்லல்களுக்குட்படும் மேனகா, ஒரு முஸ்லிம் பெண்ணின் உதவியினால் தன் கணவனை மீண்டும் அடை வது லட்சிய கதை மாந்தர்களின் செயலின் விளைவாக அமை கிறது. தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களின் சமகாலச் சூழ் நிலை 1920களில் எழுதப்பட்ட இந்த நாவலில் தத்ரூபமாக விளங்குகிறது.

வடுவூர் துரைசாமி ஐயங்கார் நாவல்களில் மேனகாவை அடுத்து மிகப் பிரசித்தி பெற்றது கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியார் என்பது. பல மர்மங்களும், திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த இந்த நாவலில் தஞ்சைப் பிராந்தியத்தில் அன்று நிலவிய சூழ்நிலை வருணிக்கப்படுகிறது. கதையின் ஆரம்பமே பின்வருமாறு அமைந்திருக்கிறது:

'திருக்கண்ணமங்கை என்னும் சிற்றூர் தஞ்சை ஜில்லாவிலுள்ள மிக்க இரமணியமான ஒரு ஸ்தலம். அவ்வூரில் எக்காலத்திலும் ஓயாது குயிலினங்கள் தமது தீங்குரலமுதைச் சொரிந்து கொஞ்சிக் குலாவிக் குதூகலமாக வதிந்த தென்னஞ்சோலைகளுக்கிடையில், அச்சிற்றூரின் வேளாளரது தெரு அமைந்திருந்தது. அத்தெருவினிடையிலிருந்த ஒரு பெருத்த மச்சு வீட்டின் கூடத்தில் முப்பத்தைந்து வயதுள்ள ஒரு ஸ்திரீ தென்னங்கீற்று முடைந்து கொண்டிருந்தாள். அவளது கைகள் எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தனவோ அவ்வளவு சுறுசுறுப்பாகவே அவளது வாயிலிருந்து சொற்களும் வெளிப்பட்டு பக்கத்து அறையில் வாழைப் பூவை அரிவாள்மணையில் வைத்து நறுக்கிக் கொண்டிருந்த ஓர் அழகிய பெண்மணியின் செவிகளில் தாக்கிக் கொண்டிருந்தன.'

இவ்வாறு அழகாக சில காட்சிகளை வருணிக்கும் துரைசாமி ஐயங்கார் எழுத்திலே வாசகரைக் கவரும் உத்தி எங்கும் சிறந்து நிற்கிறது. 'கல்கிக்கு முன் அவ்வளவு தெளிவுடனும், அழகுடனும் வசனம் எழுதியவர்கள் வடுவூராரைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்லி விடலாம்... தமிழ் வாசகர்களின் நாடியைப் பிடித்துப் பார்த்து அறிந்து எழுதியவர்களில் காலத்தால் முதன்மையானவர் வடுவூர் துரைசாமி ஐயங்கார்...' என்பது க.நா. சுப்பிரமணியத்தின் மதிப்பீடு *(படித்திருக்கிறீர்களா?-2)*.

வடுவூர் துரைசாமி ஐயங்காரின் செல்வாக்கைப் பயன்படுத்தி, குடும்பச் சூழ்நிலையை வைத்து, ஜனரஞ்சகமான நாவல்களை எழுதியவர் வை.மு. கோதைநாயகி அம்மாள்.

நன்றி: தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் - சிட்டி, சிவபாதசுந்தரம்.

## தமிழ்த் திரையில்... முதல் நாவல்

புராணக் கதைகளும், இதிகாசக் கதைகளும், ராஜா ராணிக் கதைகளும் படமாக எடுக்கப்பட்ட தமிழ்த் திரையின் தொடக்க காலத்தில்... முதன்முதலாக நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம் மேனகா.

அந்நாளின் புகழ் பூத்த எழுத்தாளர் வடுவூர் துரை சாமி ஐயங்கார் எழுதிய நாவல் இது.

திரைப்படமாக எடுக்கப்படுவதற்கு முன்பு மேனகா நாவல், நாடகமாகவும் வடிவமைக்கப்பட்டு பல தடவை மேடையேறி புகழ் பெற்றது. அப்போது, நடிகர் எம்.கே. ராதாவின் தந்தையார் எம். கந்தசாமி முதலி யார், மேனகா நாடகத்திற்கு வசனம் எழுதினார் *(டி.கே. சண்முகம் சகோதரர்கள்தான் இந்நாடகத்தைத் தயா ரித்து வழங்கியவர்கள்).*

1935-இல் மேனகா நாவலைப் படமாக்கிய பொழுது அதில் டி.கே. பகவதி, டி.கே. சண்முகம், என்.எஸ். கிருஷ்ணன், டி.கே. சங்கரன், எஸ்.வி. சகஸ்ரநாமம், கே.ஆர். ராமசாமி, டணை். சிவதாணு ஆகியோர் நடித்தனர். இவர்கள் அனைவருக்கும் இதுவே முதல் படம் என்பதும் குறிப்பிடத் தக்க செய்தி. எம்.எஸ். விஜயா, கே.டி. ருக்மணி ஆகியோரும் நடித்த இப் படத்தை இராஜா சாண்டோ இயக்கினார். பாரதி யாரின் பாடல் முதன் முதலாக ஒலித்த படம் என்ற வர லாற்றுப் பெருமையும் மேனகா படத்தையே சேரு கிறது.

நன்றி - பதிப்புத் தொழில் உலகம், ஜூலை 2004

# ஸௌந்தர கோகிலம்

## 1 – வது அதிகாரம்

## விநோதத் திருட்டு

"முதலியாரே! நானும் எத்தனையோ ஊர்களைப் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் இந்தச் சென்னைப் பட்டணம் கெட்டதுபோல, இவ்வளவு அதிகமாக, வேறே எந்த ஊரும் கெடவில்லை. ஐயா! திருட்டு, புரட்டு, சூது, வாது, மோசம், நாசம், அநாசாரம், விபசாரம் முதலிய சகலமான அக்கிரமங்களும் இந்த ஊரிலே தான் உற்பத்தியாகின்றன. ஜாதி கிடையாது; சமயம் கிடையாது; நாணயமென்பது மருந்துக்கும் அகப்படாது. பணம், பணம், பணம் என்று பகலிலும் ராத்திரியிலும் தியானம் செய்து, அந்தப் பெரும் பேய்க்கே அடிமையாகி, ஈவிரக்கம், பச்சாதாபம், தயை, தாக்ஷணியம், தானம், தருமம் முதலிய நற்குணங்களுக்கு எல்லாம் கொஞ்சமும் இடங்கொடாமல், கேள்விமுறையில்லாமல், அவனவன் நினைத்தபடி அக்கிரமம் செய்கிறதும், கண்ணுக்கு எதிரிலேயே ஒருவனுடைய பொருளை இன்னொருவன் அபகரித்து விடுகிறதும், எப்படிப்பட்ட புத்திசாலிகளையும் ஒரு நொடியில் ஏமாற்றி விடுவதும், வேறே எந்த இடத்திலேயாவது நடக்கக்கூடிய விஷயங்களா? இன்றைய தினம் காலையில் சுமார் எட்டு மணி சமயத்தில் சைனா பஜார் தெருவில் ஓர் அக்கிரமம் நடந்திருக்கிறது! ஆகா! அதை என்னவென்று சொல்லுவேன்! இந்த ஊரில் அந்தத் தெருவிலே தான் ஜனங்கள் எப்போது பார்த்தாலும் தேர்க்கூட்டம், திருவிழாக் கூட்டம்போல நிறைந்து, தேனடையில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருப்பது போல இருப்பார்கள். அந்த இடத்துக்கு ஓர் அடி தூரத்திலே தான் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது; கடைக்குக் கடை

போலீஸ் புலிகள் மீசைகளை முறுக்கி விட்டுக் கொண்டு கையும் தடியுமாக நின்று கொண்டிருக்கிறார்கள். எல்லாருடைய கண்ணுக்கும் எதிரில் பட்டப்பகலில் இவ்வளவு பெரிய காரியம் நடந்திருக்கிறதே! இந்த ஆச்சரியத்தை என்னவென்று சொல்லு கிறது!'' என்று டிராம் வண்டியில் போய்க்கொண்டிருந்த ஒரு நாயுடு, தமக்கெதிரில் உட்கார்ந்திருந்த ஒரு முதலியாரைப் பார்த்து மிகுந்த வியப்போடு கூறினார்.

அதைக் கேட்ட முதலியார் தமது வாயில் வைத்திருந்த சுருட்டை அப்புறம் இப்புறம் திருப்பி, அதன் முனையிலிருந்த சாம்பலைத் தமது சுண்டுவிரலின் நகத்தால் தட்டிவிட்டு, புப், புப், என்று இரண்டு முறை இழுத்தபின் சுருட்டைக் கையி லெடுத்துக் கொண்டு, நிதானமாகப் புகையை வெளியில் விடுத்த வராய் நாயுடுவை நோக்கி அலட்சியமாகப் பேசத் தொடங்கி, "ஆமைய்யா! நீர் பேசுவீர். ஊரை அடித்து உலையில் போடுவது போல, ஏழை ஜனங்களுடைய வரிப்பணத்தையெல்லாம் பிடுங்கி, இந்த கவர்ன்மெண்டு ஆபீசில் மாதம் பிறந்தால் உமக்கு இருநூறு முன்னூறு சம்பளம் கொடுத்து விடுகிறார்கள். உமக்கு என்ன கஷ்டம் தெரியப்போகிறது! உமக்குக் கொடுக்கிறதுபோல, ஒவ்வொருவனுக்கும் யாராவது பணங் கொடுத்துக் கொண்டி ருந்தால், ஒருத்தனும் திருடவும் மாட்டான்; உம்மைப் போலவே ஒவ்வொருத்தனும் மற்றவர்களுக்கு நீதி போதித்துக் கொண்டுதான் இருப்பான். போமையா போம். இதெல்லாம் என்ன பேச்சு! ஊரினுடைய நிலையைத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிற பேச்சு உப்புக்காகுமா புளிக்காகுமா! ஜனங்கள் பிழைக்க மாட்டாமல் தத்தளிக்கிறார்கள். பணம் இருக்கிற இடமோ தெரியவில்லை. மனிதன் தனக்கு வேண்டிய சோற்றுக்கும் துணிக்கும் பணம் செலவழிப்பதன்றி, அவன் உள்ளே இழுக்கும் மூச்சுக்காற்றுக்கும், குடிக்கும் தண்ணீருக்கும், நடக்கும் பாதைக்கும்கூட பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. ரூபாய் ஒன்றுக்கு இரண்டரைப் படி அரிசி கிடைப்பது கூட அருமையாக இருக்கிறது. மனிதன் எந்தப்பக்கம் திரும்பினாலும் பணத்தை நீட்டிக் கொண்டே திரும்பவேண்டி இருக்கிறது. இதற்குமுன் ஒரு ரூபாய் கொடுத்த சங்கதிக்கு இப்போது மூன்று ரூபாய் கொடுத்தாலும் ஒன்றுக்குப் பாதிதான் கிடைக்கிறது. குழந்தை குட்டிகளோ வஞ்சனையில்லாமல் பிறந்துகொண்டே இருக்கி

றார்கள். ஜனங்கள் சாகவும் மாட்டாமல் பிழைக்கவும் மாட்டாமல் தவிக்கிறார்கள். அவர்கள் நியாயமான வழியில் சம்பாதிக்கிற சம்பாத்தியம் கால் வயிற்றுக்குக்கூட வருகிற தில்லை. அப்படியிருக்க, திருடாமலும், பொய் சொல்லாமலும், மோசம் செய்யாமலும் வேறே எப்படித்தான் காலக்ஷேபம் செய்கிறது!'' என்று மிகுந்த ஆத்திரத்தோடு பேசினார்.

அதைக் கேட்ட நாயுடு, முதலியாரைப் புரளி செய்பவர் போல, வார்த்தைகளை நீட்டி நீட்டிப் பேசத் தொடங்கி, ''அப்படியா! முதலியார் சொன்னது நூற்றில் ஒரு பேச்சு! ஜனங்களெல்லாரும் பிழைக்க மாட்டாமல் தவிக்கிறார்களோ!! ஒவ்வொருவனும் செய்கிற அநாவசியச் செலவுகளைப் பார்த்தால், ஜனங்கள் தவிக்கிறதாக யாரும் சொல்லவே மாட்டார்கள். இந்த ஊருக்குள் 15–நாடகக் கொட்டகைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும், தினமொன்றுக்கு ஆயிரம் ஆயிரத்தைன்னூறு ரூபாய் வசூலாகிறது! பயாஸ்கோப் நடக்கும் இடங்கள் சுமார் 7, 8 இருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றிலும் தினம் இரண்டு, அல்லது மூன்று காட்சிகள் காட்டப்படுகின்றன. ஒவ்வோர் இடத்திலும் ஒரு நாளைக்குச் சுமார் ஆயிரம் ரூபாய் வசூலாகிறது. அதுவும் தவிர, இந்த ஊரில் வேசிகளும், தாசி களும், சுமார் இருபதினாயிரம் பேர் இருப்பார்கள். அத்தனை பேருக்கும் நாளொன்றுக்கு ரூபாய் ஐந்து முதல் இருபது வரையில் வருமானம் கிடைக்கலாம். இன்னம் சூதாடும் இடங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொரு தினத்திலும் கையாளப்படும் பணத் தொகையோ கணக்கில் அடங்காததாக இருக்கிறது. சிவில் கோர்ட்டுகளிலும், மாஜிஸ்டிரேட்டின் கச்சேரிகளிலும், மிட்டாய்க் கடைகளிலும், கள்ளு சாராயக் கடைகளிலும் வெள்ளைக்காரர்களுடைய கம்பெனிகளிலும், ஒவ்வொரு நாளிலும் செலுத்தப்படும் கப்பப் பணத் தொகைகளை ஓர் ஆற்றின் ஜலத்துக்கு சமமாகச் சொல்லலாம். இப்படியெல்லாம் நூற்றுக்கணக்கான கெட்ட வழிகளில் ஒவ்வொரு நாளும் இந்த ஊரிலுள்ள ஜனங்களால் அநாவசியமாக அழிக்கப்படும் பணத் தொகைகளைக் கணக்கிட்டால், அது எத்தனையோ லக்ஷக்கணக்கில் ஆகும். அப்படி இருக்க, ஜனங்கள் பிழைக்க மாட்டாமல் தவிக்கிறார்கள்

என்று சொல்ல வந்துவிட்டார் முதலியார்; நியாயமான வழியில் சம்பாதித்து, அவசியமான செலவுகளை மாத்திரம் செய்து கொண்டு காலந் தள்ளுகிற யோக்கியமான ஜனங்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் இப்படித் திருட்டிலும், புரட்டிலும் இறங்குகிறதே இல்லை. ஆனால் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து, கூத்துக்கும் கூத்திக்கும், குடிக்கும் கொடுப்பதற்காக, இப்படிப்பட்ட மோசங்களில் இறங்குகிற சோம்பேறிகள்தான் பெரும்பாலோராகப் பெருகிவிட்டார்கள். இதில் இன்னொரு விசேஷம் இருக்கிறது. ஒரு மிருக காட்சிச் சாலையில் எத்தனையோ வகையான மிருகங்களை எல்லாம் பிடித்து அடைத்து வைத்திருப்பதுபோல, இந்த ஊரில் எத்தனை ஜாதி மனிதர்கள் இருக்கிறார்கள் தெரியுமா! இங்கிலீஷ்காரர்கள், பிரஞ்சுக் காரர்கள், ஜெர்மானியர்கள், ஜப்பானியர்கள், சைனாக்காரர்கள், பர்மாக்காரர்கள், மலாயிதேசத்தார், அராபியர்கள், காபூலிகள், பஞ்சாபியர்கள், வங்காளத்து பாபுகள், பம்பாயிக்காரர்கள், பார்சீ ஜாதியார்கள், குஜராத்திகள், மார்வாரிகள், கொங்கணர், மலையாளத்தார், தெலுங்கர், சௌராஷ்டிரர், கன்னடர், தமிழர், துருக்கர் முதலிய சகலமான ஜாதி ஜனங்களும், இந்த ஊரில் இருக்கிறார்கள். எல்லாத் தேசத்திலும் உள்ள திருட்டுகளும் புரட்டுகளும் சாமர்த்தியங்களும் இந்த ஊரில் வந்து அற்றுப் போகின்றன. அதனாலேதான் இந்த ஊருக்கு அயோக்கியத்தனத்தில் இவ்வளவு பெருத்த கீர்த்திப் பிரதாபம் ஏற்பட்டிருக்கிறது" என்றார்.

முதலியார் தமது வாதத்தை நிறுத்தினாலும் வாயிலிருந்த சுருட்டை மாத்திரம் இலேசில் விடுகிறதில்லை என்று சொல்லு கிறவர்போல, அதைத் தமது பல்வரிசைகளினிடையில் வைத்து இடுக்கிக் கொண்ட வண்ணம் வழவழ கொழகொழ வென்று வார்த்தைகளை உபயோகப்படுத்தி மிகுந்த ஆத்திரம் கொண் டவர் போலத் தமது கைகளை நீட்டி நீட்டிப் பேசத் தொடங்கி, "அடே என்ன ஐயா இவர் இப்படிப் பேசுகிறார்! வீட்டுக்கு வீடு வாசல் இருக்கிறதைய்யா! திருடர்களும் மோசக்காரர்களும் இந்த ஊரில் மாத்திரந்தான் இருக்கிறார்களோ? மற்ற ஊர்களில் இல்லையோ? வெளியூர்களில் ஆயிரம் ஜனங்களுக்கு, ஐம்பது பேர் அயோக்கியர்கள் இருக்கிறார்கள். இந்த ஊரில் ஆறு லக்ஷம்

ஜனங்களுக்கு முப்பதாயிரம் பேர் அயோக்கியர்கள் இருக்கிறார்கள். கணக்கு சரியாகத்தானே போகிறது; வெளியூர்களில் மனிதர்கள் தூங்கிக் கொண்டிருக்கும் ராத்திரி காலங்களில் கன்னக்களவும், வழிப்பறியும், மாடு பிடியும் நடந்தால், இங்கே பகற்காலங்களில் விழித்திருக்கும் போதே ஒருவரையொருவர் ஏமாற்றுகிறார்கள். எது ஆண்மைத்தனமான திருட்டு? ஆனால் இந்த விஷயங்களை எல்லாம் உடனுக்குடனே பகிரங்கப்படுத்த வெளியூர்களில் பத்திரிகைகள் இல்லை; இந்த ஊரிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் இடத்தை நிரப்புவதற்காக, இந்த விஷயங்களை எல்லாம் உடனுக்குடனே அச்சடித்து வெளிப்படுத்தி விடுகின்றன. அவ்வளவுதான் வித்தியாசம். அதனாலே தான் இந்த ஊருக்கு இவ்வளவு கீர்த்திப்பிரதாபம் ஏற்பட்டிருக்கிறது'' என்று கூறினார்.

அப்போது, அவர்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு செட்டியார் புன்சிரிப்போடு நாயுடுவை நோக்கி, ''ஐயோ நாயுடுகாரு! யாரோ அயோக்கியர்கள் என்னவோ காரியம் செய்துவிட்டால், அதைப்பற்றி நீங்கள் ஏன் சண்டைபோட்டுக் கொள்ளுகிறீர்கள்? அதோடு விடுங்கள். சைனாபஜார் தெருவில் ஏதோ திருட்டு நடந்ததாகப் பேசிக் கொண்டீர்களே அதன் விவரம் என்ன? நான் ஒரு வேலையாக சைதாப்பேட்டைக்குப் போய்விட்டு இப்போதுதான் வருகிறேன். எங்கே பார்த்தாலும் ஜனங்கள் கூடிக்கூடி நின்று இதே பேச்சாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். விஷயம் இன்னதென்பது எனக்கு விளங்கவில்லை'' என்றார்.

உடனே நாயுடு சாந்தமடைந்தவராய் செட்டியாரைப் பார்த்து, "அந்த வேடிக்கையை என்னவென்று சொல்லுகிறது! அடடா! திருடர்கள் எப்படிப்பட்ட அதிசயமான தந்திரம் செய்திருக்கிறார்கள் தெரியுமா! நினைக்க நினைக்க மகா ஆச்சரியமாக இருக்கிறது! சைனாபஜாரிலும் அதற்குப் பக்கத்திலுள்ள சௌகார்பேட்டையிலும் கோடீஸ்வரர்களான எத்தனையோ வியாபாரிகளும் முதலாளிகளும் இருக்கிறார்கள். அந்த இடத்துக்குக் காலை எட்டு மணிக்கு ஒரு தபாற்காரன் வருகிறது வழக்கம்; அவன் கொண்டுவரும் மணியார்டர் தொகை மாத்திரம் ஒரு சுமார் இருபதினாயிரம் ரூபாய் இருக்கும்; அது

தவிர, விலையுள்ள நகைகளும், பெருத்த பெருத்த நோட்டுகளும் வைத்து ரிஜிஸ்டர், இன்ஷியூர் முதலிய செய்யப்பட்ட கடிதங் களும் ஏராளமாக வரும்; அந்த இடம் ஜனங்கள் நிறைந்த நல்ல பந்தோபஸ்தான இடமாகையால், தபால் இலாகாதாரர்கள், ஒரே ஒரு தபாற் சேவகனிடத்திலே தான் அவ்வளவு விலையுயர்ந்த உருப்படிகளையும் கொடுத்து அனுப்புவது வழக்கம். அந்த ஏற்பாடு நெடுங்காலமாக நடந்து வருகிறது. அந்தத் தபாற்கார னுக்கு எவ்வித அபாயமும் நேர்ந்ததில்லை. இன்று காலையில் அந்தத் தபாற்காரன் ஏராளமான மணியார்டர் பணத்தையும், இன்ஷியூர், ரிஜிஸ்டர்களையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு அவைகளைப் பட்டுவாடா செய்து கொண்டிருந்தவன் திடீரென்று காணப்படவில்லை. அவன் தனது வேலையை முடித்துக் கொண்டு மறுபடி பகல் 11½ மணிக்குத் தபாற்சாலைக்குப் போக வேண்டியது கட்டாயமான ஏற்பாடு. அங்கேயும் அவன் போய்ச் சேரவில்லை. தபாற்சாலையின் அதிகாரி 12—மணி, 1—மணி வரையில் பார்த்துவிட்டு, மிகுந்த கவலையும் கலக்கமும் அடைந்து, தமது சிப்பந்திகளையெல்லாம் அனுப்பி, அந்தச் சேவகன் போகவேண்டிய இடம் முழுவதிலும் தேடிப்பார்க்கச் செய்தார். காலையில் வந்தவன், ஆரம்பத்திலுள்ள நாலைந்து வீடு களுக்கு மாத்திரம் மணியார்டர் முதலியவற்றைக் கொடுத்த தாகவும், அதற்குமேல் எவருக்கும் பட்டுவாடா செய்யவும் இல்லை, அப்புறத்தில் வரவும் இல்லை என்றும் சிலர் சொல்லக் கேள்வியுற்ற சிப்பந்திகள் திரும்பிவந்து அந்த விவரத்தைத் தபாற்சாலை அதிகாரியிடத்தில் தெரிவித்தனர்.

“அதைக்கேட்ட தபாற்சாலையின் அதிகாரி மிகுந்த திகிலும் திகைப்பும் அடைந்து உடனே போலீஸ் அதிகாரிகளுக்கும், தமது மேலதிகாரிகளுக்கும் அறிக்கை செய்துகொள்ள, உடனே போலீஸ் அதிகாரிகளும், தபால் இலாகா அதிகாரிகளும் வந்து கூடினர். அவ்வாறு வந்த போலீஸ் இன்ஸ்பெக்டரும் தபால் இலாகா இன்ஸ்பெக்டர்களும் அந்தத் தபாற் சாலையின் போஸ்டு மாஸ்டர், குமாஸ்தா முதலியோருடைய வாக்குமூலங் களை வாங்கிக் கொண்டதன்றி, இன்றைய தினம் யார் யாருக்கு மணியார்டர், இன்ஷியூர் முதலிய உருப்படிகள் வந்திருந்தன என்பதற்கும் ஒரு ஜாப்தா வாங்கிக் கொண்டனர்; அந்த

இடத்தில் பட்டுவாடா செய்து பழகிய வேறொரு தபாற்காரனி டத்தில், அந்த ஜாப்தாவைக் கொடுத்து அவன் எந்த வரிசையாகப் பட்டுவாடா செய்து கொண்டுபோவானோ, அந்த வரிசையா கவே தங்களை அழைத்துக் கொண்டு போகும்படி சொல்ல, அவன் அந்த ஜாப்தாவில் குறிக்கப்பட்ட மணியார்டர் முதலிய வைகளை வரிசையாக எப்படி கொடுத்துக்கொண்டு போவானோ அப்படியே அவர்களை அழைத்துக்கொண்டு போனான். அப்படியே அவர்கள் நாலைந்து வீடுகளுக்குப் போய், அன்றைய தினம் வந்திருந்த உருப்படியை அந்தந்த விலாசதார் வாங்கிக் கொண்டாரா என்பதை விசாரித்துக்கொண்டே போனார்கள். ஐந்தாவது விலாசதாரின் வீடுவரையில் யாவரும் தத்தம் உருப்படிகளை வாங்கிக் கொண்டதாக ஒப்புக் கொண்டனர். போலீசாரும் மற்றவரும் இன்னமும் அப்பால் நடந்து ஆறாவது விலாசதாருடைய வீட்டுக்குப் போனார்கள். அந்த வீடு விசாலமான இரண்டு கட்டுகளுள்ள பெருத்த மெத்தை வீடு. அதன் வாசற்கதவு மூடி வெளியில் பூட்டப்பட்டிருந்தது. அந்த வீட்டின் கதவில் 1525 என்ற இலக்கம் காணப்பட்டது. அந்த விலாசதாருக்கு அன்றைய தினம் 10 ரூபாய்க்கு மணியார்டர் வந்திருந்தது. அந்த விலாசதாருடைய பெயர் கந்தசாமி முதலியார் என்று அவர்களுடைய ஜாப்தாவில் இருந்தது. ஆகவே, அந்த வீட்டிலிருந்த கந்தசாமி முதலியார் அந்த வீட்டின் கதவை மூடிப் பூட்டிக் கொண்டு எப்போது வெளியிலே போனா ரென்பதையும், எப்போது திரும்பி வருவார் என்பதையும் அறிந்துகொள்ளும்பொருட்டு, போலீசார் அண்டை வீட்டுக்காரரர் களை அழைத்து, கந்தசாமி முதலியாரைப் பற்றிய விவரங்களைக் கேட்க, அவர்கள் தமக்கொன்றும் தெரியாது என்று சொன்ன தோடு அந்த வீடு காலியாகி ஒரு மாச காலமாகப் பூட்டப்பட் டிருந்ததாகவும், நேற்றைய தினம் யாரோ ஒருவர் அதைத் தாம் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டு கதவைத் திறந்து கொஞ்சநேரம் உள்ளே இருந்துவிட்டுப் போனதாகவும், மறுபடி இன்றைய தினம் காலையில் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அதன் பிறகு கதவை எப்போது, யார் பூட்டினார்கள் என்பது தங்களுக்குத் தெரியா தென்றும், தபாற்காரன் அந்த வீட்டில் மணியார்டர் பட்டுவாடா

செய்தானா இல்லையா என்பதைத் தாங்கள் கவனிக்கவில்லை என்றும் சொன்னார்கள்.

''அதைக்கேட்ட போலீசார் அந்த வீட்டைப் பற்றிய விசாரணையை அவ்வளவோடு நிறுத்தி வைத்துவிட்டு, அதற்கு அப்பால் இருந்த விலாசதார்களிடம் போய், அவர்கள் தத்தம் உருப்படிகளை வாங்கிக் கொண்டார்களா என்பதை விசாரிக்க, அவர்கள் எல்லோரும், தபாற்காரன் தங்களுடைய ஜாகைக்கு வரவில்லை என்றும்; தபாற்காரனையே தாங்கள் இன்றைய தினம் பார்க்கவில்லை என்றும் சொல்லிவிட்டார்கள், ஆகவே, முதலில் விசாரிக்கப்பட்ட ஐந்து விலாசதார்களுக்கு மாத்திரமே உருப்படிகள் பட்டுவாடா செய்யப்பட்டிருந்தன என்றும், அதற்குமேல் பட்டுவாடா செய்யப்படவில்லை என்றும் அவர்கள் நிச்சயப்படுத்திக் கொண்டார்கள். ஆகையால், ஐந்தாவது விலாசத்துக்குச் சம்பந்தப்பட்ட வீட்டுக்கும் ஆறாவது விலாசத் துக்குச் சம்பந்தப்பட்ட வீட்டுக்கும் இடையில் தபாற்காரன் ஒருகால் பணத்தொகையோடு ஓடிப்போயிருக்க வேண்டும், அல்லது, அவனுக்கு ஏதாவது விபத்து நேர்ந்திருக்க வேண்டும் என்பது நிச்சயமாயிற்று. அந்த இடத்தில் ஏதாவது சந்து, அல்லது தெரு குறுக்காகப் போகிறதா என்பதைப் போலீசார் கவனித் தனர். எதுவும் போகவில்லை. தபாற்சேவகன் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிப்போக நினைத்திருந்தால், ஐந்து விலாசம் வரையில் வந்து பட்டுவாடாச் செய்த பின் திரும்பிப் போகா மல், ஆரம்பத்திலேயே போயிருப்பது சுலபமானது ஆகையால், அவனே ஓடியிருக்க மாட்டான் என்றும், பிறராலேதான் அவ னுக்கு அபாயம் நேர்ந்திருக்க வேண்டும் என்றும் போலீசாருக்கு ஒருவகையான சந்தேகம் உண்டாயிற்று; ஆகையால், அவர்கள் ஐந்தாவது விலாசதாரிடம் மறுபடி ஒருமுறை போய் அவனிடத்திற் பற்பல கேள்விகளை நன்றாகக் கேட்டு, அவனிடத்திலிருந்த மணியார்டர் கூபனை வாங்கிப் பார்த்தனர். அவ்விடத்தை விட்டபின் தபாற்காரன் அடுத்த வீட்டுக்குள் போனான் என்பதையும், அந்த விலாசதாரிடத்தில் போலீசார் அறிந்து கொண்டனர். ஆகவே, அடுத்த வீடாகிய ஆறாவது விலாசதாரைக் கண்டு விசாரித்தே தீர வேண்டுமென்று உறுதி செய்து கொண்ட போலீசாரும் மற்றவர்களும் அந்த வீட்டிற்குப்

போய் வாசல் திண்ணையில் உட்கார்ந்து, கந்தசாமி முதலியாருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவ்வாறு ஒருமணி நேரம் கழிந்தது. அப்போதும் கந்தசாமி முதலியார் திரும்பி வரவில்லை. அதற்குள் போலீசாருக்கு இன்னொரு யோசனை தோன்றியது. அந்த வீட்டின் சொந்தக்காரர் யார் என்பதை விசாரித்து அறிந்து கொண்டு அவரிடத்தில் போய்க் கேட்டு கந்தசாமி முதலியாருக்கு என்ன தொழில், அல்லது, உத்தியோகம் என்பதை அறிந்து கொண்டால், அவர் போயிருக்கும் இடத்தை அறிந்துகொள்ள அநுகூலப்படு மென்று நினைத்தவர்களாய் அந்த வீடு யாருடையது என்பதை விசாரிக்க, அது பக்கத்துத் தெருவிலிருந்த நம்பெருமாள் செட்டியார் என்ற ஒரு வர்த்தகருடைய வீடு என்பது தெரிந்தது. உடனே ஒரு சப் இன்ஸ்பெக்டரும் சில ஜெவான்களும் ஒரு தபால் இன்ஸ்பெக்டரும் நம்பெருமாள் செட்டியாருடைய வீட்டுக்குப் போய் அவரை விசாரிக்க, அவர், "ஐயா, அந்த வீடு ஒரு மாச காலமாகக் காலியாக இருந்தது. நேற்றைக்கு முந்திய நாள் ஒருவர் வந்து, தாம், கோயம்புத்தூரிலுள்ள ஒரு பெரிய மிராசுதாரென்றும், தம்முடைய பெயர் கோபாலகிருஷ்ணப் பிள்ளை என்றும், தாம் மூன்று நாள்கள் வரையில் தங்கியிருந்து பட்டணத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்றும் சொல்லி, அதற்காகப் பதினைந்து ரூபாய் வாடகை கொடுத்தார். அவர் இன்று சாயங்கால ரயிலில் ஊருக்குப் போவதாகச் சொல்லியிருந்தார். ஆனால், ஏதோ அவசரமான ஒரு தந்தி வந்தது என்று சொல்லி இன்றைய தினம் காலையிலேயே அவர் போய்விட்டாராம். வீட்டின் திறவுகோலை ஓர் ஆள் கொண்டுவந்து என்னிடத்தில் கொடுத்துவிட்டுப் போனான்" என்று சொன்னார். அந்த வரலாற்றைக் கேட்ட சப் இன்ஸ்பெக்டர் அந்த வீட்டின் திறவுகோலுடன் செட்டியாரை அழைத்துக்கொண்டு சைனாபஜார் தெருவில் இன்ஸ்பெக்டர் முதலியோர் இருந்த வீட்டண்டை வந்து சேர்ந்தார். உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் நம்பெருமாள் செட்டியார் சொன்ன வரலாறுகளைக் கேட்கவே, அவரது மனதில் ஒரு சந்தேகம் உதித்தது. வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டவருடைய பெயர் கோபால கிருஷ்ணப் பிள்ளை என்று செட்டியார் சொல்ல, மணியார்டரில் கந்தசாமி

முதலியார் என்று குறிக்கப்பட்டிருந்த அந்த வேறுபாடு மிகவும் சந்தேகாஸ்பதமாக இருந்தது. உடனே இன்ஸ்பெக்டர் செட்டியாரை நோக்கி அந்தக் கோபால கிருஷ்ணப் பிள்ளையின் அங்க அடையாளங்களை எல்லாம் கேட்டறிந்துகொண்டபின், முதல் நாள் வந்து ஒரு மனிதர் அந்த வீட்டைத் திறந்ததாகச் சொன்ன அண்டை வீட்டாரை அழைத்து அந்த மனிதருடைய அங்க அடையாளங்களைக் கேட்க, அவர்கள் சொன்னதும் செட்டியார் சொன்னதும் ஒரே மனிதனுடைய அடையாளங் களாகவே இருந்தன. அவ்வாறு அவர்கள் விசாரணை செய்து கொண்டிருக்கையில் நம்பெருமாள் செட்டியார் கதவின் பூட்டை விலக்கிக் கதவைத் திறந்தார். உடனே ஒரு ஜெவான் உள்ளே நுழைந்து பார்க்கப் போனான்; அதற்குள் இன்ஸ்பெக்டர் தந்தியாபீசுக்கு ஒரு ஜெவானை அனுப்பி அந்த மூன்று தினங்களுக்குள் கோபாலகிருஷ்ணப்பிள்ளை என்பவருக்கா கிலும், கந்தசாமி முதலியார் என்பவருக்காகிலும் ஏதாவது தந்தி வந்திருக்கிறதா வென்று பார்த்துவிட்டு வரும்படிச் சொல்ல, அவ்வாறே அவன் போய்விட்டுத் திரும்பிவந்து, அப்படிப்பட்ட தந்தியே வரவில்லையென்று சொன்னான். அதைக் கேட்ட போலீசாரும் தபால் இலாகாதார்களும் மிகுந்த கலக்கமும் குழப்பமும் அடைந்து தபால்காரன் எப்படித்தான் போயிருப் பான் என்று சிந்தித்தவர்களாக இருந்தனர். அந்தச் சமயத்தில், வீட்டின் இரண்டாவது கட்டின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த ஜெவான் பெருத்த கூச்சலிட்டு, "ஐயா ஐயா! வாருங்கள் வாருங்கள்; தபாற்காரன் இதோ கிடக்கிறான்" என்று கூவியழைக்க, அதைக்கேட்ட யாவரும் விவரிக்கவொண்ணாத திகிலும், நடுக்கமும், கலக்கமும் அடைந்து உள்ளே ஓடினார்கள். முதல் கட்டு முழுதும் காலியாக இருந்தது. இரண்டாவது கட்டில் அவர்கள் நுழைந்தவுடனே நிரம்பவும் பயங்கரமான ஒரு காட்சி எதிரில் தென்பட்டது; காணாமற் போன தபாற்காரன் அலங்கோலமாகக் கீழே விழுந்து கிடந்தான். அவனுடைய கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்தன. வாயில் ஒரு துணிப் பந்து சொருகப் பட்டிருந்தது. அவனுடைய கண்களிரண்டும் மூடப்பட்டிருந்தன. அவன் பேச்சு மூச்சு அசைவு முதலிய உயிர்ச் சின்னங்களின்றிப் பிணம் போலக் கிடந்தான். அவனுடைய

தோல் பையும், ஏராளமான கடிதங்களும் மணியார்டர் நமூனாக்களும் (பாரங்கள்) அந்த இடம் முழுதும் தாறுமாறாகக் கிடந்தன. அதைக்கண்ட யாவரும் அளவற்ற திகைப்பும், வியப்பும், பிரமிப்புமடைந்து அவனை உற்று நோக்கினார்கள். அவனுடைய மார்பு மாத்திரம் சொற்பமாக அசைந்து கொண்டிருந்ததைக் கண்டு அவன் உயிரோடிருக்கிறான் என்பதை உணர்ந்துகொண்ட சிலர் விரைவாகப் பாய்ந்து, அவனுடைய வாயிலிருந்த துணிப்பந்தையும் உடம்பிலிருந்த கட்டுகளையும் விலக்கினார்கள். வேறொருவன் பக்கத்திலிருந்த தண்ணீர் குழாயண்டை ஓடித் தனது வஸ்திரத்தைத் தண்ணீரில் நனைத்துக் கொண்டு வந்து தபால்காரனுடைய முகத்தில் ஒற்றினான். தபால் இலாகா இன்ஸ்பெக்டர்களும், சிப்பந்திகளும் அங்கே சிதறிக்கிடந்த மணியார்டர் நமூனாக்களையும் கடிதங்களையும் எடுத்து அடுக்கினார்கள். அவ்வாறு கால் நாழிகை நேரம் கழிய அந்தத் தபாற்காரன் கண்களைத் திறந்து பார்த்தான். அவனுடைய மயக்கம் தெளிவடைந்ததாகத் தோன்றியது. இருந்தாலும் அவன் அசையமாட்டாமல் அப்படியே கிடந்து தனக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று கையின் கட்டைவிரலால் சைகை செய்தான். உடனே ஒருவன் வெளியிலே போய் சோடாப்புட்டியொன்றைக் கொணர்ந்து உடைத்து அவனுடைய வாயில் வார்த்தான். அதன் பிறகு கால் நாழிகையில் அந்தத் தபால்காரன் களை தெளிந்து எழுந்து உட்கார்ந்து அப்புறம் இப்புறம் திரும்பித் தன்னிடத்திலிருந்த கடிதங்களையும், மணியார்டர் நமூனாக்களையும் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த போலீசாரையும் பார்த்து, "ஆள்கள் அகப்பட்டார்களா? பணமெல்லாம் இருக்கிறதா?" என்றான். அதைக் கேட்ட தபால் இலாகா இன்ஸ்பெக்டர், "அடே சொக்கலிங்கம்! என்னடா நடந்தது? யார் உன்னை இப்படிக் கட்டிப் போட்டது?" என்றார்.

அதைக் கேட்ட தபாற் சேவகன் உடனே எழுந்து மரியாதையாக நின்றுகொண்டு, "இந்த வீட்டுக் கந்தசாமி முதலியாருக்குப் பத்து ரூபாய்க்கு மணியார்டர் வந்தது. நான் வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு கந்தசாமி முதலியார் என்பது யார் என்று விசாரித்தேன். வாசல் திண்ணையில் ஓர் ஆள் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் ஒரு வேலைக்காரன் போல

இருந்தான்; அவன் என்னைப் பார்த்துத் தன்னுடைய எஜமான ரான கந்தசாமி முதலியார் இரண்டாவது கட்டில் இருக்கிறார் என்றும், அங்கேயே நேரில் போய் மணியார்டரைக் கொடுக்க லாம் என்றும், தான் வேறொரு மனிதர் வருகிறாரா என்று பார்த்துக் கொண்டிருப்பதால், தான் இரண்டாவது கட்டுக்குப் போய்க் கந்தசாமி முதலியாரை அழைத்து வர முடியாது என்றும் சொன்னான். இவ்வளவு பெரிய வீட்டில் வேலையாளோடு இருக்கிறவர் பெரிய மனிதராக இருப்பார் என்றும், ஆகையால் அவரை வெளியில் கூப்பிடக்கூடாது என்றும் நினைத்து நானே உள்ளே வந்தேன். முதலாவதாக கட்டில் யாரும் காணப்பட வில்லை. அதைத் தாண்டி இரண்டாவது கட்டுக்குள் நான் நுழைந்து தாழ்வாரத்தில் திரும்பினேன். திடீரென்று எனக்குப் பின்பக்கமாக வந்த நாலைந்து முரட்டாள்களில் ஒருவன் என்னுடைய குரவளையை இறுகப் பிடித்து நான் வாயைத் திறந்து கூச்சலிடாமல் அழுத்திக் கொண்டான். இன்னொருவன் என்னுடைய வாய்க்குள் ஒரு துணிப்பந்தைக் கெட்டியாகச் சொருகிவிட்டான்; மற்ற இரண்டுபேர்களும் என்னைப் பிடித்துக் கயிற்றால் கட்டி விட்டார்கள். அப்புறம் இப்புறம் அசையவும் பேசவும் என்னால் கூடாமல் போய்விட்டது. உடனே அவர்கள் என்னிடத்திலிருந்த பணத்தையும் கடிதங்களையும் பிடுங்கி, வெறுங் கடிதங்களையும் மணியார்டர் நமூனாக்களையும் கீழே போட்டுவிட்டு மற்றவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு, கதவைமூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டு போய்விட்டார் கள். நான் எழுந்திருக்க முயன்று பார்த்தேன். என் கால்கள் இரண்டையும் பிரிக்க முடியாமல் சேர்த்துக் கட்டியிருந்தார்கள் ஆகையால், எழுந்திருக்க முடியவில்லை. என்னுடைய தொண்டை கிழிந்து விடும்போல ஆகிவிட்டது. மூச்சுத் திணறிப் போய்விட்டது. அதற்குப் பிறகு என்ன நடந்ததோ தெரிய வில்லை; இப்போதுதான் புத்தி சரிப்பட்டது'' என்றான். அதைக் கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்த நான்கு ஆட்களின் அடையாளங்களையும், இன்னும் தேவையான மற்ற விவரங்களையும் கேட்டறிந்து கொண்டார். தபாற் சேவகனால் கொடுக்கப்பட்ட ஐந்து மணியார்டர்களின் தொகை போக மிகுதியிருந்த இருபத்து மூவாயிரத்தைந்நூற்று நாற்பத்திரண்டு

ரூபாயும், பதினாயிரம் ரூபாய் மதிப்புள்ள இன்ஷியூர் சாமான் களும், 24 ரிஜிஸ்டர் காகிதங்களும் காணாமற் போனதாகக் கணக்கு எடுக்கப்பட்டது. கந்தசாமி முதலியார் என்பவருக்கு 10 ரூபாய்க்கு வந்த மணியார்டர் நமூனாவைத் தேடியெடுத்து அதை யார் அனுப்பியது என்பதைப் பார்க்க, அது மைலாப்பூர் நடுத்தெருவில் 250–ம் இலக்கமுள்ள வீட்டில் இருக்கும் வீராசாமி முதலியார் என்பவரால் அனுப்பப்பட்டதாகத் தெரிந்தது. உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்த வீட்டிலிருந்த டெலி போனுக்குப் போய் அதன் மூலமாக மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செய்தி அனுப்பி, நடுத்தெருவில் 250–ம் இலக்கமுள்ள வீட்டிலிருக்கும் வீராசாமி முதலியாரை உடனே பிடித்துக் கைதி செய்யும்படி சொல்லிவிட்டு வந்து நம்பெருமாள் செட்டியாரையும், தபாற்காரனையும், அவனிடத்திலிருந்த கடிதங்கள் முதலிய தஸ்தாவேஜுகளோடு அழைத்துக்கொண்டு, மற்றவர்கள் தொடர்ந்துவர, அதற்கருகில் இருந்த ஸ்டேஷ னுக்குப் போய்ச் சேர்ந்தார். சேர்ந்தவர், உடனே டெலி போனுக்குப் போய், அந்தத் திருட்டைப் பற்றிய விவரங்க ளையும் திருடர்களின் அங்க அடையாளங்களையும் மற்ற எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் தெரிவித்து, சென்னை யிலுள்ள எல்லா ஜெவான்களும் இந்த விஷயத்தில் விழிப் பாகவும் எச்சரிப்பாகவும் இருந்து இந்தத் திருட்டைக் கண்டு பிடிக்க முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்லியபோது, மைலாப்பூரிலிருந்து மறுமொழி கிடைத்தது. நடுத்தெருவில் சுமார் 30 வீடுகளே இருப்பதால், 250–வது இலக்கமுள்ள வீடே அந்தத் தெருவில் இல்லையென்றும், வீராசாமி முதலியார் என்ற பெயருடைய மனிதன் அந்தத் தெருவில் எந்த வீட்டிலும் இல்லையென்றும் மைலாப்பூர் சப் இன்ஸ்பெக்டர் சொல்லக் கேட்ட, இன்ஸ்பெக்டர் மிகுந்த திகைப்பும் வியப்பும் அடைந்து என்ன செய்வதென்பதை அறியமாட்டாமல் தவித்துக் கொண்டி ருக்கிறார். மகா தந்திரமாகவும் திறமையாகவும் நடத்தப் பட்டுள்ள விநோதமான இந்தத் திருட்டை அவர் எப்படித்தான் கண்டுபிடிப்பாரோ; இதை யார்தான் செய்திருப்பார்களோ தெரியவில்லை'' என்றார்.

அதைக்கேட்ட செட்டியார் மிகுந்த கவலையும் கலக்கமும் வியப்பும் அடைந்து, ''அப்படியா சங்கதி! இது மகா வேடிக்கை

யான திருட்டாக இருக்கிறதே! இந்தக் கலிகாலத்தில் மனிதனுடைய புத்தி என்னென்ன அபூர்வமான வழிகளில் வேலை செய்கிறது பார்த்தீர்களா! இவ்வளவு ஜனக்கூட்டமுள்ள இடத்தில் தபாற்காரனுக்கு எப்படிப்பட்ட அபாயம் நேர்ந்துவிட்டது பார்த்தீர்களா! தபால் இலாகாதார்கள் ஜனங்களுடைய நன்மைக்காக எவ்வளவோ சௌகரியங்களைச் செய்திருக்கிறார்கள். சில திருட்டு நாய்கள் இப்படிச் செய்வதனால், இனிமேல், பொது ஜனங்களுக்குத்தான் அசௌகரியம் உண்டாகிவிடப் போகிறது. எல்லோரும் இனிமேல் தபாற்சாலைக்குப் போய் மணியார்டர் முதலியவைகளை வாங்கிக் கொள்ளவேண்டும் என்று செய்துவிடப் போகிறார்கள். அப்புறம் நாமெல்லோரும் அங்கே போய்த் தொண்ணாந்து நிற்க வேண்டியதுதான்'' என்றார்.

அந்தச் சமயத்தில் முதலியாரது சுருட்டு அடிவரையில் எரிந்து சொற்பமே மிகுதி இருந்தது. ஆகையால், அது அவரது உதட்டைச் சுட்டுவிட்டது. அந்த ஆத்திரத்தினாலும், நாயுடுவின் மீது அவர் கொண்ட கோபம் அப்போதும் அடங்காது இருந்தமையாலும், முதலியார் தமது முகத்தைச் சுளித்துக் கொண்டு ஆத்திரமாகப் பேசத் தொடங்கி, ''ஜனங்கள் எல்லோரும் தபாற்சாலைக்குப் போக முடியுமோ! அந்தத் தபாற்காரன் முட்டாள் காரியம் செய்து விட்டால், அதற்காக ஜனங்களுக்குத் தண்டனையோ! தபாற்சேவகன் ஏனைய்யா இரண்டாவது கட்டுக்குள் போனான்? அவ்வளவு அதிகமான பணத் தொகையை வைத்திருப்பவன் ஜாக்கிரதையாக வெளியிலேயல்லவா இருக்க வேண்டும். அதைவிட்டு அவன் ஏன் உள்ளே ஓடினான்? பெரிய மனிதனுக்கு உள்ளே கொண்டுபோய்க் கொடுத்தால், இரண்டணா, ஓரணா பிச்சைக்காசு கிடைக்குமென்று தபாற்காரன் உள்ளே போனான். திருடன் நன்றாக ஏமாற்றினான்'' என்றார்.

உடனே நாயுடு செட்டியாரைப் பார்த்து, ''எவன் ஏமாறினால் என்ன? மணியார்டர், இன்ஷியூர் தொகைகளையெல்லாம் சர்க்காரில் கொடுத்து விடுவார்கள். ஆனால் ரிஜிஸ்டர் கடிதங்கள் ஒவ்வொன்றிலும் ஆயிரம், ஐந்நூறு பெருமானமுள்ள நோட்டுகள் இருந்திருக்கும், அவைகளை அனுப்பியவர்கள்

எல்லோரும் வாயில் விரலை வைத்துக்கொண்டு போக வேண்டியதுதான். அவர்கள் ஏமாறியதாவது தங்களுடைய புத்திக் குறைவினால் ஏற்பட்டது. ஆனால் அந்த வீட்டின் சொந்தக்காரரான நம்பெருமாள் செட்டியார்தான் அநியாயமாக மாட்டிக்கொண்டு விழிக்கிறார். அவர் தக்க பெரியமனிதர்; இப்படிப்பட்ட காரியம் நடக்கப் போகிறதென்பது அவருக்குத் தெரிந்தே இருக்காது. யாரோ பெரிய மனிதன் வந்து கேட்கி றானே என்று நம்பி அவர் வீட்டை விட்டுவிட்டார். அது இப்போது பெருத்த துன்பமாக வந்து விளைந்திருக்கிறது. அவர் போலீசாருடைய கையில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டி ருக்கிறார். கோபாலகிருஷ்ணப்பிள்ளைக்கு வீட்டை விட்டதும், அவன் இன்றைய காலையில் திறவுகோலை அனுப்பிவிட்டுப் போனதும் நிஜமென்று அவர் ருஜுப்படுத்தா விட்டால், பழி அவர் மேலேதான் வரும் போலிருக்கிறது'' என்றார்.

அதைக் கேட்ட செட்டியார், ''ஐயோ பாவமே! தெய்வமே யென்று கிடந்த அந்த மனிதருடைய தலைக்கா கல் வந்தது! அடடா! என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! அவர் என்னுடைய பந்துவாயிற்றே. நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ப் பார்க்கிறேன். இதோ ஸ்டேஷன் வருகிறது. நாயுடுகாரு நமஸ்காரம். நான் போய்ப் பார்க்கிறேன்'' என்று விசனத்தோடும் கவலையோடும் கூறிக்கொண்டு, டிராம் வண்டியை விட்டுக் கீழே இறங்கிப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றார்.

# 2 – வது அதிகாரம்

# கடற்கரை விபத்து

“அன்றைய தினம் காலை ஐந்தரைமணி நேரமாயிற்று. சென்னையின் கடற்கரைமீது திருவல்லிக்கேணிக்கு அருகிலுள்ள சர்க்கார் கச்சேரிகளில் ஒன்றிலிருந்து ஒரு யௌவனப் புருஷனும் அவனது நண்பர்களான வேறு நாலைந்து குமாஸ்தாக்களும் வெளிப்பட்டனர். வெளிப்பட்டவர்கள் வேடிக்கையாகப் பேசி நகைத்துக் கொண்டு சிறிது தூரம் வரையில் ராஜபாட்டையில் வந்தவர்கள் பிரிந்து தத்தம் இருப்பிடத்தை நோக்கிச் செல்லலாயினர். அவர்களுள் சிலர் திருவல்லிக்கேணியை நோக்கியும், சிலர் சிந்தாதிரிப் பேட்டையை நோக்கியும், சிலர் கடலிற்கருகிலுள்ள மணல் பரப்பை நோக்கியும் செல்ல, முன் குறிக்கப்பட்ட அந்த யௌவனப் புருஷன் மாத்திரம் கடற்கரையின் ஓரமாக இருந்த ராஜபாட்டையின் வழியாக வடக்குத் திக்கில் சென்று கொண்டிருந்தான்.

அவனது வயது இருபது, அல்லது, இருபத்திரண்டிற்கு மேல் இராதானாலும், அவனது தோற்றத்தில் ஆண்மையும், கம்பீரமும், புத்திசாலித்தனமும் நன்றாகப் புலப்பட்டன. அவன் சிவந்த மன்மதாகாரமான வடிவமும், ஆண்பெண்பாலார் ஆகிய இருவகுப்பாரையும் ஒரு புன்சிரிப்பால் கவரத்தக்க வசீகரமான முகமும் பெற்றவனாக இருந்தான். கருத்து அடர்ந்து முழங்கால் வரையில் நீண்டு பளபளப்பாக மின்னிய அவனது சிரத்தின் கூந்தலை ஒரு தேங்காயளவு முடிந்து விட்டிருந்ததான பின்னழகும், அவனது முகத்தில் மற்ற அவயங்களைக் காட்டிலும் எடுப்பாகவும் விசாலமாகவும் தோன்றிய அற்புதமான கண்களின் அழகும், செவிகளிலிருந்த வைரக் கடுக்கன்களின் அழகும், அப்போதே முளைக்க ஆரம்பித்த மீசையின் அழகும் ஒன்றுகூடி அவன் நிரம்பவும் சொகுசாகவும் செல்வமாகவும் வளர்க்கப் பட்டவன் என்ற ஓர் எண்ணத்தையும், அவனிடத்தில் ஒருவகை யான பிரேமையும் உண்டாக்கின. அவன் மற்றவர்கள் போல

நிரம்பவும் டாம்பீகமான உடைகளை அணிந்து கொள்ளாமல் மாசற்ற துல்லியமான சாதாரண உடைகளை அணிந்ததே, அவனது இயற்கை அழகு ஆயிரமடங்கு சோபிக்கச் செய்தது. அந்த யௌவனப் புருஷன் மூன்று மயில் தூரத்திற்கு அப்பால் புரசைப்பாக்கத்திலிருந்த தனது ஜாகைக்குப் போகவேண்டியவன் ஆகையாலும், அன்றையதினம், அவன் சைனா பஜார் தெருவிற்குப் போய்த் தனக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கிக்கொண்டு போகவேண்டியிருந்ததாலும், அவன் தனது சட்டைப்பைக்குள்ளிருந்த கடிகாரத்தைப் பார்த்தவண்ணம் சென்றான். அவனது வலப்புரத்தில் கண்கண்ட தூரம் வரையில் பரவிக்கிடந்த கடலின் வனப்பையும், இடது பக்கத்திலிருந்த பூஞ் சோலைகளின் வனப்பையும் நோக்கி நோக்கி இன்புற்றவ னாகவும், கடற்கரையிலிருந்து ஜிலு ஜிலென்று வீசிய இனிய மந்த மாருதத்தில் தனது மனத்தையும் தேகத்தையும் லயிக்க விட்டவனாகவும், மெய்ம் மறந்து ஆநந்த சாகரத்தில் மிதந்து சென்று கொண்டிருந்தான். அந்த இடத்தில் அப்போதைக் கப்போது மோட்டார் வண்டியும் ஸாரட்டு வண்டியும், குதிரை வண்டியும் அவனுக்கு எதிர்புறத்திலிருந்தும் பின்புறத்திலிருந்தும் வந்து போய்க்கொண்டிருந்தன. அந்த ராஜபாட்டை நிரம்பவும் விசாலமாக அமைக்கப்பட்டிருந்ததன்றி, அதன்மேல் கிழக்கு ஓரமாக கால்நடைப் பிரயாணிகளின் உபயோகத்தின்பொருட்டு முக்கால் அடி உயரத்தில் குறடு கட்டி விடப்பட்டிருந்தது. அந்தக் குறட்டின்மீதேறி வடக்கு திக்கில் நடந்தவண்ணம் இருந்த நமது யௌவனப்புருஷன், பின்புறத்திலிருந்து குறட்டின் ஓரமாக வந்துகொண்டிருந்த ஒரு வண்டியின் ஓசையைக் கேட்டு பின்புறம் திரும்பி நோக்கினான். அப்போது தனக்குப் பின்னால் பத்துகஜ தூரத்தில் ஒரு ஸாரட்டு வண்டியில் தனக்குத்தெரிந்த சிலர் வந்ததைக் கண்டு அந்த யௌவனப்புருஷன் ஒருவித லஜ்ஜையும் இன்பமும் அடைந்தவனாய்த் தத்தளிக்கலானான். அவர்களைக் கண்டு அவன் மிகுந்த கிலேசமும் நாணமும் அடைந்து வருந்துகிறான் என்பதை அவனது உடம்பின் தடுமாற்றமே நன்றாக வெளிப்படுத்திவிட்டது. அவர்களைப் பார்ப்பதும், முகத்தை அப்புறம் இப்புறம் திருப்புவதுமாக மிகுந்த சஞ்சலமும் இன்பமும் அடைந்து, நமது சுந்தரபுருஷன் நடந்துகொண்டிருக்க, அடுத்த நிமிஷத்தில், அந்த ஸாரட்டு வண்டி அவனுக்கு அருகாகவே வந்து முன்னால் சென்றது.

ஆகா! அந்த வண்டியில் தங்கப்பதுமைகள் போன்ற இரண்டு யௌவன மங்கையர் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் இருவரும் ஒரு ஜோடி மாடப் புறாக்கள் போலவும், ஒரே வயது, ஒரே உயரம், ஒரே பருமன், ஒரே நிறம், ஒரே முக அமைப்பு, ஒரே அழகு முதலியவற்றோடு கூடிய இரட்டைக் குழந்தைகள் போலவும் காணப்பட்டனர். அவ்விருவரது வயதும் பதினைந்து அல்லது பதினாறுக்கு மேல் இராது என்பது நிச்சயமாகத் தெரியவந்தது. கண்கொள்ளாத மகா அற்புதமான எழிலை ஏந்திய கந்தருவலோகத்து ராஜகுமாரிகள் போல, இரண்டு அற்புத ஜோதிகளாக, உட்கார்ந்திருந்த அந்த அதிரூப அணங்குகள் இருவரும் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்து அப்போதே இதழ்விரித்து நகைத்த இரண்டு தாமரை மலர்கள் போல அதி யௌவனமும், உத்தம ஜாதி அமைப்பும் ஒப்புயர்வற்ற கட்டழகும், தேவாமிருதம் போலக் குளிர்ந்த வதனமும் பெற்றவர்களாய் இரண்டு சுவர்க்கலோகங்கள் ஜதையாக எழுந்து பவனி வருவதுபோலக் காணப்பட்டனர். அவ்வாறு விலை மதிப்பற்ற விண்மணிகள் போலப் பொலிந்த அப் பெண்மணிகள் இருவரும் அடுத்தடுத்து இருந்தது ஒருத்தியின் வடிவமே நிலைக்கண்ணாடிக்குள் மற்றொன்றாகத் தெரிவதுபோல இருந்ததன்றி, நெடுங்காலம் அவர்களோடு இருந்து பழகுவோரன்றி மற்றவர் அவர்களது வேறுபாட்டை அறிந்து கொள்வது கூடாத காரியமாகவும் இருந்தது; ஆனால், அன்றைய மாலையில் அவர்களுள் ஒருத்தி மேகவருணப் பட்டாடையையும் மற்றவள் ஊதாநிறப் பட்டாடையையும் அணிந்திருந்ததனால் மாத்திரமே அவர்களிருவரும் வெவ்வேறு ஸ்திரீகள் என்பது புலப்பட்டது. அவ்வாறு ரதிதேவிகள் போலத் தோன்றிய அவ்விரு பேடன்னங்களையும் காண்போர் அனைவரும் திகைத்து மயங்கிப் பிரமித்து தம்மையும், உலகையும் மறந்து ஸ்தம்பித்து அப்படியப்படியே நின்று, வைத்த கண்ணை வைத்த இடத்திலேயிருந்து எடுக்க மனமற்றவராய்த் தவித்து நின்றனரென்பதை அறியாமல் அந்தப் பூங்கோதையர் கபடமற்ற சுத்த ஸ்வரூபிணிகளாகச் சென்றனர். அப்படிப்பட்ட மனமோகன சுந்தராங்கிகளான அவர்கள் இருவரும் ஸாரட்டில் ஏறும்போது, அவர்களுக்கு முன்னால் குறட்டின்மேல் சென்று கொண்டிருந்த நமது வடிவழகனது அடையாளத்தை அவர்கள் கண்டு

தங்களுக்குள் மெதுவான குரலில் அவனைப்பற்றி ஏதோ வார்த்தைகள் பேசிக்கொண்டதை அவன் உணரவில்லை.

ஸாரட்டிலிருந்த இருவருள் மேகவர்ணப் பட்டாடை அணிந்திருந்தவள் மற்றவளைப் பார்த்து, "அடீ கோகிலா! அதோ குறட்டின்மேல் போகிறாரே; அவர் யாரென்பது உனக்குத் தெரிகிறதா? நம்முடைய பங்களாவுக்குப் பக்கத்தில் இருக்கும் மாடிவீட்டில் கற்பகவல்லியம்மாளென்று ஒரு பெரிய அம்மாள் குடிவந்திருப்பதாகக் கேள்விப்பட்டோம் அல்லவா. அந்த அம்மாளுடைய பிள்ளை இவர்தான் போலிருக்கிறது. இவருக்கு இங்கே ஏதோ ஓர் ஆபிசில் உத்தியோகம் என்று சொன்னார்கள் அல்லவா. நம்முடைய பங்களாவின் உப்பரிகையில் நான் இருக்கையில் இவர் ஒரு நாளைப் போல காலை பத்துமணி சமயத்தில் வீட்டை விட்டுப் போவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், இவர்கள் வந்து மூன்று மாசகாலமாகிறது. தங்கள் பாடுண்டு தாமுண்டு, ஒருவருடைய ஜோலிக்குப் போகிற தில்லை; நம்முடைய வேலைக்காரி மூர்த்தியம்மாள் கூட இவர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறாள். இவர்கள் தாயும் பிள்ளையும் மகா நல்ல குணமுடையவர்களாம். இவர்களும் நம்முடைய ஜாதியைச் சேர்ந்தவர்களாம். இவர் எவ்வளவு அழகாக இருக்கிறார் பார்த்தாயா?" என்றாள்.

அதைக்கேட்ட கோகிலாம்பாள் என்னும் மடக்கொடி மற்றவளை நோக்கி மிருதுவான குரலில் பேசத்தொடங்கி, "உஷ்! சௌந்தரா! ஓங்கிப் பேசாதே! வண்டிக்காரனுடைய காதில் விழப்போகிறது; நீ என்ன வர வர இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாய்! வழியில் போகிற மனிதர்களை யெல்லாம், நம்மைப் போல இருக்கிற கன்னிகா ஸ்திரீகள் ஏறிட்டுப் பார்ப்பதே முதலில் தப்பான காரியம்; ஏதோ தவறிப் பார்த்தாலும், அவருடைய அழகு முதலியவற்றைப்பற்றி இப்படி வர்ணிக்கத் தொடங்குவது கொஞ்சமும் தகாது. அழகாக இருப்பவரைக் கண்டு விருப்பும், அழகில்லாத ஜனங்களைக் கண்டு வெறுப்பும் கொள்வது கேவலம் அஞ்ஞானமே அன்றி வேறல்ல. மனிதர் பார்வைக்கு எப்படியிருந்தாலும், அவர்கள் எல்லோரும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சமயோக்கியதையுள்ள ஜீவன்க ளென்று நினைத்து, எல்லோரிடத்திலேயும் நாம் சமமான அன்பையும் தயையும் வைக்கவேண்டும்; அதன்பிறகு அவரவர்

களுடைய நற்குண நல்லொழுக்கத்தைப் பொருத்து மற்ற விசே
மதிப்புகள் ஏற்படவேண்டும். ஆகையால் இனிமேல் நீ ஒ
விஷயத்தை முக்கியமாக நினைவில் வைத்துக்கொள். ஒருவரை
கண்டால் அவருடைய தேக அமைப்பை ஆராய்ச்சி செய்
வேண்டுமென்றும்; அவர் அழகாக இருக்கிறாரா அல்ல
குரூபியாக இருக்கிறாரா என்று அறிய வேண்டுமென்றும் உ
மனதில் தடுக்க முடியாமல் உண்டாகும் அந்த அவாவை
விலக்கிவிட்டு, அவர் நற்குண நல்லொழுக்கம் உடையவர
அல்லரா என்பதை அறிவதில் மாத்திரம் உன் மனதை
செலுத்து" என்று மிகுந்த வாத்சல்யத்தோடு கூறினாள்.

அதற்குள் அந்த வண்டி நமது யௌவனப் புருஷனுக்கு
பக்கத்தில் வந்து அவனைக் கடந்து சென்றது. ஆகையால், அந்த
பொற்பாவைகள் இருவரும் தமது சம்பாஷணையை
அவ்வளவோடு நிறுத்திக் கொண்டனர்; அந்த வண்டி அவனை
கடந்து சுமார் 10 கஜ தூரம் சென்றபோது, சௌந்தரவல்லி என்
பெயர் கொண்ட மேகவருணப் பட்டாடைக்காரி, தனது சுந்த
வதனத்தை இரண்டொரு முறை திருப்பிப் பின்புறத்தில் வந்
அந்த யௌவனப் புருஷனைக் கடாக்ஷித்துவிட்டு அப்புறம் திரும்
வண்டிக்காரனைப் பார்த்து "அடே மினியா! வண்டியை ஏ
இவ்வளவு அவசரமாக ஓட்டுகிறாய்? நாம் வீட்டை விட்
இவ்வளவு தூரம் எதற்காக வருகிறோம்? நல்ல காற்
வாங்குவதற்காக வரும்போது, இப்படி தடதடவென்று வந்
மடமடவென்று போனால், இதில் என்ன சுகமிருக்கிறது. இ
விட வீட்டிலேயே சிவனேயென்று இருந்துவிடலாமே" என்றாள்

அதுகாறும் அந்தப் பெண்மணிகளுள் எவளும் அந்
வண்டிக்காரனிடத்தில் அவ்வளவு கடுமையாகப் பேசினதில்லை
ஆகையால், எதிர்பாராத அந்த மொழியைக்கேட்ட வண்டி
காரன் திடுக்கிட்டு நடுநடுங்கி குதிரையின் விசையைத் தளர்த்
வண்டியை மெல்ல மெல்ல ஓட்டத் தொடங்கினான்.

அந்த வண்டியில் அவ்வாறு சம்பாஷணை நடந்ததை
சிறிதும் உணராதவனாய் நமது யௌவனச் சிறியோ
அவர்களது உன்னத வடிவழகில் ஈடுபட்டவனாய்க் கீ
குனிந்து நடப்பவன்போல நடித்துக் கடைக்கண்ணால் தன
கமட்டுப் பார்வையை அவர்களின் மீது செலுத்தி, அவர்கள

அற்புத வனப்பை அள்ளி அள்ளிப் பருகிய வண்ணம் பின்னால் வந்துகொண்டிருந்தான்.

அவ்வாறு ஸாரட்டு முன்னாலும், அவன் பின்னாலுமாக வடக்குத் திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயத்தில் வடக்குத் திக்கிலிருந்து அவர்களுக்கு எதிராக ஒரு மோட்டார் வண்டி மிகுந்த விசையோடு தலைகால் தெரியாமல் ஓடி வந்துகொண்டிருந்தது. அது வந்த விசையில் அதற்குள்ளிருந்தது யார் என்பதைக் கூட அறிந்து கொள்ளக்கூடாமல், கண்பொறி கலங்கக் கூடியதாக இருந்தது. அப்படி வந்த மோட்டார் வண்டி, நமது மடமயிலார் இருவரையும் தாங்கிச் சென்ற ஸாரட்டிற்கு நேர் எதிரில் வந்ததாகத் தோன்றியது. அதைக்கண்ட சாரதி மினியன் நிரம்பவும் பயந்து தனது வண்டியைக் குறட்டின் ஓரமாக வளைத்து மெதுவாக ஓட்டிக் கொண்டு செல்லத் தொடங்கினான். ஆனால், மோட்டார் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தவர் அதன் யந்திரத்தை அபரிமிதமான விசையோடு முடுக்கி விட்டபின், அன்றையதினம் நடந்த தபாற்கொள்ளை விஷயத்தில் தமது முழு நினைவையும் செலுத்தி மெய்ம்மறந்து வந்தார் ஆகையால், தமக்கெதிரில் ஒரு ஸாரட்டு வந்துகொண்டிருக்கிறது என்பதை அவர் கவனிக்கா மலே வந்து விட்டார்; அந்தச் சமயத்தில் மினியன் தனது ஸாரட்டைக் கிழக்குப்பக்கமாக வளைத்துக்கொண்டு போகாமல் இருந்தால், மோட்டார் வண்டி நேராக வந்து ஸாரட்டில் மோதிக் குதிரையையும், வண்டியையும், அதற்குள் இருந்த பெண்மணிகள் இருவரையும் தவிடுபொடியாக்கிக் காற்றில் தூற்றி இருக்கும்; அப்படிப்பட்ட மகா பயங்கரமான அவகேடு மாத்திரம் தெய்வத்தின் அருளால் விலக்கப்பட்டது. ஆனாலும், அவர்களுக்கு வேறுவிதத்தில் ஒரு பெருத்த அபாயம் நேரிட்டது; ஸாரட்டின் பக்கத்தில் மிகவும் நெருங்கி ஓடிய மோட்டார் வண்டியின் சக்கரம் குதிரையின் காலை இரண்டங்குல ஆழம் கிழித்துக் கொண்டு சென்றதோடு, ஸாரட்டின் மேற்குப் பக்கத்துச் சக்கரங்களை முறித்துக்கொண்டு சென்றது. ஆகையால் ஸாரட்டு மேலண்டைப் பக்கமாய்ச் சாய்ந்து கீழே விழுந்து விட்டது. அந்தச் சமயத்தில் குதிரை தனது காலின் கிழிப்பைப் பொறுக்க மாட்டாமல் வீரிட்டுத் துள்ளிக் குதித்துக்கொண்டு, கட்டிலடங்காமல் மிகுந்த வீராவேசத்தோடு ஸாரட்டை

இழுத்துக்கொண்டு தாறுமாறாக ஓடத்தொடங்கியது. "ஐயோ! ஐயோ!" என்று கூக்குரலிடத் தலைப்பட்டனர்; வண்டி கவிழ்ந்த போது கீழே தள்ளி விடப்பட்ட சாரதியின் கால் சுளுக்கிக் கொண்டமையால், அவன் ராஜபாட்டையிலிருந்து எழுந்திருக்க மாட்டாமல் தவித்துக் கூக்குரலிடுகிறான். ஸாரட்டில் உட்கார்ந் திருந்த மெல்லியலார் இருவரும் கதிகலங்கி, அன்றோடு தாம் இறந்தோம் என நினைத்தவர்களாய்ப் பெரிதும் கூக்குரலிட் டார்கள் ஆனாலும், அவர்களது தலைக்கு மேல் பாம்பின் படம்போல வளைந்து வந்திருந்த கூண்டின் இடது பக்கத்தில் ஒருவர் மேல் ஒருவராக விழுந்து மொத்துண்டு அதில் காணப் பட்ட கைப்பிடிகளை இறுகப் பிடித்தவண்ணம் இழுபட்டுக் கொண்டே போகிறார்கள். அந்த ராஜபாட்டையில் நெடுந் தூரத்திற்கு அப்பாலேதான் இரண்டொரு மனிதர்கள் வந்தனர் ஆகையால், அவர்கள் தூரத்திலிருந்தபடி கூக்குரலிட்டார்களே அன்றி, உடனே ஓடிவந்து அந்த விபத்தை விலக்கக் கூடாமல் இருந்தது. குதிரை தனது வெறியில் வண்டியைத் தாறுமாறாக இழுத்துக் கொண்டே ஓடிக் கடைசியில் பெருத்த பள்ளமாக இருந்த பக்கத்தின் ஓரமாக வண்டியைக் கொண்டு போய் விட்டது. வண்டியின் சக்கரம் ஓர் அடி கிழக்குப் பக்கத்தில் விலகியிருந்தால், ஒரு பனை மர ஆழமிருந்த பள்ளத்தில், குதிரையும் வண்டியும் வீழ்ந்து விடுவதன்றி, வண்டிக்குள் தொற்றிக்கொண்டிருந்த ஸ்திரீ ரத்னங்கள் இருவரும் மண்ணிற்குள் மறைந்து போயிருப்பர். அப்படிப்பட்ட மகா பயங்கரமான அபாய நிலைமையில் வண்டி இருந்ததை நமது யௌவனப் புருஷன் கண்டுவிட்டான். உடனே அவன் வீராவேசமும் பதைபதைப்பும் அடைந்தவனாய்த் தனது உயிரைத் திரணமாக மதித்து, மிகவும் விரைவாக ஓடி, ஒரு பக்கமாகக் கவிழ்ந்தபடியே சென்று கொண்டிருந்த ஸாரட்டின் பின்புறத்தில் ஏறி முன்னாகப் பாய்ந்து, குதிரையின் கடிவாள வாரைப் பிடித்து, இதமான குரலால் குதிரையைச் சாந்தப் படுத்திய வண்ணம் மேற்குப் பக்கமாகப் பாதையில் அதைத் திருப்பி நாலைந்து கஜதூரம் நடத்தி நிறுத்த, குதிரை அப்போது அடங்காமல் மேலும் இழுக்க, அவன் தனது முழு வலுவையும் செலுத்தி, அதை நிறுத்தியவுடனே விரைவாகக் கீழே குதித்து முன்னாகச் சென்று கடிவாள வாரைத் தனது பல்லால்

கடித்துக்கொண்டு, சட்டைப் பைக்குள்ளிருந்த பேனாக் கத்தியை யெடுத்துப் பிரித்து, குதிரையையும் வண்டியையும் சம்பந்தப் படுத்திக் கொண்டிருந்த கட்டுகளை அதிவிரைவில் அறுத்துக் குதிரையை வேறாக்கி பக்கத்தில் இருந்த ஒரு மரத்தில் அதைக் கட்டிவிட்டு வண்டியை நோக்கி ஓடிவந்தான்.

அதற்குள் பெண்மணிகள் இருவரும் கூண்டைவிட்டு மெதுவாகக் கீழே இறங்கி ராஜபாட்டைக்கு வந்து சேர்ந்துவிட் டனர். சற்று முன் நெடுதூரத்தில் வந்துகொண்டிருந்த வழிப் போக்கர் களும் அங்கே வந்து கூடிவிட்டனர். காலின் சுளுக்கினால் எழுந்திருக்க மாட்டாமல் கிடந்த வண்டிக்கார மினியனும் தட்டுத் தடுமாறி நகர்ந்தபடியே அங்கே வந்து சேர்ந்தான். மடந்தையர் இருவரும் தங்களுக்கு நேர்ந்த பேராபத்தினால் மிகுந்த திகிலும் நடுக்கமும் அடைந்து வண்டியின் கூண்டிலும் ஒருவர் மேல் ஒருவரும் வீழ்ந்து மொத்துண்டு, சிற்சில இடங்களில் சிறாய்க்கப்பெற்றவர்களாய்க் கடைசியில் தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்தனர் ஆகையால், அவர்களது மெல்லிய சரீரம் தென்றல் காற்றில் அசையும் மாந்தளிர் போலப் படபடத்து நடுங்கியது. குழப்பமும் பேரச்ச மும் அப்போதும் அவரது மனதைவிட்டு அகலாமலே இருந்தன. அன்னிய மனிதருக்கு எதிரில் தமக்கு அப்படிப்பட்ட கேவல மான இழிவும் அபாயமும் நேர்ந்தது பற்றி அவர்கள் இருவரும் சகிக்க வொண்ணாத வெட்கமும் நாணமும் அடைந்து தத்தளித் தனர் ஆனாலும், தங்களுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த மகாநு பாவனாகிய அந்த யௌவனப் புருஷனது முகத்தை அடிக்கடி பார்த்து அவனது வீரச் செயலைக் கண்டு அவர்கள் கரைகடந்த களிப்பும் நன்றியறிதலும் தோற்றுவித்து அவரது விஷயத்தில் அவர்கள் அபரிமிதமான பிரியத்தைக்கொண்டு விட்டார்கள் என்பதை அவர்களது முகப்பார்வையானது ஆயிரம் நாக்குகள் கொண்டு வெளியிட்டு அவனை ஸ்தோத்திரம் செய்வது போல இருந்தது. அப்போது நமது யௌவனப் புருஷனும், தான் செய்த அரிய பெரிய செய்கையைப் பற்றித் தனக்குத்தானே ஆநந்தமும் உற்சாகமும் அடைந்தவனாய், அவர்களுக்கு இன்னமும் தன்னாலியன்ற எப்படிப்பட்ட உதவியையும் செய்யவேண்டும் என்ற ஒரு பதைபதைப்பையும் ஆவேசத்தையும் கொண்டவ னாய், வண்டிக்கார மினியனை நோக்கி, "அடே! வண்டிக்காரா!

அம்மாமார்களுக்கு அதிகமாக அடிபட்டதா என்று விசாரி; இந்த வண்டி இனிமேல் உபயோகப்படாது. நான் திருவல்லிக் கேணிக்குப் போய் ஒரு வண்டி பார்த்து அழைத்துக்கொண்டு வருகிறேன்'' என்று நிரம்பவும் அன்பாகவும் உருக்கமாகவும் கூற, அந்த வார்த்தையைக் கேட்ட பெண்மணிகள், அவனது நற்குணத்தையும் உபகாரசிந்தையையும் பற்றி ஆநந்தபரவசம் அடைந்தவர்களாயினர். உடனே கோகிலாம்பாள் மினியனை நோக்கி மிருதுவான இனிய குரலாகப் பேசத்தொடங்கி, "அடே மினியா! வண்டி சாய்ந்தவுடனே நாங்கள் கூண்டிற்குள்ளே தொற்றிக்கொண்டு விட்டோம், தெய்வச்செயலாக, எங்களுக்கு அடிபடவில்லை. நீ நொண்டி நொண்டி நடக்கிறாயே. உன் கால் எப்படி இருக்கிறது? அவர்களுடைய உயிரையும் மதியாமல் இந்த அபாயத்தில் வந்து பாய்ந்து எங்களுடைய உயிரை யெல்லாம் காப்பாற்றிய இந்த ஐயாவுக்கு இன்னமும் சிரமம் கொடுத்து வண்டி கொண்டுவருவதற்காக அவர்களைத் திருவல்லிக்கேணிக்கு அனுப்ப எங்களுக்கு இஷ்டமில்லை. இப்படியே நடந்து கொஞ்சதூரம் போனால், வழியில் எத்தனையோ வண்டிகள் வரும். அதில் ஏறிக்கொண்டு போய் விடலாம். இந்த வண்டியையும் குதிரையையும் பார்த்துக் கொண்டு நீ இங்கேயே இரு; நாங்கள் போய் ஆள்களிடத்தில் வேறே இரண்டு சக்கரங்களையும் இன்னொரு குதிரையையும் கொடுத்தனுப்புகிறோம்; எல்லோருமாக வண்டியைக் கொண்டு வந்து சேருங்கள். குதிரையின் காலிலிருந்து இரத்தம் ஒழுகுகிறது; உன்னுடைய மேல் துணியைக் கிழித்து, லாந்தரிலிருக்கும் தேங்காயெண்ணெயில் நனைத்து புண்ணின் மேல் நன்றாகக் கட்டு'' என்று கிள்ளை மொழிவது போலக் கூறினாள். அதைக் கேட்ட நமது யௌவனப் புருஷன் மினியனைப் பார்த்து, "அடே! மினியா! இப்படியே நடந்து போனால், இன்னம் ஒன்றரை மயில் தூரம் போனாலன்றி வண்டி அகப்படாது. அவ்வளவு தூரம் இவர்கள் நடப்பதற்குள், ராத்திரி வேளை ஆகிவிடும். சாயுங்கால வேளைகளில் சோல்ஜர் முதலிய துஷ்டர்கள் இங்கே வந்து நடமாடுவார்கள். ஆகையால் அப்படிச் செய்வது அபாயகரமான காரியம். கால்மணி நேரம் இவ்விடத் திலேயே இருங்கள். நான் ஒரே ஓட்டமாக ஓடி இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்'' என்று அன்பாக வற்புறுத்திக்

கூறினான். அவன் சோல்ஜர்கள் விஷயமாகச் சொன்ன சங்கதி நிஜமானதாகையால், அதற்கு அந்த மங்கையர் எவ்விதமான ஆட்சேபணையும் சொல்லக்கூடவில்லை; ஆனால் தமக்காக வண்டிகொண்டு வரும்பொருட்டு திருவல்லிக்கேணி வரையில் போவதான சிரமத்தை அவருக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறதே என்ற நினைவினால் கோகிலாம்பாள் என்ன மறுமொழி சொல்வது என்பதைப் பற்றிச் சிந்தித்து நின்ற சமயத்தில் சௌந்தரவல்லி, "என்ன, கோகிலா! யோசனை செய்கிறாய்? அவர்கள் சொல்லுகிறமாதிரிதான் செய்ய வேண்டும். வேறே வழியில்லை. நம்முடைய மினியனுக்கும் கால் சரியாக இல்லை. என்ன செய்கிறது. இப்படிப்பட்ட பரோபகார குணமுடைய மனிதர்களின் உதவியைத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று குயில் போல மொழிந்தாள். அந்தக் கிள்ளை மொழியாள் பேசி வாய்மூடுமுன் நமது யௌவனப் புருஷன், "நான் போய் இதோ வந்து விட்டேன். இங்கேயே இருங்கள்" என்று சொல்லிக் கொண்டே திருவல்லிக்கேணியிருந்த திக்கில் ஓட்டமாக ஓடிவிட்டான்.

உடனே வண்டிக்கார மினியன் தட்டித்தடுமாறி உந்தி உந்தி நடந்து வண்டியின் லாந்தருக்குள்ளேயிருந்த காயை வெளியில் இழுத்துத் தனது தலையில் கட்டப்பட்டிருந்த வஸ்திரத்தை எடுத்துத் துண்டு துண்டாகக் கிழித்து அவற்றை எடுத்துக் கொண்டுபோய், குதிரையைச் சாந்தப்படுத்தி தட்டிக் கொடுத்து, அதன் காலிலிருந்து வழிந்த உதிரப் பெருக்கைத் துடைத்து எண்ணெய்த் துணியால் கட்டுகள் போட்டுக் கொண்டிருந்தான். அதற்குள் அங்கே வந்து கூடிய வழிப்போக்கர்களான ஜனங்கள் பெரிய மனிதரது வீட்டுப் பெண்கள் இருவர் மிகுந்த கிலேசத்தோடு தவித்து நின்றதையும், வண்டியும் குதிரையும் இருந்த அலங்கோலத்தையும் கண்டு மிகுந்த இரக்கமும் துயரமும் அடைந்து, ஒரு மோட்டார் வண்டியினால் அப்படிப்பட்ட அபாயம் நேர்ந்ததென்பதை வண்டிக் காரனிடத்தில் கேட்டறிந்து, மிகுந்த பதைப்பும் கோபமும் கொண்டவர்களாய், "எந்த மூளையில்லாக் கழுதை இப்படிப்பட்ட காரியம் செய்தவன்! இவ்வளவு பெரிய ரஸ்தாவில் இப்படி ஸாரட்டின் மேல் ஓட்ட அந்த எருமை மாட்டுக்குக் கண் அவிந்தா போய் விட்டது! இந்த வெள்ளைக்காரர் நாசமாய்ப்போக! அவர்கள்

இந்த மோட்டார் வண்டியையும் இல்லாத பொல்லாத சாமான்களையும் கொண்டு வந்து மனிதர் பாதையோடு நடந்து போவதற்குக்கூட முடியாமல் செய்துவிட்டார்களே! மனிதர் களுடைய உயிரைக் கோழி கொக்குகளுடைய உயிர் போலல் லவா திரணமாக மதித்து இந்த மோட்டார் வண்டியை விட்டுக் கொண்டு போகிறார்கள். ஊரில் கேள்விமுறை இல்லாமல் போய் விட்டதே'' என்று கூறித் தங்களது கோபத்தையும், அநுதாபத் தையும், விசனத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்த தருணத்தில், தெற்குப் பக்கத்திலிருந்து வந்த மோட்டார் வண்டியொன்று, அவர்களிருந்த இடத்தில் வந்து நின்றது. அதைக் கண்ட ஜனங்கள் எல்லோரும் ஒருபக்கமாக விலகினார்கள். அந்த மோட்டார் வண்டியில் சுமார் 25-வயதுள்ள ஒரு யௌவனப் புருஷர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர், ஜரிகைகள் நிறைந்த குல்லா முதலிய ஆடம்பரமான உடைகளையும், வைரக் கடுக்கன், தங்கக் காப்பு, கொலுசு சங்கிலிகள், தங்க மூக்குக் கண்ணாடி முதலிய ஆபரணங்களையும் அணிந்து, ஒரு பெருத்த சமஸ்தானத்தின் மகாராஜன்போலக் காணப்பட்டார். அவரது தோற்றம் நிரம்பவும் கம்பீரமாகவும் அமர்த்தலாகவும் இருந்தது. அவர் படாடோபத்திலும், சிற்றின்பத்திலும், வீண் பெருமை யிலும் தமது புத்தியை அதிகமாகச் செலுத்துபவர் என்பதை அவரது முகத் தோற்றமே எளிதில் காட்டியது. அவர் யாரோ பெருத்த தனவந்தரது புத்திரரென்று யூகித்துக் கொண்ட ஜனங்கள் அவர் என்ன செய்யப் போகிறாரென்பதை ஆவலோடு கவனித்தவண்ணம் மௌனமாக விலகி நின்றனர். அதற்குள் குதிரையின் காயத்தைக் கட்டிவிட்டு வந்த வண்டிக்கார மினியன் அங்கே வந்து நின்ற மோட்டாரிலிருந்த மனிதரைப் பார்த்து மிகுந்த கோபமடைந்து, "ஆரையா நீ? இப்படித்தானா வண்டியை ஓட்டறது? ஒனக்குக் கண்ணுகிண்ணு இருக்குதா இல்லியா? நானு என்னோட வண்டியை சணநேரம் அந்நாண்டே கொண்டு போவாமே இருந்தா இந்நேரம் எல்லாம் அடியோட தொலஞ்சுபோயிருக்கும்; நீயும் இந்நேரம் மாண்டு போயிருப்பியே! இப்படித்தானாய்யா செய்யறது? மின்னெப் பின்னே மோட்டாரு ஓட்டிப் பளகியிருந்தா ஓட்டணும்; இல்லாமெப் போனாச் சொம்மா உளுந்து கெடக்கணும். பைத்தியக்கார மனிசன் நல்ல வண்டி ஓட்டினான் ஐயா! எளு

நூறு ரூபா வண்டியெயும் ஆயிர ரூபாக் குதிரையையும் அநியாயமா வாயிலே போட்டுக்கினான் பாவிப்பய!'' என்று மிகுந்த ஆத்திரத்தோடும் வயிறெரிந்தும் பேசவே, அதைக்கேட்ட அந்தப் பெரிய மனிதருக்கு ரௌத்திராகாரமான கோபம் பொங்கி எழுந்தது. ஆனால், அங்கே கூடியிருந்த ஜனங்கள் எல்லோரும் கோபமாகவும் அதிருப்தியாகவும் தம்மைப் பார்ப்பதைக் கருதியும், நாணிக்கோணிப் பஞ்சவருணக் கிளிகள் போல ஜதையாக அங்கே நின்ற இரண்டு மடமயிலாரின் அழகைக் கண்டும் அவர் நிரம்பவும் சாந்தமாகவும், நிதானமா கவும் சிநேக பாவமாகவும் பேசத் தொடங்கி, "அடேய்! வண்டிக் காரா! கோபித்துக்கொள்ளாதே! இந்தப் பிசகை நான் வேண்டு மென்று செய்யவில்லை. இந்த மோட்டார் வண்டியில் ஒரு யந்திரம் கெட்டுப் போய்விட்டது, அதனால், நான் எவ்வளவோ பிரயாசைப்பட்டும், இதன் வேகத்தைக் குறைக்கவும், நிறுத்தவும் கூடாமல் போய்விட்டது. நீ வண்டியைக் கொஞ்சம் அப்பால் கொண்டு போகாதிருந்தால், நாமெல்லோரும் இந்நேரம் இறந்து போயிருப்போமென்பது நிச்சயமான சங்கதிதான். கொஞ்ச நேரத்துக்கு முன் இந்த ஸாரட்டு கவிழ்ந்ததையும் குதிரை இடக்குப் பண்ணி இழுத்துக் கொண்டு போனதையும் நான் பார்த்தேன். உடனே மோட்டார் வண்டியைத் திருப்பிக் கொண்டு வந்து, குதிரையைப் பிடித்து நிறுத்த வேண்டுமென்று நினைத்து என்னாலான வரையில் விசையை அழுத்திப் பார்த்தேன். ஒன்றும் சாத்தியப்படவில்லை. அதற்குள் மோட்டார் வண்டி அரைமயில் தூரம் போய்விட்டது. அதன் பிறகு என்னவோ தற்செயலாக இந்த விசை என்னுடைய வசத்துக்கு வந்தது. நான் உங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று உடனே வண்டியைத் திருப்பிக்கொண்டு ஓடிவந்தேன். என்மேல் வருத்தம் வைக்க வேண்டாமென்று அம்மாமார்கள் இடத்தில் சொல். உங்களு டைய ஜாகை எங்கே இருக்கிறதென்பதைச் சொன்னால், நான் உங்களையெல்லாம் இந்த மோட்டாரில் வைத்துக்கொண்டு போய் ஜாக்கிரதையாக வீட்டில் சேர்க்கிறேன். உங்களுக்கு அடி, காயம் முதலியவைகள் பட்டிருக்கலாம். அதற்காக உடனே ஒரு டாக்டரையும் வரவழைக்கிறேன். இந்தக் குதிரையும், வண்டியும் இங்கேயே இருக்கட்டும். இவைகளை நானே எடுத்துக்கொண்டு இவைகளுக்காக 1700–ரூபாயும், டாக்டருக்காக 300–ரூபாயும்

ஆக 2000–ரூபாய் இப்போதே கொடுத்துவிடுகிறேன். என்மேல் கொஞ்சம் ஆயாசப்பட வேண்டாமென்றும், என்னால் ஏற்பட்ட தேகத் துன்பத்திற்கு என்னை மன்னித்துக்கொள்ளும்படியும் அம்மாமார்களிடத்தில் சொல்'' என்று உருக்கமாகக் கூறினார்.

அதைக் கேட்ட ஜனங்களுள் சிலர் திருப்தியடைந்தனர். சிலர் தங்களது கோபம் தணியாதவராகவே இருந்தனர். வண்டிக்கார மினியனோ அப்போதும் தனது ஆத்திரத்தை அடக்கமாட்டாதவனாய்த் தாண்டிக் குதித்துக் கொண்டிருந்தான்.

அந்த தனவந்தர் மரியாதையாகவும் பணிவாகவும் நியாயமாகவும் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த மடந்தையர் இருவரும் பெரிதும் திருப்தியடைந்தனர். சௌந்தரவல்லியோ தனது கடைக்கண்ணால் கபடமாக அந்த மனிதரை நோக்கி, அவரது யௌவனத்தையும், அலங்காரச் சிறப்பையும், பிரபுத் துவத்தையும் கண்டு ஒருவிதமான மனநெகிழ்வையும் பிரியத் தையும் அடைந்தவளாய்த் தனது பக்கத்திலிருந்த கோகிலாம் பாளை விரலால் தட்டித் தணிவான குரலில், ''கோகிலா! இவருடைய மேன்மைக் குணத்தைப் பார்த்தாயா! இவர் தக்க பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை என்பதற்குச் சந்தேகம் இல்லை! இவர் சொல்லுகிறபடி நாம் இந்த மோட்டார் வண்டியிலேயே வீட்டுக்குப்போய் விடுவோமே. வண்டியையும் குதிரையையும் இவரே எடுத்துக்கொண்டு பணம் கொடுத்து விடட்டுமே; நாம் புதிய வண்டி குதிரைகளை வாங்கிக் கொள்வோமே'' என்று காதோடு ரகசியமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட கோகிலாம்பாள், ''நீ பேசாமலிரு; நான் இவருக்குப் பதில் சொல்லுகிறேன்'' என்று சௌந்தரவல்லிக்கு ரகசியமாக மறுமொழி கூறிய பிறகு, வண்டிக்காரனைப் பார்த்து மெதுவான குரலாகப் பேசத் தொடங்கி, ''அடேய் மினியா! இந்த அபாயம் ஏதோ தற்செயலாக நேர்ந்துவிட்டது! வேண்டு மென்று இந்தக் காரியத்தை யாரும் செய்ய மாட்டார்கள். இந்த விஷயத்தில் இந்த ஐயாவின் மேல் எவ்விதமான குற்றமும் இல்லை. நாமெல்லோருக்கும் ஏற்பட இருந்த பெருத்த உயிர்ச் சேதத்தை ஈசுவரன்தான் தடுத்து நம்மையெல்லாம் காப்பாற் றினார். இந்த விஷயத்தில் எங்களுக்குக் கொஞ்சமும் வருத்த மில்லை. எங்களுக்கு அறிமுகமான ஒருவர் வண்டி கொண்டு

வருவதற்காகத் திருவல்லிக்கேணிக்குப் போயிருக்கிறார். அவர் இன்னம் கால் நாழிகையில் வந்து விடுவார். உடனே நாங்கள் அதன் மேல் ஏறிக்கொண்டு ஜாகைக்குப் போய்ச் சேருகிறோம். குதிரையையும், வண்டியையும் இவர்கள் எடுத்துக்கொண்டு பணம் கொடுத்து விடுவதாகச் சொல்லுகிறார்கள். அந்த மாதிரி ஏற்றுக்கொள்வது மரியாதையல்ல; குதிரையின் காயம் சீக்கிரத்தில் ஆறிப்போய்விடும்; சக்கரங்களைச் செப்பனிட்டுக் கொள்வதற்குச் சொற்பமான பணந்தான் செலவாகும். அதை நாங்களே செய்து கொள்ளுகிறோம். பரவாயில்லையென்று இவர்களிடத்தில் சொல்லி அனுப்பு'' என்று நயமாகக் கூறினாள். அந்தப் பெண்மணியின் பெருந்தன்மையையும் கண்ணிய புத்தியையும் கண்ட ஜனங்கள் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர். மோட்டாரில் வந்த மனிதர் அந்தப் பெண் மயிலாரது கட்டழகையும், காந்தியையும், மேம்பாட்டையும், புத்திசாலித்தனத்தையும், உயர்வான மனப் போக்கையும் கண்டு, அவர்கள் யாரென்பதையும், எங்கே இருப்பவர்கள் என்பதையும் அறிந்துகொண்டு அவர்களது நட்பைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்ற கபடமான எண்ணங்கொண்டவராய், தாம் முதலில் சொன்னதையே திரும்பத் திரும்ப மென்மேலும் வற்புறுத்தி நயமாகக் கூறியதன்றி வண்டிக்கார மினியனை நோக்கி, "அப்பா! வண்டிக்காரா! இவர்களுடைய ஜாகை எங்கே இருக்கிறது? வீட்டுக்குப் பெரியவர்களான ஆண் பிள்ளைகளிடத்தில் நான் வந்து இந்த விஷயமாகப் பேசி, இதற்கு ஆக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தே தீர வேண்டும்'' என்று நயமாகக் கூற, அதைக்கேட்ட கோகிலாம்பாள், "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். ஏதோ நடந்தது நடந்து போய் விட்டது. அதைப்பற்றி இனி கவலைப்படுவதனால் என்ன உபயோகம்? பரவாயில்லை. ஐயாவுக்கு அவசரமாக ஜோலி ஏதாவது இருக்கலாம். போய் அதைக் கவனிக்கச் சொல். இதோ வண்டி வந்துவிடும்; நாங்கள் ஜாகைக்குப் போய் விடுகிறோம்'' என்று பணிவாகக் கூற, அதே சமயத்தில் சௌந்தரவல்லியும் மினியனைப் பார்த்து, "அடேய் மினியா! ஐயாவுடைய இருப்பிடம் எங்கேயென்று விசாரி'' என்றாள்.

அதைக்கேட்ட அந்தத் தணிகர், "நான் மைலாப்பூரில் சாந்தோமில் தவன விலாசம் என்னும் பங்களாவில் இருக்கி

றவன். தஞ்சை ஜில்லாவிலுள்ள கோவிந்தபுரம் ஜெமீந்தார் என்னுடைய தகப்பனார்'' என்றார்.

அவ்வாறு சௌந்தரவல்லி கேள்வி கேட்டதும், ஜெமீந்தாரின் குமாரர் மறுமொழி கூறியதும், கோகிலாம்பாளுக்கு நிரம்பவும் அருவருப்பாக இருந்தமையால், அவள் கிலேச மடைந்து தனது வதனத்தை அப்புறம் திருப்பிக் கொண்டாள்.

அந்தச் சமயத்தில் ஜல் ஜல் ஜல் என்று சதங்கைகள் ஒலிக்க ஒரு குதிரை வண்டி விரைவாக வந்து அவ்விடத்தில் நின்றது. வண்டிக்காகப் போயிருந்த யௌவன குமாஸ்தா அதற்குள்ளிருந்து கீழே குதித்து, "வண்டி வந்துவிட்டது. ஏறிக்கொள்ளலாம்'' என்று மினியனைப் பார்த்துக் கூறினான். அதைக் கேட்ட கோகிலாம்பாள், "சரி; அடேய் மினியா! நீ இவ்விடத்திலேயே வண்டியையும் குதிரையையும் பார்த்துக் கொண்டிரு; நாங்கள் வீட்டுக்குப் போய் இன்னொரு குதிரையையும் புதிய சக்கரங்களையும் ஆள்கள் மூலமாக அனுப்புகிறோம்'' என்று மிருதுவான இனிய குரலில் கூறிவிட்டுப் பின்புறம் திரும்பித் தனது முதுகுப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த சௌந்தரவல்லியை நோக்கி, "போகலாம் வா'' என்று கூறி அழைத்துக் கொண்டு குதிரை வண்டியண்டை சென்றாள்; அங்கே கூடி இருந்த சகலமான ஜனங்களது விழிகளும் தங்கள்மீது வீழ்ந்திருக்கின்றன என்பதை அந்த மடந்தையர் இருவரும் உணர்ந்தார்கள் ஆதலால் அவர்கள் மிகுந்த நாணமும் கிலேசமும் அடைந்து தலைகுனிந்து மடவன்னம் எனத் தளர்நடை நடந்து குதிரை வண்டியை அணுகி ஏறி அதற்குள் உட்கார்ந்து கொண்டனர். அதற்குள் சௌந்தரவல்லியின் கடைக்கண் பார்வை நாற்புறங்களிலும் வட்டமிட்டு, ஜனங்களையும், மோட்டார் வண்டியிலிருந்த ஜெமீந்தாரது புத்திரரையும், நமது யௌவன குமாஸ்தாவையும் பார்த்துத் திரும்பி வந்தது. ஆனால் கோகிலாம்பாள் அவ்வாறு எவரையும் பாராமல் தனது பார்வையைத் தரைப் பக்கம் திருப்பியவண்ணமே வண்டியில் உட்கார்ந்தாள்.

அப்போது அந்த யௌவன குமாஸ்தா மினியனை நோக்கி, "அடே மினியா! அம்மாமார்களை வண்டியில் தனியாக அனுப்புவது சரியல்ல. நீயும் இந்தக் குதிரை வண்டியில் போய்விட்டுவா; நீ வருகிறவரையில் நான் இங்கே இருந்து ஸாரட்டையும்

குதிரையையும் பார்த்துக்கொண்டிருக்கிறேன்'' என்றான். அதைக்கேட்ட சௌந்தரவல்லி, "ஆம் கோகிலா! அதுதான் நல்ல யோசனை. மினியனும் நம்மோடு வரட்டும்'' என்று மெதுவாகக் கூற, அதைக்கேட்ட கோகிலாம்பாள் மினியனை நோக்கி, "அது சரியல்ல; நீ இங்கேயே இரு; இந்த ஐயாவை திருவல்லிக் கேணிக்கு அனுப்பியதுமல்லாமல் இங்கே இருந்து நமக்காகக் காவல் காத்திருக்கச் செய்வது கொஞ்சமும் நியாயமான காரியமல்ல. திருவல்லிக்கேணிக்குப் போய்விட்டு வந்தது அவர்களுக்கு அலுப்பாகவும் இருக்கும்; அவர்கள் இங்கே இருந்து நடந்து நம்முடைய ஜாகைக்குப் பக்கத்திலுள்ள அவர்களுடைய ஜாகைக்கு வருவது கஷ்டமாக இருக்கும் ஆகையால், அவர்கள் இந்த வண்டியில் உட்கார்ந்து கொள்ளட்டும். எங்களுக்கும் துணை ஏற்படுவதோடு, அவர்கள் பட்ட சிரமத்துக்கும் ஒரு பரிகாரமாக இருக்கும். இப்படி முன்னால் வண்டிக்காரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளட்டும்'' என்றாள்.

அதைக்கேட்ட அந்த யௌவனப் புருஷன் அந்த வார்த்தையை மறுத்துப் பேசமாட்டாதவனாய் நாணித் தயங்கிய வண்ணம் நடந்து முன்புறத்தில் ஏறி வண்டிக்காரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். உடனே வண்டி புறப்பட்டு ஓடத் தொடங்கியது. உட்புறத்தில் ஜெகஜ்ஜோதியாக உட்கார்ந் திருந்த சுந்தர ரூபிணிகளில் கோகிலாம்பாள் குனிந்த தலையை நிமிர்க்காமலே இருக்க, சௌந்தரவல்லி அடிக்கடி பின்புறத்தில் பார்த்துக்கொண்டே சென்றாள்.

ஸாரட்டு வீழ்ந்து கிடந்த இடத்திலிருந்த ஜனங்கள் எல்லோரும் அந்தப் பெண் பாவையர் மீது வைத்த விழிகளை வாங்காமல் அப்படியே ஸ்தம்பித்து நிற்க, வெட்கம், துக்கம், மோகம், ஆவேசம் முதலிய பலவகையான உணர்ச்சிகளால் மனவெழுச்சி கொண்டவராய் கோவிந்தபுரம் ஜெமீந்தாரது புதல்வரும் அசைவற்று இருந்தார்.

அந்தப் பொற்கொடிகள் இருவரும் நெடுந்தூரம் சென்று மறைந்த வரையில் அவரது விழிகள் வழித்துணை சென்று அதற்குமேல் செல்லமாட்டாமல் பின்தங்கின. ஆனால் அவரது உணர்வும் ஞாபகமும் உயிரும் அவரைவிட்டு அவர்களோடு கூடவே போய்விட்டன; அவரது வெற்றுடம்பு மாத்திரம்

கட்டிலடங்காமல் பதறியவண்ணம் மோட்டார் வண்டியிலே இருந்தது.

அவ்வாறு அரைநாழிகை நேரம் சென்றது. அதுவரையில் அவரது மனம் அவரது வசப்படாமல் குழம்பிக் கரைகடந்த சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தது. அதற்குள் அங்கே இருந்த ஜனங்கள் எல்லோரும் அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டனர். வண்டிக்கார மினியனும், கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாருமே மிகுதியாக நின்றனர். நாழிகை ஏற ஏற, அவரது மனதில் அங்கே நடந்த சம்பவத்தின் விஷயங்கள் யாவும் நாடகக் காட்சிகள் போல மறுபடியும் புலப்பட ஆரம்பித்தன. தேஜோமயமாக இருந்த அந்த ரதிதேவிகளின் சுவர்ண பிம்பம் போன்ற அழகிய வடிவங் கள் எதிரிலேயே நின்று தாண்டவமாடிக் கொண்டிருந்தன. அவர் இயற்கையிலேயே சிற்றின்ப விருப்பம் உடையவர் ஆகையால், அதுகாறும் அவர் பார்த்தே அறியாத அவ்வளவு விசேஷ வனப்பும் விவேகமும் ஜ்வலிக்கப் பெற்றவராக இருந்த இந்த இளநங்கையரைக் கண்ட ஒரே நிமிஷத்தில், அவர் அவர்கள்மீது அபாரமான மையல் கொண்டு தத்தளிக்கலானார். அந்த இரண்டு மெல்லியலாருள் சௌந்தரவல்லி கபடமற்ற நற்குணமுடையவ ளாகவும், கோகிலாம்பாள் மாசற்ற நன்னடத்தையும், சிறந்த யூகமும், வியவகார ஞானமும் உடையவளாகவும் இருந்ததை எண்ண எண்ண, அவரது மனம் நெகிழ்ந்து பாகாய் உருகியது. அவர்களுள் எவள் சிறந்தவள், எவள் உயர்ந்தவள், எவள்மீது தனது மனம் அதிகமாகச் சென்றது என்பதை உணரமாட்டா தவராய், அவர்கள் இருவரின் மீதும் அவர் கடுமோகம் கொண்டு விட்டார். ஆனால் கேவலம் ஏழை போலிருந்த யாரோ ஒரு மனிதனது உதவியை அவர்கள் ஏற்று அவனை வண்டியில் வைத்துக் கொண்டு போனதும், தமது உதவியை மறுத்துத் தம்மைப் பொருட்படுத்தாமல் சென்றதும், அவரை அளவிறந்த சஞ்சலத்தில் ஆழ்த்தியதன்றி, அவரது மனதில் ஒருவிதமான ஆத்திரத்தையும் பதைப்பையும் அவமானத்தையும் உண்டு பண்ணின. அவர்களது வண்டிக்குப் பின்னால் தாமும் தமது மோட்டார் வண்டியை விட்டுக் கொண்டுபோய், அவர்களது ஜாகை இருக்குமிடத்தை அறிந்துகொண்டு வரலாமா என்ற நினைவு அவரது மனதில் தோன்றியது. ஆனாலும், அவ்வாறு தாம் செல்வது அந்தப் பெண் பாவையருக்குத் தெரிந்தால்

அவர்கள் தமது விஷயத்தில் எச்சரிப்படைந்து விடுவதன்றி, தம்மைப் பற்றிக் கெட்ட அபிப்பிராயம் கொள்ள நேரும் என்றும் நினைத்தவராய் மேலும் கால்நாழிகை நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து, அதன்பிறகு மோட்டார் வண்டியின் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கிக் கடற்காற்று வாங்குகிறவர்போல அங்குமிங்கும் உலாவத் தொடங்கினார். விரக வேதனையால் அவரது தேகம் கருகத் தொடங்கியது. அவரது மனம் உருகிக் கரைந்தோடியது; அவர் பலவகையான துர் நினைவுகளைக் கொள்ளத் தொடங்கினார். அப்படிப்பட்ட நிலைமையில் அவர் மெல்ல உலாவியவண்ணம் வண்டிக்கார மினியனுக்கு அருகில் போய்ச் சேர்ந்தார்.

அப்போது அவன் தனது காலைத் தடவிக்கொடுத்து, அதன் சுளுக்கை வழித்துவிட்டுக் கொண்டிருந்தான்; அவன் தனக்கருகில் உலாவிய ஜெமீந்தாரது புத்திரனைப் பொருட்படுத்தாமல் அலட்சியமாக இருந்தான். அந்த இளைய ஜெமீந்தார் அன்பும் அநுதாபமும் நன்றாக ஜ்வலித்த முகத்தினராய் அவனை நோக்கி நயமாகப் பேசத் தொடங்கி, "அப்பா அடேய் மினியா! உனக்கு நிரம்பவும் பலமாக அடிப்பட்டிருப்பது நன்றாகத் தெரிகிறது. இது நான் வேண்டுமென்று செய்த காரியமல்ல. இந்த மோட்டார் வண்டியில் ஒருவிசை தளர்ந்து போனதனால் இப்படிப்பட்ட துன்பமெல்லாம் நேர்ந்துவிட்டது. நீ என்மேல் கோபம் வைக்காதே; நீ படுகிற அவஸ்தையைக் காண எனக்குச் சகிக்கவில்லை. உனக்காவது ஏதாகிலும் உதவி செய்யாமல் மோட்டார் வண்டியை ஓட்டிக்கொண்டு போக என் மனம் இடந்தரவில்லை. ஒரு மருந்து செய்வதற்காக நான் வாங்கின பிராந்திப்புட்டி ஒன்று மோட்டார் வண்டிக்குள் இருக்கிறது. அதைக் கொண்டுவந்து கொடுக்கிறேன். புட்டியைத் திறந்து கால் சுளுக்கில் கொஞ்சம் ஊற்றித் தேய்த்தால், கால்நோவு குறையும்" என்று நயமாகக் கூறியவண்ணம் மோட்டார் வண்டியண்டை சென்று அதற்குள்ளிருந்த புதிய பிராந்திபுட்டியொன்றை எடுத்துவந்து, தமது சட்டைப்பைக்குள் கிடந்த பேனாக் கத்தியால் அதன் மூடியை விலக்கி, அவனது காலில் சிறிதளவு பெய்ய, மினியனது கோபம் ஒருவாறு தணியத் தொடங்கியது. அவன் தனது உள்ளங்கையால் அதை ஏந்தி இரண்டு மூன்று முறை வாங்கிவாங்கிக் காலில் தேய்த்துக் கொண்டான். அவன்

அதுகாறும் கள் சாராயம் முதலிய நாட்டுச் சரக்குகளை மாத்திரம் குடித்திருந்தான். சீமைச்சரக்கான பிராந்தி முதலியவைகளை ஒரு நாளைக்காகிலும் ருசி பார்க்க வேண்டுமென்று நெடுநாளாக ஆவல் கொண்டிருந்தவன் ஆகையால், அந்த இளைய ஜெமீந்தாரது கையில் இருந்த சீமை மதுவின் மீது அவனது நாட்டமும் மனதும் சென்றன. அவன் தனது நோவையும் கவனியாமல், கோபத்தையும் மூட்டையாகக் கட்டித் தூரத்தில் வைத்து விட்டு சந்தோஷமும் புன்னகையும் கொண்ட முகத்தினனாய் அவரை நோக்கி, "அந்தப் புட்டி என்ன விலை சாமீ?" என்றான். அப்போதே அவனது நாக்கில் நீர் ஊறியது. அவன் உஸ் உஸ்ஸென்று இழுத்துக் கொண்டான். அந்தக் குறிப்பை அறிந்த இளைய ஜெமீந்தார் நிரம்பவும் அன்பாகப் பேசத் தொடங்கி, "இது முழு புட்டி; இதிலிருப்பது எக்ஷா நெம்பர் 1. இதன் விலை ரூபா 8. இதில் கொஞ்சம் உள்ளுக்குச் சாப்பிட்டால் உன்னுடைய உடம்பு நோவு கீவெல்லாம் ஒரு நிமிஷத்தில் பறந்து போகும். இந்தப் புட்டியை நீயே எடுத்துக் கொள்" என்று கூறியவண்ணம், அதை நீட்ட, அவன் மிகுந்த சந்தோஷமும் குதூகலமும் அடைந்தவனாய், அந்தப் பிராந்திப் புட்டியை ஏற்று அதன் மூடியைத் திறந்து, அதற்குள்ளிருந்த மதுவையெல்லாம் ஒரே மூச்சாக வாங்கித் தனது வயிற்றிற்குள் செலுத்திவிட்டான். அவ்வளவு பெருத்த புட்டி நிறைய இருந்த பிராந்தியின் வீரியத்தையும் போதையையும் அவன் எப்படித் தாங்கப் போகிறான் என்ற வியப்பும் அச்சமும் பிரமிப்பும் அடைந்த இளைய ஜெமீந்தார் அவனை நோக்கிக் கலகலவென நகைத்து, "பலே பேஷ்! நீ மகா கெட்டிக்காரன்! உன்னுடைய திறமை எவனுக்கும் வராது. ஒரு முழுப்புட்டி பிராந்தியையும் ஒரே மூச்சில் சாப்பிட்ட மனிதனை நான் இதுவரையில் பார்த்ததே இல்லை" என்றார். அதற்குள் மினியனது கண்கள் கோவைப் பழமாகச் சிவந்து போயின. மயக்கமும் போதையும் மேலிட்டு அவனை அசைத்து ஆகாயத்தில் கிளப்பிக் கொண்டு போகத் தலைப்பட்டன. அவன் ஆனந்த பரவசமடைந்து அளவிறந்த வெறி கொண்டு தாளம் போட்டுக் கைகால்களை எல்லாம் ஆட்டி ஆட்டிப் பாடத் தொடங்கி அவரை நோக்கி, "மவராசா! நான் அந்தக் கள்ளு சாராயத்தை எல்லாம் கொடங்கொடமாகக் குடிச்சி அதிலேயே முளுகிக் கெடக்

*கறவன். ஆனால் எனக்கு இந்தச் சீமச்சரக்குமேலே எம்பிட்டுப் பிரியம் இருந்திச்சு தெரியுமா? எங்கப்பன் ஒன்னோடெ தயவுனாலே இன்னெக்கித் திருப்தியாப் போட்டுக்கினேன். இன்னமே இந்த சுளுக்குக் கிளுக்கெல்லாம் போன எடம் தெரியாமப் பறந்து பூடும்; இனிமேலே ஒண்ணும் பயமில்லீங்க'' என்று கூறிக் கை குவித்து அவரைக் கும்பிட்டான். உடனே இளைய ஜெமீந்தார், ''அடேய் மினியா! உனக்கு மாசம் எத்தனை ரூபாய் சம்பளம்? என்றார்.*

***மினியன் :*** *எனக்கு மூணுவேளே சோறுபோட்டு கட்டிக்கத் துணி குடுத்து மாசம் 16 ரூபா குடுக்கறாங்க.*

***இளைய ஜெமீந்தார் :*** *ஓகோ! சம்பளம் தாராளமாகத்தான் கொடுக்கிறார்கள். அவர்கள் பெருத்த பணக்காரர்கள் போலிருக்கிறது!*

***மினியன் :*** *ஓ! அவுங்களுக்கென்ன மவராசரு; துபாசி ராசரத்தன மொதலியாருன்னா இந்த ஊருலெ சின்னக் கொயந்தைக் குக் கூடத் தெரியுமே! அவுங்களுக்குச் சரியா அம்பது லச்சத்துக்குப் பணம் கெடக்குது. ஆனால், அவரு போன வருசத்துலெ எறந்து பூட்டாரு. இப்ப இந்த ரெண்டு கொயந்தைங்கதான் இருக்கறாக.*

***இளைய ஜெமீந்தார் :*** *(மிகுந்த வியப்புற்று), அப்படியா! இவர்கள் துபாஷ் ராஜரத்தின முதலியாருடைய பெண்களா! இவர்களுக்குக் கலியாணம் ஆகிவிட்டதா?*

***மினியன் :*** *இன்னும் ஆவல்லீங்க.*

***இளைய ஜெமீந்தார் :*** *இவர்களுடைய வீட்டில் இன்னம் யார் யார் இருக்கிறார்கள்?*

*மினியன் : இந்தக் கொயந்தங்களோட தாயாரு இருக்கறாங்க. வேறே யாரு மில்லீங்க.*

***இளைய ஜெமீந்தார் :*** *இவர்களோடு கூடப்பிறந்த ஆண் பிள்ளைகள் ஒருவருமில்லையா?*

***மினியன் :*** *ஆம்புள்ளெய பொறக்கல்லீங்க. இவுங்க ரெண்டு பேரும் ரெட்டையாப் பொறந்தவங்க. அம்பிட்டுத்தான். அதுக்குப் பொறவாலே புள்ளையே பொறக்கல்லீங்க.*

*இளைய ஜெமீந்தார் :* இவர்களுடைய பெயரென்ன?

*மினியன் :* மொதல்ல பொறந்த அம்மா பேரு கோகிலாம்பா அம்மா; ரெண்டாவது பொறந்த அம்மா பேரு சௌந்தர வல்லி அம்மா.

*இளைய ஜெமீந்தார் :* இவர்கள் எங்கே இருக்கிறது?

*மினியன் :* பொரசெவாக்கத்துலே பூந்தமல்லி அயிரோட்டுலே ஒரு பங்களாவுலெ இருக்காங்க.

*இளைய ஜெமீந்தார் :* இவர்களுக்கு ஜட்காவண்டி கொண்டு வந்தாரே அந்த மனிதர் யார்?

*மினியன் :* அவுரு அந்த பங்களாவுக்குப் பக்கத்துலெ ஒரு ஊட்டுலே இருக்கறவரு. அவருக்கு இங்ஙனெ ஒரு ஆபிசுலெ உத்தியோவமாம்; இப்பத்தான் அவுரும் வந்தாரு; ஒடனே திருவல்லிக்கேணிக்குப் போயி வண்டி கொண்டாந்தாரு.

*இளைய ஜெமீந்தார் :* அவர் இதற்குமுன் அந்த பங்களாவுக்குள் வருகிறதுண்டா?

*மினியன் :* இல்லீங்க.

*இளைய ஜெமீந்தார் :* இங்கே வந்த அம்மாமார்களுக்கு ஏன் இன்னமும் கலியாணம் ஆகவில்லை?

*மினியன் :* இறந்துபோன எசமான் இருக்கையிலேயே போன வருசத்திலேயே கண்ணாளம் பண்ணறதுான்னு பார்த்தாரு. அதுக்குள்ளற அவருக்கு ராசப்பொளவே களம்பி அதுனாலே திடீரென்னு அவரு எறந்து பூட்டாருங்க. இந்த ஒரு வருச காலமா அதுக்காவத்தான் நிறுத்தி வச்சாங்க; இன்னமே பண்ணுவாங்க.

*இளைய ஜெமீந்தார் :* மாப்பிள்ளைகள் யாராவது நிச்சயமாயி ருக்கிறார்களா?

*மினியன் :* பொண்ணு பாக்க யாரோ வாறாங்க போறாங்க, இன்னம் ஒண்ணும் தெகையல்லீங்க. மூத்த பொண்ணு நல்ல சாமார்த்தியசாலி. நல்ல தங்கமான கொணம் உசிரு போறதானாலும் கெட்டவளிக்குப் போவாதுங்க. சின்னக் கொயந்தெயும் நல்ல கொணந்தான். ஆனால், அதுக்குக் கள்ளம் கவடம் தெரியாதுங்க. வெளுத்ததெல்லாம் பாலு;

கருத்ததெல்லாம் தண்ணி; ஒலகத்துலெ இருக்கிற எல்லா மனிசரும் நல்லவங்க இன்னு அந்தக் கொயந்தே நெனைக்ர வளக்கம். அது ஆண்டவனெப் போல கல்மச மில்லாத சுத்தமான பொண்ணு. ரெண்டு பேரும் ரெண்டு ரெத்தனந்தான். ஆனா, சின்னத்தெ சொலவா ஏமாத்திப் புடலாம். பெரிசெ ஏமாத்த முடியாது.

இளைய ஜெமீந்தார் : அப்படியா! அதிருக்கட்டும்; இவர்களுடைய தாயார் எப்படிப்பட்டவர்கள்?

மினியன் : அந்த அம்மாளுக்கும் ஒண்ணும் தெரியாதுங்க. இவுங்களும் சின்னக் கொயந்தெயும் ஒரு அச்சுங்க. அவுங்க ரெண்டு பேரும் மூத்தகொயந்தே சொல்றபடிதான் நடக்கறது வளமையிங்க.

அவ்வாறு அவர்களிருவரும் பேசிக் கொண்டிருப்பதற்குள் மினியது மயக்கம் அபாரமாகப் பெருகி, அவன் உளறல், குளறல், இழுப்பு, பாட்டு முதலிய பலவகையான லக்ஷணங்களோடு, மேலே குறிக்கப்பட்ட மறுமொழிகளைக் கூறிக்கொண்டே போனவன் அப்படியே கீழே சாய்ந்துவிட்டான். அவனது உடம்பு கட்டிற்கடங்காமல் போய்விட்டது. அடுத்த நிமிஷத்தில் அவன் ஸ்மரணை தப்பி சுழுத்தி முனையை எட்டிப் பிடித்துவிட்டான்.

இளைய ஜெமீந்தார் நாலைந்துமுறை அவனைக் கூப்பிட்டுப் பார்த்துவிட்டு, அவன் அதற்குமேல் மறுநாள் வரையில் எழுந்திருக்க மாட்டான் என்பதை உணர்ந்து கொண்டவராய், உடனே சென்று தமது மோட்டார் வண்டியில் ஏறி உட்கார்ந்து, மைலாப்பூரை நோக்கி அதை விட்டுக் கொண்டே சென்றார். சற்றுமுன் அந்தப் பெண்மணிகள் இருவரையும் கண்ட உடனே அவரது மனநிலைமை எப்படி இருந்ததோ, அதைக் காட்டிலும் அப்போது ஆயிரமடங்கு அதிகரித்த சஞ்சலமடைந்ததாக இருந்தது. மினியன் சொன்ன வரலாற்றிலிருந்து அந்த யௌவன ரமணிகள் இருவரும் பெருத்த செல்வமுடையவர்கள் என்பதும், அவர்கள் கலியாணம் செய்து கொள்ளாமல் ஆண் துணையின்றி இருப்பவர்கள் என்பதும், மிகுந்த நற்குண நல்லொழுக்கம் உடையவர்கள் என்பதும் நன்றாக விளங்கவே அவரது மோக லாகிரியோடு பணத்தாசையும் பெரிதாக உண்டாயிற்று. அவர்கள் இருவரையும் தாமே மணந்து கொண்டால், அவர்களால்

கிடைக்கும் சிற்றின்ப சுகத்தோடு, அவர்களது அளவற்ற செல்வம் முழுவதும் தமக்கே வந்து வாய்த்துவிடும் என அவர் நினைத்தார். சௌந்தரவல்லி சூது, வாது, கபடம் முதலியவைகளில்லாத பெண்ணாதலால், அவள் தம்மீது ஆசைகொள்ளும்படி செய்வது எளிதாகத் தோன்றியது; ஆனால் கோகிலாம்பாள் ஆழ்ந்த புத்தியும் திடமான மனதும் உடையவள் ஆதலால், அவளது மனதைத் திருப்புவது கடினமாகத் தோன்றியது. அப்படி இருந்தாலும், தாம் கோகிலாம்பாளை மயக்கி அவளை மணந்துகொண்டால், அவள் மூலமாகச் சௌந்தரவல்லியையும் தாம் கலியாணம் செய்துகொள்வது சுலபமாகப் போய்விடும் என்ற ஒரு நினைவு தோன்றியது. ஆகவே, தாம் எப்பாடு பட்டாகிலும், முதலில் கோகிலாம்பாளை வசியப்படுத்தி அவள் தம்மீது பிரியம் கொள்ளும்படிச் செய்து மணக்கவேண்டுமென்ற உறுதியைக் கொண்டவராய் அந்த யௌவன ஜெமீந்தார் மைலாப்பூர் சாந்தோமிலிருந்த ஒரு பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்தார்.

அந்தப் பங்களா அரைக்கால் மயில்நீள அகலம் பரவிய தாகவும், நாற்புறங்களிலும் மதிட் சுவரினால் சூழப்பட்டதாகவும் இருந்தது. அதன் நடுவில் இரண்டு உப்பரிக்கைகளையுடைய கட்டிடங்களும் அவற்றைச் சுற்றி அழகும் செழுமையும் நிறைந்த உத்தியானவனமும் இருந்தன.

அப்படிப்பட்ட சிறந்த வனமாளிகைக்குள் நுழைந்த அந்த யௌவன ஜெமீந்தார் மோட்டார் வண்டியை அதன் கொட்ட கைக்குள் நிறுத்தியபின், கட்டிடத்திற்குள் புகுந்தார். அவரது மனம் காமநோய் கொண்டு கட்டிலடங்காமல் தவித்துத் தடுமாறிக் கொண்டிருந்தது. உடம்போ ஓய்ந்து தளர்ந்து காமஜுரத்தினால் கருகித் தத்தளித்தது. அவர் பார்த்தவிடத்திலெல்லாம் கோகிலாம்பாளின் குளிர்ந்த வடிவமும் சௌந்தர வல்லியின் சுந்தர ரூபமும் ஜோடி ஜோடியாக நின்று அவரது உயிரைக் கொள்ளை கொண்டன. அவர்கள் இருவரும் குயிலைப் பழித்த கணீரென்ற குரலால் கிள்ளை மொழிவது போல மழலையாகப் பேசிய சொற்கள் அப்போதும் அவரது செவிகளில் ஒலித்து ரீங்காரம் செய்து அமிர்தத் துளிகளையும் பன்னீர்த் துளிகளையும் ஜிலீர் ஜிலீரென்று வீசிக் கொண்டிருந்தன. அவரது மனம் அந்த

அதிரூப மடமங்கையரது கண்கொள்ளா வனப்பிலேயே லயித்துப் போய் நின்றமையால் அவர் நேராகத் தமது சயன மாளிகைக்குள் நுழைந்து, அங்கே கிடந்த பளிங்கு மஞ்சத்தின் மேல் படுத்துக் கொண்டார். அவர் வழக்கமாகச் செய்யும் எந்தக் காரியத்தையும் கவனியாமலும், அன்னந் தண்ணீர் முதலிய எதிலும் தமது கவனத்தைச் செலுத்தாமலும், அந்த சொகுஸான சயனத்தில் கிடந்து, நெருப்புத் தணல்களின்மேல் சயனித்தி ருப்பவர் போலத் தத்தளித்துப் புரளத் தொடங்கினார். அவர் அவ்வாறு கால் நாழிகை நேரம் தவித்திருக்க, அந்தச் சயனமாளி கையின் கதவைத் திறந்து கொண்டு ஒரு யௌவன ஸ்திரீ உள்ளே நுழைந்தாள். அவளுக்குப் பதினெட்டு அல்லது இருபது வயசிற்கு மேலிராது. அவள், சிவந்து கொடிபோல இருந்த அழகிய சரீரமும், முகவசீகரமும் பெற்றவளாக இருந்தாள். விலை உயர்ந்த பாவாடை, தாவணி, கௌன் முதலிய ஆடை களையும், தங்க ஒட்டியாணம், வைரக் கம்மல், வைர மூக்குப் பொட்டு, காசுமாலை, வங்கி, காப்பு, கொலுசுகள் முதலிய ஏராளமான ஆபரணங்களையும் நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அணிந்திருந்தாள். அவளது நெற்றியில் மூன்றாம் பிறைச் சந்திரன் போலத் தீட்டப்பட்டிருந்த ஜவ்வாதுப் பொட்டும் அதற்குமேல் பளபளவென மின்னிய குஜிலிப் பொட்டும் அந்த வதனத்திற்கு மிகுந்த வசீகரத் தன்மையை உண்டாக்கின; புருவ விற்களில் தீட்டப்பட்டிருந்த ஜவ்வாதின் கருமையும் கண்ணிமைகளில் குயிற்றப்பட்டிருந்த அஞ்சனமையின் கருமையும் ஒன்றுகூடி அவளது கண்களின் அழகையும் முகத்தின் அழகையும் ஆயிரமடங்கு சோபிக்கச் செய்தன. அவளது உடம்பிலும் ஆடைகளிலும் அத்தர் பன்னீர் முதலிய பரிமள கந்தங்கள் தெளிக்கப் பெற்றிருந்தன. விசாலமாகவும் அழகாகவும் பின்னி விடப்பட்டிருந்த கூந்தலின் பின்னல் முழங்காலளவு தொங்கிக் கொண்டிருந்தது. அதன் நுனியிலிருந்த ஊதாநிறப் பட்டு நாடாவும் அதன் மேல் நட்சத்திரங்கள் போல ஆங்காங்கு காணப்பட்ட வைர ஜடை பில்லைகளும் அவளது பின்னழகைப் பதின்மடங்கு பெருக்கிக் காட்டின. இயற்கையழகும் செயற்கையழகும் அபரிமிதமாக நிரம்பப் பெற்றவளாய் வந்த அந்த மங்கை, தனக்குத் தெரியாமல் வந்து இளைய ஜெமீந்தார் படுத்திருந்ததைக் கண்டு திடுக்கிட்டு, மகிழ்ச்சியும் சந்தோஷமும்

அடைந்து, "யார் அங்கே படுத்திருப்பது? என்னுடைய படுக்கை யறையில் என்னுடைய உத்தரவில்லாமல் வந்த திருடனை நான் நிரம்பவும் கடுமையாகத் தண்டிக்கப் போகிறேன்; கைகளுக்கும் உடம்புக்கும் விலங்குபோட்டு உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்று குதூகலமாகப் பேசிக்கொண்டே ஆவலோடு கட்டிலில் பாய்ந்து, மிகுந்த ஆசையோடு அவரை ஆலிங்கனம் செய்து, தனது கைகளால் அவரது முகத்தைத் திருப்பி இரண்டு மூன்று முறை முத்தங் கொடுக்க, அவரது முகம் விகாரப்பட்டிருந்ததும், அவர் ஏதோ பெருத்த துயரத்தில் ஆழ்ந்து கிடந்ததும் அவளுக்கு நன்றாக விளங்கின. அவள் உடனே திடுக்கிட்டு மிகுந்த அச்சங்கொண்டு, "என்ன இது! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? விளை யாட்டுக்காக நீங்கள் இப்படி எனக்குத் தெரியாமல் வந்து படுத்தி ருக்கிறீர்கள் என்றல்லவா நினைத்தேன்! நீங்கள் இங்கே எப்போது வந்தீர்கள்? உங்களுடைய உடம்பில் ஏதோனும் அசௌக்கியம் ஏற்பட்டதா? அல்லது, வேறே ஏதாவது துன்பம் சம்பவித்ததா? ஏன் இப்படி வேதனைப் படுகிறீர்கள்? உடம்பு நெருப்புத் தணல்போலச் சுடுகிறதே! கடும் ஜ்வரமாக இருக் கிறதே! என்ன சங்கதி? நிஜத்தை ஒளிக்காமல் சொல்லுங்கள்" என்று நயமாக வற்புறுத்திக் கூறினாள்.

---

# 3 – வது அதிகாரம்

# காதற் பெருக்கும் – கலியாணப் பேச்சும்

அவர்களது சம்பாஷணையை நிறுத்தி, குதிரை வண்டியில் சென்ற இளந்தோகையரான கோகிலாம்பாள், சௌந்தரவல்லி முதலியோரைத் தொடர்ந்து செல்வோம். அவர்கள் இருவரையும் நமது யௌவன குமாஸ்தாவையும் தாங்கிச் சென்ற குதிரைவண்டி புரசைப்பாக்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. மிகுந்த அழகும் யௌவனமும் புத்திசாலித்தனமும் நிறைந்த அந்தப் பெண்மணிகளிற்கு அருகில் உட்கார்ந்திருந்ததினால் அந்த யௌவனப் புருஷன் அளவற்ற நாணமும் கிலேசமும் அடைந்து, வண்டிக்காரனிடத்தில் வார்த்தை சொல்லவும், வாயைத் திறக்கமாட்டாமல் தவித்துக் கொண்டிருந்தான்; அதுபோலவே அந்த மடந்தையரும் அந்த அதி சுந்தரபுருஷனுக்கு அருகில் உட்கார நேர்ந்ததைக் கருதி மிகுந்த சங்கடமும் லஜ்ஜையும் அடைந்தவர்களாய் ஒருவரிடத்தொருவர் பேசவும் வெட்கி மௌனம் சாதித்திருந்தனர்.

கடற்கரையில் அந்த அணங்குகள் இருவருக்கும் நேர்ந்த பெருத்த அபாயத்தையும், அவர்கள் தெய்வச் செயலால் தப்பிப் பிழைத்ததையும் நினைத்த போதெல்லாம் அந்த யௌவனப் புருஷனது உள்ளம் வருந்த, உடம்பு நடுங்கியதானாலும், அந்தச் சம்பவத்தைப் பற்றி அவன் ஒருவகையில் மிகுந்த சந்தோஷம் அடைந்தான். ஏனெனில், அந்த மடமயிலார் வசித்த பங்களாவை அடுத்திருந்த வீட்டில், அவனும் அவனது தாயும் சில மாதகாலமாக இருந்து வந்தனர் என்பது, முன்னரே சொல்லப்பட்டது அல்லவா? அவன் ஒவ்வொரு நாளும் அந்த பங்களாவின் வாசல் வழியாகப் போனபோது எல்லாம், அந்தப் பெண்பாலாரில் எவளேனும் ஒருத்தி உப்பரிக்கையிலிருந்த படியோ, அல்லது, உத்யானவனத்திலிருந்தபடியோ அவனது

திருஷ்டியில் பட்டுக் கொண்டு வந்தார்கள். ஆகையால், அவன் அவர்களிடத்தில் மிகுந்த அன்பும் பிரேமையும் கொண்டிருந்த தன்றி, அப்படிப்பட்ட பெருத்த செல்வத்திலிருக்கும் அவர்க ளோடு தான் ஒரு நாளாகிலும் பேசப் போகிறோமா என்று பன்முறையும் நினைத்து நெடுமூச் செறிந்திருந்தவன் ஆகையால், அன்றைய தினம் அவர்கள் தனக்கு முன்னால் போகையில் அவர்களுக்கு அந்த விபத்து நேர்ந்ததும், அதிலிருந்து அவர்களை மீட்கும்படியான சந்தர்ப்பம் தனக்கு வந்து வாய்த்ததும் தெய்வத்தின் சூழ்ச்சியென்று அவன் நினைத்து மிகுந்த மனவெழுச்சியும் உற்சாகமும் கொண்டவனாய் ஆநந்த பரவசம் அடைந்து மெய்ம்மறந்து உட்கார்ந்திருந்தான். அவர்களில் கோகிலாம்பாள் யாரென்றும், சௌந்தரவல்லி யாரென்றும் வேற்றுமை தெரிந்துகொள்ளக் கூடாதபடி அந்தக் கிள்ளை மொழியினர் இருவரும் ஒரே வடிவத்தினராகக் காணப் பட்டனர். ஆனாலும், அவர்கள் பேசியபோது ஒருத்தி விவேக முதிர்ச்சியையும், ஆழ்ந்த நற்குணத்தையும், ஸ்திரீகளுக்குரிய அடக்கத்தையும் காட்டியதும், இன்னொருத்தி குழந்தைபோலக் கள்ளம், கபடம் முதலியவின்றி சுத்த ஸ்வரூபிணியாக இருந்ததும் நன்றாகத் தெரிந்தன. ஆகையால் அவனது மனத்தில் கோகிலாம் பாளது இனிய வடிவமே பதிந்து அவனது உள்ளத்தில் அமிர்த ஊற்று சதாகாலமும் பெருக்கெடுக்கும்படி செய்து கொண் டிருந்தது. அவள் சகல கலைகளுக்கும் சகல ஞானங்களுக்கும் இருப்பிடமான சரஸ்வதி தேவிதானோ என்ற ஐயமும், மதிப்பும், பயபக்தியும், நெகிழ்வும் அவனது மனத்தில் அடிக்கடித் தோன்றின. சௌந்தரவல்லி அடிக்கடி கடைக்கண் பார்வையால் தன்னை நோக்கி, தான் அவளைப் பார்க்கும் காலத்தில், அவள் சகிக்க முடியாத நாணமும் மடமும் தோற்றுவித்தது நமது யௌவன குமாஸ்தாவின் மனதைக் கவர்ந்ததை விட, கோகிலாம்பாள் அடங்கி ஒடுங்கி அசைவற்று அழகின் திரளாக உட்கார்ந்திருந்த அற்புதக் காட்சியே அவனது மனதை அதிகமாகக் கொள்ளை கொண்டது. அவ்வாறு அவனது மனம் கரைகடந்து பொங்கிக் குதூகலித்தது. ஆனாலும், அவன் அடிக்கடி அதை அடக்க முயன்று கொண்டிருந்தான். தான் சொற்ப சம்பாத்தியமுள்ள ஒரு குமாஸ்தாவாக இருக்க,

அப்படிப்பட்ட லக்ஷாதிபதியின் செல்வியைக் கண்டு தான் நெடுமூச்செறிவது நிஷ்பிரயோசனம் என்றும், அவ்வாறு தான் தன் மனதைச் சபலிக்கவிடுவது தீரா விசனமாக முடியும் என்றும், அவனது நல்ல அறிவு அவனுக்கு அடிக்கடி புத்தி கூறியது. என்றாலும், முதன் முதலாக காதல்கொள்ளும் யௌவனப் பருவத்து மனமானது தான் காதலிக்கும் வஸ்து தனக்குக் கிடைக்குமா, அதற்கும் தனக்கும் பொருத்தமுண்டா, தான் அதைக் காதலிப்பது தகுமா என்ற விஷயங்களையெல்லாம் உணரமாட்டாமல், விரகவேதனைக்கே அடிமையாகிவிடும் என்பது நல்லார்க்கும் பொல்லார்க்கும் எல்லார்க்கும் ஒத்த நிகழ்ச்சி. ஆதலால் நமது யௌவன குமாஸ்தா தடுக்க முடியாவகையில், அவனது இருதய கமலத்தில் கோகிலாம்பாள் என்னும் கோதிலக் குணமுடைய மங்கை கோவில் கொண்டு வீற்றிருந்தாள்.

அவனது நிலைமை அப்படி இருக்க, சௌந்தரவல்லியின் மனமோ பலவகையான சஞ்சலங்களினால் அல்லல்பட்டுக் கொண்டிருந்தது. தான் எந்த வார்த்தை சொன்னாலும், அதில் ஒன்றையேனும் கோகிலாம்பாள் ஒப்புக் கொள்ளாமல் அதற்கு மாறாகவே காரியங்களைச் செய்கிறாள் என்றும், அதனால் தன்னிடத்தில் பிறர்க்கு மதிப்புக் குறைவும் சிறுமையும் ஏற்படுகின்றனவே என்றும் நினைப்பவள்போல, சௌந்தர வல்லியின் தேகம் அடிக்கடி குன்றிப்போனதாகக் காணப்பட்டது. அது நிற்க, அன்றைய தினம் தாம் கண்டவர்களுள் கோவிந்தபுரம் ஜெமீந்தார் அதிக அழகான மனிதரா, அல்லது, அந்த யௌவன குமாஸ்தா அதிக அழகுடையவனா என்ற சந்தேகமே பெருத்த சந்தேகமாக எழுந்து அவளது உணர்வையும் நினைவையும் அடியோடு கொள்ளை கொண்டு விட்டது. அந்த முக்கியமான ஆராய்ச்சியில் அவள் முற்றிலும் ஆழ்ந்துபோய்த் தமக்குக் கடற்கரையில் நிகழ்ந்த அபாயத்தின் நினைவையே கொள்ளா தவளாக மெய்ம்மறந்திருந்தாள். ஆனால், கோகிலாம்பாளின் மனது எவ்விதமான உணர்ச்சியைக் கொண்டது என்பதைப் பிறர் அறிந்து கொள்ளக்கூடாதபடி அவள் தனது இயற்கையான சலனமற்ற தோற்றத்தைக் கொண்டவளாகவே காணப்பட்டாள்.

அவளது மனத்தில் ஏற்பட்ட வெறுப்பு, விருப்பம் இன்ன தென்பது எவரும் அறிந்துகொள்ளக் கூடாமல் இருந்தது.

அப்படிப்பட்ட மனநிலைமையில் அவர்கள் இருக்க, குதிரை வண்டி இரவு ஏழரைமணிக்குப் புரசைப்பாக்கம் ஹைரோட்டிலுள்ள துபாஷ் ராஜரத்ன முதலியாரது சிங்கார மாளிகையை அடைந்தது. அந்தப் பங்களா சென்னையிலுள்ள சகலமான கோடீசுவரர்களது பங்களாக்கள் எல்லாவற்றிலும் அதிக அற்புதமாகவும் சிறப்பாகவும் அழகாகவும் இருப்பதாக நெடுங்காலமாக எல்லோராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்ட ஒரு வன மாளிகை. அது அரை மயில் நீள அகலமுள்ள மதிட்சுவர்களால் சூழப்பெற்றதாய், உட்புறத்தில் ரம்பை, ஊர்வசி, திலோத்தமை என்னும் தெய்வலோகப் பெண் மயிலார் ஜலக்கிரீடை செய்து விளையாடும் இடங்களோ எனக் காண் போர் நினைத்து மயங்கத் தகுந்த தாமரைத் தடாகங்களும், மணல்கரைகளும், நறுமணம் கமழும் மலர்களும், தீங்கனிகளும் குலுங்க நிற்கும் கொடி செடி தருக்களும், இடை நடுவில் ஆகாயத்தை அளாவிப் பரவி நின்ற உப்பரிக்கைகள் நிறைந்த மாடங்களும், கூடங்களும் நிரம்பப் பெற்ற ஒப்புயர்வற்ற ரமணீயஸ்தலமாக இருந்தது. அந்த வனமாளிகை ராஜ பாட்டையை அடுத்து இருந்தது. ஆதலால் பாட்டையிலிருந்து மாளிகைக்குள் நுழையுமிடத்திலிருந்த வாசற்படி இரும்புக் கம்பிகளினாலான இரட்டைக் கதவுகளைக் கொண்டதாக இருந்ததன்றி; அதன் இருபக்கங்களிலும் ஒற்றைக் கருங் கல்லினால் ஆன பெருத்த யானைகள் இரண்டு பக்கங்களிலும் வைத்து மதில்களோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. அந்த இடத்தில் கமான்போல வளைத்து விடப்பட்டிருந்த பந்தலில் சம்பங்கி, ஜாதி மல்லிகை, மனோரஞ்சிதம் முதலிய மலர்கள் நிறைந்து, நெடுந்தூரம் வரையில் பரிமள கந்தத்தை தூவிப் பரப்பின. கோகிலாம்பாளும், சௌந்தரவல்லியும் யௌவன குமாஸ்தாவும் ஏறி வந்த குதிரை வண்டி அந்த வாசலண்டை வந்து சேர்ந்தது. உடனே நமது யௌவன குமாஸ்தா வண்டிக் காரனைப் பார்த்து, "வண்டிக்காரா! இதுதான் இடம்; நிறுத்து" என்றான். உடனே வண்டிக்காரன் கடிவாளவாரை இழுத்து வண்டியை ராஜபாட்டையிலேயே நிறுத்தினான். அங்கே இருந்த

வாசற்படியின் இரும்புக் கதவுகள் மூடித் தாளிடப் பெற்றிருந் தன. அவ்விடத்தில் வழக்கமாகக் காவல் காத்திருக்கும் வேலைக் காரன் ஏதோ தேகபாதையை நிவர்த்தித்துக்கொள்ளும் பொருட்டு அப்போதுதான் தோட்டத்திற்குள் போனான். வாசற் கதவுகள் மூடப்பட்டிருந் ததையும், வேலைக்காரன் எவனும் இல்லாதிருந்ததையும் கண்ட நமது யௌவன குமாஸ்தா சடக்கென்று வண்டியை விட்டுக் கீழே குதித்துக் கதவண்டை ஓடி அதைத் திறந்துவிட, உடனே வண்டிக்காரன் வண்டியைத் திருப்பி தடதடவென்று உள்ளே ஓட்டத் தொடங்கினான். வாசற்படியண்டை நின்ற யௌவன குமாஸ்தா, தானும் உள்ளே போவதா, அல்லது பாட்டையோடு தனது ஜாகைக்குப் போவதா என்ற சந்தேகம் கொண்டு இரண்டொரு நிமிஷநேரம் தயங்கி அவ்விடத்திலேயே நிற்க, அதற்குள் வண்டி நெடுந்தூரம் போய் விட்டது. அந்த வாசலிலிருந்து, தோட்டத்தின் நடுமத்தியிலிருந்த வாசஸ்தலம் அரை பர்லாங்கு தூரத்தில் இருந்தது அன்றி, அதற்குச் செல்லும்பாதை கப்பிக் கல்லால் மேடுபள்ளமின்றி வழு வழுப்பாகப் போடப்பட்டுத் தாரினால் சமமாக மெழுகப் பெற் றிருந்தது. அந்தப் பாதையின் இரண்டு பக்கங்களிலும் வாதா, சௌக்கு, நெட்டுலிங்கை, மருதாணி, கமுகு, குட்டைத் தென்னை முதலிய மரங்கள் கலப்பாகவும் வரிசையாகவும் வைத்து அழகாக வளர்க்கப்பட்டுப் பாம்புபோல வளைந்து வளைந்து சென்றன. அந்த இரட்டை மரப்பாத்திகளின் உட்புறங் களிலும் வெளிப்புறங்களிலும் இங்கிலீஷ் குரோட்டன்கள் கண் கவர் வனப்போடு செழித்து வளர்ந்த பூத்தொட்டிகள் ஒன்று போலவும் சுத்தமாகவும் வைக்கப்பட்டிருந்தன. இருபத்தைந்து கஜதூரத்திற்கு ஓரிடத்தில் வெள்ளை, சிகப்பு, பச்சை, மஞ்சள், ஊதா, நீலம் முதலிய சப்த வர்ணங்களில் மின்சார விளக்குகள் நவரத்னக் கனிகள் போலக் கொத்துகள் கொத்துகளாக வளைந்து நின்று மிகுந்த பிரகாசத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன. கண்கண்ட தூரம் வரையில் நீண்டு பரவி ஒரு பெருத்த மண்டலாதிபதியின் அரண்மனையும் உத்தியான வனமும் போலக் காணப்பட்ட மனோக்கியமான அந்தச் சிங்கார மாளிகையில் எங்கு பார்த்தாலும் பல வர்ணங்களைக் கொண்ட மின்சார விளக்குகளே நிறைந்து, அது உலகை மயக்கும்

மோகினிதேவியின் மாய மணிமண்டபமோ என்ற ஐயத்தை உண்டாக்கியது. அப்படிப்பட்ட உன்னதமான வன மாளிகையில் உட்புறத்து மாட்சியை நமது யௌவன குமாஸ்தா ஒருநாளிலும் பார்த்து அறியாதவன் ஆதலால், வாசற்படியைக் கடந்து உட்புறத்தில் இரண்டோரடி நடந்து சென்ற அந்த யௌவனச் சிறியோன் திக் பிரமையும் திகைப்பும் அடைந்தான். அப்படிப் பட்ட தெய்வலோகத்திற்குள் நுழையவும், அதன் சொந்தக் காரர்களான கோடீசுவரர்களிடத்தில் சமமாகப் பழகி நட்பு செய்து கொள்ளவும், தனக்கு எவ்வித யோக்கியதையும் இல்லை என்ற எண்ணம் அவனது மனத்தில் தோன்றி அவனது கால்களைப் பின்னுக்கு இழுத்தன. கேவலம் குமாஸ்தா வேலைசெய்து சொற்ப வருமானம் சம்பாதித்து வயிறு வளர்க்கும் ஏழையாகிய தான், அந்தப் பெருமாட்டிப் பெண்களைப் பற்றி மனதால் நினைப்பதற்கும் அருகமற்றவன் என்று நினைவு கொண்ட அந்தப் புருஷன், தான் அவ்வளவோடு நிற்பதே மரியாதை என்றும் அதற்கு மேலும் உள்ளே நுழைந்து அவர்களது காரியங்களில் தலையிடுவது அழகல்ல என்றும் தீர்மானித்துக் கொண்டவனாய் இரண்டொரு நிமிஷ நேரம் அவ்விடத்தி லேயே தயங்கித் தயங்கி நின்றான். முன்பின் பேசிப் பழகாத மனிதரது ஜாகைக்குள் தான் போய் அதிகமாக முந்தக்கூடாது என்று அவனது மனம் அவனுக்கு நற்புத்தி கூறியது. ஆனாலும், அவனது உள்ளம் கோகிலாம்பாளினது அழகிலும் நற்குணங் களிலும் லயித்துப் போயிருந்தமையால், கால்கள் அவ்விடத் திலேயே வட்டமிடத் தொடங்கின. அந்தப் பெண் மயிலார் இருவரும் ஒருகால் தன்னையும் உள்ளே அழைத்துத் தனக்கு உபசார வார்த்தைகள் சொல்லுவார்களோ என்ற சந்தேகமும் அவனது மனத்தில் உதித்தது. ஆனால், அவர்கள் மிகுந்த நாணமும், லஜ்ஜையுமுடைய யௌவனப் பெண்கள். ஆதலால், தான் அவ்வளவு பெரிய மரியாதையை அவர்களிடம் எதிர் பார்ப்பது தகாது என அவன் அடுத்த நிமிஷத்தில் எண்ணினான். தவிர, அதற்கு மேல், அவர்களுக்குத் தன்னால் ஆக வேண்டிய உதவி எதுவுமில்லை ஆகையாலும், அப்படியே ஏதேனும் அலுவலிருந்தாலும், அவர்கள் நிரம்பவும் நாகரீகமான நடத்தை உடையவர்களாதலால், தன்னை ஏவாமல் அவர்களது பணி

யாட்களையே ஏவுவர் ஆகையாலும், தான் உள்ளே போவதும் அவ்விடத்தில் நிற்பதும் பயனற்ற காரியம் என்பது அவனுக்கு நன்றாகப்பட்டது. ஒரு மனிதருக்கு ஓர் அபாயகாலத்தில், இன்னொருவர் உபகாரம் செய்தால், அவ்வளவோடு பின்னவர் போகவேண்டுமேயன்றி, முன்னவரிடத்தில் சன்மானத்தையாவது புகழ்ச்சியையாவது எதிர்ப்பார்ப்பது அதமகுணம் என்பதை நமது யௌவனப் புருஷன் நன்றாக உணர்ந்தவனேயானாலும், கோகிலாம்பாளின் மீது அவனது அன்பு அதரங்கள் எல்லாம் சென்று லயித்திருந்தமையால், அவன் மனக்கலக்கம் அடைந்து தடுமாறித் தத்தளித்தான்.

அவ்வாறு அரைக்கால் நாழிகை நேரம் கழிந்தது. அந்த வாசலில் காவல் காக்கும் வேலைக்காரன் தோட்டத்திற்குள்ளிருந்து திரும்பி அங்கே வந்து சேர்ந்தான். இரும்புக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருந்ததையும், உள் பக்கத்தில் ஒரு புருஷன் நின்றதையும் அவன் கண்டு மிகுந்த சந்தேகம் கொண்டு, "யாரைய்யா அது? ஏனைய்யா கதவைத் திறந்தாய்?" என்று அதட்டிக் கேட்க, நமது யௌவனப் புருஷன் அப்போதே தனது நல்லுணர்வைப் பெற்றவனாய், "வித்தியாசமான மனிதர் ஒருவருமில்லை. நான்தான் பக்கத்து வீட்டிலிருப்பவன். இந்த வீட்டுப் பெண்களோடு நான் குதிரை வண்டியில் உட்கார்ந்து கொண்டு வந்தேன். குதிரை வண்டி இப்போதுதான் உள்ளே போயிற்று. நான் வீட்டுக்குப் போகிறேன். வேண்டுமானால் நீ கதவுகளை மூடிக்கொள்" என்று கூறியவண்ணம் மெல்ல ராஜபாட்டைக்கு நழுவினான்.

அவன் சொன்ன வார்த்தையைக் கேட்ட காவற்காரன் நிரம்பவும் திமிராகவும், எடுப்பாகவும் பேசத் தொடங்கி, "ஓகோ! அப்படியா! இந்த வீட்டுப் பெண்கள் உன்னோடு குதிரை வண்டியில உட்கார்ந்து கொண்டு வந்தார்களோ! என்ன, கதை பண்ணுகிறாயோ? தென்ன மரத்தில் கன்றுக்குட்டிக்குப் புல் பிடுங்க ஏறின கதையாக இருக்கிறதே! பாதையோடு போகிற நாய்களெல்லாம், மனிதன் கொஞ்சம் அயர்ந்தால், இப்படி வந்து கமான் மேலே இருக்கும் பூக்களையெல்லாம் பறித்துக்கொண்டு போவதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார்களே!

இழவு ஜனங்களோடு இதே மாரடியாகப் போய்விட்டதே'' என்று பொதுவாகப் பேசி வழிப்போக்கர்களை எல்லாம் தூஷித்தவனாய் மிகுந்த கோபத்தோடு வந்து உட் புறத்தில் இருந்தபடி கதவுகளை மூடித் தாளிட்டுக் கொண்டு மெல்ல அப்பால் நடந்தான்.

அந்தக் காவலாளியின் நடத்தையினால் மிகுந்த வெட்கமும் மனத் தாங்கலும் அடைந்த நமது யௌவனப் புருஷன் அதன் பிறகு அவ்விடத்தில் நிற்காமல், பாதையோடு தனது ஜாகையை நோக்கி நடக்கலானான்.

அந்த இடத்திலிருந்து அவனது இருப்பிடம் சுமார் அரை மயில் தூரத்திற்குமேல் இருந்தது. அந்தக் காவற்காரனால் தனக்கு ஏற்பட்ட இழிவைப் பற்றிய விசனம் அவனது மனத்தில் குடி கொண்டு வருத்தத் தொடங்கியது. ஆனாலும், அந்த வேலைக் காரன் படிப்பும் நல்லறிவும் இல்லாத கேவலமான மூட வேலைக்காரன். ஆகையால், அந்த நிகழ்ச்சியைத் தான் பொருட் படுத்தக் கூடாதென்று அவனது மனம் அவனுக்கு நற்புத்தி புகட்டியது ஆகையாலும், அவனது கவனம் முழுதும் வேறொரு முக்கியமான விஷயத்தில் வலுவாகச் சென்று கொண்டே இருந்தமையாலும், அவன் ஒரு பர்லாங்கு தூரம் போகுமுன், அந்த விஷயத்தை முற்றிலும் மறந்தே போய்விட்டான்; மாறி மாறி அந்த இரண்டு பேடன்னங்களின் அழகிய வடிவங்களே அவனது மனத்தில் தோன்றித் தோன்றித் தாண்டவமாடினது அன்றி கடற்கரையில் அன்று மாலையில் நடந்த சம்பவம் முழுதும் அப்போதே நடப்பதுபோல அவனது அகக்கண்ணில் புலனாயிற்று. அவன் அதே நினைவுகளில் ஈடுபட்டவனாய்த் தனது உயிரையும் உணர்வையும் அந்த வனமாளிகைக்குள் செல்ல விடுத்து வெற்றுடலோடு நடைப்பிணம் போலத் தன்னையும் உலகையும் மறந்து சென்றுகொண்டே இருந்தான். சௌந்தர வல்லியைப் போலில்லாமல், கோகிலாம்பாள் சமயோசித தந்திரமும், வியாவகார ஞானமும், லௌகீக மரியாதையும் நன்றாக உணர்ந்தவளாக இருந்தும், கடைசியில் தான் அவர்களை விட்டுப் பிரிந்து வந்த காலத்தில் வண்டிக் காரன் மூலமாகவாகிலும் ஓர் உபசார வார்த்தையேனும் சொல்லவில்லையே என்ற நினைவும்

அப்போதைக்கப்போது உண்டாயிற்று. தான் ஏழை என்பது பற்றி அவள் தன்னைப் பொருட்படுத்தவில்லையோ என்ற சந்தேகமும் தோன்றியது.

அவ்வாறு அவன் தாமரை இலைத் தண்ணீர் போலத் தத்தளித்தவனாய்ச் செல்ல, நடுவில் வந்த அவனது வீட்டையும் கவனியாமல், அவன் அதற்கு அப்பாலும் அரைக்கால் மயில் தூரம் போய்; அவ்விடத்தில் தனது உணர்வைப் பெற்றுத் திரும்பி மறுபடியும் நடந்து இரவு சரியாக எட்டரை மணி சமயத்தில் தனது வீட்டின் வாசலண்டை வந்து சேர்ந்தான்.

அவன் எப்போதும் மாலை ஆறரை மணிக்குள் வீட்டிற்குத் திரும்பி வந்துவிடுவது வழக்கம். அன்றைய தினம் சில சாமான் கள் வாங்கிவரும் பொருட்டு, அவன் சைனாபஜார்த் தெரு விற்குப் போய்விட்டு வர ஏழரைமணி ஆகுமென்று அவன் தனது தாயினிடத்தில் காலையிலேயே சொல்லிவிட்டுப் போயிருந்தான். ஆகவே, அவனது தாய் மாலை ஏழரை மணிவரையில் பொறுத்துப் பார்த்தாள். மகன் வரவில்லை. அவளது மனத்தில் ஒருவித சஞ்சலம் உண்டாகிப் பெருகத் தொடங்கியது. சென்னையில் எங்கு பார்த்தாலும் மோட்டார் வண்டிகள் தாறுமாறாகவும் மனிதர் போவதைப் பொருட்படுத்தாமலும் குறுக்கு நெடுக்காகப் போவதும், அதனால் ஜனங்களுக்கு மரண அபாயம் நேருவதும் ஒவ்வொரு நாளும் நிகழும் சர்வசாதாரண சம்பவம் ஆதலால், தனது புதல்வன் வரத் தாமதமானது கற்பகவல்லியம்மாளுக்கு நிரம்பவும் துன்பகரமாக இருந்தது. அந்த அம்மாளுக்கு அவன் ஒரே புத்திரன் ஆகையாலும், அவனைத் தவிர, புருஷன் முதலிய வேறோர் உறவினரே இல்லாதவள் ஆகையாலும், அவள் தனது புதல்வனிடத்தில் தனது உயிரையே வைத்திருந்தவள் ஆதலாலும் அவளது சங்கடம் க்ஷணத்திற்கு க்ஷணம் பெருகி மலைபோல விரிந்து கொண்டே போனது; கற்பகவல்லி அம்மாளுக்கு வீட்டிற்குள்ளேயே இருக்கை கொள்ளவில்லை. ஆகையால், தனது ஜோலிகள் எதையும் கவனிக்காமல் அந்த அம்மாள் கையில் விளக்கை எடுத்துக் கொண்டு வெளியில் வந்து வாசல் திண்ணையில் உட்கார்ந்தபடி வழிப்போக்கர்கள் எல்லோரையும் கவனித்துப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

எட்டரை மணியாயிற்று. அந்தப் பாதை கிழக்கு மேற்காகச் செல்லும் பாதை ஆகையாலும், பட்டணம் கிழக்குப் பக்கத்தில் இருந்தமையாலும், அவள் கிழக்கு திக்கிலேயே தனது பார்வையைச் செலுத்தி உற்றுநோக்கிக் கொண்டிருந்த சமயத்தில், மேற்குத் திக்கிலிருந்து வந்த அவளது புத்திரனான யௌவன குமாஸ்தா, "என்ன அம்மா பார்க்கிறீர்கள்?" என்று வினாவிய வண்ணம் வாசல்படியில் ஏற, அவனைக் கண்ட கற்பக வல்லியம்மாள் திடுக்கிட்டுத் திரும்பி, "என்ன தம்பீ! ஏன் இந்தப் பக்கத்திலிருந்து வருகிறாய்? பூந்தமல்லிக்கா போயிருந்தாய்?" என்றாள்.

கொஞ்ச நேரத்திற்குமுன் அவன் கிழக்குத் திக்கிலிருந்து அதே வழியாக மேற்கே போனபோது, கற்பகவல்லியம்மாள் வீட்டிற் குள் பூனை பாத்திரங்களை உருட்டிய ஓசையைக் கேட்டு, உள்ளே போய் சாதம், தயிர், பால் முதலிய வஸ்துக்களையெல் லாம் நன்றாக மூடி பாரம் வைத்துவிட்டுத் திரும்பி வந்தவளா தலால் அவன் போனதைக் கவனிக்கச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, அவன் ஒருகால் தனது உத்தியோக சம்பந்தமாய்ப் பூந்தமல்லிக்குப் போய்விட்டுத் திரும்பி வருகிறானோ என்ற சந்தேகம் கற்பகவல்லியம்மாளது மனதில் எழவே, அவள் முன்னே குறிக்கப்பட்ட கேள்வியைக் கேட்டாள்.

தனது தாய்கேட்ட கேள்விக்கு உடனே மறுமொழி சொல்ல முடியாமல் சஞ்சலமடைந்த மைந்தன், "இல்லை இல்லை. பூந்தமல்லியில் எனக்கென்ன அலுவலிருக்கிறது? எல்லாவற்றை யும் சொல்லுகிறேன்; உள்ளே போவோம் வாருங்கள்" என்று பணிவாக விடைகூறிய வண்ணம் உள்ளே நுழைந்தான்.

ஒவ்வொரு நாளிலும், அவன் திரும்பி வருகையில், மிகுந்த உற்சாகமும் குதூகலமும் நிறைந்தவனாய் உள்ளே வந்து, தான் வழியில் கண்ட புதுமைகளையெல்லாம் அம்மாளிடத்தில் சொல்வது வழக்கம். அதற்கு மாறாக, அன்றைய தினம், அவன் வாட்டமடைந்தும், சோர்ந்தும், சஞ்சலமுற்று இருந்ததை ஒரு நொடியில் கற்பகவல்லி யம்மாள் கண்டு கொண்டாள். அவன் முதலில் உள்ளே நுழைய, அந்த அம்மாள், கையில் விளக்கை எடுத்துக் கொண்டு, வாசற்கதவை மூடித் தாளிட்டுக் கொண்டு

*அவனைத் தொடர்ந்து சென்றாள். அவன் வாங்கிக் கொண்டு வருவதாகச் சொல்லியிருந்த சாமான் அவனிடத்தில் காணப்படா ததும் வியப்பை உண்டாக்கியது. ஆகவே விஷயம் இன்னது என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்று அந்த அம்மாளினது மனம் பதறியது. அவள் தனது மைந்தனிடத்தில் வைத்திருந்த வாஞ்சை அளவு சங்கியை இன்றி அபாரமாக இருந்ததனாலும், அவனும் பயபக்தி விசுவாசம் பணிவு முதலிய குணங்கள் நிரம்பப் பெற்றவனாய்த் தனது தாய்க்குக் கீழ்ப்படிந்து நடப்பவ னானாலும், தாய் தனது புத்திரனே இனி வீட்டிற்கு அதிகாரி என்ற எண்ணம் கொண்டவளாய் அவனிடத்தில் அன்போடு கலந்த மரியாதை, பயம் முதலியவற்றையும் காட்டிவந்தாள். ஆகையால், விஷயம் இன்னது என்பதை உடனே சொல்ல அவ னுக்கு மனமில்லை என்பதைக் கண்டுகொண்ட கற்பகவல்லி யம்மாள், அவனே அதை மறுபடியும் சொல்லும் வரை, தான் திரும்பவும் வற்புறுத்தக் கூடாதென்று மௌனமாகவே சஞ்சலம் அநுபவித்திருந்தாள்.*

*உள்ளே நுழைந்த யௌவனச் சிறியோன் தனது உடைகளை யெல்லலாம் கழற்றி மூளைகளில் மாட்டி வைத்துவிட்டு, முற்றத் திலிருந்த தண்ணீர்க் குழாயண்டை போய்க் கைகால்களை எல்லாம் சுத்தம் செய்துகொண்டு கூடத்திற்கு வந்து, கடிகாரத் திற்குச் சாவிகொடுத்து வைத்துவிட்டு, மாடத்திலிருந்த விபூதி மடலில் கையை நுழைத்து, விபூதி எடுத்து நெற்றி மார்பு முதலிய இடங்களில் அணிந்துகொண்டு கூடத்திலிருந்த ஊஞ்சல் பலகையின்மேல் உட்கார்ந்து கொண்டான்.*

*அவனது நிதானத்திற்கும் கற்பகவல்லி அம்மாளினது பதைப் பிற்கும் முற்றும் பொருத்தமில்லாமலே இருந்தது; அந்த நற் குணத் தாய் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். அவன் சொல் லுவதாகத் தோன்றவில்லை. அவனது முகமோ சந்தோஷமற்று வாட்டம் பெற்றதாகவே காணப்பட்டது. ஆகவே, கற்பகவல்லி யம்மாள் அதைக் கண்டு சகியாதவளாய், தான் எப்படிப் பேசுவ தென்பதைச் சிறிது நேரம் உணராதிருந்த பிறகு வேறே விஷயத் தைப் பற்றிப் பேசுகிறவள் போல, "அப்பா* ***கண்ணபிரான்!*** *உடைந்துபோன சிமிணிக்குப் பதில் வேறே சிமிணி, சைனா பஜாருக்குப் போய் வாங்கி வருவதாகச் சொன்னாயே! அதை*

வாங்கச் சரிப்படவில்லையோ? சிமிணியைக் காணோமே?'' என்று நயமாக வினவினாள்.

**கண்ணபிரான்** என்ற அழகிய பெயர் கொண்ட நமது யௌவன குமாஸ்தா தனது தாயின் மனம் சஞ்சலப்படவும், அவளது முகம் கோணவும் பார்த்து என்றைக்கும் சகித்திராதவன் ஆனாலும், அன்றைய தினம் அவன் கோகிலாம்பாள் என்னும் பெண் தெய்வத்திற்கு அடிமையாகித் தனது நினைவையெல்லாம் அடுத்த பங்களாவிற்குள் நுழைய விட்டிருந்தவன் ஆதலால் தான் அன்றைய தினம் கால தாமதமாக வீட்டிற்கு வந்ததைப் பற்றித் தனது தாய் சஞ்சலமுற்று வருந்துகிறாள் என்பதையும், தான் அவளுக்குச் சமாதானம் சொல்ல வேண்டிய கடமை பாக்கி இருக்கிறது என்பதையும், அவன் அப்போதே உணர்ந்து கொண்டான்; தான் கோகிலாம்பாளைக் கண்ட முதல் தனது மனம் பைத்தியம் கொண்டது போல இருக்கிற சங்கதியை வெளியிடாமல் மறைத்து கடற்கரையில் நிகழ்ந்த விபத்தின் விவரத்தை மாத்திரம் தான் தனது தாயினிடத்தில் வெளியிட வேண்டுமென்ற எண்ணம் கொண்ட கண்ணபிரான், "அம்மா! என்னவென்று சொல்லுவேன்! இன்றைக்கு சாயங்காலம் கடற்கரையில் ஒரு பெரிய அபாயம் நேரிட்டது! நல்ல வேளையாக உயிர்ச்சேதம் இல்லாமல் போய்விட்டது!'' என்றான்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் திடுக்கிட்டுப் பதறிப் போய், "ஆ! என்ன? அபாயமா? யாருக்கு! உனக்கா! என்ன அபாயம்? சீக்கிரமாகச் சொல். என் உடம்பு பதறுகிறது'' என்று மிகுந்த திகிலோடும் வியப்போடும் கேட்க, உடனே கண்ணபிரான் சந்தோஷத்தினால் புன்னகை செய்தவனாய், "எனக்கு ஒன்றுமில்லை. நம்முடைய வீட்டுப் பக்கத்து பங்களாவிலே இருக்கும் துபாஷ் முதலியாருடைய பெண்கள் இரண்டுபேரும் ஸாரட்டில் ஏறிக் கொண்டு கடற்கரைச் சாலை வழியாக வந்து கொண்டே இருந்தார்கள். எதிர்ப்பக்கத்திலிருந்து வந்த ஒரு மோட்டார் வண்டி மோதி, ஸாரட்டைக் கவிழ்த்து விட்டது. குதிரையின் காலையும் அந்த மோட்டார் வண்டி கிழித்து விட்டது. ஆகையால், குதிரை வீரிட்டுக் கதறி, கவிழ்ந்துபோன ஸாரட்டை இழுத்துக் கொண்டே ஓடுகிறது. வண்டிக்குள்

துபாஷ் வீட்டுப் பெண்கள் தொற்றிக்கொண்டு தாறுமாறாக இழு பட்டுக் கூக்குரல் செய்கிறார்கள். ஒரு பனையளவு ஆழமுள்ள பள்ளத்தின் ஓரமாக வண்டி போய்விட்டது. அந்த வண்டிக்குப் பக்கத்தில் என்னைத் தவிர, வேறே ஜனங்கள் யாரும் இல்லை. நான் மாத்திரம் இன்னம் ஒரு நிமிஷம் பின் தங்கி இருந்தால், அது மகா கோரமான காட்சியாக முடிந்திருக்கும்; வண்டி, குதிரை எல்லாம் பள்ளத்தில் விழுந்திருக்கும். ஸாரட்டுக்குள் தொற்றிக் கொண்டிருந்த பெண்களும் அப்படியே விழுந்து நசுங்கிப் போய் அதோகதியாகி இருப்பார்கள். அந்தச் சமயத்தில் தெய்வந்தான் என் மனசிலிருந்து பெருத்த வீராவேசத்தையும் அபாரமான துணிச்சலையும் கொடுத்து என்னைத் தூண்டி விட்டது! நான் உடனே ஓடிக் குதிரையின் கடிவாளவாரைப் பிடித்து அதை ராஜபாட்டையில் திருப்பிவிட்டு, என் கையி லிருந்த பேனாக்கத்தியால் வார்களை அறுத்துக் குதிரையையும் வண்டியையும் வேறாக்கி அந்தப் பெண்களுடைய உயிர் களையும், குதிரையின் உயிரையும் தப்ப வைத்தேன். உடனே பெண்கள் இருவரும் வண்டியின் கூண்டைவிட்டுத் தரையில் இறங்கினார்கள். அந்த வண்டியும் குதிரையும் உபயோகமற்றுப் போய்விட்டபடியாலும், அவர்களோடு வந்த வண்டிக்காரன் கீழே விழுந்து அடிபட்டு எழுந்திருக்கமாட்டாமல் கிடந்தமை யாலும், நான் உடனே திருவல்லிக்கேணிக்குப் போய், அவர்க ளுக்காக ஒரு குதிரை வண்டி கொண்டு வந்தேன். அவர்கள் என்னையும் வண்டியில் உட்கார்ந்து கொள்ளச் சொன்னார்கள். நானும் குதிரை வண்டியில் உட்கார்ந்து வந்து அவர்களுடைய பங்களாவின் வாசலில் இறங்கி வந்தேன். வரும்போது என்னுடைய மனசு அதே விஷயத்தில் லயித்துப் போய்விட்டது. நான் அந்தச் சமயத்தில் பாய்ந்து குதிரையைத் திருப்பி விடா திருந்து, வண்டி பள்ளத்தில் வீழ்ந்திருந்தால், அவர்களுடைய கதி எப்படி ஆகியிருக்கும் என்ற சிந்தனையில் என் மனசு ஆழ்ந்து போய்விட்டது. ஆகையால், நம்முடைய வீடு வந்ததைக்கூட உணராமல் நான் கொஞ்சதூரம் மேற்கே போய்த் திரும்பி வந்தேன். இன்றைய தினம் எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த அபாயத்தினாலேதான், நான் சிமிணி முதலிய எந்தச் சாமானை யும் வாங்கிவர முடியாமல் போய்விட்டது'' என்று கூறினான்.

அந்த வரலாற்றைக் கேட்ட கற்பகவல்லியம்மாள் கரை கடந்த வியப்பும் திகைப்புமடைந்து, "என்னவோ நல்ல காலந்தான் ஒருத்தருக்கும் உயிர்ச்சேதம் இல்லாமல் போயிற்று. இந்த ஊர் கெட்டகேடு அப்படியிருக்கிறது. இந்த இழவு மோட்டார் வண்டி எப்போதுதான் ஒழியுமோ தெரிய வில்லையே! வழியில் மோட்டார் வண்டியினால் உனக்கு ஏதாவது அபாயம் நேர்ந்து விட்டதோ என்ற கவலையினாலே தான், நான் உள்ளே இருக்கமாட்டாமல் வேதனைப்பட்டுக் கொண்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டி ருந்தேன். நீ இந்த வழியாகத்தானே மேற்கே போயிருக்கிறாய். கொஞ்ச நேரத்துக்கு முன் உள்ளே பூனை சாமான்களை உருட்டியது. அதற்காக உள்ளே வந்து பார்த்து விட்டு, திரும்பி வாசலுக்கு வந்தேன். அப்போதுதான் நீ மேற்கே போயிருக்க வேண்டும். எப்படியாவது நீ ஸௌக்கியமாக வீடு வந்து சேர்ந்தாயே; அதுவே போதுமானது. அந்தக் குதிரை உனக்கு அடங்காமல் முரட்டுத்தனமாக உன்னையும் சேர்த்து இழுத் திருந்தால், அவர்களோடு கூட நீயும் போய்ச் சேர்ந்திருப்பாய். இந்தப் பாழும் பட்டணத்தைவிட்டு வேறே எந்த ஊருக்காவது நாம் போய்விட்டால், இப்படிப்பட்ட அபாயமெல்லாம் இல் லாமல் போகும். அதிருக்கட்டும்; அவர்கள் ஏதோ அபாயத்தில் இருக்கிறார்கள் என்று நீ உன்னுடைய உயிரையும் மதிக்காமல் போய் விழுந்து காப்பாற்றி விட்டது சரியான காரியந்தான். அதன் பிறகு திருவல்லிக்கேணிக்குப் போய் வண்டி கொண்டுவரு வதற்கு வேறே மனிதரில்லாமல் அவர்கள் தவித்திருந்ததைக் கண்டு, நீ போய் வண்டி கொண்டு வந்ததும் பரோபகாரமான காரியந்தான். நீ அவ்வளவோடு வந்து விடாமல், அந்தப் பெண்க ளோடு வண்டியில் ஏறிக்கொண்டு வந்ததுதான் என் மனசுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நீ செய்த உதவிக்குப் பதிலுதவியாக அவர்கள் உன்னை வண்டியில் உட்காரவைத்துக் கொண்டு வந்தது போலவும், இதுவரையில் வண்டியிலேயே ஏறாதவன் போல அற்ப சந்தோஷியாக நீ அதில் ஏறி வந்தது போலவும் பிறர் எண்ணிக் கொள்ள மாட்டார்களா? நாம் ஏழைகளாக இருந்தாலும், நம்முடைய கண்ணியத்தையும் கௌரவத்தையும்

மாத்திரம் இழக்கக் கூடாது என்பதை மறந்த விட்டாய் போலிருக்கிறது!'' என்று அவனை அன்பாகக் கடிந்து பேசினாள்.

அந்த யௌவனப் புருஷன் அதுவரையில் தனது தாயினிடத்தில் எந்த விஷயத்தையும் ஒளித்தே பேசி அறியாதவனாக இருந்தாலும், அன்றைய தினம் அவனது மனம் கோகிலாம் பாளின் மீது சென்ற விஷயத்தை தான் தனது தாயினிடத்தில் வெளியிடக் கூடாது என்று மறைத்ததன்றி, தான் குதிரை வண்டியில் ஏறி வந்ததற்கும் ஒரு சமாதானம் கூறத் தொடங்கினான். அவர்கள் தங்களது வண்டிக்காரனை கடற்கரையிலேயே விட்டு வர நேர்ந்ததாகையால், அவர்கள் குதிரை வண்டியில் இரவில் தனியாக வர அஞ்சித் தன்னையும் துணையாக வரும்படி அழைத்தார்கள் என்று ஒரு முகாந்திரம் கூறினான். ஒருவன் தனது தாய் தந்தையரிடத்தில் உத்தம புத்திரனாகவும், சற்குணங்கள் நிறைந்த சீலனாகவும் ஒழுகிக் கீழ்ப்படிந்து நடந்து வருவது அவன் ஒரு ஸ்திரீயை மணந்து அவளோடு தனித்துப் பேச ஆரம்பிக்கும் காலம் முதல் கெட்டுப் போவதன்றி, அவனது நடத்தையும் பேதப்படுகிறது என்பது பெரும்பாலும் உலக அநுபவமாக இருந்தும் வருகிறது அல்லவா; அதற்கிணங்க, நமது கண்ணபிரான் அதுகாறும் தனது தாயினிடத்தில் பொய் சொல்லி அறியாத சீலனாக இருந்தும் அவனது இயற்கையான குணத்தை மாற்றி அவனை பேடியாக ஆக்கி விட்டது. அப்படி இருந்தும் கற்பகவல்லியம்மாள் தனது புத்திரனிடத்தில் அளவற்ற வாஞ்சை உடையவளாக இருந்தமையால், அவன் சொன்ன வரலாறுகளை எல்லாம் உண்மை யென்றே நம்பினவளாய், "அப்படியானால், இப்போது குதிரை வண்டியில் வந்த நீ அவர்களுடைய பங்களாவுக்குள்ளே போயிருந்தாயா? அங்கே யார் யார் இருக்கிறார்கள்? அந்தப் பெண்களின் தாயார் நிரம்பவும் கிழவியாக இருக்கிறார்களா? அல்லது, சாதாரண வயசுடையவராக இருக்கிறார்களா? அவர்கள் நம்முடைய குடும்ப விவரங்களையெல்லாம் விசாரித்தார்களா?'' என்று வினவ, அதைக் கேட்ட கண்ணபிரான் அவர்கள் தன்னைக் கடைசியில் அலட்சியம் செய்து விட்டுப் போய் விட்டார்களென்று சொல்ல மாட்டாதவனாய் இன்னொரு பொய் சொல்ல நினைத்து, "பங்களாவின் வாசலில் வண்டி வந்தவுடனே, அதை நிறுத்தச் செய்து, நான் இறங்கி

வந்து விட்டேன். அவர்களுடைய பங்களாவுக்குள், எனக்கு என்ன வேலையிருக்கிறது. அழைக்காத இடத்துக்கு அநாவசிய மாய்ப் போக எனக்கென்ன பைத்தியமா?'' என்றான்.

உடனே கற்பகவல்லியம்மாள் ஒருவாறு திருப்தியடைந்த வளாய், "சரி; அதுதான் மரியாதைக்கு அழகு. நீ நல்ல காரியம் செய்தாய்; அதிருக்கட்டும்; நேரமாகிறது; எழுந்து சாப்பிடவா'', என்று கூறினாள்.

அதைக்கேட்ட கண்ணபிரான், ''இன்றைக்கு, என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, பசியுண்டாகவில்லை; வயிறு மந்தமாக இருக்கிறது. இன்று ராத்திரி சாப்பிடாமல் லங்கணம் போட்டால்தான், நாளைக்கு உடம்பு வழிக்கு வரும்போலிருக் கிறது. ஆகையால் எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் இப்ப டியே போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன். நீங்கள் சாப்பிடலாம்'' என்று நயமாகக் கூறினான்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் மிகுந்த கவலைக் கொண்டு, ''ஏன் பசியில்லை? காலையில் நீ அப்படி விசேஷமாக எதையும் சாப்பிடவில்லையே! பகலில் இரண்டாவது வேளைக் கும் கொஞ்சமாகத் தானே ஆகாரம் கட்டிக் கொடுத்திருந்தேன். இப்படி சுத்தமாக வயிறு மந்திக்கும்படி நீ எதைச் சாப்பிட்டாய்; இப்போது பசிக்காவிட்டால் இன்னம் கொஞ்சநேரம் பொறுத் துச் சாப்பிட்டால், சரியாய்ப் போகிறது; ஒரு சோடா புட்டி வேண்டுமானால் வரவழைக்கட்டுமா? அதைச் சாப்பிட்டால் உடனே பசியெடுக்கும்'' என்று மிகுந்த கவலையும் துன்பமும் அடைந்தவளாகக் கூறினாள்.

கண்ணபிரான், ''இல்லை இல்லை. அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். பசி இல்லாதபோது சோற்றை வைத்துத் திணித்தால் தலைவலி போகத் திருகுவலி வந்த கதையாய், ஒன்று கிடக்க இன்னொரு துன்பம் வந்து விளையும்; ஆகையால் சும்மா படுப்பதே நல்லது. நாளைக் காலையில் உடம்பும் கலகலப்பாக இருக்கும். ஒரு வியாதியும் அணுகாது'' என்றான்.

கற்பகவல்லியம்மாள், ''மனிதன் எதை நிறுத்தினாலும் ராத்திரிச் சாப்பாட்டை மாத்திரம் நிறுத்தக்கூடாது; நாளைக்கு

நீ ஆபீசுக்குப் போக வேண்டியவன் அல்லவா? இன்று ராத்திரி நீ பட்டினி கிடந்தால், நாளைய தினம் ஆபீசுக்கு நடந்து போகவும், அங்கே சாயுங்காலம் வரையில் வேலை செய்யவும் வலுவிருக்குமா? அதெல்லாம் சரியல்ல. நீ வீட்டைப் பார்த்துக் கொண்டிரு; பக்கத்தில் இருக்கும் கடைக்குப் போய், 2 சோடா புட்டி வாங்கி வருகிறேன்'' என்று வற்புறுத்திக் கூறினாள்.

அதைக் கேட்ட கண்ணபிரான், தான் பட்டினியாய்ப் படுக்கத் தனது தாய் தன்னை விமாட்டாள் என்பதை உணர்ந்து, "சரி, இதற்காக நீங்கள் இந்த இருட்டில் கடைக்குப் போக வேண்டாம். இன்னம் ஒரு நாழிகை நேரம் கழித்து ஏதோ சாப்பிட முடிந்த வரையில் சாப்பிட்டுப் பார்க்கலாம்'' என்று ஸமரஸமாகக் கூற, அவள் அதற்கு இணங்கினாள்.

ஒரு நாழிகை நேரமும் கழிந்தது. கண்ணபிரானது உயிரும் மனதும் உணர்வும் கோகிலாம்பாளின் மீது சென்று லயித்திருந்தமையால், அவனது மனம் ஆகாரத்திலும், தூக்கத்திலும் செல்லாமல் மிகுந்த சஞ்சலத்தினால் உலப்பப்பட்டிருந்தது. அவனது வயிற்று மந்திப்பு மனோ வியாதியினால் ஏற்பட்ட பிணியாதலால் மனோவியாதிக்குத் தகுந்த சிகிச்சை செய்தாலன்றி, எவ்வளவு நேரம் கழிவதானாலும் வயிற்றில் பசியுண்டாவதாகத் தோன்றவில்லை. ஆனால் ஒருநாழிகை நேரம் கழிந்த உடனே கற்பகவல்லியம்மாள் மறுபடியும் தனது பாட்டைப் பாடத் துவக்கினாள். தான் அவளோடு சச்சரவு செய்வதில் பயனில்லையென்றும், எவ்வளவு நேரமானாலும், தான் உண்ணாமல் அவள் உண்ணாள் என்றும், முடிவில் அவளது பிடிவாதமே வெற்றி பெறும் என்றும் கண்ட கண்ணபிரான், "சரி; இன்னமும் வயிறு சரிப்படாமலேதான் இருக்கிறது. இருந்தாலும் பாதகமில்லை; சென்றவரையில் செல்லட்டும்'' என்று கூறியவண்ணம் எழுந்துபோய் இலையண்டையில் உட்கார்ந்துகொண்டு ஒரு கவளம் எடுத்து வாயில் வைக்க, அது உள்ளே செல்லமாட்டாமல் குமட்டல் எடுத்தது. அவன் சாதத்தைப் பிசறிப் பிசறி உருட்டி உருட்டி வாயில் வைத்து உண்பவன் போலப் பாசாங்கு செய்து ஏதோ சிறிதளவு உட்கொண்டுவிட்டவன்போல, "சரி; இதற்கு மேல் செல்லமாட்டேன் என்கிறது; அதிகமாகத் தொந்தரவு செய்

வது பிசகு" என்று கூறியவண்ணம் கையை உதறிக் கொண்டு எழுந்துவிட்டான்.

அவன் ஒருகவளம்கூடச் சாப்பிடவில்லை யென்பதைக் கற்பகவல்லியம்மாள் உணர்ந்துகொண்டாலும், அதற்கு மேலும், அவனை வற்புறுத்துவது ஒழுங்கல்லவென்று நினைத்தவளாய், மிகுந்த அதிருப்தியோடு சென்று அவனுக்குரிய படுக்கையை விரித்து வைத்துவிட்டு வந்து, சமயலறையிலிருந்த பாத்திரம் பண்டங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தலானாள்.

இலையை விட்டெழுந்த கண்ணபிரான் தனது கையை அலம்பிக்கொண்டபின் நேராகச் சென்று தனது சயனத்திற் படுத்துவிட்டான். அப்படிப் படுத்தவன் ஒரு நொடிப்பொழுதேனும் கண்களை மூடித் தூங்காமல் ஜ்வரநோய் கொண்டவன் போலப் புரண்டுபுரண்டு கிடந்தவண்ணமே அன்றைய இரவைக் கடத்தினான். கோகிலாம்பாளினது நினைவும் வடிவமுமே அவனது மனத்தைக் கொள்ளைகொண்டு அவனை நரக வேதனையில் ஆழ்த்திக் கொண்டிருந்தன. அவன் முக்கி முனகிப் பைத்தியக்காரன்போலப் பிதற்றியதைக் கண்டுகொண்ட கற்பகவல்லியம்மாள் மிகுந்த கவலையும், சஞ்சலமும் விசனமும் அடைந்தவளாய் அவனுக்கண்டையில் வந்து உட்கார்ந்து, உடம்பு என்ன செய்கிறதென்றும்; வைத்தியனை அழைக்கலாமாவென்றும், இவை போன்ற எண்ணிறந்த கேள்விகளை வாய் ஓயாமல் கேட்டுக்கொண்டே இருந்தது அவனது வேதனையை ஒன்றிற்குப் பத்தாகப் பெருக்க அநுகூலப்பட்டதேயன்றி, அதனால் அவனது துன்பத்தில் கடுகளவும் குறையவில்லை. அவன் அந்தப் பெண்களுக்கு உதவி செய்வதில் தனது உடம்பை அதிகமாக அலட்டிக் கொண்டிருப்பதன்றி, அந்த அபாயத்தைக் கண்டு அவன் நிரம்பவும் பயந்து கொண்டிருக்கிறான் என்றும், அவன் செய்த அபாரச் செய்கையைக் கண்ட ஜனங்களது ஓமலும் அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றும் தீர்மானித்துக் கொண்ட கற்பகவல்லியம்மாள் பொழுது விடிந்தவுடனே வைத்தியனையும் மந்திரவாதியையும் அழைத்து அவனுக்குத் தேவையான பரிகாரங்களைச் செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

அந்த இரவு முழுதும் அவர்கள் இருவருக்கும் பரம சங்கடமான இரவாக முடிந்தது. அவனது மனம் விரக வேதனையின் எழுச்சியால் தளர்வடையாமல் கொந்தளித்த வண்ணமிருந்தது. ஆனாலும், அவனது அங்கங்கள் யாவும் முற்றிலும் சோர்வடைந்து தத்தளித்துத் தள்ளாடின. அவனது கண்ணிமைகள் கட்டிலடங்காதனவாய்த் தாமாகவே மூடிக் கொண்டன. விடியற்காலை ஐந்து மணி சமயத்தில் அவன் சிறிதுநேரம் துயில்பவன்போலக் காணப்பட்டான் ஆனாலும், அவனது மனத்தில் பெருத்த நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கற்பகவல்லியம்மாளது நிலைமையோ நிரம்பவும் பரிதாபகரமாக இருந்தது. அவள் மிகுந்த புத்திர வாத்சல்யத்தைக் கொண்டவள் ஆதலால் அவனுக்கு ஏதோ தேக அசௌக்கியம் ஏற்பட்டு விட்டதே என்ற கவலையினாலும், அச்சத்தினாலும் கரைகடந்த சஞ்சலத்தில் ஆழ்ந்தவளாய், அவன் எந்த நேரத்தில் எதைக் கேட்பானோ அதைக் கொடுக்கத் தான் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்ற உறுதி கொண்டவளாய், மைந்தனது படுக்கையின் அண்டையில் உட்கார்ந்திருந்தாள். ஆனாலும், துயிலென்ற பெரும்பேய் தோன்றி அவளைப் பிடித்து வலுவாக அசைத்து உலுக்கத் தொடங்கியது. அவளது சிரம் அடிக்கடி கீழே வீழ்ந்து வீழ்ந்து நிமிர்ந்தது. அப்படிப்பட்ட மகா பயங்கரமான நிலைமையில் அவர்கள் இருக்க, மிகவும் நீண்டதாகத் தோன்றிய அந்தப் பொல்லாத இரவு கழிந்தது; சூரியன் உதயமாகித் தனது கிரணங்களைப் பரப்ப, அதற்குமேல் தான் தனது சயனத்திலிருப்பது சந்தேகத்திற்கு இடமாகும் என்று நினைத்த கண்ணபிரான் உடனே படுக்கையை விட்டு எழுந்தான். அவனது சரீரம் ஒரு வருஷகாலம் ஜுரத்தினால் பீடிக்கப்பட்டுக் கிடந்தவனது சரீரம்போல மெலிந்து சோர்ந்து தள்ளாடியது. கண்கள் குழிவு பெற்றிருந்தன. முகம் இரத்தமின்றி வெளுத்துத் தோன்றியது. தனது தேக அசௌக்கியத்தின் உண்மைக் காரணம் இன்னது என்பதைத் தனது தாய் கண்டுகொள்வாளோ என்கிற அச்சமடைந்த கண்ணபிரான் அதற்குமுன் எப்போதும் எப்படி இருப்பானோ அப்படிப்பட்ட நன்னிலைமையில் இருப்பவன் போல நடித்துத் தனது வழக்கத்தின்படி காலைக் கடன்களை முடிக்கத் தொடங்கித் தட்டுத் தடுமாறி அங்குமிங்கும் சென்று கொண்டிருந்தான்.

கற்பகவல்லியம்மாள் அவனது கேவலமான பலஹீன நிலைமையைக் கண்டு பதறிப்போய், எழுந்து நடவாமல் படுக்கையிலேயே இருக்கவும், தான் வைத்தியனைத் தருவிப்பதாகவும் அவனை நோக்கிக் கூற, அவன் தனது தேகத்தில் எவ்வித நோயுமில்லை என்றும் வைத்தியனை அழைக்க வேண்டாம் என்றும் வழக்கப்படிதான் அன்றைய தினமும் தனது கச்சேரிக்குப் போக வேண்டும் என்றும் உறுதியாகக் கூறினான். அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் கரைகடந்த துயரமும், சஞ்சலமும் கவலையும் கொண்டவளாய், அவனை அன்றைய தினம் வெளியில் அனுப்பினால் அவனது தேகப்பிணி விபரீதமாகப் பெருகிவிடும் என்று எண்ணி, அவனை எப்படியாகிலும் அன்று முழுதும் வீட்டிலேயே வைத்திருக்க வேண்டுமென்ற உறுதி கொண்டவளாய், அவனுக்கு உடனே ஏதேனும் சுடச்சுட நல்ல ஆகாரம் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்று நினைத்து, அவனைப் படுக்கையிலேயே இருக்கும்படி சொல்லிவிட்டு சமையலறைக்குள் போய் வென்னீர், காப்பி முதலியவைகளைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். தனது காலைக் கடன்களை முடித்துக்கொண்ட கண்ணபிரான் கூடத்தில் கிடந்த ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்து கால்களை அதன் கைப்பலகைகளில் நீட்டி விட்டவண்ணம் படுத்துக் கொண்டிருந்தான். அவனது விழிகள் விழித்தபடியே ஒரே நிலையில் நின்று வெறுவெளியை உற்று நோக்க, அவ்விடத்தில் அவனது அகக்கண்ணிற்கு மாத்திரம் புலப்பட்டவண்ணம் தாண்டவமாடிக் கொண்டிருந்த கோகிலாம்பாளென்னும் பேடன்னத்தின் மானஸீக வடிவத்தை நோக்கியபடியே அவன் அசைவற்று மெய்ம்மறந்து சோர்ந்து கிடந்தான். அடிக்கடி உண்டான நெடுமூச்சு அவனது தாயின் செவிகள் வரையில் எட்டி, அவளது மனதைத் தீயினும் கடிதாகக் கருக்கி வெதுப்பிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அவர்களது வீட்டின் வாசற்கதவை யாரோ தடதடவென்று தட்டி இடித்த ஓசையுண்டாயிற்று.

மைந்தனும் தாயும் தங்களது சஞ்சலங்களிலேயே ஆழ்ந்து மெய்ம்மறந்து கிடந்தார்கள். ஆதலால் சிறிது நேரம் வரையில் அந்த ஓசை அவர்களது செவிக்குப் புலனாகாமல் இருந்தது. வெளியில் வந்திருந்த மனிதர் முன்னிலும் அதிகமாக ஓங்கி தட

தடவென்று கதவை இடிக்கவே அந்த ஓசையைக் கேட்ட கற்பகவல்லியம்மாள் அதற்கு முன் எவரும் அவ்வாறு வந்து கதவை இடித்ததை அறியாதவளாதலால், ஒருவாறு வியப்ப டைந்தவளாய்ச் சமயலறையை விட்டுக் கூடத்திற்கு வந்து, "தம்பீ! யாரோ கதவைத் தட்டுகிற ஓசை கேட்கிறது! நாமிருப்பது ஒரு மூலைக்காடு; நம்மைத் தேடிக் கொண்டு இவ்வளவு தூரம் யார் வரப்போகிறார்கள்!" என்று வியப்பாகச் சொல்லிக் கொண்டே வாசற்பக்கம் போய்த் தாழ்ப்பாளை நீக்கிக் கதவைத் திறந்தாள்.

கதவை யாரோ இடிக்கிறார்கள் என்று தனது தாய் சொன்னதைக் கேட்ட கண்ணபிரான் அதை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், கோகிலாம்பாள் கோகிலாம்பாள் என்று ஜெபம் செய்வதிலேயே தனது சிந்தை முழுமையும் செலுத்தி உலகை மறந்து உட்கார்ந்திருந்தான். அந்தச் சமயத்தில் கற்பக வல்லியம்மாள் பைத்தியம் கொண்டவள்போல மிகுந்த ஆவ லோடும் ஆத்திரத்தோடும் தடதடவென்று வாசலிலிருந்து உள்ளே ஓடிவந்து, தணிவான குரலில் ரகசியமாகப் பேசிய வண்ணம், "தம்பீ! தம்பீ! வாசலில் ஒரு பெட்டி வண்டி வந்திருக் கிறது. அடுத்த பங்களாவிலிருக்கும் துபாஷ் முதலியாருடைய சம்சாரம் வந்திருக்கிறார்களாம். கதவை இடித்த வேலைக்காரிகள் இன்னார் வந்திருக்கிறார்கள் என்று என்னிடத்தில் சொல்லி விட்டு வண்டியிலிருக்கும் அந்த அம்மாளை அழைத்துவரப் போயிருக்கிறார்கள், அந்த அம்மாள் வந்தது என்ன காரணமோ தெரியவில்லை. நேற்றைய தினம் நீ அவர்கள் விஷயத்தில் ஏதாவது தவறாக நடந்து விட்டாயா? அதை என்னிடத்தில் சொல்லி முறையிட வருகிறார்களா? உண்மையை மறைக்காமல் சொல்" என்று மிகுந்த பதைப்போடு கூற, எதிர்பாராத அந்தச் செய்தியைக் கேட்ட கண்ணபிரான் கரைகடந்த வியப்பும் திகைப்பும் பிரமிப்பும் அடைந்து திடுக்கிட்டுத் தனது ஆசனத்தை விட்டு எழுந்து, "ஆ! துபாஷ் ராஜரத்ன முதலியாருடைய சம்சாரமா வந்திருக்கிறார்களாம்! அவர்களுடைய யோக்கியதை எங்கே நாமெங்கே! இது ஆச்சரியமாக இருக்கிறதே! நான் எவ் விதமான தவறும் செய்யவில்லையே! அவர்கள் வித்தியாசமான காரியம் எதற்கும் வந்திருக்க மாட்டார்கள். எல்லாவற்றிற்கும்

நீங்கள் போய் மரியாதை செய்து எதிர்கொண்டழைத்து வாருங்கள்'' என்று கூறினான்.

அவன் பேசி வாய்மூடு முன் கற்பகவல்லியம்மாள் வாசலிற்கு ஓடிக் கதவண்டை நின்று, அப்போது வாசற்படியில் ஏறிக் கொண்டிருந்த துபாஷ் ராஜரத்ன முதலியாரது மனையாட்டியான பூஞ்சோலையம்மாளை மகிழ்ச்சியும் புன்னகையும் காட்டிய முகத்தோடு பார்த்து, ''வாருங்கள் வாருங்கள்'' என்று மிகுந்த வணக்கமாகவும் மரியாதையாகவும் வரவேற்று, உள்ளார்ந்த அன்போடு உபசரிக்க, சுமார் நாற்பது வயதடைந்தவளாகத் தோன்றிய ஒரு ஸ்திரீ புன்னகை தவழ்ந்த இனிய முகத்தினளாய், ''வருகிறேன்'' என்று அன்பாக மறுமொழி கூறி வணங்கியபடி உள்ளே நுழைந்தாள். அந்த மாது நன்றாகச் சிவந்து தொந்தி தொப்பைகள் விழுந்த உடம்பைப் பெற்றவளாய்ப் பெண் யானை போல நடந்து வந்தாள். ஆனாலும், அவளது முகம் மாத்திரம் இளமையாகவும் வசீகரமாகவும் இருந்தது. அந்த அம்மாள் விதவை என்பதற்கு, நெற்றியில் திலகமும், கழுத்தில் திருமாங்கல்யமும், முகத்தில் மஞ்சளும் நீங்கலாக, மற்ற ஆடையாபரணங்கள் யாவும் ஏராளமாகக் காணப்பட்டன. காதுகளில் வைரக் கம்மல்கள் நட்சத்திரச் சுடர்கள் போல எரிந்து டால் வீசின. ஐந்நூறு ரூபாய்க்குமேல் பெறத்தக்க ஜரிகைப் புட்டாக்கள் நிறைந்த பட்டுச்சேலை அந்த அம்மாளது உடம்பின் அழகை ஆயிரமடங்கு பெருக்கிக் காட்டியது. வைரங்கள் பதிக்கப்பெற்ற ஏராளமான கல்கத்தா வளையல்கள் கைகளிரண்டிலும் காணப்பட்டன. கழுத்தில் வைரங்களும், கெம்புகளும், பச்சைகளும் சரம்சரமாகத் தொங்கிக் கொண்டிருந்தன. சிரத்தின் கூந்தல் நீளமாக விடுத்து முடியப் பெற்றிருக்க, அதன் முடிச்சு தேங்காய் அவ்வளவு பருமன் இடுப்பின் மீது தொங்கிக் கொண்டிருந்தது. அந்த ஸ்திரீ நெடுங்காலமாக மேம்பட்ட பதவியிலிருந்து சகலமான செல்வங்களையும் செல்வாக்கையும் சுகபோகங்களையும் சம்பூரணமாக அநுபவித்த சீமாட்டியென்பதை அவளது தோற்றத்தின் செழுமையும் மினுமினுப்பும் உடனே வெளிப்படுத்திவிட்டன.

அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த பூஞ்சோலையம்மாள் முன்னால் வர, அவளைத் தொடர்ந்து இரண்டு தாதிகள் பெருத்த

பெருத்த வெள்ளித் தாம்பாளங்கள் நிறைய ஏதோ சாமான்களை வைத்து நிரப்பி, அவற்றைப் பட்டு உருமாலைகளால் மூடி எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்து வந்தனர். சிறிய தாமரை போன்ற குஞ்சங்களைக் கையில் வைத்திருந்த இரண்டு காசா ரிகள் அடங்கி ஒடுங்கிப் பணிவாக வாசலில் நின்று கொண்டிருந்தனர்.

கற்பகவல்லியம்மாள் முன்னும், பூஞ்சோலையம்மாளும் தாதிகளும் பின்னுமாக உள்ளே சென்று தாழ்வாரத்தில் திரும்ப, அப்போது முற்றத்தில் இறங்கி, ஒரு பக்கமாக ஒதுங்கி நின்ற கண்ணபிரான் அவர்களைக் கண்டு ஒருவிதக் கிலேசமடைந்த வனாய்ப் புன்னகை செய்து, "வாருங்கள்" என்று கூறி, உபசரித்த பின் ஒரு பக்கமாக நழுவி மறைந்து நின்றான்.

கண்ணபிரானைக் கண்டதனாலும், அவன் உபசரித்ததைக் கேட்டதனாலும் மிகுந்த லஜ்ஜையடைந்து நாணித் தலைகுனிந்த பூஞ்சோலையம்மாள் நேராகக் கூடத்திற்குச் சென்றாள்.

அப்படிப்பட்ட மகா உயர்வான சீமாட்டியைத் தான் எப்படி உபசரித்து மரியாதை செய்வது என்பதை உணர மாட் டாமல் நிரம்பவும் தத்தளித்த கற்பகவல்லியம்மாள் அதுகாறும் கண்ணபிரான் உட்கார்ந்திருந்த சாய்மான நாற்காலியைச் சுட்டிக் காட்டி அதில் உட்கார்ந்துகொள்ளும்படி உபசரிக்க, பூஞ் சோலையம்மாள், "பரவாயில்லை; பரவாயில்லை; எங்கே உட்கார்ந்தாலென்ன! இப்படித்தான் உட்காருகிறேன்" என்று கூறிக்கொண்டு அங்கே தொங்கிய ஊஞ்சற் பலகையின் மேல் உட்கார்ந்தவண்ணம், "நீங்களும் உட்காருங்கள்; நீங்கள் நிற்க, நான் மாத்திரம் உட்காருவதா" என்று பதில் உபசாரம் செய்ய, கற்பகவல்லியம்மாள் அதை மறுக்க மாட்டாதவளாய் அங்கே கிடந்த ஒரு விசிப்பலகையின்மேல் உட்கார்ந்து கொண்டாள்.

தாதிகள் இருவரும் வெள்ளித் தட்டுகளை மூடியபடியே, கற்பகவல்லியம்மாள் இருந்த விசிப் பலகையில் விஸ்தாரமாக மிகுந்திருந்த இடத்தில் ஒருபக்கமாக வைத்துவிட்டு மரியாதை யாக ஒருபுறத்தில் ஒதுங்கி நின்றனர். கற்பகவல்லியம்மாள் தொடக்கத்தில் தனது மகன் அவர்களது விஷயத்தில் ஏதோ தவறு செய்தது பற்றி அந்தச் சீமாட்டி ஏதோ குறைகூற வந்திருப்பதாக

நினைத்தாளல்லவா? அந்த நினைவும் அச்சமும் கவலையும் உடனே நீங்கிப் போயின. அவர்கள் தங்களிடத்தில் நிரம்பவும் பிரீதியாகவும் சிநேக பாவமாகவும் வந்திருக்கிறார்கள் என்பது கற்பகவல்லியம்மாளுக்கு உடனே செவ்வையாக விளங்கி விட்டது. இருந்தாலும், அவர்கள் அவ்வளவு பொருட்களை எடுத்துக்கொண்டு வரவேண்டிய காரணம் என்ன என்பதை அறியமாட்டாமல் சிறிது நேரம் தவித்தபின் பூஞ்சோலை யம்மாளை அன்போடு பார்த்துப் புன்னகை செய்து, "இந்தத் தினத்தை நல்ல சுப தினமென்றுதான் மதிக்க வேண்டும்; இப்படிப்பட்ட மகா உயர்வான மனிதர்களுடைய தரிசனம் எங்களுக்குக் கிடைக்குமென்று நாங்கள் சொப்பனத்திலும் நினைத்து அறியோம். மகாலட்சுமியே நேரில் வந்து காட்சி கொடுப்பதுபோல இருக்கிறது! ஆகா! என்னுடைய உள்ளமும் உடம்பும் எப்படிக் குளிர்ந்து ஆனந்த பரவசமடைகின்றன தெரியுமா! அதை நான் எப்படித்தான் வெளியிட்டுச் சொல்லப் போகிறேன்! சந்தோஷலட்சுமி தாண்டவமாடும் மனுஷ்யாள் போகும் இடமெல்லாம் இப்படித் தான் ஆனந்தமயமாக நிரம்பிவிடும்போலிருக்கிறது" என்று மனப்பூர்வமான விசுவாசத்தோடும் உருக்கமாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள் அளவிறந்த களிப்பும் ஆனந்தமும் அடைந்தவளாய் நகைத்து, "சரி சரி! நன்றாகப் பேசுகிறீர்கள்! தங்கள் குமாரருடைய குண விசேஷங்களை நான் நேற்றையதினம் கேள்விப்பட்டபோதே, தாங்கள் அவருக்குமேல் ஆயிரம் மடங்கு நற்குணமுடையவர்களாக இருப்பீர்களென்று எண்ணிக்கொண்டே வந்தேன். நான் எண்ணியது சரியாகவே இருக்கிறது. இருந்தாலும், தாங்கள் இப்போது சொன்ன வார்த்தைகளுள் ஒன்றை மாத்திரம் மாற்றிச் சொன்னால் அது பொருத்தமாக இருக்கும். என்னிடத்தில் தாண்டவமாடும் சந்தோஷ லட்சுமியை நான் தங்களுக்குப் பரப்புவதாகச் சொல்லுவதைவிட, இந்த சந்தோஷ லட்சுமி தங்களால் கொடுக்கப்பட்ட பிச்சையென்றே சொல்ல வேண்டும். நேற்றைய தினம் தங்களுடைய குமாரர் மாத்திரம் அந்தக் கடற்கரையில் இல்லாதிருந்தால், இந்நேரம் என்னுடைய வீடு பாழ்த்து இருளடைந்து போயிருக்கும். உயிருக்குயிராக நான் மதித்து

வரும் என்னுடைய குழந்தைகள் இரண்டும் போன இடத்தில் புல் முளைத்துப் போயிருக்கும்! நானும் இப்போது தங்களைத் தரிசிப்பதற்குப் பதிலாக, எமனைத் தரிசித்துக் கொண்டிருப்பேன். ஆகா! நேற்றையதினம் தங்களுடைய குழந்தை செய்த உதவி சாதாரணமானதல்ல; அவரே எங்களுக்கு எல்லாம் உயிர் கொடுத்த வள்ளல்; அவராலேதான் எங்களுடைய குடும்ப விளக்கு அணையாமல் இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட பரம உபகாரியைப் பெற்றெடுத்த புண்ணியவதி யான தங்களைக் கண்டு தரிசித்து எங்களுடைய நன்றியறி தலையும், நாங்கள் தங்களுக்கு எவ்வளவு அதிகமாகக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துவிட்டு, இன்றைய தினம் தங்கள் பொருட்டாக நாங்கள் நடத்த உத்தேசித்திருக்கும் விருந்துக்குத் தங்களை அழைத்துக் கொண்டு போவதற்குமே நான் வந்தது'' என்று கூறியவண்ணம், தாதிகளை நோக்கிக் கண் சிமிட்டி ஏதோ சைகை செய்ய, அவர்கள் அந்தக் குறிப்பை அறிந்துகொண்டு, மெல்ல விசிப்பலகையண்டை வந்து தாம் பாளங்களின்மேல் மூடப்பட்டிருந்த உருமாலைகளை விலக்கி, அவைகளை கற்பகவல்லியம்மாளினண்டையில் மரியாதையாக நகர்த்தி வைத்தனர்.

கற்பகவல்லியம்மாள் தட்டுகளை நோக்கி மிகுந்த பிரமிப்படைந்தாள். ஜரிகைகள் தகதகவென்று மின்னிய பட்டு உருமாலைகளும், ஜரிகை வஸ்திரங்களும், எழுநூறு எண்ணூறு ரூபாய் பெறத்தக்க பட்டுச் சேலைகள், வைர மோதிரங்கள், வைரக் கடுக்கன்கள் முதலிய விலையுயர்ந்த பொருள்களும், மல் கோவா, சீமை இலந்தை, குடகு கமலா செவ்வாழை முதலிய பழ வகைகளும், தாம்பூலாதி சாமான்களும், வெள்ளியினாலான கிண்ணமும், பலவகைப்பட்ட சில்லரைச் சாமான்களும் நிறைந் திருந்த அந்த இரண்டு வெள்ளித் தட்டுகளையும் மாறி மாறி உற்று நோக்கிய கற்பகவல்லியம்மாள் தனது கண்களையே நம் பாமல் இரண்டொரு நிமிஷ நேரம் திகைத்துத் தத்தளித்தாள். அபாரமான மாளிகைகளையும், அபரிமிதமான நவரத்னக் குவியல்களையும் பெற்ற பூஞ்சோலை அம்மாளை நோக்கி, குசேலன்போல நிரம்பவும் ஏழ்மை நிலையிலிருந்த அந்த அம்மாள் கரைகடந்த பிரமிப்பும் வியப்புமடைந்து கிலேசத்

தோடு புன்னகை செய்து, "இதெல்லாம் யாருக்கு? எனக்கா? இந்தத் தட்டுகளில் இருக்கும் பொருள் சுமார் பதினாயிரம் ரூபாய் தாளும் போலிருக்கிறதே! இவ்வளவு பெருத்த செல்வத்தை ஏற்றுக்கொண்டு நாங்கள் என்ன செய்யப்போகி றோம்? இவ்வளவு உயர்வான சாமான்களை வைக்கத் தகுந்த பெட்டி பேழைகள்கூட எங்களிடத்தில் இல்லையே! இவைகளை வைத்து ஓர் இரவு காப்பாற்ற எங்களால் ஆகுமா! இவைகளெல் லாம் எங்களுக்கு வேண்டாமம்மா! தங்களுடைய அன்பும் பட்சமும் என்றைக்கும் மாறாமல் இந்த ஏழைகளின்மேல் இருக்குமானால் அதுவே ஒரு கோடி பெறும்" என்று விநயமாக மொழிந்தாள்.

**பூஞ்சோலையம்மாள் :** (நயமாக வற்புறுத்தியும் பணி வாகவும் பேசத் தொடங்கி) தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. நாங்கள் செய்யும் மரியாதையைத் தாங்கள் வேறே வித்தியா சமாக நினைத்துக்கொள்ளக் கூடாது. தங்களுடைய புத்திரர் நேற்றைய தினம் செய்த உதவி சாதாரணமானதல்ல. எங்களு டைய உயிரையெல்லாம் அவர் காப்பாற்றியிருக்கிறார். அவ ருக்கு நாங்கள் எங்களுடைய ஆஸ்தி முழுவதையும் கொடுத் தால்கூட, அது சமமான கைம்மாறாகாது; அதுவும் தவிர, நேற் றையதினம் குதிரைவண்டியில் வந்த தங்களுடைய குமாரர் பங்களாவின் வாசலில் இறங்கினாராம். இறங்கினவர் உள்ளே வருவாரென்று நினைத்து வண்டிக்காரன் வண்டியை உள்ளே ஓட்டிக்கொண்டு வந்தானாம். என்னுடைய குழந்தைகள் அறியாத சின்ன பெண்கள். ஆகையால் அவரோடு பேச வெட் கப்பட்டு அவருக்கு ஓர் உபசார வார்த்தைக்கூடச் சொல்லாமல் வந்துவிட்டார்களாம். அந்த விவரத்தைக் கேட்டவுடனே; என் மனம் பட்டபாடு இவ்வளவு அவ்வளவல்ல. இரவெல்லாம் அந்த நினைவே என் மனசில் உறுத்திக் கொண்டிருந்தது. அதற்காகவே, நான் பொழுது விடிந்தவுடனே புறப்பட்டு ஓடிவந்தேன். எங்க ளுக்கு ஈசுவரன் அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். தங்களுடைய கிருபையால் எங்களுக்கு ஒரு குறைவும் கிடையாது. நாங்கள் யாரையாவது பார்க்கப் போனால், வெறுங்கையோடு போகிறதே இல்லை. இப்படித்தான் எதையாகிலும் கொண்டுபோய்க் கொடுத்து எங்களுடைய

மரியாதையைத் தெரிவித்துக் கொள்ளுவது வழக்கம். தங்களுடைய புத்திரர் எங்களுக்குச் செய்த உதவி எவ்வளவு பெரியது என்பதையும், அதை நாங்கள் எவ்வளவு அதிகமாக உணருகிறோம் என்பதையும் சொற்பமாவது செய்கையால் காட்ட வேண்டும் என்றே நான் இந்தத் தாம்பூலத்தைக் கொடுக்கிறேன். தாங்கள் மறுக்காமல் இதை ஏற்றுக்கொண்டால், நேற்று தினம் தங்களுடைய குமாரர் எங்களுடைய வயிறுகளில் பால் வார்த்ததைவிட நூறு மடங்கு அதிகமாக எங்களுடைய மனசு இப்போது குளிரும் – என்று நிரம்பவும் பணிவாகவும் மிக மிக உருக்கமாகவும் நயந்து வேண்டிக் கூறினாள்.

கற்பகவல்லியம்மாள் ஏழ்மை நிலைமையில் இருப்பவள் ஆனாலும், பிறரது பொருளை விஷமாக மதித்து விலக்கக்கூடிய உத்தம குணம் உடையவளாய், அதுவரையில் அயலாரிடத்தில் ஒரு துரும்பைக்கூடப் பெற்று வராமலிருந்தாள். அப்படி இருந்தும், ஒரு மகாராஜாவின் பட்டமகிஷிக்கு ஒப்பிடத்தக்க மேம்பாடும், செல்வமும், செல்வாக்கும் உடைய அந்தப் பூஞ் சோலையம்மாள் தங்களை அவ்வளவு தூரம் மதித்து வந்து அன்பையும் மரியாதையையும் சொரிந்து நிரம்பவும் நயந்து வேண்டும்போது அவர்களது வேண்டுகோளைப் பிடிவாதமாக மறுப்பது கண்ணியமானது அல்ல என்று நினைத்த கற்பகவல்லி யம்மாள், "என்னுடைய மகன் ஏதோ ஓர் அற்ப உதவி செய்வதைக் கருதி தாங்கள் எங்களை இவ்வளவு அபாரமாகப் பெருமைப்படுத்துவதைக் காண்பது எனக்கு நிரம்பவும் லஜ்ஜையாக இருக்கிறது. ஒருவருக்கு ஓர் அபாயம் நேரிட்டால், அதை மற்றவர் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பார்களா? எப்படிப்பட்ட ஈவிரக்கமற்ற பாவியாக இருந்தால்கூட, அவன் அந்த ஆபத்தில் உதவி செய்துதான் இருப்பான். அப்படிச் செய்யா விட்டால், அவனை மனிதன் என்று சொல்லலாமா? கேவலம் மிருகம் என்றல்லவா மதிக்க வேண்டும். இந்த விஷயத்தில் என்னுடைய பையன் மனிதருக்கு மனிதர் செய்யவேண்டிய கடமையைத்தானே நிறைவேற்றினான். அதற்கு இவ்வளவு பெருமைப்பாடு நடத்தவேண்டுமா?" என்றாள்.

பூஞ்சோலையம்மாள், "தாங்கள் சொல்வது நியாயமான சங்கதிதான். அவர் எப்படித் தம்முடைய கடமையைச் செய்

தாரோ, அதுபோல நாங்களும் எங்களுடைய கடமையையே செலுத்துகிறோம்; சுவாமி கோவிலுக்கு நாம் போகிறோம்; வெறுங்கையோடே போகிறோமா? சகலமான அண்டபிண்ட சராசரங்களையும் சிருஷ்டித்து, நம்மையெல்லாம் படைத்து, நமக்கு வேண்டிய ஆகாராதிகளையெல்லாம் நிருமாணித்து வைத்திருக்கும் சர்வேசுவரனை நாம் பூஜிக்கையில் தேங்காய்ப் பழம் முதலிய நிவேதனங்களை வைத்து நாம் நமது பக்தியைக் காட்டுகிறோம். உலகத்திலுள்ள எல்லாத் தேங்காய்களையும் பழங்களையும் சிருஷ்டித்த ஈசுவரனுக்கு, நாம் ஒரு தேங்கா யையும் இரண்டு பழங்களையும் நிவேதனம் செய்யும் விஷ யத்தை நாம் ஆழ்ந்து நினைப்போமானால், அது கடவுளைப் புரளி செய்வது போலவும், அவருடைய சர்வ வல்லமைத் தன் மையை இழிவுபடுத்துவதுபோலவும் ஆகும். எப்படி என்றால், கேவலம் ஒரு தேங்காயையும் இரண்டு வாழைப் பழங்களையும் நாம் கொடுக்க மாட்டோமா என்று தெய்வம் எதிர்பார்த்துப் பட்டினி கிடப்பது போலவும், நாம் கடவுளுக்கு உதவி செய்வது போலவும் அந்த விஷயம் தோன்றுகிறதேயென்று, நாம் அந்த மரியாதையை நிறுத்தலாமா? உலகத்தையெல்லாம் படைத்த கடவுளுக்கு அந்த உலகத்திலும் பெரிய வஸ்துவைத் தேடிப் பிடித்தல்லவா நாம் நிவேதனம் செய்ய வேண்டும்? அது நம்மால் ஆகக்கூடிய காரியமா? அப்படித்தான் செய்யவேண்டுமென்ற கட்டாயம் ஏற்படுமானால், நாம் ஒன்றையும் செய்யாமல் சும்மா இருந்துவிட வேண்டியதாகத்தானே முடியும்; அப்படி இருந் தாலும், நாம் நம்முடைய கடமையைச் செய்தே தீரவேண்டும். கடவுளுடைய சிருஷ்டி அபாரமாக இருந்தாலும், அதில் ஒவ் வொரு மனிதனுக்கும் கிடைப்பது ஓர் அணுவாதலால், அந்த அணுவிலும் ஓர் அணுவைத்தான் நாம் ஈசுவரனுக்கு நிவேதனம் செய்யச் சாத்தியப்படும். ஈசுவரனுடைய பசியை நிவர்த்திப்ப தற்காக நாம் நிவேதனம் செய்வதாக இருந்தால், அவருக்குத் தகுந்தபடி அண்டபிண்ட பிரம்மாண்டங்களையெல்லாம் உருண்டை உருண்டையாக உருட்டி உண்பிக்க வேண்டும். அவருக்கு நம்மைப்போலப் பசி இருக்குமோ என்பதே முதலில் சந்தேகம். அப்படிப் பசி இருந்தாலும், அதை நிவர்த்தித்துக் கொள்ளும் திறமையுடையவர் அவரேயன்றி வேறல்ல. நாம்

செய்யும் காரியம், நம்முடைய மனசிலுள்ள பயபக்தி விசுவாசத்தையும் நன்றியறிதலையும் வெளிப்படையாகக் காட்டுவதற்கே அன்றி வேறல்ல. அதுபோல நாங்கள் இந்த வஸ்துக்களைத் தங்களிடம் சேர்ப்பிப்பது, தங்களுடைய இல்லா மையை நீக்கவேண்டுமென்ற கருத்தோடு செய்யப்படுவதுமல்ல; தங்களுடைய குமாரர் செய்த உதவிக்குச் சமமான பெறுமானமாக எண்ணிக் கொடுக்கப்படுவதுமல்ல. எங்களுடைய மனம் தங்களுடைய விஷயத்தில் எவ்வளவு தூரம் கடமைப்பட்டி ருக்கிறதென்பதை வெளிப்படையாகக் காட்டுவதற்கே நாங்கள் இந்தத் தாம்பூலத்தைக் கொடுப்பது. தாங்கள் எப்படியும் இதை ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும்'' என்று நயமாகவும் தேன்போல இனிமையாகவும் மொழிய, அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் சந்தோஷப் பெருக்கினால் நகைத்து, "சரி; சரி; நன்றாகச் சொல்லுகிறீர்கள்! இவ்வளவு பெரிய மரியாதை களுக்கே நாங்கள் அருகமற்றவர்கள் என்று நான் சொன்னால், கடவுள் உலகையெல்லாம் படைத்து நம்மைக் காத்து நமக் கெல்லாம் செய்யும் உதவிக்கும், என் மகன் செய்த அற்ப உதவிக் கும் உவமானம் சொல்லி, இன்னமும் எங்களை அதிகமாகப் பெருமைப் படுத்துகிறீர்கள். சரி சரி; நான் தங்களுடைய சொற் படி ஏற்றுக்கொள்வதைத் தவிர, வேறே ஏதாகிலும் பேசினால், மரியாதை அதிகப்படுகிறதேயன்றிக் குறையாது போலிருக்கிறது. இருந்தாலும் என் மனசில் ஒரு விஷயம் மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. என் மகன் தான் ஏதோ அபாயத்தில் உதவி செய்தானென்று அவனுக்கு நீங்கள் சன்மானம் செய்கிறீர்கள். இதில் விலையுயர்ந்த சேலை முதலியவைகளையெல்லாம் வைத் திருக்கிறீர்களே. நான் என்ன காரியம் செய்துவிட்டேன்? ஒரு மூலையில் விழுந்த கிடந்த எனக்கென்ன சன்மானம் வேண்டி யிருக்கிறது'' என்று தமாஷாகக் கூறினாள். அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள், "இப்படிப் பட்ட பரோபகார குணமும், தரும சிந்தையும், சகலமான நற்குணங்களும் பொருந்திய சற்புத்திரரைப் பெற்ற உத்தமியான தங்களுக்குத்தானே முதலில் மரியாதை செய்ய வேண்டும். தாங்கள் எவ்வித ஆட்சேபணையும் சொல்லாமல் இவைகளை ஏற்றுக்கொள்வதன்றி, தாங்களும் தங்களுடைய புத்திரரும் இப்போதே புறப்பட்டு எங்களுடைய

பங்களாவுக்கு வந்து எங்களைக் கௌரதைப் படுத்த வேண்டும்" என்று நயமாக இறைஞ்சிக்கூற; அதைக்கேட்ட கற்பக வல்லியம்மாள் அந்த வேண்டுகோளை மறுக்க மாட்டாமலும், உடனே ஒப்புக் கொள்ள மாட்டாமலும் இருந்து சிறிது நேரம் தவித்தவண்ணம் ஏதோ சிந்தனை செய்து, "இம். சரி; இவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டேன். ஆனால், விருந்துக்கு வருகிற விஷயத்தில் ஓர் இடைஞ்சல் இருக்கிறது. என்னுடைய மகன் நேற்றையதினம் இரவில் வீட்டுக்குத் திரும்பி வந்தபின் நிரம்பவும் தேக அசௌக்கியப்பட்டு, ஆகாரமில்லாமலும் தூக்கமில்லாமலும் இரவெல்லாம் நிரம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவன் இப்போதுதான் தட்டுத்தடுமாறி எழுந்து உட்கார்ந்தான். இராத்திரி முழுவதும் நானும் கண்மூடாமல் அவனுக்குப் பக்கத்திலேயே இருந்து அவஸ்தைப்பட்டு, இப்போதுதான் சமையலறைக்குப்போய் அவனுக்கு வேண்டிய காப்பி முதலிய ஆகாரங்களைத் தயாரித்தேன். தாங்களும் வந்தீர்கள். பையனுக்கு இப்போதாவது சொற்ப ஆகாரம் கொடுத்து உடம்பை அலட்டாமல் கொஞ்சநேரம் படுத்திருக்கச் செய்ய வேண்டுமென்று நினைத்தேன். அதோடு, அவன் 10 மணிக்கு ஆபீசுக்குப் போக வேண்டியவனாகவும் இருக்கிறான்; இந்தச் சமயத்தில் தாங்கள் விருந்துக்கு அழைக்கிறீர்கள். தங்களுடைய மனசுக்கு மாறாக நடப்பதும் சரியல்ல. சந்தர்ப்பம் இப்படி இருக்கிறது. தாங்கள் எப்படிச் சொன்னாலும் அப்படி நடந்து கொள்ளத் தடையில்லை" என்று ஈரொட்டாகப் பேசினாள்.

உடனே பூஞ்சோலையம்மாள், "அப்படியா சங்கதி! தங்களுடைய புத்திரர் எப்படி அசௌக்கியப்பட்டு இரவெல்லாம் கஷ்டப்பட்டாரோ, அதுபோலவே என்னுடைய மூத்தபெண் பங்களாவுக்கு வந்தது முதல் பொழுது விடியும் வரையில் தேக அசௌக்கியத்தினால் மிகுந்த வேதனையடைந்து முக்கி முனகி மகா சங்கடப்பட்டாள். ஆனால் அவள் பொழுது விடிந்தவுடனே எழுந்து தன்னுடைய உடம்பின் கோளாறையும் கவனியாமல், தங்களையும், தங்களுடைய புத்திரரையும் எப்படியாவது அழைத்து வந்து விருந்துண்பித்து மரியாதை செய்ய வேண்டுமென்று சகலமான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறாள். வேறே யாராவது அனுப்பினால் தாங்கள் ஒருகால் வராமலிருந்து

விடுவீர்களோ என்ற சந்தேகத்தினால், அவள் என்னையே அனுப் பினாள். நான் சந்தோஷ சங்கதியே கொண்டுவர வேண்டு மென்று அவள் சொல்லியனுப்பி இருக்கிறாள். ஆகையால் நான் இப்போதுபோய் நீங்கள் வரவில்லையென்று சொன்னால், அவளுடைய மனசு நிரம்பவும் கஷ்டப்பட்டுப் போகும். ஆனால் தாங்கள் சொல்வதைப் பார்த்தால், தங்களையும் நான் வற்புறுத்துவது சரியாகத் தோன்றவில்லை. என்னுடைய நிலைமை தரும சங்கடமானதாக இருக்கிறது. இதை ஒருவிதமாக முடிவு செய்ய நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். எல்லாவற் றிற்கும் தங்களுடைய புத்திரரோடு கலந்து யோசனை செய்து, அவருடைய தேகஸ்திதி சரியாக இருந்தால், இன்றைக்கு மாத்திரம் ரஜா எழுதி ஆபீசுக்கு அனுப்பிவிட்டு, எங்களுடைய பங்களாவுக்கு வர சௌகரியப்படுமா என்பதைக் கேட்டுப் பாருங்கள். எங்களிடத்தில் எத்தனையோ குமாஸ்தாக்களும் ஆள்களும் இருக்கிறார்கள். எவனாவது ஒருவனிடத்தில் ரஜாக் கடிதத்தைக் கொடுத்து உடனே ஆபீசுக்கு அனுப்பிவிடச் செய்வோம்'' என்றாள்.

அதைக் கேட்ட கற்பகவல்லியம்மாள், ''அப்படியானால் தங்களுடைய குழந்தையும் நோயாகவா இருந்தது! சரி சரி! நேற்று கடற்கரையில் உண்டான மன அதிர்ச்சியால் இவர்களுடைய உடம்பு நிரம்பவும் நெகிழ்ந்து போயிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். தலைக்கு வந்த அவகேடு தலைப்பாகையோடு போயிற்றென்பது போல, நம்மெல்லோருக்கும் மலைபோல வந்த விபத்தை ஈசுவரன் தான் பனிபோல விலக்கி வைத்தான்; இவ்வளவாகிலும் நாம் சந்தோஷமாக ஒருவரையொருவர் பார்க்கும்படியாக ஏற்பட்டதே! அது சுவாமியின் செயல்தான் சரி, இருக்கட்டும். தாங்கள் சொல்லுகிறபடி, நான் போய் பையனிடத்தில் கேட்டுப் பார்க்கிறேன்'' என்று கூறியவண்ணம் அவ்விடத்தை விட்டெழுந்து தாழ்வாரத்திலிருந்து ஒரு காமரா அறைக்குள் நுழைந்து உட்கார்ந்திருந்த கண்ணபிரானிடம் போய்ச் சேர்ந்தாள். அந்த யௌவனப் புருஷன் பூஞ்சோலை யம்மாள் என்ன ஜோலியாக வந்திருக்கிறாளோ வென்பதை உணரவேண்டுமென்ற பேராவல் கொண்டவனாய் அந்த அறைக் குள் நுழைந்து கதவிற்கப்பால் கிடந்த ஒரு நாற்காலியில் உட்

கார்ந்தவண்ணம், கூடத்தில் நடந்த சம்பாஷணை முழுவதையும் சிறிதும் விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தான். பூஞ்சோலை யம்மாள் வெள்ளித் தட்டுகளில் விலையுயர்ந்த பொருட்களை வைத்துக் கொணர்ந்து கொடுத்ததையும் தங்களை விருந்திற்கு வரும்படி அழைத்ததையும் உணர்ந்து ஆநந்தபரவசமடைந்தான். அவர்களது பங்களாவிற்குப் போய் அவர்களோடு பேசிப் பழகும்படியான சந்தர்ப்பம் தனக்குக் கிடைக்கப் போகிறதா என்று அவன் கொண்டிருந்த ஏக்கம் முற்றிலும் கரை கடந்த மகிழ்ச்சியாக மாறியது. பூஞ்சோலையம்மாள், தான் கோடீசு வரனது பெண்சாதி என்பதைப் பாராட்டாமல், பரம ஏழை யாகிய தங்களிடத்தில் வந்து நிரம்பவும் பணிந்து நயந்து பேசியதைக் காண அவன் மிகுந்த வியப்பும் களிப்புமடைந்தான். ஆனால் தனது தாய் பூஞ்சோலையம்மாளிடத்தில் அற்பத்தன மாக நடந்துகொள்ளாமல் கம்பீரமாகவும், பெருந்தன்மையாக நடந்துகொண்டது அவனுக்கு முற்றிலும் திருப்திகரமாக இருந்தது. கடைசியில் கோகிலாம்பாளும், தன்னைப் போலவே, இரவு முழுதும் தேக அசௌக்கியத்தினால், துன்புற்றிருந்தார் களென்ற செய்தியைக் கேட்க, அவனது மனம் பதறியதானாலும் தான் அவள் மீது விரகவேதனை கொண்டு தவித்தது போல, ஒருகால், அவளும் தன்னைக் கண்டு மோகித்திருப்பாளோ என்ற சந்தேகமும் அவனது மனதில் தோன்றித் தோன்றிப் பெருத்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் உண்டாக்கியது; முதல்நாள் மாலையில் தொடங்கி அதுகாறும் அவனது மனதையும் உடம்பையும் வதைத்துப் புண்படுத்திய வேதனைக ளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்து போயின. அவனது உடம்பில் அப்போது எவ்வித அவஸ்தையும் இருப்பதாகத் தோன்றவில்லை. தான் அன்றைய தினம் ரஜாவுக்கு எழுதி ஓர் ஆளிடத்தில் கடிதத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு, அவர்களது பங்களாவிற்குப் போவதே முடிவென அவன் தீர்மானித்துக் கொண்டான். அன்றைய தினம் எப்படியும் அவர்களது ஜாகைக் குத் தான் போய் மறுபடியும் கோகிலாம்பாளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் ஆவலுமே அப்போது அவனை வதைத்துக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் உள்ளே வந்த தனது தாயைக் கண்ட கண்ணபிரான், தனது மன நிலைமையை

வெளியில் காட்டாமல் மறைத்துக் கொண்டு ஒன்றையும் அறியாத பரம சாதுவைப்போலத் தனது நெற்றியில் கையை வைத்துக் குனிந்தவண்ணம் உட்கார்ந்திருந்தான். அப்படி இருந்த வன் உடனே நிமிர்ந்து, "என்ன அம்மா! என்ன சொல்லுகிறார் கள்? நான் அவர்களிடத்தில் ஏதோ அயோக்கியத்தனமாக நடந்திருக்கிறேனென்று ஆரம்பத்தில் நீங்கள் சந்தேகப் பட்டீர்களே! அவர்கள் என்மேல் என்ன குற்றம் சுமத்துகி றார்கள்?" என்று புன்னகையோடு கேட்டான்.

நற்குணமும் நல்லொழுக்கமும் நிறைந்த தனது புத்திரனது நடத்தையைக் குறித்துத் தான் ஆரம்பத்தில் சந்தேகப்பட்டது தவறென உணர்ந்து வருந்திய கற்பகவல்லியம்மாள் மிகுந்த கிலே சமடைந்து மெதுவான குரலில் அன்பாகப் பேசத் தொடங்கி, "இல்லை தம்பீ! கோபித்துக் கொள்ளாதே; இவர்கள் தக்க பெரிய மனிதர்கள். இவர்களிடத்திலெல்லாம் நாம் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும். நீ அறியாத குழந்தையல்லவா; ஏதாவது தவறான காரியத்தைச் செய்திருப்பாயோ என்று கவலைப்பட்டு நான் அந்தச் சந்தேகத்தைக் கொண்டேன். அதிருக்கட்டும், இவர் கள் சொன்னவையெல்லாம் நீ கேட்டுக் கொண்டிருந்தாயா? வெள்ளித் தட்டுகளில் பிரமாதமான சாமான்களையெல்லாம் அள்ளிக்கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள்! இன்றைய தினம் நமக்காக இவர்களுடைய பங்களாவில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்; அதற்காக நம்மை வருந்தி அழைக்கி றார்கள். உனக்கு உடம்பு அசௌக்கியமாக இருக்கிறதென்று சொல்லிப் பார்த்தேன். இவர்களுடைய மூத்த பெண்ணுக்கும் இரவெல்லாம் உடம்பு தொந்தரவாம். அதைக்கூட லட்சியம் பண்ணாமல், அந்தக் குழந்தை இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறதாம். இவர்கள் வற்புறுத்தி அழைக்கிறார்கள். உன்னைக் கேட்டுக்கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டு வந்தேன். இவர்கள் காத்திருக்கிறார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட கண்ணபிரான் எவ்வித மறுமொழியையும் சொல்லமாட்டாமல் சிறிது நேரம் தயங்கியிருந்தபின் தனது தாயைப் பார்த்துச் செல்லமாகக் கொஞ்சிப் பேசத் தொடங்கி, "எனக்கென்ன தெரியும்? நீங்களே சொல்லுங்களேன்? அவ்வளவு

தேக அசௌக்கியத்தோடிருப்பவர்கள் அதை லட்சியம் பண்ணா மல் எவ்வளவு பாடுபட்டு விருந்து தயாரித்திருக்கிறார்கள். அதைச் சாப்பிடுவதற்கு உடம்பு சரிப்படவில்லையென்று நாம் சொல்வது அழகாயிருக்காதென்று நினைக்கிறேன். எனக்கு உடம்பிலே இப்போது ஒரு கோளாறுமில்லை. மெல்ல மெல்ல நாம் அங்கே போய் விடலாம். ஆனால் ஆபீசுக்கு ரஜாக் கடிதம் எழுதி அனுப்ப வேண்டும். அதை யார் கொண்டுபோய் கொடுக் கிறது!'' என்று வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோலத் தன் விருப்பத்தை நயமாய் வெளியிட்டான்.

கற்பகவல்லியம்மாள், "அதையும் இவர்களே சொல்லி விட் டார்கள் – இவர்களுடைய வீட்டில் எத்தனையோ குமாஸ் தாக்களும் ஆள்களும் இருக்கிறார்கள்; யாராவது ஒருவனிடத்தில் கடிதத்தைக் கொடுத்து அனுப்புவதாகச் சொல்கிறார்கள்'' என்றாள்.

கண்ணபிரான், "அந்த அற்பக் காரியத்துக்கெல்லாம் நாம் இவர்களுடைய தயவை எதிர்பார்த்தால் நம்முடைய கண்ணியம் குறைந்து போகும். நாமே யாராவது ஒரு கூலியாளைப் பிடித்து, அவனிடத்தில் கடிதத்தைக் கொடுத்தனுப்பிவிட்டு, ஸ்நானம் முதலியவைகளை முடித்துக் கொண்டு சரியாகப் பத்து மணிக்கு அங்கே போவோம். இவர்கள் முன்னால் போகட்டும்'' என்றான்.

அதைக்கேட்டுக் கொண்ட கற்பகவல்லியம்மாள் அவ் விடத்தை விட்டு, கூடத்திற்கு வந்து சேர்ந்து பூஞ்சோலையம் மாளை நோக்கிப் புன்னகை செய்து, "நாங்கள் இன்றைக்கு அவசியம் வந்துதான் ஆக வேண்டுமோ?'' என்றாள்.

பூஞ்சோலையம்மாள் இனிமையான மலர்ந்த முகத்தி னளாய், "ஆம் இந்த விருந்து இன்றையதினம் நிறைவேறா விட்டால், என்னுடைய மூத்த குழந்தையின் மனசு நிரம்பவும் கஷ்டப்பட்டுப் போய்விடும். எப்படியாவது இன்றைக்கு நீங்கள் வந்தால்தான் எங்களுக்கெல்லாம் பரம சந்தோஷமாக இருக்கும்'' என்றாள்.

அதைக் கேட்ட கற்பகவல்லியம்மாள், "சரி; எங்களை இவ்வளவு தூரம் வற்புறுத்தி இவ்வளவு பிரியமாக யார் அழைக்கப் போகிறார்கள்! அதிலும் தங்களைப் போன்ற பிரபுக்

களெல்லாம் எங்களைப்போன்ற சாதாரண மனிதர்களுடைய வீட்டுக்கு வருவதும், எங்களுக்கு இவ்வளவு தூரம் உபசாரம் செய்வதும் அபூர்வமான விஷயம். ஆகையால், தங்களுடைய பிரியப்படியே நாங்கள் வருகிறோம். ஆனால் எங்களுக்கு இன்னம் ஸ்நானம் முதலிய எந்தக் காரியமும் ஆகவில்லை; அவைகளையெல்லாம் முடித்துக் கொண்டு சரியாகப் பத்து மணிக்கு நாங்கள் தங்களுடைய பங்களாவுக்கு வந்து சேர்ந்து விடுகிறோம். பையனுடைய ஆபீசுக்கும் ரஜாக் கடிதம் எழுதி அனுப்ப வேண்டும்; அதையும் இங்கேயே எழுதி பக்கத்துத் தெருவிலிருந்து அதே ஆபீசுக்குப் போகும் இன்னொரு குமாஸ் தாவிடத்தில் கொடுத்தனுப்பி விட்டு வருகிறோம்'' என்றாள்.

அதைக் கேட்ட பூஞ்சோலையம்மாள் மிகுந்த களிப்பும் பூரிப்புமடைந்தவளாய், ''சரி; அவ்வளவாகிலும் ஒப்புக்கொண்டீர் களே! அதுவே போதுமானது. சரியாக ஒன்பதரை மணிக்கு நாங் கள் எங்களுடைய பெட்டி வண்டியை அனுப்பி வைக்கிறோம்; தாங்களிருவரும் அதிலேயே வந்து விடலாம்; நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். அவசியம் தாங்கள் வர வேண்டும்'' என்று அன்பாக வற்புறுத்திக் கூறியவண்ணம் எழுந்து விடை பெற்றுக் கொண்டு, தனது வேலைக்காரிகளையும் அழைத்துக் கொண்டு வெளியில் போக, கற்பகவல்லியம்மாள் வாசல் வரையில் சென்று அவர்கள் வண்டியில் ஏறிப் போன வரையில் நின்று உபசார வார்த்தைகள் கூறி வழியனுப்பிவிட்டு வாசற் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்து சேர்ந்தாள்.

அதற்குள், காமரா உலகை விட்டு வெளியில் வந்த கண்ணபிரான் மிகுந்த மகிழ்ச்சியும் மனவெழுச்சியும் கொண்ட வனாய், நேராக விசிப்பலகைக்குப் போய் அதன் மேல் இரண்டு பெருத்த வெள்ளித் தட்டுகளில் விலையுயர்ந்த சேலை, வஸ்திரங் கள், வைரக்கடுக்கன், வைர மோதிரம் முதலிய ஆடை ஆபர ணங்களும், நல்ல நல்ல பழ தினுசுளும் ஏராளமாக இருந்ததைக் கண்டு அளவுகடந்த குதூகலமும் வியப்புமடைந்து, ''அம்மா! இதென்ன பெருத்த கலியாணத்தின் வரிசை போல இருக்கிறதே! நான் அப்படி என்ன பிரமாதமான காரியத்தைச் செய்து விட் டேன்! என்ன மரியாதை! என்ன மரியாதை! அடடா! பணக்

காரர்களாக இருந்தாலும் எல்லோருக்கும் தாராளமாக மனசு இருக்கிறதில்லை. இவர்கள் உண்மையிலேயே பெரிய மனிதர்கள் என்பது நன்றாகத் தெரிகிறது; என்னவோ நம்முடைய அதிர்ஷ்ட பாக்கியந்தான் இவர்களுடைய சிநேகம் நமக்குக் கிடைத்திருக்கிறது!'' என்றான்.

கற்பகவல்லியம்மாளும் மிகுந்த களிப்பும் ஆநந்தமும் அடைந்தவளாய், "இந்த அம்மாள் நல்ல தங்கமான குணமுடையவர்களென்று அநேகர் சொல்ல நான் கேள்வியுற்றிருந்தேன்; அது சரியாகவே இருக்கிறது. ஈசுவரன் அவரவர்களுடைய யோக்கியதைக்குத் தகுந்தபடிதான் சம்பத்தை அளித்திருக்கிறான். நான் எத்தனையோ பெரிய மனிதர் வீட்டுப் பெண் பிள்ளைகளைப் பார்த்திருக்கிறேன். அநேகமாய் எல்லோரும் பணத்திமிரும், அகம்பாவமும், முன்கோபமும், அட்டகாசமும், டம்பமும் மற்றவர்களெல்லாரையும் விடத் தாமே பெரிய மேதாவிகளென்ற கருவமும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். அந்த அம்மாளுடைய பணிவான நடத்தையும், அடக்கமான வார்த்தையும், ஸரஸமான குணமும், தாராளமான மனமும் யாருக்காகிலும் இருக்குமா என்பதே சந்தேகம். நீ சொல்லுகிறபடி நமக்கு ஏதோ பெருத்த நன்மையைக் கருதியே ஈசுவரன் இந்த அபாயத்தைக் காட்டி இப்படிப்பட்ட உத்தமமான மனிதர்களுடைய சிநேகத்தை நமக்குச் செய்து வைத்திருக்கிறாரென்றே நினைக்க வேண்டி இருக்கிறது. கடவுள் நேராக வந்து உதவி செய்ய முடியுமா? மனிதர் மூலமாகத்தான் செய்ய வேண்டும். இவர்கள் எல்லாச் செல்வமும் சம்பூரணமாக வாய்க்கப் பெற்றிருப்பவர்கள். இவர்கள் நம்மிடத்தில் இவ்வளவு அபிமானமும், வாஞ்சையும் வைக்க வேண்டுமென்றால், அதற்கு இப்படிப்பட்ட அபாய சமயத்தில் நம்முடைய உதவியை அவர்கள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தாலன்றி வேறு விதத்தில் இவர்களுடைய மனசில் அப்படிபட்ட எண்ணங்களும் உணர்ச்சிகளும் உண்டாக்க முடியாதல்லவா; எல்லாம் ஈசன் செயலென்றே நான் உறுதியாக நம்புகிறேன்'' என்றாள்.

அதைக்கேட்ட கண்ணபிரான், "நீங்கள் சொல்வது உண்மைதான். இதற்கு முன் ஒருவரையொருவர் கண்டறியாத

மனிதர்களுக்குள் பழக்கமும், நட்புமுண்டாக வேண்டுமானால், அதற்கு ஏதாவது ஓர் ஆஸ்பதமிருக்க வேண்டுமல்லவா! அதற்காகத்தான் இப்படிப்பட்ட எதிர்பாராத விபத்துக்களும் சந்திப்புகளும் நேருகின்றன. நீங்கள் இந்த அம்மாளைக் கண்டு சந்தோஷப்படுகிறீர்களே! இவர்களுடைய இரண்டு பெண் களையும் பார்த்தால், ஆகா! நீங்கள் எவ்வளவு ஆனந்தம் அடைவீர்கள் தெரியுமா! அவர்கள் இரண்டு பேரும் வித்தியாசம் தெரியாமல் ஒரே மாதிரி, ஒரே அச்சில் வார்த்த தங்கப் பதுமைகள் போல எவ்வளவு அழகாக இருக்கிறார்கள் தெரியுமா! இரண்டுபேருடைய குணத்தழகையும், நாணம், அடக்கம், பதவிசு முதலிய குணங்களையும் பார்த்தால் நிரம்பவும் சந் தோஷப்படுவீர்கள். மூத்த பெண்ணின் புத்திசாலித்தனமும், சமர்த்தும், பெரும்போக்கும் அடடா என்னவென்று சொல்லு வேன்! நாம் எங்கேயோ ஒரு மூலையில் இருந்து, பார்த்தால் பார்த்த மனிதரையே பார்த்துக் கொண்டிருக்கிறோம்; உலகத்தில் எப்படிப்பட்ட அபாரமான சிருஷ்டிகளும், தெய்வாம்சம் பொருந்திய மனிதர்களும் இருக்கிறார்கள் தெரியுமா! எல்லாம் அங்கேயே போய்ப் பழகப் பழகத்தான் தெரிகிறது'' என்றான்.

கற்பகவல்லியம்மாள், ''நீ சொல்லுகிறது வாஸ்தவமான சங்கதிதான். இருந்தாலும் அடுப்பைக் கட்டி ஓயாமல் அழுது கொண்டே இருக்கும் எங்களைப் போன்ற பெண்பிள்ளைகள் வீட்டை விட்டுப் போகவும், இப்படிப்பட்ட அருமையான மனிதர்களைப் பார்க்கவும் சரிப்படுகிறதா? எல்லாம் உங்களைப் போன்ற ஆண்பிள்ளைகளுக்குத்தான் அப்படிப்பட்ட சந்தர்ப்பம் வாய்க்கிறது; அவர்களுடைய தரிசனமும், சிநேகமும் உங்கள் மூலமாகத்தான் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். நீ அந்தப் பெண்களுடைய குணாதிசயங்களையெல்லாம் எடுத்துச் சொன்னதைக் கேட்க, அவர்களை எப்போது பார்ப்போமென்ற ஓர் ஆவல் என் மனசில் பொங்கி எழுந்து வருத்துகின்றது. எல்லா வற்றிற்கும் நீ முதலில் கொஞ்சம் காப்பி சாப்பிட்டுவிட்டு ரஜாக் கடிதத்தை எழுது; நான் ஸ்நானம் முதலியவற்றை முடித்துக் கொள்ளுகிறேன். நேரமாகி விட்டது; அவர்களுடைய வண்டி வருவதற்குள் நாம் சித்தமாக இருக்க வேண்டும்'' என்று கூறிய வண்ணம், வெள்ளித்தட்டுகள் இரண்டையும் எடுத்துக் கொண்டு

போய் உள்ளே வைத்துவிட்டுத் தனது அலுவல்களைக் கவனிக்கலானாள்.

கண்ணபிரானது அப்போதைய மனநிலைமை எப்படி இருந்திருக்குமென்பதை யூகித்துக் கொள்வது சுலபமேயன்றி விவரித்துச் சொல்வது நிரம்பவும் கடினமான காரியம். அவனது மனம் பொங்கிப் பூரித்து ஆனந்த நிருத்தனம் செய்து, எப்போது பத்து மணி அடிக்குமென்றும், தன் மனதைக் கொள்ளையிட்ட காமரூபிணியான அந்த ரதி தேவியை எப்போது மறுபடியும் காணப்போகிறோம் என்று எண்ணி எண்ணிப் பேராவல் கொண்டும் துடிதுடித்து நின்றது. அழகும், இனிமையும் வடிவெடுத்ததோவென இருந்த கோகிலாம்பாளை நினைக்குந்தோறும், அவனது உள்ளமும், உடம்பும் நெக்கு நெக்குருகிப் பேரின்பம் சுரந்து, மயிர்க்காலுக்கு மயிர்க்கால் தேவாமிருதம் பொங்கி அவனை ஆநந்தச் சாகரத்திலாழ்த்தியது. பசி, தாகம், சோர்வு முதலிய எந்தவித தேகபாதையும் அவன் உணராமல், ஈசுவரனை நினைத்துக் கடுந்தவம் புரியும் யோகிகள் மெய்ம்மறந்து தங்களது ஐம்புலன்களையும் அறிவையும் பரப்பிரமத்திலேயே லயிக்க விட்டு ஆநந்தமயமாக உட்கார்ந்திருப்பதுபோல, கோகிலாம்பாள், கோகிலாம்பாள் என்று ஜெபம் செய்து தவத் தியானமாக உட்கார்ந்திருந்தான். அவன் தனது தாயின் வற்புறுத்தலினால் தூண்டப்பட்டவனாய்க் காப்பியை அருந்துவது பிரம்மப் பிரயத்தனமாக முடிந்து விட்டது. அதன் பிறகு ஆபீசுக்கு அவன் ரஜாக் கடிதமெழுதிய போது ஒருவரியில் ஒன்பது பிழைகள் செய்து காகிதங்களைப் பலதடவை கிழித்தெறிந்து புதிது புதிதாக எழுத நேர்ந்தது. கற்பகவல்லியம்மாளது மனமும் மிகுந்த சலனத்திற்குள்பட்டு இன்னதென்று சொல்ல முடியாத ஒருவித வேதனையடைந்திருந்தமையால், அவள் செய்த காரியங்களிலும் அநேக தவறுகளும் திருத்தங்களும் ஏற்பட்டன. அவ்வாறு தாயும் பிள்ளையும் தங்களது நிம்மதியான மன நிலைமையை இழந்து தத்தளித்துத் தடுமாறிப் பிறவிக்குருடன் பார்வை பெற்றது போன்ற குதூகலமும் மனவெழுச்சியுமடைந்து தங்களது காரியங்களையெல்லாம் விரைவில் முடித்துத் தங்களை நன்றாக அலங்கரித்துக் கொண்டு விருந்திற்கு புறப்பட ஆயத்தமாயினர்.

மணி சரியாக ஒன்பதே முக்கால் ஆயிற்று; வாசலில் தடதட வென்று பெட்டி வண்டியொன்று வந்து நின்றது. டாலி டவாலி களணிந்த இரண்டு போயிகள் வண்டியை விட்டிறங்கி வந்து மெதுவாகத் கதவைத் தட்டி, "ஐயா! ஐயா!" என்று குரல் கொடுத்தனர். அதைக் கேட்ட கற்பகவல்லியம்மாள், "அதோ வண்டி வந்து விட்டது" என்றாள். கண்ணபிரான் துள்ளிக் குதித் தெழுந்து ஓட்டமாக ஓடி வாசற்கதவை திறக்க,வெளியில் நின்ற போயிகள் குனிந்து கைகுவித்து வணங்கி, "வண்டி வந்திருக் கிறது. எஜமான் அழைத்துக்கொண்டு வரச் சொன்னார்கள்" என்று பணிவாகக் கூற, "இதோ வருகிறோம். வண்டியைத் திருப்பி நிறுத்துங்கள்" என்று கூறிவிட்டு, விரைவாக உள்ளே ஓடி வந்தான். உடனே வண்டி திருப்பி நிறுத்தப்பட்டது. அடுத்த நிமிஷத்தில் அம்மாளும் பிள்ளையும் வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். கற்பகவல்லியம்மாள் வாசற்கதவை மூடிப் பூட்டிக் கொள்ள, உடனே இருவரும் போய் வண்டியில் உட்கார்ந்து கொண்டார்கள். வண்டி புறப்பட்டது.

அந்த வண்டி கோகிலாம்பாளது பங்களாவிற்குப் போய்ச் சேரக் கால் நாழிகை நேரம் பிடித்தது. அந்த வண்டியில் பூட்டப் பட்டிருந்த குதிரை இரண்டாயிரம் ரூபாய் விலையுள்ள உன்னத மான ஆஸ்திரேலியா தேசத்துக் குதிரையானாலும், கண்ண பிரானது மனோ வேகத்திற்கிணையாக, அது ஓடமாட்டாததா யிருந்தது. வண்டியும், குதிரையும் கோகிலாம்பாளினது மாளிகையை நோக்கிப் புறப்படுவதற்கு முன்னமே அவனது மனம் அந்த மாளிகைக்குள் போய்ச் சேர்ந்து அந்த வடிவழகி எந்த விடுதிக்குள் வீற்றிருப்பாளாவென்றும், எப்படிப்பட்ட ஆடையாபரணங்களை அணிந்து எவ்வித அலங்காரத்திலிருப்பா ளோவென்றும் நினைத்துத் தத்தளித்துத் தவித்துத் தேடியலைந்து கொண்டிருக்கிறது. அவனது மனம் முற்றிலும் ஆவலும், இன்பமுமே நிரம்பியதாய் சஞ்சல வடிவமாயிருந்தது. கற்பக வல்லியம்மாளது மனநிலைமையும் கிட்டத்தட்ட அதுபோலவே இருந்தது. ஆனால் புதல்வனது மனதில் காதலின் தீயும், பிரேமை யின் பித்தமும் எழுந்து பெருகி வதைத்துக் கொண்டிருந்தன. கற்பகவல்லியம்மாளது மனதிலோ தமக்கு ஒரு கோடீசுவரனது நட்பும் அன்னியோன்னியமான பழக்கமும் ஏற்படுவது பற்றி

மகிழ்ச்சியும், மனவெழுச்சியும் சஞ்சலத்தைக் கொடுத்துக் கொண் டிருந்தன. ஆனால் மகா உன்னத பதவியில் இருப்பவர்களான அவர்களுக்கும் பரம ஏழைகளாக இருக்கும் தங்களுக்கும் கலியாண சம்பந்தம் ஏற்படக்கூடுமென்பதை அந்த அம்மாள் கன விலும் எண்ணவில்லை. ஆதலால், கண்ணபிரானுக்கு ஏற்பட்டது போல அவ்வளவு அமிதமான மனநெகிழ்வும் மோகலாகிரியும் அவளுக்கு உண்டாகவில்லை.

அவ்வாறு சலனம் அடைந்து பூரித்த நிலைமையில் அவர்கள் இருவரும் அந்த வனமாளிகையை அடைந்தனர். அவர்கள் அந்த உன்னத மாளிகையின் வெளி வாசலில் நுழைந்தது முதல் உட்புற கட்டிடங்களை அடைந்ததற்குள், அங்கே காணப்பட்ட அழகழகான பொருட்களையும், அந்த உத்யானவனத்தின் எழிலையும் கண்டு அதி வியப்பும் ஆநந்தமும் அடைந்து தங்க ளது மனதை அத்தகைய நூதன வஸ்துக்களில் லயிக்க விடுத்துச் சென்றனர். பிறப்பு முதல் கேவலம் ஒரு குடிசையிலிருந்த மனிதன் உலகத்தையே மயக்கும் விநோதங்களும், மந்திர நிர் மாணங்களும் நிறைந்த ஜெகன்மோகினி தேவியின் கொலு மண்டபத்தில் கொண்டு போய் திடீரென்று விடப்பட்டால் எண்ணிறந்த புதுமைகளை ஒரே காலத்தில் காண்பதால், அவனது மனம் எப்படிப்பட்ட பிராந்தியையும் பெரு வியப்பையும் பேரின்பத்தையும் அடையுமோ அப்படிப்பட்ட நிலைமையி லேயே அவர்களது மனம் இருந்தது.

அந்தச் சிங்காரப் பூங்காவினிடையில் அமைக்கப்பட்டிருந்த மாடமாளிகையின் முன் வாசலில் பெட்டி வண்டி போய் நின்றது; அவ்விடத்தில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்த தாதிகள் இருவர் உடனே ஓடிவந்து வண்டியின் கதவைத் திறந்து, ''வாருங்கள்; வாருங்கள்'' என்று மிகுந்த அன்போடு உபசரித்து அழைக்க, தங்களுக்குக் காட்டப்படும் அளவு கடந்த மரியாதை யையும், உபசாரத்தையும் கண்ட கண்ணபிரானும் கற்பகவல்லி யம்மாளும் பூரித்து, புளங்காகிதம் அடைந்தவர்களாய் வண்டியை விட்டுக் கீழே இறங்கினார்கள். உடனே தாதிகள் வணக்கமாக அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு படிகளில் ஏறி முன்புறத் தாழ்வாரத்தின் வழியாக நடந்து இரண்டு மூன்று கூடங்களைக் கடந்து உள்ளே செல்ல, அங்கே ஆயத்தமாக நின்று

கொண்டிருந்த பூஞ்சோலையம்மாள் மிகுந்த சந்தோஷமும் பூரிப்பும் அடைந்து அப்போதே மலர்ந்த தாமரைப் புஷ்பம் போன்ற குளிர்ந்த இனிய முகத்தோடு எதிரே தோன்றி "வர வேண்டும்; வர வேண்டும்; எங்கே ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு நீங்கள் வராமல் இருந்துவிடப் போகிறீர்களோ என்று நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம், நல்ல வேளையாக வந்து சேர்ந்தீர்களே! நிரம்ப சந்தோஷமாயிற்று" என்று குதூகலமாகக் கூறினாள். அவர்கள் இருந்த மகால் மேஜைகளும், நாற்காலிகளும், சோபாக்களும், ஊஞ்சல் பலகைகளும், பூந்தொட்டிகளும், படங்களும், நிலைக்கண்ணாடிகளும், இன்னும் எண்ணிறந்த அலங்காரப் பொருட்களும் நிரம்பப் பெற்றதாய், ஒரு மகாராஜனது கொலுமண்டபம் போலக் காணப்பட்டது. தரையில் ஒரு முழு உயரம் மெத்தை போல வழுவழுப்பான இரத்தினக் கம்பளம் விரிக்கப் பட்டிருந்தது. அப்படிப்பட்ட மகா உன்னதமான இடத்தை கற்பக வல்லியம்மாள் தனது ஆயுட்காலத்திலேயே கண்டறி யாதவள் ஆதலால், அந்த அம்மாள் அபரிமிதமான வியப்பும், மதிப்பும், பயமும் அடைந்தவளாய், அங்கே காணப்பட்ட ஒவ்வோர் அலங்காரத்தையும் உற்று உற்று நோக்கியவளாக ஒரு நிமிஷ நேரம் ஸ்தம்பித்து நின்ற பின் பூஞ்சோலையம்மாளை நோக்கி, "பத்து மணிக்கு வருவதாக வாக்குக் கொடுத்து விட்டு வராமல் இருப்போமா! தலை போவதானாலும், அதைக் கவனியாமல் வந்துதான் தீர வேண்டும்" என்று புன்சிரிப்போடு விநயமாகக் கூறினாள்; அன்றையதினம் நடத்தப்படும் விருந்திற்காக, அவர்கள் சென்னையிலுள்ள தங்களது நண்பரும், தூரபந்துக்களுமான வேறே சிலருக்கும் செய்தியனுப்பி இருந்தார்கள். ஆதலால், ஆண்பெண்பாலாரில் சுமார் இருபது முப்பது மனிதர் முன்னரே வந்திருந்தனர். அந்த மகாலில் உட்கார்ந்திருந்த ஆண் பிள்ளைகளில் முக்கியஸ்தராக இருந்த ஒருவர் கண்ணபிரானண்டை போய், "வாருங்கள்; இப்படி சோபாவில் உட்கார்ந்து கொள்ளுங்கள். ஸ்திரீகள் பக்கத்து விடுதியில் இருக்கிறார்கள். தங்களுடைய தாயாரும் அங்கே போகட்டும்" என்றார். அதைக் கேட்ட கண்ணபிரான் மிகுந்த லஜ்ஜையடைந்தவனாய் ஒரு பக்கமாய்ச் சென்று அங்கே கிடந்த ஒரு நாற்காலியின் மேல் உட்

கார்ந்து கொண்டான். கற்பகவல்லியம்மாள் வந்துவிட்டாள் என்பதை உணர்ந்த சில விருந்தாளிப் பெண் பிள்ளைகள் பக்கத்து விடுதியிலிருந்து எழுந்து வந்து பூஞ்சோலையம் மாளுக்குப் பக்கத்தில் நின்று, அந்த வரவேற்பில் தாங்களும் கலந்து கொண்டனர். அவ்வாறு சேர்ந்த ஸ்திரீகளும் பூஞ் சோலையம்மாளும் கற்பகவல்லியம்மாளை அன்பாக உபசரித்து அந்த மகாலிலிருந்த பக்கத்து விடுதிக்கு அழைத்துப் போயினர். அந்த விடுதி முன் மஹாலில் முக்கால் பங்கு விசாலமுடையதாக இருந்தாலும், அதைவிடப் பன்மடங்கு அதிகமாக சிங்காரிக்கப் பட்டிருந்தது. அந்த விடுதி ஸ்திரீ விருந்தினரை உட்கார வைத்து உபசரிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தில் ஸோபாக்களும், நாற்காலிகளும் இருந்ததன்றி கருங்காலி மரங்களாலும், சலவைக் கற்களாலும் அமைக்கப்பட்டிருந்த விசிப்பலகைகள் வழுவழுப்பாகவும், பளபளப்பாகவும் காணப் பட்டுக் கண்ணாடிபோல மனிதரது சாயலைத் தோற்றுவித்தது. அவ்விடத்தில் உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்திருந்த வர்களான ஏழெட்டுப் பெண் பிள்ளைகள் கும்பலாக உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கிடையில் கோகிலாம்பாளும் சௌந்தரவல்லியும் கலியாணப் பெண்கள் போல அலங்கரித்து சர்வாபரணபூஷிதராய், தெய்வ லோகத்துக் கன்னிகை களோவென அனைவரும் ஐயுறும்படி தேஜோமயமாக உட்கார்ந் திருந்தனர். அழகின் திரளாகக் காணப்பட்ட அவ்வணங்குகள் இருவரையும் கண்ட கற்பகவல்லியம்மாள், அவர்களே, பூஞ் சோலையம்மாளது செல்வக்குமாரிகள் என யூகித்துக் கொண் டவளாய், மிகுந்த பிரமிப்பும் திகைப்புமடைந்து ஸ்தம்பித்துப் போனாள். அந்த மடந்தையர் இருவரும் ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பெற்ற பத்தரைமாற்றுப் பசும்பொன் பாவைகள் போல இருந்த அற்புத அமைப்பானது எவரும் எவ்விடத்திலும் கண்டிராத அபூர்வ சிருஷ்டியாக இருந்தது. அவர்களில் மூத்தவள் யாவள், இளையவள் யாவள் என்பது தெரியாமல் இருந்ததைக் கண்ட கற்பகவல்லியம்மாள் நிரம்பவும் திகைத்துத் தடுமாறிப் போனாள். ஆனால், அவர்களுள் கோகிலாம்பாள் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் உயர்வான கெம்புகளும், பச்சைகளும் நிறைந்த ஆபரண ஜோடிப்பையும், அதுபோல சௌந்தரவல்லி

அடி முதல் முடி வரையில் வைரங்களே இழைத்த நகைகளையும் அணிந்திருந்ததன்றி, அவர்களுள் மூத்தவள் ஊதா நிறச் சேலை ரவிக்கை முதலிய ஆடைகளையும், இளையவள் சிவப்பு பனாரஸ் சேலை முதலிய ஆடைகளையும் அணிந்திருந்த அலங்கார வேறுபாடு ஒன்றே அவர்கள் வெவ்வேறான இரண்டு மங்கைகள் என்பதைக் காண்பித்தது. அந்தப் பெண்மணிகளின் உத்தமமான தேக அமைப்பையும், முகவனப்பையும் அலங்காரச் சிறப்பையும் கண்டு கரை கடந்த மகிழ்ச்சியும், மனவெழுச்சியும் ஆநந்தமும் அடைந்து திகைத்து நின்ற கற்பக வல்லியம்மாளைப் பூஞ்சோலையம்மாள் அன்பாகவும், தற்பெருமையாகவும் நோக்கி, "அந்த இரண்டு குழந்தைகளுடைய உயிரையுந்தான் தங்களுடைய புத்திரர் நேற்றையதினம் காப்பாற்றி எங்களு டைய குடும்ப விளக்கை ஏற்றி வைத்தது" என்று கூறிய வண் ணம் தனது செல்வியர் இருவரையும் சுட்டிக் காட்ட, உடனே கற்பகவல்லியம்மாள் முன்னிலும் அதிகரித்த குதூகலமும், பூரிப்பும் அடைந்து, மிகுந்த வாத்சல்யம் சுரந்த முகத்தினளாய், "இவர்களைப் பார்த்த உடனே, நானும் அப்படித்தான் நினைத்தேன். தங்களுடைய முகச்சாயலைப் போலவே இவர்க ளுடைய முகச்சாயலும் இருப்பதால், இவர்கள் இன்னார் என்பதை முகமே சொல்லுகிறது! இவர்களையெல்லாம் நேற்றையதினம் என் மகனா காப்பாற்றினான்? மனிதரைப் படைப்பதும், காத்து ரக்ஷிப்பதும் கடவுளுடைய தொழிலல்லவா! தங்கப் பதுமைகள் போல இவர்களை சிருஷ்டித்து இதுகாறும் வளர்த்துக் காத்து இந்த ரூபத்தில் வைத்திருக்கும் அந்த சர்வேசுரன் இவர்களுடைய விஷயத்தில் அப்படிக் கொடுமை யாக நடந்து இவர்களுடைய உயிருக்குத் தீங்கு செய்திருப் பானானால், அவனுடைய கைவேலைக்கு மதிப்பில்லாமலும், அர்த்தமில்லாமலும் போய்விடாதா! ஒரு நொடியில் இந்தக் குழந்தைகளை அழித்து விட அவன் சித்தம் கொள்வானானால் இவ்வளவு அருமையாக ஏன் இவர்களை சிருஷ்டிக்க வேண்டும்? அவன் அப்படிச் செய்ய பைத்தியக்காரனல்ல. கடவுள் ஏதோ கருத்தை மனசில் வைத்துக் கொண்டுதான் ஒவ்வொரு காரி யத்தையும் நடத்தி வைக்கிறான். தங்களுடைய பங்களாவுக்குப் பக்கத்தில் இருப்பவர்களான எங்கள் மேல் தங்களைப் போன்ற

பெரிய மனிதர்களுடைய அபிமானமும், அன்பும் ஏற்பட வேண்டுமல்லவா; அதற்காக நேற்றைய தினம் அந்த அபாயம் நிகழ்ந்தது என்றே நாம் நினைக்க வேண்டுமன்றி வேறல்ல. என் மகன் அந்தச் சமயத்தில் அங்கே இருந்ததனாலேதான் இந்தக் குழந்தைகள் இப்போது உயிரோடு இருப்பதாக தாங்கள் நினைக்கிறீர்கள். அவன் இல்லாமல் இருந்தால், அந்த அபாயமே நேர்ந்திராமல் போனாலும் போயிருக்கும். அல்லது அந்த இடத்தில் அந்தச் சமயத்தில் வேறே மனிதர் யாராவது இருந்து, இவன் செய்த காரியத்தைச் செய்தாலும் செய்திருப்பார். எல் லாம் கடவுள் செயல். ஈசன் நேரே வந்து எதையும் செய்கிற தில்லை; யாராகிலும் ஒரு மனிதரைக் கொண்டுதான் எந்தக் காரியத்தையும் முடிக்க வேண்டும்; என் மகனில்லாவிட்டால், இன்னொருவனைக் கொண்டு கடவுள் இந்த அபாயத்தை விலக்கி இருப்பார். ஆகையால் இந்த மனிதன் தான் காப்பாற்றினான்; அந்த மனிதன்தான் காப்பாற்றினான் என்ற கீர்த்தியும், பெருமையும் நாம் தப்பாக வகித்துக் கொள்ளும் விஷயங்கள். அந்த அபாயம் நிவர்த்தியான விஷயத்தில், தாங்கள் எங்களைப் புகழுவதை விட, கடவுள், இந்த விபத்தை நிவர்த்திக்க, எங்களைப் பொறுக்கி எடுத்தானே என்பதையே ஒரு பெருத்த பாக்கியமாகவும், அருளாகவும் நாங்கள் மதிக்க வேண்டும். இல்லாவிட்டால், எங்களைப் போன்ற சாதாரண ஜனங்கள் எவ்வளவு காலம் தவம் புரிந்தாலும் இந்த மஹா லுக்குள் அடிவைக்கக் கிடைக்குமா, தங்களைப் போன்றவர்கள் எல்லாம் எங்களை ஒரு பொருட்டாக மதித்துப் பேசுவதும் நேருமா? ஆகையால், தாங்கள் இந்த அற்ப உதவியை கருதி அடிக்கடி என் மகனைப் புகழ்வது எனக்கு நிரம்பவும் லஜ்ஜை யாக இருக்கிறது'' என்று தமாஷாகப் புன்சிரிப்போடு கூறினாள்.

அவ்வாறு பேசிய மாதுதான், தங்களது உயிரைக் காத்த யௌவனப் புருஷனது தாய் என்று யூகித்துக் கொண்ட கோகி லாம்பாள் மிகுந்த வெட்கமும் நாணமும் அடைந்தவளாய்த் தலைகுனிந்து பணிவாக நின்றாள். சௌந்தரவல்லி தனது தாயும் கற்பகவல்லியும் இருந்த இடத்திற்கு ஓடி வந்து அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனித்துக் கேட்கலானாள். தனது மகனைப் புகழ வேண்டாமெனக் கேட்டுக் கொண்ட கற்பக

வல்லியம்மாள் தனக்கு அருகில் வந்து நின்ற சௌந்தரவல்லியை மிகுந்த மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டி, "இந்தக் குழந்தைதான் தங்களுடைய மூத்த குழந்தையோ? இதன் பெயரென்ன?" என்றாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள் கற்பகவல்லியம் மாளை ஓரிடத்தில் உட்கார வைத்து, "இந்தக் குழந்தைதான் என்னுடைய இளைய குழந்தை! அதோ நிற்கிறதே அதுதான் மூத்தது. அதன் பெயர் கோகிலாம்பாள், இதன் பெயர் சௌந்தர வல்லி. ஆனால் இவர்களோடுகூட எப்போதும் இருந்து பழகும் எனக்கே, ஒவ்வொரு சமயத்தில் இவர்களுடைய வித்தியாசம் தெரிகிறதில்லை. தங்களைப் போன்ற புதிய மனிதர்களுக்கு எல்லாம், அது சுத்தமாகத் தெரியவே தெரியாது. இரண்டு குழந் தைகளும் இரட்டையாகப் பிறந்தபடியால் இப்படி ஒரே சாயலாக இருக்கின்றன" என்றாள்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் மிகுந்த களிப்பும், வியப்பும் அடைந்து, "ஆம், தாங்கள் சொல்வது நிஜம்தான். குழந்தைகள் இரண்டும் ஒருவர் போலவே இருக்கிறார்கள். என்னவோ ஈசுவரனுடைய செயல்; எப்படி இருந்தாலும் பரவா யில்லை. அவரவர்கள் சௌக்கியமாகவும், மங்களகரமாகவும் ஆயிரங்காலம் வாழ வேண்டியது ஒன்றே முக்கியம்" என்று கூறி அவர்களை ஆசீர்வதித்து முடித்தாள். அப்போதும் கோகிலாம் பாள் வாயைத் திறவாமல் அடங்கி ஒடுங்கி, அங்குமிங்கும் போய், விருந்திற்கு ஆக வேண்டிய ஒரு சில விஷயங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சௌந்தரவல்லியோ, கற்பகவல்லி யம்மாளின் அண்டையில் போய் நின்று, "தங்களுடைய புத்திரரும் வந்திருக்கிறார்களா?" என்று கேட்க, உடனே பூஞ்சோலையம்மாள், "என்ன கேள்வி இது? அவர்களுடைய குமாரர் வராமலா விருந்து நடக்கும். அவர் வந்து அடுத்த மகாலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். நம்முடைய சம்பந்த மூர்த்தி அவரை வரவேற்று, அவரிடத்தில் பேசிக் கொண்டி ருக்கிறான்" என்று மறுமொழி கூறிவிட்டுக் கற்பகவல்லியை நோக்கி, "உள்ளே இலை போட்டிருக்கிறார்களா என்று பார்த்து விட்டு வருகிறேன். கொஞ்சம் உத்தரவு கொடுங்கள்" என்று கூற, கற்பகவல்லியம்மாள், "ஓ, போய்விட்டு வாருங்கள். நான் தங்

களுடைய சின்னக் குழந்தையோடு பேசிக் கொண்டிருக்கிறேன்" என்று புன்னகையோடு கூறினாள். உடனே பூஞ்சோலையம்மாள் அவ்விடத்தை விட்டு அடுத்த கட்டிடமான போஜன மண்டபத்திற்குப் போய்விட்டாள்.

முன் மஹாலில் விடப்பட்ட கண்ணபிரான் தனக்குப் பக்கத்தில் இருந்த சம்பந்தமூர்த்தி என்பவரோடு சம்பாஷித்த வண்ணம் அந்த மஹாலின் கண்கொள்ளா வனப்பையும் அலங்காரத்தையும் பார்த்து ஆநந்தித்துக் கொண்டிருந்தான். சம்பந்த மூர்த்தி என்பவர் பூஞ்சோலையம்மாளது தங்கையின் புத்திரர். அவரது தந்தை ஒரு பிரபலமான வர்த்தகர், கண்ண பிரானை உபசரிப்பதற்கு ஆண் பிள்ளைகள் ஒருவருமில்லை என்பதைக் கருதி கோகிலாம்பாள் அனைவரையும் அன்றைய விருந்திற்கு வரவழைத்திருந்தாள். முதல் நாள் நேரிட்ட அபாயத்தில், அவனே கோகிலாம்பாளையும், ஸௌந்தரவல்லி யையும் காப்பாற்றியவன் என்பதையும், அதன் பொருட்டே அந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அவர் அறிந்தவராதலாலும், கண்ணபிரானை மிகுந்த அன் போடும், மரியாதையோடும் உபசரிக்க வேண்டுமென்று பூஞ்சோலையம்மாள் அவரிடத்தில் சொல்லி இருந்தமையாலும், அவர் கண்ணபிரானை நிரம்பவும் விசுவாசமாகவும், பிரியமா கவும், மரியாதையாகவும் உபசரித்து வரவேற்று உட்கார வைத்ததுமன்றி, அவனுக்கு காப்பி, சோடா, இளநீர் முதலிய ஏதாவது வஸ்து தாகத்திற்கு தேவையாவென்று விசாரிக்க, அவன், தனக்கு உடம்பு அசௌக்கியமாக இருப்பதால், தனக்கு எதுவும் வேண்டாமென்று சொல்லி விட்டான். அவனது மனம் முழுவதும் அடுத்த விடுதியிலிருந்த கோகிலாம்பாளின் மீதே சென்றிருந்தது. பக்கத்து விடுதியில் யாரோ ஸ்திரீகள் பேசுகி றார்கள் என்பதை மாத்திரம் அவன் உணர்ந்தானேயன்றி, யார் யார் பேசுகிறார்கள் என்பதையும், இன்னின்னார் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொள்ள மாட்டாமல் தவித்துக் கொண்டிருந்தான்; யௌவனப் பருவத்தினரான அணங்குகள் இருவரும், ஆண்மக்களிற்கு எதிரில் வரமாட்டார்கள் என்பதை அவன் உணர்ந்தவனாதலால், அன்றைய தினம் தான் கோகி

லாம்பாளைப் பார்க்காமல் போய்விட நேருமே என்ற நினைவும் ஏக்கமும் அடைந்தவனாய் உட்கார்ந்திருந்தான்.

ஸ்திரீகளின் விடுதியிருந்த பக்கத்தில் ஜன்னல்கள் இருந்தனவானாலும் அவற்றின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. தான் ஏதாவதொரு ஜன்னலின் அண்டையில் உட்கார்ந்து அதிலிருக்கும் இடைவெளியால் அப்புறத்தில் பார்த்தாகிலும், கோகிலாம்பாளை எப்படியேனும் அன்றைக்குள் ஒருமுறை பார்த்து ஆநந்திக்க வேண்டுமென்ற உறுதி அவனது மனதில் உண்டாயிற்று; சம்பந்தமூர்த்தி அப்போதைக்கப்போது கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கண்ணபிரான் தனது நினைவை யெல்லாம் வேறிடத்தில் வைத்துக் கொண்டு தாறுமாறான மறுமொழி கொடுத்துக் கொண்டு வந்தான்.

அவ்வாறு அரைமணி நேரம் கழிந்தது. எல்லோரும் விருந்துண்ண எழுந்தார்கள். இரண்டு விசாலமான கூடங்களில் தலைவாழையிலைகள் போடப்பட்டு, முப்பழங்களும், அறுசுவை உணவுகளும், பக்ஷண பலகாரங்களும், நெய்யும், தேனும் அபரிமிதமாகச் சொரியப்பட்டிருந்தன. ஆண்மக்கள் ஒரு கூடத்திலும், பெண்பாலார் மற்றொன்றிலும் உட்கார்ந்து விருந்துண்ணத் தொடங்கினர். ஏராளமான பணிமக்கள் சகலமான பதார்த்தங் களையும் மேன்மேலும் கொணர்ந்து பரிமாறி புத்துருக்கு நெய்யை மழைப்போலப் பொழிந்து, வடை, பாயாசம், லட்டு, ஜிலேப்பி, ஹல்வா முதலிய மாதுரியமான பொருட்களையும், தேங்கா யன்னம், மாங்காயன்னம், வெண்பொங்கல், சக்கரைப்பொங்கல் முதலிய ஏழெட்டு வகைச் சித்திரான்னங்களையும் கொணர்ந்து கொணர்ந்து கவிழ்த்து, விருந்துண்போர் அனைவரும் போதும் போதும் என்று கதறும்படி செய்ததன்றி, முடிவில் அவர்களுள் சிலரைக் கைகொடுத்துத் தூக்கிவிடும்படிச் செய்து விட்டனர். ஆனால் நமது கண்ணபிரானொருவனே ஒரு கவளமேனும் வாயில் போடாமல், பார்வையிலேயே திருப்தியடைந்து, வெண்ணீரை மாத்திரம் வரவழைத்து இரண்டு மூன்று பாத்திரம் பருகி விட்டு எழுந்தான். அவன் காதல் பிணியான கொடிய மன நோய்க்கே இரையாகிப் பெருந்தீயினால் கருகும் வாழைக்குருத்து போல துவண்டு தத்தளித்துக் கொண்டிருந்தான். அவன்

கொஞ்சமும் உண்ணவில்லையென்பதைக் கண்ட பணிமக்கள் தங்களால் இயன்ற மட்டும் வற்புறுத்தி உபசரித்துப் பார்த்த தெல்லாம் பயனற்றுப் போயிற்று. அவ்வாறு அந்த போஜனம் நிறைவேற, யாருடைய பொருட்டாக அவ்வளவு சிறப்பான விருந்து தயாரிக்கப் பெற்றதோ அவர் நீராகாரத்தைத் தவிர, வேறொன்றையும் தீண்ட முடியாமல் போயிற்று. அவரது பெயரைச் சொல்லி மற்ற எல்லோரும் சம்பிரமமாக விலாப் புடைக்க விருந்துண்டு களித்தனர். கற்பகவல்லியம்மாள், தேக அசௌக்கியத்தோடு இருக்கும் தனது புத்திரன் போஜனம் செய்கிறானோ இல்லையோ என்ற நினைவும், கவலையும் கொண்டவளாய், சொற்ப ஆகாரமே உட்கொண்டாள்; பூஞ்சோலையம்மாளும் மற்றவரும் அடிக்கடி வருந்தி உபசரித்தது பற்றி அந்த அம்மாளுக்கு அரை வயிறு நிறைந்தது என்று சொல்ல லாம். அவ்வாறு விருந்து முடிய, எல்லோருக்கும் சந்தனம், தாம்பூலம் முதலியவை வழங்கப் பட்டன. கற்பகவல்லியம்மாள், கைம் பெண்ணாதலாலும், கண்ணபிரான் பிரம்மசாரியாத லாலும், அவர்கள் சந்தனத்தைக் கண்ணால் பார்த்துத் தாம் பூலத்தைக் கையால் தொட்டார்கள். ஆகையால் அந்த விருந்தில் தாய்க்கும், பிள்ளைக்கும் அந்தப் பங்களாவிற்கு வந்து போஜன சாலையில் இலையில் உட்கார்ந்து எழுந்த சிரமமொன்றே கிடைத்தது. அப்படியிருந்தும் கண்ணபிரான் தனது மன நிலையை வெளியில் காட்டாமல் நிரம்பவும் சந்தோஷமாக இருப்பவன்போல் நடந்து கொண்டான். கற்பகவல்லியம்மாளும், எவ்வித சந்தேகத்திற்கும் இடங்கொடாமலேயே பூஞ்சோலை யம்மாள் முதலியோரிடத்தில் நடந்து கொண்டு மிகுந்த குதூகலத்தைக் காட்டி வந்தாள். உண்மையில் விருந்துண்ட மற்ற எல்லோரும் தங்களது வயிற்றைத் தூக்கிக் கொண்டு போக மாட்டாமல் இரை விழுங்கிய மலைப்பாம்புகள் போல அங்கங்கே விழுந்து புரண்டனர். சிலர் குறட்டை விட்டுத் தூங்கினர். சிலர் அந்த விருந்தின் சிறப்பைப் பற்றி வாய் ஓயாமல் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். சிலர், "அதில் உப்பதிகம். இதில் புளி குறைவு, இன்னொன்றில் சூடில்லை" என்று பலவாறு ஷராக்கள் பேசினர். ஆனால் மொத்தத்தில் விருந்து முதல்தரமானது என்றும், ஆனால் அதற்குத் தகுந்தபடி தங்களுக்கு வயிறொன்றே

குறைவென்றும் எல்லோரும் ஒப்புக்கொண்டு, பிற்பகல் வரையில் சந்தோஷமாக இருந்துவிட்டு, ஒவ்வொருவராகப் பூஞ்சோலையம்மாளிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, அரை மனதோடு அந்தப் பங்களாவை விட்டுத் தத்தம் அலுவலையும், ஜாகையையும் நோக்கிச் செல்லலாயினர். அவ்வாறு அன்றைய மாலை ஐந்து மணிக்குள், அந்தப் பங்களாவில் வந்திருந்த விருந்தினர் எல்லோரும் போய்விட்டனர். அன்றைய காலையில் கஜகஜவென்று ஜன நிறைவுள்ளதாகக் காணப்பட்ட அந்த உன்னத மாளிகை மாலைக்குள் முற்றிலும் காலியாகிவிட்டது. அதன் சொந்தக்காரரான பூஞ்சோலையம்மாளும், அவளது புதல்வியர் இருவரும், பணி மக்களும், கற்பகவல்லியம்மாளும், கண்ணபிரானுமே மிஞ்சி இருந்தனர். விருந்திற்கு வந்த மற்ற எல்லோரும் போய்விட்டதையும், தாங்கள் மாத்திரம் மிகுதியாயிருந்ததையும் உணர்ந்த கற்பகவல்லியம்மாள் தனக் கெதிரில் உட்கார்ந்திருந்த பூஞ்சோலையம்மாளை நோக்கி, "சரி நேரமாகிறது; எங்களுக்கும் உத்தரவு கொடுக்க வேண்டும். சர்வ சாதாரணமான எங்களைத் தாங்கள் பொருட்படுத்தி, வருந்தி உபசரித்து அழைத்து வந்து விருந்துண்பித்து அன்பாகிய மழையைப் பெய்து, எங்களைக் கௌரவப் படுத்தி ஆநந்தக் கடலில் ஆழ்த்தியதைப் பற்றி, எங்களுடைய மனசில் உண் டாகும் நன்றி விசுவாசத்தை நாங்கள் எப்படி தெரிவித்துக் கொள்ளப் போகிறோம் என்பது தெரியவில்லை. நாங்கள் தங்க ளுடைய பங்களாவிற்குப் பக்கத்திலுள்ள அதே ஜாகையில் இருப் பவர்கள். தங்களுடைய அபிமானமும் ஞாபகமும் எப்போதும் மாறாமல் எங்கள்மேல் இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப் பத்திலும், தாங்கள், காலாலிடும் வேலையைத் தலையால் செய்ய நாங்கள் காத்திருப்போம். நாங்கள் உத்தரவு பெற்றுக் கொள்ளு கிறோம்" என்று பணிவாகவும், நயமாகவும் கூறி வேண்டிக் கொண்டாள்.

அதைக் கேட்ட பூஞ்சோலையம்மாள் அன்பாகப் புன்னகை செய்து, "தங்களுக்குக் கூடவா அவசரம்? மற்றவர்கள் தான் தூரமான இடங்களில் இருப்பவர்கள்; அவர்கள் போனது நியாயந்தான். தாங்கள் இதோ பக்கத்தில் இருப்பவர்கள். அங்கே இருந்தாலென்ன? இங்கே இருந்தாலென்ன? தங்களுடைய ஸரஸ

குணத்தையும், சுத்தமான மனசையும், தங்கள் புத்திரருடைய தங்கமான குணத்தையும் பார்க்கப் பார்க்க, தங்கள் இருவரையும் இவ்வளவு சீக்கிரத்தில் அனுப்பி விட எங்கள் மனசு சம்மதிக் கவில்லை. ஆகையால், தாங்கள் இருவரும் இன்னும் நாலைந்து நாள் இவ்விடத்திலேயே சந்தோஷமாக இருந்து விட்டுப் போகலாம். தங்களுடைய குமாரர் இங்கிருந்தே ஆபீசுக்குப் போவதற்குத் தேவையான வசதிகளையெல்லாம் நாங்கள் செய்து தருகிறோம். நாங்கள் மூவரும் தனியாகவே இருப்பதால் தங்களைப்போன்ற விருந்தினர் வந்து எங்களோடு சந்தோஷமாக இருக்கமாட்டார்களா என்று நாங்கள் ஏங்கிக் கிடக்கிறோம். ஆகையால், திடீரென்று மற்ற எல்லோரும் போய்விட்டது போலத் தாங்களும் போய்விட்டால், எங்களுக்கு இந்த இடத்திலேயே இருக்கை கொள்ளாமல் வெறித்துப் போய்விடும்'' என்று மிகுந்த உவப்போடு கூறி உபசரித்தாள்.

அதைக் கேட்ட கற்பகவல்லியம்மாள் சிறிது நேரம் தத்த ளித்து, ''ஆகா! இவ்வளவு அன்பாக எங்களை யார் உபசரிக்கப் போகிறார்கள்! தாங்கள் இவ்வளவு தூரம் சொல்லும்போதும் அதை மறுத்து நான் பேசுவது கொஞ்சமும் அழகல்ல. ஆனால், ஒரு விஷயம் இருக்கிறது. நாங்கள் இருக்கும் ஜாகை தனியான இடம், அங்கே திருடர் பயம் அதிகம். நாங்கள் வீட்டில் இல்லை யென்பது தெரிந்தால், திருடர்கள் பகலிலேயே உள்ளே புகுந்து கொள்ளைடித்து விடுவார்கள். இராத்திரிக் காலத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. இந்த ஒரு தொல்லையைப் பற்றித்தான் நான் யோசிக்கிறேன். இல்லாவிட்டால், இங்கே இருந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பது எங்களுக்குக் கசக்கிறதா'' என்றாள்.

அதைக் கேட்ட பூஞ்சோலையம்மாள், அதற்குத் தான் என்ன விதமான சமாதானம் சொல்வதென்பதை உணராமல் சிறிது நேரம் மௌனமாக இருக்க, அப்போது அந்த அம்மா ளுக்குப் பின்பக்கத்தில் வந்து நின்று கொண்டிருந்த கோகிலாம் பாள் தனது அன்னையின் செவியில் ஏதோ சில வார்த்தைகளைச் சொல்ல, உடனே பூஞ்சோலையம்மாள் கற்பகவல்லியம்மாளை நோக்கி நயமாகப் புன்னகை செய்து, ''திருடர்களைப்

பற்றித்தானே பயப்படுகிறீர்கள்? எங்களுக்கு இந்தப் பங்களாவில் ஒரு சுமார் ஐம்பது வேலையாட்கள் இருக்கிறார்கள். அவர்களுள் இரண்டு மூன்று பேரை அனுப்பித் திண்ணையில் படுத்திருக்கச் செய்வோம். எப்படிப்பட்ட திருடர்கள் வந்தாலும், இவர்கள் தவிடு பொடியாக்கிவிடுவார்கள். ஆகையால் அதைப்பற்றித் தங்களுக்குக் கொஞ்சமும் கவலையே வேண்டாம்'' என்றாள்.

அதைக் கேட்ட கற்பகவல்லியம்மாள் அதற்குமேல் எவ்வித ஆட்சேபமும் சொல்ல மாட்டாமல், "சரி எங்கள் பொருட்டு தாங்கள் எப்படிப்பட்ட ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கத் தயாராக இருக்கையில், நாங்கள் வேறே அநாவசியமாக ஆட்சேபணைகளைச் சொல்லிக் கொண்டிருப்பது ஒழுங்கல்ல. ஆனால், சாண் பிள்ளையானாலும், ஆண்பிள்ளையே அதிகாரி யென்று உலகத்தார் சொல்லுவார்கள். ஆகையால் நான் போய் இந்த விஷயத்தை என்னுடைய பிள்ளையிடத்தில் சொல்லி, அவனுடைய விருப்பம் எப்படி இருக்கிறது என்பதைக் கேட்டுக்கொண்டு வருகிறேன்'' என்றாள்.

பூஞ்சோலையம்மாள் அதற்கிணங்க, உடனே கற்பகவல்லி யம்மாள் பக்கத்து மகாலை நோக்கிச் சென்றாள். அவ்விடத்தில் ஒரு ஸோபாவின் மேல் உட்கார்ந்து சாய்ந்திருந்த கண்ணபிரான் தனது தாய் வந்ததைக் கண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனது மனதில் ஒருவித கவலை உண்டாயிற்று. முகம் மாறுபட்டது. தான் அன்றைய தினம் காலை முதல் மாலை வரையில் அந்தப் பங்களாவிலிருந்தும், கோகிலாம்பாள் முதலிய எவரையும் காண இயலாமல் போனது பற்றி அவன் மிகுந்த கலக்கமும் கலவரமும் அடைந்திருந்தவனாய், மாலைப் பொழுது வந்துவிட்டதைக் கருதி தனது தாய், வீட்டிற்குப் போகத் தன்னை அழைப்பாளோ என்ற கவலையும் சஞ்சலமும் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தி ருந்தான். அந்த நிலைமையில் தனது தாய் வந்ததைக் கண்டு, அவள் தன்னை அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போகத்தான் வருகிறாளென்று உடனே யூகித்துக் கொண்டவனாய், ஒன் றையும் அறியாதவன்போல அந்த அம்மாளை நோக்கி, "ஏனம்மா; வீட்டுக்குப் போகலாமா'' என்று கபடமாக வினவினான்.

அதைக்கேட்ட் கற்பகவல்லியம்மாள், "இல்லையப்பா! நான் வீட்டுக்குப் போகத்தான் புறப்பட்டேன். அவர்கள் விட

மாட்டேன் என்கிறார்கள். நாம் இன்னும் நாலைந்து நாளைக்கு இங்கேயே இருக்க வேண்டுமாம். நீ இங்கே இருந்தபடி இவர்களுடைய வண்டியில் ஏறிக்கொண்டு கச்சேரிக்குப் போவ தற்கு எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொடுக்கிறார்களாம். அந்த இடத்தில் திருடர் பயம் அதிகமென்று நான் சொல்லிப் பார்த்தேன். இந்தப் பூஞ்சோலையம்மாளை விட, அவர்களு டைய மூத்த பெண் அதிக யூகமுள்ளதாக இருக்கிறது. இவர்க ளுடைய ஆள்களில் சிலரை அனுப்பி இராத்திரியில் நம்முடைய வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லலாமென்று அந்தப் பெண் தன்னுடைய அம்மாளுக்கு யோசனை சொல்லிக் கொடுக்கிறது. இவர்கள் நம்மை விடமாட்டார்கள் போலிருக்கிறது. நான் உன் னுடைய பிரியத்தைத் தெரிந்து கொண்டு செல்வதாக சொல்லி விட்டு வந்தேன். நீ என்ன சொல்கிறாய்? இருக்கலாமா போக லாமா?'' எனறு நயமாகக் கூற, அதைக்கேட்ட கண்ணபிரான் பருத்திச் செடி வஸ்திரமாகக் காய்த்ததென்று தனக்குள் எண்ணி மிகுந்த களிப்பும், பூரிப்புமடைந்தான். ஆனாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "எல்லாவற்றிற்கும் நீங்கள் என்னையே கேட்கிறீர்களே! உங்களுக்குத் தெரியாததற்கு நான் என்ன சொல்லப் போகிறேன். உங்களுடைய பிரியம் எதுவோ, அதுவே என்னுடைய பிரியம். நம்முடைய வீட்டுக்குக் காவல் கூடப் போடுவதாக இவர்கள் சொல்வதைப் பார்த்தால்; இவர்கள் வெறும் வாய் உபசாரம் செய்யவில்லையென்பதும், நாம் இங்கே இருக்க வேண்டுமென்று மனப்பூர்வமாகவே விரும்புகிறார்கள் என்பதும், நன்றாகத் தெரிகின்றன; ஆகையால் எப்படிச் செய்வது உசிதமென்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அப்படியே செய்யலாம்'' என்றான்.

அதைக் கேட்ட கற்பகவல்லியம்மாள், தாங்கள் அங்கேயே இருந்து போவதே கண்ணபிரானது விருப்பம் என்று யூகித்துக் கொண்டு, "இவர்கள் அவ்வளவு தூரம் சொல்லும்போது, பிடி வாதமாக மறுத்துவிட்டுப் போவது அழகல்ல; அதனால் இவர் களுடைய மனசு புண்படும். நம்மிடத்தில் எவ்விதக் கைம்மாறும் கருதாமல் இவ்வளவு அபாரமான பிரியத்தை வைத்திருக்கும் இந்த அருமையான மனிதர்களுடைய மனம் வருந்தும்படி நாம் செய்தால், அது விசுவாசம் கெட்டவர்கள் செய்யக்கூடிய காரியம்.

ஆகையால் இன்று ராத்திரியும் நாளைய பகல் முழுவ தும் இருந்து, நாளைய சாயங்காலம் மறுபடியும் நயமாகக் கேட்டுக் கொண்டு போவோம். நாளைய தினம் மாத்திரம் நீ இங்கே இருந்தபடி கச்சேரிக்குப் போய் விட்டு வந்து விடு'' என்று முடிவாகக் கூறினாள்.

அவளது தீர்மானத்தைக் கேட்ட கண்ணபிரானது மனமும், முகமும் சந்தோஷத்தினால் மலர்ந்தன. தனது தாய் செய்த முடிவே சரியான முடிவென்று அவன் உடனே ஒப்புக் கொண் டான். உடனே கற்பகவல்லியம்மாள் அவனை உற்று நோக்கி, ''ஏன் தம்பீ! என்ன உன்னுடைய முகம் வாட்டம் அடைந்தி ருக்கிறது! உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? மத்தியானம் ஏதாவது கொஞ்சம் ஆகாரம் சென்றதா? அவ்வளவு ஜனக் கும்பலில் நான் இங்கே வந்து விசாரிக்கக் கூடாமல் போய் விட்டது. வேண்டுமானால் கொஞ்சம் காப்பியும், பலகாரமும் கொண்டு வருகிறேன். சாப்பிகிடுறாயா?'' என்று அன்பாகக்கேட்க, கண்ணபிரான், ''எனக்கு ஒன்றும் வேண்டாம்; உடம்பு சோம் பலாக இருக்கிறது; தோட்டத்துக்குள்ளே போய்க் கொஞ்ச நேரம் உலாவிவிட்டு வந்தால் சுறுசுறுப்பு உண்டாகும். நான் போய் விட்டு வருகிறேன். நீங்கள் உள்ளே போய், அவர்களுடைய பிரியப்படி இன்றைய தினம் இங்கே இருப்பதாகச் சொல்லி விடுங்கள்'' என்றான்.

உடனே கற்பகவல்லியம்மாள் அவ்விடத்தை விட்டுப் பக்கத்து விடுதிக்குப்போய், அவளது வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த பூஞ்சோலையம்மாளை அணுகி, ''சரி; தாங்கள் எல்லாரும் இவ்வளவு அந்தரங்கமான பிரியத்தோடு சொல்லு வதைத் தடுத்துவிட்டு வீட்டுக்குப்போக, அங்கே அவ்வளவு அவசரமான காரியம் எதுவுமில்லை. தங்களுடைய பிரியப்படி இன்றையதினம் இருக்கிறோம், நாளைய தினமாவது, எங்களை அனுப்புவீர்களோ மாட்டீர்களோ'' என்று நயமாகக் கேட்க, பூஞ்சோலையம்மாள், அவர்கள் இணங்கியதைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சியும் இன்பமும் அடைந்தவளாய்க் கற்பகவல்லியம் மாளை நோக்கி, ''நிரம்ப சந்தோஷமாயிற்று; இன்றைய தினம் நீங்கள் இருப்பதுதான் இப்போது முதல் காரியம். நாளைய சங்கதியைப் பற்றி நாம் இப்போதே எப்படி முடிவு கட்டுகிறது?

அடுத்த நிமிஷத்தில் என்ன நடக்கும் என்பது யாருக்குத் தெரியும்? அது இருக்கட்டும்; பகல் போஜனம் முடிந்து நிரம் பவும் நேரமாகிறது, உங்களுடைய குமாரருக்குப் பலகாரங்கள், காப்பி முதலியவைகளை வேலைக்காரிகளிடத்தில் கொடுத்து அனுப்புகிறேன். அவர் ஒருவேளை வெட்கப்படுவார். நீங்களும் கூட இருந்து, அவர் கொஞ்சமாவது சாப்பிடும்படி செய்ய வேண்டும்'' என்று நயமாக மொழிந்தாள். அதைக்கேட்ட கற்பக வல்லியம்மாள், ''அதைப்பற்றி நானே அவனை இப்போது கேட்டுவிட்டுத்தான் வந்தேன். அவனுக்கு உடம்பு இன்னமும் சரியான நிலைமைக்கு வரவில்லை. மத்தியானம் கூட அவன் அதிகமாக எதையும் சாப்பிடவில்லையாம். அப்படி இருந்தும், அவனுக்கு இன்னும் பசி என்பதே உண்டாகவில்லையாம். தோட்டத்தில் போய் கொஞ்சம் உலாவிவிட்டு வந்தால், ஒரு வேளை உடம்பு சரிப்படுமோவென்று பார்ப்பதாகச் சொல்லி விட்டுப் போயிருக்கிறான். ஆகையால், இப்போது அவனுக்கு எதையும் அனுப்ப வேண்டாம். தோட்டத்திலிருந்து வந்த பிறகு வேண்டுமானால், பார்த்துக் கொள்ளுவோம்'' என்றாள்.

பூஞ்சோலையம்மாள், ''சரி; அப்படியானால், நீங்களாவது கொஞ்சம் பலகாரம் சாப்பிடுங்கள். உங்களை நான் இந்தக் கட்டி டங்களுக்குள் அழைத்துக் கொண்டு போய் எல்லா இடங்க ளையும் காட்ட வேண்டும். வாருங்கள் உள்ளே போகலாம்'' என்று கூறி உபசரித்து கற்பகவல்லியம்மாளை அழைத்துக் கொண்டு உட்புறத்தில் சென்றாள். கற்பகவல்லியம்மாளும், கண்ணபிரானும் அவர்களுடைய ஜாகைக்கு அப்போதே போகாமல் மறுநாள் வரையில் தங்களது பங்களாவிலேயே இருக்கப் போகிறார்கள் என்பதை உணர்ந்த கோகிலாம்பாளும், ஸௌந்தரவல்லியும் மிகுந்த மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்தனர் ஆனாலும், கோகிலாம்பாள் தனது மன நிலைமை இன்னதுதான் என்பதை வெளியில் காட்டாமல் மறைத்துக் கொண்டாள்; ஸௌந்தரவல்லி தனது இயற்கைப்படி தன் மனதில் எழும் உணர்வையோ நினைவையோ மறைக்கமாட்டாதவளாய் உடனுக்குடன் வெளியிட்டு வந்தாள். பூஞ்சோலையம்மாள் கற்பகவல்லியம்மாளுக்குச் சிற்றுண்டிகள் வழங்கி, அந்தப் பங்களாவின் மாட கூடங்களையெல்லாம் காட்டி அவளைச்

சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்த சமயத்தில் கோகிலாம்பாள் இராத்திரி போஜனம் தயாரிப்பதற்குத் தேவையான சாமான்களைக் கொடுக்கச் செய்வதிலும், இன்னமும் தேவையான கிரக காரியங்களை நடத்துவதிலும் கவனம் செலுத்தி, அங்கங்கு போய் உத்தரவுகள் பிறப்பித்து விட்டு, இடையிடையே தனது தாயும் கற்பகவல்லியம்மாளும் இருந்த இடத்திற்குப் போய் அவர்களது சம்பாஷணையின் சாராம்சத்தையும் கிரகித்துக் கொண்டு எல்லாவிடங்களிலும் காணப்பட்டு, ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலேயே கண்ணாயிருக்க வேண்டும் என்பதற்கு இணங்க கருமமே கண்ணாக இருந்தாள். சௌந்தரவல்லியோ, தான் பெருத்த தனிகர் வீட்டுப்பெண்ணாதலால், எந்த வேலையையும் தான் செய்வது கௌரவக் குறைவு என்று நினைத்து நல்ல உடைகளை அணிந்து வைர ஆபரணங்களைத் தவிர மற்றவைகளைக் கையாலும் தொடாமல், வெல்வெட்டுகள் நிறைந்த திண்டு தலையணைகளில் சாய்ந்து சொகுசாகப் படுத்திருப்பதும், அடிக்கடி சிற்றுண்டிகள், காப்பி முதலியவைகளைத் தருவித்து பல வகைப்பட்ட ஷராக்களோட உண்பதும், இடையிடையே தனது தாயும் கற்பகவல்லியம்மாளும் இருந்த இடத்திற்குப் போய் அவர்கள் பேசும்போது தானும் அதற்கு ஏதேனும் உத்தரமோ யோசனையோ சொல்லிக்கொண்டும் இருந்து பொழுதைப் போக்கினாள். கோகிலாம்பாள் சாதாரணமாக ஏழைக் குடும்பங்களிலுள்ள பதிவிரதா ஸ்திரீயின் உழைப்புக் குணமும், பணிவான நடத்தையும், டாம்பீகமற்ற தோற்றமும், அடக்கமான பேச்சுமுடைய குடும்ப ஸ்திரீயாக இருந்தாள். ஆனால் அவளுக்கு நல்ல கூர்மையான புத்தியும், சமயோசிதமான வியவகார ஞானமும், மனிதருக்கு அவசியமாக இருக்க வேண்டிய ஆழ்ந்த யோசனையும் இருந்தன. அதுபோலவே போஜனம் செய்வதிலும், உண்டி சுருங்குதல் பெண்டீர்க்கு அழகு என்ற தன்மை அந்தப் பெண்மணியிடத்தில் இயற்கையிலேயே அமைந்திருந்தது. அவளோடு கூடவே, நாள் முழுவதும் இருந்து பழகும் மனிதருக்கும் கூட, அவள் எப்போது சாப்பிடுகிறாள் என்பதே தெரியாமல் இருக்கும். அவள் பசி, தாகம் முதலிய எவ்விதமான தேகபாதைகளும் இல்லாத தேவலோகத்து மங்கை போலக் காணப்பட்டதுமன்றி, எல்லா விஷயங்களிலும்

அவள் உத்தம ஜாதி ஸ்திரீயின் அமைப்புகளையே பெற்றி ருந்தாள். அவளது சொல்லை வேத வாக்கியமாக அவளது தாயும், எண்ணிறந்த பணிமக்களும் மதித்து அப்படியே எல்லாக் காரியங்களையும் செய்து வந்தனர் ஆனாலும், அவள் தனது அதிகாரத்தைக் கொஞ்சமும் பாராட்டிக் கொள்ளாமலும், அதைப் பற்றி கருவமாவது அகம்பாவமாவது கொள்ளாமலும் அவளே தனது தாய்க்கு அடங்கி ஒடுங்கி நடப்பவள்போல ஒழுகி வந்தாள். ஆனால், ஸௌந்தரவல்லியோ கள்ளம் கபடம் முதலிய துர்க்குணங்கள் உடையவளன்று, ஆனாலும், தான் அதிக அழகுடையவள் என்ற நினைவும், அதிகாரமும், செல்வாக்கும் தனக்கு அபாரமாக இருப்பதால்தான் எல்லோரிடத்திலும் மதிப் பாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்ற நினைவும், குடும்பக் காரியங்களையெல்லாம் தான் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்ற நினைவும், நன்றாக உண்டு, அழகாக உடுத்து சொகுசாகப் படுத்து சுகமாகப் பொழுதைப் போக்குவதே தனக்குரிய காரியமென்ற நினைவும் எப்போதும் மாறாமல் அவளது மனதில் குடிகொண்டிருந்தன. ஆகவே, அந்தப் பெண்பாவையர் இருவரும் அழகிலும், தேக அமைப் பிலும் ஒரே விதமாக இருந்தாலும், குணத்திலும், நடத்தை யிலும், மனப்போக்கிலும் முற்றிலும் வேறுபட்டிருந்தனர். ஆதலால் அவரது அலங்காரங்களும், காரியங்களும் பேச்சுகளும் வெகுவாகப் பேதித்திருந்தன.

அவர்கள் அவ்வாறு இருக்க, தோட்டத்தில் உலாவிவிட்டு வருவதாகத் தனது தாயினிடத்தில் சொல்லிவிட்டுப் போன கண்ணபிரான் அந்த மாடமாளிகைக்குள் பின்புறத்தில் விஸ்தாரமாக நீண்டு காணப்பட்ட சோலைக்குள் நுழைந்தான். அந்தச் சோலையில் தென்னை, கமுகு, சீமைப்பனை முதலிய அற்புதமான மரங்களெல்லாம் பத்தி பத்திகளாகவும், அழகாகவும் வைத்து வளர்க்கப்பட்டிருந்தன. ஆதலால், அந்த இடம் குளிர்ச்சி யாகவும், ரமணீயமாகவும் இருந்ததன்றி, மரங்களைச் சுற்றியும், ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரம் வரையில், சப்த வர் ணங்களைக் கொண்ட அற்புதமான இங்கிலீஷ் பூந்தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கு மிருதுவான அரும்புகள் மெத்தைப்போல் வளர்ந்திருந்த பாதைகளின் மேல் கமான்களும்,

வளைகளும் காணப்பட்டு, அவற்றின் மீது சம்பங்கி, ஜாதி மல்லிகை, மனோரஞ்சிதம் அவைகளில் நிறைந்திருந்த மலர்கள், பரிமள கந்தத்தையும், ஆநந்த சுகத்தையும் அள்ளி அள்ளி வீசின. எங்கு பார்த்தாலும் ரோஜா, மல்லிகை, முல்லை, செண்பகம், பாரிஜாதம், பொன்னலரி முதலிய புஷ்ப ஜாதிகளே நிறைந்து, மலர்ந்து நகைத்து மனிதரை வாருங்கள் வாருங்கள் என்று உபசரித்து வரவேற்பதுபோல விளங்கின. இடையிடையில் தாமரை, அல்லி, நீலோத்பலம் முதலிய மலர்கள் நிறைந்த சிறு சிறு தடாகங்களும், மணல் மேடுகளும், சலவைக்கல் மேடைகளும் அபிரிமிதமாகக் காணப்பட்டன. மரங்கள் தோறும் ஊஞ்சற் பலகைகளும், மின்சார விசிறிகளும், சாய்மான நாற்காலிகளும் தொங்கிக் கொண்டிருந்தன. தென்னை மரங்களும், கமுகு மரங்களும் வண்டி வண்டியாகத் தொங்கிய குலைகளைத் தாங்க மாட்டாமல் வளைந்து வளைந்து நிமிர்ந்தன. பலா மரங்களில் வேரிலிருந்து உச்சி வரையில் பெருத்த பெருத்த கனிகள் உருண்டும் தொங்கியும், வெடித்துத் தேனை ஓட விட்டுக் கொண்டிருந்தன. மாமரங்களிலும், அவற்றின் அடியிலும் கும்பல் கும்பலாக பழங்கள் உதிர்ந்து கிடந்தன. எங்கு பார்த்தாலும் கனிகளின் நறுமணமும், பூக்களின் பரிமள கந்தமும் குளிர்ச்சியும் ஒன்று கூடி தென்றற்காற்றினால் அந்தச் சோலை முற்றிலும் பரப்பப்பட்டு பிரம்மாநந்த மயமாக நிறைந்திருந்தன. எங்குப் பார்த்தாலும் மான்களும், முயல்களும், மயில்களும், குரங்குகளும் சுயேச்சையாகத் திரிந்து, பழங்களைத் தின்று, பளிங்கு போல இருந்த தண்ணீரைப் பருகித் துள்ளிக்குதித்து வேடிக்கையாக விளையாடி இருந்தன. மரக்கிளைகளில் எல்லாம் குயிலினங்கள் நிறைந்து, கந்தருவ கீதம் பாடுவதுபோலத் தமது தீங்குரலை எழுப்பி தேவாமிருதத் துளிகளை ஜிலீர் ஜிலீரென்று வீசிக்கொண்டிருந்தன. அப்படிப்பட்ட சுகங்கள் நிறைந்த மனமோகன இன்பக் களஞ்சியமான அந்தச் சோலையில் நிறைந்திருந்த இன்பங்களால் கவரப்பட்டு, ஆனந்த பரவசமடைந்து அதற்குள் நுழைந்து ஓரிடம் விடாமல் பார்த்துக் கொண்டே நடந்தான். தேவேந்திரனது சிங்கார வனம்போலக் காணப்பட்ட அந்தப் பூஞ்சோலையின் சொந்தக்காரி கோகிலாம்பாள் என்ற நினைவும், அவளை மணந்து அந்தச் சோலையின்

சுகங்களையெல்லாம் எப்போதும் நிரந்தரமாக அனுபவிக்கக் கொடுத்து வைத்த பாக்கியவான் எவனோ என்ற எண்ணமும் கண்ணபிரானது மனதில் தோன்றித் தோன்றி அவனை வருத்த லாயின. அப்படிப்பட்ட லட்சாதிபதியின் புதல்வியை நினைத்து நினைத்துத் தன் மனது வீணாகப் புண்படுகிறதே என்றும், தான் அந்த மடந்தையைக் மணக்க நினைப்பது முடவன் கொம்புத் தேனை எடுக்க விரும்புவது போன்றது என்றும், எண்ணி எண்ணி, அந்த யௌவனப் புருஷன் சித்தப்பிரமை கொண்ட வன்போல எவ்வித நோக்கமும் இன்றித் தனது கால் சென்ற இடத்திற்கு எல்லாம் போய்க் கொண்டிருந்தான். பரம ஏழையான தான் பகீரதப் பிரயத்தனம் செய்தாலும் தனக்கு அந்த செல்வமதி கிடைக்கமாட்டாள் என்பது அவனது மனதில் நிச்சயமாகத் தெரிந்தது. ஆனாலும், அவளைப் பற்றிய நினைவும், அவளது அழகிய வடிவமும், அவனது மனதை விட்டு நீங்காமலே இருந்து, அவனது மனதைப் புண்படுத்தி, ஒருவிதமான இன்பத்தையும், சஞ்சலத்தையும் ஊற்றெடுக்கச் செய்து கொண் டிருந்தன. கோகிலாம்பாளது நிகரற்ற அழகையும், குணத்தையும் கண்டு உணர்வு கலங்கி, அறிவு பிறழ்ந்து, ஊணுறக்கமின்றிக் களைத்துத் தளர்வடைந்து தள்ளாடிய நிலைமையில் அவன் அந்த உத்யான வனத்திற்குள் நுழைந்தான். ஆதலால் அந்த இடத்தின் அற்புத அழகும், குளிர்ச்சியும், குயிலின் இன்னோசையும், மலர்களின் மணமும், கனிகளின் கமழ்வும், தென்றலின் சுகமும் ஒன்று கூடி, அவனது வேதனையை ஆயிரங் கோடியாகப் பெருக்கி அவனை உலப்பின. எங்கேயாகிலும் சற்று நேரம் உட்காரலாம் என்ற நினைவினால் தூண்டப்பட்டவனாய், அவன் மரங்களின் கீழ் தொங்கிய சாய்மான நாற்காலியில் உட்கார்ந்தால், தள்ளாடிய அவனது தேகத்திற்கு அது பரமாநந்த சுகமாகத் தோன்றினாலும், அவனது மனம் அவனை அங்கே இருக்க விடாமல் உறுத்தி அடுத்த நொடியில் கிளப்பி விடும். அவன் நடந்த இடங்களில் கைக்குப் பக்கத்தில் பிரம்மாண்டமாக மலர்ந்து வருந்தியழைத்த எண்ணிறந்த ரோஜாப் புஷ்பங்களைப் பார்க்கும்போதெல்லாம், அவைகளுள் ஒன்றைக்கொய்து மோந்து பார்க்க வேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்டு அவனது வலக்கரம் நீண்டது ஆனாலும், அடுத்த நிமிஷம், "சே, இந்தப்

பூவில் என்ன சுகம் இருக்கிறது. கோகிலாம்பாளின் முகத்தைப் பார்க்கக் கூடாமல் போய்விட்டதே! அவள் இந்த மாடங்களில் எங்கேயாவது நின்று எனது திருஷ்டியில் படுவாளா'' என்ற நினைவினால், அந்தப் பூவைப் பறிக்காமல் திரும்பி அந்தக் கட்டிடத்தின் மேன்மாடத்தையும், அதன்மேல் காணப்பட்ட ஏராளமான ஜன்னல்களையும் ஆராயத் தொடங்குவான், அந்த முயற்சியில் ரோஜாப் பூவைப் பற்றிய நினைவே போய்விடும். இடை இடையே மாதுரியமாகக் கூவிய குயிலின் ஒலியில் தனது கவனத்தைச் செலுத்த அவன் முயற்சித்தால் முதல் நாள் கடற்கரையில் கோகிலாம்பாள் பேசிய சொற்கள் அப்போதும் அவனது செவிகளில் கணீர் கணீரென்று புல்லாங்குழலின் ஓசை போல ஒலித்து இன்பத்தைச் சொரிந்து கொண்டிருந்தமையால், மானஸீகமான அந்த இனிய சங்கீதம் அவனது மனதை முற்றிலும் கவர்ந்து கொள்வதால், குயிலின் ஒலி அங்கே உண்டாவதே அவனது மனதில் உறைக்காமல் போய்விடும். அங்கே காணப்பட்ட மாதுளை, மல்கோவா முதலிய பழங்களை அவன் கண்ணால் பார்க்கும்பொழுதே குமட்டல் உண்டாகத் தொடங்கும். அப்படிப்பட்ட பரம சங்கடமான நிலைமையில் அவன் மகா பரிதாபகரமான தோற்றத்தோடு அந்தச் சோலைக் குள் அங்குமிங்கும் அலைந்திருக்க, பொழுதும் கழிந்துகொண்டே இருந்தது. அந்தச் சோலையிலுள்ள எல்லா இடங்களிலும் அவன் போவதும், பார்த்த வஸ்துக்களையே பார்ப்பதும், மகா வேதனையாக இருந்தன. அவ்விடத்தை விட்டு தான் பங்களா விற்குள் போய், புருஷர்கள் இருக்கும் மகாலுக்குப் போனால், தற்செயலாக தான் கோகிலாம்பாளைப் பார்க்க நேராதா என்ற எண்ணமும் நம்பிக்கையும் அவனது மனத்தில் எழுந்து விட்டுத் திரும்பி கட்டிடங்கள் இருந்த திக்கை நோக்கி நடக்கலானான்.

கட்டிடங்கள் சுமார் 100-கஜத்திற்கு அப்பாலிருந்தமையால் அவன் தனது கவனத்தையெல்லாம் வேறிடத்தில் வைத்துக் கொண்டே அந்தக் கட்டிடங்களை நோக்கி நடந்து வந்து கொண் டிருந்தான். அவ்வாறு வந்தவன் திடீரென்று தற்செயலாக மேன் மாடத்தை நோக்க, அவ்விடத்தில் அந்த மடந்தையர் இருவருள் ஒருத்தி நின்று உலாவிக் கொண்டிருந்ததைக் கண்டு சடக்கென்று அங்கேயே நின்றுவிட்டான். அவள் அடி முதல் முடி வரையில்

ஜில்ஜில்லென்று டால் வீசிய வைர ஆபரணங்களையே அணிந்து ஜெகஜ்ஜோதியாக இருந்ததைக் கண்டு அவன் பிரமித்து ஸ்தம்பித்து மதிமயங்கி அவளது அற்புத அழகில் தனது மனத்தையும், கண்களையும் லயிக்க விட்டு அப்படியே சிறிது நேரம் ஒய்ந்துவிட்டான். ஆனால் கோகிலாம்பாளும், சௌந்தர வல்லியும் ஒரேவித வடிவத்தினராக இருந்தனர் என்பதை அதற்கு முந்திய நாளே அவன் கண்டவன் ஆதலால், அவள் தனது மனத்தைக் கொள்ளைகொண்ட கோகிலாம்பாளோ, அல்லது, அவளது தங்கையான சௌந்தரவல்லியோ என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரியாமையால், அவன் தேனில் வீழ்ந்த ஈயைப்போல ஆநந்த வெள்ளத்தில் வீழ்ந்து மிதந்து தத்தளித்துக் கனவு காண்பவன்போல நிலைகலங்கி நின்றான். தான் அவ்வாறு வெறித்துப் பார்ப்பது தவறென அவனது பகுத்தறிவு அவனைக் கண்டித்தது. ஆனாலும், அவனது சித்தமும் தேகமும் பிடிவாத மாக அவ்விடத்திலேயே நின்றுவிட்டன. கண்கள் ஒரே நிலையில் நின்று அவளது அழகை அள்ளி அள்ளிப் பருகுகின்றன. அவனது மனமும் பஞ்சேந்திரியங்களும் குளிர்ந்து பரவசமடைகின்றன. அந்த நிலைமையில் அவன் சிறிது நேரம் அப்படியே நிற்க, அந்தப் பொற்பாவை உலாவிய வண்ணம் சற்று தூரம் போய் விட்டுத் திரும்பியபோது தற்செயலாகக் கீழே நோக்கினாள். அப்போது மேலே பார்த்த வண்ணம் வியப்பே வடிவாக நின்று கொண்டிருந்த கண்ணபிரானைக் கண்ட அந்த யௌவன மடமான் மிகுந்த களிகொண்டவள்போல அவனை உற்று நோக்க, அவளது சுந்தரவதனம் அப்போதே தளையவிழ்த்து விரியும் தாமரை மலர்போல விகசித்துப் புன்னகை செய்து அவ்வாறே ஒரு நிமிஷமிருந்து அடுத்த நிமிஷத்தில் நாண மடைந்து கீழே கவிழ்ந்து கொண்டது. இன்னொரு நொடியில் அந்த அற்புத வடிவமே அப்பால் மறைந்து போய்விட்டது. ஆகாயத்தில் முளைத்தெழும் குளிர்ந்த பூரண சந்திரன் கரு மேகத்தில் மறைந்து காணாமற்போனால் எங்கும் இருள் நிறைவதுபோல கண்ணபிரானது மனதும், அவன் பார்த்த திசைகளும் இருள் சூழ்ந்து போய்விட்டன. அவளது வசீகர முகத்தில் புன்னகை தோன்றியது. கூர்மையான ஈட்டியொன்று அவனது ஹிருதய கமலத்தில் சுருக்கென்று பாய்வதுபோலவும்,

அவள் திடீரென்று மறைந்தது அந்த ஈட்டி அவனது உயிரையே பறித்துக் கொண்டு போய்விட்டது போலவும், இருந்தன. அவன் அரைக்கால் நாழிகை நேரம் வரையில் திக்பிரமை கொண்டவன்போலப் பொறிகலங்கி அறிவு குலைந்து தடுமாறி அப்படியே நின்றான். அவள் கோகிலாம்பாளோ, அல்லது சௌந்தரவல்லியோ என்ற முதல் சந்தேகமே நீங்காமல் அவனை வதைக்கத் தொடங்கியது. கோகிலாம்பாள் அன்னிய புருஷரிடத்தில் அடக்கமாகவும், ஜாக்கிரதையாகவும்நடந்து கொள்ளக் கூடியவளாதலால்,அவள் தன்னைக் கண்டு நகைத்திருப்பாளா என்ற ஐயம் தோன்றியது. இருந்தாலும் ஸ்திரீகளின் மனதை அறிவது கடினம். ஆதலால், ஒருவேளை மற்றவர்களுக்கு எதிரில் கோகிலாம்பாள் எச்சரிப்பாகவும், நாணத்தோடு நடந்தாலும் தான் தனியாக இருப்பது பற்றியும், தான் முதல் நாள் அவர்களது உயிரைக் காப்பாற்றினவன் என்பது பற்றியும், அவ்வாறு தன்னிடத்தில் மாத்திரம் வேண்டுமென்றே அவள் பட்சமாக நடந்திருக்கக் கூடாதா என்ற யோசனையும் தோன்றியது. அதுவும் தவிர, அவளும் மற்ற மனித ஜனங்களைப் போல வெறுப்பு, விருப்பு, சந்தோஷம் முதலியவைகளைக் காட்டும் தன்மையுடைய அறியாத பெண்தானே என்றும், ஆகையால், அவளாக இருந்தால் சிரித்திருக்க மாட்டாள் என நிச்சயிக்க முடியாதென்றும், கண்ணபிரான் தனக்குள்ளாகவே வாத தர்க்கங்கள் செய்து கொண்டான்.

தங்களை நிரம்பவும் வருந்தி அழைத்து விருந்தை நடத்துவதற்கு கோகிலாம்பாளே முக்கிய காரணமானவள் என்பது பூஞ்சோலையம்மாள் அன்றைய காலையில் சொன்ன வார்த்தைகளிலிருந்து தெரிந்ததன்றி, முதல் நாளிரவு முற்றிலும், தன்னைப் போல அவளும் ஊணுறக்கமின்றி நோயிற்பட்டுக் கிடந்து வேதனை அடைந்திருந்தாள் என்பதும் தெரிந்தது, ஆகையால், அவளும் தன் விஷயத்தில் ஏதோ அந்தரங்கமான நினைவைக் கொண்டிருக்கிறாள் என்ற ஒரு சந்தேகம் அவனது உள்ளத்தில் தலைகாட்டி மறைந்து கொண்டிருந்தது. அவளது அந்தரங்கமான தயையும், பிரியமும் மாத்திரம் தனக்கு இருக்குமானால், தன்னைப்போன்ற மகா பாக்கியசாலி இந்த உலகத்திலேயே எவனும் இருக்க மாட்டான் என்ற எண்ணமும், நம்பிக்கையும்,

மனவெழுச்சியும் உண்டாயின. அவள் ஒருகால் சௌந்தரவல்லி யாக இருந்தால், அவள் தன்னைக் கண்டு புன்னகை செய்ததி லிருந்து, அவளும் தன்னிடத்தில் பிரியம் வைத்திருக்கிறாள் என்பது தெரிந்தது, ஆனாலும், அவனது மனம் அவளிடத்தில் அவ்வளவாகச் செல்லவில்லை என்பதை அவனே நன்றாக உணர்ந்தான். ஆகவே, அவன் கோடானுகோடி எண்ணங் களினால் வதைக்கப்பட்டவனாய், எவ்வித முடிவும் செய்ய மாட்டாதவனாய் மயங்கிக் கலங்கி அவ்விடத்திலேயே நின்று அவள் மறுபடியும் திரும்பி வந்து தனக்கு காட்சி கொடுப்பாளோ என்று சந்தேகித்து ஏங்கித் தாமரை இலை தண்ணீர் போலத் தத்தளித்து நின்றான். அவ்வாறு, கால்நாழிகை சென்றது. அரை நாழிகை, ஒரு நாழிகையும் கழிந்தது. அந்த மின்னாள் திரும்பி வராமலே போய்விட்டாள். பார்த்துப் பார்த்து அவனது விழிகள் பூத்துப் போயின. மேலே அண்ணாந்து பார்த்ததால் அவனது கழுத்தும் தோள்பட்டைகளும் நோக ஆரம்பித்தன. ஆகாரம் இல்லாமையால், தேகம் தளர்வடைந்து நிற்க மாட்டாமல் தவித்தது. கால்கள் தடுமாறின. கண்கள் இருண்டன. அங்கேயே நின்று கொண்டிருக்க வேண்டும் என்ற சபலம் அவனை அவ் விடத்திலேயே இழுத்து வைத்தது. ஆனாலும், அவள் திரும்பி வரமாட்டாள் என்ற எண்ணமும், தான் கொண்ட விருப்பமும், எதிர்பார்த்த விஷயமும் பலியாவென்ற உறுதியும் வலுவாக உண்டாகிக் கொண்டிருந்தன. கடைசியாக, அவன் நிற்கமாட் டாமல் கீழே விழுந்து விடக்கூடிய கேவல நிலைமைக்கு வந்து விட்டமையால், அவன் தனது இச்சைக்கு மாறாக அவ்விடத்தை விட்டுப் போய் கட்டிடத்திற்குள் நுழைய நேர்ந்தது.

அப்போது மாலைவேளை வந்துவிட்டது. ஆகையால் எங்கும் மின்சார தீபங்கள் சப்த வர்ணங்களில் நவரத்தின மணிகள் போலக் குலை குலையாகத் தொங்கி, அந்த இடம் மாயமந்திரத்தால் நிருமாணிக்கப்பட்ட மோகினி தேவியின் சோபன மாளிகையோ எனத் தோன்றியது. ஆகையால், ஏழ் மையான இடத்திலிருந்து எளிய பொருட்களையே கண்டு பழகிய கண்ணபிரான் திடீரென்று அப்படிப்பட்ட கந்தருவ லோகத்தில் தான் கொண்டு வரப்பட்டிருந்ததையெண்ணி எண்ணித் தான் காண்பது கனவோ நினவோ என அடிக்கடி

அயிர்த்தவனாய் நடந்து முன்னிருந்த அழகிய மகாலை அடைந்தான்.

அதற்குள் அங்கே வந்து அவனது வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த கற்பகவல்லியம்மாள் அவனது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு நிரம்பவும் பதறிப்போய்த் தனது கைகளைப் பிசைந்துகொண்டு, "அப்பா! தம்பீ! என்ன இது? உனக்கு உடம்பு என்ன செய்கிறது? ஏன் இப்படித் துவண்டு தள்ளாடி விழுகிறாய்? உள்ளதை வெளிப்படையாகச் சொல்; ஏன் மறைக்கிறாய்? வேண்டுமானால், ஒரு டாக்டரை வரவழைத்துக் கைபார்த்து மருந்து கொடுக்கச் சொல்லலாம்; இது அன்னியர் இடமாயிற்றே என்று லஜ்ஜைப் படாதே. இந்தமாதிரி உடம்பு அசௌக்கியமாக இருக்கிறது என்பதை இந்த வீட்டு எஜமானியம்மாளும், அவர்களுடைய பெண்களும் கேட்பார்களானால் நிரம்பவும் பதறிப் போய், உடனே, இதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்கள். இவர்கள் எல்லோரும் தங்கமான மனிதர்கள். இந்த இரு பகலுக்குள் இவர்கள் ஆயிரங்காலம் பழகினவர்கள் போல ஆய்விட்டார்கள். என்னிடத்தில் தங்களுடைய உயிரை வைத்து, என்னைத் தரையில் விடமாட்டேன் என்கிறார்கள். இப்படிப்பட்ட வர்களிடத்தில் நாம் வித்தியாசம் பாராட்ட வேண்டியதில்லை. உண்மையைச் சொல்; நான் போய் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்று மிகுந்த வாத்சல்யத்தோடு கூற, அதைக் கேட்ட கண்ணபிரான், "அம்மா! எனக்கு உடம்பில் ஒன்றுமில்லை. பித்தம் கொஞ்சம் அதிகரித்திருப்பதால், ஆகாரம் உள்ளே செல்லமாட்டேனென்கிறது; சாப்பாட்டைக் கண்டால் ஒக்காளம் வருகிறது. அதற்கு ஒருதரம் பேதிக்குச் சாப்பிட்டால், சரிப்பட்டுப் போகும்; இந்த சாயங்கால வேளையில், அதற்கு ஒன்றும் பரிகாரம் செய்ய முடியாது. இன்றைய ராத்திரியும் சாதம் சாப்பிடாமல் லங்கணம் போட்டால் உடம்பு நாளைக்குள் படிமானத்துக்கு வந்து விடும். அவர்களிடத்தில் இந்தப் பிரஸ்தாபத்தையே நீங்கள் எடுக்க வேண்டாம்" என்றான். கற்பகவல்லியம்மாள் மிகுந்த அருவருப்போடு பேசத் தொடங்கி, "நித்திய தரித்திரமாகவே இருக்க வரம் வாங்கி வந்திருக்கிறவர்களை குபேரனுடைய மாளிகையில் கொண்டு போய் வைத்தாலும், அங்கே இருக்கும்

அபாரமான சம்பத்தைப் பார்ப்பதற்குக் கூட முடியாமல் அவர்களுக்கு உடனே கண் அவிந்து போய்விடாதா! பரம ஏழையாகிய நம்மை இவர்கள் கொணர்ந்து வைத்துக்கொண்டு அன்பை மழையாகப் பொழிந்து, மரியாதையை அள்ளிச் சொரிந்து நம்மை சந்தோஷப்படுத்தி, பரஸ்பரம் நம்முடைய அன்பையும் பிரியத்தையும் அடைய விரும்புகிறார்கள். நீ பட்டினி கிடந்து வலிக்காரன்போல, சுணங்கிச் சுணங்கி மூலையில் படுத்துக்கொண்டு மூக்கால் அழுகிறாய். இன்று காலையிலிருந்து, உனக்காக இவர்கள் பணத்தையும், சாமான் களையும் அள்ளி இறைத்து உன்னை சந்தோஷப்படுத்த எவ்வளவோ பாடுபடுகிறார்கள். இவர்களுடைய ஜாகையிலுள்ள தண்ணீர் கூட உனக்கு விஷமாகப் போய்விட்டதே, என்னவோ நான் செய்த பூஜா பலனும் நீ வாங்கி வந்த வரமும் இவ்வளவு தான் போலிருக்கிறது. இன்றைய பகல் விருந்தில், கும்பலில் கோவிந்தம் போடுவதுபோல நீ என்ன செய்தாயென்பது தெரியாமல் போய்விட்டது. நீ ஒன்றையும் சாப்பிடவில்லை என்பதை வேலைக்காரர்களிடத்தில் கேட்டு அவர்கள் தெரிந்து கொண்டு உன்னுடைய தேகஸ்திதியைப் பற்றிக் கவலைப்பட்டு ஆயிரம்தரம் கேட்டு விட்டார்கள்; இப்போதும் உனக்கு நல்ல விருந்து தயாரித்திருக்கிறார்கள். நீ இப்போதாவது மனம் பிடித்துக் கொஞ்சம் சாப்பிடுவாயென்று நான் நினைத்தால், நீ லங்கணம் போடுவதாகச் சொல்லுகிறாய்; இது உனக்கே சரியாக இருந்தால் சரிதான்'' என்று நிரம்பவும் நிஷ்டூரமாகவும் விசனமாகவும் பேசினாள்.

அதைக்கேட்ட கண்ணபிரான் பணிவாகவும் நயமாகவும் பேசத் தொடங்கி, "என்ன அம்மா! இப்படிப் பேசுகிறீர்களே! நீங்கள் கோபமாகப் பேசுவதைப் பார்த்தால் நான் வேண்டு மென்று இப்படி வேஷம் போடுகிறென்று நினைப்பதுபோல் இருக்கிறதே. எனக்கென்ன இவர்களின் மேல் மனஸ்தாபமா? அப்படி மனஸ்தாபம் இருந்தால், இங்கே வர முடியாது என்று காலையிலேயே நான் சொல்லியிருக்க மாட்டேனோ? அதெல்லாம் ஒன்றுமில்லை. நேற்று இராத்திரி முதல் என்னு டைய உடம்பு இருந்த நிலைமை உங்களுக்குத் தெரியாதா? ஏதோ பெரிய மனிதர்கள் பிரியமாகக் கூப்பிடும்போது, மறுக்கக்

கூடாதென்று ஒப்புக் கொண்டதுதானே! எல்லாச் சங்கதியும் உங்களுக்குத் தெரிந்திருந்தும் நீங்கள் இப்படி கோபித்துக் கொள்ளுகிறீர்களே! போனது போகட்டும். என்னுடைய உடம்பின் ஸ்திதியைப் பற்றிய பிரஸ்தாபத்தையே நீங்கள் அவர்களிடத்தில் எடுக்க வேண்டாம். நான் இந்த இராத்திரி போஜனத்தையாவது கொஞ்சம் சாப்பிட முயற்சி செய்து பார்க்கிறேன். அவர்கள் யாரும் என் விஷயத்தில் சந்தேகம் கொள்ளாமல் நடந்து கொள்வது என்னைச் சேர்ந்த பொறுப்பு; நீங்கள் கவலைப்பட வேண்டாம்'' என்று கூறினான்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள், ''சரி, எப்படியாவது கொஞ்சம் சாப்பிட்டதாகப் பெயர் பண்ணி, இன்றைய இரவுப் பொழுதைக் கடத்து. பொழுது விடிவதற்குள் சரியாகி விடாதா, பார்க்கலாம்'' என்று கூறி, அவனை அங்கேயே இருக்கச் செய்துவிட்டு உட்புறம் போய்விட்டாள்.

அதன்பிறகு அன்றைய தினம் இராத்திரிப் போஜனம் நடைபெற்றது. பகலில் வந்து கூடியிருந்த ஆண் விருந்தினர் எல்லோரும் போய்விடவே, கண்ணபிரான் தனியாகவே உட்கார்ந்து விருந்துண்ண நேர்ந்தது. தனது புதல்வன் அன்னியர் பரிமாறினால் லஜ்ஜைப்படுவானோ என்ற காரணத்தைக் கூறி கற்பகவல்லியம்மாளே அவனுக்கு இலைபோட்டுப் பரிமாறத் தொடங்கினாள்; பூஞ்சோலையம்மாளும் இடையிடையே நெய், பக்ஷண பலகாரங்கள், பாயஸம் முதலியவற்றை எடுத்து வந்து, வெட்கப்படாமல் நன்றாகச் சாப்பிடும்படி உபசார வார்த்தைகள் கூறி தாராளமாகப் பரிமாறத் தொடங்கினாள். தேவாமிருதத்தின் இனிமையைத் தோற்கச் செய்யும் அதிமாதுரியமான பதார்த்தங்கள் எல்லாம், கண்ணபிரானுக்கு வேப்பங்காய் போலக் கசந்து குமட்டல் உண்டாக்கின. ஆனாலும், தனது தாயும், பூஞ்சோலையம்மாளும், தனது நிலைமையைக் கண்டு கொள்ளாதிருக்க வேண்டும் என்ற நினைவினால், அவன் நிரம்பவும் பாடுபட்டு, சிற்சில வஸ்துக்களைப் பல்லைக் கடித்துக் கொண்டு உள்ளே செலுத்தி, ஏதோ ஆகாரம் செய்துவிட்டதாகப் பெயர் பண்ணி விட்டு எழுந்து கைகால்களை அலம்பிச் சுத்தி செய்து கொண்டபின், அவனுக்காக குறிப்பிட்ட ஒரு கட்டிலில்

சயனித்துக் கொண்டான். அவன் அவ்வாறு வலுகட்டாயத்தின் மேல், சிறிதளவு போஜனம் செய்ததனால், அவனது தாகவிடாய் தணிந்தது. ஆனாலும், மோகவிடாய் முன்னிலும் அதிகரித்தது. மேன்மாடத்தில் தேஜோ மயமாக நின்று சிரித்த சுந்தரமான முகம் அப்போதும், அவனது உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பருகிக் கொண்டிருந்தது. அவன் விவரிக்க முடியாத பரம வேதனை அடைந்தவனாய் அந்தக் கொடிய இரவைக் கழித்துக் கொண்டிருந்தான்.

அவனது நிலைமை அவ்வாறிருக்க, கற்பகவல்லியம்மாள், பூஞ்சோலையம்மாள், கோகிலாம்பாள், சௌந்தரவல்லி முதலிய நால்வரும் ஒரு பந்தியாக உட்கார்ந்து விருந்துண்ணத் தொடங்கி, நெடுநேரம் வரையில் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்த படியே தங்களது போஜனத்தை முடித்துக் கொண்டு எழுந்தனர். கற்பகவல்லியம்மாளுக்கு மாத்திரம், தனது புதல்வன் கால்வயிறு கூட உண்ணவில்லையென்பது தெரிந்தமையால், அது அவளது நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்தது. ஆனாலும், தானும் அவர்கள் சந்தேகப்படும்படி நடந்து கொள்ளக் கூடாதென்ற எண்ணத்தினால், பூர்த்தியாக விருந் துண்டு, பூஞ்சோலையம்மாளிடத்தில் தனது மனதை விட்டு ஒரு குழந்தை போல வெகு தாராளமாகவும் வேடிக்கையாகவும் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள்.

அவ்வாறு அவர்களது சாப்பாடு முடிந்த பிறகு அவர்களுக்கு இருந்த உற்சாகமும், மனவெழுச்சியும் கட்டிலடங்காது இருந்தமையால், வேலைக்காரிகளையெல்லாம் தங்களது போஜனத்தை முடித்துக் கொண்டு படுக்கும்படி சொல்லியனுப்பி விட்டு, அவர்கள் தங்களது இன்பகரமான சம்பாஷணையை மேலும் நடத்தலாயினர். கற்பகவல்லியம்மாளும், பூஞ்சோலையம்மாளும் எதிரெதிராக இருந்த இரண்டு ஸோபாக்களின் மீது உட்கார்ந்து கொண்டனர். கோகிலாம்பாள் ஒருபுறமாக விரிக்கப்பட்டிருந்த ஒரு ஜமக்காளத்தின்மீது கற்பகவல்லியம்மாள் பார்க்காதபடி மறைவாக உட்கார்ந்து கொண்டாள்; சௌந்தரவல்லி வழக்கமாக ஒவ்வொரு நாளிலும் தான் சயனித்துக் கொள்ளும் சொகுஸான ஒரு மஞ்சத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு 'அப்பாடா' என்று சொல்லிக் கொண்டு திண்டுகளில் சாய்ந்து கொண்டாள்.

அதைக்கண்ட பூஞ்சோலையம்மாள் தனது இளைய குமாரியின் மீது ஒருவாறு அதிருப்தியடைந்து, "என்ன சௌந்தரா! உனக்கு இவ்வளவு வயசாகியும், கொஞ்சங்கூட புத்தி இல்லையே! சாப்பிட்டுக் கையலம்பவில்லை. இடுப்பொடிந்த கிழவி மாதிரி கட்டிலில் படுத்துக் கொள்ளுகிறாயே! நாள் முழுதும்தான் அந்தக் கட்டிலிலேயே இருக்கிறாயே. பெரியவர்களுக்கு எதிரிலாவது கொஞ்ச நேரம் மரியாதையாக இருக்கக் கூடாதா? உனக்குத் தெரியாவிட்டால் அக்காளைப் பார்த்தாவது நீ கற்றுக் கொள்ளக்கூடாதா? அக்காள் எங்கே இருக்கிறாள் என்பதைப் பார்த்தாயா?" என்று அன்பாகக் கடிந்து கூறினாள்.

அதைக்கேட்ட சௌந்தரவல்லி குதூகலமாக நகைத்து, "அது நம்முடைய சமையற்காரியினுடைய குற்றம்; அவள் அந்த சேமியா பாயஸத்தை அவ்வளவு இனிப்பாக ஏன் செய்தாள்? அது கொஞ்சம் அதிகமாகச் சென்றுவிட்டது; வயிற்றின் பாரம் தூக்க முடியவில்லை. மயக்கம் கீழே தள்ளுகிறது, படுத்துக் கொண்டால் அன்றி உடம்பு சொன்னபடி கேட்காது போல் இருக்கிறது. யார் கோபித்துக் கொண்டாலும், நான் இந்த உடம்பைக் கொஞ்ச நேரமாவது கீழே போடத்தான் போகிறேன்" என்ற வேடிக்கையாக மறுமொழி கூறிய வண்ணம் கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

அதைக்கண்ட பூஞ்சோலையம்மாளது முகம் அதிருப்தியாலும், கோபத்தினாலும் மாறுபட்டது. அவள் அதற்கு மேலும் ஏதோ கடுமையான வார்த்தைகளைச் சொல்ல இருந்த சமயத்தில் கற்பகவல்லியம்மாள் குறுக்கிட்டு, மிகுந்த வாஞ்சையோடு சௌந்தரவல்லிக்குப் பரிந்து பேசத் தொடங்கி, "கோபித்துக் கொள்ள வேண்டாம்; அறியாத குழந்தைகளை இந்த விஷயங்களில் எல்லாம் நாம் கட்டுப்படுத்த முடியாது, நான்தான் உங்கள் வீட்டு மனுஷியாகி விட்டேன்; என்னிடத்தில் அந்தக் குழந்தை பயந்து நடுங்கி அந்நிய மனுஷிபோல மரியாதை செய்ய வேண்டுமா? பாவம், படுத்துக் கொள்ளட்டும்" என்று நயமாகவும் அன்பாகவும் கூறினாள்.

உடனே கோகிலாம்பாளும், தனது தாய் கோபத்தை அதிகமாகக் காட்டி கற்பகவல்லியம்மாளுக்கு முன் விகாரமாக

நடந்து கொள்ளாமல் தடுத்து விட நினைத்து தணிவான குரலில் மிருதுவாகப் பேசத் தொடங்கி, "நான் அப்போதே அந்த வேலைக் காரியிடத்தில் சொன்னேன். அவள் அதைக் கவனிக்காமல் ஒரு முழு ஜாதிக்காயை நெய்யில் பொரித்து, அந்தப் பாயஸத்தில் போட்டு விட்டாள். அதனால் எனக்குக் கூட, கொஞ்சம் மதமத வென்று போதையாக இருக்கிறது. ஸௌந்தராவுக்கு அது கொஞ் சமும் ஸகிக்கக் கூடவில்லை போலிருக்கிறது. அதனாலேதான் படுத்துக் கொண்டு விட்டாள் போலிருக்கிறது" என்று நயமாகக் கூற, அந்தக் குறிப்பை அறிந்த பூஞ்சோலையம்மாள் உடனே தனது அருவருப்பை விலக்கி சந்தோஷமும், புன்னகையும் காட்டிய வதனத்தினளாய்க் கற்பகவல்லியம்மாளை நோக்கி, "சரி, சின்னவர்களுடைய கட்சி பலத்துப் போய் விட்டது. இனிமேல் நம்முடைய கை ஓங்காது. இருந்தாலும் அந்த வேலைக்காரி செய்தது சுத்தத் தப்பான காரியம். ஜாதிக்காய் மகா கெட்டது. நம்முடைய உடம்பு அதைத் தாங்குமா? போடாதே என்று குழந்தை சொல்லியிருக்கும்போதே அவள் ஒரு முழுக் காயை உடைத்துப் போட்டு, எல்லோருடைய உடம்பையும் கெடுத்து விட்டாளே. எனக்குக் கூட உடம்பு ஒரு மாதிரி யாகத்தான் இருக்கிறது. அது உள்ளே புகுந்து கொண்டு ஏதோ தொந்தரவு செய்கிறது. நம்முடைய ஸௌந்தரவல்லி இருக்கி றாளே, அவளுடையது நிரம்பவும் மெலுக்கான உடம்பு; ஸ்நானம் செய்கிற வெந்நீரில், சூடு கொஞ்சம் அதிகமாக இருந் தால், அவள் போடுகிற கூச்சலில் ஊரே கிடுகிடுத்துப் போகும். அவளுக்கு இவ்வளவு வயசாகியும், அவள் எந்த விஷயத்திலும் பச்சைக் குழந்தை மாதிரி இருக்கிறாள். இவளுடைய விஷயந் தான் எனக்கு நிரம்பவும் கவலையாக இருக்கிறது. இப்படிக் குழந்தை மாதிரியே அவள் இருந்தால் நாம்தான் ஏதோ பொறுத்துக் கொண்டிருக்கிறோம். புருஷன் வீட்டுக்குப் போனால், அவர்கள் பொறுப்பார்களா? நம்முடைய வயிற்றில் பிறந்த குழந்தை யாயிற்றே என்று நாம் என்னவோ தள்ளிக் கொண்டு போகி றோம்; அவள் எப்படிப்பட்ட சீமான் வீட்டுக்குப் போனாலும், அவர்களுக்குப் படிந்து, அவர்களுடைய ஸௌகரியப்படி நடக்க வேண்டுமேயன்றி, அவளுடைய ஸௌகரியப்படி அவர்கள் நடக்க மாட்டார்கள் அல்லவா?" என்றாள்.

*கற்பகவல்லியம்மாள்:* - அப்படியல்ல. சில குழந்தைகள் தாய் வீட்டில் இருக்கும்போது முதலே விவேகமும், அடக்கமும், விநயமும் உடையவர்களாக இருக்கிறார்கள். சிலர் தாய் வீட்டில் இருக்கையில் எவ்விதப் பொறுப்பையும் உணராமல், தங்களுடைய உடம்பை மெலுக்காகக் காப்பாற்றி, துரும்பு எடுத்துத் துரும்போடு போடாமல் விளையாட்டுப் புத்தியோடு இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மாமியார் வீட்டுக்குப் போனவுடனே தங்களுடைய பொறுப்பை உணர்ந்து சடக்கென்று மாறிப்போய் அவர்களுக்கு சமமானவர்கள் யாருமில்லையென்று மாமியார் வீட்டாரே புகழும்படியாக நடந்து கொள்ளுகிறார்கள். பெண்கள் இப்படி மாறும் தன்மையை நான் நெடுநாளாக அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட குணமுடையதுதான் இந்தக் குழந்தையும் என்று நான் நினைக்கிறேன். இதைப்பற்றி நீங்கள் கவலைப்படவே தேவையில்லை; எல்லாம் காலக்கிரமத்தில் சரியாகப் போய்விடும்; அது கிடக்கட்டும். எங்களைப் போன்ற ஏழை ஜனங்களுக்குத்தான் இப்படிப்பட்ட கவலை இருக்கவேண்டியது நியாயம். தாங்களோ கோடீசுவரர்கள். தங்களுடைய குழந்தைகள் எப்படிப்பட்ட செல்வாக்கிலும், சுகத்திலும் இருக்கலாம். தங்களுக்கு வாய்க்கும் சம்பந்தம், தங்களுக்குச் சமதையானதாகத்தானே இருக்கும். அப்படி இருக்க இந்தக் குழந்தை போனால், அங்கேயும் இப்படிப்பட்ட சுக போகங்களெல்லாம் இருக்குமல்லவா? இந்தக் குழந்தை நல்ல பெரிய இடத்துக் குழந்தையென்பதும் மெலுக்காக வளர்ந்தது என்பதும் அவர்களுக்குத்தான் தெரியாமல் போய்விடுமா? இந்தக் குழந்தையை அவர்கள்தான் அநாகரிகமாக நடத்துவார்களா? அப்படி ஒரு நாளும் நடக்காது என்று நாம் உறுதியாக நம்பலாம்.

*பூஞ்சோலையம்மாள் :-* அப்படிச் சொல்லப்படாது. உலகத்தில் பணம் படைத்தவர்கள் எத்தனையோ மனிதர்கள் இருந்தாலும், அவர்களில் துஷ்டர்களும், ஈவிரக்கம் அற்றவர்களும், பிறருடைய யோக்கியதையை உணரமாட்டாதவர்களும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தாங்களே பெரிய மனிதர்கள் என்றும், மற்றவர்கள் எல்லோரும் வயிற்றுச் சோறுக்காகத் தங்களிடத்தில் காத்திருப்பவர்கள் என்றும் நினைத்து மற்றவரைக் கொடுமையாக நடத்துவது உலக

இயற்கை. என்னுடைய மூத்த குழந்தையைப் போல இருந்தால், அவள் எப்படிப்பட்ட மனிதருக்கும் சரியாக நடந்து, அவர்களையே தன் வழிக்குத் திருப்பி விடுவாள். அதுவும் தவிர, அவ்வுழைப்புக் குணமுடையவள்; நல்ல புத்திசாலி; தனக்கென்று எந்தச் சுகத்தையும் நாட மாட்டாள். அப்படிப்பட்டவர்கள் எவருடைய தயவையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. சௌந்தரவல்லிக்கு இடுப்புப் புடவையைத் தானே உடுத்திக் கொள்ளத் தெரியாது. ஆகையால் எந்தக் காரியத்துக்கும் அவள் பிறருடைய கைகளையே பார்க்கக் கூடியவளாக இருக்கிறாள்.

**கற்பகவல்லியம்மாள்:-** (சிறிது யோசனை செய்து) அப்படியானால், ஒரு காரியம் செய்யலாம். கலியாணம் ஆன பிறகு மாப்பிள்ளையை இங்கேயே இருக்கச் செய்தால், அது சரியாகப் போய் விடுகிறது.

**பூஞ்சோலையம்மாள்:-** நீங்கள் சொல்வது நல்ல யோசனைதான். ஆனால், அதில் இன்னோர் இடைஞ்சல் இருக்கிறது. எங்களுக்கு ஏராளமான சம்பத்து இருக்கிறது. அவைகளுக்கெல்லாம் இந்தக் குழந்தைகள் இரண்டையும் தவிர வேறே வாரிசுகள் இல்லை. இவைகளையெல்லாம் பாதுகாத்து நிர்வகிக்க ஆண் பிள்ளைகள் ஒருவரும் இல்லை. ஆகையால், இவர்கள் இருவருக்கும் கலியாணம் செய்து மாப்பிள்ளைகளை இங்கேயே கொண்டு வந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். அப்படி இங்கேயே வந்து விட வேண்டுமானால், அந்த மாப்பிள்ளைகள் ஏழைகளாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் இங்கே வந்திருப்பார்கள். அவர்களும் நம்மைப்போல் தணிகர்களாக இருந்தால், அவர்கள் தங்களுடைய சொத்தையெல்லாம் அலட்சியமாக விட்டு விட்டு இங்கே வந்து நாம் சொல்வதைக் கேட்டு நடக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் இங்கே வருவதாகச் சொல்லி வந்தாலும், கொஞ்ச காலத்தில் எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டு போய்விடவே பார்ப்பார்கள். ஆகையால் தணிகர்களுடைய சம்பந்தம் வேண்டுமென்று இஷ்டப்பட்டால், பெண்கள் அவர்களுடைய வீட்டுக்குப் போகத் தயாராக இருக்க வேண்டும். இந்தச் சொத்துக்களையெல்லாம் இரண்டு பங்காகப் பிரித்துப் பணமாக மூட்டை கட்டி அவர்களோடு கூட கொண்டு போகத்

தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். அது பிடிக்காமற் போனால், அதிகப் பணக்காரராக இல்லாமல் சாதாரணமான நிலைமையில் இருப்பவராகப் பார்த்துத்தான் கட்ட வேண்டும்.

கற்பகவல்லியம்மாள்:- நிரம்பவும் பெருத்த பணக்காரராக இல்லாவிட்டாலும், சுமாரானவர்களாகப் பார்த்துக் கட்டினால், அவர்கள் சந்தோஷமாக இங்கே வந்து இருப்பார்கள். அப்படியே செய்து விட்டாலென்ன?

பூஞ்சோலையம்மாள்:- அப்படிச் செய்வதுதான் உத்தமம். நமக்கு மனிதர் தேவையேயொழிய பணம் தேவையில்லை. நல்ல குணமும், நல்ல நடத்தையும், ஸரஸமான சுபாவமுள்ள மனிதராக இருந்தால், அதுவே போதுமானது. என்னுடைய மூத்த குழந்தை அப்படித்தான் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வந்தது. அதற்குச் சரியான மனுஷ்யாளும் ஏற்பட்டு விட்டார்கள். சின்னக் குழந்தையின் மனப்போக்கு அப்படிப்பட்டதல்ல. தனக்கு வருகிற மாப்பிள்ளை லக்ஷாதி பதியின் பிள்ளையாக இருக்க வேண்டுமாம். தான் ஏழையின் சம்சாரமென்று யாராவது சொன்னால், நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம்போல ஆகி விடுமாம். அவன் அதிக அழகு உடையவனாக இருப்பதோடு, எப்போதும் சொகுசாகவும், டாம் பீகமாகவும் அலங்கரித்துக்கொண்டு, மோட்டார் வண்டியில் அவளையும் வைத்துக் கொண்டு, எந்தவிடத்தில் என்ன வேடிக்கை இருக்கிறது என்று எப்போது பார்த்தாலும் அலைந்து கொண்டே இருக்கக் கூடியவனாக இருக்க வேண்டுமாம். மாப்பிள்ளை ஏழையாக இருந்தால் அவனுக்குப் பெரும் புத்தி இருக்காதாம். அவன் சிக்கனமும் செட்டுமாக இருந்து பிசினாரித் தனம் செய்வானாம். ஆகையால் அவளுக்கு மிக உயர்வான இடத்துப் பிள்ளையைத்தான் கட்டிக்கொள்ள பிரியமாம். அவள் இப்படியெல்லாம் பைத்தியம்போல வாயில் வந்தபடி பிதற்று கிறாள். நாங்கள் எவ்வளவோ புத்திமதி சொல்லி அவளுடைய மனசை மாற்ற முயல்கிறோம்; அவள் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்கிறாள். நாங்கள் ஏதாவது நியாயம் சொல்லப் போனால், அவள் குப்புறப்படுத்து அழத் தொடங்கி விடுகிறாள். மூன்று நாளானாலும் தண்ணீர் குடிக்கக் கூட எழுந்து வருகிற

தில்லை. இந்தப் பிடிவாதத்துக்கு என்ன செய்கிறது? அதுதான் எங்களுக்கு இரவு பகல் கவலையாக இருக்கிறது. எனக்கு கோகிலாம்பாளைப் பற்றிக் கொஞ்சமும் கவலையே இல்லை. இந்தச் சொத்துக்கள் முழுவதையும் ஆண்பிள்ளையின் துணை யின்றி அவள் ஒருத்தியே நிர்வகித்துப் பார்த்துக் கொள்ளுவாள்.

*கற்பகவல்லியம்மாள்:-* முன் காலத்தில் தாய் தகப்பன்மார் பல விஷயங்களையும் ஆழ்ந்து யோசித்து எங்கே கட்டிக் கொடுக் கிறார்களோ, அங்கே பெண்கள் வாழ்க்கைப் படுவார்கள். இப்போது காலம் மாறிப்போய் விட்டது. இங்கிலீஷ்காரருடைய கொள்கையெல்லாம் நம்முடைய தேசத்தில் நிரம்பவும் பரவிப் போய் விட்டது. அவர்களுடைய இஷ்டப்படிதான் பெரியவர்கள் நடக்க வேண்டி வந்துவிட்டது. ஆனால் இதில் முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது. அவரவர்களுடைய விதி ஒன்று இருக்கிறது. அதன்படிதான் ஒவ்வொருவருக்கும் புத்தி போகும். நாம் ஏதோ நம்முடைய அறிவுக்கு எட்டியவரையில், நல்ல காரியத்தைச் செய்ய முயற்சித்தாலும், எதுவும் விதிப்படிதான் நிறைவேறும். சின்னக் குழந்தையின் புருஷரும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறார். அவரை விட்டு வேறொருவர் அந்தக் குழந் தையைத் தொடவும் முடியாது. ஆகையால், நீங்கள் ஏன் வீணில் கவலைப் படுகிறீர்கள்? எல்லாம் அதற்குப் பொருத்தமாகத்தான் வந்து லயிக்கும்.

*பூஞ்சோலையம்மாள்:-* நீங்கள் கடைசியாகச் சொன்னது நூற்றில் ஒரு பேச்சு. மூத்த குழந்தையின் மனப்போக்குக்குத் தகுந்தபடியே அதற்கு வந்து வாய்த்துவிட்டது. அதுதான் எங்களுக்குப் பரம சந்தோஷமாக இருக்கிறது. சின்னவளுக்கு இடம் நிச்சயப்பட்டாலும் படாவிட்டாலும் பெரியவளுடைய கலியாணத்தை அதிசீக்கிரத்தில் முடித்து விட வேண்டும் என்று நாங்கள் நிரம்பவும் ஆவல் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், எங்களுக்கும் ஆண் துணை அத்தியாவசியமாக இருக்கிறது. அதோடு குழந்தை சரியான காலத்தில் புருஷனை அடைந்து சந்தோஷப்படுவதும் முதல் காரியம்" – என்றாள்.

அவ்வாறு தன்னைப் பற்றிப் பேச்சு நடப்பதை உணர்ந்த கோகிலாம்பாள் வெட்கமுற்றுத் தனது முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள்.

உடனே கற்பகவல்லியம்மாள் மிகந்த சந்தோஷமும், மகிழ்ச்சியும் அடைந்து, "அப்படியானால், எங்களுக்கெல்லாம் அதிசீக்கிரத்தில் கலியாணச் சாப்பாடு கிடைக்கும் போலிருக்கிறது" என்றாள்.

பூஞ்சோலையம்மாள் புன்னகை செய்து, "இந்தக் கலியாணமே உங்களுடையது. சாப்பாடெல்லாம் உங்களுடையது. இனி நாங்கள் எல்லோரும் உங்களுடைய மனிதர்கள். நீங்கள் பார்த்து எங்களுக்கு எல்லாம் சாப்பாடு போட்டால், நாங்கள் சாப்பிட வேண்டியது. இல்லாவிட்டால் சும்மா இருக்க வேண்டியது" என்று மகிழ்ச்சியாகக் கூறினாள்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் மிகுந்த வியப்பும் பூரிப்பும் அடைந்து, "அடேயப்பா! எங்களுக்கு எவ்வளவு பெரிய மரியாதை கொடுக்கிறீர்கள்! நாம் ஒரே ஒரு நாள்தான் பழகினோம். அதற்குள் சகலமான அதிகாரத்தையும் எங்களுக்கே கொடுத்து விட்டீர்களே!" என்று வேடிக்கையாகப் பேசினாள்.

பூஞ்சோலையம்மாள், "தடையென்ன! இனி எல்லா அதிகாரமும் உங்களுடையதுதான். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம். மனிதர் எப்படிப்பட்டவர்கள் என்பதை ஒரே நிமிஷத்தில் தெரிந்து கொள்ளலாமே! அதற்கென்ன, வருஷக் கணக்கில் பழக வேண்டுமா?" என்றாள்.

கற்பகவல்லியம்மாள், "தாங்கள் சொல்வது வாஸ்தவந்தான். ஒரு மனிதருடைய குணாதிசயங்களை சுலபத்தில் அறிந்து கொள்ளலாம் என்பது நிஜந்தான். ஆனால் யாரோ வழியில் போகிறவர்கள் நல்ல குணமுடைய மனிதராக இருக்கிறார்கள் என்று எல்லா அதிகாரத்தையும் அவர்களிடத்தில் ஒப்புவித்து விடுவது என்பது மாத்திரம் புதிய சங்கதியாக இருக்கிறது. அதை நான் கேள்வியுற்றதே இல்லை. என்னவோ உலகத்தில் மற்ற எவருக்கும் கிடைக்காத புதுமையான அதிகாரம் எங்களுக்குக் கிடைக்கிறது. தாங்களாகப் பார்த்துக் கொடுக்கும் பெருமையை நாங்கள் வகிக்க முடியாது என்று சொல்வது ஒழுங்கல்ல. அதிருக்கட்டும். கலியாணத்துக்கு இடம் நிச்சயமாகியிருப்பதாகச் சொன்னீர்களே; நிச்சய தாம்பூலம் மாற்றியாகி விட்டதா? இனிமேல்தான் மாற்ற வேண்டுமா?" என்றாள்.

பூஞ்சோலையம்மாள் மிகுந்த மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்தவளாய்ப் பேசத் தொடங்கி, "கலியாணம் இன்றையத் தினம் பகலில்தான் நிச்சயிக்கப்பட்டது. பொழுது விடிந்தவுடன், புரோகிதரை வரவழைத்து நிச்சயதார்த்தத்துக்கு நாள் பார்க்க வேண்டும்'' என்றாள்.

கற்பகவல்லியம்மாள், "தாங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே! இன்றைய தினம் காலை பத்து மணி முதல் நான் தங்களோடு கூடவே இருக்கிறேன். இந்தக் கலியாணத்தைப் பற்றிய பேச்சையே தாங்கள் யாரிடத்திலும் பேசவில்லையே! ஒரு வேளை தபாலில் ஏதாவது கடிதம் வந்திருக்கிறதோ என்னவோ! – அது எப்படியாவது இருக்கட்டும் மாப்பிள்ளை இருப்பது எந்த ஊர்?'' என்றாள்.

பூஞ்சோலையம்மாள் சந்தோஷமாக சிரித்துக் கொண்டு, "மாப்பிள்ளையின் இருப்பிடம் இதோ இந்தப் பங்களாவுக்குப் பக்கத்திலேதான் இருக்கிறது'' என்றாள்.

**கற்பகவல்லியம்மாள்:-** அப்படியானால், அவர்கள் எங்களுக்குத் தெரிந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

**பூஞ்சோலையம்மாள்:-** தெரிந்தவர்கள்தான்.

**கற்பகவல்லியம்மாள்:-** பையன் படிக்கிறானா? உத்தியோகத்தில் இருப்பவனா?

**பூஞ்சோலையம்மாள் :-** உத்தியோகத்திலிருப்பவர்தான்.

**கற்பகவல்லியம்மாள்:-** பையனுடைய தகப்பனாருக்கு ஏதாவது உத்தியோகம் உண்டா?

**பூஞ்சோலையம்மாள்:-** அவருக்கு இப்போது தகப்பனார் இல்லை; தாயார் மாத்திரம்தான் இருக்கிறார்கள்.

**கற்பகவல்லியம்மாள்:-** (முற்றிலும் வியப்பும் திகைப்பும் அடைந்து) அது யாரென்பது தெரியவில்லையே! தாயும் பிள்ளை யுமாக இருக்கிறவர்கள்; பிள்ளை உத்தியோகம் செய்கிறவர்; எங்களுடைய வீட்டுக்குப் பக்கத்தில் அப்படிப்பட்ட மனிதர்கள் யாரும் இல்லையே! ஆனால், எங்களுடைய வீடு தங்களுடைய பங்களாவுக்கு மேற்கே இருக்கிறது. அவர்களுடைய வீடு ஒருவேளை கிழக்கே இருக்குமோ?

பூஞ்சோலையம்மாள்:- (மகிழ்ச்சியாக புன்னகை செய்து) என்ன நீங்கள் இப்படி பேசுகிறீர்களே! உங்களுடைய வீட்டிலேயே மனிதரை வைத்துக் கொண்டு நீங்கள் ஊரெல்லாம் தேடி அலைந்தால் அவர்கள் அகப்படுவார்களா? ஆபீசுக்குப் போகும் வேளை தவிர, மற்ற எல்லா நேரத்திலும் நீங்கள் எங்களுடைய மாப்பிள்ளையைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி இருந்தும் உங்களுக்கு நினைவுண்டாகவில்லையே!

கற்பகவல்லியம்மாள்:- (முற்றிலும் பிரமித்து) என்ன இது! எங்களுடைய வீட்டில், வேறே யாரும் குடித்தனம் கூட இல்லையே. அது நிரம்பவும் சின்ன வீடாயிற்றே? பொழுது விடிந்தால் பொழுது போனால், நான் என் மகனைத்தான் பார்க்கிறேன்; வேறே யாரையும் பார்க்கிறதில்லையே! நீங்கள் ஏதோ என்னிடத்தில் பரிஹாஸமாகப் பேசுகிறீர்கள் போல இருக்கிறது! -என்று மிகுந்த வியப்போடு மொழிந்தாள்.

பூஞ்சோலையம்மாள் குதூகலமாக நகைத்து, ''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், தினம் தினம் நீங்கள் யாரைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களோ அவரும் எங்களுடைய மாப்பிளையும் ஒரே மனிதர்போல இருக்கிறதே! அப்படியானால் நான் எங்களுடைய சம்பந்தியம்மாளோடுதான் பேசிக்கொண்டிருக்கிறேன். கொஞ்ச நேரத்துக்குமுன், நான் சொன்ன வார்த்தையில் தப்பு என்ன இருக்கிறது? இந்தக் கல்யாணமே உங்களுடையது. சாப்பாடெல்லாம் உங்களுடையது என்று நான் சொன்னபோது, நீங்கள் அதைப்பற்றி ஆட்சேபணை செய்தீர்களே; இப்போதும் நீங்கள் ஏதாவது ஆட்சேபணை சொல்வீர்களா?'' என்றாள்.

அதைக் கேட்ட கற்பகவல்லியம்மாள் மிகுந்த பிரமிப்பும், வியப்பும் அடைந்து, தனது செவிகளையே நம்பாமல், தான் அதற்கு என்ன மறுமொழி சொல்வது என்பதை உணராமல் சிறிது நேரம் கிலேசமுற்றவளாக இருந்து, ''சரி, சரி; தாங்கள் பரிஹாசமாகப் பேசுகிறீர்கள் என்பது இப்போதுதான் தெரிகிறது. இதுவரையில் தாங்கள் நிஜமாகப் பேசுகிறீர்களென்றே நினைத்து நான் பதில் சொல்லிக்கொண்டு வந்தேன்; மெய்யாகவே மூத்த குழந்தைக்குக் கலியாணம் நிச்சயமாகிவிட்டதா, அல்லது

வேடிக்கையாகப் பேசுகிறீர்களா?" என்று அன்பாக வற்புறுத்தி வினவினாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள் முன்னிலும் அதிகமாகப் புன்னகை செய்து, "அடடா! நான் சொன்னதையெல்லாம் நீங்கள் பரிஹாஸமாகவா நினைத்துக் கொண்டீர்கள்! நான் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் நிஜமே தவிர வேடிக்கை யில்லை. இன்று காலையில் நான் உங்களுடைய ஜாகைக்கு வந்து உங்களைப் பார்த்த முதல், உங்களுடைய நற்குணமும், நல்ல நடத்தையும் என்னுடைய மனசுக்கு நிரம்பவும் பிடித்தமாக இருந்தன. கோகிலாம்பாளின் கலியாண விஷயமாக நாங்கள் ஏற்கனவே எண்ணி இருந்த கருத்துக்கு ஒத்த மனிதர்கள் நீங்கள்தான் என்ற ஒரு நினைவும் என் மனசில் தோன்றிக் கொண்டே இருந்தது. இன்றைய தினம் பகல் முழுவதும், நாங்கள் ரகசியப் போலீசார் வேலை செய்து, உங்களுடைய நடவடிக்கைகளை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தோம்; இந்த விஷயத்தில் என்னுடைய மனசும் குழந்தை கோகிலாம் பாளுடைய மனசும் ஒத்துப் போய்விட்டன. இனி உங்களுடைய மனசும் உங்கள் குமாரருடைய மனசும் ஒத்துப் போக வேண்டி யது ஒன்றுதான் பாக்கி இருக்கிறது. ஆனால் எந்த விஷயத்திலும் உங்களுடைய குமாரர் உங்களுடைய சொல்லை மீறக்கூடியவர் அல்ல என்பது தெரிகிறது; ஆகையால் இந்தக் கலியாணம் நிச்சயமாவது இப்போது உங்கள் ஒருவருடைய சம்மதியைப் பொருத்ததாக இருக்கிறது" என்று நயமாகக் கூறினாள்.

எதிர்பாராத அந்த மகா சந்தோஷகரமான சங்கதி கற்பக வல்லியம்மாள் சகிக்கக் கூடிய வரம்பை மீறிய அபாரமான வியப்பையும் பிரம்மாநந்தத்தையும் உண்டாக்கி விட்டது. அவளது மனதில் கொந்தளித்து எழுந்த பெருங்களிப்பைத் தாங்கமாட்டாமல், கற்பகவல்லியம்மாள் விம்மிதமடைந்து ஆநந்தபாஷ்பம் சொரிந்து பூரித்துப் புளங்காகிதம் அடைந்து, பேசமாட்டாமல், ஸ்தம்பித்து மெய்ம்மறந்து இரண்டொரு நிமிஷ நேரம் சித்திரப் பதுமைபோல் இருந்தபின் பூஞ்சோலை யம்மாளை நோக்கி, "அம்மணீ! தாங்கள் சொல்வதற்கு இன்ன மறுமொழிதான் சொல்வது என்பது எனக்குத் தெரியவில்லை.

இப்போது நான் கனவு காண்கிறேனோ, அல்லது, சரியான உணர்வோடு இருக்கிறேனோ என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது! எங்களை யாரோ பெரிய மனிதர்கள் என்று தப்பாக நினைத்துத் தாங்கள் பேசுகிறீர்கள்? நாங்கள் நிரம்பவும் ஏழ்மையான நிலைமையில் இருப்பவர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொண்டீர்களா? இப்போது நாங்கள் குடியிருக்கும் வீடு கூட வாடகை வீடு; எனக்கு இந்த உலகத்தில் என்னுடைய மகன் தான் செல்வம்; அவன் பார்க்கும் உத்தியோகம்தான் பூஸ்திதி; அதிலிருந்து கிடைக்கும் சொற்ப சம்பளத்தில்தான் எங்களுடைய ஜீவனம். தாங்களோ கோடீசுவரர்கள். தாங்கள் எங்கே? நாங்கள் எங்கே? மலைக்கும் மகசத்துக்கும் எவ்வளவு தார தம்மியம் இருக்குமோ அதற்கு மேல் அதிகமான தாரதம்மியம் நமக்குள் இருக்கிறதே. தாங்கள் எங்களுடைய வீட்டுக்கு வந்தால் தங் களுக்கு ஒருவேளை விருந்து செய்ய எங்களுக்கு யோக்கியதை இருக்கிறதா? அப்படிப்பட்ட பரம ஏழைகளான எங்கள் வீட்டில் தாங்கள் சம்பந்தம் செய்து கொள்ளப் பிரியப்படுவதாகச் சொல் வதை முதலில் என்னுடைய காதுகளே நம்பவில்லை!" என்றாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள், "நான் சொல்வதில் அப்படிப்பட்ட புதுமை ஒன்றுமில்லையே. கொஞ்ச நேரத்திற்கு முன்னே, நான் சொன்ன விஷயத்தை நீங்கள் இதற்குள் மறந்து போய் விட்டீர்களா? எங்களுக்குச் சமமான பணக்காரர்களுடைய வீட்டில் பெண்ணைக் கொடுத்தால் எங்களுடைய சொத்து எல்லாம் சீர்குலைந்து போகும் என்றும், அதற்காக சாதாரணமாக நிலைமையிலுள்ள ஒருவருக்கே பெண்ணைக் கொடுத்து அவர்களைக் கொண்டு வந்து வைத்துக் கொள்ளப் போவ தாகவும் நான் சொன்னேன். அப்படித்தான் செய்ய வேண்டு மென்று நீங்களும் ஆமோதித்தீர்களே. அந்தத் தீர்மானத்தைத் தானே இப்போது செய்கையில் நிறைவேற்ற நாம் உத்தேசிக் கிறோம். இதில் புதுமை ஒன்றுமே இல்லையே! இனி இந்த பங்களாவே உங்களுடைய ஜாகையாகப்போகிறது. இதிலிருக்கும் சகலமான சம்பத்தையும் சாமான்களையும் பிரியப்படி செலவு செய்ய உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. எங்களுக்கு விருந்து செய்ய நீங்கள் ஆசைப்பட்டால், எந்த வஸ்துவை வேண்டு மானாலும் எடுத்து எப்படிப்பட்ட விருந்து வேண்டுமானாலும்

தயாரித்து வையுங்கள்; நாங்கள் சாப்பிடத் தயாராக இருக்கிறோம்'' என்று அன்பாகவும் நயமாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் திகைத்து என்ன மறுமொழி சொல்வது என்பதை உணராமல் சிறிது நேரம் மௌனப் பேராநந்தத்தில் ஆழ்ந்திருந்தபின், ''அம்மா! இது கிருஷ்ணபகவான் குசேலருக்குத் திடீரென்று அபார சம்பத்தை அளித்ததுபோல இருக்கிறதேயன்றி வேறல்ல. இன்றைய தினம் காலையில் தாங்கள் மகாலக்ஷ்மிபோல் எங்கள் வீட்டிற்குள் அடிவைத்தபோதே என் மனசில் ஒருவித ஆநந்தக் களிப்பும் மன வெழுச்சியும் உண்டாகி என்னைப் பரவசப்படுத்தின. இப்படிப் பட்ட புண்ணிய ஆத்மாக்களுடைய தரிசனம் கிடைப்பதால், இனி என்னுடைய கலி நீங்கிவிட்டதாக, என் மனசில் ஓர் எண்ணம் தானாகவே உதித்தது. இதற்கிணங்க, தாங்கள் அப்போதே ஏராளமான பொருள்களைக் கொணர்ந்து சம்மானம் செய்தீர்கள்; அதன் பிறகு வற்புறுத்தி இங்கே அழைத்து வந்து, அன்பையும், உபசாரத்தையும் மரியாதைகளையும் மழைபோலச் சொரிந்தீர்கள்; அவைகளைக் கண்டே நானும் என்னுடைய மகனும் மகிழ்ந்து பூரித்துப் போய், நாங்கள் பூர்வஜென்மத்தில் ஏதோ சொற்பம் நல்ல பூஜை செய்திருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தோம். இப்போது கடைசியாகத் தாங்கள் பிரஸ்தாபித்த விஷயம் என்னை அப்படியே பிரமிக்கச் செய்துவிட்டது. தாங்கள் இதுவரையில் சொன்னது எல்லாம் உண்மையான பேச்சுகள்தானா என்று என் மனம் இன்னமும் அவநம்பிக்கைப் படும்படியாக இருக்கிறது. இந்த விஷயத்தை தாங்களே முடிவு கட்டினீர்களா? தங்களுடைய மூத்த குழந்தைக்கு இந்தச் சம்பந்தத்தில் பரிபூரணமான விருப்பமுண்டா? தாங்கள் என்னோடு பேசிப் பழகினீர்களேயன்றி என்னுடைய மகன் எப்படிப்பட்ட குணமுடையவன் என்பதைத் தாங்கள் ஆர அமரக் கண்டறிய வேண்டாமா? எல்லாவற்றிற்கும், தாங்கள் அவசரப்படாமல் தங்களுடைய குழந்தையோடு கலந்து நன்றாக யோசித்து எங்களுக்குத் தெரிவியுங்கள்'' என்றாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள், ''அம்மா! இது எங்களுக்கு நிரம்பவும் முக்கியமான பெரிய விஷயம். நாங்கள்

இனி அடையப் போகும் சந்தோஷமும், சுகமும் எங்களுக்குக் கிடைக்கும் மாப்பிள்ளையைப் பொருத்ததாக இருக்கின்றன. ஆகையால், இந்த விஷயத்தில் நாங்கள் அவசரமாக எந்தத் தீர்மானத்தையும் செய்ய மாட்டோம். இதுவரையில் இந்தக் குழந்தைகளைக் கட்டிக்கொள்ள வேண்டி ஒரு சுமார் இருநூறு பேர்கள் வந்து கேட்டிருப்பார்கள். எவருக்கும் நாங்கள் முடிவான உத்தரம் சொல்லவே இல்லை. அத்தனை பேர்களில் ஒருவர் கூட திருப்திகரமாக இல்லை. உங்களையும் உங்களுடைய குமாரரையும் பார்த்துப் பழகியது முதல், எனக்கும் சரி, கோகிலாம்பாளுக்கும் சரி, இந்தச் சம்பந்தம்தான் எங்களுக்கு ஒத்த சம்பந்தமென்ற ஓர் உறுதி தானாக ஏற்பட்டு விட்டது. இதில் இன்னொரு முக்கியமான சங்கதியும் இருக்கிறது. நாங்கள் விரும்பும் சகலமான குணங்களும் உங்கள் இருவரிடத்திலும் நிறைந்திருக்கின்றன. அதோடு என்னுடைய குழந்தைகள் இரண்டையும் உயிரையும் காப்பாற்றி எங்களுடைய குடும்ப விளக்கு அணைந்து போகாமல் நிலைநிறுத்தியவரும், மகா நற்குணமும், பரோபகாரமும், தயாளமும் நிறைந்தவருமான உங்களுடைய குமாரரை விட அதிக யோக்யமானவர்கள் வேறே யார் இருக்கப் போகிறார்களா? என்னுடைய குழந்தையை அவருக்குக் கட்டிக் கொடுக்க, நாங்கள் கடமைப்பட்டவர்களாகி விட்டதன்றி, அவரும் பாத்திரமுடையவராகி விட்டார். இரண்டு பெண்களின் உயிரைக் காப்பாற்றிய புருஷ சிங்கத்துக்கு ஒரு பெண்ணையாவது நாங்கள் கட்டிக் கொடுக்காவிட்டால், எங்களைக் காட்டிலும் நன்றி கெட்ட மனிதர்கள் வேறே இருப்பார்களா? ஆகையால், நாங்கள் இந்த விஷயத்தைத் தீர்க்காலோசனை செய்யாமல் ஏதோ பதற்றமாக இப்போது பேசுகிறோம் என்றும், ஒருக்கால் நாளையதினம் இந்தத் தீர்மானத்தை மாற்றி விடுவோமோ என்றும் நீங்கள் நினைக்க வேண்டாம். உங்களுடைய குடும்ப வரலாற்றையும் உங்கள் இருவருடைய குணாதிசயங்களைப் பற்றியும், உங்களுடைய வீட்டுக்குப் பக்கத்திலுள்ள எங்கள் பால்காரி சொல்லி இருக்கிறாள். அதோடு நேற்றையதினம் என்னுடைய மூத்த குழந்தையே அவரை நேரில் கண்டு, அவருடைய யோக்கியதை எவ்வளவு என்பதைக் கண்டு, நேற்று இராத்திரியே, அவள் கலியாணப் பிரஸ்தாபத்தை

எடுத்துத் தனது விருப்பத்தை வெளியிட்டு விட்டாள். அப்போதே நாங்கள் இருவரும் இதைப் பற்றித் தீர்க்காலோசனை செய்து இந்த முடிவுக்கு வந்து விட்டோம். அதை நிறைவேற்றி வைப்பதற்காகவே நாங்கள் இன்று இந்த விருந்தை வைத்து உங்களை அழைத்து வந்தோம். ஏதடா இவர்கள் இவ்வளவு தூரம் பகடமாகவே நடந்திருக்கிறார்களே என்று நீங்கள் நினைக்கக் கூடாது. ஏனென்றால், இது கலியாண விஷயம். எதிராளியின் நோக்கத்தை உணர்ந்தே பேச வேண்டும். இல்லாவிட்டால், ஏளனமும், அவமானமும் உண்டாய்விடும். ஆகையால், இந்த விஷயத்தில் இனி எவ்வித வித்தியாசமும் பாராட்டாமல் உங்களுடைய அபிப்பிராயத்தைத் தாராளமாக வெளியிடலாம். உங்களுடைய குழந்தை இன்னும் தூங்கியிருக்க மாட்டார் என்று நினைக்கிறோம். அவரோடு கலந்து யோசனை செய்து முடிவைத் தெரிவிக்கவேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும், நீங்கள் போய் அவரோடு பேசிவிட்டு வாருங்கள். அவர் படுத்திருக்கும் இடத்தில் வேறே யாரும் இல்லை'' என்றாள்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் மிகுந்த குதூகலமும், கிலேசமும் அடைந்தவளாய், ''குபேரனுடைய சம்பத்து தானாக வரும்போது அதை யாராவது வேண்டாமென்று விலக்குவார்களா? இந்த இடத்தில் சம்பந்தம் கிடைப்பதற்கு நாங்களும் எங்கள் முன்னோர்களும் எத்தனையோ கற்பகாலம் அருந்தவம் புரிந்திருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். இந்தச் சம்பந்தம் ஏற்பட வேண்டுமென்று தெய்வத்தின் திருவுள்ளம் இருந்தால் அப்படியே நிறைவேட்டும். இதில் நானும் என்னுடைய மகனும் முடிவு செய்ய என்ன யோக்கியதை இருக்கிறது? எல்லாம் சிவன் செயல். கொடுப்பதற்கும் எடுப்பதற்கும் அவனுக்கு அதிகாரமேயொழிய நமக்கென்ன இருக்கிறது. ஆனால், ஒரு காரியம்; இப்படிப்பட்ட எதிர்பாராத பெரும் பாக்கியம் அவனுக்குக் கிடைத்திருக்கின்றது என்ற சந்தோஷ சங்கதியை மாத்திரம் நான் உடனே போய் அவனிடம் தெரிவித்துவிட்டு வருகிறேன்'' என்று கூறினாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள், ''சரி; சொல்லிவிட்டு வாருங்கள். நாளைய தினம் காலையில் புரோகிதரை வர வழைத்து,

நிச்சயதார்த்தம், கலியாணம் ஆகிய இரண்டுக்கும் நாள் பார்த்து விடுவோம்'' என்று முடிவாகக் கூறினாள்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் மிகுந்த மகிழ்ச்சியும், குதூகலமும் அடைந்தவளாய் எழுந்து தனது புதல்வன் சயனித்திருந்த மகாலை நோக்கி நடந்தாள்; அப்படிப்பட்ட மகா பிரமாதமான சந்தோஷச் செய்தியைத் தான் தனது மகனிடத்தில் எப்படி வெளியிடுவது என்பதை அறியாமல் மிகுந்த மனக் குழப்பம் அடைந்தவளாய், கண்ணபிரான் சயனித்திருந்த மஞ்சத்தை அணுகி மெதுவாகத் ''தம்பீ தம்பீ'' என்று மிகுந்த பதைப்போடு கூப்பிட்டு அவனைத் தட்டி எழுப்பினாள்.

# 4 – வது அதிகாரம்

## மாயமான்

“அவ்வாறு எதிர்பாராத வகையில் அகாலத்தில் தனது தாயார் நிரம்பவும் பதைபதைப்பாக வந்ததைக் கண்ட கண்ணபிரான் அளவிறந்த வியப்பும் திகைப்பும் அடைந்து திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்து, ''என்ன அம்மா! விசேஷம்?'' என்று மிகுந்த ஆவலோடு கேட்க, கற்பகவல்லியம்மாள், “அப்பா தம்பீ! உனக்கு நான் எப்பேர்ப்பட்ட சந்தோஷ சங்கதி கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா! நான் சொன்னால் நீ நம்ப கூட மாட்டாய். ஏதோ ஒரு பெருத்த கருத்தோடுதான் ஈசுவரன் அந்த அபாயத்தை உண்டாக்கி நம்மையும் இவர்களையும் சேர்த்து வைத்திருக்க வேண்டுமென்று நான் முன்பே சொல்லவில்லையா? அது சரியாகப் போய்விட்டது. இவர்களுடைய மூத்த பெண்ணை உனக்குப் பிரியந்தானா என்று கேட்டு அறிந்து கொண்டு வரும்படி என்னை இப்போது இங்கே அனுப்பினார்கள். நீ என்ன சொல்லுகிறாய்? தானாக வரும் இப்பேர்ப்பட்ட குபேர சம்பத்தையும் ஸ்ரீ தேவியையும் நீ வேண்டாம் என்று சொல்லப் போகிறாயா?'' என்றாள்.

அந்த எதிர்பாராத சந்தோஷச் செய்தியைக் கேட்ட கண்ணபிரான் தனது செவிகளையே நம்பாமல் பிரமித்து ஸ்தம்பித்துப் போய் தான் என்ன மறுமொழி சொல்வதென்பதை உணராமல் திருட்டு விழி விழித்துக் கொண்டு அப்படியே நின்றான். தனக்கு அவர்களது சம்பந்தம் அந்த ஜென்மத்தில் கிடைக்கப் போகிறதா என்ற கவலையும் ஏக்கமும் கொண்டு தனது மனத்தையும் உடம்பையும் சித்திரவதை செய்து புண் படுத்திக்கொண்டிருந்த அந்தச் சிறுவனுக்கு ஜீவாமிருதத் துளிகளைப் பெய்வது போல இருந்தது. அது உண்மைதானா அல்லது கனவோ என்ற சந்தேகம் அடிக்கடி தோன்றியது. முதல்

நாளைய சாயங்காலத்திலிருந்து அதே எண்ணம் குடிகொண்டிருப்பதால் தன் மனதே ஒருகால் தன்னை அப்படி ஏமாற்றுகிறதோ என்று ஐயம் தோன்றியது. அவ்வாறு அவன் இரண்டொரு நிமிஷ நேரம் தவித்திருந்த பிறகு, "என்ன அம்மா! நீங்கள் பரிஹாஸமாகப் பேசுகிறீர்களா, அல்லது நிஜமாகப் பேசுகிறீர்களா என்பதே எனக்கு முதலில் சந்தேகமாக இருக்கிறது. இவர்களுடைய செல்வமென்ன! செல்வாக்கென்ன! மேம்பாடென்ன! நமக்கு என்ன இருக்கிறது? இருந்திருந்து இந்த உலகத்தில் எத்தனையோ லக்ஷாதிபதிகளையெல்லாம் விட்டு, இவர்கள் நமக்கா பெண் கொடுக்கப் போகிறார்கள்?" என்று மிகுந்த வியப்போடு கூறினான்.

அதைக் கேட்ட கற்பகவல்லியம்மாள், "இல்லை தம்பீ! நான் இந்த அகாலத்தில் வந்து உடம்பு அசௌக்கியமாகப் படுத்திருக்கும் உன்னை எழுப்பி பரிஹாசம் செய்வேனா? நான் சொல்வது உண்மையான விஷயம். இவர்கள் இப்போதுதான் சொன்னார்கள்; உன்னுடைய சம்மதியைக் கேட்டுக்கொண்டு வரும்படி என்னை அனுப்பினார்கள்" என்று அழுத்தமாகவும், உறுதியாகவும் கூறினாள்.

கண்ணபிரான், "இல்லையம்மா; இவர்கள் உன்னிடத்தில் விளையாட்டாகப் பேசியிருக்கிறார்கள். நீங்கள் அதைத் தெரிந்து கொள்ளாமல் ஏமாறிப் போய்விட்டீர்களே! நமக்காவது இவர்கள் பெண்ணைக் கொடுக்கிறதாவது! கலியாணத்துக்கு எத்தனையோ பிரபுக்களெல்லோரும் வருவார்களே!அவர்களுக்கு எதிரில் இவர்கள் பெண்ணை நமக்குக் கொடுத்தால், அதனால் இவர்களுக்கு அவமானம் ஏற்படும் என்பதை இவர்கள் எண்ணி இருக்க மாட்டார்களா? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பதைப் பார்ப்பதற்காக இவர்கள் இப்படிப் புரளி செய்திருக்கிறார்கள். வேறொன்றுமில்லை" என்றான்.

கற்பகவல்லியம்மாள் நயமாக வற்புறுத்திப் பேசத் தொடங்கி, "நான் கூட அப்படித்தான் முதலில் சந்தேகப்பட்டேன். இன்றைய தினம் காலையிலிருந்து இவர்கள் என்னிடத்தில் நிரம்பவும் மரியாதையாகவும் அன்பாகவும் நடந்து வருகிறார்களேயன்றி, வேடிக்கையான புரளி வார்த்தைகளையே

இவர்கள் பேசவில்லை. ஆகையால், அப்படிப்பட்ட பெரிய சங்கதியில் இவர்கள் திடீரென்று என்னிடத்தில் விளையாட்டாகப் பேசினார்கள் என்று எண்ணவோ நியாயமில்லை. அதுவும் தவிர, இவர்கள் ஒரு முக்கியமான கருத்தோடு தங்களுடைய பெண்ணை ஏழைகளுக்குக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று ஏற்கனவே தீர்மானித்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இவர்களுக்கு ஆண் துணையே இல்லையாம். பணக்காரர்களுடைய வீட்டில் பெண்களைக் கொடுத்தால் இந்தச் சொத்துக்களை எல்லாம் இரண்டு பங்காகக் பிரித்து இரண்டு பேருக்கும் கொடுத்து அனுப்பி விட நேரிடுமாம். ஆகையால் பெண்களை ஏழைகளுக்குக் கொடுத்து மாப்பிள்ளை வீட்டாரை இங்கேயே கொண்டு வந்து வைத்துக் கொள்ளப் போகிறார்களாம். ஆகையால் மாப்பிள்ளை வீட்டாருக்குப் பணம் அதிகமாக இருக்க வேண்டும் என்பதில்லையாம். மாப்பிள்ளையின் வீட்டார் நல்ல குலத்தராகவும், யோக்கியர்களாகவும், அன்னியோன்னியமாகவும் இருக்க வேண்டுமாம். அந்தக் குணங்களெல்லாம் நம்மிடத்தில் இருக்கின்றனவாம். அதோடு நீ இந்த இரண்டு பெண்களின் உயிரையும் காப்பாற்றினாயாம். இந்த விஷயங்களையெல்லாம் கருதி, இவர்கள் ஒரு பெண்ணை உனக்குக் கட்டிக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். நான் சொல்வது விளையாட்டல்ல; நிஜமான விஷயம்'' என்றாள்.

கண்ணபிரான் உடனே நம்பிக்கைகொண்டு கரைகடந்த களிப்பும் ஆநந்தமும் அடைந்து பூரித்துப் புளகாங்கிதம் எய்தி மெய்ம்மறந்தவனாக நின்று, "அப்படியா சங்கதி! இரண்டு பெண்களையுமா ஏழைகளுடைய வீட்டில் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள்? இன்னொரு பெண்ணை யார் வீட்டில் கொடுக்கப் போகிறார்களாம்?'' என்று வியப்போடும் ஆவலோடும் கேட்டான்.

கற்பகவல்லியம்மாள், "மூத்த பெண் நல்ல புத்திசாலி; ஆழ்ந்த விவேகமுடையவள். அவள் ஏழையைக் கட்டிக் கொள்ளப் பிரியப்படுகிறாள். சின்னப் பெண் தங்களுக்குச் சமமான அந்தஸ்துடைய மனிதரின் வீட்டிலேதான் வாழ்க்கைப் படுவேன் என்கிறாள். ஆகையால், மூத்தவளைத்தான் உனக்குக்

கட்டத் தீர்மானம் ஆகியிருக்கிறது. அந்தப் பெண்ணும் உன்மேல் ஆசைப்படுகிறாளாம். சின்னப் பெண்ணுக்கு இன்னும் எந்த இடமும் நிச்சயமாகவில்லை. அது இப்போது நிச்சயமானாலும் ஆகாவிட்டாலும் உங்களுடைய கலியாணத்தை உடனே முடித்து விட வேண்டுமாம். நாளைய தினம் காலையில் புரோகிதரை வரவழைத்து, நிச்சயதார்த்தம், கலியாணம் ஆகிய இரண்டுக்கும் நாள் பார்க்கப் போகிறார்களாம். என்னுடைய கருத்து என்ன என்று கேட்டார்கள். இந்தச் சம்பந்தத்தை யாராவது வேண்டாம் என்று சொல்லுவார்களா? அதுவும் நம்மைப்போல தரித்திர தசையிலுள்ளவர்கள் ஒருநாளும் சொல்ல மாட்டார்கள். ஆகையால் நான் இதற்கு முழு மனசோடு சம்மதித்து விட்டேன். நீ என்ன சொல்லுகிறாய்? வேண்டாம் என்று சொல்லப் போகிறாயா? சீக்கிரமாகச் சொல், அவர்கள் காத்திருக்கிறார்கள்'' என்றாள்.

அதைக் கேட்ட கண்ணபிரான் மிகுந்த கிலேசம் அடைந் தவனாய் தனது கருத்தை மறைக்கவும் மாட்டாமல், வெளியிடவுமாட்டாமல் சிறிது நேரம் தவித்திருந்த பின் தனது தாயை நோக்கி, ''நான் எந்த விஷயத்திலாவது உங்களுடைய இஷ்டத்துக்கு மாறாக நடந்தது உண்டா? நீங்களாகப் பார்த்து யாரைக் கலியாணம் செய்து வைத்தாலும், நான் அதற்கு இணங்க வேண்டியவன்; அல்லது, கலியாணமே செய்யாமல் இப்படியே இருந்து விட வேண்டும் என்று நீங்கள் சொல்லும் பட்சத்தில் கூட நான் அப்படியே இருக்கக் கூடியவன். அப்படி இருக்க, இந்த இடம் நாம் தவம் செய்தாலும் நமக்குக் கிட்டாத மகா சிரேஷ்டமான இடம். இது தானாக வருகிறது. இதற்கு நீங்களும் சம்மதித்து விட்டீர்கள். இதைப் பற்றி என்னுடைய கருத்து என்னவென்று கேட்கவும் வேண்டுமா? என்னுடைய நன்மைக்கு இன்னதுதான் தக்கதென்பது உங்களுக்குத் தெரியாதா? நானென்ன உங்களை விடப் புத்திசாலியா? உங்களுடைய இஷ்டம் எதுவோ அதுவே எனக்கும் இஷ்டமானது. நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; என்னைக் கேட்க வேண் டியதே இல்லை; உங்களுடைய அதிகாரத்துக்கு மேல் அப்பீலே இல்லை'' என்று குதூகலமாகக் கூறினான்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் அளவிறந்த மகிழ்ச்சியடைந்தாள். தனது புத்திரன் எப்போதும் மிகுந்த லஜ்ஜையும், கிலேசமும் உடையவன், ஆதலால், அப்பேர்ப்பட்ட உயர்வான இடத்தில் தாங்கள் சம்பந்தம் செய்துகொள்வதைப் பற்றி கிலேசம் அடைந்தவனாய் ஏதேனும் ஆட்சேபணை சொல்லப் போகிறானோவென்று அதுகாறும் கற்பகவல்லியம்மாள் மிகுந்த கவலையும் ஆவலும் கொண்டிருந்தவள் ஆதலால், அவன் எவ்வித ஆட்சேபணையும் இல்லாமல் தனது சம்மதத்தைத் தெரிவித்ததைக் கண்ட கற்பகவல்லியம்மாள் கரை கடந்த மகிழ்ச்சியும், ஆநந்தமும், பூரிப்பும் அடைந்தவளாய் அந்த விஷயத்தைப் பூஞ்சோலையம்மாளிடத்தில் தெரிவித்து அந்த முடிவை மாறாமல் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆவலினால் நிரம்பவும் தூண்டப்பட்டவளாய், "சரி; நீ படுத்துக் கொண்டு சுகமாகத் தூங்கு. அவர்கள் காத்திருப்பார்கள். நான் போய் எல்லா விஷயங்களையும் முடிவு கட்டுகிறேன்" என்று கூறிக்கொண்டே அவ்விடத்தை விட்டு விரைவாக அப்பால் போய்விட்டாள்.

மறுபடியும் கட்டிலில் படுத்த கண்ணபிரான் பொழுது விடியும் வரையில் கண்களை மூடாமலேயே கிடந்து புரண்டு மனவெழுச்சியையும், இன்பப் பெருக்கையும், உடம்பின் பூரிப்பையும் தாங்க மாட்டாமல் கட்டிலடங்காத களிகொண்டு சுவர்க்க வாசலில் நின்று அதற்குள் காணப்படும் நித்தியாநந்த சுகத்தை உணர்பவன் போல இன்ப ஊற்றில் ஆழ்ந்து கிடந்தான். தனது மனம் எவள் மீது சென்று லயித்ததோ அவளே தானாக வந்து மனைவியாக வாய்க்கப் போவதை நினைக்க நினைக்க அது தெய்வ கடாக்ஷத்தினாலேதான் ஏற்படுகிறது என்ற எண்ணம் உதித்தது. முதல் நாள் மாலையில் தன்னை அவ்வளவாகக் கவனிக்காதவள் போல இருந்த கோகிலாம்பாளே தன் மீது காதல் கொண்டிருக்கிறாள் என்ற விஷயம் அவனுக்கு அளவு கடந்த வியப்பை உண்டாக்கியது. முதல் நாள் இரவில் அவளும் தேக அசௌக்கியத்தோடு இருந்தாள் என்பதைக் கேட்டபோதே அவளும் ஒருகால் தன்மீது மையல் கொண்டிருப்பாளோ என்று, அவன் முன்னரே நினைத்தது உண்மையாய்ப் போனதைக் காண, அவன் கட்டிலங்காத பூரிப்பும், குதூகலமும் அடைந்தவனாய்

விம்மிதமுற்றுக் கிடந்தான். மகாராஜனது செல்வமும், செல்வாக்கும் ரதி தேவியின் அழகும், ஆழ்ந்த ஞானமும், புத்தி நுட்பமும், சமர்த்தும், சகலமான நற்குணங்களும், நல்ல நடத்தையும் பரிபூர்ணமாகப் பெற்ற அந்தக் கன்னிகை தன் மீது கரை கடந்த பிரேமையும் மையலும் கொண்டு தானாகக் கனிந்து வந்து தன்னை அடைவது போன்ற நிகரற்ற பாக்கியமும், அரிய பேறும் மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் எவருக்கேனும் கிடைக்குமோ என்ற மமதையும் வியப்பும் பொங்கிப் பொங்கி அவனது உள்ளத்தில் எழுந்து கரைபுரண்டோடி, அந்த ஓர் இரவிற்குள் அவனைப் புதிய மனிதனாக்கி அவனுக்குப் புதிய மேனியையும், முகக் காந்தியையும் உண்டாக்கின. அதுகாறும் வயிற்று நோய் கொண்டவன்போலத் தளர்ந்து சுருண்டு சுருண்டு மூலையைத் தேடியவன், கட்டிலடங்காத உற்சாகமும், மனோதிடமும், ஊக்கமும், ஜ்வலிப்பும் பெற்றவனாய் மாறிவிட்டான். அன்றைய தினம் தான் பூஞ்சோலையிலிருந்து திரும்புங்காலில் மேன்மாடத்திலிருந்து தன்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தவள் கோகிலாம்பாளோ அல்லது அவளது தங்கையோ என்ற சந்தேகம் தீராமலே இருந்து அவனது மனதை அப்போது சஞ்சலத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது. மகா விவேகியும், தன்னடக்கமும் உள்ள உத்தம குண மடந்தையுமான கோகிலாம்பாள் அப்படிபட்ட வழுவான காரியத்தைச் செய்யக்கூடியவளன்று எனவும், இளையவளே தன்னைக் கண்டு புன்னகை செய்திருக்க வேண்டும் எனவும் கண்ணபிரான் எண்ணினான். சௌந்தரவல்லி கள்ளம், கடபம் முதலியவற்றை அறியாத வெள்ளை மனுஷி என்றும், அவளோடு தான் பேசுவது எளிதில் பலிக்கும் என்றும், கோகிலாம்பாள் திடமான மனதை உடையவளாதலால், கலியாணம் முடிவதற்குள் தான் அவளோடு பேசுவது சாத்தியமில்லாத காரியம் என்றும் அந்த யௌவன புருஷன் உறுதியாக நினைத்தான்; அவளிடத்தில் கடுமையல் கொண்டு கருகும் தானும், அதுபோலவே தன்னிடத்தில் கடுமோகங்கொண்டு ரகஸியத்தில் தவித்திருக்கும் அந்தப் பெண்மணியும் தனியான இடத்தில் சந்தித்து ஒருவரோடொருவர் மனம் விட்டுப் பேசி, தங்களது உண்மையான மன நிலைமையை உள்ளபடி வெளிப்படுத்தி ஆநந்தம் அநுபவிக்கும்

அப்படிப்பட்ட சுபகாலம் எப்போது வந்து நேருமோ என்ற ஏக்கமே அபாரமாக வந்து வதைத்துக் கொண்டிருந்தது. எப்படியும் தங்களது கலியாணம் நடப்பதற்குக் குறைந்தது ஒருமாத காலமாகிலும் பிடிக்கும் ஆதலால், அதுகாறும், அவ ளோடு பேசாமல் தான் தனக்குள்ளாகவே வருந்தி, வருந்தி நைந் துருகி இருந்தால், தனது உயிரே நிற்காதென்ற உறுதியும் மலைப்பும் தோன்றி அவனை அப்போதே வதைக்க ஆரம் பித்தன. அவ்வாறு கண்ணபிரான் மாறி மாறி இன்பமும் துன் பமும் அடைந்தவனாய், அந்த இரவைக் கடத்தினான். பொழுதும் விடிய, சூரியன் கண்ணபிரானுக்கு வந்து வாய்த்த எதிர்பாராப் பெரும்பாக்கியத்தை உணர்ந்து மகிழ்ச்சி கொண்டு நகைத்து எழுபவன்போலத் தனது யௌவன கிரகணங்களை வெகு இனிமையாகப் பரப்பிக் கீழ்த்திசையில் உயர்ந்தான். முதல் நாளிரவில் கற்பகவல்லியம்மாள் பூஞ்சோலையம்மாளிடத்திற்குப் போய், கண்ணபிரான் சம்மதியைத் தெரிவிக்க, அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள் மிகுந்த களிப்பும், ஆநந்தமும், பூரிப்பும் அடைந்தவளாய், பொழுது விடிந்தவுடனேயே புரோகிதரை வரவழைப்பது என்ற தீர்மானத்தைச் செய்து கொள்ள, அதன் பிறகு அவர்கள் எல்லோரும் கலியாணத்தின் மற்ற ஏற்பாடு களைப் பற்றி நெடுநேரம் வரையில் பேசிக் கொண்டிருந்த பின், மஞ்சங்களில் சயனித்துக் கொண்டனர். சௌந்தரவல்லி சொற்ப நேரம் வரையில் அவர்களது சம்பாஷணையைக் கேட்டிருந்து, அரை நாழிகையில் கடுந்துயிலில் ஆழ்ந்து குறட்டைவிடத் தொடங்கினாள். ஆனால் கோகிலாம்பாள், சகலமான காரியங்களையும் நடத்தி முடிவு செய்யும்படி, தனது தாயாகிய இயந்திரத்தின் விசையை நன்றாக முடுக்கி விட்டு, ஒன்றையும் அறியாத பேதைபோலவும், ஊமை போலவும் கடைசி வரையில் உட்கார்ந்திருந்து, மற்றவர் சயனித்தபின் தானும் ஒரு மூலையில் போய் நிரம்பவும் சாதாரணமான ஒரு சயனத்தில் படுத்துக் கொண்டாள். அப்படிப் படுத்தவள் மறுநாள் காலைவரை இமை மூடாமல் விரக வேதனையும், மனவெழுச்சியும் கொண்டு ஆழ்ந்து கிடந்தாள். முதல் நாளைய மாலையில் அவள் கண்ண பிரானைக் கண்டு, அவன் இன்னானென்பதையும், அவனது அற்புதமான வடிவழகையும், குணத்தழகையும் பரோபகார

சிந்தையையும் உணர்ந்த முதலே அவளது மனம் சஞ்சல மடைந்து, அவனையே நினைத்துத் தியானம் செய்யத் தொடங் கியது. அந்த விரக வேதனை அவளது உள்ளத்தில் நிமிஷத்திற்கு நிமிஷம் விஷம் போலப் பெருகி, கண்ணபிரான் எப்பாடு பட்டானோ அதேவிதமாக அந்த மெல்லியலாளும் வாடித் துவண்டு கருகும்படி செய்து கொண்டிருந்தது. ஆனால் அவள் நல்ல உத்தம ஜாதி ஸ்திரீயாதலால் அவள் தனது மனநிலையைப் பிறர் உணராவிதம் அடக்கிக் கொண்டு தனது செய்கைகளையும், வார்த்தைகளையும் கண்டு எவரும் சந்தேகியாதபடி எச்சரிப் பாகவும், அடக்கமாகவும் நடந்து கொண்டிருந்தாள்; ஆகவே, விருந்து நடத்தப்பட்ட தினத்தின் இரவில், பக்கத்து மகாலில் கண்ணபிரான் எப்படி அந்த அணங்கை நினைத்து அகோரமான தவம் புரிந்தானோ, அது போலவே அந்த மடவன்னமும் அவனை நினைத்து நினைத்து உருகிப் பாகாய் ஓடிக் கொண்டிருந்தாள்.

பூமிக்குள்ளிருந்தபடி இரண்டு எலிகள் ஒன்றையொன்று அடைய எப்படி மண்ணை அறுத்து வழி செய்யுமோ, அதுபோல அவர்களது இரண்டு மனமும் அரும்பாடு பட்டு, அந்த தினத்திற்கும், கலியாணத்திற்கும் இடையிலுள்ள காலமாகிய பெருத்த இடையூறை விலக்கி ஒன்றாகக் கூடுவதற்குரிய மார்க்கங்களைத் தேடிக் கொண்டிருந்தன. கலியாணத்திற்குள் தான் எப்படியாகிலும் முயன்று அந்த மடமயிலைத் தனிமையில் சந்தித்துப் பேச வேண்டும் என்று கண்ணபிரான் உறுதி செய்து கொண்டான். கோகிலாம்பாளோ முகூர்த்த தினத்தை அதிக நாள் தாமதியாமல், அதற்கடுத்த முதல் முகூர்த்த தினத்திலேயே நிறைவேறச் செய்து, அவனை மணவாளனாகப் பெற்று தனது மோக விடாயைத் தணித்து இன்புற வேண்டும் என்ற முடிவைச் செய்து கொண்டிருந்தாள்.

இருவரும் மற்றவருக்குமுன் ஐந்து மணிக்கே எழுந்து தத்தம் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு எப்போது பொழுது விடியப் போகிறது என்று மிகுந்த ஆவலும் கவலையும் கொண்டவராய் இருந்தனர். காலை எட்டு மணிக்குப் புரோகிதர் சாமா சாஸ்திரிலுவாரு விலை உயர்ந்த சால்வை, பஞ்சாங்கக்

கட்டு, சிவப்புத் தொந்தி, பொக்கை வாய், செவிட்டுக் காது, விபூதிப்பட்டை, தங்க ருத்திராக்ஷம், விபூதி சம்புடம் முதலிய அலங்காரங்களோடு வந்து சேர்ந்தார். அவரைக் கண்ட வேலைக்காரர்கள் எல்லாரும் "சுவாமி! தெண்டம்" என்று கூறிக் கைகுவித்து வணங்கி குனிந்து நமஸ்காரம் செய்து, அவரை வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு போக, ஸ்திரீகள் இருக்கும் விடுதியில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்த பூஞ் சோலையம்மாள் புரோகிதரை வணங்கி நமஸ்கரித்து, அவருக் காகப் போடப்பட்டிருந்த உன்னதமான ஒரு பீடத்தில் அவரை அமரச் செய்ய, அவளுக்குப் பின்புறத்தில் நின்று கொண்டிருந்த கற்பகவல்லியம்மாளும் ஐயருக்கு நமஸ்காரம் செய்தாள். கோகிலாம்பாள், சௌந்தரவல்லி ஆகிய இருவரும் சிறிது தூரத்திற்கு அப்பால் மறைவாக உட்கார்ந்திருந்தபடியே அங்கே நிகழ்ந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தனர். புரோகிதர் தமக்குக் கும்பிடு போட்டவர்களையெல்லாம் நோக்கி மந்தகாஸம் செய்து, இடது கையை மார்பு வரையில் உயர்த்தி ஆசீர்வதித்தவராய்ப் பூஞ்சோலையம்மாளை நோக்கி உட்கார்ந்து கொள்ளும்படி சைகை காட்ட அந்த அம்மாள் பரவாயில்லை என்று மறுமொழி கூறி நிற்க, புரோகிதர், அவர்களது யோக க்ஷேமங்களைப் பற்றி விசாரிக்கலானார். உடனே பூஞ் சோலையம்மாள் தங்களது குடும்பத்தின் க்ஷேமசமாசாரங்களை எல்லாம் சுருக்கமாகத் தெரிவித்தபிறகு தனது மூத்த பெண்ணான கோகிலாம்பாளுக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருப்பதாகக் கூறி அதி சீச்சிரமான ஒரு முகூர்த்தத்தில் அதை நிறைவேற்றத் தாங்கள் இச்சைப்படுவதால் நிச்சயதார்த்தம், முகூர்த்தம் ஆகிய இரண்டிற்கும் நாள் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள்.

அந்த சந்தோஷ சங்கதியைக் கேட்ட புரோகிதர் மகிழ்ச்சியடைந்து தமது பொக்கை வாயை மலர்த்திப் புன்னகை செய்தவராய், பூஞ்சோலையம்மாளை நோக்கி, "அப்படியா! நிரம்ப சந்தோஷம்! கலியாணம் நடத்த குழந்தைக்கு இதுதான் சரியான காலம். நல்ல காரியம் செய்தீர்கள். மாப்பிள்ளையின் பெயரென்ன? அவர் எந்த ஊரில் இருப்பவர்? உத்தியோகம் பார்ப்பவரா? படிக்கிறவரா?" என்று கேள்விகளை அடுக்கிக்

கொண்டே போக, பூஞ்சோலையம்மாள், "மாப்பிள்ளையின் பெயர் கண்ணபிரான் முதலியார். அவர் இப்போது இந்த ஊரில் தான் உத்தியோகத்தில் இருக்கிறார்" என்று மறுமொழி கூற, அது அவரது காதுக்குக் கேட்காமல் போக, அந்த அம்மாள் தனது தொண்டையைக் கிழித்துக் கொண்டு பிரமாதமாகக் கூச்சலிட்டு அதே விஷயத்தை இரண்டு மூன்று முறை திருப்பித் திருப்பிச் சொல்ல நேர்ந்தது.

அந்த விவரத்தை உணர்ந்த புரோகிதரது மனதில் ஒரு கவலை தோன்றியது. அந்தக் கலியாணம் உள்ளூரிலேயே நடக்குமோ அல்லது வெளியூரில் எங்கேயாவது நடக்குமோ என்ற சந்தேகம் உதித்தது. ஏனெனில், அது உள்ளூரில் நடந்தால் தமக்கு நூற்றுக் கணக்கில் ரூபாய், சோமன் சோடு, சாமான்கள் முதலிய வருமானங்கள் கிடைக்கும். வெளியூரில் மாப்பிள்ளை வீட்டில் நடந்தால் தமக்கு ஒன்றுமில்லாமல் போய்விடும். ஆகையால் அந்த முக்கியமான சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளாமல் அவரது பஞ்சாங்க மூட்டையை அவிழ்க்க அவரது மனம் இடந்தரவில்லை. ஆகையால் அவர் பூஞ்சோலை யம்மாளை நோக்கி, "முகூர்த்தம் இந்த ஊரிலேதானே நடக்கப் போகிறது?" என்று நயமாகக் கேட்க, பூஞ்சோலையம்மாள் ஆமென்று மறுமொழி கூறினாள்.

அந்த சந்தோஷகரமான செய்தியைக் கேட்ட புரோகிதர் மிகுந்த உற்சாகமும் குதூகலமும் அடைந்தவராய் உடனே தமது பஞ்சாங்க மூட்டையை அவிழ்த்து விரித்து, பெண்ணுக்கும், பிள்ளைக்கும் பொருத்தமிருக்கிறதா என்பதையும், அவர்கள் இருவருக்கும் தகுந்த முகூர்த்த நாள் எதுவென்றும் பார்த்து, நெடுநேரம் வரையில் விரல்களை விட்டுக் கணக்கு போட்டபின் சந்தோஷத்தினால் மலர்ந்த முகத்தோடு பூஞ்சோலையம்மாளை நோக்கி, "சரி! பேஷ்! மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கு இருக்கும் பொருத்தத்தை என்னவென்று சொல்லுவேன்! ஆகா! இப்படிப்பட்ட அநுகூலமான தம்பதிகள் இந்த உலகத்திலேயே அமைந்திருக்க மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். என்ன பொருத்தம் போங்கள்! உயிரும் உடலும் எப்படிப் பொருந்தி இருக்கிறதோ அப்படியே இவர்கள் சந்தோஷமாக

நீடூழி வாழப் போகிறார்கள். நாளைக்கு மறு நாள் காலை சரியாகப் பத்து நாழிகைக்கு நிச்சயதாம்பூலம் மாற்றலாம். இன்றைக்கு எட்டாம் நாள் காலை ஏழு நாழிகைக்கு மேல், ஒன்பது நாழிகைக்குள் நல்ல சுபமுகூர்த்தம்; இதிலே இந்தக் கலியாணத்தை முடித்துவிடுவது சர்வ சிலாக்கியம், அது தவறினால் அடுத்தமாசத்தில்தான் முகூர்த்த தினம் இருக்கிறது. எட்டாம் நாளிலேயே நடத்தி விடலாம்'' என்று கூறினார்.

அவர் முழுச்செவிடர் என்பதைக் கண்டுகொண்ட கோகிலாம்பாள் தனது தாயை நோக்கி, ஏதோ சைகை செய்ய, அதை உணர்ந்த பூஞ்சோலையம்மாள் புரோகிதரை நோக்கி, ''இன்றைக்கு எட்டாவது நாளைய முகூர்த்தம் இருக்கிறதே, அதற்கு முன்பாகவே இன்னும் சமீபத்தில் கலியாண நாள் இல்லையா? நன்றாகப் பார்த்துச் சொல்லுங்கள்'' என்ற வினவ, உடனே புரோகிதர் தமது பஞ்சாங்கத்தை மேலும் ஒரு முறை புரட்டி நன்றாக ஆராய்ச்சி செய்து பார்த்து எட்டாவது நாளில் வரும் முகூர்த்தத்தைத் தவிர சமீபத்தில் வேறொரு முகூர்த்தம் இல்லையென்று உறுதியாகக் கூறினார்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள் தனக்குப் பக்கத்தில் இருந்த கற்பகவல்லியை நோக்கி நிச்சயதார்த்தத்தையும், கலி யாணத்தையும் புரோகிதர் குறித்த தினங்களில் வைத்துக் கொள்ளலாமா என்று கேட்க, கற்பகவல்லியம்மாளும் அதை ஆமோதித்தாள். பூஞ்சோலையம்மாள் புரோகிதரை நோக்கி, அவர் குறித்த தினங்களில் அந்தக் காரியங்களை நடத்துவதற்கு ஒரு லக்னப் பத்திரிகையும், தமது பந்துமித்திரர்களுக்கு எல்லாம் அனுப்புவதற்காகக் கலியாணக் கடிதத்தின் நகல் ஒன்றும் எழுதித் தரச்சொல்ல, அவர் அப்படியே செய்து எல்லாவற்றிற்கும் மஞ்சள் குறிகள் வைத்து ஆசீர்வதித்து அவைகளைப் பூஞ்சோலையம்மா ளிடத்தில் கொடுக்க, அந்த அம்மாள் அவைகளை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டு கற்பகவல்லியம்மாளிடத்தில் கொடுத்துவிட்டுத் தனது புதல்விகள் இருந்த இடத்தைப் பார்க்க, உடனே கோகிலாம்பாள் அங்கே ஆயத்தமாக வைக்கப்பட்டி ருந்த ஒரு வெள்ளித்தட்டை ஒரு வேலைக்காரியிடம் கொடுத் தனுப்ப, அதை எடுத்துவந்து பூஞ்சோலையம்மாளிடம் கொடுத்

தாள். அந்தத் தட்டில் வஸ்திரம், சால்வை, பணம், தாம்பூலம், புஷ்பம், பழம் முதலியவைகள் வைக்கப்பட்டிருந்தன. அந்தத் தட்டைப் பூஞ்சோலையம்மாள் வாங்கிப் புரோகிதருக்கு முன்னால் வைத்து வணக்கமாக கும்பிடுபோட்டு அவைகளை அங்கீகரிக்கும்படியும், நிச்சயதார்த்தத்தையும், கலியாணத்தையும் அவர் வந்து நடத்தி வைக்கும்படியும் வேண்டிக் கொள்ள, அவர் மிகுந்த மகிழ்ச்சியும், ஆநந்தமும் அடைந்தவராய், அந்த வஸ்துக்களை எடுத்து மூட்டை கட்டிக் கொண்டார். இரண்டு சுப காரியங்களுக்கும் என்னென்ன வைதீக சாமான்கள் வேண்டும் என்பதற்கு ஒரு ஜாப்தா தயார் செய்து அன்றைய தினம் பகலில் தாம் அனுப்புவதாகச் சொல்லி விடைபெற்றுக் கொண்டு புரோகிதர் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார்.

உடனே பெண்கள் இருவரும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தனர். முகூர்த்தம் அவ்வளவு சமீப காலத்தில் நடக்கப் போவதைப் பற்றி அங்கிருந்தோர் அவைரும் கரை கடந்த மகிழ்ச்சியும், மனவெழுச்சியும், பூரிப்பும் அடைந்து, யார் என்ன பேசுவது என்பதை உணராமல் ஆநந்தமே நிறைவாக மெய்ம் மறந்து நின்றனர். அந்தச் சயமத்தில் ஒரு வேலைக்காரன் உள்ளே நுழைந்து பூஞ்சோலையம்மாளை வணங்கி, ''எஜமானே! வாசலில் ஒரு பெட்டி வண்டியில் யாரோ ஓர் அம்மாள் வந்திருக் கிறார்கள். பார்வைக்கு நிரம்பவும் பெரிய மனிதர் வீட்டு அம்மாள் போல இருக்கிறது. வண்டியில் காசாரிகள் நாலு பேர் இருக்கிறார்கள். வண்டிக் குதிரை எல்லாம் சிறப்பாகவே இருக்கின்றன. அவர்கள் உள்ளே வந்து எஜமானைப் பார்க்க வேண்டுமாம்'' என்றான்.

அதைக்கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் திடுக்கிட்டு ஒருவாறு திகைப்படைந்து அது யாராக இருக்கும் என்று சிந்திக்க லாயினர். உடனே பூஞ்சோலையம்மாள், "அந்த அம்மாள் யார் என்ற விவரம் ஏதாவது சொன்னார்களா?'' என்றாள்.

வேலைக்காரன், ''சொல்லவில்லை. அவர்களிடத்தில் அதைக் கேட்பதற்கும் எனக்கு அச்சமாக இருக்கிறது'' என்றான்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள், "சரி; யாராக இருந் தாலும் இருக்கட்டும். உடனே போய் அவர்களை இங்கே

இட்டுக் கொண்டுவா'' என்று கூற, வேலைக்காரன் உடனே வெளியில் போய்விட்டான்.

அவர்கள் நால்வரும் தத்தம் இடங்களில் உட்கார்ந்து கொண்டனர். இரண்டொரு நிமிஷ நேரத்திற்குப் பிறகு, ''இப்படி இந்த வழியாக வாருங்கள்'' என்று சொல்லிக்கொண்டு அந்த வேலைக்காரன் வந்து நுழைந்தான். அவனுக்குப் பின்னால் ஒரு யௌவன ஸ்திரீ நுழைந்தாள். அவளுக்கு இருபது வயதிற்கு மேல் இராது என்பது நன்றாக விளங்கியது. தந்தத்தில் கடைந்து எடுக்கப்பட்டதோவென ஐயுறத்தக்க சரீரமும், இயற்கை அழகும், வசீகரமும், நிறைந்த வதனமும், அடி முதல் முடி வரையில் வைரங்களும், கெம்புகளும் செறிந்த ஆபரணங்களும், ஜரிகைப் புள்ளிகள் நிரம்பிய பனாரீஸ் பட்டாடைகளும் ஜெகஜ்ஜோதி யாக ஒளிவீசிக் காண்போர் மனதையும் உயிரையும் கவர்ந்து கொள்ளை கொள்ள, தெய்வ லோகத்திலிருந்து அப்போதே நேராக வந்திறங்குபவள் போலக் காணப்பட்ட அந்த மங்கை நாணமும் கிலேசமும் நிறைந்தவளாய், பூஞ்சோலையம்மாளை நோக்கிப் புன்னகை செய்து தலை குனிந்து வணங்கியபடி, மடவன்னம்போலத் தளர்நடை நடந்து உள்ளே புகுந்தாள்.

அவள் யாரோ ஒரு பிரபுவின் வீட்டு ஸ்திரீயென்று உடனே யூகித்துக் கொண்ட பூஞ்சோலையம்மாளும் மற்றவரும் அவளது அழகையும், அலங்காரத்தையும் கண்டு ஒருவாறு பிரமித்துப் போயினர். உடனே பூஞ்சோலையம்மாள் அவளை நோக்கி, ''வாருங்கள் அம்மா, இந்த ஸோபாவில் உட்கார்ந்து கொள் ளுங்கள்'' என்று அந்தரங்கமான அன்போடு உபசரித்து வர வேற்று மரியாதை செய்ய, அந்த யௌவன ஸ்திரீ, ''வருகிறேன்'' என்ற கூறிய வண்ணம் பக்கத்தில் இருந்த ஒரு ஸோபாவின் மேல் உட்கார்ந்து கொண்டவளாய்ப் பூஞ்சோலையம்மாளை நோக்கி, ''இந்தப் பெண்களுக்கும் தங்களுக்கும் உள்ள முக ஒற்று மையிலிருந்து, தாங்கள்தான் இந்தப் பங்களாவின் எஜமானி யம்மா என்பது தெரிகிறது. தங்களிடத்திலும், தங்களுடைய பெண்களிடத்திலும், ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போவதற்காக நான் வந்தேன்'' என்று நயமாகப் பீடிகை போட்டுப் பேசத் தொடங்கினாள்.

அவளது சொல்லைக் கேட்ட பூஞ்சோலையம்மாள், "நாங்கள் இன்னார் என்பது வெகு சுலபத்தில் யூகித்தறிந்து கொண்டு விட்டீர்கள். ஆனால் தாங்கள் யாராக இருக்கலா மென்று நான் யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆகையால், அந்த விவரத்தைச் சொல்லும்படி யான சிரமத்தை நான் தங்களுக்குக் கொடுத்தே தீர வேண்டி யிருக்கிறது" என்றாள்.

அதைக்கேட்ட அந்த யௌவன ஸ்திரீ, "அந்த விவரத் தையெல்லாம் தாங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது நிரம்பவும் அவசியமான விஷயம். தஞ்சாவூர் ஜில்லாவில் கோவிந்தபுரமென்று ஒரு சமஸ்தானம் இருக்கிறது. எங்களுடைய தகப்பனார்தான் அந்தச் சமஸ்தானத்து ஜெமீந்தார்" என்றாள்.

உடனே பூஞ்சோலையம்மாள் திடுக்கிட்டு வியப்பாகப் பேசத் தொடங்கி, "ஓகோ! அப்படியா! அன்றையத் தினம் சாயங் காலம் சமுத்திரக்கரையில் மோட்டாரில் வந்தவர்களுக்கும் தங்களுக்கும் என்ன பாந்தவ்வியமோ?" என்ற நயமாகக் கேட்க, அந்த யௌவன ஸ்திரீ, "அவர் என்னுடைய தமயனார், எங்களுக்கு மைலாப்பூரில் ஒரு பங்களா இருக்கிறது; அன்றைய தினம் அவர் ஏறிவந்த மோட்டார் வண்டியில் திடீரென்று ஒரு விசை கெட்டுப்போய் விட்டதாம்; அதனால் அந்த மோட்டார் வண்டியை அவர் அப்புறம் இப்புறம் திருப்பவும், நிற்க வைக்கவும் முடியாமல் போய்விட்டதாம்; நல்ல வேளையாக தங்களுடைய வண்டிக்காரன், ஸாரட்டு வண்டியைக் கொஞ்சம் அப்பால் திருப்பி விட்டானாம்; இல்லாவிட்டால், அன்றைய தினம் பெருத்த அபாயமும், உயிர்ச்சேதமும் நேர்ந்திருக்குமாம்; என்னவோ தெய்வந்தான் வந்து குறுக்கிட்டு எல்லோரையும் காப்பாற்றியது. அந்த விவரங்களையெல்லாம் கேட்டவுடன் என்னுடைய உடம்பு பதறிப்போய்விட்டது. என்னுடைய தமய னாரும் அது முதல் இதே வியாகுலமாகப் படுத்த படுக்கையாய் இருக்கிறார். தங்களுடைய குழந்தைகளுக்கும் பலமாக அடிபட்டிருக்குமோ என்ற கவலையினால் நாங்கள் நேற்று முழுவதும் நிரம்பவும் சங்கடப்பட்டுப் போனோம். தங்க ளுடைய ஜாகை எங்கே இருக்கிறது என்பதைப் பார்த்தறிந்து

வரும்படி வேலைக்காரனை அனுப்பி வைத்தோம். அவன் இந்த இடத்தைத் தெரிந்து கொண்டு நேற்று சாயங்காலந்தான் திரும்பி வந்தான். இராத்திரி காலத்தில் இங்கே வந்து தங்களையெல்லாம் அசௌகரியப்படுத்தக் கூடாதென்று யோசித்து நான் இப்போது புறப்பட்டு வந்தேன்; எங்களால் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெருத்த இடரும் தேகத் துன்பமும் அசௌக்கியமும் நேர்ந்து விட்டன. இந்தக் குற்றத்தை என்னுடைய தமயனார் வேண்டு மென்று செய்யவில்லை. அதைத் தாங்கள் உறுதியாக நம்பலாம். இந்த விஷயத்தில் தங்களுக்கு எங்கள் மேல் கொஞ்சமும் வருத்தமில்லையென்று மனப்பூர்வமாகச் சொல்ல வேண்டும். அதோடு தங்களுக்கு ஏற்பட்ட பொருள் நஷ்டம் எவ்வளவோ, அவ்வளவையும், தாங்கள் எங்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் எங்களுடைய மனசு சாந்தப்படும்'' என்று நயமாகவும், வணக்கமாகவும் கூறினாள்.

பூஞ்சோலையம்மாள், ''அம்மா! அன்றையத்தினமே தங்களுடைய தமயனார் என்னுடைய குழந்தைகளிடத்தில் சொன்ன சங்கதிகளையெல்லாம் நான் கேள்வியுற்றேன். தங்கள் தமயனார் வேண்டுமென்று எதையும் செய்யவில்லையென்றும், அவர்மேல் எங்களுக்குக் கொஞ்சமும் வருத்தம் இல்லையென் றும், என்னுடைய மூத்த குழந்தை அன்றைய தினமே சொல்லியிருக்கிறாளே! இன்னமும் தாங்கள் இருவரும் இதைப் பற்றி ஏன் சஞ்சலப்படவேண்டும்? அன்றைய தினம் இராத்திரி இந்தக் குழந்தைகள் வந்து விவரங்களையெல்லாம் சொன் னார்கள். உயிர்ச்சேதம் நேராமல் நல்ல வேளையாக அவர்கள் திரும்பி வந்து சேர்ந்தார்களே என்று நாங்கள் அது முதல் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறோமேயன்றி, எதைப் பற்றியும் விசனிக்கவும் இல்லை, தங்களுடைய தமயனாரைப் பற்றி நாங்கள் கொஞ்சமும் வித்தியாசமாக நினைக்கவும் இல்லை. ஆகையால், தாங்கள் அந்த விஷயத்தைப் பற்றி எங்க ளுக்கு எவ்வித உபசாரமும் சொல்லவே தேவையில்லை. அந்த விஷயத்தில் எங்களுக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படவில்லை. குதிரையின் கால் புண் அநேகமாக சொஸ்தமாகி விட்டது. வண்டியின் சக்கரங்கள் இரண்டுதான் முறிந்து போய்விட்டன. அவைகள் ஐம்பது அறுபது ரூபாய் பெறும். அந்த அற்பத்

தொகையை நான் தங்களிடத்தில் வாங்கிவிட்டால், அதனால் நாங்கள் பெரிய மனிதர்கள் ஆகிவிட மாட்டோம். நாங்கள் அப்படிச்செய்தால் எங்களுடைய பெரிய மனுஷத்தனம் குறைந்து போகுமேயன்றி அதிகப்படாது. ஆகையால், தாங்கள் இந்த விஷயத்தைப் பற்றிய கவலையும், துன்பத்தையும் விலக்கி விடுங்கள். தங்களுடைய தமயனாரிடதில் இந்த விஷயத்தைத் தெரிவித்து, அவர் இதைக் குறித்து இனி எவ்வித வியாகுலமும் கொள்ளத் தேவையில்லை என்று சொல்லி சமாதானப் படுத்துங்கள். இந்த அபாயம் நேரிட்டதிலிருந்து எங்களுக்கு பெருத்த அநுகூலங்களெல்லாம் உண்டாயிருக்கின்றன. நல்ல மனிதர்கள் பெரிய மனிதர்களுடைய தரிசனமும் சிநேகமும் எங்களுக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. மோட்டார் வண்டி குதிரையின் காலைக் கிழித்துவிட்டுப் போனவுடனே, குதிரை ஸாரட்டை இழுத்துக் கொண்டு பெருத்த பள்ளத்தின் சமீபமாகப் போனபோது இவர்களுடைய உயிர் எமலோகத்தின் வாசற்படியில் நின்று உட்புறத்தை எட்டிப் பார்த்துக் கொண்டி ருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு புண்ணியவான் தம்முடைய உயிரை ஒரு திரணமாக மதித்துப் பாய்ந்து குதிரைமேல் தாவி, அதை அப்புறப்படுத்தி, இந்தக் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றினார். அவருடைய தாயார்தான் இதோ இருக்கும் அம்மாள். இந்த அம்மாளும், இவர்களுடைய குமாரரும் நல்ல தங்கமான மனிதர்கள்; நற்குண நல்லொழுக்கம் உடையவர்கள். இவர்களுடைய சிநேகமும் அன்னியோன்னியமான பழக்கமும் எங்களுக்கு அன்றைய தினம் முதல் ஏற்பட்டு விட்டன. நாங்களும் இவர்களும் ஆயிரங்காலம் பழகினவர்கள்போல ஆகிவிட்டோம். இப்போது தங்களுடைய தரிசனமும் கிடைத்தி ருக்கிறது. ஏதோ பெருத்த உள் கருத்தோடுதான் ஈசுவரன் ஒவ்வொருவரையும் கூட்டி வைக்கிறான். தங்களைப் பார்க்க நேர்ந்தது நிரம்பவும் சந்தோஷமாக இருக்கிறது. தாங்களும், தங்க ளுடைய தமயனாரும் மாத்திரம் மைலாப்பூரில் இருக்கிறீர்களா? தங்களுடைய தகப்பனார் தாயார் முதலிய தங்களுடைய குடும் பத்தார் எல்லோருமே மைலாப்பூரில் இருக்கிறீர்களா?'' என்றாள்.

அந்த யௌவன மடந்தை, "நானும் என்னுடைய தமய னாரும் மாத்திரம் இந்த ஊருக்கு இப்போது வந்திருக்கிறோம்.

எங்களுக்குத் தாயார் இறந்து போய்விட்டார்கள். தகப்பனார் எங்களுடைய சமஸ்தானத்திற்கு ஓர் அவசர ஜோலியாகப் போயி ருக்கிறார். என்னுடைய தமயனார் இதுவரையில் படித்துக் கொண்டிருந்து இப்போது தான் படிப்பை நிறுத்தினார். அவரைப் படிக்க வைப்பதற்கென்றே நாங்கள் இங்கே ஒரு பங்க ளாவை விலைக்கு வாங்கினோம். அநேகமாக நாங்கள் எப்போதும் இந்த ஊரிலேதான் இருப்போம். எங்களுடைய தகப் பனார், சமஸ்தானத்துக்கு அப்போதைக்கப்போது போய்விட்டு வருவார்கள்" என்றாள்.

பூஞ்சோலை:- ஓகோ! அப்படியா! தங்களுடைய பெயர் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்று என் மனம் தூண்டுகிறது. ஆனால் கேட்பதற்கு துணிவு உண்டாகவில்லை.

யௌவன ஸ்திரீ:- (மகிழ்ச்சியோடு நகைத்து) சரி சரி! மனித ருடைய பெயரென்ன சிதம்பர ரகஸியமா? அதை மற்றவர் உபயோகிப்பதற்காகத்தானே பெயர் வைக்கப்படுகிறது. அப்படி இருக்க, என்னுடைய பெயரைத் தாங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியதுதானே. அதைப் பற்றிக் கேட்கத் துணிவு கூட உண்டாக வேண்டுமா! என்னிடத்தில் ஏதாவது தியாகம் கேட்கிறீர்களா? என்னைப் புஷ்பாவதி என்று கூப்பிடுவார்கள். என்னுடைய தமயனாருடைய பெயர் சுந்தரமூர்த்தி என்பார்கள்.

பூஞ்சோலை:- (மிகுந்த மகிழ்ச்சியும், புன்னகையும் தோற்றுவித்து) அம்மா! தங்களிடத்தில் நல்ல பெருந்தன்மையும் கபடமின்மையும், எல்லோரிடத்திலும் அன்னியோன்யமாக நடந்து கொள்ளும் சரஸ குணமும் பூரணமாக நிரம்பி இருக்கின் றன. இப்படிப்பட்ட அருமையான மனிதராகிய தங்களுடைய நட்பும் பிரியமும் எங்களுக்கு நீடித்திருக்க வேண்டும். தாங்கள் இதோடு எங்களை மறந்துவிடக் கூடாது. அடிக்கடி நாங்களும் தங்களுடைய ஜாகைக்கு வருகிறோம். தாங்களும் இங்கே வந்து சந்தோஷமாக இருந்து விட்டுப் போக வேண்டும்.

புஷ்பாவதி:- (நிரம்பவும் குதூகலமாகப் பேசத் தொடங்கி) அம்மா! நானும் இதே சங்கதியைக் கேட்டுக்கொள்ளத்தான் நினைத்தேன். அதைத் தாங்களே சொல்லிவிட்டீர்கள். தாங்கள் வயதிலும் அனுபவத்திலும் என்னைவிடப் பெரியவர்கள் அல்

லவா! ஆகையால் தாங்கள் முந்திக் கொண்டீர்கள். இருந்தாலும் பாதகமில்லை. எள்ளின் செடி எண்ணெயாகவே காய்த்ததுபோல ஆகிவிட்டது. நான் இன்றையத் தினம் தங்களையெல்லாம் தரிசித்து என் தமயனாருடைய பிழையை க்ஷமிக்கும்படி கேட்டுக் கொள்ள வந்தது முக்கியமான காரியமாக இருந்தாலும், நான் இங்கே வந்ததற்கு அதைவிட முக்கியமான இன்னொரு காரணமும் இருக்கிறது. நம்முடைய பழக்கமும் சிநேகமும் எப்போதும் நிலைத்திருக்க வேண்டுமென்று தாங்கள் இப்போது சொன்னீர்களல்லவா? அந்த விருப்பமானது, நான் கோரிவந்த காரியம் பலிதமாகுமானால், கைகூடிவிடும்.

பூஞ்சோலை:- (மிகுந்த வியப்பும் திகைப்பும் அடைந்து) அப்படியானால், நம்முடைய சிநேகம் நிரந்தரமாயிருப்பதற்குத் தாங்கள் ஏற்கனவே ஏதோ திட்டம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. அப்படியானால் அதைத் தாங்கள் வெளியிட யோசனையென்ன?

புஷ்பாவதி:- வேறொன்றுமில்லை. இப்போது முதலில் என்னுடைய தமயனாருக்குக் கலியாணம் ஆக வேண்டும். அதற்காகப் பல இடங்களிலிருந்து பெரிய மனிதர்களும் ஜெமீந் தார்களும் வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். என்னுடைய தமயனாரும், தகப்பனாரும் அந்தந்த இடங்களுக்குப் போய்ப் பெண்ணைப் பார்த்துவிட்டு வருகிறார்கள். ஆனால், இது வரையில் பார்த்த நூற்றுக்கணக்கான இடங்களில் ஒன்று கூட எங்களுக்குப் பிடிக்கவில்லை. எங்களுடைய சமஸ்தானத்தில் 35 கிராமங்கள் இருக்கின்றன. எங்களுடைய வருஷ வருமானம் சுமார் 2 லட்சத்துக்கு மேல் இருக்கும். அவ்வளவுக்கும் என்னு டைய தமயனார் ஒருவரே வாரிசுதாரர். ஆகையால், எங்களுக்குச் சமமான அந்தஸ்து உடையவர்களைத் தவிர மற்றவர்களிடத்தில் சம்பந்தம் செய்து கொள்ள எங்களுக்குப் பிரியமில்லை. அதுவும் தவிர, என்னுடைய தமயனார் பெண்ணின் குணா குணங்களை அறிந்து கொள்வதில் மகா சமர்த்தர். பெண் நல்ல அழகுடை யதாக இருப்பதோடு அடக்கம், புத்திசாலித்தனம் முதலிய சகல மான குணங்களும் வாய்த்தவளாக இருக்க வேண்டும் என்பது அவருடைய முக்கியமான கோரிக்கை; இந்த மேம்பாடுகள் இருக்

குமானால் பொருளைப் பற்றிக்கூட எங்களுக்கு அவ்வளவாகக் கவலை இல்லை. அவருடைய மனசுக்கு உகந்த பெண் இந்த உலகத்திலேயே இல்லையென்று கண்டு நாங்கள் நம்பிக்கையை இழந்து, இனி என்ன செய்கிறதென்று கவலை கொண்டிருந் தோம். ஆனால், அன்றைய தினம் கடற்கரையில் அபாயம் நேர்ந்த பிறகு, அப்படிப்பட்ட உத்தம குண ஸ்திரீத்தனம் ஒன்று இந்த உலகத்தில் இருக்கிறது என்பதை அவர் கண்டு அந்த சந்தோஷ செய்தியை எங்களிடத்திலெல்லாம் தெரிவித்தார். அந்த ரத்னம் இப்போது தங்களுடைய வசத்தில் இருக்கிறது; தங்களி டம் மன்னிப்புக் கேட்பதோடு, அந்த ரத்னத்தையும் எங்களுக்குச் சன்மானமாகக் கொடுக்கும்படி கேட்க வேண்டுமென்பது, நான் இங்கே வந்ததன் இரண்டாவது கருத்தான அதி முக்கியமான விஷயம். அதிர்ஷ்டவசமாக நாங்களும் தாங்களும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். அந்தச் சந்தேகத்தை யும் நான் நன்றாக விசாரித்து அறிந்துகொண்டு வந்ததனாலே தான் ஒரு நாள் தாமசமாக வர நேர்ந்தது. தங்களிடத்தில் ஏதாவது ஒன்று வேண்டுமென்று கேட்போருக்கு, தாங்கள் இல்லையென்ற சொல்லை உபயோகித்து அறியாத சிறந்த வள்ளல் என்பதை நான் அறிவேன். ஆகையால், என் விஷயத்தி லும் இல்லையென்ற சொல் இராதென்று நினைத்தே நான் இதைக் கேட்கத் துணிந்தேன் - என்றாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாளும் மற்றவர்களும் திடுக்கிட்டு வியப்பும் திகைப்பும் அடைந்தனர்.

உடனே பூஞ்சோலையம்மாள் புஷ்பாவதியை நோக்கி, "அம்மா நான் சொன்னது சரியாகப் போய்விட்டது; இந்த அபாயம் நேரிட்டதிலிருந்து எப்படிப்பட்ட புதிய சிநேகமும், எதிர்பாராத நன்மைகளும் ஏற்படுகின்றன பார்த்தீர்களா? தங்களைப் போன்ற ஜெமீந்தாருடைய குடும்பத்திலெல்லாம் எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கு சம்பந்தம் நேரிடு வது பெருத்த அதிர்ஷ்ட பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்; என்னுடைய குழந்தை தங்களுடைய தமயனாருக்கு வாழ்க்கைப் பட வேண்டுமென்ற ஈசுவர சங்கற்பம் இருந்தால், அப்படியே நடக்கட்டும். எதுவொன்றும் நிறைவேறும் காலம் வந்துவிட்டால்

நம்முடைய முயற்சியின்றித் தானாகவே வந்து நேர்ந்து விடுகிறது. இதோ இந்தக் கற்பகவல்லியம்மா இருக்கிறார்களே; இவர்களுக்கும் எங்களுக்கும் இந்த இரண்டு தினமாகத்தான் பழக்கம். இவர்களுடைய குமாரர்தான் இந்த இரண்டு குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றினார் என்று நான் முன்பே சொன்னேன் அல்லவா? அவருக்கு என்னுடைய மூத்த குழந்தை யான கோகிலாம்பாளைக் கட்டிக் கொடுக்க நேற்று இராத்திரி தான் தீர்மானமாயிற்று. புரோகிதர் வந்து நாள் வைத்துவிட்டு இப்போதுதான் புறப்பட்டுப் போகிறார். நாளை தரித்து மறுநாள் காலை பத்து மணிக்கு நிச்சயதார்த்தமும், இன்றைக்கு எட்டாள் நாள் தினம் காலையில் கலியாண முகூர்த்தமும் நடக்கப் போகின்றன. சின்னவளான சௌந்தரவல்லிக்கும் ஓர் இடம் நிச்சயிக்கப்பட்டுப் போனால், இரண்டையும் சேர்த்து ஒன்றா கவே நடத்தி விடலாம். மனம் போல மாங்கலியம் என்று சொல் லுவார்கள். அதுபோல அவரவர்கள் எதைக் கருதுகிறார்களோ அதுவே அநேகமாக நிறைவேறுகிறது. விதிக்குத் தகுந்தபடி மதியும் இருக்கும் என்பது பொய்யல்ல'' என்றாள்.

அந்த வார்த்தையைக் கேட்ட புஷ்பாவதி கிலேசமும் கலக்கமும் அடைந்து, ''அப்படியா! மூத்த பெண்ணுக்கு இடம் நிச்சயமாகி விட்டதா! என்னுடைய தமயனார் மூத்த பெண் ணைத்தான் கேட்கும்படி என்னை அனுப்பி வைத்தார். இரண்டு பெண்களும், ஒரே மாதிரியாகவும், அழகோடும் இருந்தாலும், மூத்ததுதான் சரியான பக்குவகாலம் அடைந்திருக்கிறது என்றும், இளையது இன்னமும் குழந்தைபோல் இருப்பதால் அதற்குக் கலியாணம் செய்ய இன்னும் சில வருஷ காலம் கழிய வேண்டும் என்றும், என்னுடைய தமயனார் சொன்னார். ஆகை யால், அவருடைய ஆசையெல்லாம் மூத்த குழந்தையின் மேலே தான் ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் எப்படியாவது தயை கூர்ந்து மூத்ததையே எங்களுக்குக் கொடுக்க வேண்டும். இளையதை வேண்டுமானால், இந்த அம்மாளுடைய குமாரருக்குக் கொடுத்து விடுங்கள்'' என்று நயமாகவும், குதூகலமாகவும் புன்னகை செய்தவண்ணம் கூறினாள்.

அதைக் கேட்கவே அங்கிருந்த எல்லோருக்கும் முகம் மாறு பட்டது. பூஞ்சோலையம்மாள் மிகுந்த கிலேசமும் சஞ்சலமும்

அடைந்தவளாகக் காணப்பட்டாள். கற்பகவல்லி யம்மாளது முகத்தில் அசடு வழிகிறது. கோகிலாம்பாளது முகம் சுருங்கி அருவருப்பையும், சம்மதமின்மையையும் காட்டியது. அவள் தனது முகத்தைச் சுளித்துக் கொண்டு கீழே குனிந்தாள். ஸௌந்தரவல்லி தனது அக்காளை மாத்திரம் புகழ்ச்சியாகப் பேசி, தன்னை வேண்டாமென்று புஷ்பாவதி தள்ளுகிறாளேயென்ற அதிருப்தியும், சீற்றமும் பொறாமையும் கொண்டவளாய்ச் சடக்கென்று அவ்விடத்தை விட்டு எழுந்து தனது முகத்தை ஒரு திருப்புத் திருப்பிக்காட்டிவிட்டு, அவ்விடத்தை விட்டு, சற்று தூரத்திலிருந்த ஒரு கட்டிலண்டை போய்க் குப்புறப் படுத்துக் கொண்டாள்.

பூஞ்சோலையம்மாள் தனது புதல்வியர் இருவரது மன நிலைமையையும் ஒரே க்ஷணத்தில் யூகித்து உணர்ந்தவளாய் உடனே புஷ்பாவதியை நோக்கி, "அம்மா! மூத்த குழந்தையின் கலியாணத்துக்கு ஆக வேண்டிய சகலமான ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து விட்டோம். அதுவும் தவிர, இந்த அம்மாளு டைய குமாரரைக் கட்டிக்கொள்ள என்னுடைய மூத்த குழந் தையே பிரியப்பட்டதனால், நாங்களும் இந்த ஏற்பாட்டைச் செய்தோம். ஆகையால், குழந்தையின் இஷ்டத்துக்கு மாறாகச் செய்வது உசிதமாகாது. என்னுடைய சின்னப் பெண் தாங்கள் நினைக்கிறபடி அவ்வளவு அறியாத குழந்தையல்ல; இரண்டு பெண்களும் ஒரே தினத்தில் இரட்டையாகப் பிறந்தவர்கள். இருவருக்கும் வயசில் ஒரு நாழிகை காலந்தான் வித்தியாசம். இருவருக்கும் பதினைந்தாவது வயசு முடிந்து, பதினாறாவது வயது நடக்கிறது. அவள் நிரம்பவும் செல்லமாக வளர்க்கப் பட்டவள். ஆகையால், இப்போது குழந்தைபோலக் கபடமில் லாமல் இருக்கிறாள். அவளுக்குக் கலியாணமாகி, அவளும் தன்னுடைய குடும்ப பாரத்தை ஏற்றுக் கொள்வாளானால் அவள் தானாகவே பொறுப்பை உணர்ந்து நடக்கிறாள். ஏதோ எங்களுக்கு ஈசுவரன் கொடுத்த செல்வம் இருக்கிறது. அந்தக் குழந்தை இப்போதே கவலைப்பட்டு வருந்த வேண்டுமா?" என்றாள்.

உடனே புஷ்பாவதி, "அம்மா! தாங்கள் சொல்வது நிரம்பவும் நியாயமான வார்த்தை. பெரிய மனிதருடைய

வீட்டில் செல்லமாக வளரும் பெண்களெல்லாம் இப்படித்தான் குழந்தைபோல இருக்கும். அது வாஸ்தவமான விஷயம். நானும் பதினாலு பதினைந்து வயசு வரையில் இப்படித்தான் இருந்தேன் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இப்போது நான் புது மனுஷிபோல மாறிவிட்டேன் என்றும் சொல்லுகிறார்கள். அது போல, எல்லாம் காலக்கிரமத்தில் ஒழுங்குப்பட்டு விடும் என் பதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. ஆனால், அதில் இன்னொரு விஷயம் இருக்கிறது. ஆண் பிள்ளைகள் மகா பிடிவாதக் காரர்கள். அதுவும் யௌவனப் பருவத்து ஆண் பிள்ளைகளோ தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கிறவர்கள். விஷயமும் கலியாண விஷயமாக இருந்து விட்டாலோ, அவர்களுடைய மனசின் பிடி குரங்கின் பிடியை விட ஆயிர மடங்கு உறுதியானதாக இருக்கும். தாம் பார்த்து ஆசை வைத்த பெண்ணைத்தான் கட்டித் தீர வேண்டும். அந்தப் பெண்ணினி டத்தில் ஆயிரம் குற்றங்களும், கோணல்களும் இருந்தாலும் அவைகளையெல்லாம், அத்தனை அழகுகளாகவும், சிறப்புக ளாகவும் அவர்களுடைய கண்ணுக்குத் தெரியும். எவ்வளவோ சிலாக்கியமாக இருக்கும் மற்ற எல்லாப் பெண்களும் அவர்களுக்கு இளப்பாகத் தோன்றுவார்கள். இது தங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. என்னுடைய தமயனாரும் இதே கோஷ்டியைச் சேர்ந்தவர். மற்ற எந்த விஷயத்திலும் அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப் போல இழுத்த இழுப்புக்கெல்லாம் வருவார். இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம், அவர் தகப்ப னாருடைய பேச்சைக் கூட தள்ளிவிடக் கூடிய வணங்கா முடி மன்னர். அவர் அன்றைய தினம் ஜாகைக்கு வந்தது முதல் இதே தியானமாகப் படுத்திருக்கிறார். கட்டினால் தங்களுடைய மூத்த பெண்ணைக் கட்டுகிறது என்றும், இல்லையானால், அப்படியே பட்டினி கிடந்து உயிரை விடுகிறது என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் ஏதாவது ஒரு தீர்மானம் செய்து கொண்டால் அதை அப்படியே நிறைவேற்றக் கூடியவர். தாங்கள் இப்போது சொன்ன தீர்மானத்தை நான் உடனே போய் அவரிடம் தெரிவித்தால், அவர் தன்னுடைய பிராணனை விட்டு விடவே முயற்சிப்பார். அப்படி ஒருவர் வதைபட்டு மடிய தங்களுடைய பெண் காரணமாக இருந்தது என்னும் பழியை

ஏற்றுக் கொள்ளத் தங்களுக்கு இஷ்டந்தானா? அவர் போய் விட்டால், ஒரு பெருத்த சமஸ்தானமே வாரிசு இல்லாமல் அழிந்து போய் சர்க்காரைச் சேர்ந்துவிடும். தம்முடைய பிள்ளையை எமனுக்குப் பறிகொடுத்து என் தகப்பனார் ஒரு நிமிஷ நேரமும் சகித்திருக்க மாட்டார். இதையெல்லாம் தாங்கள் கொஞ்சம் யோசித்துப் பார்த்து எங்களிடத்தில் இரக்கங் கொள்ள வேண்டும். தங்களுடைய சின்னக்குழந்தையை இந்த அம்மாளுடைய குமாரருக்குக் கட்டுவதனாலும், இவர்களுக்கு எந்தவிதக் கஷ்டமும் நஷ்டமும் உண்டாகப் போகிறதில்லை. அப்படிக் கட்டினால், இரண்டு மனிதர்களின் உயிரைக் காப் பாற்றிய பெரும் புண்ணியம் இந்தக் கற்பகவல்லியம்மாளுக்கும் சித்திக்கும்; தங்களுக்கும் சித்திக்கும்; தாங்கள் எப்படியாவது தயைகூர்ந்து எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, எங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்'' என்று நயந்து பணிவாகக் கூற, அவளது கனிவானச் சொற்களைக் கேட்டு மனது இளக்க மடைந்த பூஞ்சோலையம்மாள் அதற்குத் தான் என்ன மறுமொழி சொல்வது என்பதை உணராமல் சிறிது நேரம் தயங்கி நின்ற பின் புஷ்பாவதியை நோக்கி, "அம்மா! தாங்கள் இப்படியே ஒரு நிமிஷ நேரம் இருங்கள். இந்த விஷயத்தில் நானே சுயமாக எவ்வித முடிவும் செய்வது சரியல்ல; இந்தக் கற்பகவல்லி யம்மாளையும், என்னுடைய பெண்கள் இருவரையும் தனியாக அழைத்துப் போய் வைத்துக்கொண்டு அவர்களுடைய அபிப் பிராயம் என்ன என்பதை அறிந்து வந்து என்னுடைய முடிவைத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன்'' என்று கூற, புஷ்பாவதி மிகுந்த மகிழ்ச்சியோடு அதற்கு இணங்கினாள்.

உடனே பூஞ்சோலையம்மாள், கற்பகவல்லியையும், தனது பெண்களையும் அழைத்துக் கொண்டு அந்த விடுதிக்குப் பக்கத்தில் இருந்த வேறொரு மறைவான இடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

அதன் பிறகு அரை நாழிகை கழிந்தது; பூஞ்சோலையம் மாளும், கற்பகவல்லியம்மாளும் திரும்பி வந்து முன்பு இருந்த ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள்; உடனே பூஞ்சோலை யம்மாள் புஷ்பாவதியை நோக்கி, "அம்மா! இப்போது, என்னு

டைய நிலைமை எப்படியிருக்கிறதென்றால், இரண்டு கன்று களில் எதற்குப் பால் கொடுப்பது என்று இரங்கிப் பரிதவிக்கும், தாய்ப்பசுவின் நிலைமைபோல் இருக்கிறது. தங்களுடைய தமயனார் துன்பப்படுவதைப் பார்த்தால், அவருடைய பிரியப் படி செய்ய வேண்டும்போல இருக்கிறது. ஆனால், என்னுடைய மூத்த பெண்ணோ இந்த அம்மாளுடைய குமாரனைத்தான் கட்டிக்கொள்வேன் என்று ஒரே பிடிவாதமாகப் பேசுகிறாள். என்னுடைய மூத்த பெண்தான் இந்த ஆதீனத்துக்கே அதிகாரி யாக இருந்து எல்லாக் காரியங்களையும் நடத்தி வருபவள். அவளை நான் கேவலம் ஒரு குழந்தைபோல எண்ணி அதட்டி எந்தக் காரியத்தையும் செய்ய வற்புறுத்துவது ஒழுங்கு ஆகாது. தானாகக் கனியாத பழத்தைத் தடி கொண்டு அடித்துப் பழுக்க வைப்பது தகுதியான காரியமல்ல. ஆகையால், அவளுடைய கலி யாண ஏற்பாட்டை மாற்ற எனக்கு அதிகாரமில்லை; என்னு டைய சின்னப் பெண்ணினிடத்திலும் நான் இந்த விஷயத்தைக் கலந்து யோசித்தேன். அவள் தங்களுடைய தமையனாரை அன் றைய தினம் பார்த்திருக்கிறதாகவும், அவரைக் கட்டிக்கொள்ளத் தனக்கு இஷ்டந்தான் என்றும் சொல்லுகிறாள்; ஆகையால், தாங்கள் தங்களுடைய தமையனாரிடத்தில் இங்கே இருக்கும் நிலைமையைத் தெரிவித்து அவருக்குச் சின்னப்பெண்ணைக் கட்டிக்கொள்ள இஷ்டமிருக்கும் பட்சத்தில், அதை எங்களுக்குத் தெரிவியுங்கள். அதன் மேல் நாங்கள் தங்களுடைய ஜாகைக்கு வந்து எல்லா விஷயங்களையும் பார்த்துத் திருப்தி கொண்டு, அந்தக் கலியாணத்தையும் இந்த முகூர்த்தத் தேதியில் நடத்தி விடுவோம். அவ்வளவுதான் முடிவு. ஏதடா இவ்வளவு கண்டிப் பாகப் பேசுகிறார்களே என்று தாங்கள் என்மேல் ஆயாசப் படக்கூடாது'' என்று நயமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட புஷ்பாவதியின் முகம் வாட்டம் அடைந்தது. தான் அதற்குமேல் அவர்களை எப்படி வற்புறுத்துவது என்பதை அறியாதவளாய்ச் சிறிது நேரம் தயங்கிய பின் பூஞ்சோலையம் மாளை நோக்கி, ''சரி; மேலும் நான் என்ன சொல்லப் போகிறேன். தாங்கள் சொன்னபடி நான் போய் என்னுடைய தமயனாரிடத்தில் இந்த விஷயங்களையெல்லாம் தெரிவித்து,

அவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்டு முடிவைத் தங்களுக்கு எழுதியனுப்புகிறேன். தாங்களும் இன்னும் யோசனை செய்து இந்த ஏற்பாட்டை எங்களுடைய பிரியப்படி மாற்ற முடியுமா என்று பாருங்கள். என்னுடைய தமையனார் இருக்கும் பரிதாபகரமான நிலைமையைத் தாங்களே நேரில் வந்து பார்த்தால், தங்களுடைய மனசு உடனே இளகிப் போய் விடும், அவர் அவ்வளவு கேவலமான நிலைமையில் கிடக்கிறார். நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறன். தயவிருக்கட்டும்" என்று கூறி விடை பெற்றுக்கொள்ள, உடனே புஷ்பாவதிக்குத் தாம்பூலம், மஞ்சள், குங்குமம், இரவிக்கைத் துண்டு முதலியவை கள் வழங்கி மரியாதைகள் செய்யப்பட்டன. அதற்கு மேல் புஷ்பாவதி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியில் போய் தனது வீடு இருந்த திக்கில் போகாமல், கண்ணபிரானது வீடு இருந்த திக்கை நோக்கிச் சென்றாள்.

## 5 – வது அதிகாரம்

# மோகனாஸ்திரப் பிரயோகம்

புஷ்பாவதி என்னும் மாது பூஞ்சோலையம்மாளது பங்களாவிற்கு வருமுன் அவ்விடத்தில் இருந்தோர் யாவரும் எவ்விதக் கவலையும், சலனமும் இன்றி ஆனந்தமும் குதூகலமுமே நிறைவாக இருந்தனர். ஆனால், அவள் வந்து கலியாணப் பேச்சைப் பேசிவிட்டுப் போனது, கலக விதை விதைத்துப் போனது போல் இருந்தது. சௌந்தரவல்லியைத் தவிர, மற்ற எல்லோர் மனதிலும் கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாரின் பரிதாபகரமான நிலைமையை உணர்ந்ததனால் ஒருவித இரக்கமும், அநுதாபமும் தோன்றி வதைத்துக் கொண்டிருந்தன. கற்பகவல்லியம்மாளது மனதில் ஒருவிதக் கவலையும், அச்சமும் இடையிடையே எழுந்து சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்தன. தங்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு மேம்பட்ட மனிதர்களான கோவிந்தபுரம் ஜெமீன்தாரது வீட்டில் கோகிலாம்பாளைக் கொடுக்க அவர்கள் ஒருவேளை இணங்கி விடுவார்களோ என்ற சந்தேகம் அடிக்கடி தோன்றியது. ஆனாலும், கோகிலாம்பாள் மனோதிடமும், உறுதியும் உடைய உத்தம குண மடந்தையாதலால், அவள் ஒருதரம் செய்த தீர்மானத்தை மாற்ற இடங்கொடுக்க மாட்டாள் என்ற எண்ணமும் தோன்றியது. அப்படியே அவர்கள் கோகிலாம்பாளை கோவிந்தபுரத்து வீட்டில் கலியாணம் செய்து கொடுக்க நேர்ந்தாலும் இளைய பெண்ணான சௌந்தர வல்லியை அவர்கள் தனது பிள்ளைக்குக் கொடுத்தாலும், அதுவே தங்களுக்குப் போதுமானது என்று கற்பகவல்லியம்மாள் எண்ணிமிட்டுக் கொண்டிருந்தாள்.

பூஞ்சோலையம்மாளும், கோகிலாம்பாளும் ஒன்றுகூடித் தனியாக இருந்து தங்களுக்குள் ஒருவித முடிவிற்கு வந்திருந்தனர். புஷ்பாவதி தனது தமயனிடத்தில் எல்லா விஷயங்களையும்

தெரிவித்து முடிவைக் கண்டு எழுதுவதாகச் சொன்ன கடிதத்தில், அவர்கள் சௌந்தரவல்லியைக் கலியாணம் செய்துகொள்ளப் பிரியப்படுவார்களானால், தாங்கள் இருவரும் உடனே புறப் பட்டு, அவர்களது பங்களாவிற்குப் போய், அவர்களது குடும்ப விஷயங்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டு அண்டையிலுள்ள மனிதர்களிடத்திலும் விசாரித்து அறிந்துகொண்டு, அதே முகூர்த்தத்தில் சௌந்தரவல் லியை கோவிந்தபுரம் ஜெமீன்தாரது புதல்வனுக்குக் கலியாணம் செய்து கொடுப்பது என்று அவர்கள் இருவரும் தமக்குள் தீர்மானம் செய்துகொண்டு, புஷ்பாவதியின் கடித வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். நிற்க. அவர்கள் கற்பக வல்லியம்மாளிடத்தில் இன்னொரு விஷயமும் கேட்டுக் கொண்டனர். கலியாணம் நிறைவேறும் வரையில் கற்பகவல்லி யம்மாளும், கண்ணபிரானும் தங்களது பங்களாவிலேயே இருந்து விட வேண்டும் என்றும், கண்ணபிரான் ஒரு மாசத்து ரஜாவிற்குக் கடிதம் எழுதி அனுப்பி விட வேண்டும் என்றும், அவர்கள் கற்பகவல்லியம்மாளிடத்தில் கேட்டுக் கொள்ள, அவள் கண்ணபிரானிடத்தில் தனியாக கலந்து யோசனை செய்து, புஷ்பாவதியம்மாளது விஷயம் ஒருவிதமாகத் தீருகிற வரையில் தாங்கள் அந்த பங்களாவில் இருப்பதே யுக்தமான காரியம் என்று தீர்மானித்துக்கொண்டு அவர்களது வேண்டுகோளின்படியே தாங்கள் செய்வதாக உறுதி கூறினர். கோகிலாம்பாளும், கண்ணபிரானும் ஒருவரையொருவர் நினைத்து உருகித் தவித்து ஓயாத விரக வேதனையில் ஆழ்ந்து பகற் கனவு கண்டு கொண்டிருந்தனர்.

சௌந்தரவல்லியின் பிரியம் முழுதும் கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாரது புத்திரர் மீது வீழ்ந்துவிட்டதாகையால், தான் கலியாணம் செய்து கொள்ள நேர்ந்தால், அவரையே கலி யாணம் செய்து கொள்ளுவது என்றும், இல்லையானால் தான் விஷத்தைத் தின்று தன் உயிரையே மாய்த்துக் கொள்வது என்றும், அவள் அப்போதே தீர்மானம் செய்து கொண்டு விட் டாள். அந்த ஜெமீன்தாரின் புத்திரர் தன் மீது ஆசை வைக்காமல், தனது அக்காளின் மேல் ஆசை வைத்து அவளையே நினைத்து வருந்திக் கிடப்பதாகப் புஷ்பாவதி சொன்னதையும், தனது தாய்

தன்னை அவருக்குக் கொடுப்பதாகப் பிரஸ்தாபித்ததைக் கேட்ட புஷ்பாவதி அதை ஒப்புக் கொள்ளாமல் மறுத்ததையும் கேட்டது முதல் செளந்தரவல்லிக்கு தனது அக்காளான கோகிலாம் பாளைப் பற்றி ஒருவிதப் பொறாமையும், வயிற்றெரிச்சலும், அகங்காரமும் தோன்றிப் பெருகிக் கொண்டேயிருந்தன. புஷ்பாவதி புறப்பட்டுப் போனபோது கட்டிலில் படுத்த செளந்தரவல்லி மிகுந்த கவலையும், துயரமும், கடுகடுப்பும் தோற்றுவித்தவளாகவே இருந்தாள். போஜனம் முதலியவைகளை முடித்துக் கொள்ளும்படி வேலைக்காரிகள் எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடி அழைத்துப் பார்த்தது எல்லாம் வீணாயிற்று. பூஞ்சோலையம்மாள் அடிக்கடி அவளிடத்தில் வந்து அவளுக்கு நம்பிக்கையும், மனோதிடமும் உண்டாகும்படியான வார்த்தை களைக் கூறி, தாங்கள் எப்பாடு பட்டாகிலும் அவளது பிரியப் படி கலியாணத்தை முடித்து வைப்பதாகவும், அவள் அதைப் பற்றி வருந்த வேண்டாம் என்றும் நயந்து கூறினாள். அப்போதும் அவள் அதற்கும் வழிக்கு வராமல் கல்போல உறுதியாகப் படுத்தி ருந்தாள். அதன் பிறகு கற்பகவல்லியம்மாள், கோகிலாம்பாள், வேலைக்காரிகள் முதலிய மற்ற பெண்டீரும் ஒருவர் பின் ஒருவராகப் போய் அவளைத் தேற்ற முயல, அவளது துக்கமும், ஆத்திரமும் அதிகரித்தனவேயன்றி, குறையவில்லை. அவளிடத் தில் யாராகிலும் போனால், "புஷ்பாவதி இடத்திலிருந்து கடிதம் வந்ததா?" என்ற கேள்வியையே அவள் மிகுந்த ஆவலோடு கேட்பாள். கடிதம் வரவில்லை என்ற மறுமொழி கேட்டவுடன் அவள் மறுபடியும் தனது சிரத்தைக் கவிழ்த்துப் படுக்கையில் புதைத்துக்கொண்டு மௌனம் சாதிப்பாள். அவ்வாறு அன்றைய மாலைப்பொழுது கழிந்தது. இரவும் வந்துவிட்டது. ஆனால் கடிதம் மாத்திரம் வரவில்லை.

பூஞ்சோலையம்மாளும், கோகிலாம்பாளும் நிச்சயதார்த்தம் முதலிய காரியங்களுக்கு ஆக வேண்டிய ஏற்பாடுகளிற்கெல்லாம் இடையிடையே உத்திரவுகள் பிறப்பித்துக் கொண்டபடியே செளந்தரவல்லியின் பிணக்கைத் தீர்த்து அவளை எப்படி எழுப்புவதென்று யோசித்து யோசித்துத் தம்மால் ஆன தந்திரங்களையெல்லாம் செய்து பார்த்துக் கொண்டிருந்தனர். அதோடு அந்தக் கடிதம் எப்போது வரும் வருமென்று அவர்கள்

எதிர்பார்த்துப் பார்த்து, சகிக்க இயலாத சஞ்சலத்தில் ஆழ்ந்து அந்தத் தரும சங்கடத்தில் தாம் என்ன செய்வது என்பதை அறியாமல் தத்தளித்திருந்தனர். சௌந்தரவல்லி நெடுநேரமாக போஜனம் செய்யவில்லையே என்ற கவலையும் கலக்கமும் ஒரு புறத்தில் எழுந்து அவர்களது மனதில் பெருகி வதைத்துக் கொண்டிருந்தன. ஆகையால், அவர்கள் சௌந்தரவல்லியைச் சூழ்ந்து ஓயாமலும் முற்றுகை போட்டு, பலவந்தமாக அவளைத் தூக்கிக் கொணர்ந்து இலைக்கருகில் உட்கார வைத்து ஆகாராதி களை எடுத்து பலவந்தமாக வாயில் ஊட்டி விட்டனர். அவ்வாறு அந்த இரவு கழிய மறுநாள் வந்தது. எல்லோரும் எழுந்து ஏதோ ஒவ்வொரு வேலையில் தத்தம் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர். சௌந்தரவல்லி ஒருத்தியே தனது சயனத்திற்கு அடிமையாக இருந்து அளவற்ற துயரமுற்றிருந்தாள்.

கோவிந்தபுரத்தார் அப்போதும் யோசனை செய்துகொண்டு எவ்வித முடிவிற்கும் வராமல் இருக்கிறார்களோ, அல்லது, அவர்களுக்குச் சௌந்தரவல்லியைக் கட்டிக்கொள்ள விருப்பம் இல்லாமையால் அலட்சியமாக இருந்து விட்டார்களோ என்று பூஞ்சோலையம்மாளும் கோகிலாம்பாளும் ஐயமுற்றனர். சௌந்தரவல்லியின் வேதனையைக் கருதித் தாங்களே யாரையா கிலும் மைலாப்பூருக்கு அனுப்பி அவர்களது அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு வரச் செய்யலாமா என்ற ஒரு நினைவு தோன்றியது. ஆனால், அப்படிப்பட்ட பெருத்த விஷயத்தில் தாமே முன்னுக்குப் போய் விழுவது கௌரவக் குறைவான காரியம் என்ற எண்ணமும் உண்டாயிற்று. அவ்வாறு அவர்கள் எவ்வித முடிவிற்கும் வரமாட்டாமல் தவித்துத் தயங்கி இருந்த சமயத்தில் ஒரு வேலைக்காரன் உள்ளே நுழைந்து ஒரு கடிதத்தை நீட்டினான். அப்போது கற்பகவல்லியம்மாள் ஸ்நான அறையில் இருந்தமையால் பூஞ்சோலையம்மாள், கோகிலாம்பாள் ஆகிய இருவருமே தனியாக இருந்தனர். கடிதத்தை மிகுந்த ஆவலோடு வாங்கிய பூஞ்சோலையம்மாள் வேலைக்காரனை வெளியில் அனுப்பிவிட்டுக் கடிதத்தைக் கோகிலாம்பாளிடத்தில் கொடுக்க, அந்த மடந்தை அதை வாங்கிப் பிரித்துப் படிக்கலானாள். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:

**புரசைப்பாக்கத்திலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ மகா கனம் பொருந்திய பூஞ்சோலையம்மாள் அவர்கள் சமூகத்திற்கு, மைலாப் பூரிலுள்ள கோவிந்தபுரம் ஜெமீந்தாரவர்கள் குமாரி புஷ்பாவதியம் மாள் அநேக நமஸ்காரம், உபயக்ஷேமம்.**

*நான் தங்களுடைய பங்களாவுக்கு வந்திருந்தபோது அங்கே நடந்த சம்பாஷணை முதலிய சகலமான விவரங்களையும் நான் என்னுடைய தமயனாரிடத்தில் தெரிவித்தேன். தங்களுடைய மூத்த பெண்ணையே கட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் இதுகாறும் ஒரே பிரவாதமான எண்ணம் கொண்டிருந்தார். ஆனாலும், ஏற்கனவே தாங்கள் ஒருவித முடிவைச் செய்து, அதை மாற்றக்கூடாத நிலைமையில் இருப்பதையே உணர்ந்தபின், இனியும் தாம் அந்த நினைவையே கொண்டிருப்பது பயனற்றது என்றும், அதனால் துன்பமேயன்றி சிறிதும் சுகம் உண்டாகா தென்றும் நினைத்து, அவர் அந்த ஆசையை மாற்றவும் அந்த நினைவை விலக்கவும் முயன்று கொண்டிருக்கிறார்.*

*நிற்க, தங்களுடைய இளைய குழந்தை என்னுடைய தமய னாரைக் கட்டிக்கொள்ள நிரம்பவும் ஆசைப்படுகிறது என்பதைக் கேட்டு அவர் மிகவும் ஆநந்தபரவசம் அடைந்தார். தாங்களும் அந்தக் குழந்தையை அவருக்குக் கொடுக்க இணங்கியதைக் கேட்டு அவர் கரைகடந்த மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைந்ததன்றி அதே குழந்தையைக் கட்டிக்கொள்ள அவரும் சம்மதிக்கிறார்.*

*ஆனால், இதில் இன்னொரு விஷயமும் இருக்கிறது. எங்க ளுடைய தகப்பனார் இப்போது ஓர் அவசர காரியத்தின் நிமித்தம் எங்களுடைய ஜெமீன் சமஸ்தானத்துக்குப் போயிருக்கி றார்கள். அவர்களுக்கு நாங்கள் இந்த விஷயத்தைப் பற்றி தந்தி அனுப்பினோம். அதற்கு மறு தந்தி இப்போதுதான் வந்தது. இதைத் தெரிந்து கொண்டே தங்களுக்குக் கடிதம் எழுத நினைத் தோம். ஆதலால், இந்தக் கடிதத்தை எழுத ஒரு நாள் தாமதமா யிற்று. எங்களுடைய தகப்பனாரும், அந்தக் கலியாணத்துக்கு இணங்கி விட்டார்கள். ஆனால், அவர்கள் நேரில் வந்திருந்து இந்தக் கலியாணத்தை நிரம்பவும் சிறப்பாக நடத்தி வைக்க ஆசைப்படுகிறார்கள். அவர்கள் அடுத்த வாரத்துக்குள் இங்கே வர முற்றிலும் அசௌகரியமாக இருப்பது பற்றி இந்த முகூர்த்தத்தை*

அடுத்த மாதத்தில் ஒரு நாள் பார்த்து நடத்திக் கொள்ளலாம் என்றும், அதுவரையில் தங்களிடம் அவகாசம் கேட்டுக் கொள்ளும்படியும், தங்களுடைய மூத்த குழந்தையின் கலியாணத்தை இப்போதே முதலில் நடத்துவதோ, அல்லது இரண்டையும் ஒன்றாக நடத்துவதோ தங்களுடைய பிரியத்தைப் பொறுத்த விஷயங்கள் என்று தங்களுக்குத் தெரிவிக்கும்படியும் எங்களுடைய தகப்பனார் எழுதி இருக்கிறார்கள்.

ஆகையால், தங்களுடைய கனிஷ்ட குமாரியான சௌபாக் கியவதி சௌந்தரவல்லியம்மாளை நாங்கள் கலியாணம் செய்து கொள்வது முடிவாய் நிச்சயிக்கப்பட்ட மாதிரியே தாங்கள் எண்ணிக்கொள்ளலாம். ஆனால், முகூர்த்த தினத்தை மாத்திரம் அடுத்த மாதத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமாக நாங்கள் நிரம்பவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம். மூத்த குழந்தையின் கலியாணத்தை அடுத்த மாதத்தில் ஒத்தி வைக்க வேண்டும் என்பதில்லை. தங்களுக்கு ஏராளமான சம்பத்து இருக் கிறது. அதுபோல ஈசுவரன் எங்களுக்குக் கொஞ்சம் செல்வத்தைக் கொடுத்திருக்கிறார். இரண்டு கலியாணத்தையும் தனித்தனியாக நடத்துவதால் நம்முடைய குடி முழுகிப் போய்விடப் போவ தில்லை. இரண்டு சமயங்களில் நாம் அனுபவிக்க வேண்டிய இரட்டிப்பு சந்தோஷத்தை நாம் கெடுத்துக் கொண்டு அதை ஒரே தடவையில் அனுபவிப்பதும் உசிதமான காரியமல்ல. தங்களுடைய மூத்த குழந்தையின் கலியாணம் அடுத்த வாரத்தில் நடக்குமானால், அப்போது நாங்களும் வந்திருந்து விருந்துண்டு களித்திருந்து ஆநந்தம் அடைவதை மிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

ஆகையால், தாங்கள் எல்லா விஷயங்களையும் தீர்க்காலோ சனை செய்து தயை கூர்ந்து தங்களுடைய முடிவான அபிப்பிரா யத்தைத் தெரிவிக்குமாறு நிரம்பவும் கேட்டுக் கொள்ளும்,

தங்களிடம் பிரியமும் நன்றியறிதலுமுள்ள
**புஷ்பாவதி**

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைக் கோகிலாம்பாள் படித்து முடித்தாள்.

அதைக் கேட்டுக் கொண்டே இருந்த பூஞ்சோலையம்மாளது முகம் சூரியனைக் கண்டு மலரும் தாமரைபோல அளவிறந்த சந்தோஷத்தினால் மலர்ந்து இன்பமயமாகத் தோன்றியது. அவர்கள் இருவரும் ஆநந்தபரவசம் அடைந்து பூரித்தவர்களாய், இரண்டோரு நிமிஷ நேரம் மௌனப் பேரானந்தத்தில் ஆழ்ந்திருந்தனர். அதற்குள் கோகிலாம்பாளது மனதில் தாங்கள் என்ன செய்வது என்பதைப் பற்றிய முடிவு ஏற்பட்டு விட்டது. அவள் உடனே தனது தாயை நோக்கி, "அம்மா! எனக்கு இப் போது ஒரே ஒரு விஷயந்தான் மிகுந்த சந்தோஷத்தை உண் டாக்குகிறது; ஒரே பிடிவாதமாகப் படுத்திருக்கும் நம்முடைய சௌந்தரவல்லிக்கும் நாம் இந்தக் கடிதத்தைக் காட்டி அவளுக்குத் தேறுதல் சொல்லி, அவளைச் சந்தோஷமாக இருக்கும் படி செய்ய இது ஒரு நல்ல சாதனமாக ஏற்பட்டது. அவர்கள் சௌந்தரவல்லியைக் கலியாணம் செய்து கொள்ளத் தங்களுக்கு விருப்பமில்லை என்று எழுதியிருப்பார்களானால், இவள் அமர்க்களப்படுத்தி விடுவாள்; என்னுடைய கலியாணம் கூட ஒழுங்காகவும், சந்தோஷகரமாகவும் நடைபெறாமல் அடித்து விடுவாள். ஆகையால், இந்தக் கடிதம் நமக்கு நிரம்பவும் அநுகூலமானதாகவே இருக்கிறது. நாம் இப்போது அவளிடத்தில் போய் இதைக் காட்டி, அவளைச் சந்தோஷப்படுத்துவோம். ஆனால், அவள் தன்னுடைய கலியாணத்தைப் பின்னாலும், என் னுடைய கலியாணத்தை முன்னாலும் வைத்துக் கொள்வதைப் பற்றி ஏதாவது ஆட்சேபணை சொல்லி, மறுபடியும் இடக்கு பண்ணுவாள். இவர்களுக்கு நாம் ஏற்கனவே லக்னப் பத்திரிகை கொடுத்து விட்டோம். ஆகையால், நாம் எப்பாடுபட்டாவது நாம் செய்த வாக்குறுதியை நிறைவேற்றியே தீர வேண்டும். அதோடு இதில் இன்னொரு முக்கியமான சங்கதி இருக்கிறது. நான் வாழ்க்கைப்படப் போகும் இடமோ நிரம்பவும் ஏழ்மை யான இடம்; அவள் வாழ்க்கைப் படப் போகும் இடமோ நிரம்பவும் மேம்பட்ட இடம். இந்த இரண்டு கலியாணங்களும் ஒன்றாக நடந்தால், இங்கே வந்து கூடும் ஜனங்கள் இரண்டு இடங்களுக்கும் உள்ள தாரதம்மியத்தைக் கண்டு என்னைப் பற்றியும், என்னுடைய மாமியார், அவர்களுடைய குமாரர் முதலியோரைப் பற்றியும் இளக்காரமாகவும், புரளியாகவும் பேச

இடம் உண்டாகும்; நாம் ஆயிரம் சமாதானம் சொன்னாலும் அது திருப்தியுண்டாகாது. ஆகையால், அந்தக் கலியாணம் நடக்கும்போது, இது பழைய கதையாகிவிடும். இந்த விஷயத்தை நீங்கள் சௌந்தரவல்லியிடத்தில் பக்குவமாகச் சொல்ல வேண்டும்; எப்படியென்றால், இந்தச் சம்பந்தம் ஏழைச் சம்பந்தமென்றும், இதையும் அவளுடைய கலியாணத்தோடு சேர்த்து நடத்தினால், அவளுடைய புருஷனைச் சேர்ந்தவர்கள், மாப்பிள்ளை வீட்டார் இருவருள் தாங்களே பிரமாதமான மனிதர்கள் என்று நினைத்து மமதைக் கொண்டு அவளைக் கேவலமாக மதிப்பார்கள் என்றும், இந்த ஏழைக் கலியாணம், அதோடு நடந்தால், அவளுக்குத் தலைகுனிவாக இருக்கும் என்று நீங்கள் அவளிடத்தில் சொன்னால், அவள் எவ்வித ஆட்சேபமும் சொல்லாமல் இதற்கு எளிதில் இணங்கி விடுவாள். இந்தக் கலியாணத்தை முடித்துக் கொள்வோம். அதன் பிறகு, நமக்குத் தேவையான அவகாசம் இருக்கிறது. இந்த கோவிந்தபுரத்தார் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பற்றியும், அவர்கள் தக்க மனிதர்களா என்பதைப் பற்றியும், நாம் பல இடங்களிலும் விசாரித்துக் கொண்டு அதற்கு மேல் நாம் ஒரு முடிவுக்கு வருவோம். இவள் ஆத்திரப்படுகிறாள் என்று முன் பின் தெரியாத மனிதர் வீட்டில் கொண்டு போய் இவளைக் கொடுத்துவிட்டு நாம் பிற்பாடு தவிக்கக் கூடாது. எனக்கு வரும் மனிதர்கள் ஏழ்மை நிலைமையில் உள்ளவர்கள். இவர்களைப் பற்றி நாம் நெடுநாளாகக் கேள்வியுற்றும் இருக்கிறோம். இவர்கள் நம்மை மீறித் தாறுமாறாக நடக்கக் கூடியவர்கள் அல்ல. சௌந்தரவல்லியோ பணக்காரர் வீட்டிலேதான் வாழ்க்கைப்படுவேன் என்று ஒரே பிடியாகப் பிடிக்கிறாள். அவர்கள் நல்ல குணமும், நல்ல நடத்தையும் உள்ள மனிதர்களா, அல்லது, துஷ்டர்களா என்பதை நன்றாக அறிந்து கொள்ளாமல், நாம் கொடுத்து விட்டால், பிற்பாடு சௌந்தரவல்லி நிரம்பவும் துயரத்துக்கு ஆளாகி விடுவாள்'' என்றாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாளும் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து, ''நீ சொல்வது எல்லாம் நல்ல யோசனைதான். அப்படியே செய்து விடுவோம். அதிருக்கட்டும்; இந்தக் கடிதத்துக்கு நாம் இப்போது ஏதாவது பதில் எழுத

வேண்டுமே! நாம் அவர்களைப் பற்றி விசாரிக்கப்போகிறோம் என்பதை நாம் தெரிவித்தால், அவர்களுக்கு மனம் உடைந்து போகும். அவர்கள் வேறே இடம் பார்த்துக் கொள்வார்கள். பிறகு, நமக்கு வேண்டுமானால் இந்த இடம் அகப்படாமல் போய்விடுமே; அதற்கென்ன செய்கிறது?'' என்றாள்.

கோகிலாம்பாள், "நாம் நிரம்பவும் சாதுர்யமாகக் கடிதம் எழுத வேண்டும். நாம் அவர்களுக்குப் பெண்ணைக் கொடுக்கத் தீர்மானித்து விட்டது போலவும் இருக்க வேண்டும். பிறகு நம் முடைய இஷ்டப்படி முடிவு செய்யவும் இடமிருக்க வேண்டும். எப்படி என்றால், அவர்களுடைய கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களைப் படித்து நாம் நிரம்பவும் சந்தோஷப்படுகிறோம் என்றும், சௌந்தரவல்லியை அவர்களுடைய வீட்டில் கட்டிக் கொடுக்க நமக்குப் பரிபூரணமான விருப்பம் இருக்கிறது என் றும், என் கலியாணம் அடுத்த வாரத்திலேயே நடக்கிறது என் றும், இதற்கு அவர்களெல்லாம் வந்திருந்து இதை நடத்தி வைத்து கௌரவப்படுத்த வேண்டும் என்றும், இந்தக் கலியாணம் முடிந்த பிறகு, அவர்களுடைய தகப்பனார் தமது சமஸ்தானத்திலிருந்து வந்தவுடனே அந்த விஷயத்தை அவர்கள் தயை கூர்ந்து நமக்குத் தெரிவித்தால், நாம் உடனே கோவிலில் பூ வைத்துப் பார்த்து விட்டு, தெய்வத்தின் உத்தரவானால், உடனே புறப்பட்டு, சகுனம் பார்த்துக் கொண்டு அவர்களுடைய ஜாகைக்கு வருகிறோம் என்றும், இந்த ஏற்பாடுகளை அவர்கள் முழுதும் உறுதியாக எண்ணி நம்பி இருக்கலாம் என்றும், அவ்விடத்தில் உடனே புரோகிதரை வரவழைத்து முகூர்த்தத்தில் நாள் பார்த்து லக்னப் பத்திரிகை தயாரித்துக்கொண்டு, மற்ற எல்லா ஏற்பாடு களைப் பற்றியும் நேரில் கலந்து யோசித்து முடிவு செய்து கொள் வோம் என்றும், நாம் ஒரு கடிதம் எழுதி இப்போதே அவர்க ளுக்கு அனுப்பி விடுவோம். பிறகு நாம் அவர்களுடைய யோக்கி யதையைப் பற்றி விசாரிப்போம்; திருப்திகரமாக இருந்தால், கலியாணத்தை நிறைவேற்றுவோம். மனசுக்குப் பிடிக்கா விட்டால் சகுனம் ஆகவில்லை என்றாவது, புஷ்பம் போட்டுப் பார்த்ததில் சுவாமி உத்தரவு கொடுக்கவில்லை என்றாவது சொல்லி மெதுவாக நழுவ விட்டு விடுவோம்'' என்றாள்.

அவளது சமயோசிதமான யுக்தியைக் கேட்டு மிகுந்த சந்தோஷமும், பூரிப்பும் அடைந்த பூஞ்சோலையம்மாள், அவள் சொன்ன ஏற்பாடுகளையெல்லாம் அப்படியே ஒப்புக் கொண்டவளாய், ''சரி! உன்னுடைய பிரியப்படியே செய்வோம். நீ போய், அவர்களுக்கு எழுத வேண்டிய கடிதத்தை எழுது. அதற்குள் நான் போய், சௌந்தரவல்லிக்கு இந்தக் கடிதத்தை காட்டி அவளைச் சந்தோஷப்படுத்தி அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டு சௌந்தரவல்லி இருந்த இடத்திற்குச் சென்றாள். கோகிலாம்பாள் எழுது கருவிகள் இருந்த ஓர் இடத்திற்குப்போய் புஷ்பாவதிக்கு மறுமொழி எழுதினாள். பூஞ்சோலையம்மாள் சௌந்தர வல்லியிடத்தில் போய், புஷ்பாவதியின் கடிதத்தைக் காட்டி, கோகிலாம்பாள் சொல்லிக்கொடுத்தபடி நிரம்பவும் தந்திரமாகப் பேசி, அவள் தனது இயற்கையின்படி சந்தோஷமாக இருக்கவும், தனது கலியாணத்தை அடுத்த மாதத்தில் நடத்திக்கொள்ள இணங்கவும் செய்வது பகீரதப் பிரயத்தினமாகி விட்டது; அவள் அந்த ஏற்பாடுகளிற்கு எல்லாம் ஒருவாறு இணங்கினாள். ஆனாலும், அவளது மனதில் கோகிலாம்பாளின் மீது இருந்த அதிருப்தி இருந்து வந்தது. எப்படியெனில், கடற்கரையில் அபாயம் நேரிட்ட அன்றைய தினம், தான் கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாரிடத்திலும், கண்ணபிரானிடத்திலும் பேச முயன்றதைக் கோகிலாம்பாள் தடுத்து, எல்லோருக்கும் அவளே மறுமொழி கொடுத்துத் தானே அதிக புத்திசாலி என்று அவள் காட்டிக் கொண்டதினாலேதான், எல்லோரும் தன்னை அவமதித்து, வேண்டாம் என்று தள்ள நேர்ந்தது என்ற எண்ணம் சௌந்தரவல்லியின் மனதிலிருந்து உறுத்திக்கொண்டே இருந்தது. கோகிலாம்பாள் மகா சுத்தமான மனுஷிபோல இருந்தே கலியாணத்தை மாத்திரம் தந்திரமாக நிச்சயித்துக் கொண்டாள் என்றும், அவள் எல்லாக் காரியங்களையும் கபடமாகவே செய்து தன்னை மாத்திரம் தலையெடுக்க விடாமல் அநாவசியமாக அடக்கி அதிகாரம் செய்து கொண்டே போகிறாள் என்றும், சௌந்தரவல்லியின் மனதில் ஒரு நினைவு தோன்றி வதைத்துக் கொண்டே இருந்தது. ஆகையால், அவள் தனது தாயினிடத்தில் மாத்திரம் சாதாரணமாக நடந்து கொண்டாளன்றி, கோகிலாம்

பாளோடு பேசாமல் அவளைக் காணும்போதெல்லாம் முகத்தைச் சுளித்து அப்பால் திருப்பிக் கொண்டாள். அந்த நிலைமையில், நிச்சயதார்த்தத்திற்கும், கலியாணத்திற்கும் வேண்டிய ஏற்பாடுகள் யாவும் அதி தீவிரத்தில் நடத்தப்பட்டன. ஐந்நூறு ஆட்கள் ஒன்று கூடி முனைந்து இராப்பகல் வேலை செய்து, அந்த பங்களா முழுவதையும் இந்திர விமானம் போல ஜோடித்து எங்கு பார்த்தாலும், ஒட்டு வேலைகள் நிறைந்த கொட்டகைப் பந்தல் களும்; வாழை மரங்கள், தோரணங்கள், திராட்சைக்குலைகள், இளநீர்க்குலைகள், பாக்குக் குலைகள், பனங்குலைகள், ஈச்சங் குலைகள், வாழைத்தாறுகள், பூசணிக்காய்கள், தேர்ச்சீலைகள் முதலிய தொங்கல்களுமே மயமாக நிறைத்து விட்டனர். நிச்சய தார்த்த தினத்திற்கு முதல் நாளைய மாலையிலிருந்தே உறவினரும் விருந்தினரும் வந்து திரண்டு கொண்டிருந்தனர். அவ்வாறு, வந்து கூடும் ஜனங்களது போஜன பானாதிகளைத் தயாரிப்பதற்கு 25 சமையக்காரர்களும், எவர் எந்தச் சமயத்தில் எதைக் கேட்டாலும் கொடுப்பதற்காக 30 பரிசாரகர்களும், வருவோரை வாருங்கள் என்று சொல்லி உபசரித்து வரவேற்று உட்புறத்தில் அழைத்துப் போய் ஆசனங்களில் அமர்த்துவதற்காக இருபது டலாயத்துகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். வருவோர் எல்லாரும் இரவில் சௌகரியமாக சயனித்துக் கொள்ள ஒரு பெருத்த மேன்மாடம் முழுவதும் வழுவழுப்பான ஜமக்காளம் பரப்பப் பெற்று, திண்டு தலையணைகளே மயமாக நிரப்பப் பெற்றிருந்தது. அவ்வாறு அந்த மாளிகை சகலமான சம்பிரமங் களும் முஸ்தீபுகளும் நிறைந்து, ஒரு மகாராஜனது கலியாண அரண்மனை போல இருந்தது.

அப்போது கண்ணபிரான் புதிய மனிதனாகக் காணப்பட் டான். நிச்சயதார்த்தத்திற்கு முதல் நாளே அவனுக்கு உயர்வான ஆடை ஆபரணங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு விட்டன; காதில் ஐயாயிரம் ரூபாய் பெறத்தக்க இரண்டு வைரக் கடுக்கன்கள், பத்து விரல்களிலும் லக்ஷம் ரூபாய்க்கு மேல் பெறத் தக்க நவரத்ன மயமான மோதிரங்கள், கையில் காப்பு கொலு சுகள், கழுத்தில் வைர ஹாரம், பதக்கம், இடுப்பில் ஐந்நூறு ரூபாய் பெறத்தக்க பீதாம்பரம், தங்க அரைஞாண், தோளில் ஜரிகைளே நிறைந்த பட்டு உருமாலை முதலிய ஆடையா

பரணங்களை அணிந்தவனாய், அந்த யௌவனப் புருஷன் அப்போதே மணப்பிள்ளையின் கோலத்தையடைந்து விட்டான். அவன் நல்ல சிவப்பான அழகு வழிந்த உடம்பும், வசீகரமான முகமும் பெற்றவனாதலால், இயற்கை வனப்பும், செயற்கை அலங்காரமும் ஒன்று கூடி, அவனைக் காண்போரது மனம் ஆநந்தபரவசம் அடைந்து சந்தோஷப் பெருக்கினால் மலரும்படி செய்ததன்றி, அவனிடத்தில் ஒரு வார்த்தையாகிலும் பேச வேண்டுமென்ற ஆவலும் பிரேமையும், அவனைக் காண்போரது மனதில் எல்லாம் எழுந்து சஞ்சலப்படுத்தச் செய்தன. அவனை அதற்கு முன் கண்டவர் எவரும் அவனது அடையாளத்தைக் காணமாட்டாதபடி அவனது தோற்றமும், அலங்காரமும் அவ் வளவு புதுமையாக இருந்தன. அவன் தன்னைத்தானே நிலைக் கண்ணாடியில் பார்த்து, தான் கந்தருவலோகத்து ராஜகுமாரன் போல அதிக சுந்தர ரூபனாக இருந்ததையும், அத்தனை ஆடை ஆபரணங்களும் சேர்ந்து தன்னை ஓர் இளவரசன்போல மாற்றி விட்டதையும் கண்டு, தனது ஒப்பற்ற அழகை நோக்கித் தானே பிரமித்து, வைத்த கண் வைத்தபடியே நெடுநேரம் வரையில் நின்று பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தவனாக இருந்து, அன்னிய மனிதர் தன்னைக் கவனிக்கிறார்கள் என்பதை உணர்ந்து நிலைக்கண்ணாடியை விட்டு அப்பால் நடந்தான். அங்கே வந்த ஜனங்கள் எல்லாரும், அவனைப் பார்த்து அதி வியப்பும், திக்பிரமையும் அடைந்து, "இவர்தான் மாப்பிள்ளை! இவர்தான் மாப்பிள்ளை!" என்று தமக்குள் தணிவாகக் கொசகொசவென்று காதோடு பேசிக்கொண்டு தங்களது முகத்தை மலர்த்தி அவனை நோக்கிப் புன்னகை காட்டியபோ தெல்லாம், அவன் மிகுந்த நாணமும், லஜ்ஜையும் அடைந்தவ னாய்க் கீழேயாவது பார்ப்பான், அல்லது தனது முகத்தை அப்புறமாவது திருப்பிக் கொள்வான். தன் பொருட்டு அத்தனை அலங்காரங்களும், ஏற்பாடுகளும் செய்யப்படுவதையும், ஏராளமான ஜனங்கள் வந்து கூடுவதையும், பூஞ்சோலையம்மாள் பெட்டியிலிருந்து ஆயிரக்கணக்காகப் பணத்தை எடுத்துச் செலவிடுவதையும் காணக் காண கண்ணபிரானது மனமும் தேகமும் களிகொண்டு பூரித்தன. நிரம்பவும் ஏழையாக இருந்த தனக்கு அப்படிப்பட்ட பெருத்த பாக்கியம் தானாக வருமா

வென்ற ஐயமே எழுந்து எழுந்து அவனை வதைத்துக் கொண்டிருந்தது. தான் அத்தகைய பெருத்த சீமாட்டியின் மாளிகையில் அவ்வளவு அபாரமான செல்வங்களின் இடையில் இருப்பது பொய்யோ பொய்யோவென அப்போதும் அவன் சந்தேகம் உற்றவனாகவே இருந்தான். ஆனால், மற்ற சகலமான சௌகரியங்களும், சுகங்களும், ஆடை ஆபரணங்களும், செல்வாக்கும் அப்போதே தனக்கு எதேஷ்டமாகக் கிடைத்திருந்தும், தனது மனத்தைக் கொள்ளைகொண்ட அருங்குண மணியான கோகிலாம்பாளை, தான் இரண்டு தினங்களாக கண்ணாலும் பார்க்கக் கூடவில்லையே என்ற ஏக்கமே அவனது மனத்தையும், தேகத்தையும் உருக்கிக் கொண்டிருந்தது. முதல் நாள் தற்செயலாகத் தன்னைப் பார்த்துப் புன்னகை செய்தவள் கோகிலாம்பாளாக இருக்கக் கூடாதா என்ற நினைவும் தோன்றியது. மறுநாள் நிச்சயதார்த்தத்திற்காக ஜனங்கள் ஏராளமாக வந்து கூடி இருப்பார்கள். ஆதலால், அப்போது கோகிலாம்பாள் சுத்தமாகத் தனது கண்ணிலே படமாட்டாள் என்ற நினைவும் தோன்றியது. அதன் பிறகு எட்டு நாட்களில் கலியாண முகூர்த்தம் நடந்தாலும், அப்போதும் அவள் தன்னோடு பேசாமலேதான் இருப்பாள் என்ற ஏக்கமும், தனக்கும் அவளுக்கும் சாந்தி கலியாணம் நடந்தால் அன்றி, தான் அவளைத் தனிமையில் கண்டு பேச சாத்தியப்படாது என்ற நிச்சயமும் ஏற்பட்டன. கலியாண முகூர்த்தத்திற்குப் பிறகு எத்தனை நாட்கள் கழித்து அவர்கள் சாந்தி முகூர்த்தத்தை வைத்துக் கொள்வார்களோ என்ற கவலையினால் அவன் பெரிதும் உலப்பப்பட்டவனாக இருந்தான். அங்கே வந்து கூடிய விருந்தினரில் யௌவனப் பருவத்தினராக இருந்த சில ஆண்பிள்ளைகள் அவனோடு பேசி, நெருங்கி அன்னியோன்னியமாக இருக்க முயன்றாலும், அவர்களது சேர்க்கையெல்லாம் அவனுக்குத் துன்பகரமாக இருந்ததேயன்றி இன்பமே பயக்கவில்லை. அத்தனை வைபவங்கள் நிறைந்த மாளிகைக்குள் அவனுக்கு இருக்கையே கொள்ளவில்லை. எங்கே சென்றாலும், எங்கே உட்கார்ந்தாலும், அவனது சஞ்சலம் அதிகரித்துக் கொண்டே போனது. ஆகையால், அவன் நிச்சயதார்த்தத் தினத்திற்கு முதல் நாள் மாலையில் அந்தக் கட்டிடங்களை விட்டு பூஞ்சோலைக்குள் போய் சிறிது நேரம் உலாவி

அவ்விடத்திலுள்ள விநோதங்களைக் கவனித்தாலாகிலும், தனது மனோவேதனை சிறிது நேரமாகிலும் மறைந்திருக்காதா என்று நினைத்தவனாய், அவ்விடத்தை விட்டுப் பூஞ்சோலையை நோக்கி மெல்லச் சென்றான். அப்படி அவன் செல்லுகையில், வழியிலிருந்த மாட கூடங்களிலிருந்த ஜன்னல்கள், வாசல்கள் முதலிய சகலமான திறப்புகளின் வழியாகவும், அவன் தனது பார்வையை உட்புறத்தில் செலுத்தி, தெய்வச் செயலாக, கோகிலாம்பாள் எந்த இடத்திலாகிலும் இருந்து தனது திருஷ்டியில் பட்டு விடக் கூடாதா என்று எதிர்பார்த்தவனாய் தயங்கித் தயங்கி மெல்ல மெல்ல நடந்தான். முதல்நாள் தான் பூஞ்சோலையிலிருந்து திரும்பியபோது மேன்மாடத்திலிருந்து சிரித்ததுபோல, அன்றைய தினமும் அதே பெண்ணாகிலும், அல்லது கோகிலாம்பாளாகிலும், மேன்மாடத்திலிருந்து தனக்கு ஒருகால் தரிசனம் கொடுக்கலாம் என்ற மூட நம்பிக்கையைக் கொண்டவனாய், அவன் மேலே அண்ணாந்து பார்த்தபடியே நடந்தான். கோகிலாம்பாள் வராவிட்டாலும், ஸெளந்தரவல்லியையாகிலும் தான் பார்க்க நேர்ந்தால், அவளது வடிவத்தைக் காண்பதிலிருந்து கோகிலாம்பாளின் முகச்சாயல் தனது அகக் கண்ணிற்கு நன்றாக நினைப்பு உண்டாகும் என்ற யோசனையும் உண்டாயிற்று. அவ்வாறு, அவன் கோகிலாம்பாளைக் காண மாட்டாமையால், பைத்தியம் கொண்டவன்போல மாறி, சகிக்க இயலாத கலவரம் அடைந்தவனாய்ப் பூஞ்சோலைக்குள் நுழைந்தான். அவன் அவ்வளவு பாடு பட்டும், இரண்டு மடந்தையருள் ஒருத்தியேனும், அவனது திருஷ்டிக்குத் தோன்றவில்லை. ஆகவே, அவன் சோர்ந்து தளர்ந்து நைந்து உருகி நடைப்பிணம் போல அந்த அதிமனோக்கியமான உத்தியான வனத்திற்குள் நுழைந்து, அதற்குள் அபாரமாக நிரம்பிக் கிடந்த இயற்கை அற்புதங்களையும், அதிசய சிருஷ்டிகளையும், சிரேஷ்டமான ஏற்பாடுகளையும் கண்டு அவற்றில் தனது மனத்தைத் திருப்ப முயன்றவனாய் ஓரிடம் விடாமல் போய்ப் பார்த்துக் கொண்டே அந்தப் பூங்காவின் முடிவு வரையில் போய்விட்டுத் திரும்பி விட்டான். அவன் ஒரு பக்கமாகப் போய் இன்னொரு பக்கமாகத் திரும்பி வந்தான். அப்படி வந்த வழி அவனை ஒரு சிறிய தாமரைத் தடாகத்திற்கு அருகில் கொண்டுவந்து விட்டது. இந்தத்

தோட்டத்திற்கு எல்லாம் அந்த இடமே முகம் போலவும், உயிர்நிலைப் போலவும், ரிஷி ஆசிரமம் போலவும் காணப் பட்டது. அவ்விடத்தில் எங்கும் மணல் மேடுகளும், ஆல மரங் களும், தென்னை, கமுகு, வாழை, பலா முதலிய தருக்களும், மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய பூச்செடிகளும் அடர்ந்து எங்கும் ஒரே பச்சையாக இருக்க, பார்க்கும் இடங்களில் எல்லாம் கொடிகளும், செடிகளும், கிளைகளும், அழகழகாய்ப் பின்னிக்கொண்டு, இயற்கையிலேயே தோன்றி பந்தல்போல இருந்தன. எங்கும் ஜிலு ஜிலென்ற காற்றும் நிழலின் குளிர்ச்சி யுமே நிறைந்து, அங்கு வருவோரது மனத்தையும், கண்களையும், தேகத்தையும் ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தின. பார்க்கும் இடங்களிலெல்லாம் சலவைக்கல் மேடைகளும், சாய்மான நாற்காலிகளும், ஊஞ்சல்களும் நிறைந்து அவற்றின் மேல் கொடி களும், மரக்கிளைகளிலிருந்து பூத்துக் காய்த்துப் பழுத்து வளைந்து நிறைந்து தொங்கிய கிளைகளும் சூழ்ந்து அந்த ஆசனங்களையெல்லாம் அநேகமாக மூடிக் கொண்டிருந்தன. அந்தத் தடாகத்தின் தண்ணீர் பளிங்குபோலத் தெளிந்திருக்க, தாமரை இலைகள் சலடை சலடையாகப் பரவி, அந்தத் தண்ணீர் முழுவதையும் மூடிக் கொண்டிருந்ததும், இடையிடையே தாமரை மலர்களும், அரும்புகளும், நீலோற்பலங்களும் வரு வோரை நோக்கி நகைப்பன போல இருந்ததும் கண்கொள்ளா இனிய காட்சியாக அமைந்து, மனங்கொள்ளாத பேராநந்தத்தை உண்டாக்கின.

வானுலகத்து மங்கையர் கூடி ஜலக்ரீடை செய்யும் பளிங்கு வாவியோ, அல்லது, வைரக்கற்களை உருக்கி ஜலமாக நிரப்பப்பட்டிருந்த குபேர பொக்கிஷமோ, பஞ்சவடி தீரமோ, சரவணப் பொய்கையோ என யாவரும் மயங்கத் தகுந்தபடி இருந்த மகா சிலாக்கியமான அந்தத் தடாகத்தண்டையில் வந்த கண்ணபிரான் அவ்விடத்தில் தானாகவே அவனது மனதில் ஊறிய பிரம்மாநந்தத்தினால் மேற்கொள்ளப்பட்டவனாய் அப்போதே இரண்டொரு நிமிஷ நேரம் வரையில், தனது சஞ்சலங்களையும் கோகிலாம்பாளது நினைவையும் மறந்தவ னாக நடந்தான். அந்தப் பூங்காவின் மற்ற எல்லா இடங்களை யும் விட அந்த ஓரிடமே சிறிதளவு சுகமாகத் தோன்றி அவனது

மனதையும் தேகத்தையும் பரவசப்படுத்தியது. அந்த இடத்தைப் போன்ற அவ்வளவு அதி சிங்காரமான ஸ்தலத்தையும் ரமணீயமான தடாகத்தையும் அவன் பிறந்த தினம் முதல் கண்டவனே இல்லை. ஆதலால் அவன் பிரமித்து ஸ்தம்பித்து மெய்மறந்து சிறிது நேரம் அப்படியே நின்று, அங்கே செறிந்து கிடந்த இயற்கை அலங்காரங்களை எல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்துத் தனது மனத்தையும் கண்களையும் களிக்கச் செய்தவனாய்ச் செடி கொடி கிளைகளினாலான மறைவுகளை யெல்லாம் கடந்துகொண்டே போக, புதுமை புதுமையாக எதிர்ப்பட்ட வஸ்துக்களைப் பார்க்கும்போதெல்லாம், அவனது மனதில் ஜில் ஜில்லென்று பிரம்மாநந்த சுகம் பரவியது. அப்படிப்பட்ட அதி ரமணீயமான ஸ்தலத்திற்குத் தான் சொந்தக்காரனாகி, அந்த ஸ்தலத்தைக் காட்டிலும் கோடி மடங்கு அதிமனோகரமாக இருந்த கோகிலாம்பாளென்ற இன்பக் களஞ்சியமும் தானும் அந்த இடத்தில் தனியாக இருந்து குதூகலமாகப் பேசி சரஸ சல்லாபம் செய்யும் பாக்கியம் எப்போது கிடைக்குமோ என்று நினைத்துக் கொண்டவனாய், கண்ணபிரான் தனக்கு எதிரில் பந்தல்போல் அடர்ந்திருந்த ஒரு பன்னீர் மரத்தை நோக்க, அதன் கீழ் தொங்கிக் கொண்டிருந்த ஓர் ஊஞ்சல் பலகையில் அழகே மயமாக உட்கார்ந்திருந்த ஒரு மங்கை அவனது திருஷ்டிக்குப் புலப்பட்டாள். அது உயிருள்ள உண்மையான ஸ்திரீயோ அல்லது செயற்கையாகத் தங்கத்தினால் வார்த்து உயிருள்ளதுபோல அலங்கரித்து அழகிற்காக வைக்கப் பட்டிருக்கும் சிலையோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. இரண் டொரு நிமிஷ நேரம் அவன் பிரமித்து ஸ்தம்பித்து மயங்கி நெக்கு நெக்குருகி அப்படியே நின்று அந்தப் பொற்பாவையை உற்று நோக்கினான். முழுதும் ஜரிகைளும் பச்சை நிறப் பட்டுமே நிறைந்த பெங்களூர்ப் புடவையை அந்தப் பெண்மணி அணிந்திருந்தமையால், செடி, கொடி கொத்துக்களின் பசுமை நிறமும், அவளது சேலையின் நிறமும் ஒன்றாக இழைந்து போயிருந்தன. கண்ணபிரான் கண்டது அவளது முதுகின் பக்க மாதலால், மூடப்படாமலிருந்த வலது கையில் சிவப்பு பனாரீஸ் பட்டு ரவிக்கை பள பளவென்று மின்னியதையும், விசாலமாகப் பின்னித் தொங்கவிடப்பட்டிருந்த கருங்கூந்தலின் பின்னலில்

ஆங்காங்கு நட்சத்திரக் கூட்டங்களைப் போலக் காணப்பட்ட ஜடை பின்னல்களை ஜீலீர் ஜிலீரென்று ஒளிக்கற்றையை அள்ளி வீசியதையும் அந்த ஊஞ்சற் பலகை மெதுவாக ஆடிக் கொண்டிருந்ததையும் கண்ட கண்ணபிரான், அந்த இன்ப வடிவம் உயிருள்ள வடிவம் என்றே நிச்சயித்துக் கொண்டான். அந்த வழவழகியின் பின்புறத்தை மாத்திரம் கண்ணபிரான் கண்டான். ஆனாலும், அவள் பூஞ்சோலையம்மாளது பெண்கள் இருவருள் ஒருத்தியே என்பதை மாத்திரம் அவன் சந்தேகமற உணர்ந்து கொண்டான். ஆனால், அவள், தனக்கு மனையாட்டி ஆகப்போகும் கோகிலாம்பாளோ, அல்லது செளந்தரவல்லியோ என்பதை அவன் நிச்சயிக்கக் கூடாமல் இருந்தது. அந்தப் பூங்காவின் மற்ற எல்லாப் பாகங்களைக் காட்டிலும் அந்த இடம் மகா சிரேஷ்டமாகவும், மனோகரமாகவும் இருப்பது பற்றி அந்தப் பெண்கள் அவ்விடத்தையே அதிகமாக விரும்பி வந்து சந்தோஷமாக இருந்துவிட்டுப் போவார்களோ என்ற எண்ணம் தோன்றியது. அப்படிப்பட்ட பிரத்தியேகமான இடத்தில் தான் வந்ததைப் பற்றி, அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற அச்சமும், அந்த யெளவனப் புருஷனது மனதில் எழுந்தது. அந்தப் பெண்ணழகி தனியளாக இருந்த இடத்தில் தான் வந்ததை அவள் உணர்ந்தால், தன்னைப் பற்றி தவறான அபிப்பிராயத்தையும், அருவருப்பையும் கொள்வாளோ என்ற அச்சம் அவனது கால்களைப் பின்னிற்கு இழுத்தது. அவள் திரும்பிப் பார்ப்பதற்கு முன், தான் ஓசை உண்டாக்காமல் திரும்பி நடந்து அப்பால் போய்விட வேண்டும் என்ற நினைவும் பரபரப்பும் அவனுக்கு உண்டாயினவாயினும் பதினாயிரம் கண்கள் கொண்டு பார்த்தாலும் தெவிட்டாத சுவையும், இன்பமும், எழிலும் திரண்டு தேஜோமயமாக வீற்றிருந்த அந்த மோகனாங்கினியின் மேல் சென்று லயித்திருந்த தனது பார்வையை எடுக்கவும், அவ்விடத்தை விட்டுப் போகவும், அவனது மனம் இடந்தரவில்லை. ஆகையால், அவன் தேன் குடித்த நரிபோல மதிமயங்கி உணர்வு கலங்கிப் பாகாயுருகி அசைவற்று மூச்சு விடாமல் கற்சிலைபோல நின்று அவளது சிகை முதல் நகம் வரையிலுள்ள ஒவ்வோர் அங்கத்திலும் தனது பார்வையைச் செலுத்தி தனது விழிகள் இரண்டிற்கும் தேவாமிருத விருந்து செய்து கொண்டிருந்தான்.

புஷ்பச் செடி கொடி தருக்களின் இடையில் சித்திரப் பாவை போல சொகுசாக அமர்ந்திருந்த அந்தப் பூங்கோதை, தன் வலது காலை மடக்கி ஊஞ்சற் பலகையின் மேல் வைத்து, இடது காலை அதன்மேல் போட்டுக் கீழே தொங்கவிட்டிருந்தாள். அப்படித் தொங்கவிடப்பட்டிருந்த இடது காலில் பாதத்திற்கும், தரைக்கும் மத்தியில் ஒரு சாண் உயரம் இடைவெளி இருந்தது. அவ்வாறு வீற்றிருந்த இள நங்கை, தனது வலக்கரத்தால் ஊஞ்சற் பலகையின் ஒருபுறத்துச் சங்கிலியைப் பிடித்துக் கொண் டும், தனக்கு எதிரிலிருந்து பன்னீர்க் கிளையை இடக்கரத்தால் பிடித்து இழுத்து ஊஞ்சலை ஆட்டிய வண்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து யோக நிஷ்டையில் இருப்பவள் போலத் தன்னையும் உலகத்தையும் மறந்து தனது முழு கவனத்தையும் ஏதோ ஒரு விஷயத்தில் செலுத்தி, தனக்குப் பின்னால், ஏழெட்டு கஜதூரத்தில் வந்துநின்ற வடிவழகனான கண்ண பிரானைப் பார்க்காமல் ஒரே நிலையில் உட்கார்ந்திருந்தாள்.

அவ்வாறு சொற்ப நேரம் கழிந்தது. எவ்வளவு நேரம், எத்தனை தரம் பார்த்தாலும், அவளது ஒவ்வோர் அங்கமும் அதி கரித்த அழகைக் காட்டி இன்பத்தைச் சொரிந்து கொண்டிருந்தது. இருந்தாலும், அவள் ஒருகால் திரும்பிப் பார்த்தால், தனது நிலைமை நிரம்பவும் கேவலமாகப் போய்விடும் என்ற நினை வும், அச்சமும் அவனது மனதில் தோன்றின. அவள் காணாவிட் டாலும், நிச்சயதார்த்தத்திற்காக வந்து கூடியிருக்கும் ஜனங்களுள் எவரேனும் பூஞ்சோலையைப் பார்க்க ஆசை கொண்டு, அந்தச் சமயத்தில் அங்கே வந்து, தாங்கள் இருவரும் தனியாக இருப் பதைக் கண்டால், அதனால் அந்தப் பெண்ணுக்கும் தனக்கும் இழிவும், பழிப்பும் ஏற்படும் என்ற அச்சம் அவனது மனதில் தோன்றி வதைக்கவே, தான் அவ்விடத்தை விட்டு உடனே அப்பால் போவது அவசியமான காரியம் என உணர்ந்தவனாய்ப் பின்புறம் திரும்ப நினைத்தான். ஆனால், வசீகரச் சக்கரம் போலே, அவனது உள்ளத்தையெல்லாம் கவர்ந்து கொண்டிருந்த அந்த இனிய வடிவத்தைக் கடைசியாக இன்னொரு முறை பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்ற ஒரு சபலம் விலக்க முடியாத வகையில் எழுந்து அவனை வதைத்தது. ஆகையால், அவன் கடைசியாக அவளது பக்கம் திரும்பி, முடி முதல்

அடிவரையில் கடாக்ஷித்துக் கொண்டே வர, அவனது பார்வை ஊஞ்சற் பலகையின் கீழே தொங்கிய அவளது இடது காலின் மீது சென்றது. தந்தத்தில் கடைந்து எடுக்கப்பட்டது போல சுத்தமாகவும், பத்தரை மாற்றுப் பசும் பொன்னின் நிறமும், மிருதுத் தன்மையும், பாதரஸம், சிலம்பு, மெட்டி, பீலலி முதலிய ஆபரணங்களும் நிரம்பப் பெற்றிருந்த அந்த அதி அற்புதமான பாதத்தின் ஒப்பற்ற சிறப்பைக் கண்டு, "ஆகா! இப்படிப்பட்ட அபார சிருஷ்டியும் உலகத்தில் இருக்கிறதா!" என்று வியப்புற்று நைந்து இளகி இரண்டொரு நிமிஷ நேரம் இமை கொட்டாமல் கண்ணபிரான் அதையே பார்த்திருக்க, அந்தப் பாதத்தின் அடியில் தரையின் மேல் கட்டைபோல நீளமாகக் கிடந்த ஏதோ ஒரு வஸ்து கண்ணபிரானது திருஷ்டியில் படவே, அவனது கவனம் உடனே அதன்மீது சென்றது. அவ்வாறு கட்டைபோலக் கிடந்தது மகா பயங்கரமான ஒரு நாகப்பாம்பாக இருக்க, அதை உணர்ந்த கண்ணபிரானது நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை யூகித்துக் கொள்வதே எளிது அன்றி, விவரித்துச் சொல்வது அசாத்யமான காரியம். அவனது மனதில் பெருத்த திகிலும், வியப்பும், மலைப்பும் உண்டாயின. உடம்பு பதறுகிறது. கை கால்களெல்லாம் வெட வெட வென்று ஆடுகின்றது. குலை நடுக்கமும் மயிர்க்கூச்சமும் உண்டாயின. அந்த நாகப் பாம்பு உயிரோடு இருப்பதாகத் தோன்றின, ஆனாலும் இரை விழுங்கியதுபோல, அவ்விடத்தை விட்டு நகராமல் கிடந்தது. ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்திருந்த மடந்தை தனது காலைக் கீழே ஊன்றுவாளானால், பாம்பு அவளை உடனே கடித்துவிடு மென்ற பெருத்த கவலையும் அச்சமும் தோன்றின. தான் கோவெனப் பெருங்கூச்சல் செய்தால், ஒருகால் அந்தப் பாம்பு துள்ளி அதற்கு அருகிலிருந்த அவளது இடது காலைக் கடித்து விடுமோ என்ற எண்ணம் உண்டானதால், அவன் நிரம்பவும் பிரயாசைப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டான். காலின் கீழ் பாம்பு இருக்கிறதென்று தான் மெதுவாகக் கூறி, அந்த நங்கையை எச்சரிக்கலாம் என்றால், பின்னால் யாரோ மனிதன் வந்திருக்கிறான் என்று நினைத்து திடுக்கிட்டு நாணமுற்று, அவள் எழுந்திருக்க முயல்வாளோ என்ற நினைவு உண்டானது. ஆகையால், அவளை எச்சரிப்பதும் உசிதமானதாகத் தோன்ற

வில்லை. ஆகவே, அந்த மகா பயங்கரமான அபாய வேளையில் தான் என்ன செய்வது என்பதையும், அந்த மங்கையை எப்படிக் காப்பாற்றுவது என்பதையும், அறியாமல் இரண்டொரு நிமிஷ நேரம் தத்தளித்தான். ஒவ்வோர் இமைப்பொழுதும் ஒவ்வொரு பெருத்த யுகமாகத் தோன்றியது. அழகின் திரளாக இருந்த அந்தப் பெண்மணியின் கவர்ச்சியினால் அந்த நாகமும் வசீகரப் பட்டுப் போனதோ என்னலாம்படி, அது அவ்விடத்தை விட்டு நகராமலே கிடந்தது. ஆகவே, அவன் சிறிது நேரம் தவித்துத் தயங்கி, அவளை நோக்கி மெல்ல நடக்கலானான். தனது காலடி ஓசையைக் கேட்டு அவள் திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்டு ஊஞ்சலை விட்டுக் கீழே காலை வைத்து இறங்கப் போகிறாளே என்ற கவலை கொண்டவனாய், கண்ணபிரான் தனது காலின் விரல்களை ஊன்றி, ஒரு சிறிதும் ஓசை செய்யாமல் மெதுவாக நடந்து, ஊஞ்சற் பலகையண்டை நெருங்கினான். அந்த ஒவ் வொரு நொடியும் ஒவ்வொரு கற்ப காலமாகத் தோன்றி, அவனை நரக வேதனையில் ஆழ்த்தியது. அந்த மகா விபரீதமான அபாயத்திலிருந்து தான் அவளை விடுவிக்க எண்ணிப் போவதே அவளுக்கு விபத்தாக முடிந்து விடுமோ என்ற திகில் அவனை வதைத்துக் கொண்டிருக்க, அவன் கொஞ்சமும் சந்தடி செய்யா மலும், தான் நெருங்கி வருவதை மடந்தை அறியாதபடியும், ரோஜாப் புஷ்பத்தின் இதழ் புல் தரையில் விழுவது போல, அவ்வளவு மிருதுவாகத் தனது விரல்களைக் கீழே ஊன்றி ஊன்றி நடந்து, அந்தப் பெண்மணியின் முதுகண்டை போய்ச் சேர்ந்த வுடன், தனது முழு பலத்தையும் விசையையும் வெளிப்படுத்தி, தனது இடது கையை அவளது துடைகளின் கீழ் கொடுத்து வலது கையை முதுகுப் பக்கத்தில் அணைத்து ஒரு குழந்தையைத் தூக்குவதுபோல் அவளைச் சடேரென்று அலாக்காய்த் தூக்க, அவளது கைப்பிடிகள் உறுதியாக இல்லாமையால் அவள் சுலபமாகக் கையோடு வந்துவிடவே, அவன் அவளைத் தூக்கிக் கொண்டு அப்போதும் ஓசை செய்யாமல் விரல்களையே ஊன் றிய வண்ணம் நடந்து ஊஞ்சற் பலகைக்குப் பக்கத்து கஜ தூரத்திற்கு இப்புறம் கொண்டு வர, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து மெய்ம்மறந்திருந்த அந்தப் பெண்மணி திடுக்கிட்டுப் பெருத்த திகிலும், குழப்பமும் அடைந்து, "ஐயோ அம்மா எவனோ தூக்கு

கிறானே!'' என்று வாய் குழறிக் கூறி அலற, ஒரே நொடியில் பொறித் தட்டுவதுபோல, அவளைக் கண்ணபிரான் இப்பால் கொண்டு வந்து முன் சொன்னபடி சுமார் 10-கஜ தூரத்திற் கொண்டு வர, அவள் அவனது பிடியில் அடங்காமல் தத்தளிக்க, கண்ணபிரான், ''அம்மா! பயப்படாதே; வித்தியாசமான காரியம் ஒன்றுமில்லை! நான் கண்ணபிரான்; வேறே யாருமில்லை'' என்று அன்பாகவும், உருக்கமாகவும் கூறி அவளைத் தேற்றிய வண்ணம் கீழே விட, தன்னை அன்னிய புருஷன் தொடலா யிற்றே என்ற கோபமும் பதைப்பும் ஆக்கிரோஷமும் கொண்ட வளாகத் துடி துடித்திருந்த அப்பெண்மணி, தன்னை அவ்வாறு தூக்கியவன் கண்ணபிரான் என்பதை உணர்ந்தவுடன் மிகுந்த நாணமும் வெட்கமும் அடைந்தவளாய்த் தலைகுனிந்து நின்றா ளானாலும், அவளது விழிகள் கோவைப் பழம்போலச் சிவந்து மிகுந்த ஆத்திரத்தை அப்போதும் காட்டின. அவள், உடனே அவனை நோக்கி, ''புருஷர்களுக்கு எந்த விஷயத்திலும் பதற்றம் அதிகமென்று சொல்லுவார்கள். அது சரியாகப் போய்விட்டது. நாளைய தினம் நமக்கு நிச்சயதார்த்தம் நடத்த ஏற்பாடு செய்தி ருக்கிறார்கள். இன்னமும் எட்டு நாட்களில் கலியாணம் நடக்கப் போகிறது. அதன் பிறகு நானே தங்களிடத்தில் வந்து சேரப் போகிறேன். அதற்குள் இவ்வளவு ஆத்திரமா? அப்படியே ஆத்திரம் இருந்தாலும், நான் தனியாக இருக்கிறதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். தாங்கள் வருவதே தெரியாமல் திடீரென்று பின்னால் வந்து இப்படித்தானா என்னைத் தூக்கிக்கொண்டு வருகிறது? தங்களுடைய காரியம் நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறதே! இந்த ஒரு நிமிஷத்தில் என் மனம் எவ்வளவு பாடு பட்டு விட்டது! எவ்வளவு திகிலடைந்து விட்டது! அடாடா! என்னுடைய உயிரே போய்விடும்போல் ஆகி விட்டதே! மகா புத்திசாலியான தாங்கள் இப்படிச் செய்வீர்கள் என்று இன்னமும் என் மனம் நம்பமாட்டேன் என்கிறதே! நம்முடைய பங்களா வில் எத்தனையோ ஜனங்கள் வந்து கூடியிருக்கிறார்கள். அவர்க ளுள் யாராவது இங்கே வந்து தாங்கள் என்னைத் தூக்கிக் கொண்டு வந்தபோது நம்மைப் பார்த்திருந்தால், என்னைப் பற்றி எவ்விதமான அபிப்பிராயம் கொள்வார்கள் என்பதை தாங் கள் எண்ணவில்லையே'' என்று நிரம்பவும் அன்பாகக் கடிந்து கூறினாள்.

அவளைத் தூக்கிக் கொண்டு வந்தபோது, அவள் கோகிலாம்பாளோ அல்லது ஸௌந்தரவல்லியோ என்பதை நிச்சயிக்கமாட்டாமல் ஐயமுற்றிருந்த கண்ணபிரானது கவலை நீங்கியது. அவள் ஸௌந்தரவல்லி அல்லவென்ற செய்தி அவனுக்கு நிரம்பவும் ஆறுதலாக இருந்தது. கோகிலாம்பாளோ தனக்கு உரியவள் ஆதலால், வேறே அன்னிய ஸ்திரீயைத் தான் அவ்வாறு கட்டித் தூக்கியதான குற்றம் ஏற்படாது ஒழிந்தது அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கியது. அந்த மடமடங்கை சொன்ன சொற்களிலிருந்து அவள் அப்போதும் தனது உண்மையான நிலைமையை உணர்ந்து கொள்ளவில்லை என்பதும் நன்றாகத் தெரிந்தது. தானே அவளுக்கு நாயகனாக வரிக்கப்பட்டிருந்தும் அவள் தாக்ஷணியம் பாராமல் தன்னைக் கடிந்து பேசியதிலிருந்து, அவளது உத்தம குணமும், சுத்தமான நடத்தையும், உறுதியான கொள்கைகளும் பரிஷ்காரமாக வெளிப்பட்டன. அவள் அவ்வாறு அன்பாகக் கடிந்து கொண்டதும் ஓர் அழகாகத் தோன்றிக் கண்ணபிரானது உயிரைக் கொள்ளை கொண்டது. அவன் ஆநந்த பரவசம் அடைந்து, அவளை நோக்கி இனிமையாகப் புன்னகை செய்து, "பெண்ணே! கோபித்துக் கொள்ளாதே; என்னுடைய உயிருக்குயிராக நினைத்த இரவு பகல் பூஜித்து வரும் என்னுடைய கண்மணியான உனக்கு நான் அநாவசியமான துன்பம் உண்டாக்கி வைப்பேன் என்று நினைக்காதே; உன்னுடைய உடம்பில் ஒட்டிய ஒரு தூசிக்கும் ஓர் இடுக்கண் வர நான் சகித்திருக்கிறேன் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம். அதோ பார்; நீ உட்கார்ந்திருந்த ஊஞ்சற் பலகையின் அடியில் என்ன இருக்கிறது என்பதைக் கவனி?" எனக் கூறிய வண்ணம் தனது கையால் அந்த இடத்தைச் சுட்டிக் காட்ட, சற்று முன் கோகிலாம்பாள் செய்த கூச்சலைக் கேட்டு, அந்த இரை விழுங்கிய நாகப்பாம்பு மிகுந்த பிரயாசைப்பட்டு அப்போதே மெதுவாக நகர முயன்று கொண்டிருந்தது.

கண்ணபிரான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு மிகுந்த வியப்பும், திகைப்பும், பிரமிப்பும் அடைந்த கோகிலாம்பாள் தனது முகத்தைத் திருப்பி ஊஞ்சற்பலகையின் கீழே நோக்க, அவ்விடத்தில் நகர்ந்து கொண்டிருந்த பிரம்மாண்டமான

நாகப்பாம்பு அவளது திருஷ்டியில் பட்டது. அதைக்கண்ட கோகிலாம்பாள் அபாரமான திகிலடைந்து, "அய்யோ! அப்பா!" என்று உளறியடித்துக் கொண்டு, தனக்கருகில் நின்று கொண்டிருந்த மன்மதருபனான கண்ணபிரான் மீது பாய்ந்து மிகுந்த பயத்தோடும், ஆவலோடும் கட்டிக் கொண்டாள். அந்த ஒரு நொடிக்குள் அவளது பிராணன் துடித்துப் போய்விட்டது; மூளை குழம்ப, அறிவு பிறழ்ந்தது. கை கால்களெல்லாம் வெட வெடவென்று ஆடுகின்றன. உச்சி முதல் உள்ளங்கால் வரையில் வியர்வை வெள்ளம் குபீரென்று பொங்கி வழிகிறது. தென்றல் காற்றில் அசையும் மாந்தளிர்போல அவளது மிருதுவான அழகிய சரீரம் துடி துடிக்கிறது; அளவு கடந்த அச்சத்தினால், அந்த அழகிய நங்கை அவனை இறுகப் பிடித்துக் கட்டிக் கொள்ளவே, அவன், "கோகிலா! பயப்படாதே; அந்தப் பாம்பு இரை விழுங்கி இருக்கிறது. இங்கே வராது. நீ முதலில் கொஞ்ச ஜலம் குடித்தால், உன்னுடைய பயமெல்லாம் தெளிந்து போகும். வா, குளத்திற்குள் இறங்குவோம்" என்று கூறி அவளை மெதுவாக நடத்தி அழைத்துக் கொண்டு போய் அந்தத் தாமரைத் தடாகத் திற்குள் இறங்கி, தனது கையால் தண்ணீர் எடுத்து அவளது வாயில் விடுத்துப் பருகச் செய்த பின், அவளை அழைத்து வந்து, மணல் நிறைந்திருந்த கரையின் மேல் உட்கார வைத்துவிட்டு, அங்கே கிடந்த நாலைந்து கற்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு போய், அந்த நாகப்பாம்பை அடித்துக் கொன்று விட்டுத் திரும்பி அவளிடம் வந்து சேர, அந்த மெல்லியலாள் சகிக்க இயலாத மன அதிர்ச்சியினாலும், அச்சத்தினாலும் அப்போது மயங்கி ஒரு மரத்தடியில் சாய்ந்திருக்க அவளது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு மிகவும் இரக்கங் கொண்ட கண்ணபிரான், தனது உருமாலையை நனைத்துக் கொணர்ந்து, அவளது முகத்தை அதனால் துடைத்து விட்டு, அவளைக் கட்டிப்பிடித்து தனது மார்பின் மேல் சார்த்திக் கொண்டு, "கோகிலா! கோகிலா! கண்ணே! உடம்பு என்ன செய்கிறது? அந்தப் பாம்மை அடித்துக் கொன்று விட்டேன்; பயப்படாதே; விழித்துக் கொள்" என்று நிரம்பவும் உருக்கமாகவும், வாஞ்சையோடும் கூறித் தனது கையால் அவளது அழகிய கண்களையும், கன்னங்களையும் பிரியமாகத்

தடவிக் கொடுத்தான். அந்தப் பெண்மணியைத் தான் காணக் கிடைக்குமா என்று ஏங்கித் தவித்து உயிர் சோர வருந்தி மன மாழ்கி இருந்த கண்ணபிரானுக்கு அது கனவோ நினைவோ என்ற ஐயம் தோன்றியது. சுவர்க்கலோகமே நேரில் வந்து தன்மீது சாய்ந்திருப்பது போல, அழகே மயமாகவும், இன்பமே நிறை வாகவும், அற்புத தேஜஸோடு தனது மார்பின் மீது சாய்ந்திருந்த அந்த மடமயிலைப் பார்க்கக் கண் கூசியது. ரோஜாப்பூவின் இதழ்போல மிருதுவாகவும் குளிர்ச்சியாகவும், வழுவழுப்பாகவும் இருந்த அந்த மடமங்கையின் உடம்பு, கண்ணபிரானது உடம்பில் படப்பட மயிர்க்காலிற்கு மயிர்க்கால், பிரம்மாநந்த சுகம் ஊறி அவனது உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பரவுகிறது. ஜில் ஜில்லென்று மயிர்ச் சிலிர்க்கிறது. அவனது மனதில் ஆனந்த வெள்ளம் பொங்கி எழுந்து கரைபுரண்டோடி வழிகிறது. தேகம் பரவசம் அடைந்து வெட வெட என்று ஆனந்தத்தாண்டவம் ஆடுகிறது. வேறே யாராகிலும் அப்போது வந்து தங்களைப் பார்த்துவிடப் போகிறார்களோ என்ற அச்சம் எழுந்து ஒருபுறம் வதைக்கிறது. ஏதோ ஒரு பெருத்த குற்றம் செய்து விட்டவனது உடம்புபோல, அவனது அழகிய சரீரம் அடிக்கடி திடுக்கிடுகிறது. அவன் தனது முகத்தை நாற் புறங்களிலும் திருப்பித் திருப்பி பார்க்கிறான். உடனே குனிந்து, கோகிலாம்பாளது சுந்தரவதனத்தைக் கண்ணுற்று மயங்கிப் பிரமித்து உணர்வு கலங்கி உருகி ஓய்ந்து, "கோகிலா! கோகிலா! பாம்பை அடித்துக் கொன்றுவிட்டேன்; பயப்படாதே; கண்ணை விழித்துப் பார்" என்று கொஞ்சிக் கெஞ்சி நயமாகக் கூறித் தனது கையாலும் ஈர உருமாலையாலும் அவளது வதனத்தை வருட, கால் நாழிகையில் அவளது முகத்தில் தெளிவும் களையும் காணப்பட்டன. அவள் உடனே தனது கண்ணைத் திறந்து பார்க்க அவர்களது கண்கள் இரண்டும் ஒன்றையொன்று சந்தித்து உறவாடின. அவள் தனது மனத்தில் பொங்கியெழுந்த நன்றியறி தலின் வெள்ளத்தையும்; வாஞ்சைப் பெருக்கையும், காதலின் நிறைவையும், தனது கண்களின் இளக்கத்தாலும், ஜ்வலிப்பி னாலும் நன்றாக வெளிப்படுத்தி நாணமும், அச்சமும் கொண்ட வளாய்ச் சிறிது நேரம் தத்தளித்திருந்த பின், தனது வாயைத் திறந்து மிருதுவாகப் பேசத் தொடங்கினாள். அவளது குரல்

புல்லாங்குழலின் கனிந்த ஓசை போலவும், அமிர்த வருஷம் போலவும், இன்பத்தை அள்ளி இறைத்தது. "அன்றைய தினம் தாங்கள் என்னுடைய உயிரையும், என் தங்கையின் உயிரையும் காப்பாற்றியதற்குப் பாத காணிக்கையாக நான் என்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் ஏற்கனவே தங்களுக்குத் தத்தம் செய்து விட்டேன். இப்போது இந்த இரண்டாம் முறை என்னுடைய உயிரைத் தாங்கள் காப்பாற்றியதற்கு நான் வேறே எதைத் தங்களுக்குப் பாத காணிக்கையாகக் கொடுக்கப் போகிறேன்! எனக்கென்று எந்தப் பொருளும் இல்லாமல் நான் தங்களுடைய அடிமையாக இருக்கிறேன். இனி எல்லாம் தங்களுடையதே" என்று நிரம்பவும் கனிவாகவும் உருக்கமாகவும் வாஞ்சையாகவும் கூறியவண்ணம் மெல்ல நிமிர்ந்து உட்கார, அவளது சொற்களைக் கேட்ட கண்ணபிரான் அப்படியே பிரமித்துப் போனான்; அவள் கோடீசுவரரது பெண் ஆதலாலும், தான் பரம ஏழை ஆதலாலும், அவள் தன்னை அவ்வளவாக மதிக்காமல் அமர்த்தலாய்ப் பேசுவாளோ என்றும், அதனால் தனது மனம் சங்கடப்பட நேருமோ என்றும் மிகுந்த ஐயமும் கவலையும் கொண்டு நிரம்பவும் அஞ்சி அஞ்சி அவளிடத்தில் பேசின கண்ணபிரான், அவளது பணிவையும், பயபக்தி விநயத்தையும், அவள் தன் மீது கொண்டிருந்த காதலின் வலுவை யும் கண்டு ஆனந்த பரவசம் எய்திப் பூரித்து புளகாங்கிதம் அடைந்து, அது உண்மையில் நிகழும் காட்சியோ, அல்லது தான் சதாகாலமும் அதே நினைவாக இருப்பதால் உண்டான மானஸிகமான பொய்த் தோற்றமோ என்று இரண்டு நிமிஷ நேரம் சம்மயத்தவனாய்த் தன் மீது இன்பகரமாகச் சாய்ந்திருந்த அந்த மனோ மோகன வடிவழகியை உற்று நோக்கினான். தனது கண்ணின் திருஷ்டி தோஷம் அவளுக்கு ஏற்படுமோ என்ற எண்ணத்தினால் அவளை நன்றாகப் பார்க்கவும் அஞ்சினான். அவ்வளவு பெருத்த கோடீசுவரரது வீட்டுப் பெண்ணாகிய அந்த சுவர்ணபிம்பம் மகா ஏழையான தனது மனைவி என்று நினைக்கவே அவனது மனம் இடங்கொடுக்கவில்லை. அப்படிப் பட்ட சுவர்க்கலோகம் தனக்கு உரியதாவதற்குள் வேறே யாரா கிலும் முயற்சிப்பதனால் அது தனக்கில்லாமல் போய்விடுமோ என்ற அச்சமும் தோன்றியது. அவ்வாறு பிறவிக் குருடன் கண்

பெற்று, உலகத்தின் அற்புத விநோதங்களைக் கண்டு, ஒரு கால் மறுபடியும், தனது கண்பார்வை மறைந்து போய்விடுமோ என்று அடிக்கடி சந்தேகித்துக் கவலையும் சஞ்சலமும் கொள்வது போல, கண்ணபிரான் தான் கோகிலாம்பாளையும் அவளது செல்வங் களையும் அடையும்படியான பாக்கியம் எவ்வித இடையூறுமில் லாமல் முடிவு வரையில் சித்திக்க வேண்டுமே என்று கவலை கொண்டு அப்போதே உருகலானான். அவளது தேகம் தனது உடம்பில் படுவதால் உடம்பில் பரவிய பேரின்ப சுகமும், அவளது கண்கொள்ளா அழகைப் பார்த்ததால் அவனது மனதில் பொங்கியெழுந்த குதூகல வெள்ளமும் ஒன்று கூடி, அவனை மெய்ம்மறந்து போகச் செய்யவே, அந்த ஆவேசத்தில் அவன் தனது மோகலாகிரி முழுவதையும், ஆசையையும் நன்றாகப் பலப்படுத்தி, அவளது சுந்தரவதனத்தைத் திருப்பி வாய் ஓயாமல் நன்றாக அவளது கன்னங்களிலும், அதரங்களிலும் பன்முறை முத்தமிட, அந்த இன்பத்தைத் தாங்கமாட்டாத பெண்மணி, அந்த மன்மத புருஷனது வசீகரமான முகத்தின் அழகினால் கவரப்பட்டவளாய்த் தன்னை மறந்து தனது கைளைக் கொடுத்து அவனது முகத்தைப் பிடித்து அப்படியே தனது முகத்தோடு சேர்த்து அசையாமல் அழுத்திக் கொள்ள, இரண்டு முகங்களும் ஒன்றோடொன்று ஒட்டி ஐக்கியமடைந்து அரை நாழிகை வரையில் அதே நிலைமையில் இருந்தனர். அவர்கள் இருவரும் சுவர்க்க லோகத்திற்குள் நுழைந்து தேவாமிருத விருந்து உண்பவர்போல அப்படியே ஆநந்த மயமாக இளகிக் கனிந்து நைந்து நெக்கு நெக்குருகி இருக்க, ஈருயிரும் ஓருயிராகி ஒன்று பட, மயிர் சிலிர்த்துத் தாண்டவமாட, தேகம் பூரித்துப் பரவசம டைய, ஐம்புலன்களும் நெஞ்சமும் சலனமற்று இன்ப வெள்ளத் தில் தோய்ந்து தம்மையும் உலகையும் சகலத்தையும் மறந்து ஒப்புயர்வற்ற மோஷ நிலையை அடைந்து நிற்க, அந்த சொற்ப நேரத்திற்குள் அவர்களது இரண்டு மனதுகளும் ஒன்று பட்டுப் போயின. அவர்கள் இருவரது ஜீவன்களும் விலக்க முடியா வகை யில் ஒன்றிற்குள் ஒன்று நுழைந்து புகுந்து கொண்டன ஆதலால் அதன் பிறகு எத்தனை யுகங்களானாலும் எவ்விடத்திலிருந்தாலும், ஒருவரை ஒருவர் விலக்கவாகிலும், மறக்கவாகிலும் முயல்வது சிறிதும் சாத்தியமில்லாத வகையில் எங்கும் நிறைந்த கடவுளும்

ஆகாயவாணி பூமாதேவியும் அறியக் கணவன் மனைவி என்ற பாந்தவ்வியத்தை அவர்கள் உண்டாக்கிக் கொண்டு விட்டனர். அதன் பிறகு ஜனங்களுக்கு எதிரில் புரோகிதர் மந்திரம் சொல்லித் தாலி கட்டுவதான வெளிப்படையான சாங்கிய மொன்றைத் தவிர அவர்களது திருமணம் அப்போதே முடிந்து போனது போலாயிற்று. அவ்வாறு தாங்கள் முகத்தோடு முகம் வைத்தபடியே இருக்கிறோம் என்பதைக் கால் நாழிகைக்குப் பிறகு உணர்ந்த பேதை மடவன்னமான கோகிலாம்பாள், "ஆகா! நான் கல்யாணமாகாத கன்னிகையாயிற்றே! உண்மை யில் இவரையே நான் புருஷராக அடைய இருந்தாலும் இன்னமும் கலியாணச் சடங்கு முடியவில்லையே! இந்த நிலை மையில் நான் இவரோடு தனிமையில் இருப்பதை எவராகிலும் கண்டால், நான் திமிர் கொண்ட பட்டியென்று எல்லோரிடத் திலும் சொல்லிப் புரளி செய்வார்கள்; அதுவும் தவிர, நான் இவரிடத்தில் எவ்வளவு அதிகமான பிரேமையையும், ஆசை யையும் காட்டித் தாராளமாக இருக்கப் புகுந்தால், இவரே என்னைப் பற்றி ஏதேனும் இழிவாக நினைத்துக் கொள்வாரே" என்று தனக்குள் நினைத்து, உடனே தனது கைகளையெடுத்துத் தனது முகத்தை அப்பால் விலக்கிக் கொண்டு, அவனது முகத்தைப் பார்க்க வெட்கமும் நாணமும் அடைந்தவளாய்த் தனது சுந்தரவதனத்தை அவனது மடியின் மீது புதைத்துக் கொண்டாள் அந்த மனமோகன ஏந்தெழிலாள். அவ்வாறிருந்த புது மோகக் காட்சி, கடவுளும் கண்டு களிகொண்டு, ஆநந்தத் தாண்டவமாடத்தக்க அதியற்புத . ரமணீயக் காட்சியாக இருந்ததென்றால், வாய் திறந்து பேசவும் மாட்டாமல் அப்படியே சொக்கிப் போயிருந்த கண்ணபிரான், அந்தக் கண் கொள்ளா மனோகரக் காட்சியில் தனது மனம் முழுவதையும் லயிக்கவிட்டு அப்படியே சித்திரப் பதுமைபோலச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தது ஒரு விந்தையாகுமா? அவ்வாறு இரண்டொரு நிமிஷ நேரம் செல்ல, அந்த யௌவனப் புருஷன் அவளது முகத்தை பிடித்து மெதுவாகத் திருப்பி, "கண்ணே ஏன் இப்படி வெட்கப் படுகிறாய்? என்னை நிமிர்ந்து பார்" என்று கொஞ் சலாகப் பேசிய வண்ணம் மறுபடியும் அவளது கமலக் கண்களி லும், கனிந்த அதரங்களிலும் மாறி மாறி முத்தமிட, அவ்வாறு

சகிக்க முடியாத அமிர்தமான சுகத்தை உண்டாக்கித் தன்னைக் கொன்று கொண்டிருந்த அந்த யௌவனப் புருஷனது அழகு வழிந்த முகத்தை ஏறிட்டுப் பார்க்க வெட்கிய கோகிலாம்பாள் தனது முகத்தை மறுபடியும் திருப்ப முயல, அவன் "கண்ணே! முகத்தைத் திருப்ப வேண்டாம். இனிமேல் நான் ஒன்றும் செய்கிறதில்லை. உன் முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டால், பூர்ண சந்திரன் மறைந்ததுபோல, எனக்கு இந்த இடமெல்லாம் பாழ்த்துத் தோன்றுகிறது. கோகிலா! நீ இப்போது இங்கே வந்திருப்பாய் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. உன்னைப் பார்க்கப் போகிறோமா என்று நினைத்து ஏக்கங் கொண்டு இந்த இரண்டு தினங்களாக நான் பட்டுக் கொண்டிருந்த பாடு கடவுளுக்குத் தான் தெரிய வேண்டும். என்னுடைய உயிர் தாமரை இலைத் தண்ணீர்போல அப்படியே தத்தளித்துக் கொண்டிருந்தது. நீ மாத்திரம் இப்போது என் கண்ணில் பட்டிராவிட்டால், நாளைய காலையில் நடக்கப் போகும் நிச்சயதார்த்தத்துக்குள் என்னுடைய உயிர் இந்த உடலில் நின்றிருக்குமோ என்பது சந்தேகந்தான். அந்தச் சங்கதியைக் கவனித்தால், நீ இந்த இடத்திற்கு வந்ததே தெய்வ சங்கற்பத்தினால் ஏற்பட்ட பெருத்த பாக்கியமென்று நினைக்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும், பாம்பு முதலிய துஷ்ட ஜெந்துக்கள் இருக்கக் கூடிய இப்படிப்பட்ட செடி கொடிகள் அடர்ந்த இடங்களுக்கு நீ இப்படித் தனியாக வந்து இருப்பது நிரம்பவும் அபாயகரமானது. இன்றையதினம் உன்னை தெய்வந்தான் காப்பாற்றி வைத்தது" என்று மிகுந்த வாஞ்சையோடு உருக்கமாகப் பேசினான்.

அதைக்கேட்ட கோகிலாம்பாள், "நாம் பாம்பில்லாத இடத்திலும் அபாயமில்லாத இடத்திலுமா இருக்கிறோம்? நாம் மூன்றாவது மாடத்தில் இருந்தால் கூட, பாம்பு அங்கேயும் வந்துவிடும். மனிதருடைய உயிரும் உடலும் எங்கெங்கே போகின்றனவோ, அங்கங்கே அவைகளின் நிழல்போல அபாயமும் கூடவே இருந்து வருகிறது. கரணம் தப்பினால் மரணம் என்கிறபடி, ஒரு மூச்சு ஒழுங்காக வராவிட்டால் உயிர் போய் விடும். மனிதப் பிறப்பே நிரம்பவும் அற்பமானது; இதற்கு இருக்கும் துன்பங்களும், அபாயங்களும் அவ்வளவு அதிகமாக

வேறு எதற்கும் இல்லை. அப்படி இருந்தும் இத்தனை துன்பங்களின் இடையில் மனிதர் இருந்து பெற்றுப் பெருகி வளர்ந்து வாழ்ந்து அறுபது வருஷம் எழுபது வருஷம் இருந்து விட்டுத்தான் போகிறார்கள்; இதெல்லாம் நம்முடைய செயலா? சர்வ ஜீவன்களும் தாய் வயிற்றிலிருந்து பிறந்து அற்புத மாளிகைகளாக இயற்கையில் தாமதமாகவே வளர வேண்டுமென்றும், அதனதன் கடமையைச் செய்து உலகம் அழிந்து போகாமல் நிலை நிற்க வேண்டுமென்றும் ஆக்ஞாபித்துள்ள கடவுள், சதா காலமும் சர்வ வியாபியாக நிறைந்து, சூத்திரதாரிபோல மறைந்திருந்தபடி எல்லா ஜீவன்களையும் தனது விருப்பத்தின்படி நடத்திக் காப்பாற்றி வருகிறார். அப்படி இருக்க, ஈசுவரனுடைய கட்டளையாகிய விதி ஏற்பட்டிருந்தால் அன்றி, இந்தப் பாம்பை நான் மிதித்திருந்தால் கூட இது என்னைக் கடித்திருக்காது. எனக்கு ஏற்பட்ட இரண்டு அபாயங்களுக்கும் தாங்களே காரணமானவர்களன்றி, வேறு எவருமில்லை. வள்ளி நாயகியைப் பிடிப்பதற்கு முருகக் கடவுள் மதயானையைக் கொணர்ந்து காட்டி பயமுறுத்தி, அவளே ஓடி வந்து அணைந்து கொள்ளும்படி செய்யவில்லையா! அதுபோலவே இப்போது தாங்கள் செய்திருக்கிறீர்கள். அன்றைய தினம் சமுத்திரக்கரையில் நான் வந்ததைக் கண்ட தாங்கள் மோட்டார் வண்டியாகிய காட்டானையை வரவழைத்து என்னைப் பயமுறுத்தி, நான் தங்களுடைய உதவியை ஏற்றுக் கொள்ளச் செய்து, தாங்கள் என்னுடைய பிரியத்தை எல்லாம் கவர்ந்து கொண்டீர்கள். அப்படிக் கவர்ந்திருந்தும், நான் இதுவரையில் தங்களிடத்தில் வந்து சேரவில்லையே என்ற ஆத்திரத்தினால், தாங்கள் இந்தப் பாம்பை வரச் செய்து, மறுபடியும் என்னுடைய பிரியத்தை வலுக்கட்டாயமாக அடைந்து, என்னுடைய உடம்பையும், உயிரையும், கற்பையும் கொள்ளை கொண்டு விட்டீர்கள். இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் நடப்பதற்கு மூலாதாரமாகத் தாங்கள் இருந்து கொண்டு, எய்தவனிருக்க அம்பை நொந்து கொள்வதுபோலத் தாங்கள் தங்களுக்குத் துணைக்கருவியாக வந்து உதவிய இந்தப் பாம்பை நொந்து கொள்வது தருமமா? இப்போது நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து எவருக்கும் கிடைக்காத பரமசுகம் அனுபவிக்கும்படி செய்த பேருபகாரி

யான அந்தப் பாம்பைத் தாங்கள் அடித்துக் கொன்றது கூட என் மனசுக்கு நிரம்பவும் கஷ்டமாகவே இருக்கிறது. தாங்கள் அதை அடித்தது எனக்குத் தெரியாமல் போய்விட்டது. தெரிந்திருந்தால் அப்படிச் செய்ய வேண்டாமென்று நான் தங்களிடத்தில் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருப்பேன்'' என்று கிள்ளை மொழிவது போல அழகாகப் பேசினாள்.

அவளது கல்வி முதிர்ச்சியையும் குணத்தழகையும் கண்டு ஆனந்த பரவசமுற்றுப் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்த கண்ண பிரான் தனது மோகப் பெருக்கைத் தாங்க மாட்டாமல் அவளை அப்படியே ஒரு குழந்தையை வாரியெடுப்பதுபோல ஆவேசத் தோடு தூக்கி எடுத்து மார்போடு சேர்த்தணைத்து முகத்தோடு முகம் வைத்து அப்படியே கலங்கி மயங்கி ஆனந்த பாஷ்பம் சொரிந்து பேரின்ப நிலையில் சொக்கி நிற்க, அந்த மெல்லிய ளாள் அந்த மன்மத புருஷனால் விரிக்கப்பட்ட மோக வலைக் குட்பட்டு, அவனால் தொடுக்கப்பட்ட மோகனாஸ்திரங்களால் பிணைக்கப்பட்டு தடை கட்டப்பட்ட நாகம் போல அப்படியே கிடந்தாள். அவ்வாறு எவ்வளவு நேரமிருந்ததோ என்பதை அவர்கள் உணராதபடி அவர்கள் தங்களையும், உலகத்தையும், ஓயாமல் கழிந்து கொண்டிருந்த நாழிகையையும் மறந்து விவரிக்க சாத்தியமில்லாத அப்படிப்பட்ட பேரின்ப நிலைமையில் அவர்கள் இருக்க, அவர்களுக்குப் பின்புறத்தில் யாரோ இருந்து கனைத்துக் கொண்ட ஓசை, அவர்களது செவியில் படவே, அவர்கள் இருவரும் வேடனது குரலைக் கேட்ட மான்போலத் திடுக்கிட்டு மருண்டு, ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து சடக்கென்று எழுந்து விலகி நின்று திரும்பிப் பார்க்க நாலைந்து கஜ தூரத்திற்குப் பின்னாலிருந்து ஒரு மரத்தடியில் சௌந்தர வல்லியம்மாள் வியப்பும் திகைப்பும் வடிவெடுத்தது போல மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டு நின்றது தெரிந்தது.

தாங்கள் எதிர்பார்க்காதபடி அந்த இளைய நங்கை வந்து தங்களது செய்கைகளை எல்லாம் கண்டு கொண்டதை உணர்ந்த கண்ணபிரான் வெட்கித் தலைகுனிந்தான். கோகிலாம்பாளது அழகிய மேனி கிடுகிடென்று ஆடியது. ஏதோ பெருத்த குற்றம் செய்து விட்டவளது கை கால்கள் போல, அவளது கை கால்க

ளெல்லாம் வெட வெடவென்று உதறுகின்றன. கண்கள் திருட்டு விழி விழிக்கின்றன. அதுகாறும் ஒவ்வொரு விஷயத்திலும் தனது தங்கைக்கு நற்புத்தியும் நன்னடத்தையும் சொல்லிப் பயிற்று வித்து, அவளை நடுக்குவித்து வந்த கோகிலாம்பாள் என்னும் நற்குணவதி அந்தச் சமயத்தில் தனது நடத்தை நிரம்பவும் ஆட்சேபகரமானது என்பதை நன்றாக உணர்ந்தவளாய்த் தனது தங்கையின் முகத்தில் விழிக்கவும் அஞ்சிக் கலங்கி கையும் களவுமாகப் பிடிபட்ட திருடன் போலத் தனது மனோ திடத்தை எல்லாம் இழந்து வெட்கி நின்றாள். அவளது எண் சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றியது. தான் தனது நியா யத்தை எவ்வளவு தெளிவாக எடுத்துச் சொன்னாலும், சௌந்தர வல்லி திருப்தியடையாமல், தான் கண்ட ரகசியத்தை தனது தாய், வேலைக்காரிகள் முதலிய எல்லோரிடத்திலும் வெளிப் படுத்தித் தன்னை மிகுந்த அவமானத்திற்கும், தலை குனிவிற்கும் ஆளாக்கி விடுவாள் என்ற பெருத்த திகில் கோகிலாம்பாளது மனதில் தோன்றி, அவளை ஓர் ஆட்டுக்குட்டிபோல ஆக்கி விட்டது. அவளும் கண்ணபிரானும் அவ்வாறு வெட்கித்தலை குனிந்து நின்றதைக் கண்ட சௌந்தரவல்லியின் துணிபும் அகங் காரமும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தன. அவள் உடனே தனது அக்காளை நோக்கி அறுவறுப்பாகப் பேசத் தொடங்கி, "பேஷ்! நன்றாக இருக்கிறது! படிக்கிறது பகவத் கீதை; குடிக்கிறது குடக்கள் என்பதைப் போல இருக்கிறது இந்த நியாயம். அறவடித்த முன் சோறு கழனீர் பானையில் விழுந்து விடுமென்பது சரியாக இருக்கிறது. கோகிலா! தூ! இவ்வளவுதானா உன்னுடைய யோக்கியதை! அன்றைய தினம் சமுத்திரக்கரையில் வந்த இவரைப் பார்த்து, நான் உபயோகமற்ற இரண்டு வார்த்தைகள் சொன்னதற்கு, நீ என்னைக் கண்டித்து, எனக்கு ஒன்றரை மைல் நீளம் உபதேசம் படித்தாய். 'நீ என்ன வரவர இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாய்? வழியில் போகிற மனிதர் களை எல்லாம் நம்மைப்போல இருக்கிற கன்னிகா ஸ்திரீகள் ஏறிட்டுப் பார்ப்பதே முதலில் தப்பான காரியம்' என்று நீ அன்றைய தினமே எனக்கு ஹிதோபதேசம் செய்தாயே. நம்மைப் போல என்ற அந்த வார்த்தைக்குள் நீ அடங்கினவ ளல்லவா? அல்லது, வழியில் போகிற இந்த மனிதரை இப்படித்

தனியாகச் சோலைக்குள் அழைத்துக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு கட்டிப் புரள வேண்டுமன்றி, ஏறிட்டுப் பார்த்தது மாத்திரம் கூடாதென்று சொன்னாயா? அல்லது, உன்னுடைய ஆசையெல்லாம் இவர்மேல் விழுந்து விட்டதனால் இவரைப் பற்றி நான் வாயாலும் குறித்துப் பேசக் கூடாதென்ற நினைவினால் அப்படிச் சொன்னாயா? அல்லது நாளைய தினம் நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறதைக் கருதி, நீ கன்னிகா ஸ்திரீ என்ற வகுப்பிலிருந்து கலியாணமானவளாக மாறிவிட்டாயென்ற எண்ணமா? நான் கட்டிலில் உட்கார்ந்தால் அது தப்பு; கிழக்கு முகமாய்த் திரும்பினால் அது தப்பு; தும்பினால் இரும்பினால் கூட அதுவும் தப்பு; நீ எதைச் சொன்னாலும் அதை நம்முடைய அம்மாளும் கேட்டுக்கொண்டு ஆடுகிறது; தொட்டதற்கெல்லாம் என்னைக் கண்டித்து எனக்குப் புத்தி சொல்கிறது! நீ இப்படிப்பட்ட காரியம் செய்கிறாயே; உன்னை யார் கேட்கிறது? நம்முடைய பங்களாவில் நூற்றுக் கணக்கில் மனிதர்கள் வந்து கூடி இருக்கிறார்கள். அப்படி இருக்க மனதில் கொஞ்சம் கூட பயமில்லாமல் இவரை இங்கே அனுப்பிவிட்டு, நீயும் எவருக்கும் தெரியாமல் இங்கே வந்து இப்படிப்பட்ட காரியம் செய்து கொண்டிருக்கிறாயே! நானும் அரை நாழிகை நேரமாக இங்கே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னைப்போல அன்னி யர் யாராவது இப்படி வந்து நின்று பார்த்துக் கொண்டிருந் தாலும், நீங்கள் அப்போதும் இப்படித்தானே பூலோகமோ, கைலாசமோ என்று மயங்கிக் கிடப்பீர்கள். நல்ல வேளையாக நான் இன்னும் கொஞ்சம் முன்னால் வராமல் போனேன். அப்படி வந்திருந்தால் நீங்கள் செய்த மற்ற எல்லாக் காரியங்க ளையும் நான் பார்க்கும்படியாக இருந்திருக்கும். இந்தக் காட்டில் கோவணம் கட்டாமல் திரியும் மிருகங்களுடைய காரியத்திற்கும், உங்களுடைய காரியத்திற்கும் பேதம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. நான் இங்கே வந்து, நீங்கள் இப்படி இருந்ததைக் கண்டவுடனே, எனக்குண்டான ஆத்திரத்தில் உடனே பங்களாவுக்கு ஓடி, அங்கே கூடியிருக்கும் ஜனங்கள் எல் லோரையும் அழைத்துக் கொண்டு வந்து உங்கள் இருவரையும் பார்க்கச் செய்து, அவர்களுடைய தயவில்லாமல், நீங்களே ருது

சாந்தி முகூர்த்தங்கூடச் செய்து முடித்துக் கொண்டுவிட்டீர்கள் என்பதை அவர்களுக்குக் காட்டி, நிச்சயதார்த்தம், கலியாணம் முதலியவைகளெல்லாம் இனி செய்வது அநாவசியமான பணச்செலவும், அர்த்தமில்லாத காரியமும் ஆதலால், அவர்கள் தத்தம் வீடுகளுக்குப் போகும் படி சொல்லியனுப்பி விடலாம் என்று நினைத்தேன். தான் ஆடாவிட்டாலும், தன் சதை ஆடும் என்பார்களல்லவா? அதுபோல, ஐயோ பாவம்! நம்முடைய அக்காளை அவமானப்படுத்தக் கூடாது என்ற மன இரக்கத் தினால் பேசாமல் இருந்தேன்; இல்லாவிட்டால் இந்நேரம் உன் மானத்தைக் குலைத்து ஊரெல்லாம் உன்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும்படி செய்திருப்பேன். இருக்கட்டும். இப்போதும் இந்த விஷயத்தை நான் இவ்வளவோடு விடப்போவதில்லை. இதோ நான் போய், இந்தச் சங்கதியை நம்முடைய அம்மாளிடத்திலும், இவருடைய அம்மாளிடத் திலும் சொல்லி உனக்குத் தக்க சிக்ஷை நடத்தி வைக்கிறேன். நீ வீட்டிற்கு எஜமானியென்கிற கருவத்தினால், எதை வேண்டுமா னாலும் செய்யலாமென்று நினைத்துக் கொண்டாயா? இருக்கட்டும்; இதோடு உன் கொட்டத்தை அடக்கி விடுகிறேன்'' என்று எள்ளும், கொள்ளும் வெடிக்கத் தகுந்த் மகா கடுமை யான முகத்தோடு கூறிவிட்டு, அப்புறம் திரும்பி நிரம்பவும் முடுக்காகவும், முறுக்காகவும் நடக்கலானாள்.

அவள் சொன்ன குரூரமான வார்த்தை ஒவ்வொன்றும் நிரம்பவும் கூர்மையான ஒவ்வோர் ஈட்டியால் சுருக்சுருக்கென்று குத்துவது போல, கோகிலாம்பாளது செவியிலும், மனத்திலும் ஆணியரைவது போல வந்து பாய்ந்தது. அவளது ஒவ்வொரு வார்த்தையின் உரத்தையும் சகிக்க மாட்டாமல் கோகிலாம் பாளது உயிர் தள்ளாடியது. உடல் குன்றியது. தனது தங்கை தன் மீது குற்றம் சுமத்தியது நியாயம் போலவும் தோன்றியது. அநியாயம் போலவும் தோன்றியது. தனக்கு நிச்சயதார்த்தம், கலியாணம், ருதுசாந்தி முகூர்த்தம் முதலிய சடங்குகளெல்லாம் நிறைவேறுமுன், தான் கண்ணபிரானோடு அப்படிப்பட்ட சரஸ ஸல்லாபங்கள் செய்தது தவறான காரியமென்பது அவளது மனதில் நன்றாகப் பட்டது. தனது தேக பரிசுத்தம் முற்றிலும் களங்கப்படாவிட்டாலும், கண்ணபிரான் செய்த சொற்ப

விஷயங்களுக்குத் தான் இணங்கியிருந்தது, கண்டிப்பாகப் பார்க்கும் பட்சத்தில், தவறுதான் என்பது நன்றாகத் தெரிந்தது. ஆனால், தான் பாம்பினால், கடிக்கப்படும் சமயத்தில் இருந்ததைக் கருதி கண்ணபிரான் தன்னைத் தூக்கியெடுக்க நேர்ந்ததையும் மற்ற விவரங்களையும் சௌந்தரவல்லியம்மாள் அறிந்திருந்தால் அவள் தன் மீது அவ்வளவு குற்றம் சுமத்தியிருக்க மாட்டாள் என்பதும் தெரிந்தது. இருந்தாலும் தனது தங்கைக்கு எதிரில் அதுகாறும் அற்பமும் குற்றமற்ற நடத்தை உள்ளவளாக நடந்து நற்பெயர் எடுத்து, அவளுக்கே பல சமயங்களில் நற்புத்தியும் நன்னடத்தையும் போதித்து வந்தவளான தான் தனது தங்கைக்கு எதிரில் அப்படிப்பட்ட விகாரமான நிலைமையில் இருந்தது, கோகிலாம்பாளுக்குச் சகிக்க முடியாத வெட்கமாகவும், துன்பமாகவும் இருந்தது. தனது நியாயத்தை எடுத்துத் தனது தங்கைக்குச் சொல்வதற்கும் அவளது மனம் இடம் கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட பரம சங்கடமான நிலைமையில் தான் தனது தங்கைக்கு எதிரில் இருப்பதை விட, நாக்கைப் பிடுங்கிக் கொண்டு அப்படியே பிராணனை விட்டு விடலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று. தாங்கவொண்ணாத அவமானத்தினாலும், துக்கத்தினாலும் அவளது நெஞ்சம் பதறக் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி மளமளவென்று வழிந்தது. மூளை குழம்பியது. அறிவு பிறழ்ந்தது. தான் பூமியில் நின்றாளா, ஆகாயத்தில் பறந்தாளாவென்று சந்தேகிக்கும்படியாக அவளது மதி மயங்கியது. அவளது கண்ணிற்கு எதிரிலிருந்த மனிதர்கள், மரங்கள், தடாகம் முதலிய யாவும் மேலே உயர்ந்து உயர்ந்து கீழே தணிந்தன. அப்படிப்பட்ட மகா துன்பகரமான நிலைமையில் கோகிலாம்பாள் நின்று, காம்பு ஒடிபட்ட தாமரைப் புஷ்பம்போல வாடித் துவண்டு தனது சிரத்தைக் கவிழ்த்தபடி சித்திரப் பதுமைபோல் அசைவற்று மௌனமாக நின்றாள். சௌந்தரவல்லியம்மாள் உபயோகித்த கன்னகடூரமான சொற்களெல்லாம் உருக்கி வார்த்த நாராசம்போலக் கண்ணபிரானது செவிகளில் புகுந்து தீய்த்தன. அடக்க வொண்ணாத ஆத்திரமும், கொதிப்பும் எழுந்து அவனைக் கலக்கி உலுப்பிக் கொண்டிருந்தன. அவ்வாறு பேசியவள் கோகிலாம்பாளது தங்கையாக மாத்திரம் இல்லாதிருந்தால், அந்நேரம் அவன் அவளை நிரம்

பவும் கொடூரமாகத் தண்டித்து அனுப்பி இருப்பான். அவள் கோகிலாம்பாளைப் போலவே இருந்ததைக் காண அவனது மனத்தில் ஒருவித இளக்கமும் கோழைத்தனமும் ஏற்பட்டு விட்டன.

மகா விவேகியான கோகிலாம்பாள் மறுமொழி கூறித் தனது தங்கையைக் கண்டிக்காமல் பேசாது இருக்கையில், தான் கண்டிப்பது ஒருகால் கெடுதலாக முடிந்து விடப் போகிறதே என்ற நினைவினால் அவன் கடைசி வரையில் பொறுமையோடு தலைகுனிந்து நின்று கொண்டிருந்தான். ஆனால், சௌந்தரவல்லியம்மாள் பலவாறாக தூஷித்துக் கடைசியாக மிகுந்த மூர்க்கத்தோடு போனதைக் காணவே, அவள் போய் எல்லோரிடத்திலும் தாறுமாறாகப் பிதற்றி, தனக்கும் கோகிலாம்பாளுக்கும் தேக சம்பந்தம்கூட ஆகிவிட்டதென்று பிறர் நினைக்கும்படி பொய்யான சங்கதிகளை உளறி வைத்துவிடப் போகிறாளே என்றும், அதனால் தனக்கும் கோகிலாம்பாளுக்கும் இழிவும் பழிப்பும் அவமானமும் ஏற்பட்டு விடுமே என்றும் கண்ணபிரான் நினைத்து மிகுந்த அச்சமும், கவலையும் கொண்டான். தனது தங்கையிடத்தில் கோகிலாம்பாளுக்கு அவ்வளவு மதிப்புக் குறைவு ஏற்படுவதற்குத் தானே காரணமானவன் என்றும், நாகப்பாம்பின் விபத்திலிருந்து தப்புவிக்கும் பொருட்டு கோகிலாம்பாளைத் தான் தூக்கியெடுத்துக் கொண்டு தூரமான இடத்திற்குப் போனபிறகு, தான் மரியாதையாக தூரத்தில் நின்று பேசி அவளுக்கு உபசரணை செய்து அவளை அனுப்பிவிட்டு, தானும் பிரிந்து போக வேண்டியது தனது கடமையாயிருக்க, அதை விட்டு அவளிடத்தில் மோக விகாரத்தைக் காட்டி, அவளோடு சரஸலீலைகள் புரிந்ததிலிருந்தே அவளுக்கு அப்படிப்பட்ட துன்பமும், அவமானமும், தலைகுனிவும் ஏற்பட்டன என்றும் நினைத்து, மட்டுக்கடங்கா மனோவேதனையும் இரக்கமும் மன இளக்கமும் கொண்ட கண்ணபிரான், அவ்வாறு கோபித்துக் கொண்டு போன சௌந்தரவல்லியை கோகிலாம்பாள் நிறுத்திச் சமாதானப்படுத்தி அனுப்புவாளென்ற நினைவினால் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். அவள் வாயைத் திறந்து பேசாமல் மனது இடிந்து ஸ்தம்பித்து நிலை கலங்கி ஊமைபோல இருந்து விட்டதைக் காண, கண்ண

பிரானது மனம் மிகுந்த இரக்கமும், பரிதாபமும் விசனமும் கொண்டு இளகி உருகித் தவித்தது. அவளுக்குத் தன்னால் ஏற்பட்ட அந்தப் பெரிய விபத்தைத் தானே தீர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாய், கண்ணபிரான் நிரம்பவும் தைரியமாகவும், விரைவாகவும் சௌந்தரவல்லிக்குப் பின்னால் இரண்டோரடி வைத்து எடுத்து வைத்து அன்பாகவும், நயமாகவும், மரியாதையாகவும் பேசத் தொடங்கி, "சௌந்தரவல்லியம்மா! கொஞ்சம் நில்லம்மா! போகலாம். அடேயப்பா! உனக்கு இவ்வளவு கோபம் உண்டாகும் என்று நான் கொஞ்சமும் நினைக்கவே இல்லை! எந்த வீட்டிலும் கடைக்குட்டிக் குழந்தைதான் எப்போதும் செல்லக்குழந்தை என்பார்கள். அப்படிப்பட்ட செல்லக் குழந்தை திட்டினாலும் அடித்தாலும் பூவினால் அர்ச்சனை செய்வது போலவும், நல்ல மாதுரியமான தின்பண்டங்களைத் தின்பது போலவும் இருக்கும் என்று ஜனங்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அதுபோல நீ இந்நேரம் உன்னுடைய அக்காளிடத்தில் கோபமான வார்த்தைகளை உபயோகித்ததாகவே கோகிலாம்பாள் கொஞ்சமும் எண்ணவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. நீ சொன்னதற்கு எல்லாம் அவள் பேசாமல் மௌனமாக நிற்பதிலிருந்து, அவள் உன்னிடத்தில் எவ்வளவு மதிப்பும், வாஞ்சையும், உன் மனசை வருத்தக் கூடாதென்ற பட்சமும் வைத்திருக்கிறாளென்பது பரிஷ்காரமாகத் தெரிகிறது. ஆகையால், நீ இப்போது பங்களாவுக்குப் போய் இந்த நியாயத்தை அங்கேயுள்ள மனிதரிடத்தில் சொல்லுவதைவிட நீயே இன்னமும் என்னென்ன சொல்ல வேண்டுமோ, அதைச் சொல்லி உன் மனசில் பட்ட சங்கதிகளைச் சொல்லத் தடையென்ன? உன்னைக் கண்டிக்க உன்னுடைய அக்காளுக்கு எப்படி உரிமையும், அதிகாரமும் உண்டோ, அதுபோல, உன்னுடைய அக்காளைக் கண்டிக்க உனக்கும் உரிமையும், அதிகாரமும் உண்டு. இந்தப் பங்களாவில் கோகிலாம்பாளைக் கண்டிக்கக் கூடியவர்கள் உன்னையும் உன்னுடைய அம்மாவையும் தவிர வேறே யாருமில்லை அல்லவா? உன்னுடைய அம்மாள் கலியாண ஏற்பாடுகளைச் செய்து கொண்டு விருந்தினருக்கு நடுவில் இருப்பார்கள். அங்கே போய் இப்போது நீ இந்த விஷயத்தை வெளியிட்டால், இதனால் ஏற்படும் அவமானம்

உனக்கு இல்லையா? அக்காள் அப்படி இருக்கையில் தங்கையும் இப்படித்தான் இருப்பாள் என்று, அவர்கள் எல்லோரைப் பற்றியும் கெடுதலாக நினைத்துக் கொள்ள மாட்டார்களா? அதற்கெல்லாம் இடம் கொடுப்பது சரியல்ல. போகலாம்; கொஞ்சம் நில் அம்மா!'' என்று நயமாகவும் அழுத்தமாகவும், உருக்கமாகவும் கூறி வேண்ட, எதிர்பாராத வார்த்தையைக் கேட்ட சௌந்தரவல்லி சடக்கென்று நின்று திரும்பி நிரம்பவும் அருவருப்பாகக் கண்ணபிரானைப் பார்த்தாள்.

அவளது மனதைச் சமாதானப்படுத்த அதுதான் சரியான பக்குவ சமயம் என்று எண்ணிக்கொண்ட கண்ணபிரான் அவளை நோக்கி இனிமையாகப் புன்னகை செய்து, ''நில் குழந்தை! போகலாம். என்மேல் கூட உனக்கு அதிகமான கோபமும், அருவருப்பும் உண்டாகியிருப்பது உன்னுடைய முகப்பார்வையிலேயே நன்றாகத் தெரிகிறது. என்னை நீ எவ்வளவு தூரம் கோபித்துக் கொண்டாலும், வைதாலும், அடித்தாலும், நான் அவைகளையெல்லாம் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்; ஏனென்றால் நானாவது கொஞ்சத்தில் கொஞ்சம் குற்றம் செய்திருக்கிறேன். உன்னுடைய அக்காள் ஒரு பாவத்தையும் அறியாத நிரபராதி; அவள் மேல் நீ காரணமில்லாமல் கோபித்துக் கொள்ளுவதுதான் உன்னுடைய புத்திசாலித்தனத்துக்கு அழகானதல்ல. ஏதோ வந்தாய்! இவள் என் மடியில் சாய்ந்திருக்கக் கண்டாய்; அதிலிருந்து என்னென்னவோ தவறான சங்கதிகளையெல்லாம் நீயே யூகித்துக் கொண்டாய். ஒருவன் நூறு மனிதருக்கெதிரில் கொலை செய்திருந்தாலும், அவனை நியாயஸ்தர் உடனே தண்டித்து விடுகிறதில்லை. அவன் என்ன சமாதானம் சொல்லுகிறான் என்பதை நிதானமாகக் கேட்டு, அவனுடைய சாட்சிகளையெல்லாம் விசாரித்து அதற்கு மேல், அவசியமானால் தண்டனை விதிக்கிறார்கள். அப்படி இருக்க, நாங்கள் என்ன பெருத்த கொலை குற்றம் செய்து விட்டோம்? நாளைக்கு உனக்கு ஒரு புருஷர் நிச்சயமாகிவிட்டால், நீங்கள் இருவரும் இப்படி இருந்துதான் சந்தோஷப்படப் போகிறீர்கள்; நீங்கள் எல்லோரும் சேர்ந்து எங்கள் இருவருக்கும் கலியாணம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். அது இனி மாறப் போகிறதில்லை. உன்னுடைய அக்காள் வேறே அன்னிய

புருஷருடைய மடியில் சாய்ந்திருக்கவில்லையே. அவளுக்குப் புருஷனாக ஏற்படுத்தப்பட்ட மனிதனுடைய மடியிலேதான் சாய்ந்திருந்தாள். இந்த விஷயமும் ஒரு பெரிய குற்றமாக உன் மனசுக்குப் பட்டால், "ஏன் அக்கா இப்படி செய்யலாமா?" என்று நீ கேட்க உனக்குப் பூர்த்தியான அதிகாரமிருக்கிறது. உடனே நாங்களும் உன் மனம் திருப்தியடையும்படியான சமாதானம் சொல்லக் காத்திருக்கிறோம். உன்னுடைய அக்காளோடு நான் இங்கே இருந்ததைப் பற்றி இப்போது நீ இவ்வளவு தூரம் வருத்தப்பட்டுக் கொள்ளுகிறாயே. நான் மாத்திரம் இப்போது இங்கே வந்திராவிட்டால் உன்னுடைய அக்காளை நீ உயிரோடு பார்த்திருக்கவே மாட்டாய். அப்போது நீ உன் அக்காளுக்காக அடித்துக்கொண்டு ஓலமிட்டு அழ மாட்டாயா! அதோ அந்த ஊஞ்சல் பலகைக்குப் பக்கத்தில் என்ன கிடக்கிறது என்பதை முதலில் பார்த்துவிட்டு வா; அதன் பிறகு உனக்கு எல்லா விஷயமும் உடனே விளங்கிப்போம். நான் இங்கே வந்து செய்த காரியத்தைப் பற்றி நீ நிரம்பவும் சந்தோஷப்படுவாய்" என்று அவளது மனது திரும்பும்படி பக்குவமாகப் பேசி, ஊஞ்சல் பலகையண்டை மாண்டு கிடந்த நாகப் பாம்பைக் காட்ட, அவனது வார்த்தைகளை முற்றிலும் அவநம்பிக்கையாகவும், அதிருப்தியாகவும் கேட்டுவந்த ஸௌந்தரவல்லியம்மாள் மெதுவாகத் தனது முகத்தைத் திருப்பி ஊஞ்சற் பலகையண்டை பார்க்க, அங்கே கிடந்த அதிபயங்கரமான நாகப் பாம்பின் உடல் தென்பட்டது. அதைக் கண்டு திடுக்கிட்டு, "ஐயோ! பாம்பல்லவா; உயிரோடா இருக்கிறது?" என்று கூறித் துள்ளிப் பின்புறத்தில் இரண்டோரடிக்கு அப்பால் குதிக்க, அவ்விடத்தில் நின்ற கண்ணபிரான் மீது அவள் தேகம் பட்டது. அவன் அவளை மிகுந்த அன்போடு பிடித்து நிற்க வைத்துவிட்டு, அப்பால் நகர்ந்து கொண்டான். ஸௌந்தரவல்லி மிகுந்த கலக்கமும், பயமும் பலவகையான சந்தேகங்களும் கொண்டவளாய் அவர்கள் இருவரது முகங்களையும் உற்று நோக்கினாள். சிறிது நேரத்திற்கு முன் அங்கே நடந்த சம்பவத்தின் விவரத்தை அறிந்து கொள்ள ஆவல் கொண்டவளாய் அவள் அவ்வாறு பார்க்கிறாள் என்பதைக் கண்டு கொண்ட கண்ணபிரான் நிரம்பவும் வாத்சல்யத்தோடு பேசத் தொடங்கி, "குழந்தாய்

பயப்படாதே; செத்துப் போய்க் கிடக்கும் பாம்பின் வெற்றுடம்பைக் கண்டு நீ இவ்வளவு தூரம் கதிகலங்கித் துள்ளிக் குதித்தாய்; அதுவுமன்றி சுத்த அன்னியனான என்மேல் வந்து விழுந்தாய். நான் உன்னைப் பிடித்துக் கொள்ளாதிருந்தால் நீ கீழே விழுந்திருப்பாய். இந்தச் சம்பவம் நடக்கும் போது நாம் இருவர் மாத்திரம் தனியாக இருக்க, வேறே யாராவது நம்மைப் பார்த்திருந்தால், அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள் தெரியுமா? நீயும் நானும் துன்மார்க்க நினைவோடு கட்டி ஆலிங்கனம் செய்து கொள்ளுகிறதாக நினைப்பார்கள் அல்லவா?'' என்று கூறி நிரம்பவும் இனிமையான மலர்ந்த வசீகர முகத்தோடு அவளை நோக்கினான்.

அந்த நாகப்பாம்பு இறந்து போய்க் கிடக்கிறது என்பதை உணர்ந்த சௌந்தரவல்லி தனது இயற்கையான துணிவை அடைந்தவளாய்க் கண்ணபிரானைப் பார்க்காமல் வேறொரு பக்கமாகத் திரும்பி நின்றபடி பேசத் தொடங்கி, ''மனிதர் வேண்டுமென்று தாமாகவே ஒரு காரியத்தைச் செய்வதற்கும், ஏதோ ஓர் அபாயத்தில் தற்செயலாகச் செய்வதற்கும் வித்தியாசம் தெரியாமலா போய்விடும்? நமக்கு மாத்திரந்தானா அறிவிருக் கிறது? பார்க்கிறவர்களுக்கு அறிவில்லாமலா போய்விடும்?'' என்று குத்தலாகப் பேசினாள்.

அந்த வார்த்தையைக் கேட்ட கண்ணபிரானது முகம் சடக் கென்று மாறுபட்டது. தனது தந்திர வார்த்தையெல்லாம் அவளிடத்தில் செல்லாதென்பதை அவன் உடனே உணர்ந்து கொண்டான். ஆனாலும், அவளைத் தன்னாலியன்ற வரையில் சமாதானப்படுத்தி அவளது உக்கிரத்தைத் தணித்து அனுப்ப வேண்டுமென்ற நினைவைக் கொண்டவனாய், அவன் அவளைப் பார்த்து வேடிக்கையாக நகைத்து, ''ஆம்! நீ சொல்வது வாஸ்தவமான சங்கதிதான். தற்செயலாக நடக்கும் சங்கதியும், வேண்டுமென்றே செய்யப்படும் சங்கதியும் நன்றாகத் தெரிந்து போகும். ஆனால், இதில் இரண்டும் கலப்பாக இருக்கிறது. தற் செயலாக நடந்தது பெரும்பாகம்; வேண்டுமென்றே செய்தது சொற்ப பாகம். தற்செயலாக நடந்ததைத் தள்ளிவிட்டுப் பார்த் தால் நீ இவ்வளவு அதிகமாக கோபித்துக் கொள்ள இடமே

இருக்காது; உன்னுடைய அக்காள் இங்கே வந்திருந்தது எனக்குத் தெரியாது. நான் தற்செயலாகத் தோட்டத்துக்குள் வந்து உலாவிக் கொண்டே இந்த இடத்துக்கு வந்தேன்; அப்போது உன் னுடைய அக்காள் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்து எங்கேயோ கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய காலுக்குக் கீழ் தரையில் இந்தப் பாம்பு வந்து படுத்துக் கொண்டிருந்தது. நான் தூரத்திலிருந்து குரல் கொடுத்தால், அவள் திடுக்கிட்டெழுந்து பாம்பின்மேல் காலை வைத்து விடப் போகிறாளோ என்ற பயம் உண்டாகிவிட்டது. நான் ஊஞ்சல் பலகைக் கிட்டப் போனால், பாம்பு என்னைக்கடித்து விடுமோ என்ற பயம் உண்டானதா னாலும், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்னுடைய உயிர் போனாலும் போகட்டும், கோகிலாம்பாளுடைய உயிர் மட்டும் போகக் கூடாது என்ற உறுதியை மனசில் வைத்துக் கொண்டு, நான் விரல்களை ஊன்றி நடந்து போய், கோகிலாம் பாளை அலாக்காகத் தூக்கிக் கொண்டு வந்து இந்த இடத்தில் சேர்த்தேன். பாம்பு கிடந்ததனால் நான் அப்படிச் செய்தேன் என்பது கோகிலாம்பாளுக்கு அப்போது தெரியாது. ஆகையால், அவளும், நீ இப்போது கோபித்துக் கொள்வதற்கு மேல் பத்துப் பங்கு அதிகமாகவே என் மேல் கோபித்துக் கொண்டாள். உடனே நான் அந்தப் பாம்பைக் காட்டினேன். அது அப்போது மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் இவள் கிலியினால் ஸ்மரணை தப்பிக் கீழே விழுந்து விட்டாள். நான் உடனே ஓடிக் கல்களை எடுத்தெறிந்து அந்தப் பாம்பை அடித்துக் கொன்று விட்டு வந்து துணியை நனைத்துக் கொண்டு வந்து இவளுடைய முகத்தில் தடவி மூர்ச்சையைத் தெளிவித்தேன். அப்படித் தெளிய வைக்கும்போது, இவளை மடியில் சாத்தி வைத்துக் கொள்வது கட்டாயமாகி விட்டது. கொஞ்ச நேரத்தில் இவள் கண்களை விழித்துக் கொண்டாள். நான் இங்கே வந்த சுமார் 10 நிமிஷங்கூட ஆகவில்லை. அன்றையதினம் மோட்டார் வண்டி விபத்திலிருந்தும், இன்றைய தினம் பாம்பின் வாயிலி ருந்தும் தப்பிப் பிழைத்தாளே என்ற ஒரு விசனத்தினாலும், பரிவினாலும், நான் என்ன செய்தேன் என்று தெரியவில்லை. என்னைக் கட்டிக்கொள்ளப் போகிற பெண்ணாகிய இவள் இப்படி இரண்டு தரம் எமன் வாயிலிருந்து தப்பிப் பிழைத்

தாளே என்ற ஆனந்த பரவசத்தினால், என்னை மறந்து நான் இவளை ஒரு குழந்தைபோல மதித்து ஆசையோடு ஒருதரம் ஆலிங்கனம் செய்து கொண்டேன். உடனே நீயும் வந்தாய்; இது தான் நடந்த சங்கதி. இவள் என் மடியின் மேல் சாய்ந்திருந்தது வரையில் நாங்கள் வேண்டுமென்று செய்த காரியமல்ல. அது இந்த அபாயத்தைக் கருதி எவரும் செய்யக்கூடிய தற்செயலான விஷயம், இவளை நான் ஆசையோடு கட்டித் தழுவியது ஒன்று தான் நான் வேண்டுமென்று செய்தது. அந்த விஷயத்திலும் உன் னுடைய அக்காளின் மேல் எள்ளளவும் குற்றம் சொல்ல முடி யாது; அவளுக்கு இப்படிப்பட்ட அவமானம் உண்டானதற்கு நானே காரணமானவன். ஆகையால், நீ எவ்வளவு தூரம் கோபித்துக் கொள்ள வேண்டுமானாலும் என்னைத்தான் கோபித்துக் கொள்ள வேண்டுமன்றி, உன்னுடைய அக்காளைக் கோபித்துக் கொள்வது கொஞ்சமும் நியாயமான காரியமல்ல. நான் செய்த குற்றத்திற்காக நீ என்னை அடித்தாலும் நான் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன். கடைசியில் நீ யார்? என்னுடைய மச்சினிச்சிதானே'' என்று வேடிக்கைபோல அலட்சியமாகவும் நயமாகவும் பேசி புன்னகை செய்தான்.

அதைக் கேட்ட சௌந்தரவல்லி மிகுந்த பொறாமையி னாலும், அகங்காரத்தினாலும் தனது நல்ல அறிவை இழந்தவ ளாய், அவன் சொன்ன வரலாற்றை நம்பாமல் மறுபடியும் குத்தலாகவே பேசத் தொடங்கி, ''இவ்வளவு தானா சங்கதி! இதற்குத்தானா என்னை நிற்கச் சொன்னது? கேழ்வரகில் நெய் ஒழுகுகிறதென்றால் கேட்போருக்கு மதி எங்கே போய்விட்ட தென்று வசனம் சொல்லுவார்கள். அதுபோல இருக்கிறது நீங்கள் சொல்வது; நான் சென்ற அரை நாழிகை நேரமாக இங்கே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்; நீங்கள் முத்தமிட்டுக் கொண்டதும், முகத்தோடு முகம் வைத்து மயங்கிக் கிடந்ததும், அடிக்கடி ஆசையோடு கட்டிக்கொண்டதும், எல்லாம் நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அப்படி இருக்க இது முழு பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைப்பதுபோல இருக்கிறது. ஏற்கனவே தானாக செத்துப் போய்க் கிடக்கும் ஒரு பாம்பின் மேல் சாக்கைப் போட்டுவிட்டு, நீங்கள் நல்ல காரியம் செய்தீர்கள். பாம்பைக் கண்டு அக்காள் மூர்ச்சித்திருந்தாள், பிறர்

கண்டு சந்தேகப்படாதபடி மரியாதையாக தூர இருந்து உபசாரம் செய்தால், மயக்கம் தெளியமாட்டேன் என்கிறதா? அதுதான் நல்ல சமயம் என்று இருவரும் ஆசையைத் தீர்த்துக் கொள்ளப் பார்த்தால், அதற்கும் மயக்கத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நான் போய் நான் கண்டதையெல்லாம் அம்மா ளிடத்தில் சொல்லுகிறேன். அக்காளும் அவளுடைய நியாயத்தை அங்கேயே வந்து சொல்லிக் கொள்ளட்டும். நாம் ஏன் இங்கே பேச வேண்டும்? நீங்கள் இன்னமும் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் போகிறேன்'' என்று குறும்பாகப் பேசி விட்டுத் தனது முகத்தை வேறே பக்கத்தில் திருப்பிக் கொண்ட படி முறுக்காவும், விசையாகவும் நடந்து அப்பால் போய் விட்டாள்.

கண்ணபிரான் எவ்வளவோ தந்திரமாகவும், நயமாகவும் சௌந்தரவல்லியைத் தூக்கிவைத்துப் பேசியிருந்தும், அவள் தனது மூர்க்க குணத்தை விடாமல் முறைப்பாகப் போனதைக் கண்ட கோகிலாம்பாள் உடனே நிமிர்ந்து கண்ணபிரானது முகத்தை நோக்க, அவன் அவளைப் பார்த்து, "கண்ணே நான் செய்த பதற்றமான ஒரு காரியத்தால் உனக்கு அப்படிபட்ட பெருத்த அவமானமும், மதிப்புக் குறைவும் ஏற்படும் என்பதை நான் கொஞ்சமும் எண்ணாமல் மோசம் போனேன். இப்போது நிகழ்ந்த சம்பவம் என் மனசை ஆயிரம் வாள் கொண்டு அறுப்பதுபோல இருக்கிறது. இந்த விஷயத்தில் உனக்கு என் மேல் நிரம்பவும் அருவருப்பும் கோபமும் ஏற்படும் என்பது நிச்சயம். இவள் போய் உன்னுடைய அம்மாளிடத்தில் ஏதாவது தாறுமாறாக உளறப் போகிறாளே என்று என் மனம் சஞ்சலப்படுகிறது'' என்றான்.

உடனே கோகிலாம்பாள் அவனை நோக்கி இனிமையாகப் புன்னகை செய்து, "இதைப்பற்றித் தாங்கள் ஏன் இவ்வளவு கவலை கொள்ளுகிறீர்கள்? நாம் என்ன பிரமாதமான தவறு செய்து விட்டோம்; ஒன்றுமில்லை. இவள் போய் இங்கே சொன்ன மாதிரி அம்மாளிடத்தில் சொல்ல ஆரம்பித்தால், அவர் கள் உடனே இவளுடைய வாயை அடக்கி, இவள் எதையும் சொல்ல விடாமல் செய்து விடுவார்கள். நான் கொஞ்சமும்

தவறான காரியத்தைச் செய்யமாட்டேன் என்ற உறுதி அம்மா ளுக்கு எப்போதும் உண்டு. என் தங்கைக்குக் கொஞ்சம் பொறா மையும், பிடிவாதமும் உண்டு. ஆனால், நகை, புடவை, சாமான் கள், தின்பண்டங்கள், சொத்து, சுதந்தரங்கள் முதலிய மற்ற விஷயங்களால் இருந்தால் நான் இவளுடைய பிடிவாதத்துக்கு இடங்கொடுப்பேன். எனக்கு இல்லாமல் போனாலும் பரவாயில்லை என்று எல்லாவற்றையும் இவளுக்கே நான் கொடுத்து விடுவேன். நான் என்னுடைய புருஷனோடு சந்தோஷமாக இருப்பதைப் பற்றிக் கூட அவள் பொறாமைப் பட்டால், அதற்கு நான் இடங்கொடுக்க முடியுமா? இவள் ஒன்றும் தெரியாத குழந்தை; என்ன செய்கிறது! இன்னும் சொற்ப காலத்துக்கு இவள் எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருக்கட்டும். இவளுக்கும் அதி சீக்கிரத்தில் ஒரு கலியாணத்தைச் செய்து விட்டால், அதன் பிறகு இவள் இந்த விஷயத்தில் பொறாமைப்பட மாட்டாள். தாங்கள் எவ்வளவோ பணிவாகவும் இவளை உயர்த்திப் பெருமைப்படுத்தியும் பேசுகிறீர்கள். அதை வகித்துக் கொள்ள இவளுக்கு யோக்கியதை இல்லாமல் போய்விட்டதே. தாங்கள் என்னுடைய உயிரை இரண்டு தரம் காப்பாற்றி இருக்கிறதை தெரிந்து கொண்டும், நாளைக்குத் தாங்கள் என்னைக் கட்டிக் கொள்ளப் போகிறீர்கள் என்பதை உணர்ந்தும், நான் யாரோ அன்னியனிடத்தில் துன்மார்க்கமான காரியம் செய்துவிட்டதுபோல இவள் பேசுகிறாள்; இருக்கட்டும். இவள் பேசுவதற்கும் கேவலம் ஒரு குழந்தை பேசுவதற்கும் எவ்வித பேதமுமில்லை. ஆகையால், இவள் சொன்ன வார்த்தை எதையும் தாங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டாம்; நான் இந்த விஷயத்தில் தங்களிடத்தில் அதிருப்தியாவது அருவருப்பாவது கொள்ளப்போகிறேன் என்ற கவலையும் தங்களுக்கு வேண்டாம். நல்ல சமயத்தில் இவளைத் தாங்கள் நிற்கச்செய்து விஷயங்களை எல்லாம் பக்குவமாக எடுத்துச் சொல்லி முக்கியமான விஷயத்தில் என்னுடைய மானத்தைக் காப்பாற்றினீர்களே; அது ஒன்றே கோடி பெறும். என்னுடைய உயிரைத் தாங்கள் இரண்டு தடவை காத்த உதவியோடு கூட, இந்த மூன்றாவது உதவியை யும் நான் என் மனசில் எப்போதும் வைத்து அந்த நன்றியையும்

மறக்க மாட்டேன் என்பது நிச்சயம். நான் இனிமேல் நிற்பது சரியல்ல. இவள் போய் அம்மாளிடத்தில் எதைச் சொன்னாலும் இவளுடைய கட்சி ஓங்காது. ஆனால் மற்ற மனிதர்கள் இருக்கையில் இவள் இதை வெளியிட்டாலும் வெளியிடலாம். அப்படி நடக்காமல் நான் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆகையால், நான் இவளுக்கு முன் வேகமாகப் போய்ச் சேர வேண்டும். உத்தரவு கொடுங்கள்; தாங்கள் எதைப்பற்றியும் கவலைப்படவே தேவையில்லை. நாளையதினம் முழுவதும் ஜனங்கள் இருப்பார்கள். மறுநாளைய காலைக்குள் எல்லோரும் போய்விடுவார்கள். அன்றைய தினம் நானும் தாங்களும் மறுபடியும் ஒன்றாகச் சந்தித்து நான்கு நாழிகை நேரமாவது எவ்வித இடையூறுமில்லாமல் சந்தோஷமாகப் பேசிக் கொண் டிருக்க வேண்டும். நம்முடைய பங்களாவில் மூன்றாவது மாடி யில் தனியான ஓர் அறை இருக்கிறது. அங்கே வந்து நான் தங்க ளைச் சந்திக்கிறேன். எப்போது என்பதை யார் மூலமாவது தங்க ளுக்குச் சொல்லி அனுப்புகிறேன். தாங்கள் வராமலிருந்து விடக் கூடாது. நாளைய தினம் முழுதும் நான் தங்களைப் பார்க்காமல் எப்படி இருக்கிறதென்று விசனம் இப்போதே என்னை வதைக்கிறது. ஆகையால், மறுநாளின் வரவை நான் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்'' என்று நிரம்பவும் உருக்கமாகவும் பணிவாகவும் கூறித் தனது காதல் முழுவதையும் தனது முகத்தோற்றத்தால் ஏற்படுத்தி நிரம்பவும் பரிதாபகரமாக அந்த யௌவனப் புருஷனை நோக்க, கனியோ, பாகோ, கற் கண்டோ, அமிர்தமோ எனக் கர்ணாமிருதமாக அந்த மின்னாள் பேசிய வார்த்தைகளைக் கேட்ட கண்ணபிரான் ஆநந்த பரவசம் அடைந்து நெக்கு நெக்குருகி ஆசையோடும், ஆவலோடும் அவளை இழுத்துக் கட்டியணைத்து முத்த மழை பெய்து பத்து நிமிஷ நேரம் வரையில் அதே நிலையில் ஒருமித்து நின்றபின், மிகுந்த விசனத்தோடு அவளுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு, அவ்விடத்தை விட்டு அடிமேல் அடி வைத்து வேறொரு திக்கை நோக்கி நடக்கலானான். அவ்வாறு நடந்த கண்ணபிரான் மிகுந்த கலக்கமும் குழப்பமும் அடைந்தவனாய் நெடு நேரம் வரையில் அந்தப் பூஞ்சோலையிலேயே உலாவிக்கொண்டிருந்தான்; அவனது சரீரம் மண்ணிலிருந்ததோ விண்ணிலிருந்ததோ என்பது

தோன்றாத மெய்ம்மறந்த நிலைமையில் அவன் சிறிது நேரத்திற்கு முன் நிகழ்ந்த சம்பவத்திலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தியவனாக நடக்க, அவனது நிலைமை இன்பமும், துன்பமும் கலந்ததான சகிக்க இயலாத நிலையாக இருந்தது; கோகிலாம்பாளை எப்போது காணப்போகிறோம் என்றும், அவளோடு எப்போது பேசப்போகிறோம் என்றும் நினைத்து ஏங்கித் தவித்திருந்த சமயத்தில், நிரம்பவும் ரகஸியமும் ரமணீயமுமான இடத்தில், அவளைத் தான் கண்டு, பிராண அபாயமான ஓர் விபத்திலிருந்து அவளைத் தப்புவித்த ஏதுவினால், அவளது ஆலிங்கன சுகமும், அவளது அதிமாதுரியமான காதற் கனிமொழிகளைக் கேட்டதான பேரின்பமும் அடைந்து தெய்வத்தின் இன்னருளால் தனக்கு ஏற்பட்ட பெருத்த பாக்கியமாகவும், தான் எதிர்பார்த்ததைக் காட்டிலும், ஆயிரம் மடங்கு அதிகமாக அதிர்ஷ்டமாகவும் தோன்றின. அவளை நினைக்க நினைக்க கடவுள் தன் விஷயத்தில் தோன்றாத் துணைவராக இருந்து ஏதேதோ சம்பவங்களைக்காட்டி, தனக்கு ஏராளமான நன்மைகளைச் செய்துகொண்டே போகிறார் என்பது அவனுக்கு நன்றாகப் புலப்பட்டது. ஆகவே, அவனது மனம் கடவுளை நினைத்து மிகுந்த பயபக்தி விசுவாசத்தையும் உருக்கத்தையும் கொண்டது. தான் கோகிலாம்பாளிடத்தில் நெருங்கி இருந்து அவளால் கொடுக்கப்பட்ட சுகத்தை அநுபவித்து சொற்ப நேர காலமேயானாலும், அந்தப் பிரமாநந்த சுகம், அவனது ஆயுட்காலம் வரையில் மறக்கக்கூடாத பரம சுகமாகவும், அப்போதும் அவனது மனத்திலும் ஐம்புலன்களிலும் இன்ப ஊற்றைச் சுரக்கச் செய்து கொண்டிருந்த நித்தியானந்த சுகமாகவும் இருந்ததன்றி, அவளது இனிய வடிவமும், கலியாண குணங்களும் அவனது அகக் கண்ணில் மறையாமல் புலப்பட்டு அவனை எப்போதும் அமிர்த சாகரத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தன. ஆனால், தான் அனுபவித்த பரமசுகத்துக்கு இடையூறாக சௌந்தரவல்லியம்மாள் திடீரென்று தோன்றியதும், தங்கள் இருவரது மனமும் புண்படும்படி கன்ன கடூரமான சொற்களைப் பேசிவிட்டுப் போனதும், அதுவரையில் தாங்கள் அனுபவித்த சுவர்க்க போகம் சடக்கென்று கெட்டுப்போய், தாங்கள் பெருத்த அவமானமும், சஞ்சலமும் அடைய நேர்ந்ததும் அவனுக்கு ஒருவித அபசகுனம்

போலத் தோன்றி அவனது மனத்தில் உறுத்திக் கொண்டிருந்தன. ரோஜாப்பூவை சுற்றிலும் முள்கள் நிறைந்திருப்பதுபோல, உண்மையான காதலனும், காதலியும் சேருவதற்கு எத்தனையோ இடையூறுகளும், இடைஞ்சலும் தோன்றுவதே உலக இயற்கை என்பதும், அப்படிப்பட்ட பிரயாசையின் மேல், ஒரு வஸ்து கிடைக்குமாயின் அதற்கு மதிப்பு அதிகம் என்பதும், அதனிடத்தில் நமது பிரியமும், மனமும் நீடித்து நிற்கும் என்பதும் கண்ணபிரானுக்குத் தெரிந்த விஷயங்கள், ஆனாலும் அந்தச் சமயத்தில் அந்த இடைஞ்சல்களை சகிப்பது மகா துர்லபமானதாக இருந்தது. கோகிலாம்பாள் தன்னைக் கலியாணம் செய்து கொள்ளப்போகிறாள் என்ற ஒரு நிச்சயம் ஏற்படுவதற்குள், தான் இரண்டு முறை தனது உயிரை மதிக்காமல் இரண்டு பெருத்த அபாயங்களை நிவர்த்திக்க வேண்டியிருந்ததையும், அவளை முதன் முதல் தான் தொடுவதற்கு முன், அதைக் கெடுத்து தங்களைக் கரைகடந்த சஞ்சலத்தில் ஆழ்த்த ஸௌந்தரவல்லி திடீரென்று தோன்றியதையும், சிந்தித்துப் பார்க்கப் பார்க்க, அவனது மனதில் பலவிதமான எண்ணங்களும், கவலைகளும் எழுந்து வருத்தலாயின. அந்த விஷயத்தில் பிள்ளையார் சுழி போடுவதற்குள் அத்தனை துன்பங்கள் நேர்ந்ததிலிருந்து, இனி நிச்சயதார்த்தம், கலியாணம் முதலிய முடிபுச் சடங்குகள் நிறைவேறுவதற்குள், இன்னமும் என்னென்ன இடர்களும், இடிகளும் வந்து குறுக்கிடுமோ என்ற விலக்கவொண்ணாத ஒரு கவலையும் சஞ்சலமும் இடையிடையே தோன்றி அவனை வதைத்துக் கொண்டிருந்தன. இரண்டு மடந்தையரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்ட ஒரே தோற்றமுள்ள இரண்டு சித்திரப் பாவைகள் போல இருந்தாலும், நற்குணமும், நன்னடத்தை, ஆழ்ந்த ஞானம், நாகரீகம், கண்ணிய புத்தி முதலிய அம்சங்களில் இரண்டு பெண்களுக்கும் கொஞ்சமேனும் ஒற்றுமையே இல்லையென்பது பட்டப்பகல் போல நன்றாகத் தெரிந்தது. ஒரே மரத்தில் காய்த்துப் பழுத்தது போல இருக்கும் மாங்கனிகளுள் ஒன்று புளிப்பாகவும், ஒன்று புழுக்கள் உள்ளதாகவும், ஒன்று அமிர்தம்போல இனிப்பதாகவும் இருப்பதுபோல, மனித சிருஷ்டியிலும், முகத்தழகு நிறைந்திருந்தும், அகத்தழகு

பலவாறாக விகாரப்பட்டிருக்கிறதே எனக் கண்ணபிரான் மிகுந்த வியப்பும் திகைப்பும் கொள்ளலானான்.

கோகிலாம்பாள், தனது தாய் தன் சொல்லையே நம்புவாள் என்றும், தனது தங்கையின் வார்த்தையைச் சிறிதும் மதிக்க மாட்டாள் எனக் கடைசியில் உறுதி கூறிவிட்டுப் போனாள். ஆனாலும், சௌந்தரவல்லியம்மாள் தனது அறியாமையினாலும், பொறாமைக் குணத்தினாலும், பங்களாவில் வந்து கூடியிருக்கும் ஜனங்களிடத்தில் தாறுமாறாக ஏதேனும் உளறி, அதனால் ஏதேனும் சங்கடத்தையும், எதிர்பார்க்காத துன்பத்தையும் உண்டாக்கி வைத்து விடுவாளோ என்ற கவலையும், தான் போய் தனது தாய், மாமியார் ஆகிய இருவரது முகங்களிலும் எப்படி விழிப்பதென்ற லஜ்ஜையும் தோன்றி அவனது காலைப் பின்னுக்கு இழுத்தன. ஆகையால் அவன் பங்களாவிற்கே போகாமல், இரவு ஏழரை மணி நேரம் வரையில் பங்களா விற்குப் பக்கத்திலிருந்த தென்னை மரங்களினடியில் உலாவிக் கொண்டே இருந்தான். அத்தனை சஞ்சலங்களினிடையில், கோகிலாம்பாள், நிச்சயதார்த்த தினத்திற்கு மறுநாள் மூன்றாவது மாடியில் தன்னோடு நெடுநேரம் வரையில் சந்தோஷமாக இருக்க ஆசைப்படுவதாகவும், தான் தவறாமல் வரவேண்டும் என்றும் சொல்லிவிட்டுப் போனபோனது, மரணதண்டனை பெறப் போனவனுக்கு நூறாயுளும் மகராஜனது பதவியும் கிடைத்தால், அவனது மனத்தில் எவ்வளவு பிரமாதமான களிப்பும், குதூகலமும் அனந்த பரவசமும் உண்டாகுமோ அதைக் காட்டிலும், ஆயிரம் மடங்கு அதிக சந்தோஷமும் உற்சா கமும் கண்ணபிரானது மனத்தில் தோன்றி, அவனது உள்ளத்தில் புதிய ஊக்கமும், புதிய பலமும், புதிய எண்ணங்களும் பெருகி, அவன் மானஸீகமான நவரத்னக் கோட்டை கட்டி அதிலேயே லயித்திருக்கும்படிச் செய்தன. அவ்வாறு, அந்தப் புதிய மண வாளன் இன்பத்தினாலும், துன்பத்தினாலும், சந்தோஷத்தி னாலும், பூரிப்பினாலும், வாட்டத்தினாலும், தளர்வினாலும் மாறி மாறி உலப்பப்பட்டவனாய், கட்டிடங்களின் பக்கத்தி லிருந்த தென்னந்தோப்பில் உலாவி நிற்க, மணி எட்டிற்கு மேலாகி விட்டது, அன்றைய தினம் ஏற்படுத்தப்பட்டிருந்த விருந்தை உண்பதற்காக எல்லோரும் இலையில் உட்கார்ந்து விட்டனர்.

புது மாப்பிள்ளைக்குப் போடப்பட்ட தலைவாழை இலை சகலமான பரிபக்குவ பதார்த்தங்களாலும் நிரப்பப் பெற்றிருந்தது ஆனாலும், அதற்குப் பக்கத்தில் போடப்பட்டிருந்த வெள்ளி மணைப்பலகை வெற்றுப் பலகையாக இருந்ததைக் கண்ட பணிப்பெண்களும், விருந்தினரும், "மாப்பிள்ளை எங்கே? மாப்பிள்ளை உட்காரவில்லையே! மாப்பிள்ளையைத் தேடிப் பார்த்துக் கூப்பிடுங்கள்" என்று கூக்குரலிடலாயினர். அந்தச் செய்தி பூஞ்சோலையம்மாள் முதலியோருக்கு விடுதிக்கு எட்ட, அவர்கள் லாந்தர்களை எடுத்துக் கொண்டு உத்யான வனத்திற்கு போய்த் தேடும்படி பல ஆட்களை அனுப்பி விட்டுத் துடிதுடித்து நின்றனர். அந்த ஆட்கள் பூங்காவின் ஆரம்பத்திலிருந்த தென்னை மரங்களின் வழியாகத் தேடிக்கொண்டே செல்ல, அவ்விடத்தில் மிகுந்த சஞ்சலத்தோடு உலாவிக் கொண்டிருந்த கண்ணபிரான், குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும் என்பதற்கிணங்க, ஸௌந்தரவல்லியம்மாள் கலகத்தீ மூட்டியதனால் ஏதேனும் துன்பம் சம்பவிக்கப் போகிறதோ என்ற கவலை கொண்டு அச்சத்தோடு அந்த ஆட்களை நோக்க, அவர்கள், "இலை போட்டாய்விட்டது. எல்லோரும் உட்கார்ந்து கொண்டார்கள். மாப்பிள்ளை இந்த இருட்டு வேளையில் கூடவா தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கிறது? பூச்சிப்பொட்டு முதலிய ஜெந்துக்கள் இருக்குமே; வாருங்கள்; போஜனத்துக்குக் கூப்பிடுகிறார்கள்; தங்களைக் காணாமல், எஜமானியம்மாள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். வாருங்கள் சாமீ!" என்று அன்பாகக் கனிந்து சந்தோஷத்தோடு பணிவாக வருந்தி அழைத்தனர்.

அப்போதே கண்ணபிரானது சந்தேகமும், கலவரமும் நீங்கின. கோகிலாம்பாள் போய், ஸௌந்தரவல்லி தங்களைப் பற்றி எந்த விஷயத்தையும் வெளிப்படுத்தாமல் செய்து விட்டாள் என்று நினைத்து துணிபடைந்த அந்த யௌவனச் சிறுவன், "இலை போட்டுவிட்டார்களா? அப்படியானால், இதோ வந்து விட்டேன். எனக்குப் பசி இல்லாதிருந்தது. கொஞ்ச நேரம் உலாவினால், பசி உண்டாகுமென்று நினைத்து இங்கே இருந்தேன்" என்று அவர்களுக்கு மறுமொழி கூறிய வண்ணம் அவர்களோடு கூடத் தொடர்ந்து சென்று போஜனசாலையை அடைந்தான்.

அவன் வந்து விட்டான் என்ற செய்தி எட்டுகிற வரையில் பூஞ் சோலையம்மாள், கற்பகவல்லியம்மாள், கோகிலாம்பாள் முதலியோர் தீயில் விழுந்த புழுவெனத் துடிதுடித்து நின்றனர். தென்னஞ்சோலையிலிருந்த அவனை வேலைக்காரர்கள் அழைத்து வந்து வெள்ளி மணையில் உட்காரவைத்து விட்டார் கள் என்ற செய்தியைக் கேட்டவுடனே, அவர்களது முகங்கள் எல்லாம் சூரியனைக் கண்டு மலரும் தாமரை மொட்டுகள் போல மகிழ்ச்சியினால் விரிந்தன. இலைகளில் உட்கார்ந்திருந்த பெண் விருந்தினர்களுக்கு எல்லாம் அவர்கள் யாவரும், பந்தி விசாரணை செய்வதில் தங்களது கவனத்தைச் செலுத்தலாயினர்.

அன்றைய விருந்து ஆண் பெண் பாலரான விருந்தினர் பணிமக்கள் முதலிய எல்லோருக்கும் நிரம்பவும் சம்பிரமமாக நடந்தேறியது. கண்ணபிரானும், மூன்று நாட்களிற்குப் பிறகு அப்போதே திருப்தியாக விருந்துண்டான். கோகிலாம்பாளைக் கண்டு அவளோடு பேசி அவளது ஆலிங்கன சுகத்தை அனு பவித்ததனால், அவனது மனம் எப்படி பிரம்மாநந்தமே மயமாக நிறைந்திருந்ததோ, அதுபோல அவனது வயிறும் நல்ல மாதுரிய மான அறுசுவை பதார்த்தங்களும் பக்ஷண பாயாசங்களும் கனி வர்க்கங்களும் நிறைந்து குளிர்ந்து திருப்தியடைந்திருந்தது.

போஜனம் நிறைவேறிய பின் விருந்தினர் எல்லோரும் தாம்பூலந் தரித்து நெடுநேரம் வரையில் குதூகலமாகச் சிரித்து விளையாட்டாகப் பேசிக் கொண்டிருந்து தங்கள் தங்களுக்கு வசதியான இடங்களில் போய்ச் சயனித்துக் கொண்டனர். அவ் வாறே கண்ணபிரானும் தான் முதல்நாள் சயனித்திருந்த சொகு ஸான மஞ்சத்தில் படுத்து இந்த இரவு முழுவதும், கோகிலாம் பாளும் தானும் கூடிக் கலந்து சந்தோஷமாக பூங்காவில் இருப்பதாக இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தான்.

அவ்வாறு இரவு கழிந்தது; நிச்சயதார்த்த தினம் வந்து சேர்ந்தது. முதல்நாள் இரவில் நடந்த மகா சிலாக்கியமான விருந்திற்குத் தன்னை அழைக்காமல் தான் இல்லாத காலத்தில் அவர்கள் அதை நடத்தி விட்டார்களே என்ற கடுங்கோபத்தோடு எழுபவன்போல சூரிய பகவான் கீழ்த்திசைக் கடலிலிருந்து கண் விழித்தெழுந்து அதி உக்கிரத்தோடு கிளம்பி ஆயிரங் கரங்கள்

கொண்டு, ராஜரத்தின முதலியாரது பங்களாவில் சயனித்திருந்த ஜனங்கள் எல்லோரையும் தட்டி எழுப்பினான். பங்களாவைச் சேர்ந்த மனிதர்களும், விருந்தினருமான எல்லோரும் அதிகாலை யில் எழுந்து தத்தம் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அழ காகவும், பகட்டாகவும் தங்களை அலங்கரித்துக் கொண்டனர். எவரைப் பார்த்தாலும் பட்டு ஜரிகை, வைரம், கெம்பு முதலிய வைகளே நிறைந்தவர்களாகத் தோன்றினர். அந்தப் பங்களா விற்குள் இருந்த சுவர்கள், கம்பங்கள், கூரைகள், நாற்காலி, மேஜைகள், ஸோபாக்கள், மரங்கள், பூஞ்செடிகள், பந்தல்கள் முதலிய சகலமான வஸ்துக்களும் தோரணங்களாலும், தொங்கல்களாலும், கூந்தல்களாலும், அஸ்மானகிரிகளாலும் வேறு பலவகையான சிங்காரப் பொருட்களாலும் தங்களை அதி விநோதமாக அலங்கரித்துக் கொண்டிருந்தன. ஒரு புரத்தில் இரட்டைத் தங்க நாகசுரங்களோடு கூடிய மேளக் கச்சேரி ஜாம் ஜாமென்று முழங்கிக் கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் முதல் தரமான பாண்டுவாத்தியக்காரர்கள் பாகோ, தேனோ, அமிர்தமோ எனக் கீர்த்தனைகளையும், இந்துஸ்தானி கெஜல் களையும் எடுத்து அதுமாதுரியமான ஜிலீர் ஜிலீரென்று அள்ளி இரைத்து எல்லோரது மனத்தையும் உருக்குகிறார்கள். கலியாணத் திற்காக அமைக்கப்பட்டுள்ள சிங்காரக் கொட்டகைப் பந்தலில் ஒரு சுமார் ஆயிரம் விருந்தினர் ஜெகஜ்ஜோதியான ஆடை ஆபர ணங்களோடு உட்கார்ந்திருக்கின்றனர். மோட்டார் வண்டி களும், ஸாரட்டுகளும், குதிரைவண்டிகளும் புதிய புதிய விருந்தி னரைக் கொணர்ந்து சேர்த்து விட்டு வழி நெடுக அரை மயில் தூரம் வரையில் இரட்டை வரிசைகளாக நிறுத்தப்படுகின்றன.

அப்போது கண்ணபிரான் ஒரு லக்ஷம் ரூபாய்க்கு மேல் பெறத்தக்க வைர ஆபரணங்களையும், ஜரிகைப் பட்டாடை களையும் அணிந்து இராஜ்ய பட்டாபிஷேகத்திற்கு ஆயத்தமாக வந்திருக்கும் ராஜகுமாரனோ, அல்லது, ரதி தேவியை மணக்க வந்திருக்கும் மாரவேளோ என எல்லோரும் மயங்கி வியப்பும் பிரமிப்பும் அடைந்து, அவனது அதி அற்புத தேஜஸைக் கண்டு, "ஆகா! இப்படிப்பட்ட சிலாக்கியமான மாப்பிள்ளையை நாம் இதுவரையில் பார்த்ததே இல்லை. கலியாணப் பெண் முன் ஜென்மத்தில் நல்ல பூஜை செய்தவள்" என்று தங்களுக்குள்

பேசிக் கொள்ளச் செய்தவனாய், எல்லோர் மனதையும் கவர்ந்த காந்தம்போல நடுநாயகமாக இனிது வீற்றிருந்தான். அவ்வளவு கம்பீரமும், அழகும் பெற்றிருந்தாலும் பெரியோர்கள் இருப் பதைக் கருதி, அவன் அடங்கி ஒடுங்கி மரியாதையாக ஒரு பக்கத் தில் உட்கார்ந்திருந்த விதரணையே அவனது விஷயத்தில் எல்லோரும் ஒருவித வாஞ்சை கொண்டு, அவனைத் தங்களது சொந்தக் குழந்தைபோல பாவிக்கும்படி செய்து எல்லோரது மனத்தையும் வசீகரித்து விட்டது. கர்னாமிருதமாக இனிமையாக வீசிக்கொண்டிருந்த மேளம், பாண்டு முதலியவற்றிலாவது, மற்ற அலங்காரங்களிலாவது அந்த ஜனங்களது மனம் செல்லாமல், கண்ணபிரானை இமை கொட்டாது பார்ப்பதிலும், அவனது வரலாற்றைப் பற்றியும், அவனது குண விசேஷங்களைப் பற்றியும் பேசுவதிலும் அவர்கள் தங்களது முழு கவனத்தையும் செலுத்தி இருந்தனர். கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாரான சுந்தரமூர்த்தி முதலியாரும் ஆடம்பரமான அலங்காரங்களுடன் வந்து கண்ணபிரானுக்கு அருகில் உட்கார்ந்திருந்தார். அவரும் அவனுக்கு அருகில் இருந்த வேறு சிலரும் அவனோடு சந்தோஷமாகப் பேசிப் பரிகாசஞ் செய்து கொண்டிருந்தனர். அவன் அதிகமாகப் பேசாமல் மிருதுவாக இரண்டொரு வார்த் தைகளை அப்போதைக்கப்போது சொல்லி மகிழ்ச்சியே வடி வெடுத்தது எனும்படி சந்தோஷமாகப் புன்னகை செய்தபோ தெல்லாம் அவனது கன்னங்கள் குழிந்ததும், முத்தைப்போல இருந்த அவனது பல்வரிசையில் சிறிதளது வெளியில் தெரிந்ததும், அவனது நெற்றியில் இருந்த கருஞ்சாந்துத் திலகத்தின் ஒளியும், வைரக் கடுக்கன்களின் டாலும் ஒன்று கூடி, ஆண் பெண் பாலரான எல்லோரது உயிரையும் கொள்ளை கொண்டு, எல்லோரது மனத்தையும் புண்படுத்தி சஞ்சலத்திற்குள்ளாக்கின. அவ்வாறு கொட்டகைப் பந்தலில் கூடியிருந்த ஜனங்களது கண்களுக்கும், மனத்திற்கும் தெவிட்டாத விருந்தாக கண்ண பிரான் வீற்றிருக்க, உட்புறத்தில் ஸ்திரீகளுக்காக ஏற்படுத்தப் பட்டிருந்த ஒரு மணிமண்டபத்தில் அதியற்புதமாக அமைக்கப் பட்டிருந்த முத்துப் பந்தலின் கீழே தங்க மணையின் மேல் கோகிலாம்பாள் தகத்தகாயமான ஆடை ஆபரணங்களையும், புஷ்பங்களையும் அணிந்து, ஜெகஜ்ஜோதியாய்க் கோடி சூரியப்

பிரகாசமாக வீற்றிருந்தாள். அவள் நாணித் தலைகுனிந்து நற்குணமும், உத்தம லக்ஷணங்களும், சுந்தரமும் வடிவெடுத்து அவளது ரூபமாக வந்தனவோவென எல்லோரும் பிரமித்து மயங்கத் தகுந்த அபரிமிதமான வசீகரம் வாய்ந்த அதி ரமணீய அப்ஸர ஸ்தரீயாக வீற்றிருந்தாள். அவளைச் சுற்றிலும் சுமார் ஐந்நூறு ஸ்திரீகள் சூழ்ந்து

''மானினம் வருவபோன்றும் மயிலினம் திரிவ போன்றும்
மீனினம் மிளிர்வ போன்றும், மின்னினம் மிடைவ போன்றும்,
தேனினம் புலம்பி யார்ப்பச் சிலம்பினம் புலம்ப வெங்கும்
பூநனை கூந்தல் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்''

என்றபடி எல்லா ஸ்திரீகளும் கலியாணப் பெண்களைப் போல அதியுன்னதமான ஆடையாபரணங்களை அணிந்து எல்லோரும் கந்தருவலோகத்துப் பெண்மணிகள் போலத் தோன்றிக் கண் கொள்ளா அதிசயக் காக்ஷியாக விளங்கினார்கள். கோகிலாம்பாளுக்குச் சமீபத்தில் இருந்த ஸ்திரீகள் குயில்போல மங்கள கீதம் பாட, வேறு சிலர் அந்தத் தோகை மயிலுக்கு திருஷ்டி தோஷம் கழித்து நலங்கு வைத்துக் கொண்டிருந்தனர். பூஞ்சோலையம்மாள், கற்பகவல்லியம்மாள் ஆகிய இருவரும் வைதவ்யமடைந்தவர்களாதலால் அவர்கள் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றபடி கோகிலாம்பாள் வீற்றிருந்த கோலாகலக் காட்சியைக் கண்டு மனங்கொள்ளா மகிழ்ச்சியும், ஆநந்தப் பெருக்குமடைந்து பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தவ்ராய், இன்பசாகரத்தில் மூழ்கி மிதந்து கொண்டிருந்தனர். அவ்வளவு பெரிய கும்பலில் சௌந்தரவல்லியம்மாள் ஒருத்தி மாத்திரம் எங்கும் காணப் படவில்லை. யௌவன மங்கையரான பத்துப் பதினைந்து வடிவழகிகள் மிகுந்த மகிழ்ச்சியும், குதூகலமும் அடைந்தவராய்த் தோன்றி கோகிலாம்பாளுக்கு நலங்கு வைக்கும் வைபவத்தை அதிவிமரிசையாக நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களுள் கோவிந்தபுரத்து ஜெமீந்தாரது புத்திரியான புஷ்பாவதியும், ஒரு பெருத்த பட்டத்து ராணிபோல சர்வாபரண பூஷிதையாக வந்திருந்து, கோகிலத்வனியோ, புல்லாங்குழலின் ஒலியோ, பாகோ, தேனோ, அமிர்தமோவெனத் தனது தீங்குரலை எடுத்துக் கர்னாமிருதமாக நலங்கு, லாலி, ஊஞ்சல், ஓடம், ஜாவளி

முதலிய பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தாள். இவளது பாடல் ஒவ்வொன்றும் முடிந்தவுடனே தங்க நாகசுரக்காரன் அதே பாட்டைத் தனது வாத்தியத்தில் இனிமையாக வாசித்து வாசித்து நிறுத்த, அவர்கள் இருவரும் தத்தம் சங்கீதமே அதிக இனிமையாக இருக்க வேண்டுமென நினைத்துப் போட்டிபோட முயல்பவர் போலத் தங்களது முழுத் திறமையையும் புலப்படுத்தி இன்பத்தையும், இனிமையையும் அள்ளி ஜிலீர் ஜிலீரென்று வீசிக் கொண்டிருந்தனர். புஷ்பாவதி அதுவரையில் எவரும் கேட்டிராத புதிய வர்ணமெட்டுகளில் பாடல்களை எடுத்துத் தனக்குச் சமமாக அந்த நாகசுரக்காரன் பாட முடியாமல் செய்து விட வேண்டுமென்ற எண்ணத்தோடு அதியற்புதமாகப் பாடியதைக் கேட்ட பெண்டிர் யாவரும் பிரமித்து வியப்படைந்து ஆனந்த பரவசம் எய்தி, அவள் ஊர்வசியோ, மேனகையோ, அல்லது கலைவாணியோ என்று தமக்குள் நிரம்பவும் புகழ்ச்சியாகப் பேசிக் கொண்டனர்.

அவ்வாறு அந்த மண்டபம், அப்ஸர ஸ்திரீகளுக்கும் கந்தருவ ஸ்திரீகளுக்கும் மத்தியில் ரம்பை, திலோத்தமை முதலிய தேவதாசிகள் தெய்வகீதம் பாட, மகாலக்ஷ்மி கொலுவீற்றிருந்த சுவர்க்கலோகம் போலத் தோன்ற, கோகிலாம்பாள் என்னும் மடவன்னத்திற்கு நலங்கு நிறைவேற, முடிவில் திருஷ்டி பரிகாரத்தின்பொருட்டு இளந்தோகையர் இருவர் ஆரத்தி எடுத்து அழகாகக் குனிந்து நின்று அதை மெதுவாகச் சுழற்றி ஒரு பாட்டைத் துவக்கிப் பாட ஆரம்பித்தனர். அப்போது வேறு எவ்வித ஓசையுமின்றி அந்த மண்டபம் நிசப்தமாக இருந்தது, அந்த மடந்தையர் பல்லவி பாடி, அநுபவல்லவியை எடுத்து மனதை ரஞ்சிகச் செய்து கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று ஒரு பெருத்த கூக்குரல் உண்டாயிற்று. அந்த மண்டபத்திற்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகைப் பந்தலிலிருந்த ஆண்பாலர் யாவரும் பெருத்த ஆரவாரம் செய்து ஓங்கிய குரலில் ஏதோ சண்டையிட்டுக் கொள்வதாகத் தெரிந்தது. அந்த ஆரவாரம் படிப்படியாகப் பரவி அதிகரித்துத் தோன்றியது. அதைக் கேட்ட சில ஸ்திரீகள், "அது என்ன ஆரவாரம்? கொட்டகைப் பந்தலில் பெருத்த அமர்க்களமாக இருக்கிறதே!" என்று வியப்போடு கூற, அதைக்கேட்ட மற்ற மகளிரது கவனமும் அந்தக்

கூக்குரலில் சென்றது. உடனே அவர்கள் எல்லாரும் வேடனது காலடியோசையைக் கேட்ட மான்களின் கூட்டம்போல அஞ்சி மருண்டு, வியப்பும், திகிலும், நடுக்கமும் அடைந்தவராய், இரண்டொரு நிமிஷநேரம் ஸ்தம்பித்து சித்திரப் பாவைகள் போல அசைவும், பேச்சு மூச்சும் அற்று அப்படி அப்படியே முட்டு முட்டாக உட்கார்ந்திருந்தனர். அடுத்த நிமிஷத்தில், "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டுக்கொண்டு யாரோ சிலர் அந்த மண்டபத்தை நோக்கி திடுதிடென்று ஓடிவந்த ஓசையுண்டாயிற்று. அந்த வார்த்தை ஒவ்வொருவரது மனதிலும் ஈட்டி போலப் பாய்ந்து சகிக்கவொண்ணாத திகிலையும் நடுக்கத்தையும் உண்டாக்கியது. யார் அப்படி ஓடி வருகிறார்களென்பதையும், என்ன காரணத்தினால் அப்படிக் கூவிக்கொண்டு ஓடி வருகிறார்கள் என்பதையும் அறிய மிகுந்த ஆவல் கொண்டவராய், வாசற்படியில் தங்களது விழியை வைத்தவராக எல்லோரும் இருந்தனர். அடுத்த நிமிஷத்தில், நாலைந்து வேலைக்காரர்கள் அந்த மண்டபத்திற்கு வந்து சேர்ந்து, நிரம்பவும் பதைப்பாக நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்துப் பூஞ்சோலையம்மாள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து, அந்த அம்மாளை நோக்கி, "அம்மா! பந்தலில் அமர்க்களம் நடக்கிறது. பெருத்த சண்டை; புதுமாப்பிள்ளை போய்விடுவார் போலிருக்கிறது" என்று கூறி வாய் மூடுமுன், ஏதோ சண்டை நடந்ததனால் புது மாப்பிள்ளையான கண்ணபிரான் இறந்து போகும் தருணத்தில் இருக்கிறார் என்று நினைத்துக் கொண்ட பெண்டீர் அனைவரும், "ஹா! புதுமாப்பிள்ளையா!" என்று அதிக வியப்போடு கேட்டுக்கொண்டு குபீரென்று எழுந்தனர்; மணையின்மீது உட்கார்ந்திருந்த கோகிலாம்பாளது செவியில் அந்த வார்த்தை விழுந்தது உருக்கிய நாராசத்தை வார்த்ததுபோல இருந்ததன்றி, அவளது உயிர் துடி துடித்துத் தள்ளாடியது. அவளும் சடக்கென்று எழுந்தாள். பூஞ்சோலையம்மாள், கற்பகவல்லியம்மாள் முதலியோரது மன நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை யூகித்துக்கொள்வதே எளிதன்றி விவரித்துச் சொல்வது சாத்தியமில்லா விஷயம். அங்கே கூடியிருந்த பெண்டீரில் ஒருத்தியும் மிகுதியில்லாமல் எல்லோரும் பெருத்த வியப்பும், திகைப்பும், குலை நடுக்கமும், திகிலும் அடைந்து, கொட்டகைப் பந்தலில்

என்ன விபரீதம் நடந்தது என்பதை அறிய ஆவல் கொண்டவளாய், விழுந்தடித்துக் கொண்டு அந்த மண்டபத்தின் பல வாயில்களிலும் புகுந்து வெளியில் ஓடினர். எண்ணிறந்த ஆண்பிள்ளைகள் கூடிய இடமான கொட்டகைப் பந்தலிற்குத் தாங்கள் போகக்கூடாது என்ற நாணமெல்லாம் பறந்து போய் விட்டது. பெண்டீர் அனைவரும் தங்களது தேகத்தை மறந்து பதறி ஓட்டமாக ஓடிக் கொட்டகைப் பந்தலிற்குள் நுழைந்தனர். அதன் வாசல் அத்தனை ஸ்திரீகளும் புகுவதற்கு இடம் கொடாமையால், பெரும்பாலோர் அந்தப் பந்தலின் பக்க அடைப்புகளிலிருந்து கீற்றைப் பிரித்துவிட்டு அதன் வழியாக உட்புறத்தில் நோக்கலாயினர். அவர்களது முகங்களெல்லாம் மிகுந்த கவலையையும், குழப்பத்தையும், திகைப்பையும் தோற்று வித்தன. அவ்வாறு வந்த ஒவ்வொருவரும் தத்தமக்கு அருகில் நின்ற ஆண்பிள்ளையைப் பார்த்து, என்ன கலகமென்றும், மாப்பிள்ளை எங்கே என்றும் ஆவலோடு விசாரித்தனர். கொட்டகைப் பந்தலிலிருந்த ஜனங்கள் எல்லோரும் எழுந்து திரண்டு கூட்டமாக நின்றனர். அந்தக் கூட்டத்தின் மத்தியில் நாலைந்து போலீஸ் ஜவான்களும், ஓர் இன்ஸ்பெக்டரும் நின்று கூட்டத்தில் மறைந்திருந்த யாரோ ஒருவருக்குக் கை விலங்கு மாட்டிப் பிடித்துக் கொண்டிருந்தனர். கலியாணத்திற்கு வந்திருந்த விருந்தினரில் நாலைந்து யௌவனப் புருஷர்கள் அந்தப் போலீசார் வெளியில் போவதை தடுத்து அவர்களைத் தாறுமாறாக வைது அடிக்கவும் குத்தவும் முயன்று கொண்டிருந்தனர். போலீசார் கத்தி துப்பாக்கி முதிய ஆயுதங்கள் எதுவும் கொண்டுவராமல் இருந்தனர். ஆதலால், அவர்கள் நயமாகப் பணிந்து பேசித் தங்களது நியாயத்தை எடுத்துச் சொல்லித் தங்களை அடிக்க வருவோரை எல்லாம் சாந்தப்படுத்த முயன்று கொண்டிருந்தனர். கும்பலின் பல பாகங்களிலிருந்தும் பெரும் பாலோர் ஆரவாரம் செய்து, "போலீஸ் நாய்களை விடாதே யுங்கள். நன்றாக மொத்தியனுப்புங்கள்" என்று கூறிய வார்த்தை கள் கேட்டன. வேறு பலர், "போலீசாரைத் தொடாதீர்கள். கையை நீட்டினால், அதிலிருந்து கெடுதல் வந்து சேரும். நியாயமாகவே கேளுங்கள்" என்று இடையில் தடுத்தனர். போலீசாருக்குச் சமீபத்தில் நின்று அவர்களை வைதவர்களுள்

இளையபுரம் ஜெமீந்தாரான சுந்தரமூர்த்தி முதலியாரே முக்கியஸ்தராகக் காணப்பட்டார்; சுந்தரமூர்த்தி முதலியார் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "எத்தனையோ ஆயிரம் ரூபாய் செலவு செய்து இந்த ஏற்பாடுகளையெல்லாம் நடத்துகி றோம். இவ்வளவும் உங்களால் நஷ்டமாய்ப் போய்விடும். அதோடு நல்ல யோக்கியமான மனிதர்களின் மேல் பொய்யான குற்றம் சுமத்தி, இத்தனை ஜனங்களுக்கு முன் அவரை அவமானப்படுத்தி அழைத்துக் கொண்டு போகிறீர்கள். இவ்வ ளவுக்கும் நாங்கள் உங்களைச் சும்மா விடுவோம் என்று எண்ண வேண்டாம். உங்களுடைய தாலியையெல்லாம் ஒட்ட அறுத்து விடுவோம். கடைசியில் நீங்கள் உங்களுடைய வேலையை இழந்து, வீட்டில் இருக்கும் சொத்துக்களை எல்லாம் இழந்து, ஜெயிலுக்குப் போய் செக்கு இழுக்கப் போகிறீர்கள். ஜாக்கிரதை. இன்றைய தினம் நிச்சயதாம்பூலம் மாற்றப் போகிறார்கள். இன்னும் சில நாட்களில் கலியாண முகூர்த்தம் நடக்கப் போகிறது. அதுவரையில் மாப்பிள்ளையை விட்டு வையுங்கள். உடனே எல்லா ஜனங்களும் போய்விடுவார்கள். அதன்பிறகு நீங்கள் வந்து இந்தப் பங்களாவின் எஜமானியம்மாளைக் கண்டு உங்களுடைய நியாயத்தைச் சொல்லிக்கொள்ளுங்கள். மாப் பிள்ளை குற்றம் செய்திருந்தாலும், இல்லாவிட்டாலும் நீங்கள் இந்தக் கலியாணத்தை நிறுத்த உங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை" என்று கூறிய வார்த்தைகளைக் கேட்ட பூஞ்சோலை யம்மாள், கற்பகவல்லியம்மாள், கோகிலாம்பாள் ஆகிய மூவரும் மட்டுக்கடங்கா வியப்பும், கலக்கமும் திகைப்பும் அடைந்து திக் பிரமை கொண்டு பதறிப்போய் குன்றி நின்றனர். மாப்பிள்ளை கண்ணபிரானைப் போலீசார் பிடித்துக் கொண்டு போக முயலுகிறார்கள் என்பது மாத்திரம் தெரிந்ததே அன்றி அவன் என்னவிதமான குற்றம் செய்தான் என்பது தெரியாமையால், அவர்கள் துடிதுடித்து நின்றனர். கண்ணபிரான் ஏதோ சண்டையில் அடிபட்டு இறக்கும் தருணத்தில் இருக்கிறானோ என்று முதலில சந்தேகங்கொண்டு எல்லாப் பெண்பிள்ளைகளும் பயந்து ஓடிவந்தார்கள் அல்லவா? அந்த முக்கியமான திகில் நீங்கி யது. கண்ணபிரான் அப்படிப்பட்ட தேக அபாயத்தில் இல்லை என்பதும், ஏதோ குற்றத்திற்காகப் போலீசார் அவனைப் பிடித்து

விலங்கிட்டுக் கொண்டு போகிறார்கள் என்பதும் தெரிந்தன. ஆகவே பெண்டீர் யாவரும் மற்ற எல்லா விவரத்தையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினால் தூண்டப்பட்ட வர்களாய், அங்கே நடந்த சம்பாஷணையை நன்றாக உற்றுக் கவனித்தனர். முன் சொல்லப்பட்டபடி சுந்தரமூர்த்தி முதலியார் போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கிப் பேசியவுடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை என்பவர் கம்பீரமாகவும், நிதானமாகவும் எல்லோரையும் நோக்கி, "உங்களுக்கெல்லாம் எவ்விதச் சம்பந்தமும் இல்லாத இந்த விஷயத்தில் நீங்கள் தலை யிட்டு இடைஞ்சல் செய்வீர்களானால், சர்க்கார் உத்தியோ கஸ்தார் சட்டப்படி தமது கடமையைச் செய்வதைத் தடுப்பதான பெரிய குற்றத்தைச் செய்தவர்கள் ஆகிவிடுவீர்கள். நீங்கள் நூற்றுக்கணக்கில் கும்பலாக இருக்கிறீர்கள். நாங்கள் நாலைந்து பேர்தானே இருக்கிறோம் என்று உங்கள் கைவரிசையைக் காட்டுகிறீர்கள் போலிருக்கிறது. செங்கோலுக்கு முன் எப்படிப் பட்டவருடைய கையும் ஓங்காது. நீங்கள் இப்போது எங்களை அடித்துக் கொன்று விட்டாலும், நாங்கள் இறந்து போகத் தயாராக இருக்கிறோம். ஆனால் இன்னும் கொஞ்ச நேரத்தில் பீரங்கிப் படைகளோடு சிப்பாயிகளை அழைத்துக்கொண்டு போலீஸ் கமிஷனர் இங்கே வந்து உங்களையெல்லாம் அமுக்கிக் கொண்டு போய் பழிக்குப்பழி வாங்கி விடுவார் என்பது மனசில் இருக்கட்டும். நாங்கள் எங்கள் வீட்டுக் காரியத்திற்காக இங்கே வரவில்லை. இந்த கண்ணபிரான் முதலியாரைப் பிடித்துக் கொண்டு போய்ச் சிறையில் வைக்கும்படி எங்களுக்கு வாரண்டு வந்திருக்கிறது. அதற்காக நாங்கள் இவரைப் பிடித்துக்கொண்டு போகிறோம். இவர் கலியாண சமயத்தில் இருக்கும் இந்த அசந்தர்ப்ப வேளையில் நாங்கள் வந்து பிடிப்பது எங்களுடைய மனசுக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இந்த அசந்தர்ப்பத்தைக் கவனித்து, வாரண்டை நிறைவேற்றாமல் விட்டுவிட எங்களுக்கு அதிகாரமில்லை. இவரைப் பிடிக்காமல் விட்டுவிட்டு நாங்கள் திரும்பிப் போனால், எங்களுடைய உத்தியோகம் போய்விடும். அது போனாலும் போகிறதென்றால், துரைத்தனக்காரர் இவரை விட்டு விட மாட்டார்கள். கண்டுபிடிக்காவிட்டால், வேறே யாராவது இன்ஸ்பெக்டர் நூறு

இருநூறு ஜவான்களோடு வந்து இவரை எப்படியும் பிடித்துக் கொண்டு போய்விடுவார். நீங்கள் தடுப்பதனால், எங்களுடைய உத்தியோகம் போவதுதான் மிச்சமேயன்றி, இவர் மிஞ்சப் போகிறதில்லை. இவர் இப்போது வராவிட்டால் இன்னும் கொஞ்ச நேரத்தில் எப்படியும் ஜெயிலுக்கு வந்துதான் தீர வேண்டும்; ஆகையால், நீங்கள் பதறுவதில் உபயோகமே இல்லை. தூர நில்லுங்கள். வந்து நெருக்க வேண்டாம்'' என்று நயமாகவும் பயமுறுத்தியும் பேசினார்.

அதைக்கேட்ட கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாரான சுந்தரமூர்த்தி முதலியார் மிகவும் ஆத்திரத்தோடு தாண்டிக் குதித்து போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி நிரம்பவும் அலட்சிய மாகவும், இழிவாகவும் பேசத் தொடங்கி, ''உம்முடைய போலீஸ் பெருமையெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஐயா! அதிகமாக அளக்க வேண்டாம். 'நான் ஒரு குற்றமும் செய் யவில்லையே; என்னை ஏன் பிடித்துக்கொண்டு போகிறீர்கள்' என்று இந்தக் கண்ணபிரான் முதலியார் கேட்டாரே. அதற்கு நீர் சரியான ஜெவாப்பு சொல்லாமல், இவரைத் தொட உமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இந்த வாரண்டு வேறே யாரோ ஒரு கண்ணபிரான் முதலியாருக்கு வந்திருக்க வேண்டுமேயன்றி இவருக்கு ஒரு நாளும் வந்திருக்காது. இவர் மனசால்கூட எவருக்கும் பொல்லாங்கு நினைக்காத ஸாதுவான மனிதர். நீங்கள் ஆள் மாறாட்டமாக இவரைப் பிடிக்கிறீர்கள். இதனால் நீங்கள் பெருத்த இடரில் மாட்டிக் கொள்ளப் போகிறீர்கள். கடைசியில் நீங்கள் பிரமாதமான கஷ்டத்துக்கும், பண நஷ்டத்துக்கும் ஈடு செய்ய நேரிடும். ஜாக்கிரதை. சரியான ஆளைப் பார்த்துப் பிடியுங்கள். உங்களுடைய அதிகாரப் பெருமை யைப் பற்றி ஒன்றரை மைல் நீளம் அளப்பதில் என்ன உப யோகம்? நீங்களெல்லாம் புலிகள்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். உண்மையில் குற்றம் செய்த ஆடுகளுடைய கண்ணுக்கு நீங்கள் புலிகளாகத் தோன்றலாம். குற்றமற்ற யோக்கியமான மனிதர்கள் உங்களை எலிகளுக்குச் சமமாகக்கூட மதிக்க மாட்டார்கள்'' என்று நிரம்பவும் முறுக்காகவும் அமர்த்தலாகவும் பேசினார்.

அதைக்கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் மிகுந்த கிலேசத்தோடு புன்னகை செய்தவராய், சுந்தரமூர்த்தி முதலியாரைப் பார்த்து, "எங்களை நீங்களெல்லோரும் புலிகளாக நினைத்துக் கொண்டாலும் சரி; எலிகளாக நினைத்துக் கொண்டாலும், அதைவிட இன்னமும் கேவலமான ஈ, கொசு முதலிய அற்ப ஜெந்துக்களாகவாவது, வேறே எப்படியாகவாவது எண்ணிக் கொள்ளலாம். நீங்கள் எங்களைத் தூஷித்துத் தடுப்பது, எய்தவன் இருக்க, அம்பை நொந்து கொள்வதுபோல் இருக்கிறது; நாங்கள் ஆள்மாறாட்டமாக இவரைப் பிடிக்கிறோம் என்று நீர் சொல்வது தவறு. இவருடைய பெயர் கண்ணபிரான் முதலியார். இவருடைய தாயின் பெயர் கற்பகவல்லியம்மாள். அவருடைய தகப்பனாரான அமிர்தலிங்க முதலியார் இறந்து போய்விட்டார். இவர்கள் இந்தப் பங்களாவுக்குப் பக்கத்திலுள்ள 515-வது லக்கமுள்ள வீட்டில் குடியிருக்கிறவர்கள். இவருக்கு ரெவினியு போர்டாபீஸில் குமாஸ்தா உத்தியோகம். இவருக்கு வயது இருபத்திரண்டு. இந்த விவரங்களுடையவரையே பிடிக்கும் படியாக வாரண்டு வந்திருக்கிறது. இந்த விவரங்கள் இவருக்குப் பொருத்தமானதாக இல்லாதிருந்தால், இவர் மாஜிஸ்டிரேட்டினிடத்தில் சொல்லி விடுதலைப் பெற்றுக் கொண்டு வந்து விடட்டும். எங்களுக்கு இவர்மேல் என்ன பகைமை இருக்கிறது? ஒன்றுமில்லை. இதை நாங்கள் வேண்டுமென்று செய்யவில்லை; தயவு செய்து எல்லோரும் நகர்ந்து கொஞ்சம் வழிவிடுங்கள். நாங்கள் இவரை அழைத்துக்கொண்டு போகிறோம்; நேரமாகிறது" என்று வற்புறுத்திக் கூற, அவருக்குத் துணையாக வந்திருந்த ஜெவான்கள் ஜனங்களை விலக்கி வழிசெய்யத் துவங்கினர். அந்தச் சமயத்தில் அந்தக் கும்பலில் இன்னொரு பக்கமாக வழி செய்து கொண்டு கற்பகவல்லியம்மாளும், பூஞ்சோலையம்மாளும், புஷ்பாவதியும் வேறு சுமார் இருபது ஸ்திரீகளும் போலீசார் நின்ற இடத்திற்கு வந்து சேர்ந்தனர். கலியாணக் கோலத்தோடு கைவிலங்கு பூட்டப்பெற்றவனாய் வெட்கித்தலைகுனிந்து குன்றிப் போயிருந்த கண்ணபிரானைக் காண, அவர்களது மனம் கொதித்தது. தேகம் துடி துடித்தது. முதலில் வந்த கற்பகவல்லியம்மாள் அடக்கிய கோபத்தோடு மரியாதையாக இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "ஏன் ஐயா! என்னுடைய பிள்ளைக்கு

விலங்குமாட்டி இப்படி அவமானப்படுத்துகிறீர்கள்? இவன் ஒரு பாவத்தையும் அறியாத பரம ஸாதுக் குழந்தையாயிற்றே! இவனை இப்படிப்பட்ட அக்கிரமக் கோலத்துக்கு ஆளாக்குவது தெய்வத்துக்குச் சம்மதமாகுமா? உங்களுக்கெல்லாம் பெண் டாட்டி பிள்ளைகள் ஒருத்தரும் இல்லையா? கலியாணக் கோலத் தோடு ஒரு சுபகாரியம் செய்து கொள்ளத் தயாராக இருக்கும் குழந்தையை நீங்கள் இப்படிப் பிடித்து விலங்கிட்டுக் கொண்டு போக அவன் அப்படி என்ன குற்றமய்யா செய்து விட்டான்? முதலில் விலங்கை எடுங்கள். திருடனுக்கும் கொலைகாரனுக்கும் அல்லவா விலங்கு போடுகிறது'' என்று அழுத்தமாகவும், துணிவாகவும் கூறினாள். அவளது பரிதாபகரமான தோற்றத்தைக் கண்டு அவள் கூறிய வார்த்தைகளைக் கேட்ட ஜனங்களெல் லாரும் பதறினார்கள். எல்லோரது மனதும் கண்களும் கலங்கின. கண்களில் கண்ணீர் துளித்து நின்றது. அந்தப் பெண்பிள்ளை களைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அத்தனை ஜனங்களும் கூடி அந்தப் போலீசார் ஐவரையும் கசக்கிச் சாறு பிழிந்து, அவ்விடத்திலேயே குழிவெட்டிப் புதைத்துவிடக் கூடியவர்களாய் அவர்களது நோக்கத்தைக் கவனித்தவர்களாய்ப் பதறி நின்றனர்.

அப்போது இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை ஜெகஜ் ஜோதியாய் அலங்கரித்துக் கொண்டிருந்த அந்த ஸ்திரீகளை எல்லாம் ஏறிட்டுப் பார்த்தார். பெரிய மனிதரது வீட்டு ஸ்திரீகளான அத்தனை பேரையும் பார்த்து மிகுந்த பிரமிப்பும், கலக்கமும், சஞ்சலமும், கிலேசமுமடைந்த இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் தயங்கினார். அந்தக் கும்பலில் நின்று கொண்டிருந்த புஷ்பாவதி முதலிய யௌவன மடந்தையராக அதிசுந்தர ரூபிணிகள் பலரைக் கண்டவுடன் அவரது மனம் மிகுந்த இரக்க மும், நெகிழ்வும் கொண்டு ஆனந்த பரவசம் அடைந்தது. தமக்கு அதனால் என்ன துன்பம் நேரிட்டாலும், நேரிடட்டும் என்று தாம் உடனே கண்ணபிரானை விட்டு விட்டால், அந்த யௌவன ஸ்திரீகளெல்லாரும் தம்மை நல்லவர் என்று கொண்டாடி தம்மீது பிரியம் கொள்வார்கள் என்ற எண்ணம் அவரது மனதில் தோன்றியது. பெண்ணென்றால் பேய் கூட இரங்குமானாலும், பெரும் பேயான போலீசார் மாத்திரம் இரங்கவே மாட்டார்க

ளென்பது எல்லோரும் அறிந்த விஷயமாதலால்; அவரது இரக்கமும், தடுமாற்றமும் அடுத்த நிமிஷத்தில் மறைந்து போய் விட்டன. அவர் உடனே கற்பகவல்லியம்மாளை நோக்கி, "அம்மா தாங்கள்தான் இவருடைய தாயார் போலிருக்கிறது. நாங்கள் இவரை எதற்காகப் பிடித்துக்கொண்டு போகிறோம் என்ற சங்கதி உங்களுக்கு நன்றாகத் தெரிந்ததாக இருக்க, ஒன்றை யும் அறியாதவர்போல நீங்களும் பேசுவது ஆச்சரியமாக இருக்கி றதே! நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து எவ்வளவு பிரமாதமாக தந்திரம் செய்திருக்கிறீர்கள்! அப்படி இருந்தும், சங்கதியெல்லாம் வெளியாகி விட்டது. திருட்டும் பரிஷ்காரமாக வெளியாகி விட்டது. இனி மறைப்பதில் உபயோகமில்லை. உங்களுடைய ரகசியமெல்லாம் இன்னும் சில தினங்களுக்குப் பிற்பாடு வெளியாகி இருந்தால், கண்ணபிரான் முதலியார் இந்த துபாஷ் முதலியாருடைய பெண்ணைக் கட்டிக் கொண்டிருப்பார். அது கெட்டுப் போய்விட்டது. அதுவும் தவிர, இந்த விருந்தாளி களுக்கு எல்லாம் அவரவர்களுக்குச் சேர வேண்டிய சாப்பாடு களும் கிடைத்திருக்கும். இவர்கள் எல்லாருக்கும் எங்கள் மேல் இவ்வளவு ஆத்திரம் உண்டாகியிருக்காது" என்று குறும்பாகவும், நிதானமாகவும், புன்சிரிப்போடும் பேசினார்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட கற்பகவல்லியம்மாள் கோபம் மூட்டப்பட்ட பெண் சிங்கம்போல நிமிர்ந்து போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி, "என்ன ஐயா! தாறுமாறாகப் பிதற்று கிறீர்? யாரைப் பார்த்து இப்படிப்பட்ட வார்த்தை சொல்லு கிறீர்? திருட்டாவது? வெளியாவதாவது? நாங்கள் இரண்டு பேரும் பிரமாதமான காரியத்தைச் செய்வதாவது? நீர் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லையே! எங்களுடைய காலடி மிதித்த மனிதர் திருடராக இருந்தால்கூட, அவர்களுடைய திருட்டு புத்தி உடனே மாறிப்போகுமே! அப்படியிருக்க, யார் பேரில்லையா திருட்டுக் குற்றம் சுமத்துகிறீர். பையன் காலையில் எழுந்தால் தெய்வமே என்று அவனுடைய காரியங்களைப் பார்த்துக்கொண்டு, பகல் முழுவதும் ஆபீஸ் வேலையைச் செய்துவிட்டு, சாயங்காலமானால் வீட்டில் வந்து முடங்கிக் கொள்கிறான். இவன் உங்கள் வீட்டில் வந்து எதை ஐயா திருடி விட்டான்?" என்று நிரம்பவும் ஆத்திரமாகவும் வீராவேசத்

தோடும் வினவ, அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், "சரி; எனக்கென்ன! இத்தனை ஜனங்களுக்கு எதிரில் உங்களுடைய ரகசியத்தை வெளியிட்டு உங்களையும் இவர்களையும் ஏன் அவமானப்படுத்த வேண்டும் என்று நான் இதுவரையில் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்; நீங்கள் என்னைச் சும்மா விடமாட்டேன் என்கிறீர்கள். சங்கதியைச் சொல்லுகிறேன் கேளுங்கள். சில தினங்களுக்கு முன் சைனா பஜார் தெருவில் ஒரு தபால் திருட்டு நடந்தது. அன்றையதினம் காலையில் அங்கே பட்டுவாடா செய்து கொண்டு போன தபாற்காரனை ஒரு வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போய், அவனைக் கட்டிப்போட்டுவிட்டு, அவனிடத்திலிருந்த 23,542 ரூபாயையும், பதினாயிரம் ரூபாய் மதிப்புள்ள இன்ஷியூர் சாமான்களையும் 24-ரிஜிஸ்டர் காகிதங்களையும் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். அந்தத் திருட்டை இந்தக் கண்ணபிரான் முதலியார் நடத்தினதாக அனுமானிக்கப்படுகிறது. அவ்வளவுதான் சங்கதி. இப்போது ஞாபகத்துக்கு வருகிறதா?" என்று கற்பகவல்லியம்மாளை நோக்கிக் கூற, அதைக் கேட்ட அந்த அம்மாள் படமெடுத்த நாகமெனச் சீறி, "ஆகா! என்ன சொன்னீர்? யாரைப் பார்த்து இப்படிப்பட்ட வார்த்தை சொன்னீர்? குட்டிச் சுவரில் தேள் கொட்ட வைக்கோல்போரில் நெறிகட்டியதாக கதையாக இருக்கிறதே நீர் சொல்வது! சைனா பஜாரில் திருட்டு நடந்தால் புரசைப்பாக்கத்தில் சிவனே என்று விழுந்து கிடக்கும் எங்களுக்கும் அதுக்கும் என்ன ஐயா சம்பந்தம்? இதெல்லாம் போலீசாருடைய கைவரிசையோ? ஆட்டைத் தூக்கி மாட்டில் போட்டும், மாட்டைத் தூக்கி ஆட்டில் போட்டு, உங்களுடைய பாழும் வயிற்றை இப்படியும் வளர்க்க வேண்டுமா? அந்தத் திருட்டுக்கு ஒரு கைதி சம்பாதிக்க வேண்டுமானால், ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று அதற்கு என் மகன்தானா உங்களுடைய கண்ணில் விழுந்தான்? இப்படிப்பட்ட அபாண்டமான அக்கிரமத்தில் இறங்கினால், நீங்கள் உங்களுடைய பெண்டு பிள்ளைகளுக்கு உதவாமல் போய்விடுவீர்கள் ஐயா. இவன் ஒவ்வொரு தினமும் காலை எட்டரை மணிக்கு ஸ்நானம் சாப்பாடு முதலியவற்றைத் துவக்கி ஒன்பதரை மணிக்கெல்லாம் வீட்டை விட்டுப் புறப்பட்டுக் கச்சேரிக்குப் போகிறவ

னல்லவா? அப்படி இருக்க நீர் சொல்லும் தினத்தின் காலையில் இவன் சைனா பஜாருக்கு எப்படி ஐயா வந்திருப்பான்? இப்படி மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடுவது என்றால், யாரை வேண்டுமானாலும் திருடனென்று பிடித்துக் கொள்ளலாம். ஏன் நீர்தான் அந்தத் திருட்டை நடத்தியிருக்கக் கூடாதா? நீர்தான் திருடிவிட்டு எங்கள் பேரில் அபாண்டமாகச் சுமத்துகிறீர் என்று நாங்கள் சொல்லுகிறோம்'' என்று கூறினாள்.

தபால் திருட்டு நடந்ததைப் பற்றியும், அதைக் கண்ண பிரானே நடத்தினான் என்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்ன தையும், அதற்குக் கற்பகவல்லியம்மாள் சொன்ன மறுமொழி யையும் கேட்ட பூஞ்சோலையம்மாள் முதலிய சகலமான ஜனங் களும் கரைகடந்த வியப்பும், பிரமிப்பும் அடைந்து, தங்களது செவிகளையே நம்பாமல் பேச்சுமூச்சற்று அப்படியே ஸ்தம்பித்து நின்றனர். கண்ணபிரான் அப்படிப்பட்ட திருட்டைக் கனவிலும் செய்யாதவன் என்று எல்லோர் மனதிலும் பட்டதனாலும் அந்தச் செய்தி மகா புதுமையானதாகவும், என்றும் கேட்காத விந் தையாகவும் இருந்தமையால் எல்லோரும் கதி கலங்கி, எவ்வித யூகமும் செய்யமாட்டாமல் நின்றனர். பூஞ்சோலையம்மாளது அறிவு பிறழ்ந்தது. சிரம் சுழன்றது; பூமியில் நிற்கிறோமோ, அல்லது, பறக்கிறோமோ என்று பூஞ்சோலையம்மாள் சந்தேகம் கொள்ளும்படி அவளது மூளை கிறுகிறென்று மயங்குகிறது. தனது மூத்த புதல்வியின் நிச்சயதார்த்தத்தையும், கலியாணத் தையும் அதி விமரிசையாக நடத்த வேண்டும் என்ற அவாவி னால், லக்ஷம் ரூபாய் வரையில் வாரியிறைத்து மகா சிரேஷ்ட மான அலங்காரங்களையும், முதல் தரமான ஏற்பாடுகளையும் செய்து பெருத்த பெருத்த தனிகர்களான எத்தனையோ ஜனங் களை வரவழைத்து, முதன் முதலாக சுபகாரியம் நடத்தத் தொடங்குகையில், அபசகுனமாக அந்தச் சம்பவம் நேர்ந்ததும், அதனால், தனது ஏற்பாடுகளெல்லாம் வியர்த்தமாக கலியாணம் நின்று போக நேர்ந்ததும், தாங்கள் தேடிப்பிடித்த மணமகன் அத்தனை ஜனங்களுக்கும் முன்னிலையில் திருடன் என்ற பழிக்கு ஆளாக நேர்ந்ததும், பூஞ்சோலையம்மாள் சகிக்கக்கூடிய வரம்பை மீறிய சங்கடமானதாகவும், தலை குனிவானதாகவும் நிரம்பவும் கேவலமானதாகவும் இருந்தமையால் எண்சாண்

உடம்பும் ஒரு சாணுக்குக் குன்றிப்போயிற்று. தான் அந்த இடத்திலேயே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விட்டுவிடலாம் என நினைவு அவளது மனதில் எழுந்து எழுந்து தலை காட்டியது. அவ்வாறு விவரிக்கவொண்ணாத பரம சங்கடமான நிலைமையில், பூஞ்சோலையம்மாள் தத்தளித்திருந்தாள்.

கடைசியாக கற்பகவல்லியம்மாள் இன்ஸ்பெக்டரை நோக்கி, "நீர்தான் அந்தத் திருட்டை நடத்தியிருக்கக் கூடாதா? நீர்தான் திருடிவிட்டு அபாண்டமாக எங்கள் பேரில் சுமத்துகிறீர் என்று நாங்கள் சொல்லுகிறோம்" என்று கூறியதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் நிரம்பவும் இறுமாப்பாக நகைத்து கற்பகவல்லியம்மாளை நோக்கி, "சரி அப்படியே நினைத்துக் கொள்ளுங்கள்; உங்களை யாராவது தடுக்க முடியுமா? ஆனால் நீங்கள் மனசுக்குள் நினைத்துக் கொண்டிருப்பதில் என்ன உபயோகம்? நீங்கள் போய் மாஜிஸ்டிரேட்டினிடத்தில் இப்படிச்சொல்லி, என் பேரில் வாரண்டு வாங்கிக் கொண்டு வந்து விலங்கு போட்டு என்னைப் பிடித்துக் கொண்டு போய் ஜெயிலில் அடையுங்கள். அப்போது இந்தக் கண்ணபிரான் முதலியாரை அழைத்துக்கொண்டு வந்து விடலாம். அப்படி நீங்கள் செய்கிறவரையில், நான் இவரை விடாமல் பிடித்துக்கொண்டுதான் போக வேண்டும். ஆனால் நீங்கள் நினைக்கிறபடி, இது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோட்ட சங்கதியல்ல. அப்படி சுத்தமாக சம்பந்தப்படாத மனிதரைப் பிடிக்க வாரண்டு கேட்டால், மாஜிஸ்டிரேட்டு கொடுக்க, சட்டம் இடம் கொடுக்கவில்லை. சரியானபடி தடயமாவது அநுமானமாவது, சாட்சியாவது இருந்தால் அன்றி, வாரண்டு பிறப்பிக்கப்பட மாட்டாது" என்றார்.

அதைக்கேட்ட கற்பகவல்லியம்மாள் முன்னிலும் அதிக ஆத்திரமும், பதைபதைப்பும் கட்டிலடங்கா ஆவேசமும் அடைந்தவளாய், "என்னுடைய பிள்ளையின்பேரில் வாரண்டு பிறப்பிக்க, என்ன அநுமானமய்யா ஏற்பட்டது? தெய்வமே என்று அடைத்துக்கொண்டு நாங்கள் எங்களுடைய வீட்டில் கிடக்கிறோம். இது பெருத்த இடியாக விழுந்து விட்டதே! ஏழைகளுடைய வயிறு எரியும்படி செய்வீர்களானால், நீங்கள் எல்லோரும் பெண்டாட்டி பிள்ளைகளோடு அதிக நாளைக்கு வாழ மாட்டீர்கள்" என்று தாறுமாறாகப் பேசத் தொடங்கினாள்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் தமது பொறுமையை இழந்தவராய், கற்பகவல்லியம்மாளை நோக்கிக் கோபமாகப் பேசத் தொடங்கி, ''சரியான அநுமானத்தின்மேலேதான் வாரண்டு பிறந்திருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். அது எவ் விதமான அநுமானம் என்று சாதாரணமாகக் கேட்டால், நான் விவரத்தைச் சொல்லக் கூடும்; அதை விட்டு உங்களுக்குத்தான் வாயிருக்கிறது என்று இப்படிக் கூறுகெட்ட வார்த்தைகளைப் பேசுவதில் என்ன உபயோகம்? அநியாயமாக உங்கள் பையனைக் கொண்டு போய்த் தண்டிப்பதில் எங்களுக்கு ஏதாவது லாபம் உண்டா? அல்லது, ஐந்தரை லக்ஷம் ஜனங்கள் உள்ள இவ்வளவு பெரிய பட்டணத்தில் உங்களுடைய பிள்ளையின் மேல் மாத்திரம் எங்களுக்கு என்ன விரோதம் ஏற்பட்டு விட்டது? இவரை நாங்கள் முதல் முதலாக இப்போதுதான் பார்க்கிறோம். இந்தத் திருட்டில் இவர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற சங்கதி எப்படியோ போலீஸ் கமிஷனர் துரைக்கு எட்டி, அவர் பிரசி டென்சி மாஜிஸ்டிரேட்டையும் அழைத்துக்கொண்டு இன்றைய தினம் காலை 7 மணிக்கு உங்களுடைய வீட்டுக்கு வந்து, பூட்டை உடைத்துக் கதவைத் திறந்து வீட்டைச் சோதனை போட்டுப் பார்த்தார்கள்; பெட்டிகளை எல்லாம் திறந்து பார்த்தார்கள். திருட்டுச் சாமான் எதுவும் காணப்படவில்லை. ஆனால் உங் களுடைய நடுவீட்டின் ஒரு மூலையில் தரையில் குழிவெட்டிப் புதிதாக மூடி மணல் பூசப்பட்டிருந்த ஓர் இடத்தைக் கண்ட கமிஷனர் சந்தேகப்பட்டு, அந்த இடத்தை வெட்டிப்பார்க்க, அதற்குள் ஒரு பெட்டி இருந்தது. அவர்கள் உடனே அதை எடுத்துத் திறந்து பார்த்தார்கள். திருட்டுப்போன பணத் தொகையைத் தவிர மற்ற இன்ஷியூர் உருப்படிகளும், ரிஜிஸ்டர் கடிதங்களும் பந்தோபஸ்தாக அந்தப் பெட்டிக்குள் வைக்கப் பட்டிருந்ததை அவர்கள் கண்டு, அந்தத் தடயங்களை எல்லாம் கச்சேரிக்குக் கொண்டு போனார்கள். உடனே மாஜிஸ்டிரேட்டு வாரண்டு பிறப்பித்து என்னிடத்தில் கொடுத்து இவரைப் பிடித்துக் கைது செய்யும்படி உத்தரவு பிறப்பித்தார். அதன்மேல் நான் வந்தேன். இப்போது சரிதானா? இனி எவ்வித ஆக்ஷே பணையும் சொல்ல மாட்டீர்களே'' என்று புரளியாகக் கூறினார். அந்த வரலாற்றைக் கேட்டு வந்த கண்ணபிரானது விழிகள்

கோவைப்பழமாகச் சிவந்து தீப்பொறி சிந்தின; அவன் கட்டுக்கடங்காத வீராவேசமும் பதைப்பும் கொண்டவனாய், ''ஆ! என்ன சொன்னீர்? இதெல்லாம் சுத்தக் கட்டுப்பாடு! எங்களுடைய வீட்டிலாவது பெட்டி புதைக்கப்பட்டிருப் பதாவது? நாங்கள் இந்த மூன்று தினங்களாக இல்லையென்பதைக் கண்டு, யாரோ பெட்டியை வைத்துப் புதைத்திருக்க வேண்டும்; அல்லது போலீசார் கட்டுப்பாடாகச் சொல்ல வேண்டும்; சுவாமி சாட்சியாகச் சொல்லுகிறேன்; இந்தத் திருட்டு நடந்ததே எனக்குத் தெரியாது'' என்றான். உடனே கற்பகவல்லியம்மாள் உக்கிர நரசிம்ம மூர்த்திபோல மாறி, ''ஐயோ! தெய்வமே! இப் படிப்பட்ட அபாண்டமான இடியை எங்கள் தலைமேல் கொண்டு வந்து வைக்கிறாயே? ஐயோ! நாங்கள் ஒரு பாவத்தையும் அறியோமே; இது யார் செய்த சதியோ தெரியவில்லையே! இது எந்தப் படுபாவி செய்த மோசமோ தெரியவில்லையே! எங்கள் வயிறு எரிகிற மாதிரி அவன் எரிந்து சாம்பலாய்த்தான் போய் விடுவான்'' என்று கூறி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கோவெனக் கதறியழுது புலம்பலானாள்.

உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர், ''சரி; நேரமாகிறது. உங்க ளுடைய நியாயத்தை எல்லாம் கேட்டு முடிவு செய்ய நியாயாதி பதி இருக்கிறார். அங்கே வந்து நீங்கள் சொல்லி உங்களுடைய பிள்ளை குற்றமற்றவராக இருந்தால் விடுவித்து அழைத்துக் கொண்டு வாருங்கள். என்னுடைய வேலை நீதி செலுத்துவதல்ல. மேலதிகாரியின் சொற்படி அவருடைய கட்டளையை நிறை வேற்ற வேண்டியவன் நான். அடே ஜெவான்களே நடவுங்கள்'' என்று அதட்டிக் கூற, உடனே ஜெவான்கள் கண்ணபிரானைக் கடத்திக் கொண்டு பந்தலை விட்டு நடக்கலாயினர்.

உடனே கற்பகவல்லியம்மாள் போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி, ''அப்படியானால் நாங்களே இவனைக் கொண்டு வந்து மாஜிஸ்டிரேட்டின் கச்சேரியில் ஆஜர் செய்கிறோம். நீங்கள் இவனுக்கு விலங்கு மாட்டி இப்படி அவமானப்படுத்தி அழைத் துப் போக வேண்டாம். இவன் சர்க்கார் உத்தியோகத்தில் உள்ள வன் அல்லவா; அப்படி இருக்க, இவன் ஓடிப்போவான் என்ற பயம் எதற்காக? அதுவும் தவிர, மடியில் கனமிருந்தால் அல்லவா

வழியில் பயம். இந்தக் குற்றத்தை நாங்கள் செய்யவில்லை. ஆகையால், எங்களுக்குக் கொஞ்சமும் பயமில்லை, எங்கே வேண்டுமானாலும் வந்துசொல்லிக் கொள்ளுகிறோம்'' என்று வற்புறுத்திக் கூறியவண்ணம், எதிரில் போய் நின்று கண்ண பிரானை விடாமல் இறுகப் பிடித்துக்கொண்டவளாய், "ஐயோ! என் மகனே! என் செல்வமே! ஈசுரவன் உன்னை நல்ல பதவியில் வைக்கப் போகிறான் என்று நினைத்து நினைத்து மன மகிழ்ந்தி ருந்தேனே! மகா லக்ஷ்மிக்குச் சமானமான இந்தக் குழந்தையும் நீயுமாக இருக்கும் மணக்கோலத்தைப் பார்த்து ஆனந்தம் அடைய எண்ணினேனே! நான் மகா பாவி! இந்தப் பரம விகாரமான கோலத்தைக் காணவா நாம் இங்கே வந்தோம்! ஐயோ தெய்வமே! இப்படியும் சதி செய்வாயா! ஆகா! என் வயிறு பற்றி எறிகிறதே!'' என்று கூறிப் பலவாறு பிரலாபித்துக் கல்லுங் கரைந்து உருகும்படி கதறியழத் தொடங்கவே அங்கிருந்த பூஞ்சோலையம்மாளும் மற்றப் பெண் பிள்ளைகள் யாவரும் அந்த மகா பரிதாபகரமான காட்சியைக் காணமாட் டாமல் தங்களது முகங்களை மூடிக்கொண்டு விம்மி விம்மித் திணறித் திணறி அழத் தொடங்கினர்.

அப்போது போலீஸ் இன்ஸ்பெக்டர் கற்பகவல்லியம் மாளைப் பார்த்து, ''அம்மா! நீங்கள்! இப்படிச் செய்வது சரியல்ல. எங்களுக்கு நேரமாகிறது. வாரண்டில் பிடித்த பிறகு; இவரை விட எங்களுக்கு அதிகாரமில்லை. நகர்ந்து கொள்ளுங் கள். தடுக்க வேண்டாம்'' என்று அதட்டிக் கூறியவண்ணம், கண்ணபிரானை வற்புறுத்தி அழைக்க, அப்பொழுது நாம் எங்கே இருக்கிறோம் என்பது தெரியாத நிலைமையில் குழம்பிக் கலங்கிப் பதறி அவமானத்தினால் குன்றிப் போய் நின்ற கண்ண பிரான் தனது தாயைப் பார்த்து, ''அம்மா! நீங்கள் பயப்பட வேண்டாம்; நகர்ந்து கொள்ளுங்கள். இவர்கள் என்னைக் கொண்டு போவதனாலேயே எனக்கு உடனே தண்டனை கிடைத்து விடப்போகிறதில்லை. நாம் எவ்விதக் குற்றமும் செய்ய வில்லை, நமக்கு சுவாமி எப்படியும் உதவி செய்வார். இத்தனை ஜனங்களுக்கு முன் எனக்கு அவமானம் வந்துவிட்டது. இனி இவர்கள் விலங்கை எடுத்து விடுவதனாலேயே, இந்த அவமானம் நீங்கி விடப்போகிறதில்லை. இவர் என்னை எப்படியாவது

கொண்டு போகட்டும். நீங்கள் இந்த வீட்டு அம்மாளிடத்திலும், அவர்களுடைய பெண்களிடத்திலும் இந்த விஷயத்திலாவது, வேறே எந்த விஷயத்திலாவது நான் பிறந்தது முதல் இது வரையில் ஒரு குற்றமும் செய்தே அறியாதவன் என்ற உறுதியைக் கூறுவதோடு, நம்மால் இவர்களுக்கு ஏற்பட்ட அவமானம் தெய்வச் செயலாக ஏற்பட்டதேயன்றி, நம்முடைய நடத்தை யினால் ஏற்பட்டதல்ல என்பதையும் சொல்லித் தேற்றுங்கள். நான் போய்விட்டு அதி சீக்கிரத்தில் திரும்பி வந்து விடுகிறேன். என்னைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்படவே தேவையில்லை'' என்று கூறித் தனது தாயைச் சமாதானப்படுத்த, கற்பகவல்லியம்மாள் அதற்கு இணங்காமல் அவனைப் பிடித்துப் பின்னிற்கு இழுக்க, போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஜெவான்களும் சிறிதும் பொறுமையின்றி முகத்தைக் காட்டிக் கடிந்து கண்ண பிரானை இழுக்கலாயினர்.

அந்தச் சமயத்தில் பெண்மக்களிருந்த கும்பலிற்குள் வெட்கித் தலைகுனிந்து நிலைகலங்கி நிற்க மாட்டாமல் தத்தளித்து வேறொரு பெண்ணின் தோளைப் பிடித்துக் கொண்டு நின்ற கோகிலாம்பாள் தனது தாயை நோக்கி, "அம்மா! நம்முடைய பெட்டி வண்டியிலாவது வைத்து அழைத்துப் போகும்படி சொல்லலாகாதா?'' என்று நிரம்பவும் தணிவான குரலில் கூறு வதற்குள், அவளது வாய் பன்முறை குழறிப் போய்விட்டது. உடனே பூஞ்சோலையம்மாள் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "ஐயா கொஞ்சம் பொறுங்கள்; இவரை இப்படி நடத்தி அழைத்துக் கொண்டு போக வேண்டாம். எங்களுடைய பெட்டி வண் டியைக் கொண்டுவரச் செய்கிறேன். அதற்குள் உட்கார வைத்து அழைத்துக் கொண்டு போங்கள். அது உங்களால் ஆகக் கூடிய காரியந்தானே, அதையாவது செய்யலாகாதா?'' என்று கூறி வேண்டிக் கொண்டவளாய், ஜனக்கும்பலை நோக்கி, "யாராவது போய்ப் பெட்டி வண்டியைக் கொண்டுவரச் சொல்லுங்கள்'' என்றாள்.

அதைக்கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர், "நாங்களே ஒரு வண்டி கொண்டு வந்திருக்கிறோம். அது பங்களாவின் வாசலில் நிற்கிறது. அவரை அதில் வைத்துக் கொண்டு போகிறோம்.

அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஐயா! கண்ண பிரான் முதலியாரே! நடவும்; நேரமாகிறது'' என்று கூற, கண்ண பிரான் நடக்கலானான். அந்தச் சமயத்தில், "ஐயோ! கோகிலாம் பாளைப் பாருங்கள்! கோகிலாம்பாளைப் பாருங்கள்!'' என்று சிலர் கூச்சலிட, பூஞ்சோலையம்மாள், கற்பகவல்லியம்மாள் முதலிய பெண் மக்கள் அனைவரும் திடுக்கிட்டுப் பின்புறம் திரும்பிப் பார்க்க, அதற்குள் கோகிலாம்பாள் மயங்கிக் கீழே சாய்ந்து தரையில் விழுந்து விட்டாள். பக்கத்தில் இருந்த ஸ்திரீ களில் நால்வர் குனிந்து அந்தப் பெண்மணியைத் தூக்கியெடுக்க, அவள் முற்றிலும் ஸ்மரணை தப்பிப் போய் பிணம்போல மாறிவிட்டாள். அவளது முகம் வெளுத்து விகாரமடைந்து பிரேதக்களை கொண்டு விட்டது. அந்த விபரீதத்தைக் கண்ட ஜனங்கள் எல்லோரும் கோகிலாம்பாள் இறந்து போயிருப்பார் களோ என்று சந்தேகித்துப் பதறிக் கூக்குரலிட்டனர். பூஞ் சோலையம்மாள், "ஐயோ அம்மா! மோசம் செய்து விட்டாயா! எங்களுடைய வாயிலெல்லாம் மண்ணைப் போட்டு விட் டாயா!'' என்று ஓலமிட்டு அலறிய வண்ணம் ஓடிவந்து நெருங்கி னாள். சிலர், "தண்ணீர் தண்ணீர்'' என்றனர். சிலர் "டாக்டரை அழையுங்கள்'' என்றனர். சிலர் "ஒரு கட்டிலை எடுத்துக் கொண்டு வாருங்கள், அதில் வைத்து உள்ளே கொண்டு போகலாம்'' என்றனர். சிலர் "விசிறி விசிறி'' என்று கூவினர். வேறு சிலர், "எல்லோரும் நெருங்கிக் காற்றை மறைக்க வேண்டாம், விலகுங்கள். குளிர்காற்று முகத்தில் வீசட்டும்'' என்று அதட்டிக் கூறி ஜனங்களையெல்லாம் அப்பால் போகச் செய்து, கோகிலாம்பாளின் மீது காற்று வீசும்படி செய்தனர்.

அவ்வாறு எதிர்பாரா வகையில் உண்டான விபரீதக் கூக் குரல்களைக் கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்க்க, சர்வாபரண பூஷிதையாக மணக்கோலத்தோடு, கண் கொள்ளா வனப்பைச் சுமந்து, அழகின் திரளாய், ஜெகஜ்ஜோதி யாகக் கீழே விழுந்து மயங்கிக் கிடந்த கலியாணப் பெண் அவருக்குத் தென்படவே, அவர் மயங்கித் தயங்கி ஸ்தம்பித்து வைத்த விழியை வாங்காமல், அப்படியே சிறிது நேரம் நின்று விட்டார். அதற்குள் போலீஸ் ஜெவான்கள் கண்ணபிரானை நடத்திக்கெண்டு, 10 - 15 கஜ தூரத்திற்கு அப்பால் போய்விட்ட

மையாலும், கண்ணபிரான் தனக்கு ஏற்பட்ட அவமானத்தினால் குன்றிக் குழம்பி, தூக்கத்தில் நடப்பவன் போல, உலகத்தையும், தன்னையும் மறந்து, நடைப்பிணம் போலச் சென்று கொண்டி ருந்தான். ஆதலால், கோகிலாம்பாளுக்கு நேர்ந்த விபத்தை உணராதவனாய் ஜெவான்களோடு துயரமே வடிவாக நடந்து கொண்டிருந்தான். ஜனக்கூட்டத்திலிருந்த பெண்டிர் கோகிலாம் பாளைத் தூக்கி எடுத்துக் கொண்டு பங்களாவிற்குள் போகிற வரையில் பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை அதற்கு மேல் தாம் அவ்விடத்தில் நின்றால் ஜனங்கள் ஏதேனும் வித்தியாசமாக நினைத்துக் கொண்டு தம்மை தூஷிப் பார்களோ என்ற நினைவும் அச்சமும் கொண்டவராய் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு பங்களாவின் வாசலை நோக்கி நடக்கலானார். அவரது மனம் கோகிலாம்பாளது அதி யற்புத வனப்பிலேயே ஈடுபட்டு அந்தப் பங்களாவிற்குள்ளேயே நின்று விட்டது. அவர் தமது மனத்தையும், நினைவையும், உயிரையும் அவ்விடத்திலேயே பின் தங்கவிட்டு, வெற்று உடம் போடு, நடைபிணம் போல நடந்து, அடிக்கடி நெடுமூச்செறிந் தவராய், ராஜபாட்டைக்குப் போய்ச் சேர்ந்தார். ஏதோ ஒரு விதமான சஞ்சலமும், வேதனையும் அவரது மனத்தை உலப்பிக் கொண்டிருந்தன. கோகிலாம்பாளது தேஜோமயமான குளிர்ந்த வடிவம் அவரது அகக்கண்ணில் பதிந்து போய், மாறாமல் உறுதி யாக நின்று போனது. ஆகையால், அவர் இந்த இன்பகரமான எண்ணத்தில் ஆழ்ந்து தம்மையும் உலகையும் மறந்தவராய், சித்தப்பிரமை கொண்டவராக மாறிப் போனார். அவ்வாறு புதிய மனிதராக மாறுபட்டுச் சென்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் பராங்குசம்பிள்ளை ராஜபாட்டைக்குப் போய்ச் சேர்ந்தபோது, அவ்விடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வண்டியில் ஜெவான்கள் கண்ணபிரானை உட்கார வைத்திருந்தனர். வண்டிக்குப் பக்கத்தில் ஒரு மரத்தின் அடிக்கட்டையில் சார்த்தி வைக்கப்பட் டிருந்த பைசைகில் வண்டியை ஒரு ஜெவான் கொணர்ந்து இன்ஸ்பெக்டருக்கு எதிரில் நிறுத்த, அவர் அதன் மேல் உட்கார்ந்து கொண்டு செல்ல, ஜெவான்கள் வண்டியிலேறிக் கண்ணபிரானுக்கு முன்னும் பின்னுமாக உட்கார்ந்து கொண் டனர். உடனே வண்டிகள் இரண்டும் புறப்பட்டு விரைவாகச் சென்றன.

# 6 — வது அதிகாரம்

# மோசம் நாசம் கம்பளி வேஷம்

"அன்றைய பகற்பொழுது கழிய, மாலை நேரம் வந்தது; சென்னை சைனாபஜார் தெருவில் **பச்சையப்பன்** கலாசாலைக்கு எதிரிலுள்ள போலீஸ் ஸ்டேஷனிற்குள் மறைவாக இருந்த ஒரு சிறைச்சாலைக்குள் கண்ணபிரான் துயரமே வடிவாக நின்று கொண்டிருந்தான். அந்த அறையின் மூன்று பக்கங்களிலும் ஜன்னல் முதலிய எவ்விதத் திறப்பும் காணப்படவில்லை. அதன் முற்புறத்தில் தடிப்பான இரும்புக் கம்பிகளாலான கதவுகளால் அந்த சிறைச்சாலை நிரம்பவும் பத்திரப்படுத்தப் பட்டிருந்தது. அந்த அறைக்கு வெளியிலிருந்த தாழ்வாரத்தில் தொங்க விடப்பட்டிருந்த ஆறு பட்டை லாந்தரொன்று மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சம், கண்ணபிரான் இருந்த சிறைச் சாலைக்குள் அரைப்பாகம் வரையில் சென்றமையால், அதற்கு அப்பால் இருளாக இருந்தது. கண்ணபிரான் கலியாணக் கோலத்தோடு அழகே வடிவாக இருந்த நிலைமையில் பிடிபட்டவன், அதே அலங்காரத்தோடு சிறைச்சாலையில் அடை பட்டிருந்தான் ஆகையால், அவனது தோற்றம் புதிதாகக் கூண்டில் அடைக்கப்பட்ட பஞ்சவர்ணக்கிளியின் தோற்றம்போல இருந்ததன்றி, காண் போரது கண்களையும் மனத்தையும் கலக்கி இளக்கி தனக்கு நேரிட்ட எதிர்பாராத அவகேட்டையும், சகிக்க இயலாத அவமானத்தையும் கருதி, சொற்களினால் விவரிக்கக் கூடாத பரம சங்கட நிலைமையில் இருந்தான். ஆகையால், அன்று காலையில் அங்கே வந்தபிறகு அவன் ஆகாரத்தையாவது, தண்ணீரையாவது மனதாலும் நினைக்காமல் வாடி வதங்கி காம்பு ஒடிபட்ட தாமரை மலர் போலச் சோர்ந்து தளர்ந்து துவண்டு தள்ளாடிக் குழைந்து குழைந்து நின்றான். அவனது மனம் முழுதும் ராஜரத்தின முதலியாரது பங்களாவில் இருந்ததேயன்றி, அந்த இடத்தில் அவனது வெற்று உடம்பே நின்றது என்னலாம்படி அவன்

தனது தேக பாதைகளையே உணராமல், விவரிக்க சாத்தியமற்ற மனோபாதையினால் உலப்பப்பட்டவனாக இருந்தான். தன்மீது திடீரென்று அபாண்டமாக ஏற்பட்ட அந்தப் பெரும் பழியானது தனக்கும் ராஜரத்தின முதலியாரது வீட்டாருக்கும் அறிமுகமும், நட்பும் ஏற்படுவதற்கு முன்னால் உண்டாகி இருக்கக் கூடாதா என்றும், அப்படியில்லாமல், தனக்குக் கலியாணமாகும் சமயத்தில், ஆயிரக்கணக்கில் கூடியிருந்த ஜனங்களின் எதிரில் தனக்கு அப்படிப்பட்ட அடாப்பழி நேர்ந்ததே என்றும் நினைத்து நினைத்துக் கண்ணபிரான் மட்டிலடங்கா மனோவேதனையுற்று உருகி, உயிரை விட்டுக் கொண்டிருந்தான். அத்தனை ஜனங்களுக்கு முன் தனக்கு ஏற்பட்ட அபாரமான அவமானத்தைக் கோகிலாம்பாள் கேட்டுச் சகித்து உயிர் சுமந்து இருப்பாளோ என்றும், அவள் தன்னைப் பற்றி எவ்விதமான அபிப்பிராயமும் அருவருப்பும் கொண்டிருப்பாளோ என்றும் நினைக்க நினைக்க, அவனது எண்சாண் உடம்பும் ஒருசாணாகக் குன்றி மேனி குலைந்தது.

முதல் நாளைய மாலையில் தானும் கோகிலாம்பாளும் பூஞ்சோலையில் தனித்திருந்து நிகரற்ற பேரின்ப சுகம் அநுபவித்திருந்த பிறகு தனக்கும் அந்த மடந்தைக்கும் அதி சீக்கிரத்தில் கலியாணம் முதலிய சடங்குகள் நிறைவேறி விடும் என்றும், உடனே தாங்கள் இருவரும் இந்திரன் இந்திராணி போலவும், ரதி மன்மதன் போலவும் கூடிக் கலந்து இன்புற்று சகல செல்வ போகங்களோடு அமோகமாக வாழலாம் என்றும், தான் எண்ணிய எண்ணத்தில் கடவுள் மண்ணைப் போட்டு, தான் கட்டியிருந்த மானஸிகக் கோட்டையை ஒரே நொடியில் இடித்தெறிந்து விட்டதை நினைக்க, நினைக்க, அவனது மனதில் பெருத்த ஏமாற்றமும், துயரமும் எழுந்து கப்பிக் கொண்டன. அவனுக்குத் தனது வாழ்க்கையும், மனதும், உலகமும் பாழ்த்து இருளடைந்து தோன்றின. உலகிலுள்ள பிற மனிதரைக் காட்டிலும் தான் மகா அதிர்ஷ்டசாலியென்று அவன் அது வரையில் நினைத்துப் பூரிப்பும், தற்பெருமையையும் கொண்டு மகிழ்வடைந்து இருந்ததற்கு மாறாக, அவன் இப்போது தன்னைக் காட்டிலும் கேவலமான துர்ப்பாக்கியனும், பரம தரித்திரனும் இந்த உலகத்திலேயே இருக்க மாட்டான் என்ற

உறுதியைக் கொண்டவனாய்த் தன்னைத்தானே வெறுத்து வைது கொண்டான். பரம ஏழையாகிய தான் தனது நிலைமைக்குத் தகுந்த இடத்தை நாடாமல், பெருத்த கோடீசுவரன் ஆகவும், சகலமான நற்குணங்களும், சுந்தரமும் வாய்ந்த மங்கையர்க் கரசியான ஒரு பெண்ணை மணக்கவும் விரும்பியது தவறு என்பதும், தனக்கு அதனால், தனது பூர்விகமான நிலைமையும், கண்ணியமும், உத்தியோகமும் போய், எல்லோராலும் பழிக்கத் தகுந்த மகா இழிவான நிலைமை வந்து வாய்த்தது என்பதும் அவனது மனத்தில் உறைத்து வாள் கொண்டு அறுப்பதுபோல அறுத்துக் கொண்டிருந்தன. தான் பரம தரித்திரனாகவே இருக்கப் பிறந்தவன் என்பதும், தான் கோகிலாம்பாளிற்கு அருகில் நெருங்கும்போதே அவளுக்குப் பலவகையான இடர்களும், அவமானங்களும் சம்பவிக்கின்றன என்பதும் நிச்சயமாக அவனது மனதில் பட்டன. ஒவ்வொரு நாளும் வழக்கமாகக் கடற் கரைக்குப் போய்க் காற்று வாங்கி விட்டு வருகிறவளான அந்தப் பெண்மணியின் சாரட்டுக்கருகில் தான் சென்ற காரணத்தி னாலேயே அவளுக்கு மோட்டார் வண்டியினால் பிராண அபாயமான விபத்து நேர்ந்தது என அவனது மனம் இடித்து இடித்துக் கூறியது. அதுபோலவே, பூஞ்சோலையில் தனியாக உட்கார்ந்திருந்த அந்த நங்கையினிடத்தில் தான் அணுகிச் சென்றதனாலேயே அவளுக்கு நாகப்பாம்பின் விபத்தும், அவளது தங்கையான செளந்தரவல்லியினால் இழிவும், அவமானமும் நேர்ந்தன என்றும், கடைசியில் அவள் தனக்கு மனையாட்டி யாவதற்குப் பூர்வ பீடிகையாக நலங்கு வைக்கப்படும் மங்கள கரமான கோலத்தில் இருக்கையில், தன்னையே போலீசார் அபாண்டமான பழிக்கு ஆளாக்கிப் பிடித்து வந்ததனால், அவளது நிலைமை விவரிக்க இயலாத துன்பமும், அவமானமும் நிறைந்ததாக மாறிப்போனது என்றும் கண்ணபிரான் எண்ணி எண்ணி ஏங்கிப் பாகாய் உருகி ஒடிக்கொண்டிருந்தான். தனக்கும், கோகிலாம்பாளுக்கும் நட்பு ஏற்படுவதற்குள் குறுக் கிட்ட அந்த நான்கு இடையூறுகளும், நான்கு பெருத்த அபசகு னங்கள் போலவும், அந்த இடம் தனக்குக் கிடைக்கக் கூடிய தல்லவென்று தடுப்பது போலவும் விளங்கின. அத்தனை இடர் களுக்கும் வேதனைகளுக்கும் இடையில் ஒரே ஒரு விஷயம்

மாத்திரம் அவனது மனத்தில் மிகுந்த ஆறுதலையும், நம்பிக்கை யையும் உண்டாக்கிக் கொண்டிருந்தது. தன்னிடத்தில் கோகி லாம்பாள் கரை கடந்த காதலும், பிரேமையும் கொண்டிருக் கிறாள் என்ற உறுதியும், அவள் தனது உயிர் போவதானாலும் இனி தன்னையன்றி வேறே எவனையும் கணவனாக ஏற்றுக் கொள்ள மாட்டாள் என்ற உறுதியும் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கின. அவ்வாறு, தன்னை அபாரமாக மதித்துத் தன் மீது காதல் கொண்டுள்ள மங்கையின் மனம், தனக்கு நேரிட் டிருக்கும் அவமானத்தைக் கண்ட பிறகும், இடிந்து போகாமல், முன்போல் உறுதியாக இருக்குமோ என்ற ஐயம் எழுந்து ஓயாமல் வதைத்துக் கொண்டிருந்தது. தான் உண்மையிலேயே அந்தத் திருட்டுக் குற்றத்தைச் செய்தவன் என்று அந்த மடந்தை நினைத்து விடுவாளோ என்ற அச்சமும், கலவரமும் அவனது மனதில் எழுந்து வதைத்து வந்தது. கோகிலாம்பாள், பூஞ் சோலையம்மாள், மற்ற ஜனங்கள் ஆகிய எல்லோருக்கும் இடை யிலிருக்கும் தனது தாய் எவ்வித அவமானத்திற்கும், துன்பங் களிற்கும், இழிவிற்கும் ஆளாக நேருகிறதோ என்ற கவலையே பெருங்கவலையாக நிறைந்து வதைத்துக் கொண்டிருந்தது. தனது தாய் நிரம்பவும் மானமுடையவள் ஆதலால், அப்படிப்பட்ட பெருத்த இடியைத் தாங்க மாட்டாமல், அவள் ஒருகால் தனது உயிருக்கு ஏதேனும் தீங்கிழைத்துக் கொள்வாளோ என்ற நினைவும் ஓயாமல் சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்தது.

அப்படிப்பட்ட மகா பரிதாபகரமான நிலைமையில் இருந்த கண்ணபிரான் அந்த அற்புதமான திருட்டைப் பற்றியும்; அது தன்மீது சுமத்தப்பட்டிருப்பதைப் பற்றியும், நினைத்து நினைத்து அடக்க மாட்டாத வியப்பும் திகைப்பும் பிரமிப்பும் அடைந்து, அது யாரால் இழைக்கப்பெற்ற சதியாக இருக்கும் என்று யூகித்துப் பார்த்ததெல்லாம் எவ்விதப் பலனையும் கொடுக்காமல் போய்விட்டது. வேண்டுமென்று அந்தப் பழியைத் தன்மீது சுமத் துவதற்கு அவ்வளவு அதிகமான பகைமையைக் கொண்ட விரோதி ஒருவனாகிலும் தனக்கு இல்லை என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. ஆகவே, போலீசார் அந்தக் குற்றத்தை யாராகிலும் ஒருவன் மீது சுமத்தும் பொருட்டு, தன்னைப் பிடித் திருக்க வேண்டும் என்ற உறுதியே தோன்றிக் கொண்டிருந்தது.

அப்படி இருந்தாலும், திருடப்பட்ட சொத்துக்கள் தனது வீட்டிற்கு யாரால் எப்போது கொணர்ந்து புதைத்து வைக்கப் பட்டிருக்கும் என்பது அவனுக்கு விந்தையாகத் தோன்றியது. கச்சேரியில் நடக்கப்போகும் விசாரணையில் போலீசார் எந்தவிதமான சாட்சியங்களைக் கொணர்வார்களோ என்றும், அந்த வழக்கு எந்தவிதமாக முடியுமோ என்றும் அது முடிய எவ்வளவு காலம் ஆகுமோ என்றும் அவன் பெரிதும் கவலை கொண்டவனாகத் தத்தளித்திருந்தான். தெய்வச் செயலாகத் தான் தப்பி வந்து விட்டால், எப்படியும் தான் கோகிலாம்பாளை மணந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருந்து வந்தது; ஆனால் தனது கெட்ட காலத்தின் பலனாக தான் தண்டனை அடைய நேர்ந்தால், அதன் பிறகு, தான் அவளை அடைவது சிறிதும் சாத்தியமில்லாத விஷயம் என்பது தெளிவாக விளங் கியது. இருந்தாலும் தான் குற்றமற்றவன் என்பதை அவளுக்கு எப்படி அறிவுறுத்துகிறது என்ற கவலையும், தான் இனி அவளைக் காணும் அதிர்ஷ்டம் தனக்கு நேரப் போகிறதா என்ற கவலையும், அப்படி நேர்ந்தாலும், அவளது முகத்தில் தான் எப்படி விழித்துப் பேசுகிறது என்ற கவலையும் எழுந்தெழுந்து அவனை ஓயாமல் வதைத்துக் கொண்டிருந்தன. ஆகவே, அவன் சிறிது நேரம் உட்காருவதும், சிறிது நேரம் இரும்புக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நிற்பதும், சிறிது நேரம் அங்கும் இங்கும் உலாவுவதுமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான். அவனது கண்களிலிருந்து கண்ணீர் பெருகி தாரை தாரையாக வழிந்து கொண்டேயிருந்தது. அவ்வாறு அவன் விசனமே வடி வாக உருகி ஒய்ந்து கிடந்த சமயத்தில் இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை அங்கே வந்தார்.

அவருக்குச் சுமார் முப்பது வயதிருக்கலாம். அவர் கருத்த மேனியும், பயங்கரமான முகம், மகா அழுத்தமும் ஆழமுமான மனதும் உடையவர். அவரது மனத்தின் உண்மையான தன்மை எப்படிப்பட்டது என்பது அவரைப் படைத்த ஈசுவரனாலும், அறியக் கூடாததாக இருந்தது. திருடனுக்கும் கன்னக்கோல் சார்த்த அந்தரங்கமான ஓர் இடமுண்டு என்று ஜனங்கள் சொல் லுவார்கள். ஆனால் போலீஸ் இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை இந்த உலகத்தில் ஒரு மனிதரையாவது நம்புவதே

கிடையாது. அவரது வாயிலிருந்து வரும் வார்த்தைகளில் மருந்திற்குக் கூட நிஜமான வார்த்தைகளே அகப்படுவது அரிது. எப்படிப்பட்ட பெரிய குற்றமாக இருந்தாலும் அதைக் கண்டு பிடிப்பதற்குப் பராங்குசம் பிள்ளைதான் கமிஷனரால் பிரத்தியேகமாக நியமிக்கப்படுவார். அதற்கு பராங்குசம் பிள்ளை எப்படியாகிலும் குற்றவாளி ஒருவனைத் தயாரித்து, சாட்சிகளை ஜோடித்து, அவன் எப்படியும் நியாயஸ்தலத்தில் தண்டனை அடையும்படி செய்து விடுவார். பிறரது கஷ்ட நிஷ்டூரங்கள் எப்படி இருக்குமோவென்பதை அவர் சிறிதும் நினைத்தறியார். அவரது மனத்திலிருந்து வந்த பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசைகள் அபரிமிதமாகவும், அபாரமாகவும் இருந்தன. ஆனாலும் அவர் தமது பரிசீலனைக்கு வரும் ஒவ்வொரு வழக்கிலும் தமது மேற்படி ஆசைகளைப் பரிபூரணமாகத் தீர்த்துக் கொண்டார். ஆனாலும், அதனால் அந்த வாதியிடத்திலாகிலும், குற்றவாளியிடத்திலாகிலும், இரக்கமாவது அபிமானமாவது காட்டுகிறதும் இல்லை. எவருக்கும் சொற்பமாவது அநுகூலம் செய்கிறதும் இல்லை. அவர் எவரிடத்தில் எப்போதும் சிரித்த முகத்தோடும், அன்பாகவும், குழைவாகவும் பேசுவார். அவர் யாருக்காகிலும் பெருத்த தீங்கு செய்ய நினைத்திருந்தால், மற்றவர்களிடத்தில் காட்டுவதை விடப் பதின்மடங்கு அதிகமான அன்பும், அபிமானமும் அவனிடத்தில் காட்டிப் பேசி, அவன் கடைசி வரையில் தன்னை நம்பியிருந்து மோசம் போகும்படி செய்து விடுவார்.

இப்படிப்பட்ட அருமையான பல குணங்கள் வாய்ந்த மகா புண்ணியவானாகிய பராங்குசம் பிள்ளை கண்ணபிரான் அடைபட்டிருந்த அறையின் கம்பிக் கதவிற்கு வெளியில் நின்றபடி ஒரு ஜெவானை அழைத்து ஒரு நாற்காலி கொணர்ந்து போடச் செய்து அதன் மேல் உட்கார்ந்து கொண்டவராய், அந்த ஜெவானை அனுப்பி விட்டு கண்ணபிரானை நோக்கி, "என்ன கண்ணபிரான் முதலியாரே! நீர் காலையிலிருந்து தண்ணீர்கூடக் குடிக்காமல் இருக்கிறீராமே! ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? உம்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்தை நீர் உண்மையில் செய்தீரோ இல்லையோ; அதற்கும் நீர் சாப்பிடுவதற்கும் என்ன சம்பந்தம்? மனிதருக்கு எப்படிப்பட்ட துக்கமோ, துன்பமோ

சங்கடங்களோ ஏற்பட்டாலும், யாராவது வயிற்றின் காரியத்தை நிறுத்துவார்களா? அப்போதைக்கு அப்போது தேவையான ஆகாரத்தை சாப்பிட்டு, உடம்பையும், மனசையும் கெடாமல் காப்பாற்றிக்கொள்வது மனிதருடைய முக்கியமான கடமை. சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் எழுத வேண்டுமென்று ஜனங்கள் சொல்வதுபோல, மனிதருக்கு முதலில் ஆகாரம், அதன் பிறகுதான் விவகாரம். நீர் காலை முதல் இந்நேரம் வரை பட்டினி கிடக்கிறீர் என்று ஒரு ஜெவான் என்னுடைய ஜாகைக்கு வந்து தெரிவித்தவுடனே எனக்கு நிரம்பவும் சங்கடமாகி விட்டது. நான் உடனே புறப்பட்டு வந்தேன். போலீசார் என்றால் நாங்களும் மற்றவர்களைப் போல மனிதர்கள் தானே. எங்களுக்கு மாத்திரம் ஈவிரக்கம், பச்சாதாபம் முதலிய குணங்கள் இல்லையா? நீர் அந்தப் பங்களாவில் இருந்தால், இந்நேரம் எவ்வளவோ சிறப்பான விருந்துண்டு கலியாண சந்தோஷத்தில் நிரம்பவும் குதூகலமாக இருப்பீர். மற்ற எல்லா ஜனங்களும் உம்மைப் பெருமைப்படுத்தி உம்மிடத்தில் வாஞ்சையாக நடப்பதைக் காண்பதே இணையில்லாத ஆனந்தமாக இருக்கும். அதையெல்லாம் அடியோடு கெடுத்து, நாங்கள் உம்மை பிடித்துக் கொண்டு வந்து, இங்கே அடைத்துப் பட்டினி போட்டுக் கொல்லுவது என்றால், அதைவிடப் பரம பாதகமான காரியம் வேறே என்ன இருக்கிறது? காலையில் எத்தனையோ விருந்தாளிக்கு முன், அப்படிப்பட்ட மங்களகரமான சடங்கு நடக்கையில் நாங்கள் உம்மைப் பிடித்து வலுக்கட்டாயமாகக் கொண்டு வந்தபோது எங்களுக்கு மாத்திரம் மனசில் சங்கடம் ஏற்படவில்லை என்று நினைத்தீரா? என்ன செய்கிறது? எங்களுடைய உத்தியோகம் அப்படிப்பட்டது. வயிற்றுப் பிழைப்புக்காக நாங்கள் இந்தப் போலீசில் வந்து மாட்டிக் கொண்டிருக்கிறோம். சர்க்காரார் சொல்லுகிறபடியெல்லாம் நாங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், எங்களுடைய உத்தியோகம் போய்விடும். உம்மைப் பிடித்துக் கொண்டு வரும்படி அவசரமான வாரண்டு வந்தது. உமக்குக் கலியாணம் ஏற்பாடு செய்து, இன்றைய தினம் நிச்சய தாம்பூலம் மாற்றப்போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. அந்தப் பங்களாவுக்கு நாங்கள் வந்த பிறகுதான் விஷயம் தெரிய வந்தது. அதற்குமேல்,

நான் உம்மைவிட முடியாமல் போய் விட்டது. அங்கே இருந்த ஜனங்கள் எல்லாரும் உண்மையை அறிந்து கொள்ளாமல் நிரம்பவும் பதறித் தாறுமாறாக எங்களை வைதார்கள். இது நாங்களாகச் செய்கிற காரியமும் அல்ல. எங்களுடைய சொந்தக் காரியமும் அல்ல. நாங்கள் சம்பளத்துக்கே வேலை செய்கிற கூலியாள்கள். எங்களை ஜனங்கள் நொந்து கொள்ள நியாயமே இல்லை. அதுபோல நீரும் எங்கள் விஷயத்தில் கொஞ்சமும் நொந்துகொள்ளத் தேவையில்லை. இன்றைய தினம் காலையில் இந்த வாரண்டு என்னிடத்தில் வந்தபோது, நீர் உண்மை யிலேயே இந்தக் குற்றத்தை செய்திருப்பீர் என்றே நான் நினைத் தேன். ஆனால் நான் அந்தப் பங்களாவுக்கு வந்து, உம்முடைய நிலைமையையும், உமக்குப் பெண் கொடுக்கப் போகும் மனிதர்களுடைய யோக்கியதையையும், கண்ணியத்தையும் பார்த்த பிறகும், நீர் உம்முடைய தாயாரிடத்தில் சொன்ன ஆண்மைத்தனமான வார்த்தைகளைக் கேட்ட பிறகும், நீர் இந்தக் குற்றத்தைச் செய்திருக்க மாட்டீர் என்ற ஒரு சந்தேகம் உண்டாகிக் கொண்டே இருந்தது. நான் உம்மை இந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு, உம்முடைய நடத் தையைப் பற்றி நீர் உத்தியோகம் செய்யும் ஆபீசிலும், மற்ற சில இடங்களிலும் போய் விசாரித்தேன். நீர் சுத்தமான நடத்தையும், நாணயமும் பெருந்தன்மையும் உடைய மனிதர் என்பது தெரிய வந்தது. அதுவும் தவிர, தற்செயலாக இன்றைய தினம் இந்தத் திருட்டைப் பற்றி வேறே சில அநுமானங்களும் ஏற்பட்டன; இவைகளிலிருந்து இந்தத் திருட்டில் நீர் சம்பந்தப்படவே இல்லை என்பதும், உமக்கு விரோதியான யாரோ சிலர் உம்முடைய வீடு காலியாக இருக்கும் சமயம் பார்த்து, அந்தத் திருட்டுச் சொத்துக்களைக் கொண்டு வைத்திருக்கிறார்கள் என்பதும் என் மனசுக்கு உறுதியாகப் படவே, நான் இன்றைய தினம் முழுதும் இதே வேலையாக அலைந்து கொண்டிருந்தேன். உமக்கு இப்படிப்பட்ட கெடுதல் செய்யக்கூடிய விரோதி யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற அவாவோடு நான் இறைய தினம் முழுதும் பல இடங்களுக்குப் போய் அலைந்து விட்டு இப்போதுதான் வந்து சேர்ந்தேன். உடனே ஜெவான் வந்து உம்முடைய பரிதாபகரமான நிலைமையைப் பற்றிச்

தெரிவித்தான். அதைக் கேட்டவுடனே என் மனம் தாளவில்லை. உடனே புறப்பட்டு இங்கே ஓடி வந்தேன். நீர் இந்தக் கலியாண கோலத்தோடு இப்படி அடைபட்டிருப்பதைப் பார்க்க எனக்கு நிரம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அதோடு நீர் காலை முதல் சாப்பிடாமல் சோர்ந்து வாடி இருப்பது என்னுடைய மனதை அறுக்கிறது. நீர் நன்றாகப் படித்தவர்; சிறந்த விவேகி; உமக்குத் தெரியாதவை நான் அதிகமாகச் சொல்ல ஒன்றுமில்லை. நீர் முதலில் கொஞ்சம் ஆகாரம் பார்த்துக் கொள்ளும். நீர் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்பதும், எனக்குச் சந்தேகமறத் தெரிவதால், உமக்கு எங்களால் என்னென்ன உதவி செய்ய முடியுமோ அதையெல்லாம் நாங்கள் செய்யத் தடையில்லை. நாங்கள் உமக்கு எள்ளளவும் தீங்கு செய்வோம் என்று நீர் எண்ண வேண்டாம்'' என்று நிரம்பவும் உருக்கமாகவும், பரிவாகவும் அந்தரங்கமான அன்போடும் கூறினார்.

அவரது வார்த்தைகள், நடுக்கடலில் கிடந்து திசையறியாமல் தடுமாறும் கப்பலுக்கு தீபஸ்தம்பமும், கடற்கரையும் முற்படுவது போல, அளவற்ற சந்தோஷத்தையும், இன்பத்தையும் உண் டாக்கின. அந்த இன்ஸ்பெக்டர் காலையில் பங்களாவில் நடந்து கொண்ட மாதிரியிலிருந்து, அவர் ஈவிரக்கமற்ற மகா கொடிய துஷ்டன் என்று கண்ணபிரான் அதுவரையில் எண்ணியிருந்த தற்கு முற்றிலும் மாறாக, அவர் இரக்கமும், இளக்கமும், ஜீவ காருண்யமும் நிறைந்த நடுநிலை தவறாத நற்குண புருஷர் என்பது தெரியவே, அது கண்ணபிரானது புண்பட்ட மனதில் ஜீவாமிர்தம் சொரியப்படுவது போல, மிக மிக இன்பமாக இருந்தது. போலீசார் தம்மை அடித்து வருத்தி அந்தக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்துவார்கள் என்றும், தனது மனிதர்கள் வந்து தன்னிடத்தில் பேச விட மாட்டார்கள் என்றும் அவன் நினைத்ததற்கு மாறாக, போலீஸ் இன்ஸ்பெக்டர் தன்னி டத்தில் நிரம்பவும் மரியாதையாகவும், அன்பாகவும் நடந்து, தனக்குத் தேவையான உதவிகளையெல்லாம் செய்து கொடுப் பதாக வாக்களித்தது தான் சிறிதும் எதிர்பார்க்காத அதிர்ஷ்ட மாகத் தோன்றியது. அந்த இன்ஸ்பெக்டர் தன்னிடத்தில், ஒரு வேளை கபடமாக அப்படி நடக்கிறாரோ என்று நினைப்பதற்கு எவ்விதக் குறிப்பும் காணப்படாது இருந்தமையால், அவர்

பேசிய ஒவ்வொரு சொல்லும் உண்மையானது என்றே நம்பிய கண்ணபிரான் மிகுந்த நன்றியறிதலையும், மரியாதையையும் தோற்றுவித்தவனாய் அவரை நோக்கி, ''என் விஷயத்தில் தங்களுக்கு இவ்வளவு அன்பும் அநுதாபமும் ஏற்படும் என்று நான் நினைக்கவே இல்லை. இந்தக் குற்றத்தை நான் செய்ய வில்லை என்பதைத் தாங்கள் நிச்சயப்படுத்திக் கொண்டதாகச் சொல்வதைக் கேட்க, என்னுடைய பசி, தாகம், துயரம், அவ மானம் எல்லாம் நீங்கிப்போனதுபோல என் மனம் நிரம்பவும் குளிர்ந்து போய்விட்டது. தாங்கள் என் விஷயத்தில் அனுதாப மும், இரக்கமும் கொண்டு இவ்வளவு தூரம் உபசாரம் செய்யும் போது அதை நான் மறுப்பது ஒழுங்கல்ல. தங்களுடைய பிரியப் படி நான் இன்னமும் கொஞ்சநேரம் கழித்துச் சாப்பிடுகிறேன். இருந்தாலும் என்மேல் சுமத்தப்பட்டிருக்கும் இந்தத் திருட்டின் விவரங்களையும், எந்த அனுமானத்தின் மேல் போலீஸ் கமிஷனரும், மாஜிஸ்டிரேட்டும் என்னுடைய வீட்டைத் திறந்து சோதனை போட்டார்கள் என்பதையும் தங்களுடைய வாக்கின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டும் என்று என் மனம் ஆவல் கொள்ளுகிறது. தாங்கள் அதையெல்லாம் தெரிவித்தால் அது பெருத்த உதவியாக இருக்கும்'' என்றான்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் அன்பினால் மலர்ந்த முகத்தோடு கண்ணபிரானை நோக்கி, ''அந்த விவரத்தை எல்லாம் நான்தான் இன்றையதினம் காலையில் உம்மைப் பிடிக்கும்போதே சொன்னேனே! அதைத் தவிர வேறே எந்த விவரமும் எனக்கு இப்போது நிச்சயமாகத் தெரியவில்லை. உம்முடைய வீட்டில் அந்தத் திருட்டு சாமான்கள் இருக்கின்றன என்னும் சங்கதி கமிஷனருக்கு எப்படித் தெரிந்தது என்பது எனக்கு இன்னமும் தெரியாது. அந்தச் சங்கதி உமக்கு அவசியம் தெரிய வேண்டுமானால் நான் நாளையதினம் காலையில் இங்கே மறுபடியும் வரும்போது தெரிவிக்கிறேன். இன்று காலையில் உம்மைப் பிடித்தவுடனே உம்மை நேராக ஜெயிலுக்குக் கொண்டுபோய் அடைக்க வேண்டியது எங்களுடைய கடமை. ஆனால், எங்களுடைய விசாரணை அரைகுறையாக இருந்தால், குற்றவாளிகளை ஜெயிலுக்கு அனுப்பாமல் 24 மணி நேரம் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருக்கலாம் என்று சட்டம் இடம்

கொடுக்கிறது. ஆகையால், அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு நாம் உம்மை நாளைய தினம் காலை 10 மணி வரையில் இங்கே வைக்க ஏற்பாடு செய்தேன். நீர் அந்த ஜெயிலுக்குப் போய் விட்டால், உமக்கு ஜெயிலின் சாப்பாடுதான் கிடைக்கும். நீர் உங்களுடைய மனிதர்களை வரவழைத்துப் பார்க்க வேண்டுமானாலும் அதற்கு மாஜிஸ்திரேட்டின் உத்தரவு கிடைக்க வேண்டும். நீர் இங்கே இருந்தால் உம்முடைய பிரியமான ஆகாரத்தைச் சாப்பிடலாம். உம்முடைய சொந்த மனிதர்களோடு பேச வேண்டுமானாலும், அதற்கு நான் சுலபமாக அனுமதி கொடுத்து விடலாம். இதையெல்லாம் உத்தேசித்தே நான் உம்மை இங்கே வைக்கச் செய்தேன். ஏனென்றால், இன்று காலையில் நான் அந்தப் பங்களாவில் வந்திருந்து உங்களுடைய பெருந்தன்மையைக் கண்டு, நீர் குற்றமற்றவர் என்பதை அறிந்து கொண்ட பிறகு நான் உம்மை விட்டு விட அதிகாரம் இல்லாதவனாக இருந்தாலும், என்னாலான இந்த அற்ப உதவியையாவது உமக்குச் செய்ய வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தினால் நான் உம்மை இங்கே வைக்கச் செய்தேன். நீர் அங்கே போன பிறகு சாப்பாட்டு விஷயத்தில் உம்முடைய பிரியம் போல நடந்து கொள்ளும். இங்கே இருக்கிறவரையில் பட்டினி கிடக்காமல் சாப்பிட்டு சுகமாகப் படுத்துக் கொள்ளும். சுத்த சைவனான ஒரு ஜெவானை அனுப்பி சோற்றுக் கடையிலிருந்து உமக்கு ஆகாரம் தருவித்திருக்கிறேன். இன்றைய தினம் ராத்திரிக்கு உமக்கு வேண்டிய படுக்கைக்கும், வசதி செய்து கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். அதுவும் தவிர, நாளைய தினம் காலையில், பத்து மணிக்குள் நீர் யாரையாவது வரவழைத்துப் பேசி உம்முடைய கட்சியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வக்கீலையும் அமர்த்திக்கொள்ளும். அந்த வக்கீல் வேண்டுமானால் இங்கே வந்து உம்மோடு பேச நான் அனுமதி கொடுக்கிறேன். அவர் இப்போதே ஒரு மனு எழுதிக் கொண்டு மாஜிஸ்திரேட்டினிடத்திற்குப் போய் உம்மை ஜாமீனில் விடும்படி கேட்டு வாதாடி முயன்று பார்த்தால் மாஜிஸ்டிரேட் உம்மை ஜாமினீல் விட்டு விடுவார். நாளைய தினம் காலையில் நீர் ஜெயிலுக்குப் போகும் துன்பத்துக்கும் அவமானத்துக்கும் ஆளாகாமல் இங்கே இருந்தபடியே வீட்டுக்குப் போய்விடலாம்.

அதற்கு மேலும் இந்த விசாரணை நடக்கும்போதும் எங்களால் உமக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்யத் தடையில்லை" என்று அந்தரங்கமான அபிமானத்தோடு கூறினார்.

அதைக்கேட்ட கண்ணபிரான் அந்த இன்ஸ்பெக்டர் உண்மையிலேயே இளகிய மனதுடைய புண்ணியவான் என்றும், துஷ்டர்களுக்கும் கொடியவர்களுக்கும் இருப்பிடமான போலீஸ் இலாகாவில் அப்படிப்பட்ட நல்ல மனிதர் இருந்தது அபூர்வம் என்றும் நினைத்து மட்டுக்கடங்கா மகிழ்ச்சியும், உற்சாகமும் நம்பிக்கையும் அடைந்தவனாய், நன்றி விசுவாசத்தின் பெருக்கினால் இளகி மலர்ந்த முகத்தினனாய் அவரை நோக்கி, "அடடா! இந்த ஆபத்துச் சமயத்தில் இவ்வளவு தூரம் யார் உதவி செய்யப் போகிறார்கள்! என் விஷயத்தில் தாங்கள் செய்யும் இந்த நன்மை ஒரு நாளும் மறக்கத்தக்கதல்ல. தாங்கள் சொல் லுகிற யோசனைப்படியே நான் நடந்து கொள்ளுகிறேன். இன்றையதினம் காலையில் தாங்கள் வந்திருந்து பங்களாவில் என்னுடைய தாயார் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர் கற்பகவல்லியம்மாள். தாங்கள் யாரையாவது ஓர் ஆளை உடனே அந்தப் பங்களாவுக்கு அனுப்பி அவர்களை மாத்திரம் ஒரு வண்டியில் வைத்து இங்கே அழைத்துக்கொண்டு வந்தால் நாங்கள் இருவரும் கலந்து பேசி உடனே வக்கீலை வரவழைத்து அவரைக் கண்டு மற்ற முயற்சிகளைச் செய்கிறோம்" என்றான்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், "அப்படியே செய்யலாம். நான் போய் உடனே ஒரு ஜெவானை பைசைகிலில் வைத்து அனுப்பி உம்முடைய தாயாரை அழைத்துக்கொண்டு வரச் செய் கிறேன்; அதோடு உமக்கும் ஆகாரம் அனுப்புகிறேன். உம்மு டைய தாயார் வருவதற்குள் நீர் உம்முடைய போஜனத்தை முடித்துக் கொள்ளும். நான் ஜெவானை அனுப்பிவிட்டு மறுபடி யும் வருகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து அப்பால் போய் விட்டார்.

அதன் பிறகு கால் நாழிகை நேரம் சென்றது. இரண்டு ஜெவான்கள் தட்டிலும் பாத்திரங்களிலும் ஆகாரம் தண்ணீர் முதலியவற்றைக் கொணர்ந்து, சிறைச்சாலையின் கதவிலிருந்து

பூட்டை விலக்கிக் கதவைத் திறந்து இவைகளை உள்ளே வைத்து, கண்ணபிரானை உட்காரவைத்து இலை போட்டுப் பரிமாறி அவனை உண்பித்தனர். இன்ஸ்பெக்டர் கூறிய அனுதாப மொழிகளைக் கேட்டுக் கண்ணபிரான் ஒருவாறு துணிபடைந்து இருந்தான். ஆனாலும், அவனுக்கு ஆகாரத்தின் மீதே மனம் செல்லாதிருந்தது. ஆனாலும், தனக்குப் பேருபகாரியாகத் தோன்றியுள்ள அந்த இன்ஸ்பெக்டரது சொல்லைத் தான் மீறக் கூடாது என்ற எண்ணத்தினால் தூண்டப்பட்டவனாய், அவன் சொற்பமாகத் தனது போஜனத்தை முடித்துக் கொண்டான். அவனுக்கு ஆகாரம் கொணர்ந்த ஜெவான்கள் இருவரும், மிகுதியிருந்த ஆகாரங்களோடு பாத்திரங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு இரும்புக் கம்பிக் கதவை மறுபடியும் மூடிப் பூட்டிக்கொண்டு அப்பால் போய்விட்டனர்.

கண்ணபிரான் காலை முதல் பட்டினி கிடந்து உண்ட அயர்வினால் தளர்வடைந்து கீழே உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டிருந்தான். அவ்வாறு கால்நாழிகை நேரம் கழிந்தது. மறுபடியும் போலீஸ் இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை அங்கே வந்து, வெளியில் கிடந்த நாற்காலியின் மீது உட்கார்ந்து கொண்டார்.

அவர் வந்ததைக் கண்ட கண்ணபிரான் அவருக்கு முன்பு தான் உட்கார்ந்திருக்கக் கூடாது என்ற நினைவைக் கொண்டவனாய் சடக்கென்று எழுந்திருக்க முயன்றான். அதைக்கண்ட இன்ஸ்பெக்டர் நிரம்பவும் அன்பாக அவனை நோக்கி, "பரவாயில்லை. உட்காரும்; ஏன் எழுந்திருக்கிறீர்? உட்கார்ந்து கொண்டே பேசும்; இந்த இடத்தில் நீர் எனக்கு மரியாதை கூட செய்ய வேண்டுமா? அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை. நீர் காலையிலிருந்து பட்டினி கிடந்து அலுத்துப் போயிருக்கிறீர். நீர் எழுந்து நிற்பதனால், நான் போய்விட்டு அரைநாழிகை நேரம் கழித்தாலும் வருகிறேன்" என்று நிரம்பவும் உரிமையாகவும் உருக்கமாகவும் பேசினார்.

அதைக்கேட்ட கண்ணபிரான் அவரது மனதை வருத்த விரும்பாதவனாய் முன்போலவே உட்கார்ந்து கொண்டான். உடனே இன்ஸ்பெக்டர் அவனை நோக்கி, "பைசைகிலில்

புரசைபாக்கத்துக்குப் போகிற ஜெவான் இந்நேரம், அந்தப் பங்களாவுக்குப் போயிருப்பான். இன்னும் அரை நாழிகையில் உம்முடைய தாயார் வந்து விடுவார்கள்; அதிருக்கட்டும்; நீர் சரியாகச் சாப்பிட்டீரா? ஜெவான்கள் நல்ல சாப்பாடாகக் கொண்டு வந்தார்களா?" என்றார்.

**கண்ணபிரான்:-** ஆகா! சாப்பாடு நன்றாகத்தான் இருந்தது. ஆனால், என்னுடைய மன வியாகுலத்தில் ஆகாரமே பிடிக்க வில்லை. தங்களுடைய பேச்சைத் தள்ளக்கூடாது என்று கஷ்டப் பட்டுக் கொஞ்சம் சாப்பிட்டேன்.

**இன்ஸ்பெக்டர் :-** சரி; அதுவே போதும், எப்படியாவது இந்த ராத்திரிப் பொழுது கழியுமானால், நாளைய தினம் நீர் உம்முடைய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறீர்; அதன் பிறகு திருப்தியாகச் சாப்பிட்டுக் கொள்ளுமேன்? அதிருக்கட்டும். எனக்கு ஒரு சந்தேகம் இருந்து வருகிறது. அதை உம்மிடத்தில் கேட்க வேண்டுமென்பது. நீங்கள் சாதாரணமான ஏழைக் குடும்பத்தார் என்று நான் கேள்வியுற்றேன். இந்த ராஜரத்தின முதலியாருடைய வீட்டாரோ கோடீசுவரர்கள்; அவர்கள் உமக்குப் பெண் கொடுக்க சம்மதித்தார்களே. உங்களுக்கும் அவர்களுக்கும் இதற்கு முன் ஏதாவது பாந்தவ்வியம் உண்டா? அல்லது, அவர்களுக்கும் உங்களுக்கும் நெங்காலப் பழக்கம் உண்டா? உமக்கு அந்த வீட்டார் பெண் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்களே; உங்கள் இருவருக்கும் எப்படிப் பழக்கம் உண்டாயிற்று?

**கண்ணபிரான்:-** எங்களுக்கும் அவர்களுக்கும் எவ்வித பாந்தவ்வியம் இல்லை, எங்களுக்கும் அவர்களுக்கும் இதுவரை யில் பழக்கங்கூடக் கொஞ்சமும் இல்லை. அவர்களுடைய வீட்டில் ஆண்பிள்ளைகளே இல்லை. தாயாரும் இரண்டு பெண்களுமே இவ்வளவு சொத்துக்களுக்கும் சொந்தமானவர்கள். பெண்களைத் தங்களுக்குச் சரிசமானமான பணக்காரர்களுடைய வீட்டில் கொடுத்தால் இவர்களுடைய பங்களா முதலிய சகலமான சொத்துக்களையும் இரண்டு பெண்களும் பாகம் பிரித்துக் கொண்டு தன் தன் புருஷன் வீட்டுக்குப் போக நேர்ந்து விடும் என்ற எண்ணத்தினால், துபாஷ் முதலியாருடைய

சம்சாரம் சாதாரண நிலைமையில் இருப்பவரும், நற்குண நல்லொழுக்கம் உடையவருமான பிள்ளையாகப் பார்த்துத் தம்முடைய பெண்களைக் கட்டிக் கொடுக்க நினைத்திருந் தார்கள்; ஆனால் மூத்த பெண் மாத்திரம் அதற்கு இணங்கினாள். இரண்டாவது பெண் பணக்காரருடைய வீட்டிலேதான் வாழ்க்கைப் படுவேன் என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லி விட்டாள். அந்தச் சமயத்தில் சில தினங்களுக்கு முன், இந்த இரண்டு பெண்களும் ஸாரட்டில் ஏறிக் கொண்டு சமுத்திரக் கரையில் காற்று வாங்குவதற்காகப் போய்க் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் நான் என்னுடைய கச்சேரியில் இருந்து புறப்பட்டு வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். அப்போது எதிரில் வந்த ஒரு மோட்டார் வண்டி அவர்களுடைய ஸாரட் டின் சக்கரங்களில் உராய்ந்து, அவைகளை முறித்துவிட்டுக் குதிரையின் காலில் ஒரு பக்கத்தையும் செதுக்கிக் கொண்டு போய்விட்டது. ஸாரட்டு வண்டி ஒரு பக்கத்தில் சாய்ந்து விட்டது. குதிரை தனது காலில் ஏற்பட்ட காயத்தின் நோவைப் பொறுக்காமல் தாண்டிக் குதித்து சாய்ந்துபோன ஸாரட்டை இழுத்துக்கொண்டு, பெருத்த பள்ளத்துக்குப் பக்கத்தில் ஓடியது. அந்தப் பெண்கள் இருவரும் வண்டிக் கூண்டிற்குள் தொற்றிக்கொண்டு இழுபடுகிறார்கள். அடுத்த நிமிஷத்தில் வண்டி பள்ளத்தில் விழுந்துவிடும்போல இருந்தது. அப்போது நெடுந்தூரத்தில் ஜனங்கள் வந்து கொண்டிருந்தார்கள். நான் ஒருவனே பக்கத்தில் இருந்தவன். நான் உடனே பாய்ந்து குதிரையைப் பிடித்துப் பாட்டையில் திருப்பி, கையிலிருந்த பேனாக்கத்தியினால், அதன் வார்களை அறுத்து அதை வேறாக்கி, வண்டியில் இருந்தவர்களுடைய உயிரைக் காப்பாற்றினேன். அதன் பிறகு நான் உடனே திருவல்லிக்கேணிக்கு ஓடி அவர்க ளுக்காக ஒரு குதிரை வண்டி அமர்த்திக் கொண்டு வந்து, அதன் மூலமாக, அவர்களை அவர்களுடைய பங்களாவில் கொண்டு போய்ச் சேர்த்தேன். அதிலிருந்துதான் அவர்களுக்கும் எங்க ளுக்கும் பழக்கம் உண்டாயிற்று. அன்றைய தினம் என்னைப் பார்த்து என்னுடைய குணத்தை அறிந்துகொண்ட மூத்தபெண் என்னைக் கட்டிக்கொள்ளப் பிரியப்பட்டு, அதைத் தன்னுடைய தாயாரிடத்தில் வெளியிட்டாளாம். அந்த அம்மாள் மறுநாள்

காலையில் எங்களுடைய வீட்டுக்கு வந்து எங்களை அழைத்து வந்து எங்களுக்கு விருந்து வைத்து, என்னுடைய தாயாரோடு கலந்து யோசனை செய்து, இந்தக் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்து இன்றைய தினம் நிச்சய தாம்பூலம் மாற்ற முடிவு செய்தி ருந்தார்கள். அதற்குள் இப்படிப்பட்ட எதிர்பாராத பழி என் பேரில் வந்து சேர்ந்தது.

இன்ஸ்பெக்டர் :- (நிரம்பவும் கலங்கி வருந்தியவராய்) அப்படியா சங்கதி! நீர் சொன்ன வரலாறு திருப்திகரமாகத்தான் இருக்கிறது. நீங்கள் பரம ஏழையாயிற்றே; கோடீஸ்வரர்களான அவர்கள் தங்களுடைய பெண்ணை உமக்குக் கொடுக்க எப்படி இணங்கியிருப்பார்கள் என்றும், ஒருவேளை நீரும் பணக்காரர் என்று நடித்து அவர்களை மோசம் செய்து பெண்ணைக் கட்டிக் கொள்ள முயற்சி செய்திருப்பீரோ என்றும் சிலர் சந்தேகித்து என்னிடத்தில் சொன்னதன்றி, அப்படிப்பட்ட மோசக்கருத்தில் இறங்கக் கூடிய நீர் அந்தத் தபால் திருட்டையும் ஏன் நடத்தி இருக்கலாகாது என்ற கேள்வியையும் என்னிடத்தில் கேட்டனர். அந்த சம்சயத்தை மனசில் வைத்துக் கொண்டே நான் உம்மி டத்தில் இப்போது இந்தக் கேள்வியைக் கேட்டேன். நீர் சொன்ன சமாதானம் சரியானதாகவும், எவரும் ஒப்புக் கொள் ளக்கூடியதாகவும் இருக்கிறது. இந்தத் தபால் திருட்டை நீர் செய்திருக்க மாட்டீர் என்று முன்னிலும் அதிகமாக இப்போது உறுதிப்படுகிறது. அதிருக்கட்டும், இன்னொரு விஷயம். நீங்களோ ஏழை; இந்த வழக்கை நடத்த பிரபலமான ஒரு வக்கீலை அமர்த்தவும் மற்ற விஷயங்களுக்கும் நீங்கள் ஏராள மான பணத்தொகை செலவு செய்ய நேருமே. துபாஷ் முதலியா ருடைய வீட்டார் இந்த விஷயத்தில் உமக்கு ஏதாவது பண உதவி செய்வார்களா! உமக்கு நேர்ந்த இந்தத் துன்பத்தை அவர்கள் பெருத்த இழிவாகக் கருதி உம்முடைய சம்பந்தம் வேண்டாம் என்று சொல்லிவிடுவார்களா? அல்லது, அந்தப் பெண் உம்மிடத்தில் வைத்திருக்கும் ஆழ்ந்த பிரியத்தைக் கருதி, உம்மைக் கைவிடாமல், இந்தச் சமயத்தில் உமக்குப் பண உதவி செய்து, நீர் தப்பிவந்த பிறகும் உமக்கே அந்தப் பெண்ணைக் கொடுப்பார்களா? அன்றைய தினம் கடற்கரையில் நீர் இந்த மூத்த பெண்ணைப் பார்த்ததாகச் சொன்னீரே; அதன்பிறகு,

உமக்கும் அவளுக்கும் சந்திப்பாவது சம்பாஷணையாவது நடந்ததுண்டா? அதனால் அவளுடைய பிரியம் உறுதிப்பட்டிருக்குமா? அல்லது அது இதனால் மாறிப்போகக்கூடியதா? இதையெல்லாம் நான் உம்முடைய நன்மையைக் கருதியே கேட்கிறேன். ஏதடா இந்த இன்ஸ்பெக்டர் தமக்குச் சம்பந்தமில்லா குடும்ப விஷயங்களை எல்லாம் கேட்கிறாரே என்று நீர் ஆயாசப்படக்கூடாது. இந்த ஆபத்துச் சமயத்தில் உம்முடைய உண்மையான நிலைமை எப்படிப்பட்டது என்பதை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி உமக்கு ஏதாவது உபயோகமான யோசனை சொல்லவேண்டும் என்பதே என்னுடைய கருத்து; உமக்குப் பிரியமானால் இந்தக் கேள்விக்கு நீர் பதில் சொல்லலாம். இல்லாவிட்டால், கட்டாயம் இல்லை'' என்று நயமாகவும், தமக்கு அந்த விஷயத்தில் பரோபகாரச் சிந்தையைத் தவிர சுயநலமான கருத்து எதுவும் இல்லை என்பதை நன்றாகக் காட்டியும் பேசினார்.

அதைக்கேட்ட கண்ணபிரான் கோகிலாம்பாளுக்குப் பூஞ்சோலையில் நாகப்பாம்பினால் ஏற்பட்ட அபாயத்தையும், அதன் மூலமாக அவளுக்கும் தனக்கும் நேரிட்ட சந்திப்பையும் சம்பாஷணையையும் தெரிவிக்கலாமோ கூடாதோ என்ற ஐயத்தினால் இரண்டொரு நிமிஷநேரம் தயங்கி ஒருவாறு கிலேசம் அடைந்தவனாய் அவரை நோக்கி, ''என் விஷயத்தில் இவ்வளவு அபிமானம் வைத்துத் தாங்கள் கேட்கும்போது நான் தங்களிடத்தில் எதையும் மறைப்பது ஒழுங்கல்ல. அந்தப் பங்களாவில் எங்களுக்கு விருந்து நடந்த தினம் முதல் கலியாணம் வரையில் நாங்கள் அங்கேயே இருக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஆகையால் அதுமுதல் நாங்கள் அவ்விடத்திலேயே இருந்து வந்தோம். நேற்றைய தினம் சாயுங்காலத்தில், நான் பங்களாவின் தோட்டத்துக்குள் போய் வேடிக்கை பார்த்தபடி வந்து கொண்டிருந்தேன். செடி கொடிகளுக்கு நடுவில் இருந்த ஓர் ஊஞ்சற் பலகையின்மேல் மூத்த பெண் உட்கார்ந்து எதைப்பற்றியோ சிந்தனை செய்தவளாய் மெய்ம்மறந்திருந்தாள். நான் அவளுடைய பின்பக்கமாக வந்தேன் ஆகையால் நான் வந்ததை அவள் உணரவில்லை. அந்தச் சமயத்தில் அவளுக்குத் தெரியாமல் அவளுடைய காலுக்குக்கீழே

தரையில் ஒரு நாகப்பாம்பு வந்து படுத்திருந்தது. அதைக்கண்ட நான் பதறிப்போய்விட்டேன். ஆனால், நான் கூச்சலிட்டு அவளை எச்சரித்தால் அவள் திடுக்கிட்டெழுந்து அந்த நாகத்தின்மேல் காலை வைத்து விடுவாளோ என்ற பயம் என் மனதில் உண் டாயிற்று. ஆகையால் நான் சந்தடி செய்யாமல் விரல்களால் நடந்து, அவளுக்குத் தெரியாமல் ஊஞ்சல் பலகையண்டை போய், திடீரென்று அவளை அலாக்காகத் தூக்கிக்கொண்டுவந்து தூரத்தில்விட்டு, அந்தப் பாம்பைக் காட்டினேன். அவள் உடனே பயந்து மயங்கிக்கீழே விழுந்துவிட்டாள். நான் அந்தப் பாம்பை அடித்துப் போட்டுவிட்டு வந்து, அவளுடைய மயக்கத்தைத் தெளிய வைத்து அவளிடத்தில் கொஞ்சநேரம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்து அவளைப் பங்களாவுக்கு அனுப்பினேன். நான் இரண்டு தடவை அவளுடைய உயிரைக் காப்பாற்றினேன் என்கிற நன்றியை அவள் ஒரு நாளும் மறக்கமாட்டாள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவள் என்னைத் தவிர வேறே யாரையும் கட்டிக் கொள்ளுகிறதில்லை என்ற ஒரே தீர் மானத்தைக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. ஆகையால் அவள் இந்தச் சமயத்தில் என்னைவிட்டு விடமாட்டாள் என்றே நான் நம்புகிறேன்.

*இன்ஸ்பெக்டர்* : அப்படியானால், நீர் அதிர்ஷ்டசாலி தான். ஈசுவரன் உமக்கும் அந்தப் பெண்ணுக்கும் முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறான் போலிருக்கிறது. அதை நிறைவேற்றி வைக்கும் பொருட்டே அவளுக்கு அந்த இரண்டு அபாயங்களும் நேர்ந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்; இனி பயமில்லை. பணத்தை வாரி இறைத்து நல்ல முதல் தரமான பாரிஸ்டரை வைத்து வாதாடினால், இந்த வழக்கு பஞ்சு பஞ்சாகப் பறந்து போகும்; நீரும் உடனே இந்தக் கலியாணத்தை முடித்துக் கொள்ளலாம்.

*கண்ணபிரான்* : தெய்வத்தின் அருள் எப்படி இருக்கி றதோ பார்க்கலாம். பெருத்த இரண்டு விபத்துகளைக் கொண்டு வந்து விட்டு எனக்கும் அவளுக்கும் பழக்கத்தையும் பிரியத் தையும் உண்டாக்கி வைத்துவரும் கடவுள்தான்; இப்போது இந்த அபாண்டமான இடியை என் தலைக்குக்கொண்டுவந்து வைத்து, அந்தக் கலியாணம் நடக்காமல் தடுத்து இருக்கிறவரும் அந்தக்

கடவுள்தான். இவைகளின் உள்கருத்து இன்னதென்று நான் எப்படி கண்டுபிடிக்கிறது? எனக்குக் கலியாணம்தான் கைகூடுமோ, அல்லது காராக்கிரப்பிரவேசந்தான் கைகூடுமோ? அது காலக்கிரமத்திலேதான் தெரியவேண்டும்.

இன்ஸ்பெக்டர் : (அன்பாகக் கடிந்து) அப்படி ஒன்றும் கெடுதல் நடக்காது; எல்லாம் முடிவில் நல்லதாகத்தான் இருக்கும்; அதைப்பற்றி சந்தேகமில்லை. புரசைப் பாக்கத்துக்குப் போன ஜெவான் வரவேண்டிய நேரம் ஆகிவிட்டது. அவன் ஒருவேளை வந்திருக்கிறானோ என்று பார்த்துவிட்டு வருகிறேன் — என்று கூறிவிட்டு நாற்காலியை விட்டெழுந்து அப்பால் சென்றார்.

தனியாக விடப்பட்ட கண்ணபிரான், புரசைபாக்கத்திற்குப் போன ஜெவான் தனது தாயை அழைத்துக்கொண்டு வருவான் என்றும், தான் அவளை இன்னம் சில நிமிஷங்களில் காணலாம் என்றும் நினைத்து மிகுந்த ஆவலும் சஞ்சலமும் கொண்டவனாய் எழுந்து அந்த அறையில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தான்.

அவ்விடத்தை விட்டுப்போன இன்ஸ்பெக்டர் மறுபடியும் அங்கே வந்து நாற்காலியின்மேல் உட்கார்ந்தவராய் அவனை நோக்கி, "ஜெவான் போய் நிரம்ப நேரமாகிறது, இன்னமும் வராத காரணம் தெரியவில்லை. உம்முடைய தாயார் ஒரு வேளை அந்தப் பங்களாவில் இல்லையோ, அல்லது அவர்களை அழைத்துவர வண்டிதான் கிடைக்கவில்லையோ! என்னவோ தெரியவில்லை. அவன் உம்முடைய தாயாரை அழைத்து வந்தால் உடனே இங்கே அனுப்பும்படி சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்" என்றார்.

அவர் பேசி வாய்மூடுமுன் ஒரு ஜெவான் ஓடிவந்து, "புரசைப்பாக்கம் போனவன் இப்போதுதான் வந்தான்; அவனோடுகூட வேறே யாரும் வரவில்லை" என்றான்.

அதைக்கேட்டு வியப்புற்றவராகத் தோன்றிய இன்ஸ்பெக்டர், "அவன் தனியாகவா வந்திருக்கிறான்! ஒருவேளை வண்டி பின்னால் வருகிறதோ என்னவோ? எல்லாவற்றிற்கும் அவனையே இங்கே அனுப்பு" என்று கூறினார்.

உடனே அந்த ஜெவான் அப்பால் செல்ல, வேறொரு ஜெவான் பைசைகிலை உருட்டிக்கொண்டு உள்ளே வந்து அவருக்கு எதிரில் விறைப்பாக நின்று சலாம் செய்தான்.

அவனைக்கண்ட இன்ஸ்பெக்டர் கம்பீரமாக நிமிர்ந்து, அதிகாரமாக அவனைப்பார்த்து, "என்னடா கோவிந்தசாமீ! அம்மா வருகிறார்களா?" என்று வினவினார்.

கோவிந்தசாமி : இல்லை எஜமானே! நாம் காலையிலே போய் இவரைப் பிடித்தோமே! அந்தப் பங்களாவுக்குள்ளே நான் போனேன். வேலைக்காரர்கள் மாத்திரம் சிலர் இருந்தார்கள். கலியாணத்துக்காக வந்து கூடியிருந்த ஜனங்களில் ஒருவர்கூட மிஞ்சாமல் எல்லோரும் அவரவர்களுடைய வீட்டுக்குப் போய்விட்டார்கள். கொட்டகைப்பந்தல் முதலிய மற்ற எல்லா அலங்காரங்களும் அப்படியே இருக்கின்றன. ஆனால், மனிதர் இல்லாமல் இருப்பது நிரம்பவும் துக்ககரமாக இருக்கிறது. ஒரு மூலையில் துயரமே வடிவாக ஒடுங்கி உட்கார்ந்திருந்த வேலைக்காரர்கள் என்னைக் கண்டவுடனே இன்னமும் யாரை யாவது பிடித்துக்கொண்டுபோக நான் வந்திருக்கிறேனோ, அல்லது வேறே புதிய தீங்கு எதையாவது செய்ய வந்திருக்கி றேனோ, என்று பயந்து நடுங்கி ஒளிந்துகொள்ளத் தலைப்பட் டனர். அவர்களிடத்தில் நான் நயமாகவும் அன்பாகவும் பேசி, நான் சர்க்கார் வேலையாக வரவில்லை என்றும், கண்ணபிரான் முதலியார் அவருடைய தாயாருக்குச் செய்தி சொல்லும்படி என்னை அனுப்பி இருக்கிறார் என்றும் அவர்களைத் தைரியப் படுத்தினேன். கண்ணபிரான் முதலியாருடைய தாயாரும் மாமியாரும் இன்றைய தினம் காலையிலிருந்து படுக்கையை விட்டு எழுந்திருக்காமல் ஒரே மயக்கமாக விழுந்து கிடக்கிற தாகவும், டாக்டர் வந்து மருந்து கொடுத்துவிட்டுப் போயிருக்கிற தாகவும், பெண்கள் இரண்டுபேரும் விசனப்பட்டுக்கொண்டு படுத்திருப்பதாகவும், அவசியமானால் என்னை மூத்த பெண் இருந்த இடத்தில் கொண்டுபோய்விடுவதாகவும் அந்த வேலைக் காரர்கள் சொன்னார்கள். நான் அதற்கு இணங்கி அவர்களோடு கூடப் போனேன். கலியாணப்பெண் அழுதுகொண்டே படுத்திருந்த ஓர் அறைக்குள் அவர்கள் என்னைக் கொண்டுபோய்

நிறுத்தி, நான் வந்த காரணத்தை அந்தப் பெண்ணிடத்தில் சொன்னார்கள். அந்தப் பெண் உடனே என்னைப்பார்த்து இந்த முதலியாருடைய தாயாரும், தன்னுடைய தாயாரும் ஸ்மரணை தப்பிப் படுத்திருப்பதாகவும், முதலியார் சொல்லி அனுப்பிய செய்தி தன்னிடத்தில் சொல்லக்கூடியதானால், சொல்லலாம் என்றும், அந்த அம்மாள் விழித்துக்கொண்டு எழுந்த உடனே தான் அந்தச் செய்தியை அவர்களிடத்தில் சொல்வதாகவும் தெரிவித்தது. நான் உடனே சங்கதியை வெளியிட்டேன். முதலியார் இந்தப் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதாகவும், ஒரு வக்கீலை அமர்த்தித் தம்மை ஜாமீனில் விடுவித்துக்கொண்டு போகவேண்டிய விஷயமாய் அவரசமாக அம்மாளோடு பேசவேண்டும். ஆகையால், உடனே அவர்களை ஒரு வண்டியில் வைத்து அழைத்துவரச் சொன்னதாகவும் நான் சொன்னேன். உடனே அந்தப் பெண் நிரம்பவும் கலக்கமும் விசனம் அடைந்து என்னை அழைத்துக்கொண்டுபோய், அதனுடைய தாயாரும், இவருடைய தாயாரும் படுத்திருந்ததைக் காட்டியது. வேலைக் காரர்களும் பெண்ணும் சொன்னதுபோலவே அவர்கள் இருவரும் பேச்சு மூச்சு இல்லாமல் படுத்திருக்கிறார்கள். அப்படியானால், நான் போகலாமா என்றேன். அந்தப்பெண் கொஞ்சநேரம் யோசனை செய்தது. அம்மாமார் இருவரும் எழுந்துவர முடியாமல் இருப்பதால், தானே நேரில் வந்து முதலி யாரோடு கலந்து பேசி தன்னுடைய சொந்தக்காரரையாவது வேலைக் காரரையாவது அனுப்பி வக்கீலை அழைத்துவரச் செய்து, மனு எழுதி வாதாடச் செய்யலாம் என்று தான் எண்ணு கிறதாகவும், தான் வரலாம் என்று முதலியார் தம் கைப்பட ஒரு கடிதம் எழுதி அனுப்பினால், தனக்குத் துணிவும் நம்பிக்கையும் ஏற்படும் என்றும், தான் உடனே புறப்பட்டு வந்து அவரைப் பார்ப்பதாகவும் அந்தப் பெண் சொல்லியது. அதைக் கேட்டுக் கொண்டு நான் உடனே வந்து விட்டேன். அவ்வளவுதான் சங்கதி'' என்றான்.

அவன் சொன்ன வரலாற்றைக் கேட்கவே, கண்ணபிரானது மனம் கொதித்தது; தேகம் பதறியது. தனக்கு அன்றைய தினம் காலையில் ஏற்பட்ட பெருத்த அவமானத்தைப் பொறுக்க மாட்டாமல் தனது தாயாரும் மாமியாரும் மகா பரிதாபகரமான

நிலைமையில் கிடக்கிறார்கள் என்பதைக் கேட்டவுடனே கண்ணபிரான் கரைகடந்த துயரத்திலும் சஞ்சலத்திலும் ஆழ்ந்து, தான் என்ன செய்வது என்பதை அறியாதவனாய்த் தத்தளிக்கலானான். அவனது உயிர் தாமரை இலைத் தண்ணீர்போலத் தவித்தது. ஸ்மரணை தப்பிக்கிடந்த இருவருக்கும் உதவியாக இருக்கும் கோகிலாம்பாளை அவ்விடத்திலிருந்து வரவழைப்பதைவிட, தான் ஜெயிலில் கிடப்பதே அந்த ஆபத்துச் சமயத்தில் தான் செய்யக்கூடிய காரியம் என்று கண்ணபிரான் நினைத்தான். இருந்தாலும், தனது தாய் ஒருவேளை இறந்து விடுவாளானால் தான் அவளைப் பார்க்கக் கூடாமல் போய்விடுமே என்ற நினைவும் தோன்றி வருத்தியது, ஆகையால், தான் ஜாமீனின்மேல் விடைபெற்று அந்த அபாய காலத்தில் தனது தாய்க்கு அருகில் இருப்பதே உத்தமமாகத் தோன்றியது. தனது தாய் மரிக்க நேருமானால், அவள் தன்னைப்பார்க்க ஆசைப்பட்டுக்கொண்டே இருந்தால், அவளது ஜென்மம் கடைத்தேறாமல் போய்விடுமே என்ற நினைவும் அவனைத் தூண்ட ஆரம்பித்தது.

அவ்வாறு, கண்ணபிரான் கோகிலாம்பாளை வரவழைக்கலாமா வேண்டாமா என்ற விஷயத்தைப்பற்றி யோசித்து யோசித்து எவ்வித முடிவிற்கும் வரமாட்டாமல் நிரம்பவும் தத்தளித்துத் தவித்திருக்க, அதுவரையில் ஆழ்ந்த சிந்தனை செய்பவர்போலத் தோன்றிய இன்ஸ்பெக்டர் கண்ணபிரானை நோக்கி, "என்ன முதலியாரே! இந்த ஜெவான் வந்து சொன்ன சங்கதியைக்கேட்க, எனக்கு நிரம்பவும் விஸனமாக இருக்கிறது. இன்றைய தினம் காலையில் அந்தப் பங்களா இருந்த கோலாகலக் காட்சியென்ன! இப்போது இருக்கும் கோரமான காட்சியென்ன! சே! சே! என்ன போலீஸ் உத்தியோகம்! நாங்கள் செய்த ஒரு காரியத்தின் பலனாகத்தானே இப்படிப்பட்ட கொடுமை நடந்து விட்டது. இப்படிப்பட்ட மகா துக்ககரமான விஷயங்களை எல்லாம் அநுபவத்தில் பார்க்கப் பார்க்க அதிக சீக்கிரத்தில் இந்தப் போலீஸ் வேலையை உதைத்துத் தள்ளிவிட்டு எங்கேயாவது போய், க்ஷவரம் செய்தாவது பிழைக்கலாமா என்ற மனக்கொதிப்பும் ஆவேசமும் உண்டாகின்றன. உம்முடைய தாயார் சுய உணர்வோடு இருந்தால் நாங்களாவதுபோய் அந்த அம்மாளிடத்தில் விஷயங்களைச் சொல்லி, ஒரு வக்கீலை அந்த இடத்துக்கே

வரவழைத்து, ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்கும்படி ஏற்பாடு செய்யலாம். உம்முடைய தாயாரோ ஸ்மரணை தப்பிக் கிடக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நீர் அவர்களுக்குப் பக்கத்தி லிருந்து காப்பாற்றியே தீரவேண்டும். அதற்கு, ஒரு வக்கீல் வந்து உம்மை ஜாமீனில் விடுவிக்கவேண்டும். ஆகையால் நீர் அந்தப் பெண்ணையாவது வருவித்து, ஆகவேண்டுவதைச் செய்வதுதான் உசிதமாகத் தோன்றுகிறது. நீர் தான் அந்தப் பெண்ணோடு இதற்குமுன் பேசி நன்றாகப்பழகி இருக்கிறீரே. ஆகையால் நீங்கள் கூடிப்பேச எவ்வித ஆக்ஷேபமும் இருக்காது என நினைக்கிறேன். ஆனால், அந்தப்பெண் வருவதாக இருந்தால், இந்த ராத்திரி காலத்தில் தனியாக அழைத்துக் கொண்டு வருவது தவறு. ஸ்மரணை தப்பிக்கிடக்கும் இருவரையும் ராத்திரியில் அநாதையாகவிட்டு விட்டு அந்தப்பெண் வருவதும் ஒழுங்கல்ல. ஆகையால் அந்தப் பெண்ணை அழைத்துவர வேண்டுமானால் விடியற்காலையில்தான் அழைத்து வரவேண்டும். வக்கீலையும் காலையில்தான் அமர்த்தி உடனே மாஜிஸ்டிரேட்டினிடத்தில் அவர் போய்ப்பேசி உம்மை அழைத்துக்கொண்டு போகச்செய்ய வேண்டும். உம்முடைய தாயார் வருவதாக இருந்தால், இப்போதே வக்கீலைக் கொண்டு முயற்சித்துப் பார்க்கச் செய்திருக்கலாம். என்ன செய்கிறது? எல்லாம் தெய்வ சங்கற்பம். நீர் இன்றிரவு முழுதும் இங்கே இருக்க வேண்டும்போல இருக்கிறது. எல்லாவற்றிற்கும் நீர் அந்தப் பெண்ணை நாளைய தினம் அதிகாலையில் வரும்படிச்செய்து வக்கீலை அமர்த்தச் செய்யவும். ஆனால், இதில் நீர் இரண்டு முக்கியமான விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அந்தப்பெண் இந்தப்போலீஸ் ஸ்டேஷனில் வந்து உம்மோடு பேசிவிட்டுப் போன விவரம் எவருக்கும் தெரியக்கூடாது. ஆகையால், அந்தப் பெண் எவர் கண்ணிலும் படாமல் ஒரு பெட்டி வண்டியில் ரகசியமாக வரும்படி அந்தக் கடிதத்தில் எழுதும். அதுவும் தவிர, அந்தக் கடிதம் தப்பித்தவறி வேறே யாரிடத்திலாவது போக நேர்ந்தாலும் நேரலாம். ஆகையால், நான் என்னுடைய ஜெவானை அனுப்பின விவரமெல்லாம் அதில் காட்டாமல் பூடகமாக இரண்டே வரியில் எழுதவேண்டும். நீர் தான் எழுதியி ருக்கிறீர் என்ற குறிப்பும் நிச்சயமாக அந்தப்பெண்ணுக்குத் தெரியவேண்டும்; தெரிகிறதா?" என்றார்.

அதைக்கேட்ட கண்ணபிரான் அந்த இன்ஸ்பெக்டர் ஒரு கால் மோசக் கருத்தாகத் தன்னிடத்தில் பேசுகிறானோ என்பதையே நினையாதவனாய், எப்படியாகிலும் தான் விடுபட்டுப் போய்த் தனது தாயைக் காப்பாற்ற வேண்டும் என்கிற ஒரே கவலையும், ஆவலும் கொண்டவனாய், கோகிலாம்பாளுக்குக் கடிதம் எழுதி அனுப்பத் தீர்மானித்துக் கொண்டான். கோகிலாம்பாள் தன்னிடத்திற்கு வரும்போது, அந்தத் தபால் திருட்டு விஷயத்தில் தான் சிறிதும் குற்றமற்றவனென்பதை அவளது மனம் திருப்திகரமாக நம்பும்படி தான் எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் வாய்க்கும் என்ற நினைவினாலும் கண்ணபிரான் அவளுக்குக் கடிதம் எழுதத் தீர்மானித்துக்கொண்டவனாய், இன்ஸ்பெக்டரை நோக்கி, "சரி; தாங்கள் எப்படி எழுதச் சொல்லுகிறீர்களோ அப்படியே எழுதுகிறேன். கடிதத்தை இப்போதே கொண்டு போய்க் கொடுக்கப்போகிறானா?" என்றான்.

இன்ஸ்பெக்டர் ஜேவானை நோக்கி, காகிதம், மை, இறகு முதலியவற்றை எடுத்து வரும்படி சொல்லி அவனை அனுப்பி விட்டுக் கண்ணபிரானைப் பார்த்து, "கடிதம் இப்போதே போய்ச்சேர்ந்துவிட்டால் பெண் விடியற்காலம் புறப்பட ஆயத்தமாக இருக்கும்" என்றார்.

கண்ணபிரான் அது சரியான யோசனை என்று ஒப்புக் கொண்டு அதை ஆமோதித்தவனாய், கடிதம் எழுத மிகுந்த ஆவல் கொண்டிருக்க, அடுத்த நிமிஷத்தில் காகிதமும் எழுது கருவிகளும் வந்து சேர்ந்தன. கண்ணபிரான் இருந்த அறையின் கதவும் திறந்துவிடப்பட்டது. அவன் எழுத ஆயத்தமாக உட்கார்ந்துகொண்டு இன்ஸ்பெக்டரது முகத்தைப்பார்க்க, அவர் "ஏன்? எழுதுமேன்? உம்முடைய சம்சாரத்துக்கு நீர் நிரம்பவும் வாத்சல்யமாக எழுதுவீர். கடிதம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்ல நான் அருகமற்றவன். உங்கள் இருவருக்கும் உள்ள அன்னியோன்னியம் எவ்வளவு என்பது உமக்குத்தான் தெரியும்; ஆகையால் நீரே எழுதும். ஆனால் நான் சொன்ன இரண்டு விஷயங்களை மாத்திரம் கவனித்து, சுருக்கமாகவும் பிரியமாகவும் எழுதும்" என்றார்.

உடனே கண்ணபிரான் அடியில் கண்டபடி கடிதம் எழுதலானான்.

சௌபாக்யவதி கோகிலாம்பாள் அம்மாளுக்கு ஈசனருளால் சர்வாபீஷ்டமும் சர்வமங்களமும் உண்டாவதாக.

நாமிருவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்குப் பரிபக்குவமான காலம் இன்னமும் வரவில்லை என்பது இன்றையதினம் காலையில் ஏற்பட்ட புதிய இடையூறிலிருந்து நன்றாகத் தெரிகிறது. நேற்று சாயுங்காலம் நாம் இருவரும் பூஞ்சோலையில் தனியாகச் சந்திக்க நேர்ந்தபோது திடீரென்று நேர்ந்த இடையூறுதான் நம்முடைய சுகவாழ்க்கைக்குக் கடைசியான இடையூறாக இருக்கும் என்று நான் நினைத்தேன். அதைக் காட்டிலும் பிரமாதமான பேரிடியாக இப்போது வந்து வாய்த்திருக்கிறது. பலாக்கனியின் வெளியில் கோடிக்கணக்கில் முள்களை நிறுத்தி, உட்புறத்தில் மாதுரியமான சுளைகளை வைத்துப் பத்திரப்படுத்தியிருப்பது போல, மனிதருக்காகக் கடவுள் படைத்திருக்கும் ஒவ்வோர் இன்பத்தையும் பற்பல இடைஞ்சல்கள் சூழ்ந்து பாதுகாத்திருக்கச் செய்திருக்கிறார்.

அன்றைய தினம் நீயும், உன் தங்கையும் கடற்கரைக்குப் போக ஆசைப்பட்டு, ஸாரட்டில் ஏறிக்கொண்டு போன காலத்தில் மோட்டார் வண்டியினால் உங்களுக்குப் பிராண அபாயமான விபத்து நேரப்போகிறது என்பதை நீங்கள் கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள். அதுபோல, நேற்றைய தினம் சாயுங்காலம், நீ பூஞ்சோலைக்குப் போகுமுன், ஊஞ்சற் பலகையின் அடியில் நாகப்பாம்பு வரும் என்பதை நீ எதிர்பார்த்தே இருக்கமாட்டாய். 'மனிதருடைய உயிரும் உடலும் எங்கெங்கே போகின்றனவோ, அங்கங்கே அவைகளின் நிழல் போல அபாயமும் கூடவே இருந்து வருகிறது' என்று அன்றைய தினம் நீயே சொல்லியிருக்கிறாய். ஆகையால் இன்றையதினம் எனக்கு அபாயம் நேர்ந்ததைப்பற்றி நான் உனக்கு அதிகமாகச் சமாதானம் சொல்லவேண்டுமென நினைக்கவில்லை. என்மேல் சுமத்தப்பட்டிருக்கும் மகா இழிவான இந்தத் திருட்டை நான் செய்யக் கூடியவனல்ல என்பது உன் மனசுக்கே நிச்சயமாகத் தெரிந்த விஷயம். ஆனாலும் இதனால் உனக்கு அபாரமான

விசனமும் சகிக்க முடியாத அவமானமும் மனவேதனையும் ஏற்பட்டிருக்கும் என்பதைப்பற்றி சந்தேகமே இல்லை. நான், திரிகரண சுத்தியாக, இந்தக் குற்றத்தையாவது வேறே எந்தக் குற்றத்தையாவது செய்தவனல்ல. ஆகையால் பரமதயாளுவும் மகா நீதிவானுமாகிய கடவுள் என்னை அநியாயமாகத் தண்டிக்கமாட்டார் என்று நான் உறுதியாக நம்பியிருக்கிறேன். ஆகையால், உனக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள இந்த அவமானத்தையும், துயரத்தையும் ஈசுவரன் அதிசீக்கிரத்தில் நிவர்த்திசெய்து, நாம் இருவரும் ஆநந்தம் அடையும்படி சேர்த்து வைப்பார் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம்.

கடவுள் பரம தயாநிதி. ஆகையால், அவருடைய மக்களாகிய நாம் அநியாயமாக வருந்துவதை அவர் பார்த்துக்கொண்டு அசட்டையாக இருக்காமல், எப்படியும் ஒரு வழி காட்டி உதவுவார் என்பது என்னுடைய விஷயத்தில் மெய்யாகி விட்டது. நான் இருக்கும் இந்த நிராதரவான நிலைமையில், ஒரு முக்கியமான அதிகாரியின் அநுதாபமும், உதவியும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. நான் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்பதை அவர் சந்தேகமறத் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆகையால், அவருக்கு என் விஷயத்தில் இப்படிப்பட்ட பெருத்த தயாளமும், இரக்கமும் உண்டாகி இருக்கின்றன. உடனே ஒரு வக்கீலை அமர்த்தி, என் பொருட்டு மாஜிஸ்திரேட்டினிடத்தில் போய் வாதாடச் செய்தால், என்னை ஜாமீனின் மேல் இப்போது விடுவித்துக் கொண்டு போகலாம் என்றும், பிறகு இந்த வழக்கின் விசாரணை நடக்கும்போது, தக்க ஆதாரங்களைக் காட்டி, சாட்சியங்களை விடுத்து, விடுதலை பெறலாம் என்றும், மேற்படி அதிகாரி யோசனை சொல்கிறார். அது எனக்கும் யுக்தமாகவே தோன்றுகிறது; நான் இந்தத் திருட்டு விஷயமாக உன் மனம் திருப்தி அடையும்படி சில சமாதானங்களை நேரில் சொல்லிக்கொள்ள வேண்டியிருப்பதாலும், வக்கீல் விஷயமாக ஆக வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் சொல்ல வேண்டியிருப்பதாலும், நான் இருக்கும் இடத்திற்கு நீயே நேரில் வரும்படியான சிரமத்தை உனக்குக் கொடுக்கலாம் என்று துணிந்து இந்தக் கடிதத்தை அனுப்பலானேன். நீ இங்கே வருகிறாய் என்பதைப் பிறர் அறிந்து கொண்டால், அதனால்

உனக்கு ஒருவித இழிவும், பழிப்பும், அதைப்பற்றி பிறர் புரளி செய்யும்படியான சந்தர்ப்பமும் ஏற்படும். அதுவும் அன்றி, நீ என்னிடத்தில் வந்து என்னைப் பார்ப்பதற்கு அநுமதி கொடுத்துள்ள, முன் குறிக்கப்பட்ட பெரிய உத்தியோகஸ்தருக்கு பெருத்த துன்பமும் நேர்ந்துவிடும். ஆகையால், நீ வருவது எவருக்கும் தெரியாதபடி மறைவான ஒரு பெட்டி வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டு வந்தால், இந்தக் கடிதம் கொண்டு வரும் ஆள் உன்னை நேராக என்னிடத்திற்கு அழைத்துக் கொண்டு வருவான். மற்ற சகலமான விஷயங்களையும் நாம் சவிஸ்தாரமாக நேரில் பேசிக் கொள்ளலாம்.

வீட்டிற்குள் அந்தப்புரத்தில் தெய்வம்போல வைத்துப் போற்றப்படத் தகுந்தவர்களான உன்னைப் போன்ற மெல்லியலார்களை அன்னியப் புருஷர் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட பொது ஸ்தலங்களுக்கு வரும்படி அழைப்பது, ஆண்மைத்தனம் உள்ள புருஷர் செய்யத்தக்க காரியமல்ல. ஆனாலும், வேறே வழியில்லாது இருப்பதாலும், இந்த உலகத்தில் உன்னைத்தான் நான் என்னுடைய உயிருக்கு உயிராக மதிப்பதாலும், நீ உன்னுடைய உடல், பொருள், அவி ஆகிய மூன்றையும் எனக்காக தத்தம் செய்துவிட்டதாக நேற்றைய தினம் உறுதிமொழி கூறியதைக் கருதியும், நான் இந்த அபாயத்திலிருந்து என்னைத் தப்புவிப்பதான பெருத்த கீர்த்தியையும், புண்ணியத்தையும் உனக்கே உண்டாக்கிக் கொடுக்க எண்ணி உனக்கு இவ்வாறு எழுதத் துணிந்தேன்.

ஆனால், இன்னொரு முக்கியமான விஷயம். இந்தக் கடிதம் உன்னிடத்தில் வந்து சேரும்போது, அவ்விடத்து நிலைமையும், சந்தர்ப்பமும் சரியாக இருந்தால் மாத்திரம், நீ புறப்பட்டு வரலாம்; அங்கே அசந்தர்ப்பமாக இருந்தால், நீ உன்னுடைய சௌகரியம் போல நடந்து கொள்ளலாம்.

உன்னிடத்தில் நான் இவ்வளவு அதிகமாக உரிமை பாராட்டி இந்தக் கடிதம் எழுதிய விஷயத்தைப் பற்றி நீ ஆயாசப்பட மாட்டாய் என்று நான் உறுதியாக நம்பி இருக்கிறேன். மற்றவை நேரில்

இங்ஙனம் : அன்பன்
**கண்ணபிரான்**

என்று எழுதி முடிக்கப்பட்ட கடிதத்தை கண்ணபிரான் ஒரு தரம் படித்துப் பார்த்த பிறகு மடித்து ஓர் உறைக்குள் போட்டு ஒட்டி, மேல் விலாசம் எழுதி இன்ஸ்பெக்டரிடத்தில் வணக்க மாகக் கொடுக்க, அவர் அதை வாங்கி பைசைகிலோடு வந்த ஜெவானை அழைத்து அவனிடத்தில் அந்தக் கடிதத்தைக் கொடுத்து, "அடேய் கோவிந்தசாமீ, இந்தக் கடிதத்தை ஜாக் கிரதையாக எடுத்துக் கொண்டு நீ உடனே புரசைப்பாக்கத்தி லுள்ள ராஜரத்தின முதலியாருடைய பங்களாவுக்குப் போய், உன்னோடு பேசிய கலியாணப் பெண்ணிடத்தில் இதைக் கொடு; அந்த அம்மாள் படித்துப் பார்க்கட்டும்; நாளைய தினம் காலையில் அந்த அம்மாள் வருகிறதாகச் சொன்னால், எத்தனை மணிக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நீ உன் வீட்டுக்குப் போய் படுத்துக் கொள். நாளைக்குக் காலையில் அந்த நேரத்துக்கு நீ அங்கே போயிருந்து, அவர்களைப் பெட்டி வண்டியில் வைத்து ஜாக்கிரதையாக இங்கே அழைத்துக் கொண்டு வந்து எவரும் அந்த அம்மாளைப் பார்க்காதபடி உள்ளே அழைத்துக் கொண்டு வந்து சேர். தெரிகிறதா? அந்த அம்மாள் வரச் சௌகரியப்படாது என்று சொன்னால், நீ உடனே வந்து அந்தச் சங்கதியை இவரிடத்திலும் என்னிடத்திலும் தெரி வித்து விட்டு, அதன் பிறகு உன்னுடைய வீட்டுக்குப் போ; ஒரு வேளை அந்த அம்மா வரக்கூடாமல் வேறே யாரையாவது அனுப்பினால், அவரையும் முன் சொன்னபடியே பெட்டி வண்டியில் வைத்து இங்கே அழைத்துக் கொண்டு வந்து விடு; இவர்கள் பேசி முடித்த பிறகு, அந்த அம்மாளையாவது, அல்லது அந்த அம்மாளால் அனுப்பப்படும் வேறே மனிதரையாவது நீ திரும்பவும் பத்திரமாக அவர்களுடைய ஜாகையில் கொண்டு போய்ச் சேர்த்துவிடவேண்டியது. ஏதாவது தாறுமாறாக நடந்து கொள்ளப் போகிறாய்; ஜாக்கிரதை; இனி நீ போகலாம்" என்று கண்டிப்பாகவும் அதிகார தோரணையாகவும் கூற, அவரது வார்த்தைகளையெல்லாம் நிரம்பவும் கவனமாகக் கேட்டுக் கொண்ட ஜெவான் அப்படியே நடந்து கொள்வதாகச் சொல்லி அவருக்குச் சலாம் வைத்துவிட்டு சைகில் வண்டியை உருட்டிக் கொண்டு வெளியில் போய்விட்டான்.

உடனே இன்ஸ்பெக்டர் தமது ஆசனத்தை விட்டு எழுந்து, கண்ணபிரானிடத்தில் நிரம்பவும் அன்பாகவும், குழைவாகவும் பேசத் தொடங்கி, "ஐயா! முதலியாரே! நீர் சௌகரியமாகப் படுத்துக் கொண்டு நன்றாகத் தூங்கும். உமக்கு இனி கவலையே வேண்டாம். நான் அவசரமாக வேறொரு ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். இந்த ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர் இதோ பக்கத்து அறையில் இருக்கிறார். அவரிடத்தில் நான் இந்த விவரங்களை எல்லாம் சொல்லிவிட்டு, உமக்கு ஆக வேண்டிய உதவிகளை எல்லாம் செய்யும்படி உத்தரம் செய்து விட்டுப் போகிறேன். நாளைய தினம் உம்முடைய சம்சாரம் இங்கே வந்து போன உடனே உமக்காக நியமிக்கப்படும் வக்கீல் வந்தால் தடை சொல்லாமல் அவரையும் இங்கே விடும்படியாகவும் நான் அவரிடத்தில் சொல்வதன்றி, உம்மை நாளைய தினம் மத்தியானம் வரையில் இங்கேயே வைத்திருக்கும்படி செய்கிறேன். அதற்குள் வக்கீல் மாஜிஸ்திரேட்டினிடத்தில் வாதாடி உம்மை ஜாமீனில் விடுவித்து விடுவார். ஒரு வேளை நானும் நாளை தினம் காலையில் இங்கே வந்தாலும் வருவேன். நான் வரா விட்டாலும் அதைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். உமக்கு என்னென்ன அநுகூலங்கள் தேவையோ அவைகளையெல்லாம் சப் இன்ஸ்பெக்டர் செய்து கொடுப்பார். எனக்கு நேரமாகிறது. நான் போய்விட்டு வருகிறேன்!" என்று அந்தரங்க விசுவாசத் தோடு கூறிவிட்டு அப்பால் போய்விட்டார். அங்கே நின்ற ஒரு ஜெவான் கண்ணபிரான உள்ளே அனுப்பி விட்டு இரும்புக் கம்பிக் கதவுகளை மூடிப் பூட்டுகளைப் பூட்டிக்கொண்டு அப் பால் போய்விட்டான். சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்ட கண்ணபிரான் தனக்காகக் கொடுக்கப்பட்ட படுக்கையை விரித்து அதன்மேல் சயனித்தவனாய் மறுநாள் காலையில் கோகிலாம் பாள் அங்கே வருவாள் என்றும், தான் குற்றவாளியல்ல என்று அவள் மனம் திருப்தியடையும்படி தான் நன்றாக அவளுக்கு உறுதி கூற வேண்டும் என்றும், அவள் மூலமாக ஒரு வக்கீலை வரவழைத்து வாதாடச் செய்து, ஜாமீனில் விடுதலை பெற்று, பங்களாவிற்குப் போய்த் தனது தாய்க்குத் தேவையான சிகிச்சைகளை எல்லாம் செய்து அவளைக் காப்பாற்றித் தேற்ற வேண்டுமென்றும், வேறு பலவாறாகவும் நினைத்து இன்பக்

கனவு கண்டு நெடுநேரம் வரையில் துயிலாமல் விழித்தபடியே படுத்துக் கொண்டிருந்தான்.

அவனது நிலைமை அங்ஙனமிருக்க, அவனிடத்திலிருந்து புறப்பட்ட இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை பக்கத்தில் அறையிலிருந்த சப் இன்ஸ்பெக்டரிடம் போய், "ஓய்! சப் இன்ஸ்பெக்டர்! நான் எவ்வளவோ தந்திரம் செய்து பார்த்தேன். இவனிடத்திலிருந்து உண்மையைக் கிரகிக்க முடியவில்லை. இவனைப் பார்ப்பதற்கு இப்போதாவது நாளைய தினம் காலையிலாவது யாராவது வந்தால் அவர்களை உள்ளே விட வேண்டாம். இவனைக் காலை 8 மணிக்கே அழைத்துக் கொண்டு போய் ஜெயிலில் சேர்த்து விடுங்கள். கொஞ்சமும் தாமதம் செய்ய வேண்டாம்" என்று கூறிவிட்டு அந்த ஸ்டேஷனை விட்டு வெளியிற் சென்றார். ஸ்டேஷனுக்கு வெளியில் சிறிது தூரத்திற்கு அப்பால் பைசைகிலோடு நின்று கொண்டிருந்த ஜெவான் கோவிந்தசாமியைக் கண்டு, "அடேய்! கோவிந்தசாமி! நான் கண்ணபிரானிடத்தில் பேசிய விஷயமாவது, கடிதம் எழுதி வாங்கிய விஷயமாவது சப் இன்ஸ்பெக்டருக்கும், மற்ற ஜெவான்களுக்கும் தெரிந்திருக்குமா?" என்றான்.

கோவிந்தசாமி :- அதெல்லாம் ஒன்றும் தெரியாது. நல்ல சாப்பாடு, படுக்கை முதலிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்கும்படி நான் சொன்னதைத்தான் அவர்கள் அறிந்து கொண்டு அப்படியே செய்தார்கள். நாம் செய்த தந்திரத்தை எல்லாம் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

இன்ஸ்பெக்டர் :- சரி; நல்லதாயிற்று, நீ இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு அந்தப் பங்களாவுக்கு இப்போதே போக வேண்டாம். பொழுது விடிந்தவுடனே போய், அந்தப் பெண்ணினிடத்தில் கடிதத்தைக் கொடுத்து, நிரம்பவும் சாமார்த்தியமாகவும், அவள் சந்தேகப்படாத படியும் அவளைப் பெட்டி வண்டிக்குள் அழைத்துக் கொண்டு வந்து சேர். நீ போலீஸ் உடுப்புகளைப் போட்டுக் கொண்டு போக வேண்டாம்; அவளை வண்டியில் வைத்து அழைத்துக் கொண்டு வரும்போது, அவள் சந்தேகப்படாமல் இருக்கும்படி அவளுடைய வண்டிக்காரனே வண்டியை ஓட்டிக்கொண்டு வரும்படி செய். நீயும் அவனோடே

உட்கார்ந்து கொண்டுவா. வழியில் ஆனைகெவுனியண்டை வண்டி வரும்போது அங்கே நடைப்பாதையில் பராக் கொடுத்துக் கொண்டு நிற்கிற ஜெவான், அந்த வண்டியை, நீங்கள் தப்பான பக்கத்தில் ஓட்டினீர்கள் என்று உங்களைப் பிடித்துக் கொள்ளும்படி, நான் போய் இப்போதே ஏற்பாடு செய்து விட்டுப் போகிறேன். அந்த ஜெவான் வண்டிக்காரனை மட்டும் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போகும்படி செய்கிறேன். அந்தச் சமயத்தில் நீ பெட்டி வண்டியை விசையாக ஓட்டிக் கொண்டு நாம் தயாரித்து வைத்திருக்கும் ரகஸியமான இடத்துக்கு வந்து சேர். அவள் வண்டியை விட்டு இறங்கின உடனே கண்ணபிரான் முதலியார் உள்ளே ஓர் அறையில் இருக்கிறார் என்று அவளிடத்தில் தந்திரமாகச் சொல்லி, அவள் சந்தேகப்படாதபடி அவளை உள்ளே கொண்டு வந்து விட்டு விடு. மற்ற விஷயங்களை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். தெரிகிறதா?'' என்றார்.

கோவிந்தசாமி, ''ஓ! தெரிகிறது. அப்படியே செய்து விடுகிறேன்'' என்று கூறி இன்ஸ்பெக்டரிடத்தில் பைசைகிலைக் கொடுத்துவிட்டு அவரிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு போய்விட்டான். இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை அவனால் கொடுக்கப்பட்ட பைசைகில் வண்டியில் ஏறிக்கொண்டு ஆனை கவுனி போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் செல்லலானார். அவரது மனம் நிறைய கோகிலாம்பாளின் தேஜோ மயமான அற்புத வடிவமே நிறைந்து தாண்டவமாடியது. மறுநாட் காலையில் அந்த வடிவழகி மீளாதபடி தமது வலைக்குள் வந்து வீழ்ந்து விடுவாள் என்றும், அப்போது தாம் தமது மனோ விகாரத்தை நிவர்த்தித்துக்கொள்ளலாம் என்றும் நினைத்து மானஸீகக் கோட்டை கட்டிக்கொண்டவராய், போய்க் கொண்டிருந்தார்.

## 7 – வது அதிகாரம்

# விதைக் கோட்டைக்குள் எலி

போலீசார் கண்ணபிரானைக் கைதிசெய்து பங்களாவை விட்டு அழைத்துக்கொண்டு போனபிறகு நிச்சய தார்த்தத்தின் பொருட்டு ஆயிரக்கணக்கில் வந்து கூடியிருந்த விருந்தினரும், உறவினரும், பணிமக்க ளும், ஏனையோரும் கரைகடந்த திகிலும் அளவிறந்த திகைப்பும், மட்டுக்கடங்காத் துயரமும், அபாரமான ஏக்கமும் கொண்டவர்களாய் ஒருவரோடு ஒருவர் பேசாமல் சித்திரப் பதுமைகள்போல அசைவற்று, நிசப்தமாகவும் வியப்பே வடிவாகவும் மாறிப்போயினர். அத்தகைய பெருத்த தனிகரது மாளிகையில் குதூகலமாக நடத்தப்படும் அந்தக் கலியாணச் சடங்கின் இடையில் அப்படிப்பட்ட புதுமையிலும் புதுமையான சம்பவம் நிகழுமோ என்ற சந்தேகமும், அது பொய்யோ மெய்யோ என்ற ஐயமும் கொண்டவர்களாய், வாய் திறந்து பேசவும் மாட்டாத அதி ஆச்சரியமான நிலைமையில் எல்லோரும் இருந்தனர். கண்ணபிரான் பரம ஏழை என்பது தெரிந்திருந் தாலும், அவனது நிகரற்ற பேரழகையும், அதிரமணீயமான குணாதிசயங்களையும் அடக்க ஒடுக்கத்தையும், புத்தி தீட்சண்யத்தையும் கண்டு அப்படிப்பட்ட மகாசிலாக்கியமான மாப்பிள்ளை பூஞ்சோலையம்மாளுக்கு வந்து வாய்த்தது பூர்வஜென்ம பூஜாபலன் என்று மதித்து மட்டுக்கடங்கா மகிழ்ச்சி கொண்டிருந்த அத்தனை ஜனங்களும் தத்தமக்கு நிரம்பவும் அருமையான ஒரு மனிதனைப் போலீசார் அநியாயமாக அந்த நிலைமையில் அவ்வாறு அவமானப் படுத்திக்கொண்டு போனால், எவ்வளவு அதிகமாக வருந்துவார்களோ, அதற்குமேல் பன்மடங்கு அதிகமாக மனம் நைந்து கலக்கமுற்றுக் கண்ணீர் சொரிந்தனர்; மகா உத்தம புருஷனான கண்ணபிரான் அந்தக் குற்றத்தை ஒரு நாளும் செய்திருக்கமாட்டான் என்றும், போலீசார் ஏதோ பகையை வைத்துக்கொண்டு அந்தக் குற்றத்தை

அவன்மீது சுமத்தி இருக்கிறார்கள் என்றும், நியாயாதிபதி யினிடம் உண்மை எப்படியும் வெளியாகிவிடும் ஆதலால், அவன் அதிசீக்கிரத்தில் விடுதலை அடைந்து திரும்பி வந்து விடுவான் என்றும் ஜனங்களுள் பெரும்பாலோர் நினைத்து ஒருவரோடு ஒருவர் அங்கலாய்த்துக் கொண்டனர். வேறு சிலர்; "உண்மை இன்னதென்பது ஈசுவரனுக்கும் கண்ணபிரானுக் கும்தான் தெரியவேண்டும்; ஆனால் இதில் ஒரு விஷயமிருக் கிறது. நெருப்பில்லாமல் புகை உண்டாகாது என்று ஒரு வசனம் சொல்வதுண்டு; அதுபோல, இதில் கொஞ்சமாவது இந்தக் கண்ணபிரான் சம்பந்தப்பட்டிராவிட்டால், போலீசார் அபாண் டமாக இவனைப் பிடித்துக் கொண்டுபோக என்ன காரணம் இருக்கிறது? போலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்னபடி, ஐந்தரை லட்சம் ஜனங்கள் உள்ள இவ்வளவு பெரிய பட்டணத்தில், கற்பனையாகக் குற்றம் சுமத்தப் போலீசாருக்கு இவன்தானா ஏற் படுவான். போலீசார் எவனாவது ஒரு கைதியைச் சம்பாதிக்க வேண்டுமென்றால், இப்பேர்ப்பட்ட யோக்கியனையா பார்த்துப் பிடிப்பார்கள்? சந்தேகமான நடத்தை உடையவன், குடிகாரன், மோசக்காரன், முடிச்சுமாறி, சோம்பேறி முதலிய மனிதர்கள் ஏராளமாக நிறைந்துள்ள இந்த ஊரில் அப்பேர்ப்பட்ட மனிதர் களுள் ஒருவனைப் பிடித்து தண்டனை செய்துவைப்பது எளிது. அதை நியாயாதிபதியும் எளிதில் நம்புவார். இவனைக் கொண்டுபோய் நிறுத்தி, பொய்க் குற்றத்தை ருஜுப்படுத்துவது மகா கடினமான முயற்சி என்பது போலீசாருக்குத் தெரியாதா? இவன் சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவன்; நல்ல நடத்தை யுள்ளவன்; அப்படி இருந்தும், போலீசார் இவன்மேல் குற்றம் சுமத்தியிருப்பதைப் பார்த்தால், இதில் ஏதோ சூட்சுமம் இருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. இவனுடைய வீட்டில் திருட்டுச் சொத்துக்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்தனவாம். இவர்கள் திருடா விட்டாலும், திருட்டுச் சொத்தை விலைக்காவது வாங்கியிருக்க வேண்டும். அல்லது அவைகளை ஒளித்து வைப்பதற்காவது இடம் கொடுத்திருக்கவேண்டும். என்னவோ! தெய்வச்செயலாகப் பையன் தப்பிவந்தால், அதிர்ஷ்டந்தான்" என்றனர். வேறு சிலர், "இருந்தாலும், இதனால் பெண் வீட்டா ருக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தைப்போல இந்த உலகத்தி

லேயே எவருக்கும் ஏற்பட்டிருக்காது. கலியாணப் பெண்ணுக்கு இந்தப் பையனிடத்தில் நிரம்பவும் பிரியமாம். அந்தப் பெண்ணின் கதி என்ன ஆகுமோ தெரியவில்லை. பையன் தண்டனை அடைந்துவிடுவானோ, அல்லது தப்பி வருவானோ என்பது தெரியவில்லை! அவனிடத்தில் பெண்ணுக்கு இருக்கும் ஆசையைப் பார்த்தால், அவன் தண்டனை அடைந்தால்கூட, திரும்பி வந்த பிறகாவது அவனைத்தான் இந்தப்பெண் கட்டிக் கொள்ளும்போல இருக்கிறது" என்றனர். மற்றும் சிலர், "சேச்சே! அப்படி ஒருநாளும் நடவாதப்பா. பையன் தண்டனை அடையாமல் திரும்பி வந்தால் ஒருவேளை இந்தக் கலியாணம் நடந்தாலும் நடக்கலாம். அதுகூடச் சந்தேகந்தான். ஆனால், தண்டனை அடைந்துவிட்டால், அவனுக்கு இவர்கள் பெண் கொடுக்க மாட்டார்கள். ஏனென்றால் இவர்களுக்கு இன்னொரு பெண் இருக்கிறதே, அதை வேறே யாரும் கட்ட மாட்டார்கள் அல்லவா" என்றனர்.

இவ்வாறு ஜனங்கள் எல்லோரும் பற்பல யூகங்களும் யோசனைகளும் செய்தவராய் ஒருவரோடு ஒருவர் வியப்போடு பேசிக்கொண்டிருந்தனர். சிலர், அப்படிப்பட்ட துக்ககரமான சம்பவம் நிகழ்ந்த பிறகு, அங்கே இருக்க மனம் அற்றவராய் அவ்விடத்தைவிட்டுத் தங்களது வீடுகளுக்குச் செல்லலாயினர். ஆனால் பெரும்பாலோர் கடைசி வரையில் இருந்து, அந்த விநோதச் சம்பவம் எப்படித்தான் முடிகிறது என்பதை அறிந்து கொண்டே போகவேண்டும் என்ற ஆசையும் ஆவலும் கொண்டவராய் அந்தப் பங்களாவிலேயே தங்கி இருந்தனர். அப்படி இருந்தவர்களுள் கோவிந்தபுரத்து ஜெமீந்தாரது புத்திரரும் ஒருவர். அவர்கள் எல்லோரும் தளர்வும், துயரமும் நிறைந்தவராய் விசனக் குறிகளோடு உட்கார்ந்திருந்தனர். ஆண்பாலரான ஜனங்களது நிலைமை அப்படி இருக்க, பெண்பாலார் அனைவரும் ஒன்றுகூடி கோகிலாம்பாள், பூஞ்சோலையம்மாள், கற்பகவல்லியம்மாள் ஆகிய மூவரையும் சூழ்ந்து அவர்களைத் தேற்றித் தெளிவித்து ஆறுதல் கூறி, அவர்களது வியாகுலத்தை விலக்க முயன்றுகொண்டிருந்தனர்.

தனது உயிருக்கு உயிராக மதித்து நிரம்பவும் ஆழ்ந்து காதலித்திருந்த மணாளனான கண்ணபிரானுக்கு நேர்ந்த எதிர்

பாராத பெருத்த பேரிடியையும் அவமானத்தையும் கண்டு சகிக்க வொண்ணாத துயரங்கொண்டு தத்தளித்து மயங்கி மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்த கோகிலாம்பாளை, பூஞ்சோலையம்மாள் முதலிய பெண்டீர் எடுத்து ஒரு சாய்மான நாற்காலியில் வைத்து, உடனே அவளது அந்தப்புரத்திற்குக் கொண்டுபோய் அவ்விடத்திலிருந்த அவளது கட்டிலின்மீது படுக்க வைத்து அவளது மயக்கத்தைத் தெளிவிப்பதற்குத் தேவையான பற்பல சிகிச்சைகளைச் செய்தனர். சிலர் விசிறிகொண்டு வீசினர், சிலர் தண்ணீரை வாய்க்குள் வார்த்தனர். வேறு சிலர் ஈரத்துணியைக்கொணர்ந்து முகத்தைத் துடைத்தனர். மற்றும் சிலர் அவளது அழகு வழிந்த மேனியை அலங்கரித்துக்கொண்டு அவளுக்கு இடையூறாக இருந்த ஆடை ஆபரணங்களை எல்லாம் விலக்கிப் பூஞ்சோலை அம்மாளிடத்தில் கொடுத்தனர். பூஞ்சோலையம்மாளும் தனது புத்திரியின் மணக்கோலம் அவ்வாறு அவமானக்கோலமாக முடிந்ததையும், தனது புத்திரியால் கரை கடந்து காதலிக்கப்பட்ட வடிவழகனான கண்ணபிரான் சிறைப்படுத்தப் பட்டதையும் கண்டு, சகிக்க இயலாத துயரமும், வெட்கமும், அவமானமும் அடைந்தவளாய் அங்கிருந்தோரது முகத்தைப் பார்க்கவும் அவர்களோடு பேசவும் வெட்கிக் குன்றியிருந்தாள். ஆனாலும், தனது அருமைப் புதல்வியான கோகிலாம்பாள் ஒருகால் இறந்துபோய்விடுவாளோ என்ற திகிலும் கவலையும் கொண் டவளாய், அவளைக் காப்பாற்ற முயல்வதிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தியவளாக நிரம்பவும் பதை பதைத்துத் தவித்துக்கொண்டிருந்தாள்.

கண்ணபிரானது தாயான கற்பகவல்லியம்மாளது நிலை மையே, மற்றவர்களது நிலைமையைவிட ஆயிரமங்கு பரிதாபகர மாகவும், கண்டு சகிக்க அசாத்தியமானதாகவும் இருந்தது. அந்த அம்மாள் கடைசியாகப் போலீசாரை விடாமல் நிறுத்திக் கண்ணபிரானைத் தாங்களே கொணர்ந்து கச்சேரியில் ஆஜர் படுத்துவதாகக்கூறி அவர்களை வழிமறித்தும், அவர்கள் கண்ண பிரானை அழைத்துக்கொண்டு போனதைக் கண்டு அந்த அம்மாள் சகியாமல் லபோ லபோவென்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கீழே விழுந்து பலவாறு பிரலாபித்துப் புரண்டு அழுதாள். கோகிலாம்பாள் மூர்ச்சித்துக் கீழே விழுந்

ததைக்கண்டு மற்ற எல்லோரும் ஓடி அவளுக்குச் வைத்தியோ பசாரம் செய்ததையெல்லாம் கற்பகவல்லியம்மாள் தனது துயரப் பெருக்கில் உணராமல், தணலில் வீழ்ந்த புழுவெனத் துடித்துக் கரைந்து அழுது பாகாய் உருகிக்கொண்டு கிடக்க, அதைக்கண்டு நிரம்பவும் இரக்கங்கொண்ட வேறுசில பெண்டீர், அந்த அம்மாளைப்பிடித்துத் தூக்கி அன்பாகவும் பட்சமாகவும் அவளுக்குப் பற்பல ஆறுதல் கூறி இன்னொரு விடுதியிலுள்ள ஒரு கட்டிலின்மேல் விடுத்து கண்ணபிரான் தண்டனையடைய மாட்டான் என்றும், அதிசீக்கிரத்தில் திரும்பி வந்துவிடுவான் என்றும் கூறி தைரியப்படுத்தி, தேறுதல் கூறிக்கொண்டிருந்தனர்.

தங்களுக்கு அவ்வளவு கேவலமான இழிவு ஏற்பட்டபிறகு தான் பூஞ்சோலையம்மாள் கோகிலாம்பாள் முதலியோரது முகத்தில் எப்படி விழிக்கிறது என்ற கலக்கமும், தன் மகன் தப்பி வருவானோ மாட்டானோ என்ற திகிலும் கொண்டவளாய் கற்பகவல்லியம்மாள் அழுதழுது உருகி வாடிக்கொண்டிருந்தாள். தாங்கள் எதிர்பார்க்காத அப்படிப்பட்ட மகோன்னத நிலைமை தங்களுக்குக் கிடைப்பதைப்பற்றித் தான் ஆநந்த சாகரத்தில் ஆழ்ந்து அளவளாவி இருக்க, முடிவில் கடவுள் தங்களுடைய தலையின்மீது பெருத்த இடியைக்கொணர்ந்து வைத்து தங்களைப் பாதாளத்தில் அழுத்திவிட்டானே என்ற ஏக்கமும் துயரமும் பொங்கிப்பொங்கி எழுந்தன. அப்படிப்பட்ட அருமை யான பெரிய மனிதரது சிநேகமும், பெருமைப்பாடும் தங்களுக்கு சில தினங்களுக்கு மாத்திரம் கிடைக்க ஈசன் எழுதி இருந்தானோ என்றும் அவர்கள் இனி தங்களைச் சரிசமானமாக மதிக்க மாட்டார்களே என்றும் நினைத்து நினைத்து அந்த அம்மாள் நெடுமூச்செறிந்தாள். தங்களுக்கு அவர்களது நட்பு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான ஜனங்களிற்கு எதிரில் தனது மகன் அவமானம் அடைந்து சிறைச்சாலைக்குப் போனதைவிட, அவர்களோடு பழகாத நிலைமையில் தங்களுடைய வீட்டில் இருந்தபடி போலீசார் தனது மகனைப் பிடித்துக்கொண்டு போயிருந்தால், அவன் திரும்பிவந்து பிறகு வேறே ஏழையாக இருக்கும் யாராகிலும் ஒருவர் அவனுக்குப் பெண் கொடுப்பார்களே என்றும், மலையின் அடியில் இரண்டொரு படிகளிலிருந்து தவறிவிழுந்து சொற்ப காயம் பெறாமல், திடீரென்று உச்சிக்குப்

போய்த் தலை குப்புறப் பாதாளத்தில் விழுந்து சின்னா பின்னமாகத் தெறித்துப் போவது போன்ற கதி தங்களுக்கு வாய்த்ததே என்றும் எண்ணி எண்ணிக் கற்பகவல்லியம்மாள் வாயிலும் வயிற்றிலும் உரமாக மோதிக்கொண்டாள். அப்படிப் பட்ட அபாண்டமான பெருத்த திருட்டைத் தங்களின்மேல் சுமத்த, தங்களுக்கு அப்படிப்பட்ட பகைவன் யாராவது இருக்கி றானோ என்று அந்த அம்மாள் சிந்தித்து தனது மூளையை உடைத்துக்கொண்டு பார்க்கிறாள்; அப்படிப்பட்டவன் ஒருவனாவது இருப்பதாக அவளுக்குத் தெரியவேயில்லை. கடைசியாகத் தனது புதல்வன் சொன்னபடி, தாங்கள் சிலதினங்களாக வீட்டில் இல்லாத காலத்தில், யாரோ அந்தத் திருட்டுச் சாமான்களைக் கொணர்ந்து தங்களது வீட்டிற்குள் புதைத்திருக்க வேண்டும் என்ற உறுதியே வந்து வந்து மேலாடியது. தங்களுக்குப் பகைவர் எவருமில்லை. ஆகையால் போலீஸாரே அப்படிச் செய்திருக்கவேண்டும் என்ற முடிவான எண்ணமே உண்டாயிற்று. தான் இனி அந்தப் பங்களாவில் இருப்பது தவறு என்றும், அதனால் பூஞ்சோலை அம்மாள் முதலியோருக்கு இழிவும் அவமானமும் ஏற்படும் என்றும், அவர்கள் தன்னை அவ்விடத்தைவிட்டு அனுப்புவதற்குமுன், தானே புறப்பட்டுப்போவதே மரியாதை என்றும், தான் உடனே தனது ஜாகைக்குப்போய்த் தனக்குப் பழக்கமான மனிதர்களைக் கொண்டு ஒரு வக்கீல் அமர்த்திக் கண்ணபிரானை விடுவித்துக் கொண்டு இந்தப் பாழும் பட்டணத்தைவிட்டே எங்கேயாவது கண்காணாத வெளியூருக்குப் போய் விடுவது என்றும், கற்பகவல்லியம்மாள் பலவாறு முடிவுசெய்து கொண்டவளாய் மனமாழ்கித் தளர்வடைந்து சோர்ந்து தத்தளித்துக்கிடக்க, பக்கத்தில் இருந்த இரண்டொரு பெண் பிள்ளைகள் பொதுப் படையான வேதாந்தம் பேசி, ஆறுதல் கூறிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் சொன்ன மொழிகளுள் எதையும் கற்பகவல்லி யம்மாள் செவியில் வாங்காமல், சகிக்க இயலாத மகா வேதனை யான நிலைமையில் கிடந்து சித்திரவதைப் பட்டுக்கொண் டிருந்தாள். அங்ஙனம் நிலைமை அப்படி இருக்க, கோகிலாம் பாளது நிலைமையை இனி கவனிப்போம்: அந்தத் தோகை மடமயிலாள், சோர்ந்து துவண்டு மயங்கிக்கிடந்த அந்தப்

புரத்தில், சுமார் இருநூறு ஸ்திரீகள் கூடி விசனித்துக் கண்ணீர் விட்டு அழுது, பெருத்த துக்ககரமான மரணம் நேர்ந்த இடத்தில் கூடி இருப்போர்போல அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக உட்கார்ந்திருந்தனர். பூஞ்சோலையம்மாளும், புஷ்பாவதியும் வேறு நாலைந்து உறவினருமே கோகிலாம்பாள் படுத்திருந்த கட்டிலைச் சுற்றிலும் இருந்து அவளைத் தெளிவிப்பதற்குத் தேவையான உபசரணைகள் செய்து கொண்டிருந்தனர். முன் விவரிக்கப்பட்டபடி அவர்கள் கோகிலாம்பாளுக்குப் பலவித மான சைத்தியோபசாரம் செய்யச் செய்ய, அவளது மயக்கம் தெளிவடைந்தது. அவள் தனது கைகால்களையெல்லாம் நகர்த்தவும், உடம்பை அப்புறம் இப்புறம் திருப்பவும் ஆரம்பித் தாள். அவளது மூச்சு திரும்பாமலேயே நின்று போய்விடுமோ என்றும், அவள் அப்படியே இறந்துபோய்விடப்போகிறாளே என் றும், அளவில் அடங்காப் பெருங்கவலையும் கலக்கமும், திகிலும் அடைந் திருந்தனர். ஆதலால், அவ்வாறு அவளது அங்கங்கள் அசைந்ததைக் காண எல்லோரும் கரைகடந்த மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்தவர்களாய் அவள் கண்ணைத்திறந்து கொண்டு எப்போது எழுந்து உட்காரப்போகிறாள் என்று மிகுந்த ஆவ லோடு எதிர்பார்த்து அவளது முகத்தையே இமை கொட்டாமல் உற்று நோக்கிக்கொண்டிருந்தனர்.

அவ்வாறு அரைநாழிகை நேரம் கழிந்தது. கோகிலாம்பாள் தனது கண்களை மெதுவாகத் திறந்து பார்த்தாள். பார்க்கவே, அந்த இடத்தில் ஏராளமான ஜனங்கள் நிறைந்து இருந்ததைக் கண்டு, சகிக்க இயலாத வெட்கமும் அவமானமும் அடைந்து, எவரையும் பார்க்கமாட்டாமல் உடனே தனது கண்களை இறுக மூடிக்கொண்டாள். இந்த உலகமே தன்னைப் பார்த்து ஏளனம் செய்து அவமதிப்பது போலவும், அங்கிருந்தோர் அனைவரும் தன்னைப்பார்த்துப் புரளிசெய்து நகைப்பது போலவும் அவளது மனதில் ஓர் எண்ணம் உண்டாயிற்று; ஆகவே, அவளது சரீரம் குன்றியது; உயிர் தள்ளாடியது; அவள் தனது கண்களை இறுக மூடிக்கொண்டிருந்தாள். ஆனாலும், அவளது அகக் கண்ணிற் கெதிரில் கண்ணபிரானது சுந்தரவடிவமே நீங்காமல் நின்று தாண்டவமாடிக்கொண்டிருந்தது; மகா அற்புதமான கலியாணக் கோலத்தோடு, ஒரு பெருத்த மண்டலேசுவரனது செல்வக்

குமாரனான யுவராஜன் நிற்பதுபோல அழகே நிறைவாகத் தோன்றிய அந்த மன்மத புருஷனும் தானும் பூஞ்சோலையில் மணலின்மேல் உட்கார்ந்து ஒருவரை ஒருவர் அணைந்து ஆலிங் கனம் செய்திருந்த காட்சி அவளது மனத்தைவிட்டு விலகாமல் அப்படியே நின்று கொண்டிருந்தமையால், கோகிலாம்பாள் தனது கண்ணைத் திறக்காமல், அந்த ஆனந்தக்காட்சியிலேயே தனது மனத்தை லயிக்க விட்டவளாய் உலகத்தை மறந்து சிறிதுநேரம் மௌனமாக அசைவற்றுப் படுத்திருந்தாள். அவ்வாறு அரைநாழிகை நேரம் கழிந்தது. அவளது அகக் கண்ணிலிருந்த உத்தியானவனத்துப் புதுமோகக் காட்சி சிறுகச்சிறுக மாறிக் கண்ணபிரானைப் போலீசார் விலங்கிட்டுப் பிடித்துக் கொண்டு போன மகா பயங்கரமான காட்சியாகத் தோன்றியது. மங்களகர மான நிச்சயதார்த்தச் சடங்கு நடக்கும் நல்ல சந்தர்ப்பத்தில், சகல மான ஜனங்களுக்கும் நடுவில், தனது பிராணநாதனும், உயிர் நிலையுமான கண்ணபிரானைப் போலீசார் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்ற நினைவும் விசனமும் காட்டாற்று வெள்ளம்போலப் பொங்கிப் பொங்கி மகா உக்கிரமாக எழுந்து அவளை வதைக்க ஆரம்பித்தன; தானும், கண்ணபிரானும் முதன் முதலாகத் தொட்டு ஆலிங்கனம் செய்து பேராநந்த சுகம் அநுபவித்திருந்த காலத்தில், அதற்கு இடையூறாக சௌந்தரவல்லி அங்கே திடீரென்று தோன்றி தங்களது சந்தோஷத்தையெல்லாம் தரைமட்டமாக விசனக்கடலில் ஆழ்த்தியபோதே, அது கோகிலாம்பாளது மனதிற்கு ஓர் அபசகுனமாகத் தோன்றியது; அதிலிருந்து அவளது மனதில் பலவகையான சந்தேகங்களும் கவலைகளும் தோன்றி மனதைப் புண்படுத்திக் கொண்டிருந்தன. தங்களது கலியாணம் கடைசிவரையில் நிர்விக்கினமாக முடிய வேண்டுமே என்றும், தானும் தனது ஆசை மணாளனும் கூடிக் கலந்து சந்தோஷமாக வாழவேண்டுமே என்றும் நினைத்து, அந்த விஷயத்தில் மிகுந்த கவலை கொண்டிருந்தாள். ஆதலால், இப் போது நேர்ந்த பேரிடரானது அவளால் ஒரு சிறிது எதிர்பார்க்கப் பட்டதாகவே இருந்ததனாலும், அது அவளால் சகிக்கக்கூடிய வரம்பை முற்றிலும் மீறிய மகாபிரமாதமான பொல்லாங்காகத் தோன்றியது. ஆகவே, வேடனது மகா கூர்மையான அம்பு ஹிருதயத்தில் ஊடுருவிப் பாயப்பெற்ற மணிப்புறா எவ்வாறு

உயிர்க்கழுவில் நின்று மரண அவஸ்தை அடைந்து தவிக்குமோ, அவ்வாறு கோகிலாம்பாள் துடி துடித்து ஒரே மௌனமாகப் படுத்திருக்க, அவளது அகக்கண் அந்த அபாரமான விசனத்தின் சுமையைத் தாங்கமாட்டாமல் இரத்தக் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது.

அவளது உயிர் மண்ணிற்கும் விண்ணிற்குமாக ஊசலாடியது. தனக்கும் கண்ணபிரானுக்கும் கலியாணம் முடிவதற்கு முன்பாகவே தான் அவனது விஷயத்தில் அவ்வளவு அதிகமான துயரம் அடைந்து மயங்கி அத்தனை ஜனங்களிடையில் கீழே வீழ்ந்ததைப்பற்றி, அங்கே கூடியிருந்த பெண்டீர் யாவரும் என்ன நினைத்துக்கொள்ளுவார்களோ என்ற கிலேசமும் வெட்கமும், இன்னொரு புறத்தில் மூர்த்தண்ணியமாக எழுந்து அவளைச் சகிக்கமாட்டாத சஞ்சலத்தில் ஆழ்த்தியது. அப்படிப் பட்ட விவரிக்க இயலாத மகா துன்பகரமான நிலைமையில், அத்தனை ஸ்திரீகளும் அவ்விடத்தில் சூழ்ந்துகொண்டு தனக்கு உபசரணைபுரிந்து தனது விஷயத்தில் அநுதாபம் காட்டியது அந்தப் பெண்மணிக்கு எமவாதையாக இருந்தது. ஆகையால், அவர்கள் எல்லோரும் ஒன்றும் செய்யாமல் தன்னை மாத்திரம் தனியாக இருக்கவிட்டு அப்பால் போவார்களானால், அதுவே நிரம்பவும் இன்பகரமாக இருக்கும் என்ற எண்ணமும் ஆவலும் கோகிலாம் பாளது மனத்தை வதைக்கத்தொடங்கின. ஆகையால், முன்கூறப் பட்டபடி கண்ணைத்திறந்து பார்த்த கோகிலாம்பாள் அத்தனை ஜனங்களுக்கு முன் தான் பரமவிகாரமான நிலைமையில் இருந்த தைப்பற்றி மிகுந்த லஜ்ஜையும் நாணமும் அடைந்தவளாய் அவள் தனது கண்களை மூடிக்கொண்டாள்.

அவ்வாறு அவள் கண்களைத் திறந்ததைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்த பூஞ்சோலையம்மாள் அவளது முகத்திற்கு அருகில் தனது முகத்தை வைத்துக்கொண்டு நயமாகவும் அன்பாகவும் பேசத்தொடங்கி, "கண்ணு! கோகிலா! உடம்பு என்ன செய்கிறது? டாக்டரை வரவழைக்கட்டுமா?" என்று மிகவும் தணிவான குரலில் வினவ, உடனே கோகிலாம் பாள் தனது தாயின் செவியில் மட்டும் படத்தக்கபடி நிரம்பவும் மிருதுவாகப்பேசத்தொடங்கி, "அம்மா! இத்தனை ஜனங்களுக் கும் நடுவில் இருப்பது எனக்குக் கொஞ்சமும் சகிக்கவில்லை.

வேறே யாரும் இல்லாத தனியான அறையில் என்னைக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்; எனக்கு உடம்பில் எவ்வித நோயும் இல்லை; டாக்டருக்குச் சொல்லியனுப்ப வேண்டாம்; நீங்களும் புஷ்பாவதியம்மாளும் மாத்திரம் என்னோடு இருந் தால், அதுவே போதுமானது; என் உடம்பில் ஒன்றுமில்லை; நான் இன்னம் கொஞ்ச நேரத்தில் எழுந்துவிடுவேன்'' என்று ரகசியமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள் சிறிது தயக்கம் அடைந்தாள். அவ்வளவு பட்சமும் அநுதாபமும் காட்டி உபசரணை புரியும் ஸ்திரீகளையெல்லாம் அப்பால் போகும்படி தான் எப்படி தெரிவிக்கிறது என்பதை உணராது பூஞ்சோலையம் மாள் தத்தளித்தாள். அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த புஷ்பாவதியும் கோகிலாம்பாள் சொன்ன சொற்களை நன்றாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆதலால், பூஞ்சோலையம்மாள் இன்ன காரணத்தினால் தயங்குகிறாள் என்பதை அவள் சுலபத் தில் யூகித்துக்கொண்டவளாய், சடக்கென்று எழுந்து நின்று பூஞ் சோலையம்மாளை நோக்கிப் பேசத்தொடங்கினாள். ஆனால் அவள் அந்த விடுதியில் இருந்த சகலமான ஜனங்களுக்கும் கேட்கும்படியாக உரக்கப்பேசி, ''குழந்தைக்கு உடம்பில் ஒன்று மில்லையாம்; நிம்மதியாக அரைநாழிகை நேரம் தூங்கினால், உடம்பு தெளிந்துபோகுமாம். குழந்தையை இந்த இடத்திலிருந்து மறுபடியும் தூக்கி இன்னோர் அறைக்குக் கொண்டுபோய் உபத்திரவப்படுத்துவதைவிட நாங்கள் எல்லோரும் பக்கத்து அறையில் போயிருப்பதே சுலபமானதாகவும், சுகமானதாகவும் தோன்றியது. நாங்கள் எல்லோரும் இங்கே இருந்து என்ன பிரமாதமான காரியம் செய்கிறோம். ஒன்றுமில்லை'' என்று ஓங்கிக் கூறிவிட்டு, பக்கத்தில் இருந்த ஒரு ஸ்திரீயைப்பார்த்து மகிழ்ச்சியும் புன்னகையும் தோற்றுவித்த முகத்தோடு, ''சரி; எழுந்திருங்கள்; நாம் எல்லோரும் பக்கத்து அறைக்குப் போவோம்'' என்றாள். அவளது வார்த்தைகள் மணியடிப்பது போல கணீர் கணீர் என்று ஒலித்தன. ஆகையால், அங்கிருந்த எல்லோரது செவியிலும் அவைகள் தெளிவாக வீழ்ந்தன. உட்கார்ந்திருந்த ஸ்திரீகள் எல்லோரும் உடனே குபீரென்று எழுந்து ஒருவரையொருவர் மிகுந்த சந்தோஷத்தோடு நோக்கி,

“சரி; வாருங்கள் பக்கத்து அறைக்குப் போவோம், குழந்தை கொஞ்சம் தூங்கட்டும்” என்று கூறிக்கொண்டு பக்கத்தில் இருந்த இன்னொரு பெரிய மண்டபத்திற்குச் செல்லலாயினர்.

மற்ற எல்லோரும் அந்த அந்தப்புரத்தைவிட்டு வெளியில் போனவுடனே புஷ்பாவதி பூஞ்சோலையம்மாளை நோக்கிப் புன்னகை செய்து, “நானும் போய்ப் பக்கத்து மண்டபத்தில் இருக்கட்டுமா? நீங்கள் மாத்திரம் இருக்கிறீர்களா? குழந்தை திடீ ரென்று ஏதாவது வேண்டும் என்று கேட்டால், நீங்கள் குழந்தை யைத் தனியாக விட்டுப்போக நேருமே. நான் வெளியில்போய் என்ன செய்யப்போகிறேன்? தங்களுக்கு ஆட்சேபணை இல்லாவிட்டால், நானும் இங்கேயே இருக்கிறேன்” என்றாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள், அவளை அனுப்புவது மரியாதைக் குறைவென நினைத்து, “குழந்தை போகும்படிச் சொன்னது, கும்பலாக இருந்த மற்றவர்களையே அன்றி உங்க ளையல்ல. நீங்கள் இருப்பதற்குத் தடையென்ன? நீங்கள்தான் நம்முடைய வீட்டு மனிதர் ஆகிவிட்டீர்களே!” என்று மகிழ்ச்சி யோடு நயமாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட புஷ்பாவதி மிகுந்த களிப்படைந்தவள் போலக்காட்டிக்கொண்டு, அந்த அந்தப்புரத்தின் வாசற்கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டு கட்டிலண்டை வந்து, தான் முன்பு உட்கார்ந்திருந்த இடத்தில் உட்கார்ந்து கொண் டாள். புஷ்பாவதியும் அங்கே இருப்பதைப்பற்றி பூஞ்சோலை யம்மாள் மகிழ்ச்சி கொண்டவள் போலப் பேசினாள். ஆனா லும், தனது இளைய குமாரியான சௌந்தரவல்லியைக் கலி யாணம் செய்துகொள்ளப்போகும் சம்பந்தியின் வீட்டு முக்கிய மனுஷியான புஷ்பாவதிக்கு எதிரில் தங்களுக்கு அப்படிப்பட்ட அவமானமும் இழிவும் நேர்ந்து விட்டனவே என்ற எண்ணத் தினால், மிகுந்த லஜ்ஜையடைந்து அவளைப் பார்க்கவும் கூச்ச முற்றுக் குன்றிப்போயிருந்தாள். ஆனாலும், அந்த அம்மாள் வெளி யில் காட்டிக்கொள்ளாமல், அவளிடத்தில் மிகுந்த அன்னி யோன்னியம் பாராட்டி மொழிந்தாள்.

அப்போது தனது சுய உணர்வோடு கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்த கோகிலாம்பாளது மனநிலைமையும்

அப்படியே இருந்தது. இருந்தாலும் தனக்குக் கணவனாக வரிக்கப்பட்ட கண்ணபிரான் அந்தக் குற்றத்தைச் செய்தவன் அல்லவென்று புஷ்பாவதியும் மற்ற எல்லோரும், தன்னைப் போலவே எண்ணிக்கொண்டிருப்பார்கள் என்றும், ஆகையால் அந்த விபரீதமான சம்பவத்தைப்பற்றி அவர்கள் எல்லோரும் தங்களிடத்தில் உண்மையான விசனமும் அனுதாபமும் காட்டு வார்களன்றி தங்களைப்பற்றி இழிவாக நினைத்து ஏளனம் செய்யமாட்டார்கள் என்றும் கோகிலாம்பாள் எண்ணி இரண்டொரு நிமிஷநேரத்தில் தனது கண்களைத் திறந்து கொண் டவளாய்ப் படுக்கையைவிட்டு எழுந்து உட்கார்ந்து பக்கத்தில் இருந்த திண்டில் அயர்வாகச் சாய்ந்து கொண்டவளாய்த் தனது தாயை நோக்கி, "அம்மா! நீங்களெல்லோரும் என்னையே கவனித்துக் கொண்டிருக்கிறீர்களே! உங்களுடைய புதிய சம்பந்தி அம்மாள் எங்கே? நம்மைவிட அவர்கள் இந்த விஷயத்தில் நிரம்பவும் அதிகமான துக்கமும் அவமானமும் அடைந்து சங்கடப்பட்டுக் கொண்டிருப்பார்களே! அவர்களை யாராவது கவனிக்கிறார்களா? இப்போது நேர்ந்த சம்பவத்திலிருந்து நாம் அவர்களின்மேல் அருவருப்புக் கொள்ளுவோம் என்று நினைத்து நமக்குத் தெரியாமல் ஒருவேளை பங்களாவை விட்டுப் போய்விட்டார்களோ என்னவோ ஒன்றும் தெரியவில்லையே?" என்று நிரம்பவும் கவலையாகவும் அன்பாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள், "அம்மா! கோகிலா; அந்த அம்மாளுடைய நிலைமை உன்னுடைய நிலைமையைவிட நிரம்பவும் பரிதாபகரமாக இருக்கிறதாம். போலீஸ்காரர் போன வுடனே அவர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கீழே விழுந்து புரண்டு பிரலாபித்து நிரம்பவும் சங்கடப்பட்டுக் கதறி அழுதார்கள். நான் சிலரை விட்டு, அவர்களை என்னு டைய படுக்கையறைக்கு அழைத்துக் கொண்டுபோய்த் தேறுதல் சொல்லி, அவ்விடத்திலேயே இருக்கச்செய்யும்படி சொல்லி அனுப்பினேன்; அப்போது நீ ஸ்மரணை தப்பிக் கிடந்தாய். ஆகையால், நான் நேரில் போய் அவர்களைப் பார்க்கக்கூடாமல் போய்விட்டது. நீ இப்போதுதான் விழித்துக்கொண்டாய். அந்த அம்மாள் என்னுடைய படுக்கையறையிலேயே இருப்பதாகவும் ஒரு வேலைக்காரி கொஞ்சநேரத்துக்குமுன் வந்து சொன்னாள்.

அவர்களால் நமக்குப் பெருத்த அவமானமும் தலை குனிவும் ஏற்பட்டு விட்டனவே என்றுதான் அந்த அம்மாள் நிரம்பவும் துயரப்படுவதாக வேலைக்காரி சொன்னாள்'' என்றாள்.

அந்த வரலாற்றைக்கேட்ட கோகிலாம்பாளது மனம் இளகியது; கண்களிலிருந்து கண்ணீர் சரேலென்று பொங்கி வழிந்தது. சகிக்கமாட்டாத பெருத்த விசனம் தோன்றி அவளது சுந்தர வதனத்தைக் கப்பிக்கொண்டது. அந்தப் பெண்மணி உடனே தனது தாயை நோக்கி, ''அம்மா! இப்போது உடம்பில் அசௌக்கியம் ஒன்றுமில்லை. நீங்கள் இனி என்னிடத்தில் இருக்க வேண்டும் என்பதில்லை. நீங்கள் உடனே அந்த அம்மாளிடம் போய் அவர்களைத் தேற்றுங்கள். ஒருவேளை அவர்கள் புறப்பட்டுப்போனாலும் போய்விடுவார்கள்; அதற்குள் நீங்கள் போகவேண்டும். அவர்களுடைய பிள்ளையின்மேல் சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றம் பகைவராலோ அல்லது போலீசாராலோ கட்டுப்பாடாகக்கொண்டு வரப்பட்டு இருக்கிறதென்று நாம் உறுதியாக நம்புகிறோம் என்றும், அவர்களுடைய விஷயத்தில் நாம் இதுவரையில் வைத்திருந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் ஓர் இம்மியளவும் குறைவு ஏற்படாது என்றும், நாம் ஆயிரமல்ல, லக்ஷமல்ல, பணத்தைச் செலவிட்டு, கீர்த்தி வாய்ந்த கெட்டிக்கார வக்கீல் ஒருவரை அமர்த்தி வாதாடச் செய்து அவரைத் தப்புவிக்கலாம் என்றும், நம்முடைய முயற்சிக்கும் மீறி தெய்வ சங்கற்பத்தினால், அவருக்கு சர்க்கார் தண்டனை ஏற்பட்டால்கூட, நான் அவருக்கே வாழ்க்கைப்படுவது நிச்சயம் என்றும், நீங்கள் அவர்களுக்கு உறுதிமொழி சொல்லி, அவர்களைத் தேற்றி இங்கேயே இருக்கச் சொல்லுங்கள்; அவர்களுடைய பிள்ளைகூட இல்லாத இந்த நிராதரவான நிலைமையில், அவர்கள் வேறே எங்கேயும் போகக் கூடாது. அவர்கள் விசனப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்களைச் சேர்ந்த பொறுப்பு. கலியாணத்துக்கு வந்த ஜனங்கள் எல்லோரும் இன்று முழுதும் இருந்து, அவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கும் விருந்தை உண்டு விட்டுப் போகும்படி ஆள்கள் மூலமாக எல்லோருக்கும் செய்தி சொல்லியனுப்புங்கள். இந்தப் பழி அபாண்டமாக ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர் விடுதலையடைந்து வந்தவுடனே

மறுபடியும் முகூர்த்தப் பத்திரிகை அனுப்புவதாகவும், அவர்கள் இப்போதுபோல மறுபடியும் வந்திருந்து கலியாணத்தை நடத்திவைக்க வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்வதாகவும் ஜனங்களுக்குச் சொல்லியனுப்புங்கள். இனி என்னைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்; நேரமாகிறது. நீங்கள் முதலில் அவர்களிடம் போங்கள்" என்று வற்புறுத்திக் கூறினாள்.

அவளது வசனத்தைக் கேட்ட பூஞ்சோலையம்மாள் சிறிதும் யோசிக்காமல், "சரி; நான் போய் நீ சொன்னபடியே செய்கி றேன். நீ எழுந்து எங்கேயும் நடக்கவேண்டாம். இங்கேயே படுத் திரு; புஷ்பாவதியம்மாள் உனக்குத் துணையாக இங்கே இருப்பார்கள். அவர்களிடத்தில் பேசிக்கொண்டிரு" என்று கூறிவிட்டு, அன்பும் புன்னகையும் அரும்பிய முத்தோடு புஷ்பாவதியை நோக்கி, "நான் போய்விட்டு வரட்டுமா? அதுவரையில் இங்கேயே இருக்கிறீர்களா?" என்று கேட்க, அவள் "ஓ! போய்விட்டு வாருங்கள்; கோகிலாவைத் தனியாக விடக் கூடாது; நான் இங்கேயே இருக்கிறேன்" என்று கூறினாள். உடனே பூஞ்சோலையம்மாள் அவ்விடத்தைவிட்டுப் போய் விட்டாள்.

அவ்வாறு கோகிலாம்பாளோடு தனியாக விடப்பட்ட புஷ்பாவதி உடனே கோகிலாம்பாளிடத்தில் எந்த வார்த்தையும் சொல்லாமல், எதையோ கவனிப்பவள் போலத் தனது முகத்தை வேறே பக்கமாகத் திருப்பிக் கொண்டாள். ஏனென்றால், கோகி லாம்பாள் தனது தாயினிடத்தில் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடனே அவளது முகம் சடக்கென்று மாறிவிட்டது; மனம் நிரம்பவும் சஞ்சலம் அடைந்து சிந்தனையில் ஆழ்ந்தது. அன்றையதினம் கண்ணபிரானுக்கு நேர்ந்த அவமானத்திலிருந்து, அவனைக் கலியாணம் செய்து கொள்ளக் கூடாது என்ற உறுதி கோகிலாம்பாளுக்கும் அவளது தாய்க்கும் ஏற்பட்டிருந்தது என்றும், தனது அண்ணனைக் கலியாணம் செய்துகொள்வதற்கு அப்போதாவது அவர்கள் இணங்குவார்களென்றும் அதுவரையில் புஷ்பாவதி எண்ணியிருந்தாள். ஆனால் கண்ணபிரான் தண்டனை அடைந்தால்கூட, தான் அவனையே கலியாணம் செய்துகொள்ளப் போவதாக அந்த அழகிய மடந்தை உறுதி

யாகக் கூறிய வார்த்தையைக் கேட்கவே, புஷ்பாவதியின் மனமும் முகத்தோற்றமும் உடனே மாறுபட்டுவிட்டன. அதை அவள் அறியாதபடி தான் மறைத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தோடு, புஷ்பாவதி தனது வதனத்தை வேறே பக்கத்தில் திருப்பி இரண்டொரு நிமிஷநேரம் அப்படியே இருந்து, தனது சஞ்சலத்தை அடக்கிக்கொண்டு கோகிலாம்பாளின் பக்கம் திரும்பி, "அம்மா கோகிலா! நீ நல்ல விவேகி என்பதை நான் பல தடவைகளில் அறிந்துகொண்டிருக்கிறேன். உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இருந்தாலும், இன்றைய தினம் நேர்ந்த மகா விசனகரமான விஷயத்தினால் உன் மனம் நிரம் பவும் கலங்கி மயங்கிப்போயிருக்கிறது என்பது நீ மூர்ச்சித்துக் கீழே விழுந்ததிலிருந்தே நன்றாக விளங்கும். இந்தச் சந்தர்ப் பத்தில் உன் மனசுக்குச் சில விஷயங்கள் படாமல் போவது இயற்கைதான். அதைப் பிறர் எடுத்துச் சொல்லத்தான் வேண்டும். அதைப்பற்றி நீ ஆயாசப்பட மாட்டாய் என்று நான் நம்புகிறேன். நீ இப்போது உன்னுடைய அம்மாளிடத்தில் சொல்லியனுப்பிய சங்கதிகளில் இரண்டொரு விஷயம் என் மனசுக்கு சரியாகத் தோன்றவில்லை. நான் சொன்னால் உனக்கு என் மேல் கோபம் உண்டாகுமோ என்னவோ!" என்று நயமாகவும், உருக்கமாகவும், உரிமையாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட கோகிலாம்பாளது முகம் உடனே மாறு பட்டது. அவள் புஷ்பாவதியை நோக்கி, "நான் சொன்ன எந்த விஷயம் சரியாகத் தோன்றவில்லை. சும்மா சொல்லுங்கள். ஒரு வருக்கொருவர் அபிப்பிராயபேதம் ஏற்படுவது ஸகஜமே. அதைப்பற்றி ஒருவருக்கொருவர் ஆயாசப்படலாமோ; ஒரு நாளும் கூடாது. பரவாயில்லை; நீங்கள் சொல்லுங்கள்" என்று அடக்கமாகவும் இனிமையாகவும் மறுமொழி கூறினாள்.

உடனே புஷ்பாவதி, "அம்மா! ஒரு மனிதருக்கு ஏதாவது துன்பம் நேர்ந்துவிட்டால், அவருக்கு மற்றவர் தம்மால் இயன்ற வரையில் ஆறுதல் சொல்லி, அவர்களுடைய விசனத்தைக் குறைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுபோல, இப்போது இந்தக் கற்பகவல்லியம்மாளுக்குத் தேறுதல் சொல்லும்படி நீ உன்னுடைய அம்மாளை அனுப்பியது நியாயமான காரியம். ஆனால், அந்த அம்மாளுடைய பிள்ளை விடுதலையடைந்தாலும்

சரி அல்லது தண்டனை அடைந்தாலும் சரி, அவரைத்தான் கட்டிக்கொள்வேன் என்று நீ கற்பகவல்லியம்மாளுக்கும் மற்ற ஜனங்களுக்கும் சொல்லும்படி அம்மாளிடத்தில் சொன்னதுதான் என் மனசுக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. அவர் யாதொரு குற்றமும் செய்யாதவர் என்று கச்சேரியில் மெய்ப்பிக்கப் பட்டதன் மேல், அவர் விடுதலையடைந்தால்கூட அவருக்கு ஒரு களங்கம் ஏற்பட்டுப்போகும். அவரைக் கலியாணம் செய்து கொண்டால் ஜனங்கள் இளக்காரமாகப் பேசி ஏளனம் செய் வார்கள். அதுவாகிலும் பரவாயில்லை என்று வைத்துக் கொள்ள லாம். ஏனென்றால், யானைக்கும் அடிசறுக்கும் என்பார்கள். அதுபோல எப்படிப்பட்டவருக்கும் எதிர்பாராத அபாயம் சம்பவிப்பது உண்டு. அதனால் அவர்களைத் தள்ளிவிடுவது தருமம் ஆகாது. அப்படி அவர் விடுதலையடைந்தால், அவரை நீ கலியாணம் செய்து கொள்வது இரண்டாவது பட்சமாக இருந்தாலும் அதைப்பற்றி யாரும் நேரில் வந்து ஆட்சேபிக்க முடியாது. ஆனால், அவர் குற்றவாளிதான் என்று கச்சேரியில் தீர்மானிக்கப்பட்டதன்மேல் தண்டனை அடைந்து, தண்டனை காலத்துக்குப் பிறகு, அவர் வரும்போது அவரை நீ கட்டிக் கொள்வது ஜனசம்மதமான காரியமும் அல்ல; நியாயமும் ஆகாது. இந்தச் சங்கதியைக் கேட்டு கற்பகவல்லியம்மாள் கரை கடந்த சந்தோஷமடைய ஏதுவுண்டு; ஆனால், மற்ற ஜனங்கள் இதைக் கேட்டால் அதிருப்தியடைந்து நிரம்பவும் கேவலமான அபிப்பிராயத்தோடு புறப்பட்டுப் போவார்கள். அவர்கள் தங்களுடைய மனசில் உள்ளதை இங்கே வெளியிடப் போகிற தில்லை. ஆனாலும், வெளியில் போய் ஏளனமாகப் பேசுவார்கள் என்பது நிச்சயம்,'' என்று மிகமிக விநயமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட கோகிலாம்பாள், ''நீங்கள் சொல்வது நியாயமான விஷயந்தான். இருந்தாலும், அவர்களுடைய குணாதிசயங்களைப் பற்றி நாங்கள் நிரம்பக் காலமாகக் கேள்வியுற்று நன்றாகத் திருப்தி செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்பது சத்திய மான விஷயம். ஆகையால், அவர்கள் விடுதலையடைவது நிச்சயம். ஒருவேளை பொய்ச்சாட்சியின் உதவியால் தண்டனை ஏற் பட்டால், அது அநியாயமான தண்டனை. ஆகையால், அப்

போதும், நாம் அவர்களைக் கைவிட நியாயம் இல்லை. கச்சேரி யில் அக்கிரமம் நடந்துவிட்டது என்று நாமும் அக்கிரமம் செய்து விடலாமா? ஒரு நாளும் செய்யக்கூடாது. ஊரில் இருக்கும் ஜனங்களுக்கு உள் விஷயம் எல்லாம் என்ன தெரியப்போகிறது? உலகம் பலவிதம். ஊரில் உள்ளவர்கள் அவரவர்களுக்குத் தோன்றியபடி பேசுவார்கள். எல்லோரையும் திருப்தி செய்ய நம்மால் ஆகுமா? ஒரு கிழவனும் அவனுடைய பேரனும் கழுதையைக் கட்டித் தூக்கிய கதைபோல நம்முடைய காரியம் முடியும். யார் எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும் என்று நமக்கு எது நியாயமாகத் தோன்றுகிறதோ அதைத்தான் நாம் செய்ய வேண்டும்,'' என்றாள்.

அதைக்கேட்ட புஷ்பாவதி கோகிலாம்பாளை அன்பாக நோக்கிப் புன்னகை செய்து, "நீ சொல்வது நிரம்பவும் சரியான நியாயம், அதைப்பற்றி சந்தேகமில்லை. ஜனங்கள் சொல்வது சில சமயங்களில் தவறாக இருந்தாலும், வெகுஜனவாக்கை நாம் முற்றிலும் உல்லங்கனம் செய்வது உசிதமாகாது. அது போனாலும் போகட்டும் என்றால், உனக்கு ஒரு தங்கை இருக் கிறாள். அவளுக்கும் கலியாணம் ஆகவேண்டும். நீ சொல்லும் நியாயத்தைக் கேட்டுத் திருப்தியடைந்து, நாங்கள் அவளைக் கலியாணம் செய்து கொள்கிறதாக வைத்துக்கொண்டாலும், எங்களைச் சேர்ந்த மற்ற பந்து ஜனங்கள் எல்லோரும் எங்களைத் தூஷித்து ஏளனம் செய்து விலக்கிவிடுவார்கள் அல்லவா? மூத்த பெண் தண்டனை அடைந்த மனிதரைக் கட்டிக் கொண்டிருக் கிறாள். அந்த இடத்தில் நீங்கள் எப்படிப் பெண் கொண்டீர்கள் என்று அவர்கள் எங்களைக் கேட்டால், நாங்கள் மறுமொழி சொல்வது என்ன இருக்கிறது? நாங்கள் மாத்திரம் இப்படிச் சொல்வோம் என்று நினைக்காதே. சௌந்தரவல்லியை நீங்கள் எங்களுக்குக் கொடுக்காமல், வேறே இடத்தில் கொடுப்பதாகவே வைத்துக் கொண்டு பேசுவோம்; அவர்களும் இப்படித்தான் நினைத்துப் பயப்படுவார்கள். ஆகையால், அந்த விஷயத்தை நீ அவசியம் கவனிக்கவேண்டும். ஏதடா இவர்கள் இப்படிச் சொல்லுகிறார்களே, இவர்கள் இல்லாவிட்டால், சௌந்தர வல்லிக்கு வேறே இடம் அகப்படாதா என்று நீ நினைக்கக் கூடாது'' என்று நிதானமாகவும், தங்களைப் பற்றிப் பேசாமல்

பொதுவான உலக நியாயத்தை எடுத்துப் போகிறவள் போலவும் மொழிந்தாள்.

அதைக்கேட்ட கோகிலாம்பாள், ''ஆம் அம்மா! நீங்கள் சொல்லுகிறபடி சொந்தக்காரர்களுடைய உபத்திரவம் கொஞ்சம் ஏற்படும் என்பது உண்மைதான். அப்படி இருந்தாலும் நாம் நியாயமான காரியத்தையே செய்கிறோம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளும்படி எடுத்துச் சொன்னால், அவர்களும் ஒப்புக்கொள்வார்கள். ஆரம்பத்தில் சொற்ப காலத்துக்கு அவர்கள் அதிருப்தி அடைந்திருந்தாலும், உண்மை தெரியத் தெரிய, காலக் கிரமத்தில், அவர்கள் திருந்தி விடுவார்கள் என்பதைப் பற்றி சந்தேகமே இல்லை. இப்போது நீங்கள்தான் இருக்கிறீர்கள். உங்களுடைய தமயனாருக்கு செளந்தரவல்லியைக் கட்டிக் கொடுக்க நிச்சயமாகி விடுகிறதாக வைத்துக் கொள்ளுவோம். நீங்கள் எந்தத் தவறையும் செய்யாத நல்ல யோக்கியமான மனிதர்கள் என்பது எங்களுக்குச் சந்தேகமறத் தெரிந்திருக்கிறது. கிரகசாரத்தினால் திடீரென்று உங்களுக்கு எதிர்பாராத இடர் ஏதாவது வந்துவிட்டால், சொந்தக்காரர்கள் தூஷிப்பார்களே என்று பயந்து நாங்கள் உங்களை விட்டுவிட முடியுமா? உங்களுக்கு அநியாயமாகத் துன்பம் சம்பவித்துவிட்டது ஆகையால், நாங்களும் பெண்ணைக் கொடுக்க முடியாது என்று சொல்வது நியாயமாகுமா? எப்போது நாம் ஒருவருக்கொருவர் சம்பந்தம் செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டோமோ, அப்போது எங்களுடைய நன்மை தீமைகளை நீங்கள் உங்களுடையவையாக மதிக்க வேண்டும்; அதுபோலவே, நாங்களும் பரஸ்பரம் மதிக்க வேண்டும். அதுதான் நெருங்கிய பந்துக்களுக்கும் தூரத்தில் இருக்கும் ஜனங்களுக்கும் வித்தியாசம்; ஒரு மனிதருக்கு அபாண்டமான ஓர் அவமானம் நேர்ந்துவிட்டால் தூர பந்துக்கள் உண்மையை அறிந்துகொள்ளாமல் அப்படித்தான் ஏளனம் செய்து இழிவுபடுத்தி, கிணற்றில் விழுந்தவனுக்கு மேல் கல்லைப்போட்டு உள்ளே ஆழ்த்துவதுபோல, இன்னமும் அதிகரித்த துன்பத்தில் ஆழ்த்தி அவன் தலையெடுக்காதபடி அடிப்பார்கள். உண்மையான பிரியமும், உருக்கமும் உடைய நெருங்கிய பந்துக்கள், பிறருடைய பழிப்பைத் திரணமாவது மதிக்காமல், தங்களாலான உதவியைச் செய்து, தாம் கைதூக்கி

விட அதுதான் சரியான சமயம் என்று எண்ணி, முன்னுக்கு வந்து ஆதரித்து, அந்த அவமானத்தை விலக்கி, தூர பந்துக்கள் தாம் செய்தது தவறு என்று உணர்ந்து வழிக்கு வரும்படி செய்வார்கள். ஆகையால், நீங்கள் நியாயத்துக்குக் கட்டுப்பட வேண்டுமே யன்றி, அநியாயத்தைக் கண்டு பயந்து அதற்குக் கட்டுப்பட்டு நடப்பது சரியாகுமா? பிறகு, தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர் களுக்கும் என்ன பேதம் இருக்கிறது! எங்களிடத்தில் உங்களுக்கு இருக்கும் அந்தரங்கமான பிரியத்தைக் கருதி, நீங்கள் கொஞ்சம் பிரயாசை எடுத்துக் கொண்டு, உங்களுடைய பந்துக்கள் எல்லோருக்கும் நியாயத்தை எடுத்துச்சொல்லி அவர்கள் திருப்தி அடையும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நீங்கள் எங்களுக்கு அபாண்டமாக ஏற்பட்ட இந்தக் களங்கத்தை விலக்கி தான பேருதவியைச் செய்தவர்களாவீர்கள்'' என்று நிரம்பவும் விநயமாகவும், மனதில் பதியும்படி அவ்வளவு அதிக உருக்கமாகவும் கூறினாள்.

அவளது மனோதிடத்தையும் உறுதியையும் கண்ட புஷ்பா வதியம்மாள், அதற்குமேல் அவளை அதிகமாக வற்புறுத்தக் கூடாது என்ற நினைவைக் கொண்டவளாய், "சரி; நீ சொல்வது நியாயமான விஷயம். நான் சொன்னது எங்களைக் குறித்தல்ல; நான் பொதுவான உலக நியாயத்தை எடுத்துச் சொல்லி உன்னு டைய மனசு எப்படி இருக்கிறது என்று பரீட்சித்துப் பார்த்தேன். இந்தக் கண்ணபிரான் முதலியாரும், அவருடைய தாயாரும் நிரம்பவும் யோக்கியமான மனிதர்கள் என்பது நன்றாகத் தெரி கிறது. அவர்கள் ஒருநாளும் இப்படிப்பட்ட இழிவான காரியத் தில் இறங்கக் கூடியவர்கள் அல்ல. இது போலீசாரால் கற் பனையாகக் கொண்டுவரப்பட்டது என்றே நான் எண்ணுகி றேன். நாம் இந்த ஆபத்துக் காலத்தில் அவர்களைக் கைவிடக் கூடாது; நம்மாலான உதவிகளையெல்லாம் செய்து அவரை விடு விக்கும்படியான வழிகளைத் தேட வேண்டும். என்னுடைய தமயனாருக்கும், எனக்கும் எப்படியாவது உங்களுடைய வீட்டி லேயே சம்பந்தம் செய்ய வேண்டும் என்ற ஒரே பிடிவாதமான எண்ணம் இருந்து வருகிறது; கட்டினால் உன்னைக் கட்டுகிறது; இல்லையானால், உன்னுடைய தங்கையைக் கட்டுகிறது என்பதே எங்களுடைய முடிவான தீர்மானம். எங்களுடைய பந்துக்கள்

இதைப்பற்றி எப்படியாவது எண்ணிக் கொள்ளட்டும்; அவர்கள் கலியாணத்துக்கு வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி; நீ சொல்லுகிறபடி உண்மையை எடுத்து அவர்களுக்கு எல்லாம் நாங்கள் சொல்லிப் பார்க்கிறோம். அவர்கள் அதை நம்பி வந்தால் வரட்டும்; இல்லாவிட்டால், இருக்கட்டும். நாம் நம்முடைய கலியாணத்தை நடத்திவிடுவோம். ஆனால் இதில் ஒரு விஷயம் இருக்கிறது; இந்த வழக்கின் விசாரணை எல்லாம் தீர எவ்வளவு காலம் பிடிக்குமோ? தெய்வச் செயலாக, அவருக்கு இரண்டாரு வருஷம் தண்டனை ஏற்படுமானால் அவர் திரும்பி வந்த பிறகு உன்னுடைய கலியாணம் நடக்கப்போகிறது. அது வரையில் உன்னுடைய தங்கையின் கலியாணத்தையும் ஒத்தி வைக்க நேருமல்லவா?'' என்றாள். அதைக்கேட்ட கோகிலாம் பாள் புஷ்பாவதி தங்களிடத்தில் வைத்திருந்த அந்தரங்கமான பிரியத்தையும் பரிவையும் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந் தவளாய், புன்னகையோடு அவளை நோக்கி, "அம்மா! நீங்கள் எங்களிடத்தில் வைத்திருக்கும் உண்மையான மதிப்பையும் அன்பையும் காண, எனக்கு நிரம்பவும் சந்தோஷம் உண்டா கிறது. ஏதோ இப்படிப்பட்ட ஆபத்துக் காலத்தில், தெய்வச் செய லாகத்தான் உங்களைப்போன்ற சிரேஷ்டமான மனிதர்களுடைய சிநேகம் எங்களுக்கு ஏற்பட்டது. இந்த வழக்கின் விசாரணை இன்னம் இரண்டொரு மாசகாலத்தில் முடிந்து போகலாம். உடனே அவர்கள் விடுதலையடைந்து வந்துவிடலாம். வந்த உடனே கலியாணத்தை நடத்திவிடுவோம். என்னுடைய கலியா ணத்தோடு சேர்த்து, என் தங்கையின் கலியாணத்தை வைத்துக் கொண்டாலும் கொள்ளுங்கள்; வெவ்வேறாக நடத்திக் கொண்டாலும் கொள்ளலாம். அது உங்களுடைய பிரியத்தைப் பொருத்த விஷயம். நீங்கள் சொல்லுகிறபடி அவர்களுக்கு இரண்டொரு வருஷகாலத்துக்கு தண்டனை கிடைத்துவிடுமா னால், அந்தக்காலம் முடிகிறவரையில் நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. அவளுடைய கலியாணத்தை முன்னாகவே நடத்திவிடுவோம். அதைப்பற்றி நீங்கள் யோசனை செய்ய வேண்டாம். நாங்கள் ஏற்கெனவே உங்களுக்கு எழுதியுள்ளபடி செய்து விடுவோம்'' என்றாள்.

அதைக்கேட்ட புஷ்பாவதி மிகுந்த மகிழ்ச்சியினால் இனிமையாக மலர்ந்த முகத்தினளாய் அவளை நோக்கி, "சரி; எப்படியாவது இருவருடைய மனசும் ஒத்துப்போய்விட்டால் பிறகு நாம் சௌகரியம்போல மற்ற காரியங்களை நடத்திக் கொள்ளுவோம்; எல்லாவற்றிற்கும், இந்த வழக்கின் விசாரணை முடியட்டும்; அதன் பிறகு கலியாணப் பேச்சைப்பற்றிப் பேசிக் கொள்ளுவோம்; நீ இப்போது ஒரு காரியம் செய்கிறாயா? நான் கால் நாழிகை நேரம் வெளியில் போய்விட்டு வருகிறேன், அது வரையில் நீ தனியாக இருக்கிறாயா?" என்று நயமாக வினவினாள்.

கோகிலாம்பாள், "போய்விட்டு வாருங்கள். எனக்கு இப் போது உடம்பில் எவ்விதக் கோளாறுமில்லை. நான் தனியாகவே இருக்கிறேன்" என்றாள்.

புஷ்பாவதி, "வேறொன்றுக்கும் இல்லை. இந்த நிச்சய தார்த்தம் முடிந்த உடனே, என்னுடைய தமையனார் ஓர் அவசர ஜோலியாக இவ்விடத்தை விட்டுப் போகவேண்டும் என்று சொல்லியிருந்தார். இப்போதுதான் இந்த எதிர்பாராத இடைஞ் சல் சம்பவித்துவிட்டதே. அவர் இப்போது வெளிமண்டபத்தில் இருக்கிறாரோ அல்லது புறப்பட்டுப் போய்விட்டாரோ என்பது தெரியவில்லை. நான் இப்போது உன்னிடத்தில் பேசிய விஷயங்கள் எல்லாம் அவருடைய மனசிலும் சங்கடப்படுத்திக் கொண்டிருக்கும். நான் போய் அவரைக் கண்டு, நீ இப்போது தெரிவித்த விஷயங்களை லெல்லாம் சொல்லி அவருடைய மனசை சாந்தப்படுத்திவிட்டு வருகிறேன்; அதுவும் அல்லாமல், அவருக்கு நல்ல முதல் தரமான வக்கீல்கள் இடத்தில் எல்லாம் பழக்கம் உண்டு. இந்த வழக்கில் வக்கீல் அமர்த்தி மற்ற காரியங்களை எல் லாம் நடத்த ஒத்தாசை செய்யும்படியும், புறப்பட்டுப் போகாமல் இங்கேயே இருக்கும்படியும் அவரிடத்தில் சொல்லிவிட்டு வருகிறேன். அதற்காகத்தான் போகவேண்டும். வேறே வேலை ஒன்றும் இல்லை," என்றாள்.

அதைக்கேட்ட கோகிலாம்பாளது சுந்தரவதனம் நன்றியறி தலின் பெருக்கினாலும், மகிழ்ச்சியினாலும் மலர்ந்து ஜ்வலித்தது. அவள் புஷ்பாவதியை நோக்கி, "சரி; போய் வாருங்கள்.

இப்படிப்பட்ட அருமையான மனிதர்களுடைய சிநேகம் இருக் கையில், எங்களுக்கு எப்பேர்ப்பட்ட கெடுதல் நேர்ந்தாலும், அது சூரியனுக்கு முன் இருள் விலகுவதுபோல ஒரு நிமிஷத்தில் விலகிப்போய்விடும். என்னவோ நாங்கள் பூர்வஜென்மத்தில் செய்த பூஜாபலன்தான் உங்களுடைய சிநேகம் இந்தச் சந்தர்ப் பத்தில் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது'' என்று நிரம்பவும் வாத்சல்யமாகவும் உருக்கமாகவும் கூறினாள்.

உடனே புஷ்பாவதி அவ்விடத்தைவிட்டு வெளியிற் சென்று கால் நாழிகை நேரம் வரையில் தனது அண்ணனோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு மறுபடியும் திரும்பி கோகிலாம்பாளிடத் திற்கு வந்து சேர்ந்தாள். அதற்குள் கோகிலாம்பாள் நன்றாகத் தெளிவடைந்து எழுந்து ஒரு ஸோபாவின்மீது உட்கார்ந்து கண்ணபிரானை நினைத்து நினைத்து வருந்தி உருகிக்கொண்டி ருந்தாள். அவள், புஷ்பாவதி திரும்பி வந்ததைக் கண்டு, தனது விசனக் குறிகளை ஒருவாறு மறைத்துக்கொண்டு அவளிடத்தில் பிரியமாகப் பேசத் தொடங்கி, ''என்ன சமாசாரம்? உங்களு டைய தமயனார் இருக்கிறார்களா போய்விட்டார்களா? சங்கதி களை எல்லாம் சொன்னீர்களா? அவர்கள் என்ன பதில் சொன் னார்கள்?'' என்று வினவ, புஷ்பாவதி மிகுந்த வாத்சல்யத்தோடு பேசத் தொடங்கி, ''அவர் என்னிடத்தில் சொல்லிவிட்டுப் போகவேண்டும் என்று நினைத்தாராம். அதற்குள் நான் போய்ச் சேர்ந்தேன். அவரும், நாம் நினைப்பதுபோலவே நினைக்கிறார். இது போலீசாரால் கொண்டுவரப்பட்ட கற்பனைக் குற்றம் என்றும், கண்ணபிரான் இதைச் செய்திருக்கமாட்டார் என்றுமே அவர் அபிப்பிராயப்படுவதன்றி, இதற்குத் தக்க திறமை வாய்ந்த ஒரு வக்கீலை அமர்த்தி வாதாடினால், அவர் விடுதலைபெற்று விடுவார் என்றும் சொல்லுகிறார். அவருக்கு ஒரு பிரபலமான வக்கீலைத் தெரியுமாம்; நீங்கள் அநுமதி கொடுத்தால், அவர் அந்த வக்கீலை அமர்த்தி, தக்க நடவடிக்கைகள் நடத்தச் செய்வ தாகவும் சொன்னார். சௌந்தரவல்லியின் கலியாண விஷயத்தில் நீ சொன்ன சங்கதியை நான் அவரிடத்தில் வெளியிட்டேன். அவர் அதுதான் நியாயமான காரியமென்று ஒப்புக்கொண்டார்'' என்று அன்பொழுகப் பேசினாள்.

அதைக்கேட்ட கோகிலாம்பாள் மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்து, "சரி; நிரம்பவும் சந்தோஷம். தங்களுடைய குணத்தழகில் இருந்தே, தங்கள் தமயனாருடைய குணம் எப்படி இருக்கும் என்பது விளங்கவில்லையா? சௌந்தரவல்லியின் கலியாண விஷயத்தில், நான் சொன்னதை அவரும் ஒப்புக் கொண்டது எனக்கு நிரம்பவும் சந்தோஷமாக இருக்கிறது. வக்கீல் வைக்கும் விஷயத்தைப் பற்றி நான் என்னுடைய தாயாரிடத்திலும், என் மாமியாரம்மாள் இடத்திலும் கலந்துபேசி, அதன் பிற்பாடு முடிவைத் தெரிவிப்போம். அதிருக்கட்டும்; நீங்கள் வெளியில் போனீர்களே; ஜனங்கள் எல்லோரும் இருக்கிறார்களா? போய்விட்டார்களா? அவர்கள் இந்தச் சம்பவத்தைப்பற்றி என்ன சொல்லிக் கொள்ளுகிறார்கள்?" என்றாள்.

புஷ்பாவதி, "அநேகமாய் எல்லா ஜனங்களும் இருக்கிறார்கள். இதைப் போலீசார் கட்டுப்பாடாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றே எல்லா ஜனங்களும் நினைத்து விசனம் அடைந்திருக்கிறார்கள்" என்றாள். கோகிலாம்பாள், "அப்படியா! சந்தோஷம் வெகுஜன வாக்கு தெய்வ வாக்குக்குச் சமம் என்று சொல்வது உண்டு. அதுபோல, அவர்களுடைய வாக்காவது பலிக்கட்டும். வாருங்கள்; என்னுடைய அம்மாள் இருக்கும் அந்தப் புரத்துக்கு நாம் போய் வக்கீல் வைக்கும் விஷயத்தைப்பற்றிப் பேசி ஏற்பாடு செய்வோம். இப்படியே பின்புறமாக ஒரு கதவு இருக்கிறது. அதன் வழியாக நாம் போனால், நம்மை மற்ற ஜனங்கள் பார்க்க மாட்டார்கள்" என்று கூறிக்கொண்டே எழுந்திருந்தாள். உடனே அவர்கள் இருவரும் பக்கத்தில் இருந்த பின்புறக் கதவைத் திறந்துகொண்டு, பூஞ்சோலையம்மாளது அந்தப் புரத்தை அடைந்தனர். அவ்விடத்தில் கற்பகவல்லியம்மாள் பூஞ்சோலையம்மாள் ஆகிய இருவர் மாத்திரம் தனியாக உட்கார்ந்திருந்தனர். பூஞ்சோலையம்மாள் கற்பகவல்லியம்மாளுக்கு ஆறுதல் சொல்லித்தேற்றிக் கொண்டிருந்தமையால் அந்த அம்மாள் சிறிது தெளிவும் துணிவும் அடைந்து எழுந்து உட்கார்ந்து போலீசாரைப்பற்றி நிரம்பவும் ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருந்தாள். அப்போது புஷ்பாவதியும், கோகிலாம்பாளும் வந்ததைக் காண அவர்கள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, கோகிலாம்பாள் குணமடைந்து எழுந்து வந்ததைப் பற்றி

நிரம்பவும் சந்தோஷமடைந்தவர்களாய், "வாருங்கள், வாருங்கள்" என்று மிகவும் அன்பாக உபசரிக்க, வந்தவர் இருவரும் போய் நெருங்கினர். புஷ்பாவதி ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள். கோகிலாம்பாள் தனது மாமியார் இருப்பதைக் கருதித் தரையின்மீது ஒரு பக்கமாக உட்கார்ந்து கொண்டாள்.

உடனே புஷ்பாவதி கற்பகவல்லியம்மாளை நோக்கி, "அம்மா! உங்களுக்கும், இந்தக் குடும்பத்தாருக்கும் இன்றைய தினம் நேரிட்ட இடரைப்போல இவ்வளவு மகா பயங்கரமான தீமை, இந்த உலகத்தில் வேறே எவருக்கும் நேர்ந்திருக்காது என்றே நினைக்கிறேன்; முன்காலத்தில் ஸ்ரீ ராமர், நளச்சக்கரவர்த்தி, தருமபுத்திரர் முதலியோருக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும், இழிவுகளையும் நீங்கள் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்; அப்படிப்பட்ட மகா மகா சக்கரவர்த்திகளின் கதியே அப்படி ஆயிற்றே; கேவலம் மனிதர்களான நாம் எந்த மூலை? இதெல்லாம் கிரகசாரம். மனிதர் இந்த ஜென்மத்தில் குற்றம் செய்திருந்தால்தான் இப்படிப்பட்ட பயங்கரமான அவகேடு எல்லாம் உண்டாகும் என்று நினைப்பது சுத்தத் தப்பான எண்ணம். நிரபராதிகளான சிலருக்கு இப்படிப்பட்ட தீமை நேர்வது எல்லாம் ஈசனுடைய சோதனை என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவுக்கு அவ்வளவு அபாரமான சன்மானம் பின்னால் கிடைக்கப் போகிறது என்பதற்கு இது அறிகுறி. ஆகையால், நீங்கள் இந்த விஷயத்தைப்பற்றி விசனமாவது வெட்கமாவது அடையத் தேவை இல்லை. எல்லாம் கடைசியில் நன்மையாகவே முடியும். நாம் நிரம்பவும் மேதாவியான ஒரு வக்கீலை அமர்த்தி வாதாடச் செய்தால், இந்தப் பழி ஒரு நிமிஷத்தில் நிவர்த்தியாகிவிடும். உங்களுடைய புத்திரர் கூடிய சீக்கிரம் வந்து சேர்ந்துவிடப் போகிறார். தங்கத்தைப் புடம் போடுவதால், அதன் மாற்று அதிகரிக்கும் என்பார்கள். அதுபோல அவருடைய அருமை பெருமைகளை எல்லாம், கருடன் காலில் கெச்சை கட்டியதுபோல, இந்த வழக்கே உலகத்தாருக்கு நன்றாகக் காட்டப் போகிறது அல்லது தெய்வச் செயலாக, அவருக்குத் தண்டனை நேர்ந்துவிட்டால் கூட, அப்போதும் நாங்கள் உங்களைக் கைவிடப் போகிறதில்லை. அவர் திரும்பி வந்தவுடனே கோகிலாம்பாள் அவரைக்

கட்டிக்கொள்ளப் போகிறாள். நாங்கள் அதை ஏளனமாக மதிக்காமல், இப்போதைய ஏற்பாட்டின்படி சௌந்தரவல்லியம்மாளைக் கொள்ளப்போகிறோம்; இங்கே கூடியிருக்கும் ஜனங்கள் எல்லோரும் தங்களுடைய குமாரருக்கு நேர்ந்த பொல்லாங்கு அபாண்டமானது என்றும், அவர் அந்தக் குற்றத்தைச் செய்தே இருக்கமாட்டார் என்றும் சொல்லிச் சொல்லி அங்கலாய்த்து, அப்படியே துயரக்கடலில் ஆழ்ந்து கிடக்கிறார்கள். ஆகையால் அவருக்குத் தண்டனை ஏற்பட்டால்கூட, ஜனங்கள் எல்லோரும் அதை ஓர் இழிவாக மதித்து ஏளனம் செய்ய மாட்டார்கள்; எல்லோரும் வந்திருந்து இந்தக் கலியாணத்தை நிரம்பவும் சந்தோஷமாக நடத்தி வைப்பார்கள்; ஆகையால் நீங்கள் எந்த விஷயத்தைப் பற்றியும் கொஞ்சமும் கவலை கொள்ளவே வேண்டாம்; குற்றம் செய்தவர்கள் அல்லவா வெட்கிக் குன்ற வேண்டும்; குற்றம் செய்யாத நாம் நம்முடைய ஆண்மையை இழக்கவே கூடாது" என்று நிரம்பவும் உருக்கமாகவும் அந்தரங்கமான அன்போடும் கூற, அதுகாறும், புஷ்பாவதி தங்களைப்பற்றி எவ்விதமான கேவல அபிப்பிராயம் கொண்டிருக்கிறாளோ என்ற அச்சத்தினால் குன்றிக் குறுகி சஞ்சலம் அடைந்து தவித்திருந்த கற்பகவல்லியம்மாளது மனம், சூரியனைக்கண்ட தாமரை அரும்பு மலர்வதுபோல சந்தோஷத்தினால் மலர்ந்தது; அந்த அம்மாள் கரை கடந்த ஆநந்தமுற்றுப் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தவளாய் மிகுந்த நன்றியறிதலும் அன்பும் கண்களின் வழியாக ஓடவிட்டவளாய்ப் புஷ்பாவதியை நோக்கி, "அம்மா! நீங்கள் சொல்லுகிறபடி, இன்றைய தினம் எங்களுக்கு நேர்ந்த பொல்லாங்கைப்போல இவ்வளவு பயங்கரமானது இந்த உலகத்தில் வேறே யாருக்கும் நேர்ந்திருக்காது என்பது உண்மையானாலும், உங்களையும் இவர்களையும் போன்ற உண்மையான பெருந்தன்மை நிறைந்த மனிதர்களுடைய அபிப்பிராயமும், அன்பும், அபிமானமும் மாறாமல் முன்போலவே இருப்பதைக் காண, என் மனம் பூரிக்கிறது; இப்போது, அந்தப் பொல்லாங்கு என்னை அவ்வளவாக வதைக்கவில்லை. உங்களைப் போன்றவர்களுடைய் பக்கபலமும், அன்பும் எங்களுக்குத் துணையிருக்க, எங்களுக்கு எவ்விதக் குறைவும் ஏற்படாது. நாங்கள் இந்த விஷயத்திலாவது வேறே

எந்த விஷயத்திலாவது தவறாக நடந்து கொண்டிருக்கக் கூடிய வர்கள் அல்ல என்பதைப்பற்றி நீங்கள் எல்லோரும் ஒரே உறுதி யான நம்பிக்கை வைத்திருப்பது ஒன்றே எங்களுக்குப் பதினா யிரம் யானையின் பலத்தைக் கொடுக்கிறது. இதோ இருக்கும் இந்த வீட்டு எஜமானியம்மாளும் இதே மாதிரியான ஆறுதலை யும் தைரியத்தையும் இதுவரையில் எனக்குச் சொல்லிக் கொண்டு தான் இருந்தார்கள்; இருந்தாலும் இந்த விஷயத்தில் நீங்களும் மற்ற ஜனங்களும் என்ன நினைப்பீர்களோ என்ற அதைரியமும், சஞ்சலமும் இருந்து வந்தன; இப்போது உங்களுடைய வார்த் தையைக் கேட்க, நான் இனி தலை குனியாமல் எல்லா ஜனங்க ளுக்கு முன்பாகவும் போகலாம் என்ற ஒரு தைரியம் உண்டாகி விட்டது'' என்றாள்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள், ''மாணிக்கக்கட்டி, பொல்லாத வேளையின் பலனாக, சில காலம் குப்பையில் கிடக்க நேர்ந்தாலும், அதனால் அதற்கு மதிப்புக் குறைவு ஏற் பட்டது என்று யாராவது சொல்ல முடியுமா? ஒரு நாளும் முடியாது. அந்த மாணிக்கத்தை யாராவது இகழ்ந்தால், அப்படி இகழ்கிறவர்களைத்தான் மற்றவர் பைத்தியக்காரர் என்பார்கள்,'' என்று நிரம்பவும் அன்பாகவும் பரிவாகவும் கூறினாள்.

அதைக்கேட்டு முன்னிலும் பன்மடங்கு பூரித்துப் புளகாங்கிதம் எய்திய கற்பகவல்லியம்மாள் ஏதோ விஷயத்தைப் பற்றிப் பேச முயன்ற சமயத்தில் அவர்கள் இருந்த இடத்திற்கு நிரம்பவும் அருகில் பெருத்த கூக்குரலும் ஆரவாரமும் உண் டாயின. ஜனங்கள் பெருத்த கும்பலாகக் கூடி அபாரமான கூக் குரல் செய்து, ''அடியுங்கள்; குத்துங்கள்; கொல்லுங்கள்; குழியை வெட்டி உயிரோடு புதைத்து விடுங்கள்'' என்று பலவாறு ஆர்ப்பரித்த பெருங்கோஷம் சமீபத்தில் உண்டாயிற்று.

வேடனது குரலைக் கேட்ட மான்கள் திடுக்கிட்டு ஸ்தம்பித்து நின்று நிமிர்ந்து நாற்புறங்களிலும் திரும்பி ஆராய்ந்து பார்ப்பதுபோல, கற்பகவல்லியம்மாள், பூஞ்சோலையம்மாள், புஷ்பாவதியம்மாள், கோகிலாம்பாள் ஆகிய நால்வரும் சடேரென்று எழுந்து மருண்டு நின்று அந்தப் பயங்கரமான ஆரவாரம் எங்கேயிருந்து உண்டாகியது என்பதை உற்றுக்

கவனித்தனர். அவரது தேகம் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் கிடுகிடென்று ஆடியது. பெருத்த திகிலினால் உரோமம் சிலிர்த்து நின்றது. உடம்பு முழுதும் வியர்வை குபீரென்று பொங்கி வெள்ளம்போல வழிந்தது. இன்னதென்று அறியக்கூடாத பெருத்த திகில் வயிற்றைக் குழப்பி மனதைக் கலக்குகிறது. அது எப்படிப்பட்ட புதிய பேரிடியோ என்ற பெருங்கிலியும் கலவரமும் எழுந்து அவரது அகக்கண்ணில் மகா பயங்கரமான பெருத்த பூதங்கள் போலத் தோன்றி அச்சுறுத்தின. அன்றைய தினம் காலையில் போலீசார் கண்ணபிரானைப் பிடித்துப் போன சம்பந்தமாக இன்னமும் ஏதாவது வேறே துன்பம் நேரப் போகிறதோ என்றும், அந்தக் குற்றத்தில் ஒருவேளை கற்பக வல்லியம்மாளையும் சம்பந்தப்படுத்தி போலீசார் அவளையும் வாரண்டில் பிடிக்க வந்திருக்கிறார்களோ என்றும் அவர்கள் எண்ணாததை எல்லாம் எண்ணித் தவித்தார்கள். அந்த ஒரு நிமிஷ நேரமும் ஒரு கற்பகாலம் போலத் தோன்றியது. அவர்களது மனதில் கோடாநுகோடி எண்ணங்கள் தோன்றி மறைந்தன. தாங்கள் இருந்த கட்டிடத்திற்குள் அந்த ஆரவாரம் உண்டாயிருக்குமோ என்று அவர்கள் கவனிக்க உட்புறத்தில் இது உண்டாகவில்லை என்பது தெரிந்தது. அவர்கள் இருந்த அந்தப்புரத்தில் ஒரு ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னல் அந்தப் பங்களாவின் பூஞ்சோலையை அடுத்திருந்தது. ஆகையால், ஜன்னலண்டை நின்று வெளியில் பார்த்தால் பக்கத்தில் சோலை காணப்படும். அந்த ஜன்னலிற்குப் பக்கத்தில் வெளியிலிருந்து அந்த ஆரவாரம் உண்டானது நன்றாகத் தெரிந்தது. ஆகையால் அவர்கள் நால்வரும் மிகுந்த ஆவலும், கலக்கமும், திகிலும் கொண்டவர்களாய், அந்த ஜன்னலண்டை ஓடினர்; கண்ண பிரான் அதில் சம்பந்தப்பட்டிருப்பானோ என்பதை அறிய ஆவல்கொண்ட கற்பகவல்லியம்மாளும் பூஞ்சோலையம்மாளும் முதலில் போய் ஜன்னலின் நடுவில் நின்று பார்த்தார்கள். புஷ்பாவதி கோகிலாம்பாள் ஆகிய இருவரும் இரண்டு பக்கங் களிலும் நின்று வெளியில் பார்த்தனர்.

ஜன்னலிற்கு வெளிப்பக்கத்தில், கலியாணத்திற்காக வந்திருந்த ஜனங்கள் எல்லோரும் ஆயிரக்கணக்கில் திரண்டு நின்றனர். அவர்கள் வீரவேசமும், பதைபதைப்பும் கொண்டவர்க

ளாய் நடுவில் பாய முயன்று கொண்டிருந்தனர். அந்தக் கும்பலின் நடுவில் நன்றாகக் குடித்துவிட்டு ஆடி விழுந்துகொண்டிருந்த ஏழெட்டு முரட்டு மனிதர்கள் காணப்பட்டனர். அத்தனை ஜனங்களுக்கும் அவர்கள் ஈடு கொடுத்துக் கொண்டு, குழறிக் குழறி ஆபாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுள் முரட்டுத் துருக்க சாயப்பு ஒருவன் இருந்தான். அவனும் குடி வெறி கொண்டவன்போல ஆடி விழுந்து கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் கற்பகவல்லியம்மாள் முதலியோர் வந்து ஜன்ன லின் உட்புறத்தில் நின்றதைக் கண்டவுடனே அந்த சாயப்பு தலைகால் தெரியாமல் எழும்பிக் குதித்து, பெருத்த கூக்குரல் செய்யத் தொடங்கி, "இத்தினி தமிளரும் சேர்ந்து அந்த பொம் புளெ இங்ங இல்லேயின்னு பொய் சொன்னீங்களேடா! அதோ இருக்கிறாளேடா என்னோடெ கூத்தியா! அடி எங் கூத்தியாளே! வாடி கீளே எறங்கி; நீ இங்ஙனமே வந்து நொளஞ்சிக்கினா, இந்த சிங்கக் குட்டி பாச்சாமியான் ஒன்னே உட்டுடுவானுன்னு பாத்துக்கினியா? இத்தோடே என் உசுரு போயிட்டாலும் சரி; ஒன்னெ நான் உடப்போகிறதில்லே. வாடி கீளே எறங்கி! என் னமோ ஒண்ணுந்தெரியாத பைத்தியக்காரி கணக்கா முளிக்கி றியா! இந்த நாலு நாளா ஒங்களெ நான் எந்தெந்த எடத்துலெ யெல்லாம் தேடிப்பார்க்கறேன்; நீங்க குந்தினாப்பலெ இந்த பங்களாவுக்குள்ளா வந்து நொளெஞ்சுக்கினு கண்ணாளமா பண்ணப்போறிங்க? என் உசிரு இருக்கிறவரெயிலே அந்தத் தாலி எவளோடெ களுத்துலெயாச்சம் ஏறிப்புடுமா? அந்தத் தாலியெக் கட்டிக்கின களுத்து அந்த ஒடலுமேலே ஒரு ராத்திரிக்கூட நிக்குமா? தாலியும் போயிரும்; களுத்தும் போயிரும்; பத்திரம். இந்த நல்லாம்படையான் பாச்சாமியான் வேண்டியிருந்த வரை யிலெ, கண்ணாளப் பேச்செல்லாம் வேறே மாதிரியா இருந்திச்சு. இப்ப பெரிய பணக்கார வூட்டெத் தேட்றீங்களோ!" என்று குடி வெறியினால் குழறிக் குழறிப் பேசி, ஜன்னலில் நின்றவர்களை நோக்கி ஆரவாரம் செய்ய, அப்போது அந்தக் கும்பலில் துடி துடித்து நின்ற கோவிந்தபுரம் இளைய ஜெமீன்தாரான சுந்தர மூர்த்தி முதலியார் தமது கையில் பிடித்திருந்த குதிரைச் சவுக்கைச் சொடேர் சொடேர் என்று வீசி ஓசை செய்து அந்தக் குடிகாரத் துருக்கனை நோக்கி வந்து, "அடேய் யாரைப்

பார்த்தடா இப்படித் தாறுமாறாகப் பேசுகிறாய்? குடிவெறியில் தலைகால் தெரியவில்லை போலிருக்கிறது. நீ இனிமேல் மரி யாதைக் குறைவான வார்த்தை ஏதாவது பேசினால், உன்னையும் உன்னுடைய தோழர்களான இந்த நாய்களையும் உயிரோடு இவ் விடத்திலேயே சமாதி வைத்துவிடுவோம். சாக்கிரதை; பேசாதே நீ யார் ஓய்? இந்த பங்களாவுக்குள் நீங்கள் எல்லோரும் எதற்காக வந்தீர்கள்? யாரோ பெண்பிள்ளை இந்த பங்களாவுக்குள் வந்திருக்கிறாள் என்று சொல்லுகிறாயே? அது என்ன குடிவெறி யினால் பேசிய பேச்சா?" என்று அதிகாரமாக அதட்டிக் கேட்ட வண்ணம், நிரம்பவும் துணிவாக நெருங்கி அந்த சாயப்புவின் கையைப் பிடித்துக் கொள்ள, அவருக்குப் பக்கத்தில் இருந்த வேறே சிலரும், அந்த சாயப்புவையும் மற்ற குடிகாரரையும் இறுகப் பிடித்துக் கொண்டனர்.

அதற்குமேல் தனது கை ஓங்காது என்பதைக் கண்ட முரட்டுத் துருக்கன் ஜெமீன்தாரைப் பார்த்து மரியாதையாகப் பேசத் தொடங்கி, "எஜமானே! கோவம் வாணாம். நாம்ப, ஜாதி யிலே ஏளெமுசல்மானாக இருந்தாலும், நம்ப வாயிலே இருந்து பொய் வரமாட்டான். நாம்ப இந்த வங்களாவிலே கலகம் கிலகம் பண்ண வர இல்லெ. நம்பளோடே நாயத்தை எடுத்துச் சொல்றேன் கேளுங்கோ. நம்ப மேலே கொஞ்சமாச்சும் தப்பிதம் இருந்தா, ஓங்க காலுலே இருக்கிற ஜூத்தியாலே எண்ணி ஆயிரம் அடி நம்பிளிகி அடியுங்கோ. நம்ப உசிரு போனாலும் நம்ப பொய் சொல்லமாட்டாங்கோ. நம்ப தொளிலு மாடுங் களெ அடிச்சு விக்கிற கசாப்புக்காரத் தொளிலுதான். இருந்தா லும், நம்ப அல்லாவுக்குப் பயந்து நடக்கிறவங்க. அதோ ஜன்ன லுக்குள்ளற மத்த எல்லாருக்கும் நடுப்பற நிக்கறாளே. அவள கப் பகவல்லியம்மான்னு சொல்லுவாங்க. அவளுக்கும் நம்பளுக்கும் இந்தப் பதினஞ்சு வருஷகாலமா தொடுப்பு உண்டுங்க. நாம்ப நம்பளோடே சம்பாத்தியத்தெல்லாம் இவுங்களுக்கே குடுத்துக் குடுத்து நம்பளோடெ குடியே முளிகிப்போச்சுங்க. நம்புளுக்கு ஒரு தங்கச்சி இருக்குதுங்க. இந்தப்பொம்புள்ளெயும் இவ ளொடெ மவனுக்குக் கட்டிப்புட்றதின்னும் ஒப்பந்தம் முடிஞ்சி ருக்குது. அந்த மாதிரி நடக்கிறேனுன்னு இந்தப் பொம்புள்ளே லச்சம் தரம் கையடிச்சு சத்தியம் பண்ணிக் குடுத்திருக்கிறா.

அப்பிடி இருந்தவ, திடீருனு இந்த நாலுநாளா எங்கிட்ட சொல்லாமெ இந்த ஊட்டுலெ வந்து நொளஞ்சிக்கினு இருக்கிறா; இவளோடெ மவனுக்கு இந்த ஊட்டுப் பெண்ணே கட்டப்போறாளாம். அதுக்காகவத்தான் நாம்ப இங்ஙனே வந்தது, அவளோடெ நாம்ப பேசல்லே; எசமானே பேசி, அவ என்ன சொல்றான்னு கேட்டுச் சொல்லிப்புடுங்க. அவ சேஞ்சி குடுத்த சத்தியப் பிரமானத்தெ நெறவேத்தப் போறாளா? இல்லாமெப் போனா, இந்தப் பாச்சாமியானெ இனிமேலே சுத்தமா மறந்து, தமிளப் பொம்புளெயாவே இருக்கப்போறாளா? எசமானே வெசாரிச்சுச் சொல்லிப்புடுங்க,'' என்று கூறினான்.

அவன் கள் குடித்த வெறியினால் குழறிக் குழறி பேசினான் ஆனாலும், அவன் கற்பகவல்லியம்மாளைப் பார்த்துக் கொண்டே கணீர் கணீர் என்று உரக்கப் பேசினான் ஆகையால், அவன் கூறிய வார்த்தைகள் எல்லாம் கற்பகவல்லியம்மாளது செவியிலும் மற்றவர்களது செவியிலும் தெளிவாகப்பட்டன. அவன் பேசி முடிக்கவே, தூக்க மயக்கத்திலிருந்து சொப்பனம் காண்பவள் போல உணர்வு கலங்கி மயங்கி தன்னைச் சமாளித்துக் கொள்ள மாட்டாமல் தத்தளித்திருக்க கற்பகவல்லியம்மாள் தனது கையை ஓங்கி நெற்றியில் அறைந்து கொண்டு, "ஐயோ தெய்வமே! இதுவும் உன்னுடைய சோதனையா! இப்படிப்பட்ட மகா கேவலமான இழிவுக்கு ஆளாகவா நான் பெண்ணாய்ப் பிறந்தேன்! ஈசுவரா! என்னுடைய பிள்ளையின் தலைக்குக் கொண்டு வந்து வைத்த இடியோடு உன் மனம் திருப்தியடையவில்லையா? என் தலைக்கும் இந்த அபாண்டமான பேரிடியைக் கொண்டு வந்து வைக்க எண்ணினாயா? ஆகா! என்ன ஜென்மம் எடுத்தேன்! என்ன பெண் பிறந்தேன்!'' என்று வீரிட்டுக் கதறிய வண்ணம் நிலை தளர்ந்து வேரற்ற மரம்போல அப்படியே பின்புறத்தில் சாய்ந்து, நின்ற நிலையில் செங்கல் தரையின்மீது படேரென்று வீழ்ந்துவிட்டாள். அவளது சிரத்தின் பின்புறமும் முதுகும் சிதற தேங்காய் உடைபடுவதுபோலத் தடாரென்று தரையில் போய் மொத்துண்டன. அந்த அம்மாளது கண்கள் உடனே மூடிக்கொண்டன. பேச்சு மூச்செல்லாம் அடைத்துப்போய் விட்டன. அவளுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பூஞ்சோலையம்மாள், கோகிலாம்பாள், புஷ்பாவதி ஆகிய மூவரும்

பாச்சாமியான் கூறிய வார்த்தைகளை எல்லாம் ஒன்றுவிடாமல் கேட்டு மிகுந்த பிரமிப்பும் கலவரமும் கலக்கமும் அடைந்து, அது பூலோகமோ ஆகாயமோ என்பதை உணராமல் தாங்கள் கண்ட காட்சியும், கேட்ட சொற்களும் கனவைச் சேர்ந்தவைகளோ அல்லது உண்மையில் நிகழ்வனவோ என்று மயங்கி, திக்பிரமை கொண்டு, ஸ்தம்பித்து அசைவற்று, அப்படியப்படியே சிறிது நேரம் நின்றனர். அந்தக் குடிகாரத் துருக்கன் சொன்னது நிஜமாக இருக்குமோ என்று சந்தேகிப்பவர்கள் போல, அவர்கள் மூவரும் ஆச்சர்யமும், ஐயமுமே வடிவெடுத்ததுபோல நிற்க, அந்தச் சமயத்தில் கற்பகவல்லியம்மாள் மயங்கிக் கீழே வீழ்ந்ததைக் கண்டு, நிரம்பவும் பதறித் துடித்தவர்களாய்ப் பயந்து, அந்த அம்மாளைத் தூக்கியெடுத்துக் கொண்டு போய் பக்கத்தில் இருந்த ஒரு கட்டிலின்மீது விடுத்து, அவளது மூர்ச்சையைத் தெளிவிப்பதற்குத் தேவையான உபசரணைகளையெல்லாம் புரியத் தொடங்கினர்.

அவர்களது நிலைமை அங்ஙனம் இருக்க, ஜன்னலிற்கு வெளியில் நின்ற மற்ற ஜனங்களது நிலைமையும் விவரிக்க இயலாததாக இருந்தது. பாச்சாமியான் சொன்ன அபூர்வமான வரலாற்றைக் கேட்டு அதை என்னவென்று மதிப்பது என்பதை உணராது எல்லோரும் திக்பிரமை கொண்டு கல்லாய்ச் சமைந்து அவனது முகத்தையும் ஜன்னலையும் மாறிமாறிப் பார்த்தபடி நின்றனர். ஆனாலும் அவர்கள் ஒவ்வொருவரது உடம்பும் கை கால்களும் மீசைகளும் துடிதுடித்துப் பதறின. அவன் போலீ ஸாரது போதனையால் அவ்வாறு கட்டுப்பாடாகப் பேசுகி றானோ என்ற சந்தேகமே தோன்றியது. ஆனாலும், போலீசார் அவ்வளவு பிரமாதமான கற்பனை செய்ய என்ன முகாந்திரம் இருக்கப்போகிறது என்ற சந்தேகமும் தோன்றியது. கற்பக வல்லியம்மாளது தோற்றத்திலிருந்தே அவள் பெருந்தகைமையும், நற்குண நல்லொழுக்கமும் பூரணமாக வாய்ந்தவள் என்பது தெரிந்தது. ஆகையால், அந்த அம்மாளிடத்தில் தப்பான அபிப் பிராயம் கொள்ள அவர்களது மனம் இடந்தரவில்லை. அந்த சாயப்பு அவ்வளவு துணிகரமாகப் பேசும்போது அதை மறுத்துப் பேசி அவனிடத்தில் சச்சரவு செய்வதற்கும் வகையில்லை. ஆகவே, ஜனங்கள் சுந்தரமூர்த்தி முதலியார் என்ன சொல்லப்

போகிறார் என்பதைக் கவனித்துக் கொண்டு மௌனமாக நின்றனர்.

மற்றவர்களைப் போலவே அபாரமான வியப்பும், திகைப்பும், கொதிப்பும், கோபமும் அடைந்து பதறி நின்ற சுந்தரமூர்த்தி முதலியார் மறுபடி அந்தத் துருக்கனை நோக்கி, ''அடேய் சாயப்பு! இதென்ன குடிவெறியின் கோளாறா? யாரைப் பார்த்து நீ இப்படிப்பட்ட வார்த்தைகள் சொல்லு கிறாய்? இதென்ன சோம்பேறி மடமென்று பார்த்துக் கொண் டாயா? அல்லது இங்கே இருக்கிறவர்கள் எல்லோரும் தாசிகள் என்று நினைத்துக் கொண்டாயா? மரியாதையாக நீ உன்னு டைய சிநேகிதர்களை அழைத்துக்கொண்டு வெளியில் போகி றாயா? இல்லாவிட்டால், நல்ல உடம்பை வீணாகக் கெடுத்துக் கொள்ள போகிறாயா? நீ யாருடைய தூண்டுதலின்மேல் இப் படிப் பேசுகிறாய் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தகுந்த மரியாதை நடத்தவும் எங்களுக்குத் தெரியும். இதெல்லாம் அந்தப் போலீசாருடைய கைவரிசை என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களை நான் பார்த்துக் கொள்ளுகிற இடத்தில் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் முதலில் வெளியில் போங்கள்'' என்று அதட்டிக்கூற, அதைக்கேட்ட பாச்சாமியான், ''ஏழைமேலே எசமான் கோபிச்சிக்கக்கூடாது. போலீசாருக்கும் இதுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லீங்க; நம்பகிட்ட இந்தப் பொம்புளெ ரொம்ப நாளாகக் கூத்தியாளா இருந்தான்னு ருசுப்படுத்தறேன்! போன வருஷத்துலே புள்ளெகூட வந்துடிச்சு. அதுக்கு நம்பதான் மருந்து குடுத்து அதெத்தொலைச்சாங்கோ, அப்ப இவ சாவக்கெடந்தா; இவளெ நம்ப வண்டியிலே வச்சு கோஷா ஆசுபத்திரிக்கு இட்டுக்கினு போயி வைத்தியம் பார்த்துக் காப்பாத்தினாங்கோ; அந்த ஆசுபத்திரிக் கணக்குலேகூட, இவளோடெ கருப்பம் அகாலத்துலே வெளிப்பட்டுப்போன சீக் குன்னு பதிவாயிருக்குது; எசமானே போயி வெசாரிச்சுக்கலாம்; இவளுக்காவ நாம் இத்தினி வருசகாலம் எம்பிட்டுப் பாடுபட்டு எம்பிட்டுப்பணம் தொலைச்சிருக்கறாங்கோ தெரியுமா! இப்ப இவ குந்தினாப்பலே இங்ஙனே வந்து நொளெஞ்சுக்கினு ஏமாத் திப்புடப் பார்க்கறாளோ! நானா உட்றவன்! அவளுக்காச்சு எனக்காச்சு; ஒரு கை பார்த்துத்தான் உடப்போறேன்'' என்று கூறித் தனது மீசைகளை முறுக்கிவிட்டான்.

அதைக்கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் மிகுந்த கோபம் அடைந்தவராய் அவனது கையை அழுத்தமாகப் பிடித்து, "அடேய் நல்ல யோக்கியமான பெரிய மனிதர்களைப் பற்றி நீ பிரமாதமான அவதூறு பேசுகிறாய். உன்னை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும்; வா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவோம். நான் உன்னை அவரிடத்தில் ஒப்புவிக்கிறேன்; கோஷா ஆஸ்பத்திரியிலும் போய் விசாரிப்போம்; அவர்கள் சொல்லுகிறபடி நடந்து கொள்வோம்; நீ அன்னியருடைய கட்டிடத்துக்குள் சொந்தக்காரருடைய அநுமதியில்லாமல் நுழைந்து இப்படிக் கலகம் செய்தால், உன்னை நாங்கள் எப்படி வேண்டுமானாலும் தண்டிக்க உரிமையுண்டு. ஏதோ நீ குடித்துவிட்டு உளறுகிறாய் என்று உன்னை அவ்வளவு கொடுமையாக தண்டிக்க இஷ்டமில்லை; வா போவோம்" என்று கூறிய வண்ணம் இழுக்க, அவன் உடனே பணிவடைந்தவனாய், "சரி! எசமான் இப்போது சொன்னது சரியான பேச்சு! போலீசுக்கே போவலாம்; அங்கே வந்து நாம்ப எல்லாச் சங்கதியையும் நெசமின்னு ருசுப்படுத்த தடெயில்லே வாங்க, போவலாம்," என்று கூறிய வண்ணம் முறுக்காகவும், மிடுக்காகவும் நடந்து சுந்தர மூர்த்தி முதலியாரைத் தொடர்ந்து சென்றான். அவனது தோழர்களான மற்றவர்களும், ஜனங்களும் கூடவே நடக்க, எல்லோரும் அந்தப் பங்களாவை விட்டு வெளியில் சென்றனர்.

★ ★ ★

தொடர்ச்சி அடுத்த பாகத்தில்...



ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்
திகம்பர சாமியார்
1. பூர்ண சந்திரோதயம் பாகம் - 1
2. பூர்ண சந்திரோதயம் பாகம் - 2
3. பூர்ண சந்திரோதயம் பாகம் - 3
4. பூர்ண சந்திரோதயம் பாகம் - 4
5. பூர்ண சந்திரோதயம் பாகம் - 5
6. கும்பகோணம் வக்கீல் பாகம் - 1
7. கும்பகோணம் வக்கீல் பாகம் - 2
8. மாயா வினோதப் பரதேசி பாகம் - 1
9. மாயா வினோதப் பரதேசி பாகம் - 2
10. மாயா வினோதப் பரதேசி பாகம் - 3
11. மேனகா பாகம் - 1
12. மேனகா பாகம் - 2
13. சௌந்திர கோகிலம் பாகம் - 1
14. சௌந்திர கோகிலம் பாகம் - 2
15. சௌந்திர கோகிலம் பாகம் - 3
16. சௌந்திர கோகிலம் பாகம் - 4
17. மதன கல்யாணி பாகம் - 1
18. மதன கல்யாணி பாகம் - 1
19. மதன கல்யாணி பாகம் - 2
20. வித்யாசாகரம்
21. வசந்த மல்லிகா
... ... ... இதற்கு மேலும் வருவார் !